ஐரோப்பிய வரலாறு

(கி.பி. 1500 முதல்)

என். ஜே. இராஜகோபால்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன (க.வெ.) வரிசை எண் - 266

ஐரோப்பிய வரலாறு

(கி.பி. 1500 முதல்)

ஆசிரியர்

என். ஜே. இராஜகோபால் எம்.ஏ.,
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
அரசினர் கலைக் கல்லூரி,
கோயம்புத்தூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July 1971

T.N.T.B.S. (C.P.) No. 266

© Tamil Nadu Text Book Society

HISTORY OF EUROPE (Since 1500 A.D.)

N. J. RAJAGOPAL

Net Price Rs. 5-50

(No discount)

Printed by

Nanbargal Achagam,
58/1, Thiruvalluvar Salai,
Vannia Teynampet,
Madras-18

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் விஞ்ஞானப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'ஐரோப்பிய வரலாறு' (கி.பி. 1500 முதல்) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 266ஆவது வெளியீடாகும். இதுவரை 301 நூல்கள் வெளிவந்துள்ளன.

'உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை.' ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

உள்ளுறை

எண்			பக்கம்
1.	இடைக்காலத்தில் ஐரோப்பா	....	1
2.	மறுமலர்ச்சிக் காலம்	....	7
3.	இத்தாலியில் போர்கள், 1494-1529	....	28
4.	சமயப் புரட்சி	....	37
5.	இரண்டாம் பிலிப்பும் நெதர்லாந்து கலகமும்	....	73
6.	நல்லாட்சி வல்லரசுகள்	....	90
7.	வியன்னா உடன்படிக்கை, 1815	....	175
8.	ஐரோப்பிய ஒருமைப்பாடு, 1815-1822	....	181
9.	தேசிய ஜனநாயக இயக்கங்கள், 1815-1850	....	190
10.	கீழைச் சிக்கல்	....	211
11.	இத்தாலிய ஒருமைப்பாடு இயக்கம், 1850-70	....	235
12.	ஜெர்மனியின் ஐக்கியம், 1860-1871	....	247
13.	முதல் உலகப் போர், 1914-1918	....	277
14.	முதல் உலகப் போருக்குப் பிறகு	....	290
15.	இரண்டு உலகப் போர்களுக்கிடையே	....	309
16.	இரண்டாவது உலகப் போர், 1939-1945	....	351
	வரலாற்றுப் படங்கள்	....	374
	வம்சாவளி அட்டவணைகள்	....	380
	கலைச் சொற்கள்	....	394
	பொருள் குறிப்பகராதி	....	396

1. இடைக்காலத்தில் ஐரோப்பா

மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் இருந்த காலத்தை இடைக் காலம் என்று கூறுவர். அக் காலத்தை ஓர் இருண்ட காலம் என்றும் கூறுவர். ஐரோப்பிய நாடுகளில் அப்பொழுது வாழ்ந்த மக்க ளுடைய வாழ்க்கையில் எவ்வித வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட வில்லை. இலக்கியம், ஓவியம், சிற்பக் கலை, விஞ்ஞானம் ஆகிய கலைகள் வளர்ச்சியுற நல்ல சூழ்நிலை இருக்கவில்லை. புதிய சிந்தனையும் புதிய கண்டுபிடிப்பும் பக்தி மார்க்கத்திற்கு முரண் பட்டவை என்று கருதப்பெற்றன. அவையெல்லாம் கடவுள் நிந்தனைக்குட்பட்டதென்று கருதப்பெற்றன. பழமையை அழிக்கும் எவ்வித இயக்கமும் மக்களின் ஆதரவையும் மத குருமார்களின் ஆதரவையும் பெறவில்லை. அவையெல்லாம் அருவருக்கத் தக்கவை யென்றும் நினைக்கப்பெற்றன. மக்களிடையே தோன்றிய இயற்கை யான கலை உணர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் சிறிதும் ஆதரிக்கப்படவில்லை. பரம்பரையாகப் பழக்கத்திலிருந்த வழக் காறுகளை மாற்றத் துணிந்தவர்கள் மத குருமார்களின் கோபத் திற்கும் அவர்களுடைய தண்டனைகளுக்கும் உட்பட்டனர். ரோஜர் பேக்கன், கோபர்னிக்கஸ், கலிலியோ ஆகிய பல அறிஞர்களும் பல இன்னல்களுக்குள்ளானார்கள். அவர்கள் போப்பாண்டவர்களின் கோபத்திற்குள்ளானார்கள். போப்பாண்டவர்களின் ஆணைகளை மீறியவர்கள் உயிருடன் வாழ்ந்ததில்லை. அக் காலத்தில் இருந்த ஒரே கிறித்துவச் சமயம், கத்தோலிக்கச் சமயம்தான். அந்தச் சமயத்தைச் சார்ந்த மடாதிபதிகள் கூறுவதுதான் முடிவான அறிவுரைகள். அவர்கள் கூறுவதற்கு எதிர்ப்பு இருக்கக்கூடாது. அவர்களையும் அவர்களுடைய சொற்களையும் அப்படியே நம்பிவிட வேண்டும். அவர்களுக்குப் புரியாத சர்ச்சைகளிலும், தத்துவத் திறனுய்வுகளிலும், மற்றவர்கள் தலையிடுவது தெய்வ நிந்தனை யாகும். வழக்கமாகப் பின்பற்றி வரும் கிறித்துவ வேத பாடங்களைத் தவிர, மற்ற எந்த இலக்கியமும் மக்களுடைய மனத்தைக் கெடுத்து விடும் என்ற ஒரு மூடநம்பிக்கையுடையவர்களாக இருந்தனர்.

அழகைச் சுவைப்பதும், போற்றுவதுங்கூடப் பாவம் என்று அவர்கள் கருதினர்.

எப்படி இதற்கு முன்னர், பிரபுக்கள் செல்வாக்குப் படைத்த வர்களாக இருந்தனரோ, அதைப் போல இந்த இடைக்காலத்தில் திருச்சபையின் குருமார்கள் மிகவும் செல்வாக்கும் அதிகாரமும் பெற்றவர்களாக இருந்தனர். பிரபுக்களுக்குப் போட்டியாகவே, அவர்கள் செல்வத்திலும் அதிகாரத்திலும் தோய்ந்திருந்தனர். மக்கள் ஒருவிதமான மூடநம்பிக்கை கொண்டிருந்த காலமது. அறிவுக்கும் சிந்தனைக்கும் அக் காலம் இடம் அளிக்கவில்லை. அதனால்தான், இடைக்கால ஐரோப்பாவை, இருண்ட கால ஐரோப்பா என்று கூறுகின்றனர்.

இடைக்காலத்தில் வளர்ச்சியுற்றிருந்த திருச்சபை மிகவும் வலிமையுள்ள நிறுவனமாக இருந்தது. அந்தத் திருச்சபையின் தலைவர் போப்பாண்டவர். அவர் கடவுளின் பிரதிநிதி என்றும் சர்வ வல்லமை பெற்றவர் என்றும் கருதப்பெற்றார். அவர் இடும் ஆணைகளே சட்டங்களாக மதிக்கப்பெற்றன. அவருடைய கட்டளைகளை ஐரோப்பாவில் உள்ள எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டன. சமயத் துறையில் அவரது அதிகாரம் இறைமை பெற்றிருந்தது. போப்பாண்டவர்களுடைய செல்வாக்கும் அதிகார மும் வளர்ச்சியுறுவதற்கு, ஒருசில போப்பாண்டவர்கள் மிகவும் பண்பு மிக்கவர்களாகவும் பக்தி மிக்கவர்களாகவும் இருந்து வாழ்ந்து காட்டியதே காரணமாகும். எடுத்துக்காட்டாக ஹில்டிபிராண்ட் என்பவர் பிறகு ஏழாவது கிரிகிரி என்ற போப் பாண்டவராகப் (1073-1085 வரை) பதவியில் இருந்தார். செயின்ட் பெர்னூர்ட் என்பவரும் (1091-1153), அஸிஸியைச் சேர்ந்த செயின்ட் பிரான்சிஸ் என்பவரும் (1182-1226), செயின்ட் தாமஸ் அக்வினஸ் என்பவரும் (1227-1274), மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருந் தனர். அதனால், நாளடைவில் அவர்களுடைய அதிகாரங்களும் வளர்ச்சியுற்றன. பிற்காலப் போப்பாண்டவர்களின் அதிகார வளர்ச்சிக்கு வழி வகுத்துக் கொடுத்தவர்களும் அவர்களேயாவர். மக்களும் மன்னர்களும்கூட, இவர்களது ஆணைகளை மறுப் பதற்கும் திருத்தம் செய்வதற்கும் அஞ்சினர். கத்தோலிக்கச் சமயம் தான் ஒரே சமயமாக அப்பொழுது இருந்தது. அதனால், அவர் களிடையே எவ்விதமான சமயப் பூசல்களும் தோன்ற வழியில்லை. தவிர, அச் சமயத்திற்கும் ஒரே தலைவர்; அவர்தான், போப்பாண்டவர் என்று கருதப்பெற்றதால், அச் சமயமும், மற்றும் போப்பாண்டவரின் அதிகாரமும் நன்கு நிலைபெற்றுவிட்டன. அவர்களுடைய சமயத்தில் ஒருமைப்பாட்டுணர்ச்சி தோன்றுவதற்கும் இதுவே காரணமாக இருந்தது.

திருச்சபையில் பணியாற்றிய மத குருமார்கள் பெரும்பாலும் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். மற்ற மக்களையும் நல்வழிப் படுத்துவதில் அக்கறைகாட்டினர். மடாலயத் துறவிகளும் ஊர் ஊராகச் சுற்றி, கிறித்துவ மதத்தைப் பரப்புவதில் ஆர்வம் கொண் டிருந்தனர். அத்துடன் மக்களுக்கு வேண்டிய சில நல்ல காரியங் களையும் செய்து வந்தனர். ஆனால், நாளடைவில் இவர்களது பழக்க வழக்கங்கள் மாறிவிட்டன. அவர்கள் பணம் திரட்ட முற்பட்டனர். பணம் சேரச்சேர அவர்களுக்கு வசதிகளும் சலுகை களும் கிடைத்தன. படிப்படியாக, அவர்கள் அரசர்களிடத்திலும் பிரபுக்களிடத்திலும் சலுகைகளைப் பெற்றனர். வரி விதிப்புகளி லிருந்து அவர்களுக்கு விதிவிலக்குக் கிடைத்தது. நிலமானிய முறையிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்குத் தரப்பெற்றது. வசதிகள் பெருகியவுடன், அவர்கள் எளிமையான வாழ்க்கையைப் புறக்கணித்துவிட்டு, அறுசுவை உணவையும் மயக்கம் தரும் மது வையும் அருந்தத் தொடங்கினர். அத்துடன் அவர்களுக்கு இனிய கேளிக்கை நிரம்பிய வாழ்க்கையும் தேவைப்பட்டது. ஒருசில மத குருமார்கள் இவ்விதமான வாழ்க்கையில் ஈடுபடாமல், உண்மைத் துறவிகளாகவே இருந்தனர். ஆனால், பெரும்பான்மை யோர் ஏகபோக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்குச் சோம்பேறித்தனமும் இதனால் அதிகமாகிவிட்டது. இவர்களைக் கண்டு மக்கள் பொருமையுற்றனர். சிலர் இவர்களை வெறுக்கவும் தொடங்கினர். பாமர மக்களுக்கு அறநெறிகளை அளிப்பவர்கள் அவர்களது இன்னல்களைக் களைந்து, ஆறுதல் அளிக்கும் வழிகாட்டி களாக இருக்கவேண்டியவர்கள், சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வத் தூதுவர்களாக இருப்பவர்கள் சாதாரண மக்களைப் போல வாழ முற்பட்டவுடன், அவர்கள்மீதிருந்த நம்பிக்கையை மெதுவாக மக்கள் இழக்க ஆரம்பித்தனர். இத்துடன் அவர்கள் அரசியலிலும் தலையிடத் தொடங்கினர். முதன் முதலாக அரசியலில் தலையிட ஆரம்பித்த போப்பாண்டவர்களில் ஹில்டிபிராண்ட் என்பவர் முக்கியமானவராகும். அவருடைய சம்மதத்தையும் ஆசியையும் பெற்றுத்தான் நார்மண்டிக் கோமகனான வில்லியம் என்பவர் இங்கிலாந்து நாட்டின்மீது படையெடுத்து ஹேஸ்டிங்ஸ் என்ற போர்க்களத்திலே ஹெரால்டு என்ற மன்னனை வென்று, 'இங்கிலாந்து நாட்டை வென்றவன்' என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டார். இவரைப் பின்பற்றியே, மற்றப் போப்பாண்டவர்களும் அரசியலில் தலையிட்டனர். ஐந்தாவது பயஸ் என்ற போப்பாண்ட வரின் கட்டளைப்படியே 1570-ல் எலிசபெத் பட்டத்திற்குரியவள் அல்லவென்று பிரகடனம் செய்தார். மற்றும் பல அரசியல் சமயப் பிரச்சினைகளில் அரசர்களுக்கும் போப்பாண்டவர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டு வந்தது.

எக் காரணத்தைக் கொண்டும் திருச்சபை அதிகாரிகள், போப் பாண்டவரைப்பற்றியோ, அல்லது அவர்களுடைய நிறுவனங்களைப் பற்றியோ, அல்லது வேத பாடங்கள் மொழிவதைப்பற்றியோ, குற்றம் குறைகள் காண்பதை அனுமதிக்கவில்லை. அவர்களைத் திருந்தச் செய்யும் திறனுய்வுகளையும் அவர்கள் பொறுத்துக் கொள்வதில்லை. இச் சூழ்நிலையில் திருச்சபையில் ஊழல்கள் மிகுந்துவிட்டன.

இடைக்காலத்தில் மக்களிடையே தேசிய உணர்ச்சி அதிகமாக வேரூன்றவில்லை. அவர்கள் எல்லாரும் ஓர் அரசியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதினர். பெரும்பான்மையான நாடுகள், அவைகளின் வேற்றுமைகளையெல்லாம் மிகைப் படுத்தாமல், எல்லைப் போராட்டங்கள் இல்லாமல், ஒரே கிறித்துவ மத அடிப்படையில் சார்ந்த நாடுகளின் கூட்டம் என்று கருதின. குறுகிய தேசிய உணர்ச்சியைக் காட்டிலும், மக்கள் சர்வதேச உணர்ச்சி கொண்டிருந்தனர். ஓர் அரசின்கீழ் ஆளப்படு வதையும் மக்கள் விரும்பினர். ஆனால், அந்தச் சர்வதேச அரசிற்கு யார் தலைமை தாங்குவது என்ற அபிப்பிராய பேதம் இருந்தது. போப்பாண்டவர் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பெற்றதால், அவர் ஓர் ஆட்சியின்கீழ் கிறித்துவ மக்களைக் கொண்டுவர முயற்சி செய்தார். ஆனால், அவ்விதமான கருத்தை, ஐரோப்பிய அரச குடும்பத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவர் களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. அவ்விதமான பதவிக்கு யார் தகுதி பெற்றவர் என்பதை நிர்ணயம் செய்யும் பொழுது, சமயத் தலைவரான போப்பாண்டவர் அரசியலில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரே சமயத்தில், போப் பாண்டவரே சமயத் தலைவராகவும் அதனால் அரசியல் தலைவ ராகவும் இருக்கத் தகுதி பெற்றவர் என்றும், அவர்தான் கடவுளின் பிரதிநிதிஎன்றும் கூறப்பெற்றது. உண்மையில், அப்பதவியைப் போப் பாண்டவர் அடையவில்லையெனினும், அவர்கள் அப் பதவியைப் பெறுவதற்குப் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். மற்ற அதிகாரி களின் உதவிகளை அதனால் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பெற அவர்கள் முயன்றிருக்கிறார்கள். இவ்விதமாகச் சமயத் தலைவர்கள் அரசியல் விவகாரங்களில் அடிக்கடி தலையிடுவதை எதிர்த்து, ஐரோப்பிய நாட்டு அரசர்களில் பலர், குறிப்பாகப் புனித ரோமானியப் பேரரசர்கள் தங்களுடைய தகுதியை நிலைநிறுத்த முயற்சி செய்தனர். இதனால் அரசியல் தலைவர்களுக்கும் சமயத் தலைவர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டது. இம் மோதல் காரணமாக, ஐரோப்பிய மக்களிடையே சில கருத்து வேறுபாடுகள் தோன்றின என்பதைத் தவிர, பெரும்பாலும் அம் மக்களின்

ஒற்றுமை குலைந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், சிலுவைப் போர்களில், ஐரோப்பிய அரசர்கள் பலர், அவர்களுடைய வேறுபாடுகளை மறந்து, அவர்களுடைய சமயத்தையும் நாகரிகத்தையும் பாதுகாக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் துருக்கியர்கள்மீது படையெடுத்தனர். கிறித்துவர்களெல்லாம் ஓர் அரசியல் சமூகம் என்ற எண்ணம் அந்த மக்களிடையே காணப் பெற்றது. ஆனால், செயலளவில் அவர்களுக்கிடையே பல வேற்றுமைகளும் கருத்து மாறுபாடுகளும் மலிந்திருப்பதையும் காண்கிறோம். சிலுவைப் போர்களிலே பங்கு கொண்ட அரசர்களிடம் எவ்விதமான ஒருமைப்பாடும் காணப்படாததே அவர்களுடைய பலவீனத்தை எடுத்துக்காட்டியது. அதனால் பல தீமைகளும் ஏற்பட்டன. அரசர்களுக்கிடையே ஒற்றுமையின்மை காணப்படினும், ஐரோப்பிய பிரபுக்களுக்கிடையே, 'பரந்த மனப்பான்மை' நன்கு வளர்ச்சி அடைந்திருப்பதை நாம் காண்கின்றோம். மேலும் படைமானியத் திட்டம், இடைக்காலத்திய வரலாற்றில் காணப்படுகின்ற ஒரு சிறப்பான அம்சமாகும். அத் திட்டத்தின்படி, ஒரு தனிமனிதனின் ஆதிக்கமும், செல்வாக்கும் சமுதாயத்தில் பல துறைகளிலும் காணப்பெற்றது. இராணுவ அமைப்பு, பயிர்த் தொழில் வளர்ச்சி, மற்றும் நியாயம் வழங்குதல், கிராமங்களை ஆட்சி புரிதல் ஆகிய சில அம்சங்களையும் அத் திட்டத்தில் காணமுடிந்தது. ஆனால், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளும் மலிந்து காணப்பெற்றன.

ஐரோப்பாவின் இடைக்காலத்தை ஒரு கலையுணர்வற்றதும் முன்னேற்றமில்லாததுமான மந்தமான ஒரு காலமாக ஒரு சிலர் கூறுகின்றனர். ஒரு வகையில் இக் கூற்று உண்மையாகவே இருந்த போதிலும் இதை மிகைப்படுத்திக் கூறுவதற்குமில்லை. ஏனெனில், இக் காலத்தில் பரந்த மனப்பான்மையுள்ள பிரபுக்கள் சிலர் மிகுந்த ஆர்வமிக்கவர்களாகவும் வீரதீரச் செயல்களைப் புரிந்தவர்களாகவும் நாம் காண்கின்றோம். சிலுவைப் போர்களில் பங்கு பெற்ற பிரபுக்களின் வீரச் செயல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். அவர்களைப்பற்றி பல கவிதைகள் புனையப்பெற்றிருக்கின்றன. அவை வாழ்க்கையில் சில நல்ல தன்மைகளை உணர்த்துகின்றன. ஆனால் பொதுவாக, மற்றப் பாமர மக்களிடையே, மகிழ்ச்சியின்மை பரவலாகக் காணப்பெற்றது. மக்கள் அழகை ஒரு மயக்கமாகவும் இன்பத்தை ஒரு பாவச் செயலாகவும் கருதினர். அப்பொழுது தோன்றிய கலைகளில் ஓர் அழகில்லை. ஏனெனில், அவர்கள் சுதந்தர உணர்வைப் பெறவில்லை. ஆதிக்க வெறியர்கள், கலையைக்கூட அவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப ஆக்கவேண்டும் என்று கட்டுதிட்டங்களை

விதித்தனர். குறிப்பாகக் கடவுளின் ஓவியங்களை வரையும்பொழுது, அழகைப் பிரமாதப்படுத்துவது பாவம் என்று கருதப்பெற்றது. கிறித்துவை அழகான முறையில் ஓவியமாக்கக்கூடாது. இயற்கை அழகைச் சிறப்பித்துக் காட்டக்கூடாது என்ற பல கருத்துகள் மக்கள் மனத்தில் வேரூன்றியிருந்தன. சில துறவிகள், தங்களுடைய உடல்களையுங்கூடப் பார்த்தறியாதவர்களாக இருந்தனர். சுகாதார முறையில் உடலை வளர்ப்பதுகூடப் பாவம் என்று கருதப்பெற்றது. அதனால் அவர்கள் அடிக்கடி குளிப்பதையும் நிறுத்திக் கொண்டனர். உலகம் வெகு விரைவில் முடியப்போகின்றது என்ற எண்ணத்தில் இருந்தனர். இம் மாதிரியான சூழ்நிலையில், அவர்களிடம் நம்பிக்கையும் வளர்ச்சியும் எப்படித் தோன்ற முடியும்? ஸ்பெயின் நாட்டில் உள்ள கிரானடாவில் 'அலம்பரா' என்ற அழகான கட்டடம் மூர்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும். பிஸாவில் உள்ள கேம்போ சேண்டோவில் தீட்டப்பெற்றிருக்கும் வர்ண ஓவியங்களும் மற்றும் இங்கிலாந்து கோயில்களில் தீட்டப் பெற்ற ஓவியங்களும் அழகைக் காட்டிலும் சோகத்தையே அதிகமாக எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், கலைக்கண் கொண்டு நோக்கினால் அந்த ஓவியங்கள் நன்கு தீட்டப்பெற்றிருக்கின்றன. இவைகளை அக் காலத்திய கலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

2. மறுமலர்ச்சிக் காலம்

15ஆவது நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மறுமலர்ச்சிக் காலத்தைக் கணக்கிடலாம். இக் காலத்தின் தொடக்கமே, நவீன ஐரோப்பாவின் தொடக்கமாகும் இதுவே இடைக்காலத்தின் முடிவுமாகும். மறுமலர்ச்சி என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவது, பழமையை மீண்டும் போற்றினார்கள் என்று கூறுவது, வரலாற்று வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது அவ்வளவு உண்மையில்லை யெனினும், மற்றபடி அதன் வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது உண்மையாகவே இருக்கிறது. ஏனெனில், அவர்கள் போற்றிய பழமை இடைக்காலப் பழக்க வழக்கங்களிலிருந்து தோன்றிய தொடர்ச்சி அன்று; அல்லது இடைக்காலத்தில் தோன்றிய கலையையோ, அல்லது இலக்கியத்தையோ அடிப்படையாகக் கொண்டு தோன்றிய புதிய இயக்கமும் அன்று.

இடைக்காலத்திற்கும் முற்பட்ட பழைய கிரேக்க, இலத்தீன் காலத்தில் தோன்றியுள்ள நாகரிக வழக்காறுகளையும், மரபுகளையும், கலைகளையும், இலக்கியங்களையும் ஐரோப்பிய மக்கள் போற்ற முற்பட்டனர்.

அக் கலைகளும், இலக்கியங்களும் ஐரோப்பிய மக்களை மீண்டும் கவர்ந்தன. அதனால் அவர்கள் பழைய காலத்திற்கே திரும்பிச் செல்லும் நிலையை விரும்பினர் என்று கொள்ளலாம். அந்த நிலைமை இடைக்காலத்தில் மக்கள் வாழ்ந்து வந்த நிலைமையைக் காட்டிலும் எல்லாத் துறைகளிலும் சிறந்ததாகவே காணப்பெற்றன. ஓரளவிற்குப் புதியனவாகவுங்கூடத் தோன்றியது. சுமார் ஆயிரம் ஆண்டுகளாக மக்கள் மறந்திருந்த இலக்கியங்களையும், கலைகளையும், அவர்கள் அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்த பொழுது, அவற்றில் அவர்கள் புதுமையைக் கண்டனர். ஆனால் என்ன காரணத்தாலோ, இந்த வரலாற்று வளர்ச்சி, இடைக் காலத்தில் துண்டிக்கப்பட்டது. இடைக்காலத் தொடக்கத்திற்கும் பழங்கால முடிவுக்கும் இருந்த தொடர்பு அறுபடவே, இடைக்

காலம் முற்றிலும் ஒரு புதியதொரு வளர்ச்சியில் வளர்ந்தது. ஆனால், மக்கள் மீண்டும் பழமைக்கே திரும்பி அங்கிருந்து அறுபட்ட வளர்ச்சியைத் தொடர்ந்து நவீன காலத்தில் பின் பற்றினர் என்றுல் விந்தையாகத்தானிருக்கிறது.

மறுமலர்ச்சிக் காலத்தில் சிறப்பாகக் கருதப்படும், அழகைப் போற்றுதலும், பகுத்தறிவை மதித்தலும், மனிதனின் உரிமைகளைப் பாதுகாத்தலும், புதிய துறைகளில் வளர்ச்சியை நாடுவதில் மகிழ்ச்சியுறுதலும், துணிச்சலான பயணங்களும், முன்னேற்ற மான கண்டுபிடிப்புகளும் சிறப்பான இயல்புகளாகும். மக்களின் உள்ளப் பண்பாடும், புதிய வாழ்க்கையில் மேம்பாடடையச் செய்யும் வளர்ச்சிகளும், அக் காலத்தில் மிகவும் சிறப்பாகப் போற்றப்பெற்றன. மக்கள் எதையும் மூடத்தனமாக நம்பி வாழ்ந்த காலம் மறைந்து வந்தது. அரசர்களும், அதிகாரிகளும், சமயவாதிகளும் கூறுவதை அப்படியே மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

அவர்கள் கூறுவதற்கு மக்கள் விளக்கம் கோரினர். அவர் களது ஐயப்பாடுகளைத் தெளிவாக்கிக்கொள்ள, ஏன்? எதற்கு? எப்படி? என்ற பல வினுக்களை எழுப்பினர். அவர்கள் எதற்கும் விளக்கம் கோரி காரணங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தனர். உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடையே மிகுந்து விடவே, அவர்கள் இயற்கையாகவே, அறியாமையிலிருந்தும், சமய நம்பிக்கைகளிலிருந்தும், மூடநம்பிக்கைகளிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலைபெற முற்பட்டனர். இவற் றைத்தான் மறுமலர்ச்சியின் சிறப்பான அம்சங்கள் என்று காண வேண்டும்.

மறுமலர்ச்சி இயக்கம், முதலில் இத்தாலிய சிறு நகரங்களி லிருந்து தோன்றி, பிறகு ஐரோப்பிய நாடுகளிலும் பரவத் தொடங்கின. இத்தாலியில் அப்பொழுது பல நகரங்கள் சுயேச்சைப்பெற்ற தனி நகரங்களாக விளங்கின.

ரோம், வெனிஸ், ஜெனேவா, பிஸா, பிளாரன்ஸ் ஆகிய நகரங்கள் மிகவும் புகழ்பெற்ற குடியரசு நகரங்களாக இருந்தன. இந் நகரங்கள் சுதந்தரமாக இயங்கிய காரணத்தாலும், பல அறிஞர் களையும், கலைஞர்களையும் அந் நகரங்களிலுள்ள பிரபுக்களும், சீமான்களும் ஆதரித்து வந்ததாலும், அங்குதான் முதலில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்ற ஆரம்பித்தன. தவிர, இத்தாலிய மக்கள் அவர்களுடைய பழம்பெருமையைப் போற்றி வந்தனர். பழைய சாதனைகளை மீண்டும் புதுப்பிக்கவேண்டும் என்ற

எண்ணம் கொண்டிருந்தனர். அதனால் புதியதொரு கலையையும் இலக்கியத்தையும் அவர்கள் உருவாக்கவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களாக இருந்தனர். எப்படி ஃபிரெஞ்சு, அரசியல் வளர்ச்சிக்குத் தாயகமாகவும் ஜெர்மனி சமயப் புரட்சிக்கு இருப்பிட மாகவும் இருந்ததோ, அதைப் போன்று, இத்தாலி சிந்தனைப் புரட்சிக்குத் தாயகமாக இருந்தது.

கான்ஸ்டாண்டிநோபிள் நகரம் துருக்கியர் வசம் சிக்கிய பிறகு, பல கிரேக்க அறிஞர்கள் இத்தாலிய நகரங்களிலும் ஐரோப்பிய நகரங்களிலும் சென்று குடியேறினர். அங்குச் சென்ற இந்தக் கிரேக்க அறிஞர்கள் பிழைப்பிற்காக கிரேக்க மொழியை அந்த நாடுகளில் உள்ள மக்களுக்குப் பயிற்றுவித்துக் கொடுத் தனர். மக்களும் கிரேக்க மொழியைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டினர். கிரேக்க இலக்கியங்களைப் படிப்பதற்கு மாணவர்கள் திரள் திரளாக வந்து குழுமினர். மடாலய நூலகங்களிலிருந்து கிரேக்க நூல்களைத் தேடித்தேடி எடுத்தனர். பல கையெழுத்துப் பிரதிகள் கண்டுபிடிக்கப்பெற்றன. அவற்றை யெல்லாம் பிரசுரிக்கத் தொடங்கினர். அச்சுக் கலையின் வளர்ச் சியே மறுமலர்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாகும். இல்லா விடில் பல இலக்கியங்களைப் பாமர மக்கள் படிப்பதற்கே வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். உண்மையில் மறுமலர்ச்சி இயக்கம் எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் சொந்தமானது என்றாலும், இத்தாலிய மக்கள்தான் இந்த இயக்கத்திற்கு அதிக ஆதரவு அளித்தனர். கிரேக்க மொழியிலும், இலத்தீன் மொழியிலும் அவர்களுக்கிருந்த ஆர்வம் கொஞ்சநஞ்சமன்று. அவர்களுக்குத் தங்கள் தாய்மொழியைக்கூட மறந்துவிடக் கூடிய அளவிற்கு, கிரேக்க, இலத்தீன் மொழிகளில் மோகம் ஏற்பட்டுவிட்டது. இடைக்காலத்திலும்கூடச் சமய அறிஞர்கள், கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களைக் கற்றிருந்தனர். ஆனால், அவர்கள் இந்த இலக் கியங்களைப் புரிந்துகொண்ட விதம் வேறுகவும், மறுமலர்ச்சிக் காலத்தில் அதே இலக்கியங்களை மக்கள் புரிந்துகொண்ட விதம் வேறுகவும் இருந்தன. மனித இயலாகவே அந்நூல்களைக் கருதினர். அந் நூல்களில் காணப்பெற்ற மனித இயல்களைப்பற்றியும், அவை எழுதப்பெற்ற நடை அழகைப்பற்றியும் அதிகமாகத் திறனாய்வு செய்தனர். பெட்ரார்க் (Petrarch) போன்றோர் புதிதாக இந்த இலக்கியங்களை உருவாக்கவில்லை எனினும், பிற்காலத்தில் அறிவியல், இலக்கியம் ஆகிய கலைகள் தக்க முறையில் வளர்ச்சி யுறுவதற்கு, அவர்கள் வழிவகுத்துக் கொடுத்தனர். சிற்பம், ஓவியம், போன்ற கலைத் திறன்கள் வளர்ச்சியுற, இத்தாலியப் பள்ளிகளிலும், பிளாரன்ஸ், வெனிஸ் ஆகிய நகரங்களிலும் கற்றுத்

தரப்பெற்றன. பொதுவாக, அந்தந்த நாடுகளில் உள்ள கலைஞர் களைப் பொறுத்துத்தான், இக் கலைகளும் வளர்ச்சியுற்றிருக்கின்றன.

அரசியல்

நிலமானிய முறை அழிய முற்பட்டபொழுது, அரசாங்க நிறுவனங்கள் நன்கு பலப்படுத்தப்பெற்றன. சிறு சிறு நாடுகள் பெரிய பேரரசுகளின் பிடியிலிருந்து விடுதலைபெறத் துடித்தன. மக்களிடையே சுதந்தர உணர்ச்சி தோன்றியது. அதனால் தேசிய உணர்ச்சியும் வளர்ச்சியுற்றது.

நிலமானியப் பிரபுக்களின் பிடியிலிருந்து பண்ணையாட்களும் குடியானவர்களும் சுதந்தரம்பெற முற்பட்டனர். தேசிய உணர்ச்சி யின் அடிப்படையில், ஃபிரெஞ்சு, ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகள் வளர்ச்சியுற்றன. இந்த நாடுகளில் வல்லாட்சி தோன்ற லாயிற்று. சில நாடுகளில் வல்லரசர்களின் ஆட்சி, ஒளிர்வுசால் வல்லரசர்களின் ஆட்சியாகவும் மிளிர்ந்தது. அவ் வல்லரசர்களின் பேராதரவால் மறுமலர்ச்சி இயக்கமும் சமயச் சீர்திருத்தங்களும் தோன்றின. அந்த நாடுகளிடையே சுதந்தர உணர்ச்சித் தோன்றிய உடன் மக்களாட்சியும் மலரத் தொடங்கியது. நிக்கோலா மாக்கியவல்லி (Niccolo Machiavelli, 1460-1527) என்பவர் பிளாரன்ஸ் நகரத்தில் ஆட்சியாளராகவும், இராச்சியத் தூதுவ ராகவும் பணியாற்றி நல்ல அநுபவம் பெற்றிருந்தார். அவர் பெற்ற அநுபவங்களிலிருந்து, 'தி பிரின்ஸ்' (The Prince) என்ற சிறந்த தொரு நூலை எழுதினார். ஒரு குறிக்கோளைப் பெற அரசு எந்த வழியையும் பின்பற்றலாம்; அரசின் இறுதிப் பயனுக்கும் அறநெறிக்கும் தொடர்பில்லை என்று அவர் அந் நூலில் கூறுகிறார். இந் நூலைத் தவிர, அவர் பிளாரன்ஸ் நாட்டு வரலாற்றைப் பற்றியும் ஒரு நூல் எழுதியுள்ளார். அவருடைய அரசியல் கோட்பாடுகள் அக் கால அரசாங்கங்களில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தன. அவற்றை மிகவும் பாதித்துவிட்டன என்றுங்கூடக் கூறலாம்.

விஞ்ஞானம்

ரோஜர் பேக்கன் (1214-1292) என்ற விஞ்ஞானி கணிதம், இரசாயனம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்து புரட்சிகரமான கருத்துகளை வெளியிட்டார். அவர் தொலைநோக்கிக் கருவியைக் கண்டுபிடித்தார். அவருடைய ஆராய்ச்சிகளை மக்களிடம் பரப்பு வதற்கு அவர் மிகவும் பாடுபட்டார். அதற்காக அவருக்குக் கிடைத்த பரிசு சிறைத் தண்டனையாகும். நிக்கோலஸ் கோபர்னிக் கஸ் (1474-1543) பழைய வானநூல் கோட்பாடுகளை மறுத்து பூமி, மற்ற சூரியன், சந்திரன் ஆகிய கிரகங்களைச் சுற்றி

வருகின்றது என்று கூறினார். மக்கள் இதுவரையிலும் கொண்டிருந்த கருத்துகளுக்கு இவருடைய கருத்துகள் முற்றிலும் முரண்பட்டவையாக இருந்தன. அதனால் அவருக்குச் சிறைத் தண்டனை காத்துக்கொண்டிருந்தது. அவர் இறக்கும் தருவாயில்தான், அவருடைய கருத்துகள் வெளியிடப்பெற்றன. கோபர்னிக்கஸின் கோட்பாடுகளைச் சிறிது மாறுதல்களுக்குள்ளாக்கி, கலிலியோ என்பார் (1564-1642) வெளியிட்டதால், சமயத்திற்குப் புறம்பாக அவர் பிரச்சாரம் செய்கிறார் என்று குற்றம் சாட்டப்பெற்றுச் சிறைப்படுத்தப்பெற்றார். அவரது அருமையான சாதனையாவது, தொலைநோக்கிக் கருவியைக் கண்டுபிடித்ததாகும். இக் கருவி மற்ற வானநூல் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

வில்லியம் ஹார்வி (1578-1657) என்ற ஆங்கிலேயர் மனித உடலில் இயங்குகின்ற இரத்த ஓட்டத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். மருத்துவத் துறையில் இவருடைய ஆராய்ச்சி மிகவும் பயனுடையதாக அமைந்தது. இவற்றைத் தவிர, மாலுமிகளின் திசை காட்டும் கருவி, அச்சடிக்கும் சாதனம் முதலான கண்டுபிடிப்புகளும் தோன்றியதால், மறுமலர்ச்சி இயக்கத்தில் வியத்தகு மாறுதல்கள் தோன்றின. மாலுமிகள் திசையறிந்து புதிய புதிய இடங்களுக்குச் செல்லவும், பின்பு அங்குக் குடியேறவும் வசதியாக இருந்தன. அச்சடிக்கும் கருவியை முதன்முதலில் யார் கண்டுபிடித்தனர் என்பதைத் திட்டமாகக் கூறமுடியாதெனினும், இந்தக் கண்டுபிடிப்புக்கு மிகவும் காரணமாக இருந்தவர் கூட்டன்பர்க் என்ற ஜெர்மானியராவர். அச்சடிக்கும் கலை வளர்ச்சியுற்றதால் எண்ணற்ற நூல்கள் பல ஆயிரக்கணக்கான அளவில் பிரசுரமாவதற்குக் காரணமாக இருந்தது. பழைய இலக்கியங்கள் பிரசுரிக்கப்பெற்றன. அறிவுவுணர்ச்சி ஏற்படுவதற்கு இதன் வளர்ச்சியே காரணமாகும். போர் முறைகளிலும் சில மாறுதல்கள் தோன்றின. பழைய அம்புகளும் ஈட்டிகளும் பலமான கோட்டைக் கொத்தளங்களைத் தகர்த்தெறிய முடியவில்லை. ஆனால், வெடிமருந்து கண்டுபிடிக்கப்பெற்ற பிறகு, பிரபுக்களின் பெரிய கோட்டைகள் பயனில்லை என்பதை உணர்ந்தனர். மக்களைப் பெரும் அளவில் கொல்வதற்கான முதல் கண்டுபிடிப்பு, இந்த வெடிமருந்துகளே ஆகும். பின்புதான் போர்க்களங்களில், மக்களைப் பெரும் அளவில் அழிக்க மற்ற நாசமியற்றும் ஆராய்ச்சிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.

இலக்கியம்

இடைக்காலத்தில் தோன்றிய 'மிலேச்சர்களது படையெடுப்பால்' பழைய கிரேக்க, இலத்தீன் இலக்கியங்கள் எல்லாம் அடி

யோடு அழிந்துவிட்டன. பல மறைந்துவிட்டன. அவர்களுக்கும், நாகரிகத்திற்கும், மக்களது பண்பாட்டு வளர்ச்சிக்கும் அப்பொழுது யாதொரு தொடர்பும் இல்லை என்றே கூறலாம். மறைந்து போன இலக்கியங்களை மக்கள் நாளடைவில் மறந்து விட்டனர் என்றே கூறலாம். ஓரளவிற்கு இவ்விலக்கியங்கள், இக் காலத்தில் மக்களிடையே அதிகமாகப் பரவவிடாததற்குச் சமயவாதிகளே காரணமாகவும் இருந்தனர். பகுத்தறிவை வளர்க்கும் எந்த நூலும் சமய வளர்ச்சிக்கு இடையூருகவே இருந்தது. அதனால் சமயவாதிகள், இந்த இலக்கியங்களைப் படிக்கின்றவர்களைத் தெய்வ நிந்தனையாளர் என்றும், நாத்திகர்கள் என்றும் கருதி வந்தனர். இதன் காரணமாகச் சில கையெழுத்துப் பிரதிகளும்கூட மறைந்துவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டன. பல மடாலய நூல் நிலையங்களில், ஒரு சில பழைய இலக்கியக் கையெழுத்துப் பிரதிகள் ஒளிந்து மறைந்திருந்தன. பெரிய சமய அறிஞர்களுக்கும்கூட இவ்விலக்கிய வளர்ச்சியில் அக்கறை யில்லாமல் போய்விட்டது. கிரேக்க மொழியைப் படிப்பதும்கூடப் பாவம் என்று அவர்கள் கருதினர். அக் காலத்து இலக்கிய அறிவு, 'இலியட்' என்ற காவியத்தைப் 'பிண்டார்' என்பவர் எழுதினர் என்றும், ஹோமரும், வெர்ஜிலும் மிகவும் நெருங்கிய நண்பர்கள் என்றுங்கூடப் பேசும் அளவிற்கு மட்டமாகிவிட்டது. அவர் களுடைய இலக்கிய அறிவு குறைபட்டதுமன்றி, இலக்கிய அறிவைப் பெறவேண்டும் என்ற ஆர்வமும் அடியோடு இல்லாமல் போய்விட்டது. மிகச் சிறந்த போப்பாண்டவரான கிரிகிரியே இலத்தீன் இலக்கியத்தைக் கேலியாகப் பேசியும், அது பயனற்றது என்றும் கூறினர். மேலும், இலத்தீன் மொழியைப் பல சமய வாதிகள் போற்றி வளர்த்த காரணத்தாலும்கூட, அதனுடைய தரம் குன்றிவிட்டதென்ற இழிநிலை ஏற்பட்டுவிட்டது.

மறுமலர்ச்சிக் காலத்தில், மீண்டும் மக்கள் பழமையை விரும்ப ஆரம்பித்தனர். அவற்றைப் புதுப்பிக்கும் ஆர்வத்தில் ஈடுபட்டனர். பழைய கையெழுத்துப் பிரதிகளைத் துருவித் துருவிக் கண்டுபிடிக்க முற்பட்டனர். இவற்றைத் தேடுவதையே சிலர் தொழிலாகக்கொண்டனர். பழைய கிரேக்க, இலத்தீன், ஹீப்ரு மொழிகளில் இயற்றப்பெற்ற இலக்கியங்களைப் படித்து, அவ்விலக்கிய நடையையும், ஆங்குக் கூறப்பட்டுள்ள அறிவியல் கருத்துகளையும் திறனாய்வு செய்ய பல அறிஞர்கள் முன் வந்தனர். இவ்விலக்கியத் திறனாய்வினால், நடையில் அதிக மாற்றம் ஏற்படவில்லையெனினும், அக் காலத்து மக்களின் நாகரிகத்திலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டன என்றே கூறலாம். வாழ்க்கை முறை, இடைக்காலத்தில்

இருந்ததைப் போன்று மப்பும் மந்தாரமும் கொண்டதாக அல்லாது புதிய உணர்ச்சிகளைக் கொண்ட, அழகைச் சுவைப்பதற்கும், இயற்கையைப் போற்றவும், பகுத்தறிவை வளர்க்கவும், பொதுவாக மக்கள் மகிழ்ச்சியுற்றிருக்கவேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது. மறுமலர்ச்சிக் கால அறிவு வளர்ச்சிக்கு, இப் பழைய நூல்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. இவ்விலக்கியங்களைப் படிக்கவும், போற்றவும், திறனாய்வு செய்யவும் பல கழகங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இதுவரை சிறப்பை இழந்திருந்த 'சொற்பொழிவாற்றல்' என்ற கலையும் போற்றப் பெற்றது. மற்றும் மனிதாபிமானத் தன்மை மேம்படுவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பெற்றன.

மனிதாபிமான இயக்கம் (Humanism)

இவ்விதமான இலக்கிய வளர்ச்சியால் மூன்றுவிதமான மாறுதல்கள் காணப்பெற்றன. முதலில், பழைய இலக்கியங்கள் புதுப்பிக்கப்பெற்றன. இடைக்காலத்தில், இலத்தீன் எழுத்தாளர்களையுங்கூட மக்கள் மறந்திருந்தனர். வெர்ஜில் (Virgil) என்பவரைப்பற்றித்தான் சிறிது அவர்கள் அறிந்திருந்தனர். கிரேக்க எழுத்தாளர்களையுங்கூட, இலத்தீன் மொழியில், மொழி பெயர்க்கப்பெற்ற நூல்கள் வழியாகத்தான் ஓரளவிற்கு அறிந்திருந்தனர். நாளடைவில் மக்களிடையே, கிரேக்க இலக்கியங்களை அப்படியே படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பம் தோன்றியது. இந்த விருப்பம் நிறைவேறவேண்டும் என்றால் அவர்கள் பழைய இலக்கியங்களைக் கண்டுபிடித்தாகவேண்டும். அவை இதுவரையிலும் கவனிக்கப்படாது, இங்கும் அங்குமாகச் சிதறிக்கிடந்தன. அவற்றை எல்லாம் தேடிக் கண்டுபிடிப்பது என்பது பகீரத முயற்சியாகும். இவ்வகையில், பாமர மக்களும், மற்றும் மத அடிப்படையில் தோன்றிய பல்கலைக் கழகங்களும், எவ்விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. கிரேக்க மொழி தெரிந்த சில தனிப்பட்டவர்களின் அரும் முயற்சியால்தான், மீண்டும் இக் கிரேக்க நூல்கள் புத்துயிர்பெற்றன. அவர்கள் மக்களிடையே படிப்படியாகக் கிரேக்க மொழியைப் பரப்ப ஆரம்பித்தனர்.

பைசாந்தியப் பேரரசிலிருந்து வெளியேறிய கிரேக்க மொழி பேசுகின்றவர்கள் பழைய கிரேக்க இலக்கியங்களில் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இல்லாததால், முறையாகக் கிரேக்க மொழியைக் கற்றுக்கொடுக்க நல்ல ஆசிரியர்கள் கிடைப்பது கடினமாகி விட்டது. அப்பொழுது, கிரேக்க மொழியைக் கற்றுக்கொடுத்த சில சிறப்பான ஆசிரியர்களாக விளங்கியவர்கள், பார்லாம்,

லியோன்டியஸ் ஆகியோராவர். அவர்களிடத்தில் படித்தவர்கள் தான், பெட்ராக், பொக்காசியோ ஆகியோராவர். பெட்ராக் என்பவர் மனிதாபிமான இயக்கத்தின் தந்தை என்று மதிக்கப்பெறுகிறார். இவர் பழைய கிரேக்க இலக்கியங்களில் சிறப்பான ஆற்றலும், அநுபவமும் பெறவில்லையெனினும், கிரேக்க மொழியைப் பற்றிய ஆர்வத்தை மக்களிடம் பரப்பியவர் இவர்தான் என்று கூறலாம். இந்த இயக்கம் வலுவடைவதற்குத் தக்க ஆட்களைத் தேடித் தந்தவரும் இவர்தான். இவருடைய தூண்டுகோலின் பேரில்தான், பொக்காசியோவும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டார். ஐரோப்பாவில், முறையாகப் பழைய கிரேக்க இலக்கியங்களில் ஆர்வம் ஏற்படுத்திய சிலருள், மேனுயல் கிரிசோலரஸ் (Manuel Chrysoloras) என்பவரும் முக்கியமானவர். பைசாந்தியப் பேரரசைச் சார்ந்த இவர், அவ்வரசனின் தூதுவராகப் பிளாரன்ஸ் நகரத்தில் பணியாற்றுகையில், கிரேக்க மொழியைப் படித்துப் புலமை அடைய வேண்டும் என்று சில ஆர்வமிக்கவர்களுடன் தொடர்புற்றார். அவர்களது முயற்சியின் பேரில், கிரிசோலரஸ் அப் பல்கலைக் கழகத்தில் கிரேக்கப் பேராசிரியராக நியமனம் செய்யப்பெற்றார். பிளாரன்ஸ் மக்கள் அவரிடம் பாடம் கேட்க முன் வந்தனர். முதலில் நவீன கிரேக்க இலக்கணத்தை அவர் தயாரித்துக் கொடுத்தார்.

இரண்டாவதாக, கிரேக்க மொழியில் ஆர்வம் படைத்தவர்கள் கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதப்பெற்ற பழைய கையெழுத்துப் பிரதிகளைத் தேட முற்பட்டனர். பிராசியாலினி (Bracciolini) என்பவர் முறையாக ஓர் இயக்கத்தையே தொடக்கி வைத்தார். ஐரோப்பிய நாடுகளில் பலர் இப் பிரதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். குவோனி அரிஸ்பா, குவேரினே தாவெரோனே, பிரான்சிஸ்கோ பிலிப்போ ஆகியோர் துருக்கியில் பயணம் செய்து நூற்றுக்கணக்கான பிரதிகளைத் தேடித்தந்தனர். சிலர் இந் நூல்களைத் தேடியும், அவற்றிற்கு நகல் எடுத்தும் பல பிரபுக்களுக்கும், நூல்நிலையங்களுக்கும் நல்ல விலைக்கு விற்றனர். பிளாரன்ஸ் நகரைச் சார்ந்த வைஸ்பாஸியானே என்பவர் கிரேக்க மொழியில் நல்ல புலமை பெற்றவர். பல பிரதிகளுக்கு நகல் எடுத்து அவற்றை விற்பனை செய்துவந்தார். ஒரு சமயத்தில் அவர், காஸிமோ தி மெடிச்சிக்கு விற்பனை செய்ய 45 பேர்களை நகல் எடுக்க அமர்த்தி 22 மாதங்களில், 200 பிரதிகளைத் தயாரித்துக் கொடுத்தார். எங்குப் பார்த்தாலும் புதிய நூல்நிலையங்கள் நிறுவப் பெற்றன. தனியாரும் அரசாங்கமும் இம் முயற்சியில் ஈடுபட்டனர். பிளாரன்ஸ், ரோம் ஆகிய நகரங்களில் நிறுவப்பெற்ற நூல் நிலையங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாக இருந்தன. போப் பாண்டவரின் நூல்நிலையம்கூடக் கிரேக்க இலத்தீன் பிரதிகளை

ஏற்றுக்கொண்டது. போப்பாண்டவர் ஐந்தாம் நிக்கலஸ் காலத்தில் (1447–1455) நூல்நிலையம் புதுப்பிக்கப்பெற்றது. அந் நூல் நிலையத்தில் 824 இலத்தீன் பிரதிகளும், 352 கிரேக்கப் பிரதிகளும் காணப்பெற்றன. நான்காவது சிஸ்டஸ் காலத்தில் (1471-1484) கிரேக்கப் பிரதிகள் ஆயிரம்வரையிலும் கணக்கிடப்பெற்றன.

மேலும், அப்பொழுது நிகழ்ந்த அரசியல் உறவுகள், கடிதப் போக்குவரத்து, மற்றும் சொற்பொழிவுகளும் இலத்தீன் மொழியில் செய்யப்பெற்றன. அப்படிச் செய்வது நாகரிகமாகவும் கருதப் பெற்றது. இப் பணிகளுக்குக் கிரேக்க இலத்தீன் மொழி பயின்ற மனிதாபிமானிகள் (Humanists) நியமனம் செய்யப்பட வேண்டியது அவசியமாயிற்று. இம் மனிதாபிமானிகளுக்கு அரசவைகளில் நல்ல மதிப்புத் தரப்பெற்றன. இவர்களை வரவேற்று அரசர்கள் போற்றினர். இதனால், இவர்களுடைய இலக்கியங்களில் பல அரசர்கள் இடம் பெற்றனர். அரசர்களுக்கும் அதனால் மேலும் பல புலவர்களை ஆதரிக்கும் ஆர்வம் ஏற்பட்டன. போப்பாண்டவர்கள் இந்த மனிதாபிமானிகளைப்பற்றி அவ்வளவு நல்ல எண்ணம் கொள்ள வில்லை. இவர்களெல்லாம் சமயத்திற்கு விரோதிகள் என்று அவர்கள் கருதினர். ஆனால், நாளடைவில் இந்த மனிதாபிமான இயக்கம் வலுவடைந்தது. இது நாகரிகத்தின் சின்னமாகக் கருதப் பெற்றது. அதனால், போப்பாண்டவர்களும்கூட இவர்களை மதிக்கத் தொடங்கினர். அவர்களது நூல்நிலையங்களிலும்கூடக் கிரேக்க, இலத்தீன் நூல்கள் இடம்பெற்றன. ஐந்தாவது நிக்கலஸ் என்ற போப்பாண்டவர் இந்த இயக்கத்தைக் கண்டிக்காது, பல கிரேக்க, இலத்தீன் நூல்களை நூல்நிலையத்தில் வைக்க ஏற்பாடுகள் செய்தார்.

மூன்றாவது கட்டத்தில், முன்போலக் கண்மூடித்தனமாக எல்லாக் கிரேக்க, இலத்தீன் நூல்களையும் வானளாவப் புகழாமல் அவற்றைத் திறனாய்வு செய்ய முற்பட்டனர். அதனால், இந்த இயக் கத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. லாரன்ஸோவாலா (Lorenzovalla), லியோ பட்டிஸ்டா ஆல்பெர்டி (Leo Battista Alberti), மார்ஸிலோ பிஸினே (Marsillo Ficino), ஆங்கிலோ போலிசியானே (Angelo poliziano), கிவானே பிக்கோடெல்லா மிராண்டாலோ (Giovanni Piccodella Mirandola) ஆகிய சில முக்கியமான திறனாய்வாளர்கள் அப்பொழுது போற்றப்பெற்றனர். மற்றும், பல கிரேக்கக் கல்விக்கூடங்களும் ஐரோப்பிய நாடுகளில் நிறுவப்பெற்றன. இக் கல்விக்கூடங்களில் எண்ணற்ற அறிஞர்கள் கூடி, அறிவு சார்ந்த சர்ச்சைகளை நடத்தினர். அறிவைப் பரப்பு வதற்கும், அறிவு முன்னேற்றம் ஏற்படவும் இவர்கள் அரும்பாடு பட்டனர். இவ்விதமான கல்விக்கூடங்கள் முதலில் ரோம்

நகரத்திலும், பின்னர் நேப்பிள்ஸ், பிளாரன்ஸ், வெனிஸ் ஆகிய நகரங்களிலும் நிறுவப்பெற்றன. கி.பி. 1460-ல் ரோமாபுரியில் நிறுவப்பெற்றக் கல்விக்கூடம் தோன்றுவதற்குப் பிரோ (Piero) என்பவர் காரணமாக இருந்தார். இவர் தம் பெயரை மாற்றி போம் பேனியஸ் லேடஸ் என்று பழைய இலத்தீன் நாகரிக முறைப்படி வைத்துக்கொண்டார். இவர் பழைய இலத்தீன் கிரேக்க இலக்கியங் களில் ஆர்வத்தைக் காட்டுவதைவிட, ரோம் நகரின் வரலாறு பற்றியும், அதன் மரபுகளைத் தெரிந்து கொள்வதுபற்றியும்தான் அதிக ஆர்வம் காட்டினர். அதனால் அவரும், அவருடைய மாணவர்களும் ரோமானியச் சிற்பங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய முற்பட்டனர். பழங்காலத்து ரோமானியர்கள் வாழ்ந்தவாறே இவர்களும் வாழவேண்டும் என்று தீவிரமாக முனைந்தனர். அவர்கள் தங்களுடைய கிறித்துவப் பெயர்களையெல்லாம் விட்டு விட்டுப் பழைய ரோமானியப் பெயர்களை வைத்துக்கொண்டனர். பெயர்களை மட்டுமல்லாது, நாளடைவில் அவர்கள் கிறித்துவச் சமயத்தையுங்கூட இழந்துவிட்டனர். அதனால் இக் கல்விக் கூடம் போப்பாண்டவரின் வெறுப்பைப்பெற்றது. அப்பொழு திருந்த போப்பாண்டவரான இரண்டாவது பால் இக் கல்விக் கூடம் மிகவும் அபாயகரமானது என்று கருதினர். இவ்வியக் கத்தைச் சேர்ந்த பல தலைவர்களைச் சிறையில் அடைத்தார். ஆனால், பிறகு அவர்களுடைய தத்துவங்கள் கொள்கையற்றவை என்று போப்பாண்டவர் கருதியதால், அவர்களை விடுதலை செய்து விட்டார். அதற்குப் பிறகு இக் கல்விக்கூடம் களைக்கப்பெற்றது. பிறகு இக் கல்விக்கூடம் நான்காம் சிஸ்டஸ், பத்தாம் லியோ ஆகிய போப்பாண்டவர்கள் காலத்து மீண்டும் புதுப்பிக்கப்பெற்றது. 1527-க்குப் பிறகு மீண்டும் இது மூடப்பெற்றது. பிளாரன்ஸ் நகரத்தில் நிறுவப்பெற்ற கல்விக்கூடம்தான் மிகவும் சிறப்பான தாகக் கருதப்பெற்றது. மற்றக் கல்விக்கூடங்களில் சிறப்பான அம்சமாகக் கருதப்பெற்ற கிறித்துவப் பெயர்களை மாற்றி இலத்தீன் மயமாக்குவது போன்றல்லாது இங்குக் குழுமிய அறிஞர்கள் உண்மையிலேயே பழைய கிரேக்க இலத்தீன் இலக்கியங்களையும் அறிவு நூல்களையும் முறையாகத் திறனுய்வு செய்தனர். அப்பொழுது மிகச் சிறந்த அறிஞர்களாகக் கருதப்பெற்ற, பொலி டியன் (Politian), பிக்கோ (Pico), பிஸினே (Ficino), ஆல்பர்டி (Alberti), போக்கியோ (Poggio), லாண்டினே (Landino), பல்சி (Pulci), பிராங்கோ (Franco), மைக்கல் ஆஞ்சலோ (Michel Angelo) ஆகியோர் இக் கல்விக்கூடத்தில் அங்கத்தினர்களாக இருந்தனர். கி.பி. 1438-ல் காஸிமோ டி மெடிச்சி (Cosimo de Medici) என்பவர் ஒரு கிளை நிறுவனமாகப் 'பிளாடானிக் கல்விக்கூடம்' என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கினர். பிளாட்டோ எழுதிய

எல்லா நூல்களையும் இங்கு நுணுக்கமாகத் திறனாய்வு செய்தனர். நாளடைவில் பிளாட்டோவைப்பற்றிய திறனாய்வு மறைந்து, பிறகு இத்தாலிய மயமாகிவிட்டது. பலமுறை இக் கல்விக்கூடம் மறைந்துவிட்டது என்றாலும் கி.பி. 1540-க்குப் பிறகு இது புத்துயிர் பெற்றுவிட்டது. வெனிஷியக் கல்விக்கூடம் ஆல்டஸ் மனுஷியஸ் (Aldus Manutius) என்பவரால் கி.பி. 1500-ல் நிறுவப்பெற்றது. இக் கல்விக்கூடத்து அங்கத்தினர்கள் பழைய கிரேக்க இலக்கியங்களை முறைப்படுத்தி அச்சாக்கித் தந்தனர். ஏறக்குறைய இருபத்தெட்டு கிரேக்க இலத்தீன் இலக்கியங்கள், ஆல்டஸ் மனுஷியஸ் என்பவரின் முயற்சியால் அச்சிடப்பெற்றன. இலக்கியத் துறைக்கு இக் கல்விக்கூடம் செய்த சேவை மிகவும் சிறப்பான தாகும். 1515-ல் அவர் இறந்த பிறகு, இக் கல்விக்கூடம் படிப் படியாக மறைந்துவிட்டது. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு, இதைப் போன்ற கல்விக்கூடங்கள் பாமர மக்களிடம் அவற்றின் மதிப்பை இழந்துவிட்டன. நாளடைவில், இக் கல்விக்கூடத்து அறிஞர்கள் பழைய இலக்கியங்களில் காணப்படுகின்ற இயற்கை யான எளிய நடையைக் கைவிட்டு, மிகவும் ஆடம்பரமான இலக்கிய நடையைப் பின்பற்றியதல்லாமல், அவர்களுடைய விளக்கங்களும் இலக்கியப் படைப்புகளும் செயற்கைத் தன்மை யைப் பெற்றுவிட்டதால், அவை பாமர மக்களின் ஆதரவை இழந்துவிட்டன என்று கூறப்படுகின்றது.

ஜெர்மனி

ஜெர்மனியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் வேறுவிதமாகத் திரும்பியது. சமயச் சீர்திருத்தங்கள் அங்கே தோன்றலாயின. அதிகமான கவனம் இத் துறையிலே செலுத்தப்பெற்றதால், இலக்கியத்திலும், மற்றச் சிற்ப, ஓவியக் கலைகளில், மறுமலர்ச்சியின் செல்வாக்கு அதிகமாகப் பரவவில்லை. இத்தாலியில் பரவிய மனிதாபி மான இயக்கம் ஜெர்மனியில் பரவவில்லை. எந்தச் சிறப்பான மாறுதல்களையும் அவ்வியக்கத்தைச் சார்ந்தவர்கள் செய்யவில்லை. தவிர, ஜெர்மனியில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களும் இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கவில்லை யென்பதும் குறிப்பிடத் தக்கது. ஆனால், அப்பொழுது ஜெர்மனியில் பல அறிஞர்கள் இருந் தனர். மெக்ஸிமிலான் என்ற பேரரசனும், மெயின்ஸ் பகுதி யைச் சார்ந்த ஆல்பர்ட் என்பவரும், சாக்ஸனியைச் சார்ந்த பிரடிரிக் என்பவரும் நல்ல அறிஞர்களாக விளங்கினர். ரூச்சலின் (Reuchlin), மெலான்ச்தான் (Melanchthon), எராஸ்மஸ் (Erasmus) ஆகியோரும் குறிப்பிடத்தக்க பேரறிஞர்களாக விளங் கினர். ரூச்சலின் என்பவர் ஹீப்ரூ இலக்கியத்தில் நல்ல புலமை பெற்றிருந்தார். அவர் எவ்விதமான விருப்பு, வெறுப்புக்கும்

உட்படாது, உண்மையை நாடுவதிலேயே தம் காலத்தை கழித்தார். அவர் பழைய இயற்கைத் தத்துவங்களையும் கிறித்துவத் தத்துவங்களையும் இணைக்க முயன்றார். அவருடைய முயற்சி வீணாகியது. பழைய ஏற்பாட்டைப்பற்றி அவர் எழுதிய விமர்சனம் மதச் சீர்திருத்தங்கள்பால் சேர்க்கப்பட்டிருப்பதால் அவருடைய புகழ் மேலோங்கியது. மெலான்ச்தான் என்பவர் ரூச்சலின் என்பவரின் நெருங்கிய உறவினராவர். ரூச்சலின் எப்படிப் பழைய ஏற்பாட்டைப்பற்றி எழுதினாரோ, அதைப் போன்று இவர் புதிய ஏற்பாட்டைப்பற்றி நல்ல ஆராய்ச்சி செய்திருக்கிறார். மேலும், இவர் கிரேக்க இலக்கியங்களில் நல்ல புலமை பெற்றவராவார். இவர் கிரேக்க மொழியைப் பல மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். மாணவர் தேவைகளுக்காக, அவர் பள்ளி நூல்களையும் எழுதியிருக்கிறார்.

ஃபிரான்ஸ்

ஃபிரெஞ்சு நாட்டின் மறுமலர்ச்சி இயக்கத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது. ஏனெனில், இத்தாலியர்களைப்போன்று இவர்கள் பழைய கிரேக்க இலத்தீன் இலக்கியங்களையும், கலைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், அவற்றை மாற்றி அமைத்து, அவர்களுடைய பண்பாட்டிற்கு ஏற்றவாறு உருவாக்கிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1457ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, பேரிஸ் பல்கலைக் கழகத்தில் கிரேக்க மொழி கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால், அந்த மொழியைப் பயில்வதில் ஆர்வம் சிறிது குறைந்திருந்தது. 1494-க்குப் பிறகு, எட்டாம் சார்லஸ் என்ற ஃபிரெஞ்சு மன்னன் இத்தாலிமீது படையெடுத்து வென்ற பிறகுதான் கிரேக்க இலத்தீன் மொழிகளின் மீது அவர்களுக்கு அளவு கடந்த பற்றுதல் ஏற்பட்டது. தோற்றுப்போன நாட்டின் இலக்கியப் பண்பாடு, வெற்றி கண்ட ஃபிரெஞ்சு மக்களை ஆட்கொண்டது என்று குறிப்பிடலாம். இத்தாலியர்களின் செல்வாக்கு ஃபிரெஞ்சிலே, ஒரு நூற்றாண்டு அளவிற்கும் நிலைத்திருந்தது என்று கூறலாம். முதலாம் பிரான்சிஸ் மன்னனுடைய காலத்தில் லியானார்டோ, செலினி ஆகிய இத்தாலிய மேதைகள் அரசவையை அலங்கரித்தனர். முதலாம் சார்லஸ் மன்னனும், அவருடைய தங்கையான மார்கரட் தே ஆஞ்சலோவும் ஃபிரெஞ்சு நாட்டில் மறுமலர்ச்சி இயக்கத்தைப் பரப்பினர். ஃபிரெஞ்சுப் பல்கலைக் கழகங்களில், மருத்துவம், தத்துவம், கணக்கியல் ஆகிய பாடங்களில் நல்ல ஆராய்ச்சி செய்வதற்கு ஆதரவு தரப்பெற்றது. ரோமன் சட்டத்தை முறையாக ஃபிரெஞ்சு நாட்டில் விமர்சனம் செய்தனர். அத்துடன் கிரேக்க இலத்தீன் இலக்கியங்களையும் நன்கு ஆராய்ச்சி செய்தனர்.

இங்கிலாந்து

மனிதாபிமான இயக்கம் இங்கிலாந்தில் சிறிது காலம் கடந்தே தான் பரவத் தொடங்கியது. பல ஆங்கிலேயர்கள் இத்தாலி போன்ற நாடுகளுக்குச் சென்றுதான் கிரேக்க இலத்தீன் இலக்கியங்களைக் கற்று வந்தனர். அப்படிக் கற்று வந்த ஆங்கிலேயர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே இருந்தது. ஐந்தாவது ஹென்றி மன்னனுடைய சகோதரரான ஹம்பரி என்ற கிளஷசஸ்டர் கோமகன் இவ்வியக்கத்திற்கு முதன் முதலில் ஆக்கமளித்தார். பிறகு, பல்கலைக் கழகங்களில், கிரேக்க, இலத்தீன் மொழிகள் பயிற்றுவிக்கப்பெற்றன. ஜெர்மனியில் தோன்றியதைப் போன்று, இவ்வியக்கத்திற்கு இங்கு எதிர்ப்புத் தோன்றவில்லை. இம் மொழிகளைப் பரப்புவதற்காகப் பல பள்ளிகள் தோற்றுவிக்கப்பெற்றன. 1512-ல் காலெட் என்பவர் செயின்ட் பால் பள்ளி ஒன்றை நிறுவினர். அப் பள்ளியில் பணியாற்றிய வில்லியம் லில்லி என்பவர் இலத்தீன் மொழியில் நல்ல புலமை பெற்றிருந்தார். வில்லியம் குரோசின் (William Grocyn), தாமஸ் லினகிர் (Thomas Linacre) ஆகியோர் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் கிரேக்க இலத்தீன் இலக்கியங்களைப்பற்றிச் சிறந்த சொற்பொழிவுகளாற்றியும் மற்றும் ஆசிரியர்களாகவும் பணியாற்றியிருக்கின்றனர். சர் தாமஸ் மோர் என்பவர் இங்கிலாந்து நாட்டின் மறுமலர்ச்சி இயக்கத்திற்குச் சிகரம் போன்றவர். அவர் இயற்றிய 'யுடோபியா' என்ற நூல் அப்பொழுது மிகுந்த சிறப்பைப் பெற்றிருந்தது.

தாய்மொழிப் பற்று

மனிதாபிமான இயக்கத்தின் வளர்ச்சி முடிவில் தாய்மொழிப் பற்றில் இயற்கையாகவே இழுத்துச்சென்றது. 14, 15ஆவது நூற்றாண்டுகளில், கிரேக்க இலத்தீன் மொழிகளைக் கற்றுக்கொள்வதிலும், அவ்விலக்கியங்களை ஆராய்ச்சி செய்வதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். ஆனால், அதே சமயத்தில், அவர்களுடைய ஆர்வம் முழுவதும் மறைந்துபோன சில மொழிகளின் மீது நீண்ட காலம் நீடித்திருக்க முடியாது என்ற நிலையைத் தெளிவாக உணர்ந்தனர். பழைய இலக்கியங்களைப் படிப்பதில், புகழும் பெருமையும் செயற்கையாகவே உருவாக்கிக் கொண்டனர் என்பதைத் தவிர, அம் மொழிகளைத் தேசிய மொழிகளாக ஆக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டனர். மேலும், தேசியப் பற்று அதிகமாகிக்கொண்டுவரும் நிலையில், தாய்மொழிப் பற்றும் கூடவே வளர்ச்சி அடைவதில் வியப்பில்லை. மறுமலர்ச்சி இயக்கத்தின் உண்மையான தொடக்கமே, தாய்மொழிப் பற்று அதிகமாகி இலக்கியங்களையெல்லாம் தாய்மொழியிலேயே

இயற்றுவதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. இத்தாலியில் தாந்தே (Dante), பெட்ரார்க்(Petrarch), பொக்காஷியோ(Boccacio) ஆகியோர் தங்களது தாய்மொழியிலேயே எழுத முற்பட்டனர். தாந்தேயின் படைப்புகளை விமர்சனம் கூறுகின்ற நிக்கோலாடா நிக்கோலி என்பவர், "சொட்டி சமைப்பவர்களுக்கும் செருப்புத் தைப்பவர் களுக்குந்தான் தாந்தே ஒரு கவிஞனைக் காட்சியளிக்கின்றார்" என்று கடுமையாகக் கூறுகிறார். ஓரளவிற்கு அவர்கள் இயற்றிய இலக்கியங்களில், பழைய கிரேக்க இலத்தீன் மேற்கொள்ளப்பெற்ற சொற்களும் சொற்றொடர்களும், குறிப்பாக அதே கருத்து களைக் கொண்டிருந்ததால், அவைகளைச் சிறந்த இலக்கியங்களாகச் சிலர் கருதவில்லை. ஆனால், நாளடைவில் இந்த மோகம் சிறிது சிறிதாக மாறி, பின்பு தாய்மொழியில் சிறந்த இலக்கியங்களை உருவாக்குவதில் முனைந்தனர். மொழிபெயர்ப்புகளைத் தவிர, மற்றச் சுயமான இலக்கியங்களும் உருவாக்கப்பெற்றன. இத்தாலியில் இலத்தீன் மொழி வளர்ச்சி அடைந்திருந்தாலும் அதுவே அவர் களுடைய பழமையான மொழியாக இருந்ததாலும் அவர் களுடைய தேசியப் பற்று மீண்டும் வளர்ச்சியுற்றதால், இலத்தீன் மொழியைத் தேசிய மொழியாக்கவேண்டும் என்ற ஆர்வம் அவர் களிடையே தோன்றியது. ஆனால், இத்தாலியில் உள்ள எல்லா மக்களும் இலத்தீனைத் தாய்மொழியாகக் கொள்ளவில்லை. லூய்கி புல்சி (Luigi Pulci) என்பவர் மார்கண்டோ மேகியோர் (Morgante Maggiore) என்ற நீண்ட கவிதையைப் புனைந்தார். அந்தக் கவிதை யில் நிறைய நகைச்சுவையும் கேலியும் கலந்திருந்தன. பிளாரன்ஸ் நகரத்தைச் சார்ந்த இருவர், மாக்கியவில்லியும் குயிசியார்டினியும் (Guicciardini) பிளாரன்ஸ் நாட்டு வரலாற்றை எழுதியுள்ளனர். அவர்கள் எழுதிய வரலாறு துசிடைடஸ், லிவி ஆகியோர் எழுதி யுள்ள வரலாறுகளைப் போன்றதாகும். ஆனால், இவர்கள் எழுதியது வரலாறு அன்று; ஆனால், ஒரு செய்திக் கோவையே என்று சிலர் விமர்சனம் கூறுகின்றனர்.

லூடோவிகோ அரியஸ்டோ (Ludovico Ariosto) என்பவர் ஒரு சிறந்த நாடக ஆசிரியராவார். ஓர்லாண்டோ ஃபூயுரியிசோ (Orlando Furioso) என்ற சிறந்த காவியத்தை அவர் படைத்தார். பியட்ரோ அரிட்ஞே (Pietro Aretino) என்பவரும் ஒரு சிறந்த ஆசிரியராவார். அவருடைய படைப்புகள் எந்த இலக்கிய வழக்காறுகளுக்கும் உட்பட்டவையன்று. அவை ஒரு தனிப் போக்குடையவையாகும். "தனக்குச் சொந்தமான மண்கோப்பை யில் குடிப்பதே மற்றவர்களுக்குச் சொந்தமான பொற்கிண்ணத்தில் குடிப்பதைவிட மிகவும் சிறந்தது" என்று அவர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். டார்குவேடா டாசோ (Torquato Tasso) என்பவர்

ஒரு சிறந்த கவிஞர். 'யெருசலேம் டெலிவர்ட்' (Jerusalem Delivered) என்ற சிறந்த காவியத்தை அவர் உருவாக்கியிருக்கிறார். மேலும், இத்தாலிய மறுமலர்ச்சியில் ஏற்பட்ட மிகச் சிறப்பான இலக்கிய வளர்ச்சி சிறு கதைகளைப் புனைவதில் காணப்பெற்றது. இந்த முறையை மற்ற ஐரோப்பிய நாடுகளில் உள்ள பலரும் பின் பற்றினர்.

ஃபிரெஞ்சு நாட்டிலும் சில சிறந்த ஆசிரியர்கள் தோன்றினர். பியர் தே ரோன்சார்ட் (Pierre de Ronsard), ஜோக்கிம் து பெல்லா (Joachim du Bellay) ஆகியோர் ஃபிரெஞ்சு மொழியில் பல புதிய சொற்களைப் புகுத்தினர். அப்பொழுது விளங்கிய ஃபிரெஞ்சு மொழி நல்ல வளம் பெறுது, சரியான இலக்கண முறையில்லாது இருந்த காரணத்தால், இலக்கணத்தில் புதிய மாற்றங்களையும், புதிய புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் அம் மொழியில் சேர்த்தனர். இதன் காரணமாக ஃபிரெஞ்சு மொழி சிறிது வளர்ச்சி அடைந்தது. பிலிப் தே காமின்ஸ் (Philippe de Comines) என்பவர் ஒரு சிறந்த ஃபிரெஞ்சு வரலாற்றுசிரியர். எதியேன் டோலட் (Ethenne Dolet) என்பவர் கிறித்துவ வேத பாடத்தையும் பிளாட்டோ எழுதிய நூல் களையும் ஃபிரெஞ்சு மொழியில் இயற்றினர். இவர்களைவிட மிகவும் தலைசிறந்த மறுமலர்ச்சி எழுத்தாளர் பிரான்காயிஸ் ரேபிலாய் (Francois Rabelais) என்பவராவார். அவரை ஃபிரெஞ்சு நாட்டு ஷேக்ஸ்பியர் என்றும் கூறுவர். அவர் எழுதிய உரைநடை நூல்களில் நல்ல நகைச்சுவையும், கற்பனையும், தத்துவமும் மிளிர்கின்றன. சுவைமிக்க பாத்திரங்களை உருவாக்குவதிலும், அவற்றை வருணிப் பதிலும், அக் காலத்தில் அவர் தனிச் சிறப்பெய்தியிருந்தார்.

இங்கிலாந்து நாட்டிலும், ஷேக்ஸ்பியர், மார்லோ, பிலிப் ஸிட்னி, எட்மண்ட் ஸ்பென்சர், பேகன் ஆகியோர் சிறந்த இலக் கியங்களை ஆங்கில மொழியில் எழுதினர். இவர்கள் முதலாம் எலிசபெத் அரசியாரின் அரசவையை அலங்கரித்தவர்களாவர். இந்த அரசியாரின் காலத்தைத்தான் "ஆங்கில நாட்டின் இலக்கியப் பொற்காலம்" என்று கூறுகின்றனர். இக் காலத்தில் தான் வேத பாராயண நூலும் (Prayer Book) வேத பாடமும் ஆங்கில மொழியில் எழுதப்பெற்றன.

ஸ்பெயின் நாட்டிலும், செர்வாண்டிஸ் (Miguel de Cervantes) என்பவரும் டான் குவிக்ஸாட் (Don Quixote) என்ற சுவை மிகுந்த நூலை இயற்றினர். ஃபிரெஞ்சு நாட்டின் ரேபிலாயியைப் போன்றும், இவர் ஸ்பானிய மக்களால் மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறார். ஜெர்மனியில் இந்த புதிய மறுமலர்ச்சி இலக்கியம் அவ்வளவாக வளர்ச்சியுறவில்லை. இருப்பினும் லூதரின் பாடல்கள் புதியவை

யாகும். அவை சமயப் புரட்சி அங்கு ஏற்படுவதற்கு வழி கோலியவையாகும்.

இப் புதிய இலக்கியங்களை உருவாக்கியவர்களைத் தவிர, மேலும் பல தத்துவ ஞானிகளும் மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிப் புதிய புதிய சர்ச்சைகளில் ஈடுபட்டனர். அவர்கள் இடைக் காலத்துச் சமயவாதிகளின் கருத்துகளிலிருந்து பெரிதும் மாறு பட்ட கருத்துகளைக் கொண்டவர்களாவர்.

கலை வளர்ச்சி

எப்படி இலக்கிய வளர்ச்சி முதலில் இத்தாலிய நகரங்களில் தோன்றியதோ, அதைப் போன்றே கலை, சிற்பம், ஓவியம் ஆகியவை முதலில் இத்தாலிய நகரங்களில்தான் சிறப்படைந்தன. அக் காலத்தில் மிகச் சிறந்த கலைஞர்களாக விளங்கிய போட்டி சில்லி (Botticelli), லியானர்டோ (Leonardo), டா வின்சி (Da Vinici), ரபியல் (Raphael), மைக்கல் ஆஞ்சலோ (Michael Angelo) போன் றோர் இத்தாலிய நகரங்களில் தோன்றியவர்களேயாவர். அவர்கள் படைத்த ஓவியங்கள் கண்ணைக் கவருவது மட்டுமல்லாது, கருத்து கள் பொதிந்தனவாயும் காட்சி அளித்தன. அழகும் கருத்தும் ஒருங்கே பொதிந்து அந்த ஓவியங்கள் உருவாக்கப்பட்டவை யாகும். பல கலைஞர்களுக்கு, இத்தாலிய நகரங்கள் கலைக் கோயில்களாக அமைந்திருந்தன. கலைஞர்களை ஆதரிப்பதில், அந் நகரங்களின் அரசர்களும் பிரபுக்களும் மிகப் பெருமை கொண்டிருந்தனர்.

அரண்மனைகளை நிர்மாணிக்கவோ, அல்லது கோயில்களைக் கட்டுவதற்கோ, அல்லது பிரபுக்களின் மாளிகைகளில் ஓவியங்களை அமைப்பதற்கோ, அக் கலைஞர்களின் முழுக் கலைத்திறனையும் அவர்கள் பயன்படுத்தினர். கலையை உருவாக்கும் ஆர்வம் அவர் களிடம் காணப்பெற்றது. புராதன இத்தாலிய நகரங்களில் பழைய கலைச் சின்னங்கள் எங்கும் சிதைவுற்ற நிலையில் காணப்பெற்றன. அண்மையிலேயே கிரேக்க நாட்டின் செல்வாக்கும் ஒருவாறு பரவி யிருந்தது. அப் புராதன அழகு சின்னங்கள் அக் கலைஞர்களுக்குப் புதிய கலையுணர்ச்சியை அளித்தன. இவ்விதமான கலைச் சின்னங் கள் இத்தாலிய நகரங்களில் காணப்படுவதைப் போன்று மற்ற ஐரோப்பிய நாடுகளில் காண்பது அரிதாக இருந்ததால், மற்ற நாடு களில் இத்தாலியில் தோன்றிய கலை வளர்ச்சி காணப்படவில்லை யென்று கூறலாம். இத்தாலியர்கள் கலை ஆர்வம் பெற்றவர்களாக வும் அவற்றைப் புரிந்து கொள்ளும் அநுபவம் மிக்கவர்களாகவும் இருந்தனர்.

புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல்

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கம் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடையே தோன்றியது. பழங்காலத்து கிரேக்கர்களும் ரோமானியர்களும்கூட, அவர்களுக்குத் தெரிந்த நிலப்பரப்பிற்கு அப்பால் யார் வசித்து வருகின்றனர், அவர்களுடைய நாகரிகம் என்ன, எந்த வழியில் அவ்விடங்களுக்குச் செல்வது என்று ஆர்வம் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் பெற்ற வெற்றி ஒரு சிறிதளவேதான் என்று கூறலாம். அவர்களுக்கு இடைக்காலத்தில் சிலுவைப் போர்கள் நிகழ்ந்தபொழுது, கிழக்கத்திய நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும், அவர்களுடைய நாகரிகத்தைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனால், மேலும் பல கிழக்கத்திய நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள அவர்கள் கடல் மார்க்கத்தைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். இந்தியாவிற்குச் செல்லும் மார்க்கத்தை அலெக்சாந்தர் என்ற மாசிடோனிய மன்னரே அறிந்திருந்தார். அதனால், இந்தியாவிற்குச் செல்லும் புதியதொரு மார்க்கத்தைக் கண்டு பிடிப்பது அவ்வளவு கடினமான காரியமாக இருந்திராது. இருப்பினும் இந்தியாவிற்குக் கடல் வழியைக் கண்டு பிடிப்பதற்கான சில முயற்சிகள் வீணாகிவிடவே, மீண்டும் 14ஆவது நூற்றாண்டில் அம் முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. இந்தியாவிற்குக் கடல் மார்க்கமாகச் செல்லும் வழியைக் கண்டுபிடித்துவிட்டதாகப் பறைசாற்றிய கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவுகளில் இறங்கி அமெரிக்காவின் ஒரு பாகத்தைத் தற்செயலாகக் கண்டுபிடித்த பெருமையைப் பெறுகிறார். கொலம்பஸ் 1492-ல் மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்தது, உலக வரலாற்றில் மிகச் சிறப்பானதொரு நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இந்த நிலப்பரப்பு இந்தியாவைச் சேர்ந்ததன்று என்று தெரிந்த பின்னரே, அதற்கு மேற்கு இந்தியத் தீவுகள் என்று பெயரிடப்பெற்றன.

கொலம்பஸ் சில மாதங்கள் அங்கு தங்கிவிட்டுப் பிறகு ஸ்பெயின் நாட்டிற்குத் திரும்பினார். ஸ்பெயின் நாட்டு அரசனுக்கு, இத் தீவுகளிலிருந்து தங்கம், சில பறவைகள், மிருகங்கள், மற்றும் இரண்டு சிவப்பு இந்தியர்களை அவர் பரிசாக அளித்தார். இவற்றைக் கண்ட ஸ்பெயின் நாட்டரசன், மேலும் கொலம்பசுக்கு வேண்டிய கப்பல்களையும் ஆட்களையும் தருவதாகக் கூறி, மேலும் புதிய நிலப்பரப்பைக் கண்டுபிடிக்க ஆதரவு அளித்தார். 1493ஆம் ஆண்டில் மீண்டும் 17 கப்பல்களுடனும் 1500 ஆட்களுடனும் கொலம்பஸ் புதிய உலகத்தை நோக்கிப் புறப்பட்டார். அங்கே ஸ்பெயின் நாட்டு

ஆதிக்கத்தின்கீழ் ஒரு காலனியை நிறுவவேண்டும் என்று அவர் விரும்பினர். இம்முறை அவருடைய பயணத்தை ஆறு வாரங்களில் அவர் முடித்துவிட்டார். அவர் கரை சேர்ந்த இடத்தை 'ஹிஸ்பேனியோலா' என்று அழைத்தார். அதாவது சிறிய ஸ்பெயின் நாடு என்று அழைக்கப்பெற்றது. அத் தீவின் அண்மையிலுள்ள மற்ற பல தீவுகளையும் கண்டுபிடித்து அவற்றையெல்லாம் ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தார். இருந்த போதிலும், அவர் வட அமெரிக்காவின் நிலப்பரப்பை அடைய முடியவில்லை. திரும்பவும் அவர் ஹிஸ்பேனியோலாவுக்கு வந்து பார்த்தபொழுது அதனுடைய நிர்வாகம் மிகவும் மோசமாகவும் குழப்பமாகவும் இருந்தது. தகுதியான ஆட்களை அழைத்துச் செல்லாததன் விளைவே இதுவாகும் என்று அவர் கருதினர். அவர் ஸ்பெயின் திரும்பும்பொழுது, ஐந்து கப்பல்கள் நிறைய சிவப்பு இந்தியர்களை அடிமைகளாக விற்பதற்குக் கொண்டுவந்தார். மனிதர்களை மனிதர்கள் விற்றுப் பொருள் சேர்க்கும் பழக்கம் அப்பொழுதிலிருந்துதான் ஆரம்பமாயின. அடிமைகளை விற்கும் வியாபாரம் நல்ல இலாபத்தை அளித்தது. மூன்றுவது முறையாகவும் கொலம்பஸ் 1498-ல் தம் பயணத்தைத் தொடங்கினர். அவர் டிரினிடாட் தீவையும், தென் அமெரிக்காவின் கரையோரத்தையும் இப் பயணத்தின்போது கண்டுபிடித்தார். அவருடைய பிரயாணம் ஒரினுக்கோ என்ற பெரிய நதிவரையிலும் நீடித்தது. 1502-ல் அவர் மீண்டும் ஒரு பயணத்தைத் தொடங்கி மேற்கு இந்தியத் தீவுகளை அடைந்தார். பின்பு ஜமய்க்காவரையிலும் சென்று மத்திய அமெரிக்காவரையிலும் செல்ல வழியைக் கண்டுபிடித்தார். அவர் அடைந்த இடம் இப்பொழுது ஹாண்டுராஸ் என்று அழைக்கப்பெறுகிறது. இதுவே அவருடைய இறுதிப் பயணமாக இருந்தது. 1504-ல் அவர் ஸ்பெயின் நாட்டிற்கே சென்றுவிட்டார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இறந்துவிட்டார்.

அதே சமயத்தில் போர்த்துகல் நாட்டைச் சார்ந்த மற்றொரு சிறந்த மாலுமியான வாஸ்கோடகாமா என்பவர் லிஸ்பன் நகரத்திலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் புதியதொரு வழியைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டார். அவர் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாகச் சென்று நன்னம்பிக்கைமுனை வரையிலும் சென்றார். பிறகு கிழக்கு நோக்கியும், வடக்கு நோக்கியும் சென்று மாலிந்தி என்ற இடத்தை அடைந்தார். அங்கே அவர் சில இந்திய வியாபாரிகளைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடமிருந்து ஒரு மாலுமியை அழைத்துக்கொண்டு அவருடைய நான்கு கப்பல்களையும் இந்துமாக் கடலில் செலுத்தினர். 1498-ல் அவர் இந்தியாவின் மேற்குக்

கரையோரத்திலுள்ள கள்ளிக்கோட்டை என்ற துறைமுகத்தில் இறங்கினர். அங்கேயே இரண்டு ஆண்டுகள் தங்கிவிட்ட பிறகு, லிஸ்பன் நகரத்திறகுச் சென்றார். மீண்டும் இரு முறை அவர் கள்ளிக்கோட்டைக்கு வந்தார். அவர் வரும்பொழுது, சில வியாபாரிகளையும் சிப்பாய்களையும் கூடவே அழைத்து வந்தார். அவருடைய இரண்டாவது முறை கள்ளிக்கோட்டை விஜயம் அருவருக்கத் தக்கதாக இருந்தது. அவர் கள்ளிக்கோட்டையில் உள்ள சில மக்களை மிகவும் கொடுமையாக நடத்தியதாகக் கூறப் படுகிறது. அவர் மீண்டும் 1524-ல் இப் பகுதிக்கு விஜயம் செய்தார். கொச்சி நகரத்தில் அதே ஆண்டில் அவர் இறந்து விட்டார். புதிய கடல் மார்க்கத்தைக் கண்டு பிடித்ததன் விளை வாகப் போர்ச்சுகீசியர்கள் இப் பகுதியில் முதன் முதலாக வியாபார ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, பின்பு அப் பகுதிகளைத் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். அப்பொழுது தொடங்கிய போர்ச்சு கீசிய ஆதிக்கம் மேலும் பலப்படுத்தப்பெற்றது. இவர்களுடைய வியாபாரச் செழிப்பினைக்கண்ட மற்ற ஐரோப்பிய வணிகர்களான டச்சுக்காரர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள், கடைசியாக ஆங்கிலேயர் களும் இந்தியாவில் பல பகுதிகளில் வியாபாரம் செய்ய இறங்கினர். பிறகு அவர்கள் வியாபாரம் செய்வதை விட்டுவிட்டு, நாடு பிடிக் கும் வேட்டையில் இறங்கினர்.

மற்றொரு போர்ச்சுகீசிய மாலுமியான ஃபெர்டினண்ட் மெகல்லன் (Ferdinand Macellan) என்பவர் முதன் முதலாக உலகத்தைச் சுற்றிவந்தார். 1519-ல் அவர் பயணத்தைத் தொடங்கினர். அவர் பயணத்தை ஆரம்பிக்கும்பொழுது அவரிடம் ஐந்து கப்பல்கள் இருந்தன. அவர் தென் அமெரிக்காவைச் சுற்றிக்கொண்டு இந்தியாவை வந்தடைய வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தார். போர்த்துகல் நாட்டை விட்டு, அட்லாண்டிக் கடல் வழியாகப் பிரேஸிலில் கரையோரமாக வந்தார். அங்கிருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டு, தென் அமெரிக்க முனை யின் கடைசிக்கே வந்துவிட்டார். அவர் வந்து சேர்ந்த அவ் விடத்தை மெகல்லன் ஜலசந்தி என்று அவர் பெயராலேயே வழங்குகின்றனர். பிறகு மேற்கு நோக்கித் தம் பயணத்தை ஆரம்பித் தார். அப்பொழுது அக் கடல் மிகவும் அமைதியாக இருந்ததால், அக் கடலுக்கு அவர் பசுபிக் மாக் கடல் என்று பெயர் வைத்தார்.

பசுபிக் என்ருல் ஆங்கிலத்தில் அமைதி என்று பொருள். அந்த அகண்ட கடலில் சுமார் மூன்று மாத காலத்திற்கு எந்தவித மான தீவையும் காணுது, உண்ணுவதற்கும் ஒன்றுமின்றிப் பிரயாணம் செய்தார். இந்த மூன்று மாத கால பிரயாணத்தின் போது இரண்டு தீவுகளை மட்டும் அவர் பார்த்தார். உணவுப்

பண்டங்களை எங்கும் வழியில் சேகரிக்க முடியாததால், மாலுமிகள் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிட்டது. கப்பலில் ஒளிந்துகொண்டிருந்த எலிகளையும் அவர்கள் பிடித்துத் தின்றனர். அப்பொழுது அவர்களுக்கு ஒரு தீவு தென்பட்டது. அத் தீவை குவாம் (Guam) என்று அழைக்கின்றனர். அத் தீவிலுள்ள மக்கள், புதிதாக வந்தவர்களைப் பார்த்து மிகவும் வியப்படைந்தனர். அத்துடன் நிற்காமல், கப்பலில் இருந்தவற்றை யெல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு சென்றுவிட்டனர். அதனால் அந்தத் தீவிற்கு லாட்ரோன்ஸ் (Ladrones) அல்லது திருடர்களது தீவு என்று பெயரிட்டனர். மேற்குத் திசையை நோக்கி அவர் மீண்டும் பிரயாணத்தைத் தொடர்ந்தார். அவர் பிலிப்பைன்ஸ் தீவுக்கு வந்து சேர்ந்தார். சேபு (Cebu) என்று அழைக்கப்படுகின்ற தீவின் அரசனுடன் மெகல்லனும் அவருடைய மாலுமிகளும் நட்புக்கொண்டனர். அதன்படி, அவ்வரசன் அவர்களை அண்மையிலுள்ள தீவைப் பிடித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் அதன்மீது படையெடுத்தனர். அந்தப் போரில் மெகல்லன் கொல்லப்பட்டார். அவர் இறந்த பிறகு, எஞ்சியிருந்த மூன்று கப்பல்களுடன் அவருடைய மாலுமிகள் புறப்பட்டனர். வழியில் மற்ற இரண்டு கப்பல்களும் அழிந்துவிட்டன. விக்டோரியா என்ற கப்பல் மட்டுமே போர்னியோ தீவிற்குத் திரும்பி வந்து சேர்ந்தது. பின்பு அங்கிருந்து இந்து மகா சமுத்திரத்தில் நுழைந்து நன்னம்பிக்கை முனை வழியாகப் போர்த்துகல் நாட்டிற்கு வந்து சேர்ந்தது. மெகல்லன் உலகத்தைச் சுற்றி வரவில்லையெனினும் அவரது விக்டோரியா கப்பல் முதல் முறையாக உலகத்தைச் சுற்றி வந்த பெருமையை அடைந்தது. புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் 16ஆவது நூற்றாண்டு முழுவதும் எல்லாத் திசைகளிலும் வீரமிக்க மாலுமிகள் மிகுந்த துணிச்சலுடன் புதிய புதிய இடங்களைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தனர். இதற்கு முன்னர் இவ்வித மான இடங்களைப்பற்றி ஐரோப்பிய மக்கள் கேள்வியுற்றதே இல்லை. இப் புதிய கண்டுபிடிப்புகளின் விளைவாக, அமெரிக்கா என்ற புதிய கண்டத்தைக் கண்டுபிடித்தனர். முதலில் ஸ்பானியர்களது ஆதிக்கமும், போர்த்துகீசியர்களது ஆதிக்கமும்தான் வலுத்து இருந்தன. ஆனால், நாளடைவில் இந்த இரு நாடுகள் அடைந்த அளவுகடந்த இலாபத்தை மற்ற ஐரோப்பிய நாடுகளும் மிக்க பொறுமையுடன் கவனித்து வந்தன. மற்றவர்களும் இப் புதிய நாடுகளுக்குச் சென்று குடியேறவும், வியாபாரம் செய்யவும், நாடு பிடிக்கவும் முயன்றனர். அதனால், அமெரிக்கச் சுதேசிகள் அவர்களுடைய சுதந்தரத்தை இழந்தனர். ஆயிரக்கணக்கில் அவர்கள் உயிர் இழந்தனர். பலர் அடிமைகளாக விற்கப்

பட்டனர். எஞ்சியிருந்தவர்கள் அந்நிய ஆட்சியில் அடிமைகளாக வாழ்ந்தனர். தென் ஆப்பிரிக்காவில் இவர்களது நிலை சிறிது முன்னேற்றமடைந்திருந்தது. ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்த ஆதிக்குடிகளுடன் நன்றுகப் பழக முற்பட்டனர். அதனால், அவர்கள் அவ்வளவாக அழிந்து விடவில்லை. நாளடைவில் அவர்கள் முன்னேற்றம் அடைந்து விட்டனர். அதைத் தவிர, போர்த்துகல் நாட்டிற்கும் ஸ்பெயின் நாட்டிற்கும் அதிகப் பொறுமையும் போட்டியும் ஏற்பட்டுவிட்டதால், அவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது. அதனால், இம் மோதலைத் தடுப்பதற்காகப் போப்பாண்டவர் ஒரு மானசீகமான எல்லையை அமைத்து, அதற்குக் கிழக்கேயுள்ள நிலப்பரப்பைப் போர்த்து கல்லின் ஆதிக்கத்திற்கும், மேற்கே இருப்பதை ஸ்பெயினினுடைய ஆதிக்கத்திற்கும் உள்ளானது என்று எல்லைக் கோட்டை அமைத்துக்கொடுத்தார். ஆனால், நாளடைவில் இந்தப் பிரிவினையை எந்த ஐரோப்பிய நாடும் மதித்ததாகத் தெரியவில்லை.

3. இத்தாலியில் போர்கள்

(1494 – 1529)

ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பிறகு அங்கு நிலையானதும் வலிமையானதுமான அரசு நிறுவப்படாமையினால், அந்த நாட்டின்மீது அநேக அந்நியப் படையெடுப்புகள் நிகழ்ந்தன. கிறித்துவர்களல்லாத மிலேச்சர்கள் என்று அப்பொழுது கருதப்பெற்ற பிராங்குகளும் விஸிகோத்தர்களும் இத்தாலியின் மீது படையெடுத்து அரசாங்கத்தையே சீர்குலையச் செய்து விட்டனர். அந்த நாட்டின் செல்வத்தைச் சூறையாடினர். அம் மக்களைப் பல கொடுமைகளுக்குள்ளாக்கினர். சாரசன்களும் நார்மானியர்களும் அந்த நாட்டின் பல பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். ஆனால், இந்நிலை விரைவில் மாறி 13ஆவது நூற்றாண்டு முதல், அந்த நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவ ஆரம்பித்தது. பல இலக்கியங்கள் தோன்றின. புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பெற்றன. அறிவு வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால், பலம் மிக்க ஒரு நாட்டை நிறுவவோ அல்லது அதைப் பாதுகாக்கும் பொறுப்போ சரியான முறையில் அமைய வில்லை. அதனால், ஐரோப்பாவில் உள்ள சில வலிமைமிக்க நாடுகளின் ஆக்கிரமிப்பிற்கு அடிக்கடி இரையாகியது.

ஃபிரெஞ்சு நாட்டு அரசன் பதினோராம் லூயி இறந்த பிறகு, எட்டாம் சார்லஸ் அரசு கட்டில் ஏறினான். தந்தையைப் போன்று திறமை மிக்க அரசனாக இல்லையெனினும் அவ்வரசன் நாடு பிடிக்கும் ஆர்வம் மிகுந்தவனாக இருந்தான். அப்பொழுது இத்தாலிய நாடு சீர்குலைந்திருந்தது; பலவீனம் அடைந்திருந்தது. அதனால் அதன்மீது படையெடுப்பதற்கு அவனுக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. அச் சமயத்தில் இத்தாலிய நாட்டில் உள்ள பல சிறு இராச்சியங்கள் ஒன்றுடன் ஒன்று போரிட்டுக்கொண்டிருந்தன. பிளாரன்ஸ், மிலான் இராச்சியத்தை ஆக்கிரமிப்புச் செய்யப் போவதாக அச்சுறுத்தி வந்தது. மிலான் இராச்சியத்து அரசன் லொடோவிகோ (Lodovico) எட்டாம் சார்லஸ் என்ற ஃபிரெஞ்சு

மன்னனிடம் முறையிட்டான். இந்த வாய்ப்பைச் சார்லஸ் மன்னன் நழுவவிடாது பயன்படுத்திக்கொண்டான். அதனால் இத்தாலியின் மீது படையெடுத்தான். எதிர்பாராதவிதமாக, எட்டாம் சார்லஸ் இத்தாலியில் வெற்றிமேல் வெற்றிகொண்டான். இத்தாலியர்களது செல்வமும், அந் நாட்டின் வனப்பு மிக்கக் கட்டடங்களும், மற்றும் அங்கிருந்த பல கலைச் செல்வங்களும் ஃபிரெஞ்சு மக்களை மிகவும் கவர்ந்தன. இத்தாலிய மக்களிடம் திறமையுள்ள இராணுவம் இல்லாத காரணத்தால், போர் புரியாமலேயே பிளாரன்ஸ், பிஸா, ரோம், நேபிள்ஸ் ஆகிய நகரங்கள் சரணடைந்தன. இத்தாலியில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த எந்த வல்ல ரசும் முன்வரவில்லை. அதனால் அதன் ஆதிக்கத்தை அங்கு நிறுவியது. ஆனால், அக் காலத்தில் எந்த நாடும் அளவிற்கு மீறி அதன் எல்லைகளைப் பரப்பவும் ஆதிக்கத்தை நிறுவவும் முடியாத நிலை இருந்தது. ஆக்கிரமிப்பிற்கு ஒரு வரையறை உண்டு. ஒரு நாடு அதிக வலிமைமிக்கதாகிவிட்டால், அருகிலுள்ள நாடுகளின் சுதந்தரத்திற்கு ஆபத்து நேரிடும் என்று அவர்கள் உணர்ந்தனர். அதைத்தான் வல்லரசுகளின் சமநிலைக் கொள்கை என்று அவர்கள் பின்பற்றினர். இக் கொள்கையை ஒட்டி, எட்டாம் சார்லஸ் மன்னனை இத்தாலியில் இருந்து விரட்டப் பல நாடுகள் இணைந்த ஓர் இயக்கம் தோன்றியது. அந்த இயக்கத்தில் இத்தாலிய நாடுகளான மிலான், வெனிஸ், பேப்பசி ஆகிய நாடுகளும் ஸ்பெயின், ஜெர்மனி என்ற வல்லரசுகளும் ஒன்று சேர்ந்தன. அந்த நாடுகளின் அரசர்களெல்லாம், எப்படியும் எட்டாம் சார்லஸை முறியடித்து இத்தாலியிலிருந்து விரட்ட வேண்டும் என்று உறுதிகொண்டிருந்தனர். இவர்களுடைய நோக்கத்தை அறிந்துகொண்ட சார்லஸ் மிகவும் விரைவாக இத்தாலியிலிருந்து பின்வாங்க ஆரம்பித்தான். அவன் பிடித்த நாடுகளை அப்படியே கைவிட்டுவிட்டான். ஃபிரெஞ்சு நாட்டிற்குச் செல்லும் வழியில், நேச நாடுகளின் படையை எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஃபோர்னவோ (Fornovo) என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் ஃபிரெஞ்சுப் படையினர் வெற்றி கொண்டனர் எனினும், அவர்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டது. அப்பொழுது ஃபிரெஞ்சு இராணுவம் திறமைமிக்கது என்ற பெயர் பெற்றிருந்த போதிலும், ஃபிரெஞ்சு இராணுவம் பயந்து பின்வாங்கி விட்டது என்ற இழிவைப்பெற்றது. சார்லஸ் மன்னன் இறக்கும் பொழுது பெயருக்கும்கூட, அவர் பிடித்த இத்தாலிய நகரங்களில் ஒன்றுகூட அவர் வசமில்லாமல் இருந்தது.

எட்டாம் சார்லஸ் இறந்த பிறகு பன்னிரண்டாம் லூயி பட்டத்திற்கு வந்தான். மற்ற ஃபிரெஞ்சு மன்னர்களைப் போலவே

அவனும் இத்தாலியைக் கைப்பற்றவேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தான். உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் நல்ல பெயர் பெற்ற காரணத்தால், அவனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. நாட்டின் தந்தை என்றுங்கூட அவனை அழைத்தனர். முதலில் மிலான் நகரத்தை அவன் கைப்பற்றினான். இந்த நகரைக் கைப்பற்றுவதில், வெனிஸ் மிகவும் உதவியது. அதனால் லூயி மன்னனுக்கு எவ்விதமான இடையூறும் ஏற்படவில்லை. மேலும், நேபிள்ஸ் இராச்சியத்தைக் கைப்பற்றவேண்டும் என்று அவன் விரும்பினான். அதனால் அந் நாட்டின்மீது படையைச் செலுத்தினான் அந்த இராச்சியம், ஒரு வகையில் உறவு மூலமாக அவனுக்கே சேரவேண்டும் என்று பறைசாற்றினான். ஆனால், அவ்விதமாகத் தான் ஸ்பெயின் நாட்டு மன்னனை பெர்டினண்டும் நேபிள்ஸ் இராச்சியத்தைக் கோரினான். ஆனால், அவ்வளவு விரைவில் நேபிள்ஸ் ஃபிரெஞ்சு மன்னனுக்கோ, அல்லது ஸ்பெயின் மன்னனுக்கோ சொந்தமாகிவிடும் என்ற நிலை மாறியிருந்தது. இதற்கிடையே ஓர் இடைக்கால ஒப்பந்தம் ஒன்றை ஸ்பெயின், ஃபிரெஞ்சு அரசர்கள் கிரானடா என்ற இடத்தில் செய்து கொண்டனர். அந்த ஒப்பந்தப்படி, ஃபிரெஞ்சும் ஸ்பெயினும் சேர்ந்து நேபிள்ஸ் இராச்சியத்தைக் கைப்பற்றுவதென்றும், பிறகு இரு நாடுகளும் பங்குப் போட்டுக்கொள்வதென்றும் முடிவு செய்திருந்தன. இரண்டு பெரிய வல்லரசுகள் ஒன்றுகச் சேர்ந்து ஒரு சிறிய நாட்டைக் கொள்ளையடிக்க முற்பட்டதால், அந்தச் சிறிய நாடு சரண் அடைந்துவிட்டது. நேபிள்ஸ் அரசனை ஃபிரெஞ்சு இராணுவம் கைது செய்தது. ஆனால், கொள்ளையடித்த பொருளைப் பங்கிட்டுக் கொள்ளும்பொழுதுதான் சில சிக்கல்கள் எழுந்தன. இச் சிக்கல்கள் காரணமாக இரண்டு வல்லரசுகளும் மோதிக் கொண்டன. இப் போரில், ஃபிரெஞ்சுப் படையினர் தோற்று விட்டனர். அதனால் அவர்கள் நேபிள்ஸை விட்டு வெளியேற நேரிட்டது. இச் சமயத்தில்தான், இரண்டாவது ஜூலியஸ் என்ற போப் இத்தாலிய அரசியலில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். இதற்கு முன்பிருந்த போப் ஆறுவது அலெக்சாந்தர், ஃபிரெஞ்சு அரசனுக்கு மிகவும் சாதகமாக இருந்தார். அவரது ஆதரவால்தான் ஃபிரெஞ்சுக்காரர்கள் இத்தாலியில் அதிக ஆக்கிரமிப்புகளைச் செய்துவந்தனர். ஆனால், ஜூலியஸ் போப் என்பவர் எந்த ஒரு நாட்டையும் அதிகமாக ஆதரிக்கவில்லை யெனினும், அந்நிய நாட்டினரை வரவழைத்து, இத்தாலியில் உள்ள செல்வமிக்க வெனிஸ் நாட்டை ஆக்கிரமிப்புச் செய்ய அனுமதித்துவிட்டார். அந்நிய நாடுகளான ஃபிரெஞ்சு, ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய நாடுகளைத் தவிர, பேப்பசி, பிளாரன்ஸ் ஆகிய இத்தாலிய நாடுகளும் ஒன்று கூடி வெனிஸ் நாட்டைச் சூறை

யாடுவது என்று திட்டமிட்டிருந்தனர். இச் சதித் திட்டத்தை உருவாக்குவதற்கு ஒரு சங்கம் அமைத்துக்கொண்டனர். அந்தச் சங்கத்திற்குக் காம்பிராய் சங்கம் (The League of Cambrai) என்று பெயர். இத்தனை நாடுகளும் சேர்ந்து வெனிசைக் கொள்ளையடிப்பது எளிதாக முடிந்ததென்றாலும், கொள்ளையடித்த பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதில், அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. இப்பொழுதுதான் போப் ஜூலியஸ் தமது தவற்றினை உணர்ந்தார். பலவீனமான நாடுகளுக்குத்தான் எல்லோரும் சேர்ந்து உதவவேண்டும் என்று ஒரு சங்கத்தை அமைத்தார். அதன் மூலமாக முதலில் இத்தாலியில் இருந்து ஃபிரெஞ்சு ஆக்கிரமிப்பு வெறியர்களை விரட்டவேண்டும் என்று பறைசாற்றினர். இதன் விளைவாகத் தூய்மையான சங்கம் (The Holy League) என்ற ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பெற்றது. இதன் முக்கியமான நோக்கம் இத்தாலியிலிருந்து ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை விரட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த இயக்கத்தில் வெனிஸ், ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய நாடுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்தன. பின்பு இங்கிலாந்தும் இவற்றுடன் சேர்ந்துகொண்டது. ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு மிகவும் மோசமான நிலை ஏற்பட்டுங்கூட, மிகவும் திறமையாகத் தூய்மையான சங்கத்தின் இராணுவ மிரட்டல்களைச் சமாளித்துக்கொண்டனர். மிலான் நகரைத் தவிர, மற்றைய இத்தாலியப் பகுதிகளிலிருந்து அவர்கள் பின்வாங்கினர். அவர்களுடைய நாட்டிலேயே ஆங்கிலேயர்களிடம் சில இடங்களில் தோற்றுவிட்டனர். இருப்பினும் பலதரப்பட்ட நோக்கங்களைக் கொண்ட இத் தூய்மையான சங்கத்தின் அங்கத்தினர்களிடையே குழப்பத் தையும் சிக்கல்களையும் உண்டாக்கப் பல அனுபவமுற்ற இராஜ தந்திரிகள் நுழைந்துவிட்டதால், இச் சங்கத்தில் பிளவு ஏற்பட்டது. பன்னிரண்டாம் லூயி மன்னன் இறக்கும் முன்னரே இந்தச் சங்கம் சீர்குலைந்தது. இதனால் அவருக்கு ஓரளவிற்கு வெற்றி கிட்டியது என்றே கூறலாம்.

அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவர் முதலாம் பிரான்சிஸ் என்பவராவர். அவர் லூயிக்கு மைத்துனர் முறையாக வேண்டும். மிகவும் இளமைத் துடிப்புடனும் ஆர்வத்துடனும் அவர் ஆட்சியை நடத்தினர். மீண்டும் இத்தாலிய படையெடுப்புகளைப் புதுப்பிக்க வேண்டும் என்றும், ஃபிரெஞ்சு நாட்டிற்கு விரோதமாக உள்ள ஸ்பெயின், போப்பசு ஆகியவல்லரசுகளை முறியடித்து, மேற்கொண்டு அந்த நாடுகள் ஃபிரெஞ்சின் இத்தாலிய ஆக்கிரமிப்பு நடவடிக்கை களில் தலையிடாதவாறு செய்துவிடவேண்டும் என்று அவர் விரும்பினர். இத்தாலியில், வெனிஸ் நாட்டைத் தவிர, மற்ற

எல்லா நாடுகளும் பகைமை நாடுகளாகவே இருக்கின்றன என்ற உண்மையை அவர் தெரிந்துங்கூட, ஆல்ப்ஸ் மலையைக் கடந்து பிரான்சிஸ் ஒரு பெரிய படையை இத்தாலிக்குள் அழைத்துச் சென்றார். இப் படையெடுப்பை, அவருடைய நண்பர்கள் ஹானிபாலுடைய படையெடுப்பிற்கு ஒப்பிட்டு அவரைப் புகழ்ந்தார்கள். பிரான்சிஸ், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் ஒன்று சேர்ந்த படையை மேரிக்ஙனே (Marignano) என்ற போர்க்களத்தில் அறவே முரியடித்தார். பிரான்சிஸ், ஸ்விஸ் நாட்டுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அதன்படி சுவிஸ் நாட்டுப் போர் வீரர்கஸை ஃபிரெஞ்சு நாட்டிற்கு எதிராகக் கூலிக்கு அனுப்பக் கூடாதென்று முடிவு செய்தனர். அக் காலத்தில் சுவிஸ் போர் வீரர்கள் திறமை மிக்கவர்கள் என்று புகழ் பெற்றிருந்தனர். இதைத் தவிர, தரான்சிஸ், போப் பத்தாம் லி யோ என்பவருடன் ஒருசமரச ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அந்த ஒப்பந்தத்தின்படி, போப்பாண்டவருக்குச் சேரவேண்டிய திருச்சபைகள் மூலமாக வரும் வருவாயை அவருக்கு அனுப்பி விடுவதென்றும், அதற்குப் பதிலாக ஃபிரெஞ்சு நாட்டில் நியமிக்கப்படும் திருச்சபை அதிகாரிகஸை நியமனம் செய்யும் பொறுப்பை ஃபிரெஞ்சு அரசரிடமே விட்டுவிடுவதென்றும் ஒரு முடிவுக்கு வந்தனர். இவ் வொப்பந்தத்தின் விஸைவாகப், போப்பாண்டவர்களுக்கும் ஃபிரெஞ்சு மன்னர்களுக்கும் ஒரு சுமுகமான உறவு ஏறக்குறைய பதினெட்டாவது நூற்ருண்டு வரையிலும் நீடித்திருந்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, ஐரோப்பியச் சூழ்நிஸை முற்றிலும் மாறிவிட்டது. பேரரசர் மாக்ஸிமியான் 1517ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு பேரரசராக வந்த ஐந்தாம் சார்லஸ் எவ்விதத்திலும், பிரான்சிஸ் அடைந்த அத்தஸை வெற்றிகஸையும் வீணாக்கி, அவரை இத்தாலியிலிருந்து விரட்டிவிட வேண்டும் என்று உறுதிகொண்டார். புனித ரோமானியப் பேரரசிற்கு யார் பேரரசராக வருவது என்பதுபற்றி தேர்தல் நடைபெற வேண்டியிருந்தது. வழக்கமாக ஜெர்மனியில் உள்ள சிற்றரசர்கள் அத் தேர்தலில் கலந்துகொண்டு ஒரு பேரரசஸைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். மாக்ஸிமிலான் இறந்த பிறகு, இப் பட்டத்திற்குச் சார்லஸ் போட்டியிட்டார். இப் பட்டத்திற்கே முதலாம் பிரான்சிஸ் போட்டியிட்டார். சார்லஸ், மாக்ஸிமிலானின் பேரர். மேலும் அவர் ஸ்பெயின் நாட்டு மன்னர். அவருடைய பாட்டியார் வழியாகப் பர்கண்டியப் பகுதிகஸையும் அவர் பெற்றிருந்தார். அதனால் சார்லஸ் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஐரோப்பிய வல்லரசுகளின் சமநிஸை கெட்டுவிடும். ஐரோப்பாவில் உள்ள

பெரும்பான்மையான நிலப்பரப்புச் சார்லசுக்கே சொந்தமாகிவிடும். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, பிரான்சிஸ் தமது முழு செல்வாக்கையும் பிரயோகித்துப் பேரரசர் பட்டத்தைப் பெற்றுவிடவேண்டும் என்று முயன்றார். ஆனால், சார்லஸ் மன்னரே பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் கூறும் இரண்டு காரணங்களாவன : ஒன்று, ஜெர்மானியச் சிற்றரசர்கள், மாக்ஸிமிலான் பேரனுக்குத்தான் முதல் சலுகை அளிப்பது இயற்கையானதாகும். மற்றொன்று, அப்பொழுது ஜெர்மனியில் கத்தோலிக்க மதத்தை எதிர்த்துப் பிரச்சாரங்களும் புதிய சீர்திருத்த இயக்கங்களும் தோன்றின. இவைகளை எல்லாம் அடக்க சார்லஸ் மன்னரே பொருத்தமானவர் என்று போப் கருதினார். இத் தேர்தலுக்குப் பிறகு, இரண்டு மன்னர்களிடையே, பலத்த பகையும் பொறுமையும் தோன்றின. அவர்களுடைய பிரச்சினைகளைப் போர் புரிந்தே முடிவு செய்து கொள்வதென பலமுறை பறைசாற்றப்பெற்றது. ஐந்தாம் சார்லஸ் ஃபிரான்சிலுள்ள பர்கண்டியப் பகுதிகளுக்கு உரிமை கொண்டாடினார். ஆனால், முதலாம் பிரான்சிஸ் அவருடைய கோரிக்கையை அனுமதிக்கவில்லை. அப் பகுதிகளை, அவர் விட்டுக் கொடுப்பதாகவும் இல்லை. பிறகு, சார்லஸ், இத்தாலியில் உள்ள மிலான் தமக்குத்தான் சேரவேண்டும் என்று பிரான்சிஸ் மன்னரை மிரட்டினார். அதற்கும் பிரான்சிஸ் அசைவதாகத் தெரியவில்லை. அதனால், இவ்விரு அரசர்களும் போர் செய்யக் குமுறிக் கொண்டிருந்தனர்.

இருவரும் மற்ற வல்லரசுகளின் உதவியைக் கோரினர். சார்லஸ், இங்கிலாந்து நாட்டு அரசர் எட்டாம் ஹென்றி என்பவரைத் தம் பக்கம் இழுத்துக்கொண்டார். 1522 முதல் இவர்களுக்கிடையே சிறு சிறு மோதல்கள் ஏற்பட்டவண்ணம் இருந்தன. ஆனால், 1525 முதற்கொண்டுதான் உண்மையாகவே போர் மூண்டது. பிரான்சிஸ் 1525-ல் இத்தாலிய நாட்டின்மீது படையெடுத்தார். பேவியா என்ற நகரை முற்றுகையிட்டார். வெற்றிக் கிட்டும்பொழுது, ஃபிரெஞ்சு மன்னனுக்கு எதிராகக் கலகம் செய்த பிரபுவான போர்போர்ன் கோமகன் ஒரு ஜெர்மன் படைக்குத் தலைமை தாங்கி, பிரான்சிஸ் படையை அடியோடு முரியடித்தார். இப் போரில் ஏராளமான ஃபிரெஞ்சு வீரர்கள் உயிரிழந்தனர். மன்னருடைய உயிர் காப்பாற்றப்பெற்றது. அவர் 1526-ல் ஸ்பெயின் நாட்டிற்குச் சிறைப்பிடித்துக்கொண்டு செல்லப்பட்டார். அங்கே கட்டாயத்தின் பேரில், ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அந்த ஒப்பந்தத்திற்கு மேட்ரிட் (Madrid) ஒப்பந்தம் என்று பெயர். அதன்படி பர்கண்டியைச் சார்லஸ் மன்னருக்குக் கொடுத்து அவர் சரணடைய நேர்ந்தது. மேலும், பிளாண்டர்ஸ், ஆர்டாய்ஸ் ஆகிய

பகுதிகளில்அவர் வகித்துவந்த நிலமானிய உரிமைகளையும் இழக்கச் சம்மதித்தார். இத்தாலியில் உள்ள எந்த நாட்டின்மீதும் அவர் உரிமை கொண்டாடவில்லை என்று வாக்குறுதியும் அளித்தார். இதைத் தவிர, போர்போர்ன் கோமகன் அவருடைய மனைவிக்குச் சேரவேண்டிய பகுதிகளுக்கெல்லாம் வாரிசாக வருவதையும் பிராசின்ஸ் ஒப்புக்கொண்டார். சார்லஸின் தங்கையும், ஏற்கனவே கணவனை இழந்த போர்ச்சுகீசிய அரசியுமான எலினர், பிரான்சிஸை மணந்து கொள்ளவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தச் சரத்துகளை நிறைவேற்றும் வரை பிரான்சிஸ் தமது இரண்டு மகன்களையும் பணயமாக அங்கேயே விட்டுவைக்க வேண்டியதாயிற்று. இந்த நிபந்தனைகளையெல்லாம் விரைவாக நிறைவேற்றி வைப்பதாகப் பிரான்சிஸ் மிகத் தீவிரமாக வாக்குறுதியளித்தார். ஆனால், விடுதலை அடைந்த உடனேயே, இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாது என்று கூறினார். ஏனெனில், அவை மிகவும் கட்டாயமாக வாங்கப் பெற்றவை என்று கூறினார்.

சார்லஸ் பேரரசனை இத்தாலியிலிருந்து விரட்டுவதற்காகக் கோக்நார்க் (Cognrc) சங்கத்தில் ஓர் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டார். அச் சமயத்தில் பதவியிலிருந்த போப் ஸ்போர்ஸா, (Sforzo) பிளாரன்ஸ், வெனிஸ், மற்றும் சார்லஸ்மீது போர் தொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டார். இச் சங்கத்தில் சேர்ந்துள்ள நாடுகளில் நல்ல ஒற்றுமையில்லை. படையெடுப்புக் காலத்திலும் நல்ல சுறுசுறுப்பு காணப்படவில்லை. சார்லஸின் படைகள் மிலான் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு ஸ்போர்ஸாவையும் வெளியேற்றினர். 6000 ஸ்பானியத் துருப்புகளும், 8000 ஜெர்மானியத் துருப்புகளும் இத்தாலியில் வந்திறங்கின. போப்பினுடைய விரோதியான ஃபிரண்டர்ஸ்பர்க் (Frundsberg) என்பவர் ஜெர்மானியத் துருப்புகளுக்குத் தலைமை தாங்கி வந்தார். இரண்டு நாடுகளின் துருப்புகளும் ஒன்று சேர்ந்து ரோமாபுரி நகரத்தைத் தாக்கின. அங்கு அவர்கள் புரிந்தஅட்டூழியங்களுக்கு அளவே இல்லை. நகரை முற்றும் சூறையாடினர். போர் வீரர்கள் அவர்களுக்குக் கிடைத்த கொள்ளைப் பணத்தை ஒளித்து வைத்துக் கொண்டனர். ஸ்பானியப் படை வீரர்கள் புரிந்த அட்டூழியங்கள் கொஞ்சநஞ்சமல்ல. போப்பை மதிக்காத ஜெர்மானியத் துருப்புகள் மடாலயங்களைக் கொள்ளை அடித்தன. போர்போர்ன் கோமகன் இந்த முற்றுகையின்போது சுட்டுக் கொல்லப்பட்டார். வாண்டல் என்ற மிலேச்சர்களது தாக்குதல்களுக்குப் பிறகு, ரோம் அதிகமாகத் தாக்குண்டது இச் சமயத்தில் தான். இக் கொடிய தாக்குதல் நிகழ்ந்துகொண்டிருக்கும்

பொழுது, போப் ஏழாவது கிளமண்ட் செயின்ட், ஆங்கிலோ என்ற கோட்டைக்குத் தப்பித்துச் சென்றுவிட்டார். கோக்நார்க் சங்கத்திலிருந்து எவ்வித உதவியும் இதுவரையிலும் வராததைக் கண்டு, சார்லஸ் பேரரசுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்ள முன்வந்தார். ஸ்பெயின் கத்தோலிக்க நாடு. அந்த நாட்டைச் சார்ந்த துருப்புகளே இவ்விதமாகக் கொடுமையாகப் போப்பின் படைகளைத் தாக்கின. ஐரோப்பிய நாடுகள் முழுவதும், இத் தாக்குதலை மிகவும் கவலையுடன் கவனித்தன.

எட்டாவது ஹென்றி, சார்லஸ் பேரரசுடன்செய்துகொண்டிருந்த உறவை ரத்து செய்துகொண்டார். மிகவும் வெளிப்படையாகவே அவர் பிரான்சிஸ் பக்கம் சேர்ந்துகொண்டார். இச் சமயத்தில் ஒரு ஃபிரெஞ்சுப் படை மிலான் நகரத்தை ஸ்பானியர்களிடமிருந்து மீட்க அனுப்பப்பெற்றது. 1528-ல் சார்லசுக்கும், பிரான்சிசுக்கும் மீண்டும் போர் துவங்கியது. இவ்விருவரும் தனியாகவே போர் செய்து தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றுங்கூட சவால்விட்டனர். ஆனால், அந்த நிகழ்ச்சி நடைபெற வில்லை. சார்லஸின் ஆதிக்கம் இத்தாலியில் நிலைத்திருப்பதில் அபாயம் இருந்தது. மிலான், நேபிள்ஸ் ஆகிய இரண்டு பகுதி களைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலும் சார்லஸ் தமது ஆதிக்கத்தை இழக்க நேரிட்டது. புதிய படைகளைத் திரட்டவும், அவரிடம் போதிய பண வசதி இல்லாமல் போய்விட்டது. இச் சமயத்தில் ஜெனேவாவின் தளபதியான டோரியா என்பவ ருக்கும் பிரான்சிசிற்கும் பண விஷயங்களில் தகராறு ஏற்பட்டது. அதனால், டோரியா சார்லசுடன் சேர்ந்துகொண்டார். ஜெனேவா விற்குச் சுதந்தரம் பெற்றுத் தருவதாக இருந்தால், சார்லசுக்குத் தாம் படையை அனுப்புவதாக டோரியா கூறினார். சார்லஸ் அதற்குச் சம்மதித்தவுடன், இரண்டு படைகளும் சேர்ந்து லேண்டிரியானே (Landriano) என்ற இடத்தில் சங்கத்தின் படை களைத் தோற்கடித்தன. ஆனால், மீண்டும் தொடர்ந்து போரை நடத்த இரண்டு கட்சிகளுக்கும் விருப்பமில்லை. அவர்கள் சமா தானம் செய்துகொள்ள விரும்பினர். சார்லஸ் பேரரசனும் பிரான்சிஸ் அரசனும் தனியாகவே போர் செய்யலாம் என்ற பிரச்சினை கிளம்பிய பிறகு, இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள விரும்பவில்லை. அதனால், இந்த ஒப்பந்தத்தை நல்ல விதமாக முடிப்பதற்குச் சார்லஸின் அத்தையான நெதர்லாந்து அரசி மார்கரட்டு, சார்லசுக்குச் சார்பாகவும் பிரான்சிஸின் சார்பாக அவருடைய அன்னையும் இப் பணியை ஏற்றுக்கொண்டனர். இதன் விளைவாக கேம்ரே என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதைக் கேம்ரே ஒப்பந்தம் அல்லது "பெண்களின்

சமாதானம்'' (Ladies Peace) என்று அழைக்கப்பெற்றது. இந்த ஒப்பந்தமும் மாட்ரிட் ஒப்பந்தத்தைப் போலவேதான் இருந்தது. ஆனால், பிரான்சிஸ் பர்கண்டியை உடனடியாகச் சார்லசுக்கு விட்டுக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தப்படவில்லை. பிரான்சிஸின் இரண்டு மகன்களையும் பணம் கொடுத்து மீட்டுக் கொள்வதென்று முடிவாகியது. பிரான்சிஸ், எலியனர் திருமணம் முடிவு செய்யப்பெற்றது.

எட்டு ஆண்டுகள் விடாமல் போர் செய்ததன் விளைவாக ஸ்பெயின் நாட்டு ஆதிக்கம் இத்தாலியில் ஏற்பட்டது. மிலானும், நேபிள்சும், ஸ்பெயினின் நேரடியான ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. ஓரளவிற்கு, போப்பும், ஃபிரான்சுங்கூட ஸ்பெயினின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டன. 1529-ல் முதன் முறையாகச் சார்லஸ் தமக்குச் சேர்ந்த பகுதிகளை எல்லாம் பார்வையிடுவதற்கு இத்தாலிக்கு வந்தார். போப் அவருக்கு இத்தாலியின் அரசன் என்று பட்டம் சூட்டினர். இரும்பு மகுடத்தை அவருக்குச் சூட்டினர். ரோமாபுரியின் பேரரசன் என்ற மகுடத்தையும் போப் அவருக்குச் சூட்டினர்.

இத்தாலியப் போர்களில் சார்லஸ் வெற்றிபெற்றது அவரது முரட்டுப் பிடிவாதத்தினால் மட்டுமல்ல. அவருக்கு நல்ல தளபதிகள் அமைந்துவிட்டதும் ஒரு காரணமாகும். குறிப்பாக, பெஸ்காரா, டேலெவ்யா, லானுய், போர்போர்ன், ஆரஞ்ச் ஆகியோர் முழுத் திறமையுடன் படைகளைச் செலுத்தி வெற்றிகண்டனர். பிரான்சிஸ் மன்னருக்கு நல்ல தளபதிகள் இல்லை. மேலும், நல்ல சமயத்தில் அவருடைய நண்பர்களைப் புண்படுத்தும் மனப்பான்மை பிரான்சிசிற்கு இருந்ததால் பல நண்பர்கள், நெருக்கடியான சமயத்தில் கைவிட்டனர். பிரான்சிசிற்கு, சார்லஸின் பிடிவாதக் குணமும், விடா முயற்சியும், குறிக்கோளும் இல்லாததால், அவருக்கு நல்ல உதவி கிடைக்காமல் போய்விட்டது. இத்தாலியப் போர்களைப் பற்றிய விளைவுகளை மிகப்படுத்திக் கூறவேண்டியதில்லை. ஃபிரான்ஸ் நாட்டிற்கும் ஹேப்ஸ்பர்க் வம்சத்திற்கும் தீராத பகை அப்பொழுதிருந்து ஆரம்பமாகியது. ஐரோப்பிய அரசியலில், வல்லரசுகளின் சமநிலைக் கொள்கை வளர்ச்சி அடைந்தது. கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கும் மதிப்பும் படிப்படியாகச் சீர்குலைந்து வந்தன. இத்தாலியப் போர்கள் நடந்த சமயத்தில் ஏற்பட்ட குறிப்பான நிகழ்ச்சி, இத்தாலியில் நடக்கவில்லை எனினும், ஜெர்மனியில் ஏற்பட்டது. அது 1517-ல் ஏற்பட்ட சரித்திரப் புகழ்பெற்ற லூதரின் புரட்சியாகும்.

4. சமயப் புரட்சி

சார்லஸ் பேரரசனனபொழுது ஜெர்மனியின் நிலை

ஐந்தாம் சார்லஸ் பேரரசன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டபொழுது, ஜெர்மனி ஏறக்குறைய முந்நூறு சிறு நாடுகள் கொண்ட ஒற்றுமையற்ற நாடாக விளங்கியது. அத்தனை நாடு களுக்கும் பலவிதங்களில் வேறுபாடுகள் இருந்தன. ஒற்றுமை என்பது இன அடிப்படையில்தான் இருந்ததே தவிர, மற்ற எல்லா வகைகளிலும் வேறுபட்டே இருந்தன. ஒரு நாட்டிற்கு அதிபர் ஒரு கோமகனாகவும், மற்றொரு நாட்டிற்கு ஒரு கவுண்டாகவும், மற்றொரு நாட்டிற்கு ஒரு மத குருவாகவும் ஆகப் பலதரப்பட்ட ஆட்சி யாளர்களும் அதிகாரம் செலுத்தி வந்தனர். நூரம்பர்க், பிராங்பர்ட், கொலோக்ன் ஆகிய பெரிய நகரங்கள், பவேரியா, வர்ட்டம்பர்க், சாக்ஸனி போன்ற சிறு இராச்சியங்கள் தனி நாடுகளைப் போலவே விளங்கின. இப்படிப்பட்ட அதிகாரம் படைத்த ஆட்சியாளர் களைத் தவிர, எண்ணற்ற பிரபுக்களுங்கூடக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு, சுதந்தர உரிமை பாராட்டிக்கொண்டிருந்தனர். இப்பகுதிகளுக்குப் பேரரசனுகப் பட்டம் சூட்டப்பெற்றதால் மட்டும், சார்லசுக்கு எவ்விதமான நிர்ணயமான அதிகாரமும் இச் சிற்றரசர் களைக் கண்டிப்பதற்கு இல்லாமல் இருந்தது. வெறும் பெயரளவில் தான் இந்தச் சிற்றரசர்களின்மீது அவர் ஆதிக்கம் செலுத்தலாம் என்ற ஒரு வழக்காறு இருந்தது. உண்மையில், இவர்களை யெல்லாம் அடக்கி ஆள்வதற்குச் சார்லசுக்குப் போதிய படை பலமோ, அல்லது ஆட்பலமோ சிறிதும் கிடையாதெனக் கூறலாம். இச் சிற்றரசர்களில் ஏழு பகுதிகளின் அதிபர்கள், பேரரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவர்களாவர். பதின்மூன்றாவது நூற்றாண்டிலிருந்தே, இந்த உரிமையை அவர்கள் அனுபவித்து வந்தனர். ரைன் பகுதியைச் சார்ந்த மேய்ன்ஸ், கலோக்ன் ஆகிய பிரதேசங்களுக்கு ஆட்சியாளர்களான மத குருக்கள் பேரரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகளைப் பெற்றிருந்தனர். பேலடினேட்

பகுதி, பிராண்டன்பர்க், சாக்ஸனியப் பகுதிக்குச் சொந்தமான அரசர்களுக்கும் இவ்வுரிமை வழங்கப்பட்டிருந்தது.

இப்படி எண்ணற்ற நாடுகளைக்கொண்ட ஜெர்மனியில், அடிக்கடி சிக்கல்களும் குழப்பங்களும் ஏற்படுவது இயற்கையே. சில பெரிய நாடுகள், சிற்றரசர்களையும், சிறிய இராச்சியங்களையும், ஆக்கிரமித்துக் கொள்வதாலும், ஒரு இராச்சியத்திற்கும் மற்றொரு இராச்சியத்திற்கும் ஏற்படுகின்ற அரசியல், பொருளாதாரச் சிக்கல்களால் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு பேரரசனுடையதே எனினும், அவருக்கு இவர்களை எல்லாம் சரியானபடி அடக்கி ஆள முடியவில்லை. இச் சிற்றரசர்களுக்குப் பேரரசர் ஆணைகளுக்குக் கட்டுப்படும் வழக்கம் இல்லாமல் இருந்தது. அதனால், சரியான மத்திய அரசாங்கம் அங்குத் தோன்ற வில்லை. இவ்விதமான ஜெர்மனிக்கு ஒரு சட்டசபை இருந்தது. அதற்கு டையட் (Diet) என்று பெயர். எப்பொழுதாவது, எங்கே யாவது, இச் சட்டசபைக் கூடும். நிரந்தரமான தலைநகரம் அப்பொழுது இல்லாததால், நினைத்த இடத்தில் இச் சட்டசபை கூட்டப்படும். நகரப் பகுதிகளுக்கும் மற்றும் பெரிய பிரபுக் களுக்கும் சிறிய பிரபுக்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத தால், இச் சட்டசபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். 1520-ல் முதன் முதலாகச் சார்லஸ் ஜெர்மனிக்குள் காலடி எடுத்து வைக்கும் பொழுது, வர்ம்ஸ் (Worms) என்ற நகரத்தில் ஒரு சட்டசபைக் கூட்டம் கூடியது. இக் கூட்டத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான விவாதம், பல்கலைக் கழகப் பேராசிரியரான மார்ட்டின் லூதர் என்பார் இடைக்காலத் திருச்சபையை எதிர்த்துக் கட்டுரைகள் எழுதி வருவதைப்பற்றியும் அவரை என்ன செய்வது என்பது பற்றியதாகும்.

சமயப் புரட்சி

மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய பகுத்தறிவு இயக்கத்தால் சமயத் துறையிலுங்கூடப் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய மக்களிடையே சீர்திருத்த மனப்பான்மை தோன்றியது. அந்த ஆர்வத்தால் அவர்கள் திருச்சபைகளிலும் மற்றும் கிறித்துவச் சமயக்கோட்பாடுகளிலுங்கூடப் பல மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று விரும்பினர். இவ்விதமான ஆர்வம், குறிப்பாக ஜெர்மானிய மக்களிடம் அதிகமாகத் தோன்றியது. அதனால், சமயப் புரட்சிக்கு மிக முக்கிய காரணமாக இருந்தவர்கள் ஜெர்மானியர்களாவர். ஜெர்மனியில் நூற்றுக்கணக்கான சிறு நாடுகள் இருந்தன.

ஒவ்வொரு சிற்றரசரும் ஒவ்வொரு விதமாக ஆட்சி செய்து வந்தார். மேலும், லூதர் போன்ற சீர்திருத்தவாதிகளும் அங்கேதான் தோன்றினர். இந்தச் சீர்திருத்தவாதிகள் இத்தாலிய சமய ஆதிக்கத்தையும், போப்பாண்டவரின் தலையீட்டையும், அவருடைய கட்டளைகளையும், மற்றும் அவர் செய்யும் நியமனங்களையும் முறையாகக் கண்டிக்கத் தொடங்கினர். இடைக்காலத்தில், போப்பாண்டவரின் போக்கைக் கண்டிக்கும் அளவிற்கு மக்களிடம் துணிச்சல் ஏற்படவில்லை. ஆனால், மறுமலர்ச்சித் தோன்றியதற்குப் பிறகு, அவர்களுக்கு இவ்விதமான துணிச்சல் இயற்கையாகவே தோன்றியது. பகுத்தறிவு வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக அவர்கள் எதையும் அறிவுக் கண்ணோட்டத்தில் பார்த்தனர். எதையும் அவர்கள் அப்படியே நம்பத் தயாராக இல்லை. பகுத்தறிவு வளர்ச்சியுடன், தேசிய உணர்ச்சியும் ஐரோப்பிய நாடுகளிடையே வளர்ச்சியுற்றது. இத்தாலிய நாட்டைச் சார்ந்த போப் ஜெர்மனியிலும், இங்கிலாந்திலும், ஹாலந்திலும், மற்ற நாடுகளிலும், ஆதிக்கம் செலுத்துவதை விரும்பவில்லை. அவர் அடிக்கடி அரசியல் விவகாரங்களில் தலையிடுவதையும் மக்கள் விரும்பவில்லை. சமயத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்துவதும், அதனால் ஏற்படுகின்ற சலுகைகள் காரணமாக அரசியலில் தலையிடுவதும், மற்ற நாடுகளின் அரசர்களை மிரட்டுவதும் அதிகமாகிவிட்டன. ஐரோப்பிய நாடுகளிலுள்ள திருச்சபைகளைப் பெரும்பாலும் போப்பாண்டவரே ஆதிக்கம் செலுத்தி வந்தார். அத் திருச்சபைகளின் பணிகளுக்காக மத குருமார்களையும் அவரே நியமனம் செய்துவந்தார். அத் திருச்சபைகளிலிருந்து பெறுகின்ற பெரும் வருவாயை அவரே பெற்றுவந்தார். திருச்சபை பற்றிய விவகாரங்கள் முழுவதும் அவருடைய நிர்வாகத்திலேயே இருந்தன. அதனால், அங்கே ஆட்சி செய்துவந்த அரசர்களின் ஆட்சிக்கு இடையூறு ஏற்பட்டது. அவர்களுடைய தேசிய உணர்ச்சி அவமதிக்கப்படும் நிலையில் சில சமயங்களில் சூழ்நிலை அமைந்துவிட்டது. இதுவரையிலும் கத்தோலிக்கச் சமயம் என்ற ஒரே கிறித்துவச் சமயம் மட்டுமே இருந்தது. ஐரோப்பாவில் உள்ள நாடுகளிலிருந்தக் கிறித்துவர்களெல்லாரும் இச் சமயத்தின் பிணைப்பில் ஒன்று சேர்ந்திருந்தனர். அதனால், சில நன்மைகள் ஏற்பட்டன. முக்கியமாக, அவர்களிடம் ஒற்றுமை இருந்தது. ஆனால், பல வழக்காறுகளைக் கண்மூடித்தனமாக அப்படியே நம்பி வந்தனர். அண்மையில் ஏற்பட்ட பகுத்தறிவு வளர்ச்சியின் காரணமாக அந்த வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும், குறைபாடுகளையும்கூறி அவற்றைக் கைவிடும்படியும் கூற முற்பட்டனர். கிறித்து வழிபாட்டிற்கும், இவ்வித மூடப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதற்கும் எவ்வித தொடர்பும் சம்பந்தமும் இல்லை என்று கூறினர். அதனால், மன அமைதி வந்துவிடாது என்று கூறினர்.

திருச்சபைகளில் குற்றங் குறைகள் மிகுந்திருந்தன; நிர்வாக ஊழல்கள் அதிகமாக இருந்தன. பல மத குருமார்கள் பக்தி மான்கள் என்று நடித்தனர். ஆனால், அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை மிகவும் மட்டமாக இருந்தது. இவ்விதமான குறைபாடு கள் கத்தோலிக்கத் திருச்சபையில் மிகுந்துவிட்டதால், கத்தோ லிக்க மதத்தின் மீதிருந்த நம்பிக்கையைச் சிலர் இழந்துவிட்டனர். இவ்விதமான சூழ்நிலையில்தான் ஜெர்மனியில் சமயப் புரட்சி ஏற்பட்டது. இதையே சமயச் சீர்திருத்த இயக்கம் என்றும் கூறலாம். இதன் விளைவாக ரோமன் கத்தோலிக்க மதம் இதுவரை கொண்டிருந்த தனி ஆதிக்கத்தை இழந்துவிட்டது. அது இருந்த இடத்தில் பல கிளைகள் தோன்றிவிட்டன. அவைகளுள், மிகவும் முக்கியமானது லூதரால் ஏற்படுத்தப்பட்ட பிராடஸ்டண்டு இயக்கமும் ஒன்றாகும்.

ஐரோப்பிய நாடுகள் பொதுவாக இந்த இரண்டு பிரிவுகளில் வருகின்றன. இங்கிலாந்தைத் தவிர, புனித ரோமானியப் பேரரசின் கீழ்ப்பட்டுள்ள இத்தாலி, ஃபிரான்ஸ், ஸ்பெயின், போர்துகல், தெற்கு ஜெர்மனி, ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் போப்பாண்டவரை மதத் தலைவராகக் கொண்டு, கத்தோலிக்க நாடுகளாக நீடித்தன. வடக்கு ஜெர்மானிய நாடுகள், இங்கிலாந்து, ஹாலந்து, டென் மார்கு, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகள் பிராடஸ்டண்டு நாடு களாக மாறிவிட்டன. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் சமயத்தின் காரணமாக இந்த இரு பிரிவுகளிடம் பகைமை ஏற்பட்டு, அதனால் பல போர்களிலும் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால், மக்களிடையே மதவெறி தாண்டவமாடியது. கத்தோலிக் கர்கள், கத்தோலிக்கச் சமயத்தில் இல்லாதவர்களை மதப் பற்றற்ற வர்களாகவும், கடவுள் பக்தி அற்றவர்களாகவும் கருதத் தொடங்கினர்.

இவ்விரு சமயக் கட்சியினரிடையே பகைமை அதிகமாக வளர்ந்து வந்தது. அதனால், அரசியலும் பெரும்பாலும் சமயச் சார்புடையதாகவே இருந்தது.

கத்தோலிக்கத் திருச்சபைமீது வெறுப்பு ஏற்படக் காரணங்கள்

முதலில் ஜெர்மானிய மக்களிடம்தான் இந்த வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. இதுவரையிலும் அவர்கள் நல்ல கத்தோலிக்கர்களாக இருந்து வந்தனர். இதுவரையிலும் போப்பாண்டவர்களாகப் பதவி ஏற்றவர்கள் அனைவரும் இத்தாலியர்களேயாவர். அவர்கள் அடிக்கடி ஜெர்மானிய மக்களிடமிருந்து பணத்தைப்பெற்று வந்தனர். அம் மக்களுக்குப் போப்புகளின்மீது சந்தேகம்

ஏற்பட்டது. மெயின்ஸ், கலோக்ன் போன்ற பகுதிகளிலிருந்து மட்டுமே, ஆயிரக்கணக்கான நாணயங்கள் ரோமுக்கு அனுப்பப் பட்டன. நிறைய பணத்தை அனுப்புவதைத் தவிர, அப் பகுதிகளி லுள்ள திருச்சபைகளில் குருமார்களின் நியமனங்களையும் போப் பாண்டவர்களே இறுதியில் சம்மதிக்கவேண்டும் என்ற வழக்க மும் இருந்தது. போப்பாண்டவர்களின் ஆதரவைப்பெற்ற குருமார் களே திருச்சபைகளில் மத அதிகாரிகளாகப் பணியாற்றினர். போப்பாண்டவர்களின் ஆதரவும் செல்வாக்கும் பெற்ற ஒரு சில ரிடமே திருச்சபையின் ஆதிக்கமும் சிக்கிக்கொண்டது. இவ்வித மான நிலையை ஜெர்மானிய மக்கள் விரும்பவில்லை. ஏழையிலிருந்து பணக்காரன்வரையிலும், திருச்சபையில் நிகழ்ந்துவரும் நிர்வாக ஊழல்களைப்பற்றியும், மத குருமார்கள் அக்கிரமமாக நடந்து கொள்ளும் முறைகளைப்பற்றியும் நன்கு தெரிந்திருந்தனர். இத் திருச்சபை குருமார்களைத் தவிர, சில துறவிகளுங்கூடப் பல அக்கிரமச் செயல்களில் ஈடுபட்டனர். பிரான்சிஸ்கன்ஸ், டோமினி கன்ஸ், அகஸ்டினியன்கள் என்ற பலவகை திரி துறவிகளை ஜெர்மானிய மக்கள் அப்பொழுது வெறுத்து வந்தனர். ஊழல்கள் நிறைந்து காணப்பட்டபோதிலும் ஆரம்பத்தில் ஜெர்மானிய மக்கள் போப்பாண்டவர்களின் மத நிர்வாகத்திலிருந்து விடுதலை அடைந்து விட வேண்டுமென்றே, அல்லது ரோமன் கத்தோலிக்க மதத்தி லிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்றே விரும்பவில்லை. ஜெர்மானியிலிருந்து ரோமுக்குச் செல்லும் ஏராளமான பணத்தை நிறுத்தி விடவேண்டும் என்றும், அவர்களுடைய திருச்சபைகளில் ஒழுக்கத்தையும், தெய்வ பக்தியையும் நிலைநிறுத்தவேண்டும் என்றுதான் அவர்கள் விரும்பினர். குருமார்கள் ஒழுங்காகத் தங்க ளுடைய பணிகளைச் செய்து வந்தாலே போதும் என்ற எண்ணம் பிறந்தது.

இராஸ்மஸ் (Erasmus, 1465–1536)

ஐந்தாம் சார்லஸ் மன்னன் காலத்தில் திருச்சபையின் ஊழல் களை அம்பலப்படுத்தியும் அவைகளின் நிர்வாகத்தைக் கண்டித்தும் இராஸ்மஸ் என்பவர் எழுதிவந்தார். அவர் ஒரு டச்சுக்காரர். இங்கிலாந்து, ஃபிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஆகிய பலநாடுகளில் அவர் வாழ்க்கையில் பெரும் பகுதியைக் கழித்திருக்கிறார். அதனால் அவருக்குத் தனிப்பட்ட எந்த நாட்டின்மீதும் ஒரு பற்றுதல் கிடையாது. அவரும் தம்மை எந்த நாட்டின் குடிமகன் என்று கூறிக் கொள்வதில்லை. அவர் எல்லாநாடுகளையும் தமது சொந்த நாடாகவே கருதி வந்தார். அதனால் அவரிடம் குறுகிய மனப்பான்மை குடிக் கொள்ளவில்லை. அப்பொழுதிருந்த பல கலைஞர்களுடன் அவர் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். அவர்களுக்கு,

அடிக்கடி கடிதங்கள் எழுதிவந்தார். அவர் எழுதிய கடிதங்களிலிருந்து, அக் காலத்திய மக்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது. இலக்கியத்தில் அவருக்கு நல்ல ஆர்வம் இருந்தபோதிலும், அவருடைய முக்கியமான குறிக்கோள், திருச்சபைகளை ஒழுங்குபடுத்துவதும் அங்கு பணியாற்றும் குருமார்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதுமேயாகும். அவர் சிறுவயதிலேயே தம்முடைய விருப்பத்திற்கு மாறுக ஒரு மடத்தில் வாழ்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுதே, அங்கிருந்த மடாதிபதிகளின் அக்கிரமங்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள்மீது ஏற்பட்ட வெறுப்பு, அவரிடம் தொடர்ந்து நீடித்தது. திருச்சபையில் பணியாற்றுபவர்களிடம் பக்தி இல்லை. அவர்களுக்கு இயேசுகிறித்துவின் போதனைகளைப் பாமர மக்களிடம் பரப்பவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்று அவர் கருதினர். இயேசுகிறித்துவின் உண்மையான போதனைகளையும், கொள்கைகளையும் ஏற்றுக்கொண்ட எந்த குருமாரும் மட்டமான வாழ்க்கையைத் துறவி வேடத்தில் நடத்தமாட்டார் என்று அவர் நிச்சயமாக நம்பினர். அதனால், இயேசுகிறித்துவின் போதனைகளையெல்லாம் புதிய ஏற்பாட்டின்படி கிரேக்க, இலத்தீன் மொழிகளிலிருந்து மொழி பெயர்த்து வெளியிட்டார். அவரவர்களுடைய தாய் மொழியிலேயே இவற்றைப் பாமர மக்கள் படித்தார்கள் என்றுல்தான், அவர்களிடத்தில் நல்ல ஒழுக்கமும் கடவுள் பக்தியும் ஏற்படும் என்று அவர் நம்பினர்.

இத்தாலியர்கள் மனிதாபிமான வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட கிரேக்க, ரோமானிய விக்கிரக ஆராதனையில் தோன்றிய ஆர்வம்; மற்றும் கடவுளை வழிபட அப்பொழுது பின்பற்றப்பட்ட வெளித் தோற்ற முறைகளும், பண்டிகைகளும், திருவிழாக்களும், மற்றும் பல சம்பிரதாயங்களும் பல மகான்களின் கல்லறைகளுக்கும் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குத் தீர்த்த யாத்திரை செல்லுதலும் போன்ற பழக்க வழக்கங்கள் கிறித்துவ மதத்திற்கு உண்மையான எதிரிகள் என்று அவர் கருதினர். அன்பு, அமைதி, ஒழுக்கம் ஆகிய பண்புகளைத் தவிர, மற்ற வெளித்தோற்றங்களில் கிடைக்கும் பக்தி உண்மையானதாகாது என்று அவர் பிரச்சாரம் செய்தார்.

இவற்றையெல்லாம் கண்டித்து; 'மூடர்களின் பெருமை' (The Praise of Folly) என்ற நூலை எழுதினர். இப் புத்தகத்தில், அக் காலத்திய குருமார்களது வாழ்க்கை, அவர்களது வழிபாட்டு முறைகள், தீர்த்த யாத்திரைகள், பாவ மன்னிப்புப் போன்ற பழக்கங்களை மிகவும் கேலியாக எழுதியுள்ளார். இந்த ஊழல்களை

எல்லாம் திருச்சபைகளிலிருந்து அகற்றவேண்டும் என்ருல் மக்களிடம் ஒரு நல்ல அறிவு வளர்ச்சியும் ஒழுக்க உணர்ச்சியும் ஏற்படவேண்டும் என்றும், போப்பின் ஆதிக்கத்திலிருந்து விடுதலே பெறுவதோ, அல்லது திருச்சபையின் நிர்வாகத்தை எதிர்த்துப் போரிடுவதோ பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும் என்று கூறுகிருர். மக்களிடையே அறிவு வளர்ச்சி ஏற்படும்பொழுது மூடப் பழக்கவழக்கங்கள் படிப்படையாக மறைந்துவிடும் என்று அவர் நம்பினர். மக்களிடையே அறிவு வளர்ச்சி ஏற்படும் சூழ்நிலே அப்பொழுதிருந்தது என்றும், அதனுல் அரசர்கள் அந்த அறிவு வளர்ச்சியை மக்களிடம் பரப்புவதற்கான வழி வகைகளேச் செய்து கொடுக்கவேண்டும் என்று அவர் அக் காலத்து அரசர்களே வேண்டிக்கொண்டார். இங்கிலாந்து மன்னன் எட்டாம் ஹென்றி ஃபிரெஞ்சு மன்னன் முதலாம் பிரான்சிஸ் பேரரசன் ஐந்தாம் சார்லஸ் ஆகியோர் இராஸ்மஸ் கூறுவதை நன்கு புரிந்துகொண்டனர். அப்பொழுதிருந்த பத்தாம் லியோ என்ற போப்பாண்டவரும் கூட இராஸ்மஸ் கூறுவதில் உண்மை இருக்கிறது என்று உணர்ந்திருந்தார். ஆனுல், அமைதியான சூழ்நிலையிலேயே மதச் சீர்திருத்தங்கள் ஏற்படும் என்று அவர் நம்பியிருந்தார். ஆனுல், அவருடைய பிற்காலத்தில் மார்டின் லூதருடைய சமயப் புரட்சி அமைதியான சீர்திருத்தங்கள் நிகழ்வதற்கான சூழ்நிலையைப் பாழாக்கியதையும் அவர் பார்த்தார்.

மார்டின் லூதரின் சமயப் புரட்சி

கி.பி. 1483-ல் மார்டின் லூதர் பிறந்தார். அவருடைய பெற்ருர்கள் ஏழைகளாவர். அவருடைய தந்தை ஒரு சுரங்கத் தொழிலாளியாகப் பணியாற்றியவர். அவருடைய சிறுவயதில் அவர் அறிந்ததெல்லாம் ஏழ்மையைப்பற்றியும், மூடப் பழக்கவழக்கங்களேப்பற்றியும்தான், ஏழையாக இருந்தபோதிலும் மார்டின் லூதர் நன்ருகப் படித்து வந்த காரணத்தால், அவருடைய தந்தை அவரை ஒரு சிறந்த வழக்கறிஞராக்கவேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தார். அதனுல், அவரை எர்பர்ட் பல்கலேக் கழகத்திற்கு அனுப்பிவைத்தார். கல்லூரி வாழ்க்கை முடிந்து, சட்டப் படிப்பைத் தொடங்கும்பொழுதுதான், அவர் கிறித்துவ மதத்தின்மீது அதிகப் பற்றுகொண்டு, ஒரு மத குருவாகவேண்டும் என்று விரும்பினர். அந்த ஆர்வம் இருந்ததால், அவர் ஒரு திரி துறவியாக மாறிவிட்டார். கல்லூரியிலிருந்து நேராக அவர் மடாலயத்திற்கே சென்றுவிட்டார். அவர் அதிகக் கடவுள் பக்திகொண்டவர். மன அமைதி பெறுவதற்குக் கடவுள் பக்தியைத் தவிர, வேறு வழியில்லே என்று அவர் உணர்ந்திருந்தார். அவருடைய மனம் அல்லலுறும்பொழுதெல்லாம், நல்ல

வனுக இருக்க முயலும்பொழுதெல்லாம், கடவுளின் ஆதரவைத் தேடித்தான் நரகத்தின் பயங்கரத்திலிருந்து விடுபட முடியுமே தவிர, வேறு வழியில் முடியாதென்று அவர் நம்பினார். அந்த மடாலயத்திற்கு ஒருநாள் சாக்ஸனி நாட்டு மன்னன் பிரடிரிக் விஜயம் செய்தபொழுது லூதர் அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். விட்டன்பர்க் பல்கலைக் கழகத்தில், அரிஸ்டாட்டலுடைய நூல்களை மாணவர்களுக்கு நல்ல முறையில் சொல்லிக் கொடுக்க மார்டின் லூதர் சிபாரிசு செய்யப்பட்டார். அப்பொழுதிலிருந்து, அவர் பல்கலைக் கழகப் பேராசிரியரானார். ஆனால், அரிஸ்டாட்டலுடைய நூல்களைப்பற்றி லூதருக்கு நல்லெண்ணம் பிறக்கவில்லை. அரிஸ்டாட்டலுக்கு விக்கிரக ஆராதனைதான் தெரியுமே தவிர, அவர் ஒரு கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர் அல்லர் என்று எண்ணி, தமது மாணவர்களிடம் அரிஸ்டாட்டலுடைய நூல்களைப் படிப்பதால் எந்தவிதமான நற்பயனும் ஏற்படாது என்றும்; ஆனால், அதற்குப் பதிலாக வேத பாடங்களையும், மற்ற மகான்களுடைய நூல்களையும் படிக்க வேண்டும் என்றும் கூறினார். மாணவர்களிடம் அவர் கடவுள் நம்பிக்கைபற்றியும், செய்த பாவங்களை உணர்ந்து மனம் திருந்துதலைப்பற்றியும் ஓயாமல் எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். மாணவர்களுக்கு, இவருடைய பிரச்சாரம் பிடிக்கவில்லை. ஆனால், எதிர்பாராதவிதமாக, 1517-ல் நடந்த நிகழ்ச்சி, இவரை மக்கள் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை அளித்தது.

பாவ மன்னிப்புச் சீட்டு

செயின்ட் பீட்டர் கோயிலைப் புதுப்பித்துக் கட்ட நிறைய பணம் தேவைப்பட்டது. அதனால், போப்பாண்டவர்கள் பல வழிகளைப் பின்பற்றி நிதி திரட்டுவதில் முனைந்திருந்தனர். போப் பத்தாம் லியோ என்பவரும் அவர் காலத்திலேயே நிறைய நிதியைத் திரட்டிக் கோயிலை நிர்மானித்துவிடவேண்டுமென்று விரும்பினார். அதற்காகப் பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்றுப் பணம் திரட்டுவது என்ற வழியைப் பின்பற்றினர். அவ்விதமாகப் பணம் திரட்டுவதற்குப் பல மத குருமார்களுக்கு அவர் அதிகாரம் வழங்கினர். ஜெர்மனியில் நிதி திரட்டுவதற்கு, டெட்ஸல் ('Tetzel) என்ற ஒரு டாமினிக்கன் சபையைச் சார்ந்த ஒரு துறவியை அனுப்பி வைத்தார். பாவ மன்னிப்பு என்பது கத்தோலிக்க மத குருக்கள், பாவம் செய்கின்றவர்களுக்கு அளிக்கும் மன்னிப்பாகும். அதாவது, பாவம் செய்கின்றவர்கள் கூடியவரையிலும் அவர்களது பாவங்களை உணர்ந்து, அதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்வதேயாகும். அப்படி பிராயச்சித்தம் செய்து கொள்வதால், அவர்களுடைய மனம் அமைதியுறுகின்றது. இல்லாவிடில்

அவர்களுடைய மனம் பலவாறு அலக்கழிக்கப்பெற்று, துன்பத் துக்குள்ளாகிறது. பாவ மன்னிப்புப் பெருது எவனொருவன் இறந்து விட்டான் என்ருல், அவனுடைய மனம் சாந்தியுருது, வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் என்பது, கிறித்துவர்களின் கருத்தாகும். பாவ மன்னிப்புப் பெற்றுவிட்டதால்மட்டும் ஒருவரை நரகத்தி லிருந்தோ அல்லது அவருக்கு அளிக்கப்படும் தண்டனையி லிருந்தோ தப்பிவிட முடியாது. அவர்கள் செய்யும் பாவத்திற்கு ஏற்றவாறு தண்டனை கொடுக்கப்படுவது உறுதியெனினும் மனம் மட்டும் துன்பத்திற்குள்ளாகாது இருக்கும்பொருட்டுப் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. டெட்ஸல் என்பவர் போப்பின் அதிகாரம்பெற்று, இவ்விதமான பாவ மன்னிப்புச் சீட்டு களைப் போப்பின் முத்திரையிட்டுப் பாமர மக்களிடம் விற்றுவந்தார். பணக்காரர்களிடமிருந்து நிறைய பணமும், ஏழைகளிடமிருந்து அவர்கள் சக்திக்கேற்பப் பணமும் இதற்காக வாங்கப்பெற்றது. நிறைய பணம் திரட்ட வேண்டுமென்ற காரணத்தால், போப்பின் பிரதிநிதிகள், ஒவ்வொருவரும் இப் பாவ மன்னிப்புச் சீட்டை வாங்க வேண்டுமென்றும், அல்லது அவரது நண்பனுக்கோ அல்லது நரகத்தில் மனம் அமைதியுருது துன்புறும் மற்ற இறந்த உறவினர்களுக்குங்கூட வாங்கலாம் என்று வியாபார முறையில் இச் சீட்டுகள் விற்கப்பட்டன. இவ்விதமாகப் பாவ மன்னிப்புச் சீட்டுகள் ஏலமிட்டு விற்கப்படுவதைப் போலிருந்ததால் பல கிறித்துவர்களுக்குச் சந்தேகங்கள் கிளம்பின. பணம் கொடுத்துப் பாவம் மன்னிக்கப்படும் முறை கேலிக்கூத்தாக இருந்தது. வெளிப்படையாக, இது மக்களைக் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் ஏமாற்றுவதைப் போன்றிருந்தது. சிந்திக்கத் தெரிந்த எந்த மனிதனுக்கும், இதனுடைய நோக்கம், உண்மையில் பாவங்களை மன்னிக்கக் கொடுக்கப்படும் சீட்டுகள் அல்ல; இவை பணம் சம்பாதிக்கும் வழியே என்பதைத் தெரிந்துகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. மதத்தின் பெயரால் செய்யப்படும் எந்தச் செயலையும் நியாயமானது என்று கண்மூடித்தனமாகக் கீழ்ப்படியும் மக்களைத் தவிர, பகுத்தறிவு படைத்தவர்கள், இந்த முறையைக் கண்டிக்க முன் வந்தனர். அவர்களில் முக்கியமானவர்தான் மார்டின் லூதர் என்ற தத்துவப் பேராசிரியராவர். கிறித்துவ மதக் கொள்கைகளுக்கும், டெட்ஸல் விற்கும் பாவ மன்னிப்புச் சீட்டுகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி தொண்ணூற்று ஐந்து விளக்கங்கள் கொண்ட ஓர் அறிக்கையை வெளியிட்டார். இவ் விளக்கங்களை அவர் கோயில் வாசற்படியிலேயே ஒட்ட வைத்து, இதைப்பற்றி விவாதிக்க விரும்புவோர் அவரிடம் வரலாம் என்று கூறினர். இவ் விளக்கங்களிலிருந்துங்கூடப் பாவ மன்னிப்புச் சீட்டுகள் விற்கப்

படுவது முறையானதல்ல; கிறித்துவ மதத்திற்கு ஒட்டியதல்ல என்று தெரிந்துகொள்ள மறுப்பவர்கள், கிறித்துவ மதத்தையே சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் என்று கூறினர். இவ்வித மான விளக்கங்களோ, அவர் எடுத்துக்கூறியதால் அவருக்குத் திருச் சபையைத் தாக்கவேண்டும் என்றோ அல்லது பெரிய பரபரப்பை ஏற்படுத்த வேண்டுமென்றோ எண்ணம் இல்லை. இவ் விளக்கங் களையும், அவர் இலத்தீன் மொழியில்தான் வெளியிட்டிருந்தார். அதனால், படித்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்வதற்கு எழுதிய தாகக் கருதவேண்டியிருந்தது. பாமர மக்களுக்காக அவர் அவற்றை எழுதவில்லை. முதலில், அவர் அவ்விதமாகக் கருத வில்லை. ஆனால், அவர் நினைத்ததற்கு மாறுகப் படித்தவர்களும், படிக்காதவர்களும் பாவ மன்னிப்புச் சீட்டின் தத்துவங்களைப் புரிந்து கொண்டவர்களும், புரிந்து கொள்ளாதவர்களும், அவரிடம் இதைப்பற்றி விவாதிக்க வந்துவிட்டனர். இந்த விளக்கத்தின்படி, பாவ மன்னிப்புச் சீட்டு பெறுவது, வாழ்க்கையில் பெரிய நோக்க மாக இல்லாது, அதற்காகச் செலவிடும் பணத்தை, அவனுடைய குடும்பத்திற்காகவே செலவழிக்கலாம் என்று கூறியிருந்தார். பாவம் செய்தவர்கள் உண்மையிலேயே பிராயசித்தம் செய்து, மனம் திருந்துவார்களேயானால், அதற்கு மன்னிப்பும் கோர மாட்டார்கள். கடவுளின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள வும் விரும்பமாட்டார்கள். தொடர்ந்து பாவம் செய்பவர்களும், கடவுள்மீது உண்மையான நம்பிக்கை வைக்காதவர்களும், மனம் திருந்தாதவர்களும்தான் வெளித்தோற்றத்தில் மயங்கி இவ் விதமான பாவ மன்னிப்புகளை விலை கொடுத்து வாங்கி ஆறுதல் அடைகிறார்கள் எனக் கூறினர். இவ்விதமாகப் பாமர மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றார்கள் என்று உண்மையில் போப்புக்குத் தெரிந்தால், அந்தக் கோயிலை அவர் சுட்டுப் பொசுக்கிச் சாம்ப லாக்கி விடுவாரே தவிர, ஏமாற்றிய பணத்திலிருந்து பீட்டரின் கோயிலைப் புதுப்பிக்க அவர் முற்படமாட்டார் எனக் கூறினர். பணம் வாங்கிக்கொண்டு மக்களுடைய பாவத்தை மன்னித்து அவர்களுடைய ஆத்மா நரகத்திலிருந்து விடுதலை அடைந்து சாந்தி யடையுமாறு செய்தால், ஏன் தருமமாகவே இந்த நற்காரியத்தைச் செய்யக்கூடாது? என்று ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்து விடுவர். அவர்களுக்கெல்லாம் எவ்விதமாகப் பதில் சொல்லக் கூறும்? அல்லது போப்பாண்டவரே நிறைய பணம் படைத்தவ ராயிற்றே; அவரிடமில்லாத பணமா? அந்தப் பணத்தைக் கொண்டே செயின்ட் பீட்டர் கோயிலைப் புதுப்பித்துக் கொள்ள லாமே? ஏழையின் பணத்தைப் பெற்றுக்கொண்டுதானு, இக் கோயிலைப் புதுப்பிக்கவேண்டும், என்று ஒவ்வொருவனும் கேட்க ஆரம்பித்துவிடுவான். லூதரின் விளக்கங்கள், அவர் எதிர்

பார்த்ததற்கு மாறுகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. அவருடைய கொள்கைகளுக்கு நிறைய ஆதரவாளர்கள் சேர்ந்து விட்டனர். போப்பினுடைய ஆதிக்கத்தைத் தாக்கியதற்காகச் சிலர் அவரை ஆதரித்தனர். அரிஸ்டாட்டலையும், மற்றும் சில இடைக்காலத்து வேதாந்திகளையும் அவர் குறை கூறியதற்காக அவரிடம் சிலர் ஆதரவு காட்டினர். இராஸ்மஸ் எழுதிய புத்தகங்களை வெளியிடுபவர் லூதருடைய நூல்களைப் பிரசுரம் செய்து நிறையப் பிரதிகளை இத்தாலி, ஃபிரெஞ்சு, இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் விற்பனை செய்தார். அதனால் அவருடைய புகழ் ஐரோப்பிய நாடுகளில் விரைவில் பரவ ஆரம்பித்துவிட்டது. அக் காலத்தில் இருந்த இராஸ்மஸ் என்ற அறிஞர் இந்தச் சர்ச்சையில் ஈடுபடவில்லை. திருச்சபையையும், போப்பின் ஆதிக்கத்தையும் தாக்குவதால் குழப்பம் ஏற்படுமே தவிர, இவ் விதமான ஊழல்கள் மறைய வேண்டுமென்றால், மக்கள் அறிவு வளர்ச்சி பெறவேண்டும். அறிவுபெற்ற மக்களே நாளடைவில் இவற்றையெல்லாம் நம்ப மறுத்துவிடுவர் என்று கூறினர். இராஸ்மஸின் கருத்து என்னவென்றால், மனிதன் முன்னேற்றத்தை நோக்கிச் செல்லுபவன்; அவன் மனப்பான்மையை நன்கு பக்குவப் படுத்திப் போதுமான கல்வியறிவையும் அளித்தால் அவனுடைய வளர்ச்சி மேலும் மேம்படும். ஆனால், லூதரின் கருத்துப்படி, மனிதன் ஊழல் நிறைந்தவன்; நல்ல காரியங்களைச் செய்ய மறுப்பவன். அவனது மனம் கெட்டது செய்யவே அடிமைப் பட்டிருக்கிறது. அவனுடைய ஒரே நம்பிக்கை கடவுளின் காருண்யத்தை எதிர்நோக்கியிருப்பதாகும். அதனால் இவ்விரண்டு அறிஞர்களுக்கும் மனிதனைப்பற்றி கருத்து வேறுபாடு இருந்தது. மனிதனுடைய நல்ல வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளாது வளர்ந்து வந்த லூதருக்கு மனிதனுடைய இயல்புகளைச் சரிவரத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படவில்லை என்று தோன்றுகிறது. இராஸ்மஸ், திருச்சபையில் சீர்திருத்தங்கள் ஏற்படும்வரையிலும் பொறுமையாகக் காத்திருந்தார். ஆனால், லூதர் சிறிது அவசரப் பட்டார். திருச்சபை திருந்தாவிடில், மக்களுடைய நல்ல செய்கைகளில் பொய்யான நம்பிக்கையை வளர்த்து, அவர்களது மனத்தைப் பாழ்படுத்திவிடும். அதனால் உடனடியாகத் திருச்சபை திருத்தப்படவேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்தார். இரு அறிஞர்களுக்கும் ஆரம்பத்தில் ஒருவர்மீது ஒருவருக்கு நல்ல மதிப்பு இருந்ததெனினும், நாளடைவில் இருவரும் ஒருவரையொருவர் வெறுக்கவே ஆரம்பித்தனர். மக்கள் நல்லதே எப்பொழுதும் செய்ய மாட்டார்கள் என்ற கொள்கையை லூதர் உடையவராக இருந்ததால், அவருடைய நண்பர்களிடத்திலும் ஆதரவாளர் களிடத்திலுங்கூட, அவர் நம்பிக்கை வைக்கவில்லை. அதனால்,

அவருடைய ஆதரவாளர்கள்கூட லூதர்மீது வெறுப்பை வெளிப்படையாகவே காட்டினர். மேலும் அவருடைய போதனைகளை இடைவிடாது கேட்ட அவருடைய ஆதரவாளர்கள் முரடர்களாக மாறி அவருக்கே மரியாதை செலுத்தவுங்கூட மறுத்துவிட்டனர். ஆவேசமும், ஆத்திரமும் ஒருங்கே பொங்க லூதர் ஜெர்மானிய அரசர்களுக்கு விடுத்த வேண்டுகோளாவது : "திருடர் களுக்குத் தூக்குத் தண்டனையும், சூறையாடுபவர்களைக் கத்தியால் குத்திக் கொன்றும், கடவுள் பக்தியில்லாதவர்களை நெருப்பி லிட்டும் தண்டிக்கிறோம். ஏன் மதத்தின் பெயரால் ஏமாற்றி வரும் குருமார்களையும் போப்புகளையும் தண்டிக்க எந்தவிதமான ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது? நாள் குறித்தாகி விட்டது. ரோமின் கோபத்தை நான் வெறுக்கிறேன். அதனுடன், எக்காலத்திலும், நான் தொடர்போ, சமாதானமோ செய்துகொள்ள விரும்பவில்லை. என்னுடைய கருத்துகளை அவர்கள் தண்டிக் கட்டும்; கொளுத்தட்டும். ஆனால், போதிய நெருப்பு இருந்தால், நானுங்கூட போப்பின் கட்டளையைப் பகிரங்கமாகக் கண்டித்து, அதை நெருப்பிலிட்டுக் கொளுத்தத் தயங்கமாட்டேன்." இந்த உணர்ச்சி மிக்க அறிக்கை, ஜெர்மானிய மக்களைத் தூண்டி விட்டது. செல்வாக்கு மிக்க ஜெர்மானியப் பிரபுவான யுல்ரிச் வான் ஹட்டன் (Ulrich Von Hutten) என்பவர் போப்பின் பரம எதிரியாக இருந்தார். அவர் லூதரை ஆதரிக்க முன் வந்தார். ஜெர்மானிய மொழியில் நன்கு பேசக்கூடிய இருவரும் போட்டி யிட்டுக் கொண்டு ரோமையும் போப்பையும், தாக்க ஆரம்பித்தனர். இப் பிரச்சாரம் தேசிய உணர்வை ஜெர்மானிய மக்களிடம் ஏற்படுத்திவிட்டது. வான் ஹட்டன் ஜெர்மானிய மக்களது பண மெல்லாம் ரோமுக்குச் சென்றுவிட்டதென்றும் ரோமின் ஆதிக்கமும் போப்பின் கட்டளையும் ஜெர்மானியர்களை அடிமை களாகவும், கண்மூடிகளாகவும், கோமாளிகளாகவும் ஆக்கி விட்டன. அவர்கள் மக்களின் மனப்போக்கைத் தேசியத்தின் பக்கம் திருப்பிவிட்டனர். லூதரின் அறிக்கைகள் ஏராளமாகப் பிரசுரிக்கப்பெற்றன. அவ்வறிக்கைகளில், ஜெர்மானியப் பிரபுக் களுக்கான அறிக்கை மிகவும் பிரசித்திப்பெற்றது. அந்த அறிக்கையில் லூதர் கூறுவதாவது: திருச்சபையைச் சீர்திருத்தம் செய்யும் குரல் போப்பின் காதுகளில் ஏறுவதில்லை. அவரைச் சுற்றிலும் மூன்று மதிற்சுவர்கள் பாதுகாத்து வருகின்றன. முதலாவதாக, மத குருமார்கள் தனிச் சிறப்பும், தனிச் சலுகையும் பெற்ற வகுப்பினராக உள்ளனர். அவர்கள் அரசர்களையும்விட மேம்பட்டவர்கள் என்று கருதி வருகின்றனர். ஏனெனில், அவர்கள் தவறு இழைத்தாலும் அவர்களைத் தண்டிக்க அரசர்களுக்குக்கூட அதிகாரம் இல்லை. இரண்டாவதாக, திருச்சபைக் குழுவினரைவிட

போப்பே மிகவும் மேன்மை வாய்ந்தவரென்றும், அவரைத் திருத்த திருச்சபையின் எந்தப் பிரதிநிதிக்கும் அதிகாரமில்லை. மூன்றுவதாக, ஏதாவது சமயச் சம்பந்தமான கொள்கை வேறுபாடுகள் ஏற்படின், வேத பாடங்களிலிருந்துங்கூட உதாரணங்கள் காட்டி, அவரை மாற்றமுடியாது. ஏனெனில், அவர் சொல்வதே வேத வாக்கு என்று கருதவேண்டும். அவர் இடுவதே கட்டளையாகப் பாவிக்கவேண்டும். ஆக, இம் மூன்று சுவர்களுக்கு அப்பால் தஞ்சம் புகுந்திருக்கும் போப்புகளுக்குத் திருச்சபையில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கூக்குரலிட்டால் அது எப்படி முடியும்? குற்றம் புரிகின்ற குருமாரைத் தண்டிக்கும் அதிகாரத்தைப் பெறுவது நியாயமானதும் இயற்கையானதுங்கூட. இதைப் பெற்றால், முதல் சுவர் வீழ்ந்துவிடும். பிறகு, மற்றச் சுவர்கள் தானாக வீழ்ந்துவிடும். மேலும், அவர் அந்த அறிக்கையில் அவருடைய சமயம் சமூகப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டு மென்று கூறுகிறார். மடாலயங்கள் நிறுவுவதைக் குறைத்துக் கொண்டு, சோம்பேறிகளாகத் திரியும் மடாதிபதிகளை வெளியே விரட்டவேண்டுமென்றும், மடாதிபதிகளுங்கூடத் திருமணம் செய்து கொண்டு நல்ல குடும்ப வாழ்க்கை நடத்த வழிசெய்து கொடுக்க வேண்டும் என்றும், இந்த மடாலயங்களையெல்லாம் பள்ளி களாகவும் மருத்துவமனைகளாகவும் மாற்றவேண்டும் என்றும், பல்கலைக் கழகங்கள் சீர்திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அவர் ஒரு நீண்ட பட்டியலைக் கொடுத்தார். இக் குறைபாடுகளை அகற்றுவது சமயத்திற்காக மட்டுமல்ல; ஆனால், சமுதாயத்தின் நல்வாழ்விற்காகவும், அவர்களின் அமைதிக்காகவுங்கூட இச் சீர் திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று கூறுகிறார். அவர் விடுத்த இரண்டாவது அறிக்கையில் ரோமன் கத்தோலிக்க மதத்தின் புனிதச் சடங்குகளுக்காக ஏற்பட்ட, குருபட்டம் தரித்தல், விவாகம் நிர்ணயித்தல், அபிஷேகம் செய்தல், ஆகியவற்றை அவர் நிராகரித்தார். மக்கள் ஒன்றுகூடி ஜபிக்கும் முறையைப் புதுப் பித்தார். மத குருமார்களுடைய வேலையே வேத பாடத்தைப் போதிப்பதாகத்தான் இருக்கவேண்டும் என்று கூறினார்.

இவ்விதமாக அவர் போப்பிற்கும் திருச்சபைக்கும் எதிராகப் பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்து வந்ததால் போப்பிற்குக் கோபம் மூண்டது. இந்தக் கோபத்தின் விளைவாக, 1520-ல் லூதரும் அவருடைய ஆதரவாளர்களும் மதத்திலிருந்து விலக்கப் பட்டனர். இவர்களுக்குப் புகலிடம் கொடுக்க முன்வரும் எவருக்குமே இதே கதிதான் நேரிடும் என்றும், மேலும் அப் பகுதிக்கே மதச் சடங்குகள் நடைபெறமாட்டா என்றும் போப் கட்டளையிட்டார். இவ்விதமான ஒரு கட்டளை பிறப்பிக்கப்படும்

என்று லூதர் எதிர்பார்த்திருந்தார். அதனால், அவர் இந்தக் கட்டளையைக் கண்டு அதிர்ச்சியுறவில்லை. போப்பின் இந்தக் கட்டளையை லூதரின் பகைவர் ஒருவர் மூலமாகக் கொடுத்தனுப்பினர். இதைக் கேள்வியுற்ற ஜெர்மானிய அரசர்களுக்குப் போப்பின்மீது வெறுப்பு ஏற்பட்டது. இக் கட்டளை, ஜெர்மானிய அரசர்களுக்கு மறைமுகமாக விடுக்கப்பெற்ற கட்டளையாகவே அவர்கள் கருதினர். அதனால், இந்தக் கட்டளையை அவர்கள் சரியானபடி பறைசாற்றவில்லை. லூதர் வசித்துவந்த சாக்ஸனி பகுதியின் அரசனுங்கூட இக் கட்டளையைப் பொருட்படுத்தாது அவருக்குப் புகலிடம் கொடுத்தே வந்தார். ஆனால், ஐந்தாவது சார்லஸ் பேரரசர் மட்டும் அவருடைய ஆஸ்திரியப் பகுதிகளில் இந்தக் கட்டளையைப் பறைசாற்றி லூதரின் நூல்களைக் கொளுத்தச் சொன்னார். அக் கட்டளையின்படி, லோவேய்ன், மேய்ன்ஸ், கலோக்ன் ஆகிய இடங்களில் அவருடைய நூல்கள் பகிரங்கமாகக் கொளுத்தப்பட்டன. மார்டின் லூதர் இதையெல்லாம் கண்டு மிரண்டுவிடவில்லை. போப்பையும், பேரரசனையும், மற்றச் சிற்றரசர்களையும் எதிர்த்துக் கொள்வது கடினமே என்று உணர்ந்திருந்த போதிலும், நரகத்திலிருந்து தப்புவதற்கும் கடவுளின் கோபத்திற்கு ஆளாகாமல் இருப்பதற்கும் ஒரேவழி, இவர்களையெல்லாம் எதிர்த்துப் போரிடுவதைத் தவிர, வேறில்லை என்று துணிச்சலாகக் கூறினர். விட்டன்பர்க் பல்கலைக் கழக மாணவர்களை அழைத்துப் போப்பின் கட்டளையையும், திருச்சபையின் சட்டத் தொகுதியையும், கிறித்துவ வேதாந்த நூல்களையும் ஒன்றுக வைத்துத் தீயிட்டுக் கொளுத்தினர். இருப்பினும் லூதரைப் பின்பற்றி மற்ற ஜெர்மானியர்கள் எங்கே ஒரு பெரிய கலகத்தையே ஆரம்பிக்கப் போகின்றார்களோ என்று பயப்பட்டார். ஒழுங்கீனமாகவும் வெறித்தன்மையிலும் எதுவும் நடந்துவிடக்கூடாது என்றும், நம்பிக்கையின்மீதுதான் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் அவர் கருதினர். நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றதென்றால், இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கவேண்டுமென்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

வர்ம்ஸ் சபை (The Diet at Worms, 1520–21)

ஜெர்மனியில் தேசிய மனப்பான்மை நன்கு வளர்ச்சியடைந்து விட்டது. அங்குள்ள மக்கள் ரோமானியர்களது ஆதிக்கத்தை எந்தவகையிலும் வெறுக்க ஆரம்பித்துவிட்டனர். குறிப்பாகத் திருச்சபையின் நிர்வாகத்தையும் போப்பின் தலையீட்டையும் ரோம் நகருக்குப் பணம் அனுப்பும் பழக்கத்தையும் அவர்கள் சிறிதும் விரும்பவில்லை. எங்கும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதற்கு முன்னர் இவ்விதமான நிலைமை ஏற்பட்டதில்லை. முன்னர்,

ஜெர்மானியப் பேரரசன் நான்காவது ஹென்றிக்கும் போப் ஏழாவது கிரிகிரிக்கும் நிகழ்ந்த போராட்டங்கள் எல்லாம் இப்பொழுது நிகழும் போராட்டத்திற்கு முன்னர் தூசிப் போன்ற தாகும் என்று, போப் பத்தாவது லியோவின் ஜெர்மன் பிரதிநிதி யான அலியாண்டர் ஜெர்மன் மக்களைப்பற்றிப் போப்பிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். மேலும், அவர் கூறுவதாவது : "இந்தப் பைத்தியக்கார நாய்கள் இப்பொழுது நல்ல அறிவு பெற்றிருக் கின்றனர். அத்துடன் அவர்களுக்கு நல்ல படை பலமும் இருக் கின்றது. அவர்கள் தங்களுடைய முன்னோர்களைப் போன்று முட்டாள்களல்லர் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இத்தாலிதான் அறிவின் இருப்பிடம் என்ற நிலை இப்பொழுது மாறி விட்டது என்று கூறுகிறார்கள். அங்குப் பாய்கின்ற டைபர்நதி ரைன் பிரதேசத்தில் இப்பொழுது திருப்பிவிடப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்கிறார்கள். ஜெர்மானியருள் பத்துக்கு ஒன்பது பேர் 'லூதர்' என்று கோஷமிட்டுக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள்கூட ரோமானியர்களது அழிவை அங்கே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்" என்று ஜெர்மானிய மக்களது நிலையைப் போப்பிற்கு எழுதினர். 1520ஆம் ஆண்டில் ஐந்தாம் சார்லஸ் "ரோமானியர்களது அரசர்" என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டு ஜெர்மனியில் முதல் முதலாகக் காலடி எடுத்து வைத் தார். பின்பு, வர்ம்ஸ் நகரத்திற்குச் சென்று அங்கே ஒரு சபையைக் கூட்டி, ஜெர்மனியின் நிலையை அறிந்துகொள்ள விரும்பினர். பேரரசர் ஓர் இளைஞராக இருந்தபோதிலும், சில திட்டமான கொள்கைகளை வகுத்துக்கொண்டார். ஜெர்மனியிலிருந்து ஆட்சி செய்வதைவிட ஸ்பெயினிலிருந்து ஆட்சி செய்வதே நல்லது என்று அவர் கருதினர். மேலும், அவர் திருச்சபைகளில் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்று உணர்ந்திருந்தபோதிலும், வழக்காறு களுக்கும் நம்பிக்கைகளுக்கும் எதிராகப் போக வேண்டியதில்லை என்று ஒன்றுக்கொன்று முரணான கொள்கையைப் பின்பற்றினர். பழைய வைதீகக் கத்தோலிக்கராகவே அவர் இருக்க விரும்பினர். மேலும், அப்பொழுது ஜெர்மானிய மக்கள் விரும்புகின்ற சமயச் சீர்திருத்தங்களுக்கும் சமய விடுதலைக்கும் அனுமதி அளித்தால், அடுத்தபடியாக அவர்களுக்கென்று தனிச் சுதந்தர அரசாங்கம் வேண்டுமென்றும் கோருவர் என அவர் உணர்ந்திருந்தார். அவர் வர்ம்ஸ் சபைக்கு வந்தவுடனே, லூதரைப்பற்றி விசாரிக்க வேண்டும் எனவும், அவரைத் தண்டிக்கவேண்டும் என்றும் போப்பின் பிரதிநிதி கூறினர். திருச்சபைக்கும் போப்பின் ஆணை களுக்கும் எதிராகப் புரட்சி செய்திருக்கிறார் என்றும், அதனால் தண்டிக்கப்படவேண்டும் என்று உணர்ந்திருந்த போதிலும், லூதரை உடனடியாகத் தண்டிப்பதில் பல அரசியல் சிக்கல்களும்

கலந்திருப்பதை உணர்ந்திருந்தார். இதைப்பற்றி, அச் சபையில் பல காரசாரமான விவாதங்கள் நிகழ்ந்தன.

லூதருக்குச் சாதகமாகச் சாக்ஸனி அரசனும், மற்றும் பல சிற்றரசர்களும் இருந்ததால், இந்த விசாரணையின்பொழுது லூதரையும் வரவழைக்க வேண்டுமென்றும், இக் குற்றச் சாட்டுகளை அவர் ஒப்புக்கொள்கிறாரா அல்லது மனம் திருந்தி மீண்டும் திருச்சபைக்குள் வர விரும்புகிறாரா என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று கூறினர். அதனால், லூதர் அந்தச் சபைக்கு வரவழைக்கப்பட்டார். அவருடைய சமயச் சார்பான கொள்கைகளைப்பற்றிய விளக்கம்கூற அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அவரிடமிருந்து எதிர்பார்த்ததெல்லாம் "திருச்சபைக்கு எதிராக எழுதப்பெற்ற இந் நூல்களெல்லாம் உங்களுடையதுதானே?" "இக் கருத்துகளிலிருந்து பின் வாங்க விருப்பமா?" என்ற வினாக்களுக்குத்தான் அவர் பதிலளிக்கும் படியான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. முதல் கேள்விக்குப் பதில் அளிக்கையில் "இவற்றையெல்லாம் நான் எழுதியதுதான். இன்னும் எழுதியிருக்கிறேன்." இரண்டாவது வினாவுக்குப் பதில் சொல்லுகையில் "நான் எழுதியதில் எப் பகுதியாவது கடவுளுக்கு விரோதமாகவோ, அல்லது கிறித்துவ மறைகளுக்கு எதிராக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டினால், நான் என்னுடைய கொள்கைகளை மாற்றிக்கொள்கிறேன்" என்று கூறினார். கிறித்துவ மறைகளுக்கு விரோதமாக எதுவும் அவருடைய எழுத்துகளிலோ, அல்லது பேச்சுகளிலோ கூறப்படவில்லையென்று அவர் மீண்டும் அச் சபையில் கூறினர். இச் சமயத்தில், அவர் சொன்னதையும் எழுதியதையும் தவறு என்று கூறிப் பின்வாங்கிக் கொண்டாரென்றால், மீண்டும் போப்பின் எல்லையற்ற அதிகாரமும், திருச் சபையின் ஊழல்களும் அதிகமாகத்தான் ஆகுமே தவிர, எவ்விதத்திலும் குறைந்துவிடவோ அல்லது சீர்திருந்தவோ முடியாதென்று உறுதியாகக் கூறினர். இதனால் சமயத் தலைவரின் ஆணைகளை மறுத்ததற்காகச் சார்லஸ் பேரரசர், அவரை நாடு கடத்த உத்தரவிட்டார். இதுபற்றிப் போப்பின் பிரதிநிதி அலியாண்டர் "வர்ம்ஸ் கட்டளை" என்ற தீர்மானத்தைத் தயாரித்தார். அக் கட்டளையில் லூதர்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களையும் அதனால் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனையையும் எடுத்துக் கூறினர். மேலும், லூதர் எழுதிய நூல்களை யாரும் விற்கவோ, வாங்கவோ, படிக்கவோ கூடாது என்று உத்தரவிட்டார். ஜெர்மானிய மக்களுக்கு இந்த வர்ம்ஸ் சபையின் கட்டளை மிகவும் அவமானத்தை அளிப்பதாக இருந்தது. அவர்களுடைய தன்மானத்தையே இகழ்வதாக இருந்தது. அதனால் இந்தக்

கட்டளையை, அவர்கள் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. சார்லஸ் பேரரசரும் உடனடியாக ஜெர்மனியைவிட்டுக் கிளம்பி, அவருடைய போர் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டார். அதற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்கு ஜெர்மனியில் என்ன நடக்கின்றது என்பதைப்பற்றியே தெரிந்துகொள்ள அவர் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

லூதர் வர்ம்ஸ் சபையிலிருந்து வெளியேறும்பொழுது அவருடைய நண்பர்கள், அவரைத் தூக்கிச் சென்றுவிட்டனர். எங்கே லூதரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறதோ என்று அவர்கள் அஞ்சினர். சாக்ஸனி அரசனுக்குச் சொந்தமான ஒரு கோட்டைக்கு அவர் எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு, அவர் பாதுகாப்புடன் பல மாதங்கள் தங்கியிருந்தார். அந்தக் காலத்தில், அவர் விவிலிய நூலை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். மார்ச் 1522-ல் அந்தக் கோட்டையை விட்டு வெளியேறும்பொழுது விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டை அவர் முடித்தார். ஜெர்மன் மொழியிலேயே முதன் முதலாக விவிலிய நூலை எழுதியவுடன் பொதுவாகப் பாமர மக்களிடையே விழிப்பு ஏற்பட்டது. மேலும் மேலும் அவருடைய நூல்கள் ஜெர்மன் மொழியிலே பிரசுரமாகவேண்டும் என்று விரும்பினர். லூதர் இதற்கு வழிகாட்டியாக இருந்தார் என்பதில் ஐயமில்லை. இந்த வழியைப் பின்பற்றி நூற்றுக்கணக்கான நூல்கள் ஜெர்மன் மொழியில் அப்பொழுது வெளியாயின.

இப் புதிய விழிப்புணர்ச்சியின் காரணமாக மக்கள் திருச் சபையில் உடனடியாகச் சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இவ்வளவு எதிர்ப்பைக் காண்பித்துங் கூட, எவ்விதமான சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படாததால் முதலில் விட்டன்பர்க்கில் உள்ள மாணவர்களும் பாமர மக்களும் கத்தோலிக்கக் கோயில்களில் நடைபெறும் பூசைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதும் அங்குள்ள படங்களைக் கிழித்தெறிந்தும் பலவிதமாகத் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வந்தனர். இந்த நிலை அப்படியே வளர்ந்துவிட்டால் புரட்சிகரமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று லூதர் அஞ்சியதால், இவ்விதமான கிளர்ச்சி களால் மட்டும் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடாதென்றும் சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியவர்கள் அரசாங்கமே தவிர, பாமர மக்கள் அல்ல என்று கூறி, அவர்களுடைய உணர்ச்சிகளையெல்லாம் சிறிது தணித்தார். ரோமன் கத்தோலிக்க ஆதரவில் உள்ள மடாலயங்களுக்கு எந்த ஜெர்மானியரும் பணமோ அல்லது வேறு உதவியோ அளிக்கவில்லையெனில், மடாதிபதிகளின் உல்லாச வாழ்க்கை, முற்றுப்பெறுவதோடு

அல்லாமல், அவர்களும் மற்றப் பாமர மக்களைப் போல உழைத்துப் பிழைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும் எனக் கூறினர். ஓரளவிற்குத்தான் லூதரால் மக்களுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடிந்தது. கொதித்தெழுந்துள்ள மக்களின் ஆவேச உணர்ச்சிகள் மீண்டும் கிளம்பின. லூதரின் சமயக் கொள்கைகளை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று அவர்கள் பிடிவாதமாக இருந்தனர். பிரான்ஸ் வான்சிக்கிங்கன், யூல்ரிச் வான் ஹுட்டன் ஆகிய லூதரின் சீடர்கள் டிரிவிஸ் மேற்றிராசனப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்களுக்குக் கத்தோலிக்க ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுத்தரும் நோக்கத்துடன் அம் மேற்றிராசனக் குருமாரைத் தாக்கத் தொடங்கினர். ஆனால், சில ஜெர்மன் அரசர்கள் மேற்றிராசன குருமாருக்கு உதவியாக இருந்து வான்சிக்கிங்கனின் கோட்டையைத் தாக்க முற்பட்டனர். இந்தத் தாக்குதலில் வான்சிக்கிங்கன் பலத்த காயத்திற்குள்ளானார். மேலும், கலகம் விளைவித்த பல பிரபுக்களின் கோட்டைகளும் தகர்க்கப்பெற்றன. இவ்விதமாக லூதரின் கொள்கைகளை நடை முறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று புரட்சி செய்த பிரபுக்கள் அடக்கப்பெற்றனர். இப் பிரபுக்களின் புரட்சிக்குப் பிறகு 1525-ல் குடியானவர்களின் புரட்சி ஒன்றும் தொடங்கப் பெற்றது. குடியானவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் அவர்களுக்குக் கொடுமைகள் இழைத்தவர்களைப் பழிவாங்கவும், கடவுளின் நியாயம் தங்களுக்கு வேண்டும் என்று கூறிக்கொண்டு அவர்கள் பெரிய கிளர்ச்சிகளைச் செய்தனர். ஆவேசம் கொண்டிருந்த குடியானவர்களின் கலகத்தைத் தடுக்க முயற்சி எடுக்கப் படாவிடின், பல ஜெர்மானியப் பிரபுக்கள் அழிந்துவிடுவர் என்பது உறுதியாகியது. இக் கிளர்ச்சியின் காரணமாகக் குடியானவர்களுக்கும் பிரபுக்களுக்கும் ஒரு உள்நாட்டுப் போரே ஏற்பட இருந்தது. இந்த உள்நாட்டுப் போருக்கு லூதர் காரணமாக இல்லையெனினும், அவர் கூறிய சில சொற்கள், அதாவது "ஜெர்மானியப் பிரபுக்கள் வெறும் கொலைகாரர்கள் என்றும், முன்னர் அவர்களை அயோக்கியர்கள் என்றும் அழைத்தனர்; இப்பொழுது அவர்கள் மிகவும் கௌரவமாகப் பிரபுக்கள் என்று அழைக்கப்படுகின்றனர்" என்று கூறியது குடியானவர்களுக்குப் புதியதொரு வெறித்தன்மையை அளித்தது. பிரபுக்களும் கிறித்துவர்களே; குடியானவர்களும் கிறித்துவர்களே யாவர். இந்த நிலையில், பிரபுக்கள் மட்டும் உழைக்காமல், ஏழைகளின் பணத்தைக் கொள்ளையடித்தும், அவர்களின் உழைப்பின் பயனை நல்வாழ்க்கை நடத்தும் பிரபுக்களை எப்படி இனியும் பொறுத்துக் கொள்வது என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். குடியானவர்களுக்கு நியாயம்வேண்டும் என்று வெளியிட்ட பன்னிரண்டு

கோரிக்கைகள் சரியாகவே தோன்றின. இருப்பினும், பிரபுக்களும் அரசர்களும் நிரம்பிய ஜெர்மன் நாட்டில், அச் சூழ்நிலையில் குடியானவர்களுடைய கோரிக்கைகள் பயனளிக்கவில்லை. அவர்களுடைய கோரிக்கைகளைப் பிரபுக்கள் சிறிதும் கவனித்ததாகவே தெரியவில்லை. அதனால், குடியானவர்கள் பொறுமையிழந்து, அரசர்களையும் பிரபுக்களையும் தாக்க முற்பட்டனர். மடாலயங்கள் கொளுத்தப்பெற்றன. அவர்களுடைய சொத்துகள் கொள்ளையடிக்கப்பெற்றன. குடியானவர்களின் வன்செயல்கள் அளவுக்கு மீறிச் சென்றுகொண்டிருந்தன. லூதருக்குங்கூட, இவர்களின் கொடுமைகளைக் கண்டு அருவருப்பு ஏற்பட்டது. இதுவரை குடியானவர்களுக்காகப் பரிந்து பேசிய லூதர் இப்பொழுது அவர்களை வெறுத்துப் பேசினார். அவர்கள் இழைத்த கொடுமைகளுக்கு எவ்வளவு கொடிய தண்டனைகளையும் கொடுக்கலாம். அவர்கள் கடவுளின் சாபத்திற்கு உள்ளானவர்கள் என்றெல்லாம் அவர் கூறியதோடு பிரபுக்களுக்கும் அரசர்களுக்கும் எச்சரிக்கை விடுத்து குடியானவர்களின் கலகத்தைப் படைகொண்டு அடக்க வேண்டுமென்றும் விரும்பினார். லூதரின் இந்த மனமாற்றம், குடியானவர்களின் கலகத்தை அடக்க வழி செய்தது. அதனால், ஆயிரக்கணக்கான குடியானவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்களது கலகம் அடக்கப்பெற்றது. இதனால் குடியானவர்கள் லூதரின்மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர். அவர்மீது தீராத வெறுப்புக்கொண்டனர். அவரை ஒரு பெரிய 'புளுகன்' என்றும் அழைக்க முற்பட்டனர்.

ஜெர்மனியில் சமயப் பிரிவுகள்

ஜெர்மனியில் சமயப் பூசல்கள் அதிகமாகக் கிளம்பிவிட்டன. போப்பின் ஆதிக்கத்தை வெறுப்பவர்களும், திருச்சபையின் ஊழல்களை எதிர்ப்பவர்களும், லூதரின் கொள்கையை ஆதரிப்பவர்களும் பிராடஸ்டண்டு அல்லது எதிர்ப்பாளர்கள் என்று அவர்களை அழைத்துக்கொண்டனர். இவ்வெதிர்ப்பாளர்கள் ஜெர்மனியில் உள்ள வடக்குப் பகுதிகளில் அதிகமாகக் காணப்பட்டனர். ஜெர்மனியில் உள்ள வடக்கு நாடுகளும், அவைகளின் அரசர்களும் அதனால் பிராடஸ்டண்டு மதத்தைத் தழுவ முற்பட்டனர். ஜெர்மனியின் தெற்குப் பகுதிகளில் உள்ள நாடுகள் இதுவரையிலும் கத்தோலிக்கச் சமயத்தையே பின்பற்றி வருகின்றனர். இந்தச் சயமப் பிளவு, ஜெர்மனியின் ஒற்றுமையை மேலும் பாதித்தது. இவ்விரண்டு சமயங்களையும் தவிர, மேலும் பல சமய இயக்கங்கள் அங்கு உருவாகின. ஸ்விஸ் நாட்டைச் சார்ந்த ஸ்விங்லி என்பவர் கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிராக நிறைய ஆதரவாளர்களைத் தேடிக்கொண்டார். அதைப்போல

"அநா பாப்டிஸ்டுகள் இயக்கம்" ஒன்று அங்கே ஆரம்பிக்கப் பெற்றது. அவர்கள் கத்தோலிக்கச் சமயத்தை அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்று விரும்பினர். இவ்விதமாகப் பழைய கத்தோலிக்கக் கிறித்துவச் சமய அமைப்பை எதிர்த்துப் பல இயக்கங்கள் ஜெர்மனியில் வலுவடைந்துவரும் சமயத்தில் சார்லஸ் பேரரசருக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது. அவருடைய போர் நிகழ்ச்சிகளையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். இதையொட்டி 1529-ல் ஸ்பையர் (Speyer) என்ற இடத்தில் ஒரு சபை கூட்டப்பெற்றது. இச் சபையில், ஏற்கனவே வர்ம்ஸ் சபையில் தீர்மானிக்கப்பெற்ற கட்டளைகளை நிறைவேற்றிவிட்டனரா என்ற பிரச்சினை கிளம்பியது. மேலும், திருச்சபைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் சமய இயக்கங்களை உருவாக்குபவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று அறிவித்தனர். அதனால், கத்தோலிக்கத் திருச்சபைக்கு விரோத மாக யாரும் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையைக் கொண்டு வந்தார். இதை எதிர்த்துப் பதினான்கு அரசர்கள் ஒரு தீர்மானத் தைக் கொண்டு வந்தனர். ஏற்கனவே 1526-ல் கூட்டப்பெற்ற ஸ்பையர் சபையில் ஜெர்மானிய நாடுகளுக்கு அப் பகுதிகளில் வாழும் மக்களின் விருப்பத்திற்கேற்பச் சமயக் கொள்கைகளை நிறை வேற்ற வேண்டுமென்றும், இதில் எவ்விதமான ஆதிக்கமும் கூடாதென்றும் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானம் ஒப்புக் கொள்ளப்பெற்றது. இந்தத் தீர்மானத்திற்குப் பதிலாக, ஸ்பையர் மாநாட்டில் 1529-ல் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானத்தை "எதிர்க்கிறோம்" என்ற முடிவுக்கு வந்தனர். இந்த எதிர்ப்பாளர் களின் தீர்மானத்திற்குக் கையெழுத்திட்டவர்களுள் ஜான் பிரடிரிக் என்ற சாக்ஸனி நாட்டு "லெக்டர்" ஒருவராவர். மற்றும், ஹெஸ் நாட்டைச் சார்ந்த பிலிப் அரசன் உட்பட மற்றும் பன்னிரண்டு அரசர்கள் இத் தீர்மானத்தில், பெரும்பான்மையான அரசர்களின் விருப்பத்திற்கு இணங்க மற்ற அரசர்களும் கத்தோலிக்கச் சமயத்தையே பின்பற்றவேண்டும் என்று கூறுவது, ஏற்கனவே ஏகமனதாக ஸ்பையர் சபையில் நிறைவேற்றப்பெற்ற "மதச் சுதந்தரத்திற்கு" விரோதமாக உள்ளது என்று கூறினர். எதிர்ப்பாளர்களது கோரிக்கைகளுக்குக் கையெழுத்திட்டவர்களெல் லாம் பிராடஸ்டண்டுகள் என்று அழைக்கப்படலாயினர். பொதுவாக இந்தப் பெயரைக் கத்தோலிக்கச் சமயத்தை விரும் பாதவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

ஆக்ஸ்பர்க் சபை 1530

மீண்டும் ஆக்ஸ்பர்க் என்ற இடத்தில் ஒரு சபை கூட்டப் பெற்றது. இச் சபையின் முக்கிய நோக்கம், ஜெர்மனியில்

தோன்றியுள்ள சமயப் பூசல்களுக்கு ஒரு முடிவு காணவேண்டும் என்பதேயாகும். இதைப்பற்றி விவாதிப்பதற்குப் பிராடஸ்டண்டுகளை ஓர் அறிக்கை தயார் செய்து கொடுக்கும்படி சார்லஸ் பேரரசர் கேட்டுக்கொண்டார். இவ்வறிக்கையை உருவாக்கும் பொறுப்பு லூதரின் நண்பரான மெலான்ச்தான் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் உருவாக்கித் தந்த ஆக்ஸ்பர்க் அறிக்கை மிகவும் சிறப்பு மிக்க ஓர் அறிக்கையாகும். லூதரின் திருச்சபை இயக்கக் கோட்பாடுகள் பெரும்பாலும் இவ்வறிக்கையைப் பின்பற்றியதாகும். இவ்வறிக்கையில், இரு சமயங்களுக்கு முள்ள வேறுபாடுகளை மிகைப்படுத்திக் காட்டாமல் இரு சமயங்களுக்குமுள்ள ஒருமைப்பாடுகளை மேம்படுத்தி, இரு சார்பாரும் கிறித்துவச் சமயத்தையே தழுவுகின்றவர்கள் என்றும், அவர்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் மிகவும் குறைவானதாகும் என்றும் அவர் கூறுகிறார். தவிர, அவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரியவேண்டுமென்று கூறுகின்ற காரணங்களாவன: குருமார்களின் பிரம்மச்சரியம், ஒழுக்க நாட்களைப் பின்பற்றுவது போன்றவையாகும். இவ்வறிக்கையில் பிராடஸ்டண்டுகளின் புதிய அமைப்பைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. மேலும், திருச்சபையில் கொண்டுவரவேண்டிய பல சீர்திருத்தங்களைப் பற்றியும் அவர் ஆலோசனை கூறினார். ஆனால், இவ்வறிக்கையைச் சார்லஸ் பேரரசர் ஏற்றுக்கொள்ளவில்லை. கத்தோலிக்கர்களின் அறிக்கையைத்தான் அவர் ஏற்றுக்கொண்டார். அதுதான், சாத்தியமானதும் பழையதும் மக்களால் தொன்று தொட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதும் என்ற முடிவைத் தெரிவித்தார். மேலும், ஒரு கத்தோலிக்கத் திருச்சபையைப் போப்பின் தலைமையில் கூட்டி, பல சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தை அவர் தெரிவித்தார். அதனால், பிராடஸ்டண்டுகளுக்கு, அவர்கள் எதிர்பார்த்த விதத்தில் சமயச் சுதந்தர நிர்ணய உரிமை கிடைக்கவில்லை. அதனால், அவர்கள்பெருமளவில்அதிருப்தியுற்றனர். ஆனால், வட ஜெர்மனியில் உள்ள நாடுகளில், பிராடஸ்டண்டு இயக்கத்தை வலுப்படுத்த முயன்றனர். இதன் காரணமாகப் பேரரசருக்கும் பல ஜெர்மானிய அரசர்களுக்கும் போர் மூண்டது. ஆனால், தீவிரமான அளவில் போர் மூளவில்லை. பேரரசரின் ஸ்பானியப் போர் வீரர்களின் உதவியால், சாக்ஸனி அரசர் ஜான் பிரடிரிக் கையும், ஹெஸ் நாட்டரசன் பிலிப்பையும் கைது செய்துகொண்டு போனார். இவர்களைக் கைது செய்துவிட்டதால், லூதரின் இயக்கம் நசுங்கிவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தது பொய்யாகி விட்டது. அதற்கு மாறாக, மற்றும் பல ஜெர்மானிய அரசர்கள் இவ்வியக்கத்திற்கு ஆதரவு அளித்தனர். மேலும், ஃபிரெஞ்சு நாட்டு அரசனும் கத்தோலிக்க அரசனாக இருந்தபோதிலுங்கூட,

ஜெர்மனியின் அரசியல் காரணத்திற்காக, இவ்வியக்கத்திற்கு உதவி அளித்தார். அதனால், சார்லஸ் பேரரசர் பிராடஸ்டண்டு களுடன் ஒரு சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்தார். 1555-ல் ஆக்ஸ்பர்க் என்ற இடத்தில் சமாதான ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பெற்றது. அதன்படி, ஜெர்மன் மக்களுக்கு அவர் களது விருப்பப்படி, சமய நிர்ணய உரிமை கொடுக்கப்பெற்றது. ஆனால், கத்தோலிக்க அல்லது லூதரின் இயக்கங்களுக்குள்தான் இந்த உரிமையை மக்கள் நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, லூதரின், இயக்கம் வட ஜெர்மனியில் வலுவடைந்தது. தெற்கு ஜெர்மனியில் உள்ள பெரும்பான்மையான நாடுகள் கத்தோலிக்கச் சமயத்தையே பின்பற்றின.

ஐரோப்பாவின் மற்ற நாடுகளில் சமயச் சீர்திருத்த இயக்கம் சுவிங்கிலியும், கால்வினும் (Zwingli and Calvin)

சுவிட்சர்லாந்து ஓர் அழகிய மலைப் பிரதேசமாகும். இயற்கை அழகு பொலிந்துள்ள இந்த நாட்டில், இத்தாலியர்களும். ஃபிரெஞ்சுக்காரர்களும், ஜெர்மானியர்களும் ஒருங்கு சேர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தை நடத்துகின்றனர். ஐரோப்பாவில் உள்ள பல நாட்டு மக்கள் இங்கு உல்லாசப்பயணம் செய்வது வழக்கமாக இருந்தது. பல நாட்டு மக்கள் வசிக்கும் இப் பகுதி களில், நிரந்தரமான ஒற்றுமை ஏற்பட பல ஆண்டுகள் பிடித்தன. பிராடஸ்டண்டுகள், கத்தோலிக்கர்கள் ஆகிய இருசாராரிடமும் நிறைய சமயப் பூசல்கள் ஏற்பட்டன. இப் பகுதியில் முதலில் பிராடஸ்டண்டு இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் சுவிங்கிலி என்பவராவார். அவர் லூதரைவிட வயதில் ஓராண்டு சிறியவராவார். என்சீடல்ன் (Einsiedeln) என்ற இடத்தில் உள்ள ஒரு மடாலயத்தில் அவர் வசித்து வந்தார். ஆர்க் ஏரிக்கரையின் பகுதியில் இவ்விடம் இருக்கின்றது. இங்குள்ள ஓர் அதிசய உருவத்தை வணங்க பல கிறித்துவர்கள் வருவது வழக்கமாக இருந்தது. 1516-ல் அவர் இங்கேதான் கிறித்துவின் சுவி சேஷத்தைப் பரப்பினர். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அக் கோயிலில் அவர் மத போதகராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. கத்தோலிக்க மத குருமார்களின் ஊழல்களையும், திருச்சபையில் ஏற்படவேண்டிய சீர்திருத்தங்களையும் அப்பொழு திருந்துதான் வற்புறுத்தி வந்தார். மேலும், அடிக்கடி ஐரோப்பா வில் எப் பகுதியில் சண்டை நடந்தாலும், சுவிட்சர்லாந்திலிருந்து கூலிப் பட்டாளங்கள் செல்வது வழக்கமாக இருந்தது. அப்பொழுது ஃபிரான்ஸ் நாட்டிற்கும் ஜெர்மனி நாட்டிற்கும் தவிர, போப்பிற்கும் உதவியாகப் பல முறைகள் கூலிப்

பட்டாளங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த வழக்கத்தைச் சுவிங்கிலி வன்மையாகக் கண்டித்தார். இப் பழக்கத்தால் நாட்டின் பெருமையே சீரழிந்து விடுகிறதென்று அவர் கருதினர். இப்பொழுதுங்கூடப் போப்பின் சில மெய்க்காப்பாளர்கள் சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதைக் கவனிக்கலாம். லூகிர்ன் பகுதிகளைச் சார்ந்த கத்தோலிக்கர்கள் அவர்களுடைய பழைய சமயக் கொள்கைகளை விட்டுவிடுவதில் விருப்பம் கொள்ளவில்லை. இதுவரை சிறு நாடாக இருந்துவந்த போதிலும், பெருமையுடன் வாழ்ந்து வந்ததற்குக் கத்தோலிக்கச் சமயத்தின் ஆதரவுதான் என்று அவர்கள் கருதினர். அதனால், அவர்கள் பிராடஸ்டண்டு சமயத்தை ஆதரிக்கவில்லை. ஆனால், நாளடைவில் இரு சமயத்தினருக்கும் 1531-ல் கேப்பல் (Kappel) என்ற இடத்தில் பலத்த சண்டை நிகழ்ந்தது. இச் சண்டையில் சுவிங்கிலி உயிர் துறந்தார். சுவிட்சர்லாந்தில் உள்ள பல கேண்டன்களும் நகரங்களும் எந்தவிதமான சமய ஒருமைப்பாட்டு ஒப்பந்தத்திற்கும் இணங்கிவரவில்லை.

கால்வின் என்பவர் மற்றொரு சமயச் சீர்திருத்தத் தலைவராவர். அவர் பிரஸ்பிடிரிய திருச்சபையைத் தோற்றுவித்தவராவர். அவர் ஃபிரான்சிலுள்ள வடக்குப் பகுதியில் 1509-ல் பிறந்தார். லூதரின் கொள்கைகளையும், மற்ற பிராடஸ்டண்டு சமயப் பிரச்சாரத்தையும் அடிக்கடி கேட்டுவந்த காரணத்தால் அவர் மனமாறுதல் அடைந்துவிட்டார். ஏற்கனவே பிராடஸ்டண்டு சமயக் கொள்கைகள் ஃபிரான்சின் வடப் பகுதியில் நுழைந்து விட்டன. ஃபிரெஞ்சு நாட்டு அரசன் முதலாவது பிரான்சிஸ் அங்குள்ள பிராடஸ்டண்டுகளைக் கொடுமை படுத்தியபொழுது கால்வின் அப் பகுதியிலிருந்து வெளியேறி பேசல் என்ற நாட்டில் குடியேறினர். அங்குதான் அவர் ஃபிரெஞ்சு மொழியில் மிகவும் தெளிவாகவும், அதே சமயத்தில் தர்க்கரீதியாகவும் கிறித்துவின் மதக் கொள்கைகளைப்பற்றி ஒரு நூல் எழுதினர். அந்த நூலில், அவர் விவிலிய நூல்தான் வேதவாக்கு என்றும், அந் நூலில் கூறப்பட்டிருப்பதைப் போன்றுதான், கிறித்துவர்கள் நடந்துகொள்ளவேண்டும் என்றும், திருச்சபையோ அல்லது போப்போ இடும் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய தில்லை யென்றும் அவர் தெளிவாகக் கூறுகிறார். அவர் கூறிய கருத்துகள் மக்கள் மனத்தில் நன்கு பதிந்தன. 1540-ல் அவர் ஜெனிவா நகருக்கு வரவழைக்கப்பெற்றார். அப்பொழுதுதான், ஜெனிவா, சேவாய் கோமகனுடைய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருந்தது. அந் நகரத்தைச் சீர்திருத்தும் பொறுப்பு அவரிடம் கொடுக்கப்பட்டது. அப்பொழுதுதான் கால்வின் பிரஸ்பிடிரிய

அமைப்பை ஏற்படுத்தும் வாய்ப்பைப் பெற்றார். அவர் அந் நகருக்கு வேண்டிய அரசியல் அமைப்பை உருவாக்கிக்கொடுத்தார். சமய அதிகாரத்தையும், அறிஞர்கள் அல்லது முதியவர்கள் கண் காணிப்பில் விட்டு வைக்கவேண்டும் என்றும், அப்பொழுதுதான் மக்கள் நல்ல கிறித்துவர்களாக இருக்க முடியும் என்று கருதினர். அதனால்தான் முதியவர்கள் ஆதிக்கத்தில் விடப்பெற்ற திருச்சபையைப் பிரஸ்பிடீரிய அமைப்பு என்று அவர் அழைத்தார். ஃபிரான்சிலுள்ள வடப் பகுதியிலும் ஸ்காட்லாந்திலும் இந்த முறையைத்தான் பின்பற்றுகின்றனர். இங்கிலாந்திலுங்கூடக் கால்வினுடைய செல்வாக்கு அதிகம் பரவியிருந்தது. அமெரிக்கா வில் குடியேறிய பலர் கால்வினிசத்தை அவர்களது மதமாக ஏற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம் எட்டாம் ஹென்றி

எட்டாவது ஹென்றி பட்டத்திற்கு வரும்பொழுது அவருக்குப் பதினெட்டு வயது நிரம்பியிருந்தது. சிறுவயது முதற்கொண்டே அவர் நல்ல அறிவு வளர்ச்சி கொண்டவராக இருந்தார். இராஸ்மஸ் ஒரு சமயம் இவரைச் சந்தித்துப் பேசியபொழுதே, இவர்மீது அவருக்கு நல்ல நம்பிக்கை ஏற்பட்டது. ஆங்கிலேயத் திருச்சபையில் பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று ஹென்றி அப்பொழுதே ஒப்புக்கொண்டார். அவர் நல்ல அறிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். சர் தாமஸ் மோர் என்ற பேரறிஞர் அவருடைய ஆலோசகராகவும் நண்பராகவும் இருந்தார். கார்டினல் உல்ஸி என்பவர் அவருக்குப் பிரதம அமைச்சரைப் போன்றவர். அவர் பட்டத்திற்கு வந்தபொழுது நாட்டில் நல்ல அமைதியும் செழிப்பும் இருந்தன. அதனால், அவர் ஆட்சி செய்வதற்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. சில சமயங்களில் ஐரோப்பாவில் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருந்த போர்களில் தலையிட்டு இங்கிலாந்தின் பெருமையை நிலைநாட்டவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது. ஆனால், ஃபிரெஞ்சு நாட்டு அரசன் முதலாம் பிரான்சிஸ் பக்கம் சேர்வதா, அல்லது பேரரசன் ஐந்தாவது சார்லஸ் பக்கம் சேர்வதா என்று மனத்தைக் குழப்பிக்கொண்டிருந்தார். அவருடைய அமைச்சரான சார்டினல் உல்ஸி என்பவர்தான் இவருடைய போர்க் கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, போரிட்டு இங்கிலாந்தின் பெருமையைக் காத்துக்கொள்வதைக் காட்டிலும் போரில்லாமலேயே அமைதியான முறைகளில் இங்கிலாந்து நாட்டிற்குப் புகழைத் தேடிக்கொள்ளலாம் என்று நல்ல ஆலோசனை கூறினர். மேலும், போரில் ஈடுபடத்தான் வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் எந்தக் கட்சி பலவீன

மாக இருந்ததோ அந்தக் கட்சியில் சேர்ந்து வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குச் சமநிலையை ஏற்படுத்தித் தந்தார். இவ் வல்லரசுகளின் சமநிலைக் கொள்கை, அந்தக் காலத்தில் புதுமையானது என்று கூறவேண்டும். இக் கொள்கையின்படி இங்கிலாந்து நாட்டின் மதிப்பை மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கிடையே காப்பாற்றிக்கொண்டார். இவருடைய காலத்தில்தான் இங்கிலாந்து நாட்டில் பிராடஸ்டண்டு சமயம் பரவியது என்று கூறினால் மிகையாகாது. ஆங்கிலேய அரசனான எட்டாவது ஹென்றி பிராடஸ்டண்டு சமயத்தை ஆதரிக்கவில்லை எனினும், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களும் அந் நாட்டு மக்களும் பிராடஸ்டண்டு மதத்தை ஏற்றுக்கொள்வதற்கான சூழ்நிலையை இவர்தான் ஏற்படுத்தித் தந்தார்.

எட்டாவது ஹென்றிக்குப் பிராடஸ்டண்டு மதத்தைப்பற்றி எவ்வித அக்கரையுமில்லை. லூதரைப்பற்றிக் கேள்வியுற்றிருந்தாலும் அவரது கொள்கைகளைப்பற்றியும் அவர் கவலை கொள்ளவில்லை. ஆனால், அவருடைய கவலை எல்லாம், எப்படித் தன் மனைவியான அரசான் நாட்டைச் சார்ந்த காதரின் இளவரசியை விவாகரத்துச் செய்வது என்பதைப்பற்றியதாகும். பதினெட்டு ஆண்டுகள் தாம்பத்திய வாழ்க்கையை நடத்திவிட்டு, திடீரென்று அவருக்குக் காதரினைப் பிடிக்காதது விந்தையாகத் தானிருந்தது. அவளைப் பிடிக்கவில்லை என்று அவர் கூறுகின்ற காரணங்கள் காலம் கடந்து கூறப்படும் காரணங்களேயாகும். அவளுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. அதனால், அவருக்குப் பிறகு அவருடைய சந்ததி அற்றுப்போகும் என்ற பயம் அவருக்கு இருந்தது. காதரின் ஹென்றியின் அண்ணனுடைய மனைவியாவாள். அண்ணன் இறந்தவுடன் அவளை விதவைக் கோலத்திற்கு விடாதபடி ஹென்றியே மணம் செய்துகொண்டார். அண்ணனின் மனைவியைத் திருமணம் செய்துகொண்டதே சட்டவிரோதமாகும். இது அவருடைய மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. அதனால், மேலும் மேலும் பாவத்திற்கு ஆளாகாமல், அவளை விவாகரத்து செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தைக் குழப்பிவிட்டது. இந்த முடிவு ஒரு சமயம் பதினாறு வயது நிரம்பப்பெற்ற ஆன்பொலின் என்ற அழகிய மங்கையைப் பார்த்த பிறகு ஏற்பட்டதோ! காதரினை விவாகரத்து செய்துவிட்டு ஆன்பொலினைத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று ஒற்றைக் காலால் அவர் நின்று பார்த்தார். இந்த மகத்தான காரியத்தை முடித்து வைக்க கார்டினல் உல்ஸியை அடிக்கடி போப்பிடம் தூது அனுப்பினார். போப் ஏழாவது கிளமெண்ட், எட்டாவது

ஹென்றிக்கு விவாகரத்து அனுமதி கொடுத்துவிட்டால் பேரரசன் சார்லஸ் மன்னனிடம் எந்தவிதமான உதவியையும் எதிர்பார்ப்பதை மறந்துவிட நேரிடும். ஏனெனில், அப்பொழுதுதான் கத்தோலிக்கத் திருச்சபைமீது நிறைய எதிர்ப்புப் பிரச்சாரங்கள், போப்பின் ஆதிக்கத்தை எதிர்த்து கிளர்ச்சிகள், எதிர்ப்பாளர்களின் இயக்கங்கள் என்று எங்கும் மலிந்து கிடக்கும்பொழுது போப்புக்காகவும், கத்தோலிக்கச் சமயத்தை நிலைநிறுத்துவதற் காகவும் போரிட்டு வருகின்ற ஐந்தாவது சார்லஸ் மன்னனை எப்படிப் பகைத்துக் கொள்ளமுடியும்? காதரின் சார்லஸ் பேரரசரின் மிக நெருங்கிய உறவினள், இந்த நிலையில் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் போப் கிளமெண்ட் ஹென்றியின் விவாகரத்துக் கோரிக்கைக்கு முடிவுகட்டாமல் கடத்திக்கொண்டே சென்றார். இதற்குள் ஹென்றி அவரது அமைச்சரான உல்ஸியை ரோமுக்கு அனுப்பினர். பதில் எப்பொழுதும் வருவதைப்போல 'பார்க்கலாம்' என்றுதான் வந்தது. அரசன் உல்ஸியைச் சந்தேகித்தார். அவருடைய சேவைகளை மறந்தார். அவருடைய ஆலோசனைகள் இனிமேல் எனக்குத் தேவையில்லை என்றார். என்ன இருந்தாலும் உல்ஸி போப்பின் பிரதிநிதிதானே! அவர் பாடுகின்ற இராகத்திற்கு ஏற்பத்தானே இவரும் தாளம் போட வேண்டும்! ஹென்றி அவரைப் பதவியிலிருந்து விலக்கியதுமின்றி, அவருடைய சொத்துகளையும் பறித்துக்கொண்டார். செல்வச் சீமானாக விளங்கிய உல்ஸி ஒரே நாளில் பிச்சைக்காரனாகி விட்டார். அதற்குமேல் 'தேசத் துரோகம்' என்ற குற்றம் அவர் மீது சாட்டப்பெற்றது. தேசத் துரோகக் குற்றம் மன்னிக்க முடியாத குற்றமாகும். அதற்காக அவருக்குத் தூக்குமேடை தயாராக இருந்தது. ஆனால், அவர் இலண்டன் வரும் வழியில் இறந்து விட்டார்.

அடுத்தபடியாக, ஹென்றி போப்பின் ஆதிக்கத்தையும் இங்கி லாந்து நாட்டில் அறவே ஒழித்துவிட திட்டம் தீட்டினார். பாராளு மன்றத்து அங்கத்தினர்களின் பெரும்பாலோர் அரசர் சொற்படி கை தூக்கும் ''ஆமாம் சாமிகளாக'' இருந்தனர். அதனால், அரசர் எந்தச் சட்டத்தையும் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். அதற்கு எதிர்ப்புத் தோன்றவில்லை. புதிதாக ஹென்றி கொண்டு வந்த சட்டத்தில், இங்கிலாந்து நாட்டிற்குச் 'சமயத் தலைவர்' எட்டாவது ஹென்றியே என்றும், இனிமேல் போப்பின் ஆணைகள் இந்த நாட்டில் செல்லாது என்றும் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்த ஒரு சட்டத்தைக் (The act of Supremacy) கொண்டு வந்தார். பிறகு போப்புக்குச் செல்லும் திருச்சபையின் படிகளையெல்லாம் நிறுத்தி அவற்றை அரசாங்கத்திற்கே செலுத்த வேண்டும் என்று

உத்தரவிட்டார். மற்றொரு சட்டத்தில், இங்கிலாந்து நாட்டிலிருந்து யாரும் அவர்களுடைய வழக்குகளைப் போப்பிற்கு அனுப்பக்கூடாதென்றும், இறுதியாக நியாயம் வழங்கும் அதிகாரத்தை இங்கிலாந்து அரசரே பெற்றுள்ளார் என்றும் அறிவித்தார். சட்டப்படி காதரினுடன் விவாகரத்து செய்து கொள்ளவும், ஆன்பொலினை மணம் செய்து கொள்ளவும் அரசருக்கு ஆங்கில நாட்டுத் திருச்சபையின் உத்தரவு கிடைத்திருப்பதால் இதை யாரும் மறுக்க முடியாது என்றும் அறிவித்தார். அதனால் ஆன்பொலினுக்குப் பிறக்கும் குழந்தைகள் இங்கிலாந்து நாட்டுப் பட்டத்திற்கு வாரிசுரிமை பெறுகின்றனர், என்பதையும் தெளிவு படுத்தினர். இச் சட்டங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆங்கிலேயக் குடிமக்களுக்கு வேண்டுகோளும் விடுத்தார். இவ்விதமான சட்டங்களைப் பாராளுமன்றத்தின் சம்மதத்தைப் பெற்றுத்தான் ஹென்றி இயற்றியிருக்கிறார் என்பதால், பொதுவாக மக்களின் சம்மதம் பெற்றதே இந்தச் சட்டங்கள் எனப் பொருள் படுகின்றது. அதனால், பெரும்பாலான பாமர மக்கள் அரசாங்கத்திடம் விசுவாசப் பிரமாணம் செய்துகொண்டனர். ஆனால், தீவிரமான கத்தோலிக்கர்களும், மத குருமார்களும் இச் சட்டங்களை ஒப்புக்கொள்ள மறுத்தனர். அவர்களெல்லாம் கொடிய தண்டனைகளுக்குள்ளாகினர். அவர்கள்மீது "தேசத் துரோகம்" என்ற மன்னிக்க முடியாதக் குற்றம் சாட்டப்பெற்றது. அவர்களையெல்லாம் மிகவும் கொடுமைகளுக்குள்ளாக்கி மரண தண்டனையும் அளித்தனர். அவர்களுள் சர் தாமஸ் மோர் என்ற அறிஞரும் ஒருவராவர். போப்பின் பிரதிநிதிகளும் தூண்களுமாகிய மத குருமார்களை ஒழித்துக் கட்டிவிட்டு செழிப்பான மடங்களையும் சூறையாடினால் நிறைய நிதி கிடைக்கும் என்ற நோக்கத்தில் பல குருமார்கள்மீது அபாண்டமான பழிகள் சுமத்தப்பெற்றன. சில பேர்மீது சுமத்தப் பெற்ற பழிகள் உண்மையானவையாகும். ஆனால், பெரும்பாலும் அவர்கள்மீது சாட்டப்பெற்ற குற்றங்கள் கற்பனையே. சிறு மடாலயங்களையும் பெரிய மடாலயங்களையும் தீக்கிரையாக்கி அங்கேயுள்ள எல்லாச் சொத்துகளையும் சூறையாடிவிட்டார். கொள்ளையடிக்கப்பெற்ற பெரும் நிதியை ஆக்க வேலைக்கும், கடற் படையைப் பலப்படுத்துவதற்கும் பிரபுக்களுக்குப் பங்கு அளிப்பதிலும் செலவழிக்கப்பெற்றது. கொள்ளையடித்த பணத்தில் பெரும் பங்கு பிரபுக்களுக்கே தரப்பட்டது. ஏனெனில், அவர்களுடைய தயவும், உதவியும் அரசருக்கு மிகவும் தேவைப்பட்டன. இவ்விதமாகப் போப்பின் ஆதிக்கத்தை இங்கிலாந்தில் ஒழித்த பெருமை எட்டாவது ஹென்றிக்கு உண்டு. ஆனால், அவர் போப்புக்கு எதிரியே தவிர, கத்தோலிக்க மதத்திற்கு எதிரியல்ல என்பதைக் காண்பித்தார். கத்தோலிக்கக் கொள்கைகளைப்பற்றி

விரிவான விளக்கமே எழுதியுள்ளார். விவிலிய நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்து, அந்நூலை ஆங்கில நாட்டிலுள்ள கோயில்களிலும் அறிமுகம் செய்து வைத்தார். அவர் கத்தோலிக்கக் கொள்கைகளை எப்பொழுதும் எதிர்த்தவர் அல்லர், அல்லது திருச்சபையில் ஏதாவது சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் கொண்டவரும் அல்லர். எதிர்பாராத வரையில் போப்புடன் ஏற்பட்ட மனத்தாங்கலால், போப்பின் ஆதிக்கத்தைத்தான் அவர் எதிர்த்தாரே தவிர, கத்தோலிக்க மதத்தை அன்று. ஆனால், நாளடைவில் இச் சூழ்நிலை அங்கே பிராடஸ்டண்டு மதம் வளர்வதற்கு ஏற்றதாகிவிட்டது. ஆன் பொலினை மணம் செய்துகொண்ட பிறகும் அவர் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியவில்லை. அவள் மீதும் பல அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அவளைத் தூக்குமேடைக்கு அனுப்பி வைத்தார். அதற்குப் பின்னர் அவர் ஜேன் சிமோர் என்ற பெண்ணை மணந்துகொண்டார். அவளுக்குத்தான் எட்வர்ட் என்ற மகன் பிறந்தான். ஹென்றிக்குப் பிறகு எட்வர்ட், ஆறுவது எட்வர்ட் என்ற பெயரில் பட்டம் சூட்டிக்கொண்டார்.

ஆறுவது எட்வர்ட் பட்டத்திற்கு வரும்பொழுது சிறுவனாக இருந்ததால் ஆட்சி செய்யும் பொறுப்பு அவனுடைய மாமனான சீமோரிடம் விடப்பெற்றது. அவருக்குச் சாமர் செட் கோமகன் என்ற பட்டமும் வழங்கப்பெற்றது இவரது காலத்தில்தான் இங்கிலாந்தில் பிராடஸ்டண்டு சமயம் வளர்ச்சி அடைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பெற்றன. எட்டாவது ஹென்றியின் காலத்தில் போப்பின் ஆதிக்கத்திலிருந்து மக்கள் விடுபட்டதைப்போன்று இவரது ஆட்சியில் கத்தோலிக்கப் பிடியிலிருந்து மக்கள் விடுதலை அடையவேண்டும் என்று பெரிதும் விரும்பினர். மக்கள் இதை வரவேற்பார்கள் என்று நினைத்தார். அதனால், ஆங்கிலேய மொழியிலேயே கிறித்துவக் கோயில்களில் பிரார்த்தனை நடக்க ஒரு பிரார்த்தனை நூலைத் தயாரித்தார். அந்நூலை எல்லாக் கோயில்களிலும் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர். கத்தோலிக்கச் சின்னங்களாக இருந்த எல்லாக் கிறித்துவ மகான்களுடைய விக்கிரகங்களையும் தேவ தூதர்களுடைய படங்களையும் அகற்றியும் அழித்தும் விடவேண்டும் என்று உத்தரவிட்டார். புதிய பிராடஸ்டண்டு கோட்பாடுகளில் வெறுப்பைக் காட்டிய அத்தனை பேரும் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். கிறித்துவக் குருமார்கள், மணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். கோயில்களில் அமைதியையும் பக்தியையும் நிலைநிறுத்த, குதிரைகளை நிறுத்துவது, சண்டையிட்டுக்கொள்வது, ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்வது போன்ற நிகழ்ச்சிகள், இனிமேல் நிகழாதவாறு பார்த்துக்

கொண்டனர். இவையெல்லாம் பிராடஸ்டண்டு சமயத்தை இங்கிலாந்தில் பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சிகளேயாகும். இருப்பினும் தொன்றுதொட்டுக் கத்தோலிக்கச் சமய வழக்கங்களிலேயே சிக்குண்டு ஊறிப்போன அவர்களுக்கு இந்த மாற்றங்கள் அருவருப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தின. சாமர்செட் பிரபு நீண்ட காலம் பதவியில் இருக்க முடியவில்லை. அவருடைய வீழ்ச்சிக்கு வார்விக் பிரபு காரணமாக இருந்தார். சாமர்செட் கோமகனின் சகோதரன் பல தேச விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருந்தான். கள்ள நாணயம் அடிப்பதிலும், அவனுடைய கோட்டைகளை இராணுவ தளங்களாக்குவதிலும், வெடி மருந்து களைத் தயாரிப்பதிலும், பீரங்கிகளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்ததால் அவன்மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டுச் சாட்டப்பெற்று, தூக்கிலிடப்பட்டான். சாமர்செட்டின் ஆட்சிக்கு இது ஒரு பெரிய களங்கமாகவே இருந்தது. மேலும், டேவன்ஷயரிலும், நார்போக்கிலும் சாமர்செட் இக் கலகங்களை அடக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணுயின. மாருக, இன்னும் கலகங்கள் அதிகமாயின. இவற்றை அடக்கச் சக்தியற்ற நிலையில் இருந்த சாமர்செட் பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற எதிர்ப்புக் கிளம்பியது. அவருக்குப் பதிலாக வார்விக் கோமகன் பதவிக்கு வந்தார். அவர் இக் கலகங்களை அடக்கியதோடு, அமைதியையும் நிலைநிறுத்தினர். சாமர்செட்டின்மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பெற்று, அவர் இறுதியில் 'டவர்' சிறைக்கு அனுப்பப்பட்டார். 1552-ல் அவர் தூக்கிலிடப்பட்டார்.

1553-ல் எட்வர்ட் அரசன் இறந்துவிட்டதால், அவருடைய ஒன்றுவிட்ட தங்கையான மேரி பட்டத்திற்கு வந்தாள். அவள் காதரினின் மகள். அவள் கத்தோலிக்கச் சமயத்தில் பற்றுக்கொண்டிருந்தவள். அதனுல், கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிராக எந்தச் சீர்திருத்தமோ அல்லது நடவடிக்கையோ எடுப்பதற்கு அவள் சம்மதிக்கவில்லை. அவள் எப்படியும் கத்தோலிக்க மதத்தை இங்கிலாந்தில் மீண்டும் நிலைநிறுத்தவேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தாள். ஆங்கிலேய மக்களுங்கூட அப்பொழுது பெரும் அளவில் பிராடஸ்டண்டு சமயத்தை ஆதரித்தனர் என்று கூறுவதற்கில்லை. அரைகுறையாகத்தான் அவர்களுடைய மனம் மாறியிருந்தது. அதனுல், மேரி இராணியாருக்கும் கத்தோலிக்கர்களது ஆதரவு முழுவதுமாக இருந்தது. இச் சமயத்தில் மேரிக்கும், அப்பொழுது கத்தோலிக்க மதக் காவலனுக இருந்த ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த வல்லரசன் இரண்டாவது பிலிப்புக்கும் திருமணம் நடந்தது. எப்படியும் இங்கிலாந்தைக் கத்தோலிக்கப் பிடியிலேயே நிறுத்தவேண்டும் என்றும், பிராடஸ்டண்டு ஆதரவாளர்களை

ஒடுக்கவேண்டும் என்றும் அவர்கள் திட்டம் தீட்டினர். மேலும், இரண்டாவது பிலிப் இங்கிலாந்து நாட்டின் மன்னனுக எப்படியும் வந்துவிடவேண்டும் என்று விரும்பினர். ஆனால், ஆங்கிலேய மக்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அடுத்தபடியாக, மேரி கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தவர்களையும் பிராடஸ்டண்டு ஆதரவாளர்களையும் பல கொடுமைகளுக்குள்ளாக்கினள். அவள் சிறிதும் மனம் தளராமலும், இரக்கம் காட்டாமலும் பிராடஸ்டண்டுகளைச் சித்திரவதைச் செய்துவந்தாள். இப்படியாக, அவள் பலரின் உயிரைக் குடித்துப் பழிதீர்த்துக்கொண்டாள். இந்த வெறிச் செயலால் அதிருப்தி அடைந்த மக்கள், அவளை இரத்த வெறிப் பிடித்த மேரி என்று அழைத்தனர். அவள் சுமார் இருநூற்று எழுபத்தேழு பிராடஸ்டண்டுகளைத் தூக்குமேடைக்கு அனுப் பினள். மத குருமார்களான கிரேன்மர், லேட்டிமர், ரிட்லி ஆகியோரை ஆக்ஸ்ஃபோர்ட் நகரத்தில் உயிருடன் எரித்தாள். இவ்விதமான கொடுமைகளையும், வன்முறைகளையும் கண்டாவது, பிராடஸ்டண்டு சமயத்தினர் எச்சரிக்கையுடனும், மேலும் அவர்கள் சமயத்தைப் பரப்பாமலும் இருப்பர் என்று நம்பினள். ஆனால், இந்தக் கொடிய பழிக்குப் பழி இரத்த வெறியாகவும் மத வெறியாகவும்தான் நாளடைவில் மாறியது. எச்சரிக்கை யைப் புறக்கணித்து, மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் பிராடஸ்டண்டு மதத்தைப் பரப்புவதற்கும், அதற்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்வதற்குங்கூடத் தயாராக இருந்தனர். கிரேன்மர், லேட்டிமர், ரிட்லி ஆகியோரின் சாம்பலிலிருந்து பல ஆயிரக்கணக்கான தியாகிகள் வீறுகொண்டு எழுந்தனர். அவர்களுடைய தியாக உணர்ச்சி அரைகுறையாகக் குழம்பிக் கொண்டிருந்தவர்களையுங்கூட மாற்றிப் பிராடஸ்டண்டு சமயத் தையே தழுவச் செய்தது.

மேரியின் ஆட்சி சமயவெறியின் சின்னமாக விளங்கியது. மக்களிடையே பழிவாங்கும் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. இதனுடைய விளைவுகள் அடுத்த ஆட்சியில் காணப்பெற்றன. எலிசெபத் இராணியார் பட்டத்திற்கு வந்தவுடன் முதலில் கத்தோலிக்க மதவெறியர்களை வெகு சாதுர்யமாக அடக்கி விட்டதுமின்றிப் பல வழிகளிலும் அவர்களுக்குத் தண்டனை அளித்தாள். மேரி காலத்தில் ஏற்பட்ட அவ்வளவு வன்முறைகள் காணப்படவில்லை எனினும், இங்கிலாந்தில் நிரந்தரமாகப் பிராடஸ்டண்டு சமயம் நிலைநிறுத்தப்பெற்றது. அச் சாதனையைப் புரிந்த பெருமை எலிசெபத் அரசியாரைச்சாரும். மீண்டும் எட்டாவது ஹென்றி காலத்தில் இயற்றப்பெற்ற பல சட்டங்களைப்

புதுப்பித்தாள். இங்கிலாந்து நாட்டு அரசியே சமயத்திற்குங் கூடத் 'தலைவர்' என்று பறைசாற்றப்பெற்றது. எல்லாக் கோயில் களிலும் பிராடஸ்டண்டு பிரார்த்தனை புத்தகம் கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டும் என்று கூறினாள். பிராடஸ்டண்டு வழிபாடுகளுக்கு எல்லா ஆங்கிலேய மக்களும் கட்டுப்பட்டே நடக்கவேண்டும் என்று உத்தரவிட்டாள். இவற்றை மீறினால் அபராதமும், சிறைத்தண்டனையும் கொடுப்பதாக அறிவித்தாள். இச் சட்டங்களை மீறிய பல கத்தோலிக்க மத குருமார்களுக்குச் சிறைத்தண்டனையோ, அல்லது மரண தண்டனையோ அளிக்கப் பெற்றது. ஸ்பெயின் நாட்டு மன்னர் இரண்டாவது பிலிப் இங்கிலாந்தில் நிகழும் சமயச் சீர்திருத்தங்களையும், கத்தோலிக்க எதிர்ப்பு வளர்ச்சியையும் கண்டு மனம் கொதித்தார். அதனால், இங்கிலாந்து நாட்டை அடிமைப்படுத்த மிகப் பிரம்மாண்டமான கப்பற் படையை (ஸ்பானிய ஆர்மடாவை) அனுப்பிவைத்தார். வெற்றி உறுதி என்று இறுமாப்புடன் இருந்த பிலிப் மன்னன், தன்னுடைய ஆர்மடா தூள் தூளாகச் சிதறியது என்று கேட்டு மிக்க அதிர்ச்சி அடைந்தார். ஸ்பெயின் நாட்டிற்குச் சொந்தமான அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலிருந்து ஏராளமாகக் கொண்டு வரப்படும் தங்கம், வெள்ளி ஆகிய விலையுயர்ந்த பொருள்களை எலிசெபத் அரசியின் கையாட்களும், மற்றும் அவளுடைய ஆதரவில் கொள்ளைக்காரர்களும் ஓயாது கொள்ளையடித்துக் கொண்டும், மற்றும் பல இன்னல்களையும் இழைத்துக் கொண்டிருந்தனர். பிராடஸ்டண்டு சமயம் தேசியச் சமயமாக ஆங்கிலேய மக்கள் பின்பற்றுவதற்கு எலிசெபத் அரசியே காரணமாக இருந்தாள்.

கத்தோலிக்கர்களின் எதிர்ச் சீர்திருத்த இயக்கம்

16ஆவது நூற்றாண்டில் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளில் லூதரின் கொள்கைகள் பரவிவிட்டன. கத்தோலிக்கச் சமயமும், போப்பின் தலைமைப் பீடமும் ஆட்டங்கண்டன. இங்கிலாந்தில் கத்தோலிக்கத் தொடர்பு அறுந்துவிட்டது. ஜெர்மனியின் வடப் பகுதியில் லூதரின் சமயம் வேரூன்றிவிட்டது. ஃபிரான்சில் ஹியுகோனேட்கள் என்ற பெயரில் பிராடஸ்டண்டு சமயத்தைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டனர். சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், நார்வே ஆகிய நாடுகளில் பிராடஸ்டண்டு சமயம் பெரும் பான்மையோரைக் கவர்ந்துவிட்டது. கத்தோலிக்கப் போப்புகள் இதுவரையிலும் அரசியல் சூதாட்டத்திலும், கலை வளர்ச்சியிலும் ஈடுபட்டிருந்ததாலும், அவர்களுக்கு மற்ற நாடுகளில் ஏற்படுகின்ற கொந்தளிப்புகளையும், சமயப் புரட்சிகளையும் சரியானபடி மதிப்பிட முடியவில்லை. பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய

மக்களின் ஒரே சமயமாகத் தனிச் சிறப்பும், ஆதிக்கமும் பெற்றிருந்த கத்தோலிக்க அமைப்பு இவ்வளவு விரைவில் சீர்குலைந்துவிடும் என்று மத குருமார்கள் நினைக்கவில்லை. நினைக்கும்படியான சந்தர்ப்பமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. கத்தோலிக்க அமைப்பிலே பல ஊழல்களும், சிற்றின்ப உணர்ச்சிகளும் மலிந்துகிடந்த காலத்திலே, அந்த அமைப்பிலே சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும்; நிறுவனத்தை உண்மையிலேயே கடவுள் பக்தியைப் பரப்பும் நல்ல அமைப்பாக மாற்ற வேண்டும் என்ற பல நாட்டு மக்களின் கூக்குரலை மதிக்காதக் காரணத்தினால்தான் புதிய கிளைகள் தோன்றிவிட்டன என்பது கண்கூடு. போப் ஏழாவது கிளமெண்டுக்கும் பேரரசன் ஐந்தாவது சார்லசுக்கும் நல்லவிதமான நட்பு இல்லை. இருவரும் ஒருவரை ஒருவர் சந்தேகித்தனர். அதனால், அரசியல் காரணங்களுக்காக, ஐந்தாவது சார்லஸ் பேரரசனுக்கு எதிராகக் கிளம்பியிருந்த பல ஜெர்மானியச் சிற்றரசர்களைத் தட்டிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால், பல ஜெர்மானியச் சிற்றரசர்கள் லூதரின் ஆதரவாளர்களாக இருந்தபோதிலுங்கூட, போப் இவர்களின் நட்பைப்பெறத் தயங்கவில்லை. இந்த நிலையில் ஜெர்மனியில் முதன்முதலில் ஏற்பட்ட பிராடஸ்டண்டு சமய இயக்கத்தை அவர் முழு மனத்துடன் ஒடுக்கவேண்டும் என்ற எண்ணம் கொள்ளாமலிருந்தார். இச் சூழ்நிலை பிராடஸ்டண்டு சமயம் எங்கும் பரவ ஆதரவாக இருந்தது.

ஆனால், பதினாறாவது நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் போப்புகளுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. பிராடஸ்டண்டு சமயம் பரவும் இவ்வேகத்தைத் தடுக்காவிடின், அவர்களுடைய சமயம் அறவே மறைந்துவிடும்நிலை ஏற்படும் என்று உண்மையில் கருதினர். அதனால்தான், அவர்கள் முதலிலேயே செய்யத் தவறிய சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்றனர். பிராடஸ்டண்டு சமயம் மேலும் ஐரோப்பாவில் பரவாது இருக்கவேண்டுமெனில் முதலில் கத்தோலிக்கத் திருச்சபையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்று உணர்ந்தனர்.

டிரன்ட் கவுன்சில் (Trent Council)

டிரன்ட் என்ற இடத்தில் 1545-ல் போப் ஒரு கத்தோலிக்க மாநாட்டைக் கூட்டினார். பல நாடுகளிலிருந்தும் போப்பின் பிரதிநிதிகளும், மத குருமார்களும், மற்றும் பல பிரமுகர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். பேரரசர் ஐந்தாவது சார்லசும் வந்திருந்தார். பிராடஸ்டண்டுகளுக்கும் அழைப்பு விடப்பெற்றது. பிராடஸ்டண்டுகளுக்கும், கத்தோலிக்கர்களுக்கும்

இடையே ஏற்பட்டிருந்த பலவிதமான கருத்து வேறுபாடுகளையும் களைந்து ஏதாவது சமரசத்திற்கு வரவேண்டும் என்று போரரசர் நம்பினார். ஆனால், பிராடஸ்டண்டுகளுக்கு ஏதாவது அபாயம் ஏற்படுமோ என்ற சந்தேகம் எழுந்ததால், அவர்களில் யாரும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. தொடக்கக் கூட்டத்தில் பல பிரச்சினைகளை விவாதித்தனர். ஆனால், அவர்களுடைய விவாதங்களில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. அதனால், மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. அப்பொழுது தொடங்கப்பெற்ற பல சமய விவாதங்கள் இருபது ஆண்டுகளுக்குப் பிறகுதான் முடிவுபெற்றன. எதிர்பார்த்தபடி இம் மாநாட்டில் பிராடஸ்டண்டுகளின் சமயக் கிளர்ச்சி பலமாகக் கண்டிக்கப்பட்டது. ஏற்கனவே கத்தோலிக்கர்களால் பின்பற்றப்பட்ட சமயக் கொள்கைகளையே பின்பற்றவேண்டும் என்று முடிவு செய்தனர். போப்பைச் சமயத் தலைவர் என்று தொடர்ந்து மதிப்பதென்றும், ஏழு புனிதச் சடங்குகளைப் பின்பற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட விவிலிய நூலை வல்கேட்டைக் (Vulgate) கத்தோலிக்கர்களின் ஆதாரபூர்வமான சமய மறை என்று உறுதி செய்யப்பெற்றது. இந் நூலில் காணப்படுகின்ற கருத்துகளே, கத்தோலிக்கர்களது ஏகோபித்தக் கருத்துகளாகும். அவைகளினின்று எந்தவிதமான மாறுதலும் ஏற்படக்கூடாது என்று கருதினர். மேலும், போப்பினுடைய பிரதிநிதிகளும், மற்ற அதிகாரிகளும் கத்தோலிக்கர்கள் படிக்கக்கூடாத ஒரு புத்தகப் பட்டியலைத் தயாரிக்கவேண்டும் என்று முடிவு செய்தனர். மீறி அப் புத்தகங்களைப் படிப்பவர்கள் கத்தோலிக்கச் சமய விரோதிகள் என்று குற்றம் சாட்டப்பெற்று அவர்களுக்குப் பல தண்டனைகளை விதிக்கவும் திட்டம் வகுத்தனர். இவ்வித மான நடவடிக்கைகளால் சமய விரோதமான நூல்கள் மக்களிடையே பரவ முடியாமல் போய்விடும் என்றும், அதனால் மக்களுடைய மனமாற்றமும் தடைபடும் என்று கருதப்பெற்றது. இவற்றைத் தவிர, கத்தோலிக்க அமைப்பிலே நல்ல சீர்திருத் தங்களும் கொண்டுவரப்பெற்றன. மத குருமார்கள் ஒழுக்கமான வாழ்க்கையைப் பின்பற்றவேண்டும் என்றும், அவர்களது முதற் கடமை பக்திமார்க்கத்தைப் பரப்புவதே தவிர, மற்றபடி உல்லாச வாழ்க்கையிலும் கேளிக்கைகளிலும் மனம் நாடவிடாத படி, மிகச் சீரிய அறநெறிக் கொள்கைகளைப் பின்பற்றவேண்டும் என்றும் வற்புறுத்தப்பெற்றது. அதனால், நல்ல ஒழுக்கம் உடையவர்களையே குருமார்கள் பதவியை வகிக்கத் தகுதி யுடையவர்களாக்கவேண்டும் என்றும், ஒழுக்கம் கெட்டவர்களை யெல்லாம் திருச்சபையிலிருந்து விலக்கிவிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. பொதுவாக மத குருமார்கள் மக்களுக்கு நல்ல

வழிகாட்டிகளாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினர். கத்தோலிக்கச் சமய இயக்கம் நீடித்து மக்கள் மனத்தை மாற்றாது இருப்பதற்கு இச் சீர்திருத்தம் பெரிதும் உதவியது. ஏனெனில், திருச்சபைகளிலுள்ள மத குருமார்களின் வாழ்க்கையை அடிக்கடி கவனிக்கும் சந்தர்ப்பங்கள் அப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஏற்படுகின்றன. அப்பொழுதெல்லாம் அவர்கள் தூய்மையாகவும் மக்களுக்கு நல்ல வழிகாட்டிகளாகவும் இருப்பார்களேயானால் அவர்கள் நன்கு மதிக்கப்படுவர். அதனால், அவர்கள்மீது மக்களுக்கு நல்ல நம்பிக்கை ஏற்படும் என்று கருதினர்.

ஜெஸ்யூட்டுகள் சபை (The Jesuit Order)

கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருந்த இயக்கம் ஜெஸ்யூட்டுகளின் சபையேயாகும். இச் சபையை நிறுவியவர், ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த இக்நேஷியஸ் லயோலா என்பவராவர். இவர் தொடக்கத்தில் ஒரு சாதாரணப் போர் வீரனாகப் பணியாற்றியவர். ஐந்தாம் சார்லஸ் பேரரசனுடைய படையில் சேர்ந்து போரிடும்பொழுது அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டதால் மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லப் பட்டார். பல மாதங்கள் படுக்கையிலேயே இருக்கவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. அப்பொழுது அவர் பொழுது போக்கிற்காகப் பல மகான்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களது சாதனைகளையும் படிக்க வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களுடைய பெரும் சாதனைகளைக் கண்டு அவர் பெரிதும் வியந்தார். அவர்களைப் போலவே, தாமும் ஏதாவது சிறப்பான காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்ற பேரார்வம் கொண்டார். சிறப்பாகக் கத்தோலிக்கச் சமயத்தைப் பாதுகாக்கவேண்டும் என்றும், அதற்காக அவர் எவ்வித மான கடின உழைப்பையும் செய்வதென்றும் உறுதிபூண்டார். அதனால், காயங்கள் ஆறிய உடன் ஒரு துறவியாக ஜெருசலெம் நகரத்திற்கு யாத்திரை கிளம்பினர். அவர் நன்கு படித்த மேதையல்ல. அவர் இந்தப் பணியில் ஈடுபட்டபொழுது படிப்பின் அவசியத்தை உணர்ந்தார். ஏற்கனவே முப்பத்து மூன்று ஆண்டுகள் கடந்த முதியோர் எனினும், மற்றக் கல்வி கற்கும் சிறுவர்களுடன் தானும் உட்கார்ந்து கல்வி கற்றுக் கொண்டார். பின்பு ஸ்பெயின் பல்கலைக் கழகத்திலும், பேரிஸ் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து சிறப்பாகச் சமயத்தைச் சார்ந்த பெரும் படிப்பைப் பெற்றார். பேரிஸ் பல்கலைக் கழகத்தில் படிக்கும் பொழுதுதான் அவர் மாணவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு பாலஸ்தீனத்திற்குச் செல்வது என்று முடிவு செய்தார். வெனிஸ் நகரத்திற்கு வந்திருந்தபொழுது துருக்கிக்கும் வெனிஸ் குடியர

சிற்கும் போர் நிகழ்ந்து கொண்டிருந்ததால் பாலஸ்தீனப் பயணத்தை ஒத்திவைத்தார். பின்பு ரோம் நகருக்குச் சென்று ஜெஸ்யூட்டுகள் சபை ஒன்றைத் தோற்றுவித்தார். போப்பினுடைய சம்மதத்தையும் பெற்றார். இக்நேஷியஸ் லயோலா போர் வீரராகப் பணியாற்றியதால், இராணுவ ஒழுக்கமும், கீழ்ப்படிதல் தன்மையும் ஆகிய குணங்களை அவர் வெகுவாகப் போற்றி வந்தார். அதனால், அவருடைய சபையில் சேர்ந்தவர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும், கீழ்ப்படிந்து நடப்பவர்களாகவும், போப்பின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருக்கப் பல கடுமையான விதிகளையும் அச் சபையினருக்கு விதித்திருந்தார். இச் சபையைச் சார்ந்தவர்கள் தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்கின்றவர்களாகவும், பக்திமான்களாகவும், எளிய வாழ்க்கையைப் பின்பற்றுகின்றவர்களாகவும் இருக்கவேண்டுமென்று பல கட்டுப்பாடுகளை விதித்தார். நல்ல ஒழுக்கத்தை உடையவர்கள்தான் மற்றவர்களிடம் கடவுள் பக்தியையும் சமயக் கொள்கைகளையும் பரப்ப முடியும் என்று அவர் நம்பினர். சமயக் கொள்கைகளைப் பரப்புவதோடு நில்லாது, அவர் மக்களிடையே கல்வி அறிவைப் போதித்தும், நோய்வாய்ப் பட்ட மக்களுக்கு வைத்திய சிகிச்சையும் அளித்துப் பலவிதங்களில், அவர் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றார். அவர் நிறுவிய பள்ளிகளில், பிராடஸ்டண்டுகள்கூட, அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க அனுப்பினர் என்றால் அவருடைய திறமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ! இக்நேஷியஸ் லயோலா இறக்கும்பொழுது சுமார் ஆயிரம் அங்கத்தினர்கள் இச் சபையில் சேர்ந்திருந்தனர். அவருக்குப் பின்பு, பன்மடங்கு இச் சபையின் அங்கத்தினர்கள் எண்ணிக்கை அதிகமாகியது. அவர்கள் கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்பும் நோக்கம் கொண்டு உலகிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் சென்றனர். அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் அவர்கள் எண்ணற்ற நிறுவனங்களைத் தோற்றுவித்து, திறமை மிக்க சேவை செய்துள்ளனர்.

இவர்களுடைய சலியாத உழைப்பும் நல்ல வாழ்க்கையும் இச் சபைக்குப் பெருமை தேடித்தந்தன. பிரான்சிஸ் சேவியர் என்ற இச் சபையைச் சேர்ந்தவர், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்பினர். இச் சபையின் தீவிரமான பிரச்சாரத்தால் ஐரோப்பாவிலுங்கூட, வியக்கத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. தெற்கு ஜெர்மனியிலும், ஆஸ்டிரியாவிலும் பிராடஸ்டண்டு சமயம் பரவாது செய்தனர். மேலும், அப் பகுதிகளில் ஆண்ட அரசர்களுக்கும், அவர்கள் ஆலோசகர்களாகவும் பணியாற்றினர் என்பது குறிப்பிடத் தக்கது.

பிராடஸ்டண்டுகளுக்கு, இச் சபையின் ஒழுக்கமிக்கப் பிரச்சாரம் மிகவும் தடையாக இருந்தது என்பதைக் காணலாம். ஒரளவிற்குப் பதினருவது நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் பிராடஸ்டண்டு சமயத்தில் அதிக அளவில் ஆட்கள் சேராததற்கு, இச் சபையின் சமயப் பிரச்சாரமே முக்கியமான காரணமாக இருந்தது. ஜெஸ்யூட்டுகளின் அளவுக்கு மீறிய இராணுவ மயமான ஒழுக்கம் அவர்களைக் கட்டுப்பாடுடையவர்களாகச் செய்தது. மேலதிகாரிகளின் ஆணைகளை அப்படியே கண்மூடித்தனமாக நிறைவேற்றுவதைத்தான் ஜெஸ்யூட்டுகளின் ஒழுக்கம் என்று பிராடஸ்டண்டுகள் குறைகூறினர். குற்றங்களைப் புரிய அவர்களை ஏவினாலுங்கூட, அவர்கள் செய்யத் தயாராக இருந்தனர் என்று, பிரச்சாரம் செய்யத் தயாராக இருந்தனர். அதனால், இச் சபையைக் கண்டு அவர்கள் மிகவும் அஞ்சினர் என்பது வெளிப்படையாகும். கத்தோலிக்கச் சமயம் அப்படியே ஒருசில ஐரோப்பிய நாடுகளில் நிலைத்திருந்ததற்கு இச் சபையே காரணமாகும்.

மேலும், சமய நீதிமன்றங்களை (Inquisition) எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் கத்தோலிக்கர் நிறுவினர். ஏற்கனவே, இந் நீதிமன்றங்கள் பணியாற்றி வந்திருக்கின்றன. கத்தோலிக்கச் சமயத்திற்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்கின்றவர்களுக்கும், அல்லது அவர்களது திருச்சபையைக் குறைகூறுகின்றவர்களுக்கும் இந் நீதிமன்றங்களில் தண்டனை அளிக்கப்பெறும். அவர்கள்மீதுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் மிகக் கொடிய தண்டனைகளையும் அளிக்க இந் நீதிமன்றங்கள் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யும். உயிருடன் புதைப்பது, சித்திரவதை செய்வது, நாடு கடத்தல் செய்வது, சிறைத்தண்டனை தருவது போன்ற பல கொடிய தண்டனைகளைச் சிபாரிசு செய்தன. ஸ்பெயின் நாட்டில் இவ்விதமான நீதிமன்றங்கள் அதிக அளவில் நிறுவப்பெற்றன. இரண்டாவது பிலிப் காலத்தில் இந் நீதிமன்றங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்பெற்றன. அவ்விதமாகவே அதிக அதிகாரம்பெற்ற சமய நீதிமன்றங்கள் ஐரோப்பாவில் உள்ள பெருபான்மையான நாடுகளில் நிறுவப்பெற்றன. இந்த நீதிமன்றங்களின் கொடுமைகள் அளவுக்குமீறி இருந்தன. இவைகளைக் கண்டாலே மக்கள் பயந்து நடுங்கினர். நாளடைவில் குற்றங்களை விசாரிக்காமலேயே தண்டனைகளையும் விதித்து வந்தனர். கொடுமையின் சிகரமென்று விளங்கிய இச் சமய வெறிப்பிடித்த நீதிமன்றங்கள் பயத்தின்மூலமாக மக்களைப் பிராடஸ்டண்டுகளாக்க முடியாதபடி நிறுத்தி வைத்திருந்தனர் என்பதே அவர்களுடைய அரிய சாதனையாகும்.

5. இரண்டாம் பிலிப்பும் நெதர்லாந்து கலகமும்

இரண்டாம் பிலிப் சார்லஸ் பேரரசரின் மகனுவார். சார்லஸ் இறந்தவுடன் இரண்டாவது பிலிப் ஸ்பெயின் நாட்டையும், அதனைச் சார்ந்த அமெரிக்கக் காலனிகளையும், மிலான் இராச்சியத்தையும், சிசிலிகளையும், நெதர்லாந்தையும் சொந்தமாகப் பெற்றார். அப்பொழுது ஸ்பெயின், ஐரோப்பாவில் ஒரு வல்லரசாகத் திகழ்ந்தது. தந்தையைப் போன்றே, பிலிப்பும் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவரே யெனினும் பிலிப் ஒரு சமய வெறியனாக இருந்தார். அவரது ஆதிக்கத்தின் கீழிருந்த நெதர்லாந்து நாட்டில் பிராடஸ்டண்டு சமயம் பரவி வருவதைக் கண்டு பொறுக்காது அந்த நாட்டில் பிராடஸ்டண்டு சமயத்தை யாரும் பின்பற்றக் கூடாது என்று பறைசாற்றினர். ஸ்பெயின் ஆதிக்கத்தின் கீழிருந்த நெதர்லாந்து நாட்டில் பதினேழு மாகாணங்கள் இருந்தன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியாக அரசாங்கம் நிறுவப்பட்டிருந்தது. இவைகளைத் தவிர, செல்வம் கொழிக்கும் நகரங்களாக ஆம்ஸ்டர்டாம், ராட்டர்டாம், கெண்ட், பிரசல்ஸ், ஆண்ட்வர்ப் ஆகியவை விளங்கின. பிலிப்பின் தந்தை இந் நகரங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து வந்தார். இதனால், அவரிடம் அந்த நகர மக்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது. ஆனால், பிலிப் காலத்தில் மக்கள் எந்த விதமான நன்மைகளையும் பெறவில்லை. மேலும், அவர்களிடையே விடுதலை உணர்ச்சித் தோன்றியதால், ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இவர்களின் விடுதலை இயக்கத்தையும் பிராடஸ்டண்டு சமயப் பற்றுதலையும் அடியோடு அடக்கவேண்டும் என்பதற்காக அங்கே பல சமய நீதிமன்றங்களை (Inquisition Courts) நிறுவினர். அந்த நீதிமன்றங்கள் கொடுமைகளை இழைப்பதில் நிகரில்லாமல் திகழ்ந்தன. உயிருடன் புதைத்தல், உயிருடன் எரித்தல், தூக்கிலிடுதல், கை கால்களை வெட்டுதல் ஆகிய பல கொடிய சித்திரவதைகள் புரிவதில் அந்த நீதிமன்றங்கள் சளைப்ப

தில்லை. இங்கே வழக்குகள் அனுப்பப்பட்டனவென்றால் மக்கள் கதிகலங்கினர்கள். இதனால் மட்டும் மக்கள் பயந்து பிராடஸ்டண்டு சமயத்தைப் பின்பற்ற மாட்டார்கள் என்று நினைத்தார். இருப்பினும் இவருடைய கொடிய ஆட்சியைக் கண்டித்து ஆங்காங்கு கிளர்ச்சிகள் நிகழ்ந்தன. 1566-ல் ஐந்நூறு நெதர்லாந்து பிரபுக்கள் ஒன்றுகூடி பிலிப்பின் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சியை அடக்குவதற்குக் கொடுமையின் சிகரமான ஆல்வா என்பவரை அங்கே பிலிப் அனுப்பிவைத்தார். ஆல்வாவின் ஆர்ப்பாட்டங்கள் மிகவும் பயங்கரமானவை. அவரது ஆட்சியில் நிம்மதியாக வாழ முடியாதென்று பலர் உயிருக்குப் பயந்து ஓடி விட்டனர். விடுதலை இயக்கத்தில் சேர்ந்தவர்களையும் பிராடஸ் டண்டு சமயத்தில் சேர்ந்தவர்களையும் ஆயிரக்கணக்கில் தூக்கு மேடைக்கு அனுப்பிவைத்தார். (1567-1573) முதல் அவர் புரிந்த கொடிய ஆட்சிக்கு "இரத்த வெறி ஆட்சி" என்று மக்கள் பெயரிட் டனர். அப்பொழுது மக்களின் குரலை எடுத்துக் கூறுவதற்கு யாரும் முன் வர அஞ்சினர். அச் சமயத்தில்தான் ஆரஞ்சுக் கோமகன் வில்லியம் (William the Silent) என்பவர் நெதர்லாந்து மக்களை யெல்லாம் ஒன்று திரட்டினார். எப்படியும் அந்நிய ஆட்சியை நெதர் லாந்திலிருந்து விரட்டுவதென்று அவர்கள் உறுதிபூண்டனர். சுதந்தரம்பெற நேரிடையாகப் போர் செய்வதுதான் சரியான வழி என்று அவர் கருதினர். அவருடைய சுதந்தரக் கிளர்ச்சிக்கு ஹாலந்து பகுதியைச் சார்ந்த வடக்கு மாகாணங்கள் அதிக ஆதரவை அளித்தன. தெற்கு மாகாணங்களிலிருந்த கத்தோலிக் கர்கள் இக் கிளர்ச்சிக்கு அதிக ஆதரவு தரவில்லை. வில்லியம் சைலண்ட் பல தொண்டர்களின் உதவியால் ஒரு சிறிய படையைத்தான் அமைக்க முடிந்தது. இச் சிறு படை கொண்டு திறமை மிக்க ஸ்பெயின் படை வீரர்களைத் தோற்கடிக்க முடிய வில்லை. வில்லியம் தோல்வியைத்தான் அடுத்தடுத்துப் பெற்றாரே தவிர, வெற்றியைக் காண முடியவில்லை. இருப்பினும், நெதர் லாந்தின் சுதந்தரப் போராட்டத்தை அவர் தொடர்ந்து நடத்தினர். அதனால், ஆல்வாவின் அடக்குமுறை ஆட்சி இன்னும் அதிகரித்தது. ஆல்வாவின் கொடிய ஆட்சியைக் கண்டு பிலிப் மன்னரே காணச் சகியாது, அவரைத் திரும்ப அழைத்துக் கொண் டார். ஆல்வாவிற்குப் பிறகு தளபதியாக வந்தவர் விரைவில் இறந்து விடவே, தலைவர் இல்லாத படைவீரர்கள் கட்டுப்பாடற்ற நிலையில் மக்களைக் கொன்று குவித்தும், அவர்களது சொத்து களைச் சூறையாடியும் நகரங்களை அழித்தும் பலவிதமான அட்டகாசங்களைப் புரிந்துவிட்டனர். ஆண்ட்வர்ப் என்ற அழகிய நகரம் தீக்கிரையாகிச் சாம்பலாகிவிட்டது. இக் கொடுமைகளைக் கண்ட நெதர்லாந்திலுள்ள எல்லா மாகாணங்களும் ஒன்று சேர்ந்து

அந்நிய ஆட்சியை விரட்டுவது என்று முடிவு செய்தனர். 1579-ல் நெதர்லாந்திலுள்ள ஏழு மாகாணங்கள் 'யூட்ரக்ட் யூனியன்' என்ற ஒரு கூட்டணியை அமைத்துக்கொண்டனர். இக் கூட்டணியில் சேர்ந்த மாகாணங்கள் ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்பானியர்களது ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்தர நாடென்று அறிவித்தனர். இக் கிளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்த வில்லியம் சைலண்டை எப்படியும் பிடித்துவிடவேண்டும் என்று பிலிப் அரும்பாடுபட்டார். பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நிறையப் பணம் தருவதாகப் பறைசாற்றப்பெற்றது. நெதர்லாந்தின் ஐக்கிய மாகாணங்களுக்கு வில்லியம் கவர்னராக நியமனம் செய்யப்பெற்றது; மேலும், பிலிப்பின் கோபத்தைக் கிளறியது. 1587-ல் அவருடைய வீட்டிலேயே வில்லியம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிறகு ஹாலந்து மக்களுக்கு இங்கிலாந்து அரசியார் எலிசபெத் படைகளை அனுப்பி உதவினர். இதனால் பிலிப் ஆத்திரமடைந்து இங்கிலாந்தின்மீது படையெடுத்தார். அவர் அனுப்பிய "ஆர்மடா" என்ற கப்பற்படை சிதறுண்டது. இங்கிலாந்து கடற்கொள்ளைக் காரர்களே இந்த மாபெரும் ஆர்மடாவைச் சீர்குலைத்ததால் பிலிப்பின் கோபம் இன்னும் அதிகமாகியது.

அரசியல் காரணங்களுக்காகத்தான் கத்தோலிக்கச் சமயத்தை அவருடைய குடிமக்கள் பின்பற்றவேண்டும் என்றும், அதனால் அவர்களிடையே ஒருமைப்பாடு நிலவும் என்று சார்லஸ் பேரரசர் கருதினர். ஆனால், பிலிப்போ, எந்த நாடும் குறிப்பாக அவருடைய நாட்டைச் சார்ந்த மக்கள் கத்தோலிக்கச் சமயத்தைத் தவிர, வேறு எந்தச் சமயத்தையும் பின்பற்றக்கூடாது என்று ஒரே பிடிவாத மானக் கொள்கையை மேற்கொண்டார். அதனால், அரசியலுங் கூட அவர் சமயவெறிக் கொள்கைக்கு அடிமையாகிவிட்டது. பிராடஸ்டண்டு சமயம் ஐரோப்பிய நாடுகளில் பெரும் அளவில் பரவி வருவதை அவரால் தடுக்க முடியவில்லை. இருப்பினும், பிராடஸ்டண்டு நாடுகளுக்குத் தாயகமாக விளங்கிய இங்கிலாந்து நாட்டின்மீது அவர் போர் தொடுத்தார். அப்பொழுது இங்கிலாந்து நாட்டை ஆட்சி செய்து வந்த எலிசெபத் அரசியார்மீது பிலிப்பிற்கு அளவற்ற கோபம் ஏற்பட்டிருந்தது. அதனால் மிகவும் பாடுபட்டு "ஆர்மடா" என்ற கடற்படையை அமைத்து அதை இங்கிலாந்தின்மீது செலுத்தினர். துரதிர்ஷ்டவசமாகப் பெரும் சூருவளிக் காற்றாலும் இங்கிலாந்தின் பெரும் கடற்கொள்ளைக் காரர்களாலும் "ஆர்மடா படை" சின்னபின்னமாகியது. இதைக் கண்டு, அவர் மனம் பொருமினர்.

ஃபிரான்சில் ஹ்யூகனோட்டுகளின் போர்

பதினாறாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் ஃபிரெஞ்சு நாட்டில் கத்தோலிக்கர்களுக்கும், பிராடஸ்டண்டுகளுக்கும் தொடர்ந்து சமய அடிப்படையில் போர்கள் நிகழ்ந்தவண்ணமிருந்தன. இங்கிலாந்தில் எப்படிப் பிராடஸ்டண்டு சமயம் பரவியதோ அதைப் போன்றே, ஃபிரான்ஸ் நாட்டிலும் இந்த மதம் பரவியது. லூதர் சமயச் சீர்திருத்தங்களைப் பிரச்சாரம் செய்யும் முன்னரே லெவரே என்பவர் விவிலிய நூலைப் ஃபிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார். லூதரின் கொள்கையான "நம்பிக்கை" முதலில் ஃபிரெஞ்சு மக்களிடையே பரப்பப்பெற்றது. அதனால் ஃபிரான்சிலுள்ள சமயப் பள்ளிகள் கவலையுற்றன. அப்பொழுது அரசனாக இருந்த முதலாம் பிரான்சிஸ் என்பவரிடம் இதுபற்றி முறையிட்டனர். அவருக்கு அதிகச் சமயப்பற்று இல்லாவிடினும், ஃபிரான்சில் பிராடஸ்டண்டு பிரச்சாரம் நடைபெறுதவாறு தடை செய்தார். பல சீர்திருத்தவாதிகளுக்கும் தண்டனையளித்தார். சிலர் உயிருடன் எரிக்கப்பட்டனர். கால்வின் என்பவர் பேஸல் என்ற நகரத்திற்குத் தப்பி ஓடிவிட்டார். முதலாம் பிரான்சிஸ் அங்கிருந்தவாறே எழுதிய கடிதத்தில், பிராடஸ்டண்டுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கோரினார். ஆனால், முதலாம் பிரான்சிஸ் பிராடஸ்டண்டு சமயத்தில் பற்றுக் கொண்டிருந்த சுமார் மூவாயிரம் ஏழைக் குடியானவர்களைக் கொன்று குவித்தார். இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவரது மகன் இரண்டாம் ஹென்றி (1547–1559) பிராடஸ்டண்டுகளை நாட்டிலிருந்து விரட்டத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார். அதனால் பலர் கொடிய தண்டனைகளுக்குள்ளானார்கள். ஆனால், இரண்டாம் ஹென்றி பல அரசியல் காரணங்களுக்காக ஐந்தாம் சார்லஸ் பேரரசனுக்கு எதிராக, ஜெர்மானியப் பிராடஸ்டண்டுகளுக்கு உதவி செய்தார். ஜெர்மானியப் பிராடஸ்டண்டுகள் இதற்காக ஹென்றிக்கு ஃபிரெஞ்சு எல்லையோரமிருந்த வெர்டன், டூல் ஆகிய நகரங்களைத் தந்தனர். எதிர்பாராத விதமாக ஹென்றி கொலை செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த இரண்டாம் பிரான்சிஸ் மிகவும் இளையவராக இருந்ததால், அவருக்குப் பதிலாக அவருடைய மாமன்கள் ஆண்டு வந்தனர். இரண்டாம் பிரான்சிஸ் அரசனின் மனைவிதான் ஸ்காட்லாந்து அரசி மேரி. இரண்டாம் பிரான்சிஸ் சிறு வயதிலேயே இறந்துவிட்டதால் கைஸ் கோமகன் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார். மற்றப் பிரபுக்கள் எதிர்க்கவே, உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்தன. கத்தோலிக்கச் சமயத்தின் பேரால்தான் அடுத்த நாற்பது ஆண்டு காலம் வரையிலும் போர்கள் நிகழ்ந்தன.

புதிய அரசன் ஒன்பதாம் சார்லஸ் (1560–1574) பட்டத்திற்கு வரும்பொழுது அவருக்கு வயது பத்துதான் நிரம்பியிருந்தது. அதனால் அவனுடைய அன்னையான மெடிசி குடும்பத்தைச் சேர்ந்த காதரைன் ஆட்சியை நடத்தி வந்தாள். இக் காலத்தில் பிராடஸ்டண்டுகள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டனர். அப்பொழுது அவர்கள் ஹ்யூகனோட்டுகள் என்று அழைக்கப் பெற்றனர். அவர்களுடைய தலைவர் கோலிக்னி என்பவராவர். பெரும்பான்மையான ஹ்யூகனோட்டுகள் பிரபுக்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களாவர். தெற்குப் பகுதியிலிருந்த நெவார் இளவரசனின் ஆதரவு அவர்களுக்கு அதிகம் இருந்தது. பூர்போர்ன் வம்சாவளியைச் சார்ந்த இந்த இளவரசனுக்கு ஃபிரெஞ்சுப் பட்டத்தைப் பெறுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருந்தன. அதனால், நெவார் இளவரசர் பட்டத்திற்கு வந்தால் ஹ்யூகனோட்டுகளுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதனால் அந்த இளவரசன் பட்டத்தை அடைவதற்குச் சமயக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு பலமிக்க அரசியல் கட்சியையும் தோற்றுவித்தனர். இந்தச் சிக்கலான நிலைமையைச் சமாளிப்பதற்குக் காதரைன் 1562-ல் சமயப்பொறை பிரகடனம் ஒன்றை விடுத்தாள். இதனால் ஹ்யூகனோட்டுகள் மீதிருந்த பல தடைகள் நீக்கப்பெற்றன. அதன்படி நகரங்களுக்குத் தொலைவில் அவர்களுடைய வழிபாடுகளைப் பின் பற்ற அனுமதி தரப்பெற்றது. இச் சிறு சமய உரிமைகள் தரப்பட்டதையும் கத்தோலிக்கர்கள் எதிர்த்தனர். கைஸ் கோமகன் தலைமையில் கத்தோலிக்கர்கள் ஒன்று சேர்ந்து பிராடஸ்டண்டுகளின்மீது போர் தொடுத்தனர். கத்தோலிக்கர்களும், ஹ்யூகனோட்டுகளும் பல கொலைகளையும், பல கொடுமைகளையும் புரிய அஞ்சவில்லை. நாட்டில் ஒரே குழப்பமான நிலை ஏற்பட்டது. பிறகு 1570-ல் இரு தரப்பினரும் ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்துகொண்டனர். ஹ்யூகனோட்டுகளுக்குச் சமயச் சுதந்தரம் அளிக்கப் பெற்றது. அவர்களுக்கென்று சில நகரங்கள் தரப்பட்டன. கத்தோலிக்கர்களது தாக்குதல்கள் ஏற்படாதவண்ணம் அவர்கள் அந் நகரங்களைப் பாதுகாத்துக்கொள்ள கோட்டைக் கொத்தளங்கள் நிறுவிக்கொள்ள அனுமதி தரப்பெற்றது. சிறிது காலம் ஒன்பதாம் சார்லஸும், அவருடைய அன்னை காதரைனும் ஹ்யூகனோட்டுகளுடன் சமாதானமாக இருந்தனர். ஹ்யூகனோட்டுகளின் தலைவரான காலிக்னியும் ஒரு பிரதம அமைச்சர் போன்றே பணியாற்றி வந்தார். அவர் உண்மையிலேயே, கத்தோலிக்கர்களுடன் ஒன்று பட்டு வாழவேண்டும் என்று நினைத்தார். கத்தோலிக்கர்களும், ஹ்யூகனோட்டுகளும் தாக்கிக் கொள்வதைத் தவிர்த்து அவர்களுடைய பொது எதிரியான ஸ்பெயின் நாட்டின்மீது படை

யெடுத்து ஃபிரெஞ்சு காம்டேவைப் பிடித்துவிட வேண்டும் என்பது அவரது ஆசையாகும். ஆனால், காலிக்னியின் இத் திட்டத்தைக் கத்தோலிக்கர்கள் ஆதரிக்கவில்லை. கைஸ் கோமகன் மீண்டும் ஹ்யூகனோட்டுகளை அறவே ஒழித்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டினர். ஒரு கொலைகாரனைக் கூலிக்கு அமைத்து காலிக்னியைக் கொன்றுவிடத் தீர்மானித்தார். ஆனால், காலிக்னி காயமடைந்தாரே தவிர இறக்கவில்லை. அரச னுக்கு இந் நிகழ்ச்சி திரித்துக் கூறப்பெற்றது. நாட்டில் ஹ்யூக னோட்டுகள் அரசனைக் கவிழ்ப்பதற்காகச் சதித் திட்டம் தீட்டி வருகின்றனர் என்று பொய்யான வதந்திகளைப் பரப்பிவிட்டனர். அதனால் சமயம் கிடைக்கும்பொழுது எல்லா ஹ்யூகனோட்டுகளையும் அவர்களது தலைவரான காலிக்னியையும் கொன்றுவிட வேண்டு மென்று முடிவு செய்தனர். நவார் இளவரசனை ஹென்றியின் தங்கைக்குப் பேரிஸ் நகரத்தில் திருமணம் நடக்க இருந்தது. அதற்காக ஏராளமான ஹ்யூகனோட்டுகள் அங்கு வந்திருந்தனர். திருமண சமயத்தில் மிகவும் எதிர்பாராத விதமாகச் சுமார் இரண் டாயிரம் ஹ்யூகனோட்டுகள் மிருகத்தனமாகக் கொல்லப்பெற்றனர். இந் நிகழ்ச்சியைப் பார்த்தலோமியப் படுகொலை என்று கூறுவர். இப் படுகொலையைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது. ஹென்றி ஆப் கைஸ் (Henry of Guise) தலைமையில் கத்தோலிக் கர்கள் ஒரு புனிதச் சங்கத்தை (Holy League) அமைத்துக் கொண்டனர்.

இரண்டாவது ஹென்றியின் கடைசி மகனான மூன்றாம் ஹென்றி (1574–1589) இறந்த பிறகு ஃபிரெஞ்சுப் பட்டத்திற்கு வர வாரிசு இல்லாததால், நாட்டிலேயே பெரிய குழப்பம் ஏற்பட்டது. ஹென்றி ஆப் நவார் (Henry of Navarre) ஹ்யூகனோட் சமயத்தைச் சார்ந்தவர். அவரே பட்டத்திற்கு வர உரிமை உடையவர். ஆனால், கத்தோலிக்கர்களின் புனிதச் சங்கம் அவரைப் பட்டத்திற்கு வரக் கூடாது என்று தடை செய்தது. "ஹென்றி ஆப் கைஸ்" என்பவரே பட்டத்திற்கு வரப் பெரும் முயற்சிசெய்தார். இதனால் நாட்டில் மூன்று கோஷ்டிகள் ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண் டிருந்தனர். இந்த உள்நாட்டுப் போரை "மூன்று ஹென்றிகளின் போர்" என்று அழைத்தனர். மூன்றாவது ஹென்றியின் ஆதர வாளர்கள் "ஹென்றி ஆப் கைஸ்" என்பவரைக் கொலை செய்து விட்டனர். கத்தோலிக்கப் புனித சமயத்தைச் சார்ந்தவர்கள் மூன்றாவது ஹென்றியைப் பிடித்துப் பதிலுக்குப் பதில் கொன்று விட்டனர். அதனால் "ஹென்றி ஆப் நவார்" அரச பதவியேற்பதற்கு எவ்விதத் தடையுமில்லாது போயிற்று. அவர் 1589-ல் நான்காம் ஹென்றி என்ற பெயரில் முடிசூட்டிக்கொண்டார். அப்பொழுது

உள்நாட்டுப் போர் ஏற்பட்டதன் விளைவாக மக்கள் பல வகைகளிலும் துன்பப்பட்டிருந்தனர். மேலும், நான்காம் ஹென்றிக்கு நாட்டில் நிறைய எதிரிகள் இருந்தனர். ஃபிரான்சில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால், அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க, இவரும் கத்தோலிக்கச் சமயத்திலேயே சேர்ந்துவிட்டார். அதனால் ஹ்யூகனோட்டுகளுக்குச் சாதகமாகப் பல நன்மைகளைச் செய்தார். 1598-ல் நான்ட்ஸ் சாசனத்தை (Edicts of Nantes) ஏற்படுத்தி ஹ்யூகனோட்டுகளுக்குச் சமய சுதந்தரத்தை அளித்தார். அவர்கள் அப்பொழுதிலிருந்து அவர்களுடைய விருப்பப்படி வழிபாடுகளை நடத்திவந்தனர். மேலும், அவர்கள் அரசியலில் பங்குகொள்ள முடியாதபடி இருந்த பல தடைகளையும் அகற்றிவிட்டார். அதனால், ஹ்யூகனோட்டுகள் அரசனுக்கு மிகவும் கட்டுப்பட்டு இருந்தனர். மேலும், அவர்கள் தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டு, நாட்டின் செழிப்பையும் வளர்ச்சியுறச் செய்தனர். ஹென்றியின் அமைச்சரான ஸல்லி (Sulley) என்பவர் நாட்டின் சீரமைப்பு வேலைகளையும், நாட்டின் அரசாங்கம் பட்டிருந்த கடன்களை அடைப்பதிலும் நல்ல பணியாற்றி வந்தார். ஆனால், 1610-ல் அரசன் கொலை செய்யப்பட்டதால் ஸல்லியும் தன் பதவியை விட்டு விலகிவிட்டார். ஹென்றியின் கொலைக்குப் பிறகு, அவருடைய மகன் பதின்மூன்றாம் லூயி பட்டத்திற்கு வந்தார். அவன் சிறு குழந்தையாக இருந்ததால், ஹென்றியின் மனைவியே ஆட்சியை நடத்திவந்தார். ஹென்றியின் மனைவி மேரி தே மெடிசி (Marie de Medici) என்பவர் தம் கணவரை நன்கு நடத்தப்படவில்லை. அவருக்கும் மேரிக்கும் நிறைய கருத்து வேற்றுமைகள் இருந்தன. அதனால் தம் கணவன் கொண்டிருந்த கொள்கைகளை மேரி மாற்றி அமைத்துவிட்டாள்.

இதுவரையிலும் ஸ்பெயினுக்கும் ஃபிரான்சிற்கும் நல்ல உறவு இருந்ததில்லை. ஆனால், மேரி ஸ்பெயினுடன் நல்லுறவு கொள்ள வேண்டுமென்று விரும்பினாள். இந்தக் கொள்கையை எதிர்த்துச் சில ஃபிரெஞ்சுக்காரர்கள் கலகம் செய்தனர். ஆனால், சிறிதும் இரக்கம் காட்டாமல், அக் கலகங்களை மேரி ஒடுக்கினாள். ஸ்பெயின் இளவரசி ஆனுக்கும் பதின்மூன்றாம் லூயி இளவரசனுக்கும் திருமண நிச்சயம் ஏற்பட்டது. அப்பொழுது லூயிக்குப் பதினொரு வயதுதான் நிரம்பியிருந்தது. அதைப்போன்றே, நான்காம் பிலிப் என்ற ஸ்பானிய இளவரசனுக்கும் ஃபிரெஞ்சு இளவரசி எலிசெபத்துக்கும் திருமண நிச்சயமேற்பட்டது. இவைகளை எதிர்த்து நாட்டில் பல கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஃபிரெஞ்ச் பாராளுமன்றமான "ஸ்டேட்ஸ் ஜெனரல்" (States General) 1614-ல்

கூட்டப்பெற்றது. ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு கடைசியாகக் கூட்டப்பெற்ற பிரதிநிதிகள் சபைக் கூட்டம் இதுவேயாகும். இச் சபை கூட்டப்பெற்றதே தவிர, வேறு எந்த முக்கியமான முடிவையும் செய்யவில்லை.

1624-ல் கார்டினல் ரிச்சல்யூ என்பவர் அரசரின் ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டார். அதற்குப் பின்பு, அவர் படிப்படியாக உயர்ந்து பிரதம அமைச்சரானார். அவர் இறக்கும் வரையிலும் பிரதம அமைச்சராகவே பணியாற்றினார். ஃபிரான்சின் அப்போதைய வரலாறு அவரைப் பின்னியே இருந்தது. அவர் தீவிர கத்தோலிக்க மத குருவாக இருந்தபோதிலும் அரசியலில் நுட்பமான அறிவும், நல்ல அனுபவமும் பெற்றிருந்தார். அவரைப் போப்பாண்டவர்கூட வெறுத்தார். ஃபிரான்சின் அரசியலையும், அந்தஸ்தையும் மதக் கொள்கைகளுக்கு அடிமையாக்க அவர் விரும்பவில்லை. அதனால், சில தீவிர கத்தோலிக்கர்கள், அவரை "ஹுகனோட்டுகளின் போப்" என்றும் "நாத்திகர்களின் குரு" என்றும் ஏளனமாக அழைத்தனர். ஃபிரெஞ்சின் நல்வாழ்விற்காக அவர் பிராடஸ்டண்டு நாடு களுடன் நல்லுறவு வைத்துக்கொண்டிருந்தார். இவரால்தான் ஜெர்மனியில், பிராடஸ்டண்டு சமயம் பாதுகாக்கப்பட்டது என்று போப்பும், மற்ற கத்தோலிக்கர்களும் குறைகூறினர்.

ரிச்சல்யூ இரண்டு கொள்கைகளைப் பின்பற்றினர். ஒன்று, ஃபிரெஞ்சு அரசனின் ஆட்சியைப் பலப்படுத்துவதாகும். பல உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்து, பிரபுக்களும் சமயக் குருக் களுக்கும், பல ஸ்தல ஸ்தாபனங்களும் நிறைய அதிகாரங்களைப் பெற்று அரசனுடைய ஆட்சியைச் சீர்குலைத்தன. அதனால் ரிச்சல்யூ நாட்டில் ஒரே அதிகாரம்பெற்ற அரசன்தான் ஆட்சி செய்யவேண்டுமென்றும் மற்றவர்களெல்லாரும் அவருக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டுமென்றும் வலியுறுத்தினர். மற்ற ஸ்தல ஸ்தாபனங்களும், பிரபுக்களும் குருமார்களும் அரசனுடைய ஆணைகளை மதித்து நடக்கவேண்டுமென்று விரும்பினர். இக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர முயன்றார். அவருடைய அடுத்த கொள்கையாவது, ஃபிரான்சை ஐரோப்பா வில் மிகச் சிறந்த வலிமைபெற்ற வல்லரசாக்கவேண்டும் என்று விரும்பினர். அதனால், ஃபிரான்சின் வலிமையைக் குறைத்து வந்த ஸ்பெயின், ஆஸ்டிரியா ஆகிய நாடுகளுடன் அவர் பகைமை கொள்ள நேரிட்டது. இந்த இரண்டுக் கொள்கை களுக்கும் இடையூறாக இருந்த எந்தச் சக்தியையும் அவர் அடக்கினர். கத்தோலிக்கச் சமயக் கொள்கைகள்கூட அரசியலில் தலையிடாதவாறு அவர் பார்த்துக்கொண்டார். இந்த இரண்டுக்

கொள்கைகளையும் சாதிப்பது அவ்வளவாக எளிதில் நடை பெறக்கூடியக் காரியமல்ல. அரசியல் தந்திரத்தையும் உறுதி யான கொள்கைகளையும் பின்பற்றியே அவர் தமது திட்டங் களைச் சாதித்துக்கொண்டார். அவரைப் போன்ற சிறந்த அரசியல்வாதி அப்பொழுது ஐரோப்பாவில் இல்லை என்ற புகழையும் பெற்றார்.

உள்நாட்டுக் கொள்கை

அவருடைய உள்நாட்டுக் கொள்கையும் வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றை ஒன்று பின்னியே இருந்தது. உள் நாட்டிலே, பிராடஸ்டண்டு ஆதிக்கம் பரவாதவாறு பார்த்துக் கொண்டார். நான்ட்ஸ் சாசனப்படி ஹ்யூகனோட்டுகளுக்கு நிறைய உரிமைகள் தரப்பட்டிருந்தன. சமய உரிமைகளைப்பற்றி ரிச்சல்யூ கவலைப்படவில்லை. ஆனால், அவர்கள் அடிக்கடி பிரபுக்களுடன் சேர்ந்துகொண்டு அரசனுடைய அதிகாரத்தையும், அவரது வலிமையையும் சீர்குலைக்கும் சூழ்நிலையை உருவாக்கி வந்தனர். மேலும், அவர்கள் அரசாங்கத்தின் ஆணைகளை மதிக்காது, ஏதோ சுதந்தரப் பகுதிகளாகத் தங்கள் நகரங்களைக் கருதி, கோட்டைக் கொத்தளங்களைக் கட்டிக்கொண்டு அவற்றைப் பாதுகாத்து வந்தனர். அப் பகுதிகளில் உள்ள மக்கள் அரசனின் ஆட்சியை ஏற்று நடக்கவில்லை என்று ரிச்சல்யூ உணர்ந்தார். அதனால், அவர்களுடைய துறைமுகப்பட்டணமான லா ரோசலே என்ற நகரைத் தாக்க முற்பட்டார். அந்த நகரைப் பாதுகாக்க ஒரு பெரிய அரண் கட்டப்பட்டிருந்தது. இவர்களுடைய கோட்டை யைப் பாதுகாக்க ஃபிரெஞ்சுப் பிரபுக்களும், ஆங்கிலேயர்களும் கூட ஹ்யூகனோட்டுகளுக்கு உதவினர். ஆனால், ரிச்சல்யூ மத குருவாக இருந்தபோதிலும், அவரே முன்னின்று முற்று கையை நடத்தினர். இறுதியில் வெற்றியும் பெற்றார். இதற்குப் பிறகு ஹ்யூகனோட்டுகளுக்குச் சொந்தமான மற்ற நகரங்களும் பிடிப்பட்டன. அவர்களுடன் ரிச்சல்யூ ஓர் உடன் படிக்கையைச் செய்துகொண்டார். அதற்கு அலாய்ஸ் (Alais) உடன்படிக்கை என்று பெயர். இந்த உடன்படிக்கையின்படி, ஹ்யூகனோட்டுகளின் சமயச் சுதந்தரத்தில் அவர் மேற்கொண்டு தலையிடுவதில்லை என்று கூறினர். நான்ட்ஸ் சாசனத்தில் குறிப் பிட்டிருந்த எல்லா உரிமைகளும் அவர்களுக்குத் தரப்பட்டன. ஆனால், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இராணுவ உரிமை களையும் அந்தஸ்தையும் அவர் பறித்துக்கொண்டார். மேற் கொண்டு, அரசனுடைய ஆணைகளை அவர்கள் மதித்து நடக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அரசனுக்கு மிகப் பெரிய விரோதிகளாக இருந்தவர்கள் பிரபுக்களாவர். அவர்களுடைய வலிமையும் செல்வாக்கும் மிகவும் குறைந்துவிட்ட போதிலும், அவர்கள் கோஷ்டி சேர்த்துக் கொண்டு அரசனுடைய ஆட்சியை எதிர்த்து வந்தனர். ரிச்சல்யூ அவருடைய வாழ்நாள் முழுவதையும் இந்தப் பிரபுக்களின் சூழ்ச்சிகளையும், சதித்திட்டங்களையும் அடக்குவதில்தான் கழித்தார். அதனால் அவருடைய உயிரைப் பறிப்பதற்குச் சூழ்ச்சிகள் தினமும் உருவாகிக்கொண்டே இருந்தன. இவரைப் பற்றி பல கதைகளும், நாடகங்களும் உருவாக்கப் பெற்றிருக்கின்றன. மேரி தெ மெடிச்சியுங்கூட, ஆர்லியன்ஸ் பிரபு காஸ்டனுடன் சேர்ந்து ரிச்சல்யூவைக் கொல்ல செய்ய சூழ்ச்சிசெய்தனர். ஆனால், இவர்களுடைய திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. இவர்களுடைய சதித்திட்டங்கள் அம்பலமாகிய உடன், மேரி தே மெடிச்சி இங்கிலாந்திற்கு நாடு கடத்தப்பட்டாள். காஸ்டன் பிரபுவுக்குப் பலமுறை மன்னிப்பு அளிக்கப்பெற்றது. இறுதியில் காஸ்டன் பிரபு ரிச்சல்யூவின் வழிக்கு வந்தார்.

1632-ல் மாண்ட்மோரன்சி கோமகன் (Duke of Montmorency) லோரேய்ன் பிரபுவுடனும், கேஸ்டன் பிரபுவுடனும் சேர்ந்து ஒரு கலகத்தை விளைவித்தார். இக் கலகம் ஒடுக்கப்பெற்றது. கலகம் விளைவித்ததற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பெற்றது. 1641-ல் மற்றுமொரு பிரபு, காம்டி தே சாய்சன்ஸ் (Comte de Soissons) என்பவர் கலகம் விளைவித்தார். அவரும் போர் செய்யும் பொழுதே காயமுற்று இறந்துவிட்டார். ரிச்சல்யூவின் அந்திய காலத்தில், குவிங் மார்ஸ் (Cing Mars) என்பவர் ரிச்சல்யூவைத் தொலைக்க ஒரு சூழ்ச்சிசெய்தார். இந்தப் பிரபு ஸ்பெயின் நாட்டிலிருந்து உதவிபெற்று வந்தார். ஆனால், அவர் பிடிப்பட்டுத் தூக்கு மேடைக்கு அனுப்பப்பெற்றார். அரசனுடைய சிபாரிசையும் அவர் புறக்கணித்துவிட்டார். இதைப் போன்று, பிரபுக்களின் கோட்டத்தை அடக்குவதற்கு அவர் மேலும் பல வழிகளைப் பின்பற்றினர். பிரபுக்களின் கோட்டைகளை இடித்துத் தள்ளினர். பிரபுக்களின் தனிப்பட்ட சண்டைகளை (Duelling) தடை செய்தார். பிரபுக்களுக்குப் பதிலாக இண்டன்டான்ட்ஸ் (Intendants) என்ற அதிகாரிகளை நியமனம் செய்தார். இவர்களையே மாவட்ட கவர்னர்களாகவும் நியமனம் செய்ததால் பிரபுக்களுடைய அதிகாரம் நாளடைவில் மறைந்துவிட்டது. இந்தப் புதிய அதிகாரிகள் அரசனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்களாக இருந்தனர். இந்த நியமனங்கள் பிரபுக்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஃபிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் வரையிலும், இந்த ஆட்சிமுறை அமுலில் இருந்துவந்தது. மேலும்,

ரிச்சல்யூ அரசனுடைய ஆட்சிக்குப் போட்டியாக இருந்த பல அரசாங்க நிறுவனங்களின் ஆதிக்கத்தைக் குறைத்துவிட்டார். அரசனுக்கு ஆலோசனைகூற மட்டும் திறமைமிக்கப் பிரமுகர்களின் குழுவை ஏற்படுத்திக்கொண்டார். அவர்களுடைய பொறுப்பு, அரசர்களுக்கு ஆலோசனை கூறுவதேயாகும். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் அரசனுடைய விருப்பமாகும். அரசாங்கக் காரியங்களைச் சரிவர நடத்துவதற்கு "அரசனின் குழுவினர்" என்ற நிறுவனம் நிறுவப்பெற்றது. இக் குழுவில் உள்ள அங்கத்தினர்கள்தான் ஃபிரான்சை ஆட்சி செய்து வந்தனர்.

வெளிநாட்டுக் கொள்கை

ஃபிரெஞ்சு நாட்டை ஐரோப்பாவில் ஒரு வலிமை மிக்க வல்லரசாக்கவேண்டும் என்பதே அவருடைய நெடும் நாளைய கனவாகும். இதற்குத் தடையாக இருந்த ஹாப்ஸ்பர்க் பரம்பரையினரால் ஆட்சி செய்யப்படும் ஸ்பெயினையும், ஆஸ்டிரியாவையும் அவர் சமயம் கிடைத்தபொழுதெல்லாம் நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ போரிட்டு அடக்கி வந்தார். ஆஸ்டிரியாவிற்கும் ஸ்பெயினுக்கும் மிகுந்த நேர் வழியான வால்டிலீன் கணவாய்ப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டார். இந்த வழியாகத்தான் மிலான் நகரம் வந்து ஆஸ்டிரியாவிற்கு ஸ்பெயின் படைகள் சென்று வந்தன. ஜெர்மனியின்மீது ஸ்வீடிஷ் அரசனான கஸ்டாவஸ் அடால்பஸ் படையெடுத்தபொழுது, அவ்வரசனுக்கு ரிச்சல்யூ பெரிதும் உதவி செய்தார். 1630-ல் கஸ்டாவஸ் அடால்பஸ் அரசனுடன், ரிச்சல்யூ ஒரு நல்லுறவு உடன்படிக்கை செய்துகொண்டார். ஸ்வீடனுடைய இராணுவம் ஓரளவிற்கு ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் உதவிபெற்றே இயங்கி வந்தது. இருப்பினும் ஸ்வீடனுடைய உதவியை அவருடைய சந்தர்ப்பத்திற்கேற்றவாறுதான் பயன்படுத்திக் கொண்டார். லட்ஸன் போரில் கஸ்டாவஸ் அடால்பஸ் இறந்தது ரிச்சல்யூவிற்கு ஒரு கை ஒடிந்தது போலாயிற்று. மேலும், பிராடஸ்டண்டுகள் நார்டிலிங்கன் போரிலும் தோற்றுவிடவே, ரிச்சல்யூதான் அவர்களுக்கு உதவினர். முப்பதாண்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் ஃபிரான்சும் ஸ்பெயினும்தான், ஃபிரான்சின் வடக்கு, கிழக்கு எல்லைகளில் முக்கியமாகப் போர் செய்தன. ஸ்வீடனும் ஆஸ்டிரியாவைக் கிழக்கிலிருந்து தாக்கியது. ஃபிரான்சின் வெற்றிகள் தொடக்கத்தில் அதிகமில்லை எனினும், ரிச்சல்யூ தன் இராஜதந்திரத்தால்தான் ஸ்பெயினில் உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டார்.

போர்ச்சுகல் ஸ்பெயினின் ஆதிக்கத்தை வெறுக்கும்படிச் செய்தார். காடலோனியா மாகாணம் ஸ்பெயினின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கலகம் விளைவித்தது. இக் கலகம் பல ஆண்டுகள் நீடித்ததால், இரண்டாம் பிலிப்புக்குப் பெரிய தலைவலியாக இருந்தது. இதனால் ஃபிரான்சிற்குச் சில நன்மைகள் ஏற்பட்டன. 1642-ல் ரிச்சல்யூ இறக்கும்பொழுது ஃபிரான்ஸ் முப்பதாண்டுப் போரில் வெற்றியடைந்து வந்தது. இவர் இறந்த அடுத்த ஆண்டிலேயே, பதின்மூன்றும் லூயி அரசனும் இறந்துவிட்டார்.

முப்பதாண்டுப் போர் (1618-1648)

இந்த முப்பதாண்டுப் போர், கத்தோலிக்கர்களுக்கும் பிராடஸ்டண்டுகளுக்கும் நிகழ்ந்த கடைசிப் போராகும். இப் போர் ஐரோப்பாவில் பல போர் முனைகளில் விட்டுவிட்டு நிகழ்ந்தது. முக்கியமாக ஜெர்மனி, ஸ்வீடன், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளில் இப் போர் நிகழ்ந்தது. இந்தப் போரில் கத்தோலிக்கர்களின் சார்பாக ஸ்பெயினும் ஆஸ்டிரியாவும் அதிகப் பங்கெடுத்துக்கொண்டன.

பேரரசன் ஐந்தாம் சார்லஸ் முடிதுறக்கும்பொழுது ஜெர்மன் பகுதிகளிலுள்ள பல சிற்றரசர்கள் லூதரன் சமயத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தனர். அவர்களெல்லாரும் தங்கள் பகுதிகளிலுள்ள மக்களுக்குச் சமயச் சுதந்தரம் வேண்டுமென்று முறையிட்டனர். மேலும், இவர்கள் கத்தோலிக்கக் கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகளையும் ஆக்கிரமித்து வந்தனர். இதனால் ஐந்தாம் சார்லஸ் இந்தச் சிற்றரசர்களுடன் ஆக்ஸ்பர்க் என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படி, பல்வேறு ஜெர்மன் பகுதிகளுக்கு லூதரன் சமயத்தைத் தழுவ சுதந்தரம் அளிக்கப்பெற்றது. ஆனால், இச் சமாதான உடன்படிக்கையைச் சரிவர நிறைவேற்ற முடியவில்லை. லூதரன்களைத் தவிர, கால்வின் சமயத்தினரும் ஜெர்மானியப் பகுதிகளில் அதிகமாகிவிட்டனர்.

ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை இவர்களைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இந்த உடன்படிக்கைக்கு முரணாக லூதரன்கள் கத்தோலிக்கர்களது கோயில் சொத்துகளை ஆக்கிரமித்து வந்தனர். இந்த இரண்டு காரணங்களாலும், ஆக்ஸ்பர்க் சமாதான உடன்படிக்கை வேண்டிய பயனை அளிக்கவில்லை.

இச் சமயத்தில் பிராடஸ்டண்டு சமயம் ஐரோப்பாவிலும், குறிப்பாக ஜெர்மன் நாடுகளிலும் மிகவும் வேகமாகப் பரவி வந்தது. கத்தோலிக்கர்களுக்கு இதனால் அதிக ஆத்திரம்

உண்டாகியது. அப்பொழுது ஜெஸ்யூட் சபையினர் கத்தோலிக்கச் சமயத்தை நிலைநிறுத்தத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தனர். அவர்கள் பள்ளிகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றை நடத்தி மக்களுடைய ஆதரவைப் பெற்றிருந்தனர். சில ஜெஸ்யூட் குருமார்கள் ஜெர்மன் அரசர்களின் ஆலோசகர்களாகவும் பணியாற்றி வந்தனர். இவ் வாய்ப்பை நழுவவிடாது, அவர்கள் கத்தோலிக்க இயக்கத்தை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

இந்த முப்பதாண்டுப் போர் பொஹிமியாவில் 1618-ல் ஆரம்பமாகியது. கத்தோலிக்க ஹாப்ஸ்பர்க் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து சுதந்தரமாக வாழவேண்டும் என்பதற்காகப் பொஹிமியாவிலுள்ள பிராடஸ்டண்டு மக்கள் அவர்களது விருப்பப்படியே, பாலடினேட் கோமகனை பிரடிரிக்கை (Elector of Palatinate) அரசனாக்கினர். அவர் கால்வினுஸ்டு சமயத்தைச் சார்ந்தவராவர். அவருடைய மாமனார்தான் இங்கிலாந்தை ஆண்டு வந்த முதலாம் ஜேம்ஸ் மன்னனவர். ஆனால், பேரரசன் இரண்டாம் பெர்டினண்டு பிரடிரிக்கை நாட்டை விட்டே விரட்டிவிட்டார்.

பிரடிரிக்கின் பதவி பனிக்காலம் மட்டும் நீடித்திருந்ததால், அவரைப் பனிக் காலத்து அரசன் (Winter King) என்று ஏளனமாக அழைத்தனர். பிராடஸ்டண்டுகளுக்கு இது முதல் தோல்வியாகும். அதனால் டென்மார்க் அரசன் கோபமுற்று பேரரசன்மீது போர் தொடுத்தார். இந்தப் போர் நான்காண்டுகள் வரையிலும் நீடித்தது. இறுதியில் பேரரசனின் தளபதி வாலன்ஸ்டின் என்பவர் டென்மார்க் படைகளை அறவே விரட்டி விட்டார். இந்த வெற்றியைத் தொடர்ந்து பேரரசன் கத்தோலிக்கக் கோயில் சொத்துகளை மீட்சி செய்யும் சாசனத்தை (The Edict of Restitution) உருவாக்கி, அறிவித்தார். 1555-ல் நிகழ்ந்த ஆக்ஸ் பர்க் சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு, பறித்துக் கொள்ளப் பெற்ற கத்தோலிக்கச் சொத்துகளைத் திருப்பித்தர வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. மேலும், லூதரன்களுக்கு அளிக்கப்பெற்ற சமய உரிமைகள் உறுதியாக்கப்பெற்றன. ஆனால், கால்வினுஸ்டு களுக்கு இந்த உரிமைகள் கிடையாது என்று அறிவிக்கப்பெற்றது.

கத்தோலிக்கர்களின் வெற்றிக்கு இது நல்ல சூழ்நிலையாக அமைந்தது. ஆனால், பேரரசரின் மிகவும் திறமை மிக்கத் தளபதியான வாலன்ஸ்டினைப்பற்றிக் கத்தோலிக்கச் சங்கம் (Catholic League) பல குறைகளை எடுத்துக்கூறவே, அவர்

பதவியிலிருந்து விலக்கப்பெற்றார். இதனால் கத்தோலிக்கப் படையினர் ஒரு திறமை மிக்க தளபதியை இழந்து விட்டவராவர். இச் சமயத்தில்தான் ஸ்வீடன் நாட்டு அரசன் கஸ்டாவஸ் அடால்பஸ் பிராடஸ்டண்டுகளின் சார்பில் போரில் இறங்கினர்.

கஸ்டாவஸ் அடால்பஸ் (1594–1632) ஜெர்மனியின்மீது படையெடுக்க இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, அவர் பிராடஸ்டண்டு சமயத்தில் தீவிரமான நம்பிக்கை வைத்திருந்தார். இவர் பெருந்தன்மையான குணங்களைக் கொண்ட ஓர் அரசராவர். ஜெர்மனியிலுள்ள பிராடஸ்டண்டு களின் அவல நிலைக்கு இரங்கி அவர்களது துயரைப் போக்கப் போர் செய்ய வேண்டுமென்ற எண்ணங்கொண்டார். இரண்டாவ தாக, அவருக்கு ஜெர்மனியிலுள்ள சில பகுதிகளைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது.

முதலில் கஸ்டாவஸ் அடால்பஸின் தலையீட்டை ஜெர்மனியின் வடப் பகுதியிலுள்ள அரசர்கள் விரும்பவில்லை. ஆனால், மேக்டி பர்க் நகரம் கத்தோலிக்கப் படையினால் அறவே அழிக்கப்பெற்றது. அங்கிருந்த 20,000 மக்களும் கொல்லப்பட்டனர். அப்பொழுது தான் அவர்கள் கஸ்டாவஸ் அடால்பஸின் உதவி அவசியம் தேவை என்பதை உணர்ந்தனர். மேக்டிபர்க்கில் நேர்ந்த கொடுமைகளுக்குக் காரணமாக இருந்தவர் கத்தோலிக்கப் படையினர் தளபதியான ஜெனரல் டெல்லி (General Tilly) என்பவராவர். அவர் வாலன்ஸ்டினுக்குச் சிறிதும் சளைத்தவரல்ல. ஜெனரல் டெல்லியைக் கஸ்டாவஸ் அடால்பஸ் லெய்ப்ஸிக் நகரருகே தோற்கடித்தப் பிறகுதான் அவருடைய புகழ் பரவியது. கஸ்டாவஸ் அடால்பஸ் மீண்டும் பவேரியாவினுள் நுழைந்து ஜெனரல் டெல்லியைத் தோற்கடித்தார். இந்தப் போரில் டெல்லி படுகாயம் அடைந்தார். மியூனிக் நகரம் சரணடைந்தது. இந்த வெற்றியின் காரணமாகக் கஸ்டாவஸ் அடால்பஸ் மேலும் வியன்னுவை நோக்கி முன்னேறினர். இச் சமயத்தில் வாலன்ஸ்டின் திரும்பவும் தளபதி பதவிக்கு நியமனம் செய்யப் பட்டார். லட்ஸன் போரில் ஸ்வீடிஷ் படைகள் வெற்றியடைந்த போதிலும் கஸ்டாவஸ் அடால்பஸ் இந்தப் போர்க்களத்திலேயே அடிப்பட்டு மாண்டுவிட்டார். அவருடைய மரணம் பிராடஸ் டண்டுகளுக்கும், ஸ்வீடிஷ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாக இருந்தது. கஸ்டாவஸ் அடால்பஸின் மரணத்திற்குப் பிறகும், ஸ்வீடிஷ் படைகள் ஜெர்மனியிலேயே தங்கி, கத்தோலிக்கப் படைகளை அவ்வப்போது தாக்கிச் சேதப்படுத்திக்

கொண்டிருந்தன. வாலன்ஸ்டின் அவர்களுடைய போர் வீரர்களாலேயே கைவிடப்பட்டு, இறுதியில் கொலைசெய்யப்பட்டார் (1634). அவருடைய மரணம் எல்லாக் கட்சியினருக்கும் பெரிய நிம்மதியை அளித்தது.

இச் சூழ்நிலையில் ஜெர்மனியின்மீது படையெடுக்க ரிச்சல்யூ நிறைய ஃபிரெஞ்சுத் துருப்புகளை அனுப்பி வைத்தார். ஃபிரான்சின் வட எல்லையை ரைன் நதிவரையிலும் விஸ்தரித்துக் கொள்வதே ரிச்சல்யூவின் முக்கியமான நோக்கமாகும். அது போன்றே, தெற்கில், பைரனீஸ் மலைத்தொடர்வரையிலும் ஃபிரான்சின் எல்லைகளை விஸ்தரிக்க வேண்டுமென்ற காரணத்தால் ஸ்பெயின் மீது 1635-ல் போர் தொடுத்தார். ஃபிரான்ஸ் கத்தோலிக்க நாடாக இருந்தபோதிலும் அவருக்கு ஃபிரான்சின் அரசியல்தான் முக்கியமாகப்பட்டதே தவிர, கத்தோலிக்கச் சமயம் அல்ல. அவர் அத்துடன் நிற்காது, ஆஸ்டிரியாவின் எதிரிகளிடமும் உடன்படிக்கை செய்துகொண்டார். அதனால், முப்பதாண்டுப் போர் மீண்டும் தொடங்கியது. ஏற்கனவே, ஜெர்மனியின் பகுதிகள் பல போர்களுக்குட்பட்டு, நலிந்து கிடந்தன. இந்த நிலையில், ஃபிரெஞ்சு, ஸ்வீடிஷ், ஸ்பானிய ஜெர்மானியப் படைகள், அப் பகுதிகளில் போராடிப் படுநாசமாக்கிவிட்டன.உணவுப் பொருள்கள் சரிவரக் கிடைக்காது படை வீரர்களும், பொதுமக்களும் அல்லலுற்றனர். கார்டினல் ரிச்சல்யூமீது, கத்தோலிக்கர்கள் குற்றம் சாட்டினர். ஆனால், 1642-ல் அவர் இறந்துவிட்டார். அவரால் ஃபிரான்சிற்கு, ரோஸலின், லோரேய்ன், அல்சாஸ் ஆகிய பகுதிகள் கிடைத்தன. ஸ்பெயினின் ஆதிக்கம் ஐரோப்பாவில் அடியோடு அகற்றப்பெற்றது.

இந்தப் போர் முடிந்த பிறகு, ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்துவதுங்கூடக் கடினமாகவே இருந்தது. ஏனெனில், இந்தப் போரில் நிறைய ஐரோப்பிய நாடுகள் பங்குகொண்டிருந்தன. இந்த நாடுகளையெல்லாம் திருப்தி செய்து ஓர் உடன்படிக்கைத் தயார் செய்வதற்கே நான்கு ஆண்டுகள் பிடித்தன. பின்பு 1648-ல் வெஸ்ட் பேலியாவில் இவ்வுடன்படிக்கைகள் கையெழுத்திடப் பெற்றன. இந்த உடன்படிக்கைகளைப் பொதுவாக வெஸ்ட் பேலியா உடன்படிக்கை என்று அழைப்பர்.

வெஸ்ட்பேலியா உடன்படிக்கையின்படி, சமயச் சுதந்தரம், உரிமைகள், லூதரன்களுக்கும், கால்வினிஸ்டுகளுக்கும் தரப் பெற்றன. 1624-ல் பிராடஸ்டண்டு அரசர்கள் பறிமுதல் செய்த கத்தோலிக்கக் கோயில் சொத்துகள், நிலங்கள் ஆகியவை அவர்

களிடமே இருப்பதென முடிவு செய்யப்பெற்றது. இது பேரரசன் இரண்டாம் பெர்டினண்டு செய்த மீட்சி சாசனத்திற்கு முரண்பட்ட தாகும். மேலும், ஜெர்மனியில் உள்ள, பல்வேறு பகுதிகளும் தங்கள் விருப்பம்போல அரசியல் சுதந்தரம்பெற்றுத் தனி நாடு களாகவும், விரும்பினால் மற்ற அயல் நாடுகளுடன் உறவுகொண்டு இயங்கலாம் என்றும் முடிவு செய்யப்பெற்றது. புனித ரோமப் பேரரசின் வீழ்ச்சி இந்த உடன்படிக்கையால் உறுதி செய்யப் பட்டது. இந்த நிபந்தனையின்படி, பல ஜெர்மானியப் பகுதிகள் சுதந்தரம் பெற்றன. வட ஜெர்மனியில் உள்ள சில பகுதிகள் ஸ்வீடனுக்குத் தரப்பெற்றன. ஜெர்மன் பாராளுமன்றத்தில் ஸ்வீடனுக்கு மூன்று வாக்குகள் தரப்பெற்றன. ஸ்வீடனுக்குத் தரப் பெற்ற பகுதிகள் பேரரசின் கீழிருந்து அறவே மீட்கப்படவில்லை. மெட்ஸ், வெர்டன், டூல், ஸ்டராஸ்பர்க் பகுதிகளைத் தவிர, மற்ற அல்சாஸ் பகுதியையும் ஃபிரான்சிற்கு அளித்தனர். ஐக்கிய நெதர் லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சுதந்தரம் அளிக்கப் பெற்றது.

இந்த முப்பதாண்டுப் போரின் விளைவாகப் பல ஜெர்மானிய நகரங்கள் அறவே அழிக்கப்பெற்றன. பெருவாரியான மக்கள் இப் போரில் அழிந்துபோயினர். 80,000 பேர் குடியிருந்த ஆக்ஸ்பர்க் நகரில் போருக்குப் பிறகு, 16,000 பேர்களே இருந்தனர். ஜெர்மானிய மக்கள் இப் போரினால் அடைந்த துன்பங்களுக்கு அளவே இல்லை. இதனால் பதினெட்டாவது நூற்றாண்டுவரை யிலும் ஜெர்மனி வளர்ச்சி அடைய முடியவில்லை. ஜெர்மனியில் எண்ணற்ற சிறிய சுதந்தரம்பெற்ற நாடுகள் உருவாகிவிட்டன. மற்ற ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்ச்சி ஏற்பட்டதைப் போன்று இங்கு உடனடியாக ஏற்படாததற்கு இதுவே காரண மாகும். ஆனால், பவேரியா, பிராண்டன்பர்க் ஆகிய நாடுகள் ஜெர்மனியிலேயே தேசிய உணர்ச்சியையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டன. இரண்டு நூற்றாண்டுகள் காலம் கடந்துதான் ஜெர்மனியில் தேசிய வளர்ச்சி மிகவும் பயங்கர மாக வளர்ச்சியுற ஆரம்பித்தது.

முப்பதாண்டுப் போரின் விளைவாக ஃபிரான்சில் போர்போர்ன் அரச பரம்பரையினர் வலிமைமிக்க அரசாட்சியை ஏற்படுத்தினர். இவ்விதமான வலிமைமிக்க அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு ரிச்சல்யூ, மஸாரின் ஆகிய பிரதம அமைச்சர்களும் காரணமாக இருந்தனர். ஐரோப்பாவில் இதுகாறும் ஹாப்ஸ்பர்க் அரச பரம்பரையினர்தான் மிகவும் வலிமை மிக்கவர்களாகக் கருதப் பெற்றனர். ஆனால், அவர்களது வலிமையும் ஐரோப்பாவில்

அவர்களது செல்வாக்கும் குறையத் தொடங்கிவிட்டது. ஸ்பானிய ஹாப்ஸ்பர்கினர் முப்பதாண்டுப் போரில் பல தோல்விகளைப் பெற்றதால், அவர்களுடைய புகழும் மங்கத் தொடங்கிவிட்டது. ஸ்பானிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய டச்சுப் புரட்சிக்காரர்களுடன் ஸ்பெயின் சமாதான உடன்படிக்கையைச் செய்து கொண்டபொழுது, டச்சுக்காரர்களின் நிபந்தனைகளையெல்லாம் ஸ்பெயின் ஏற்றுக்கொள்ளவேண்டி நேரிட்டது. ஹாலந்தை இழந்தது போதாதென்று, ஸ்பெயின் போர்ச்சுகல்லையும் அப்பொழுது இழந்துவிட்டது. ஆனால், ஸ்பானிய அரசன் 1688 வரையிலும் வீணைகப் போர்ச்சுகல் மகுடத்திற்காகப் போராடி வந்திருக்கிறார். இருந்தபோதிலும் ஸ்பெயினுடைய ஆதிக்கத்தில் இன்னும் நிறைய காலனிகள் இருந்தன. தவிர, அதனுடைய ஆதிக்கத்தில் ஸ்பானிய நெதர்லாந்து, ஃபிரெஞ்சுக் காம்டே, நேப்பிள்ஸ், ஸார்டினியா, சிஸிலி ஆகிய பகுதிகளும் இருந்தன. ஜெர்மனியிலுள்ள ஹாப்ஸ்பர்க் அரச பரம்பரை இன்னும் ஆதிக்கம் பெற்றதாகவும், செல்வாக்குப்பெற்றதாகவும்தான் இருந்தது. இருந்தபோதிலும் மிகப் பெரிய பேரரசைக் கட்டி ஆள வேண்டியிருந்த காரணத்தாலேயே அதற்கு நிறைய சிக்கல்களும் மற்றும் பல இடர்ப்பாடுகளும் ஏற்பட்டு அதனுடைய சிறப்பை இழக்க நேரிட்டது. அப் பேரரசில் உள்ள, சாக்ஸனி, பவேரியா, பிராண்டன்பர்க் ஆகிய நாடுகள் இராணுவம் முக்கியத்துவம் பெற்ற நாடுகளாகப் புகழ்பெற்றுவிட்டன. தவிர, ஆஸ்டிரியாவுடன் ஜெர்மனியின் ஆதிக்கத்திற்கும் போட்டியிட்டன.

6. நல்லாட்சி வல்லரசுகள்

(Enlightened Despotism)

1. பதினன்காம் லூயி (1643–1715)

பதினன்காம் லூயி பட்டத்திற்கு வரும்பொழுது ஃபிரான்ஸ் நாட்டில் அமைதி நிலவியிருந்தது. நூறு ஆண்டுகளாக நிகழ்ந்து வந்த பிரபுக்களின் போர்கள் ஓய்ந்திருந்தன. ரிச்சல்யூவும், மஸாரினும் அரும்பாடுபட்டுப் பிரபுக்களுடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும் குறைத்திருந்தனர்.பிரபுக்களுடைய செல்வாக்குக் குறைந்ததாலும் ரிச்சல்யூ, மஸாரின் ஆகியோரின் ஆட்சி முறை களாலும் பலமுள்ள அரசாங்கம் ஏற்பட நல்ல சூழ்நிலை உருவாகி யது. அந்த இரண்டு பிரதம அமைச்சர்களும் ஃபிரான்சிற்குப் போர்க்களங்களிலும், சமாதான மாநாடுகளிலும் நல்ல வெற்றி களைத் தேடித் தந்திருக்கின்றனர். இதுகாறும் சிக்கல் மிக்கதாக இருந்த எல்லைப்பகுதிகளும் அவர்களுடைய அரும் முயற்சிகளால் ஃபிரான்சின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன. வட அமெரிக்காவில் பெரியதொரு பேரரசு ஃபிரான்சிற்குச் சொந்தமாகியது. பிராடஸ் டண்டுகளும், பிராண்டியர்களும் (Frondeurs) மற்றும் புகழ்பெற்ற பழம் பிரபுக்களும் அரசனின் ஆணைகளை மதிக்கவும் அரசாங் கத்தை மதிக்கவும் ஆரம்பித்தனர். அதனால், அரசனுடைய அதிகாரம் பரவத் தொடங்கியது. நடுத்தர வகுப்பினரும் செல்வ மிக்கவர்களாக விளங்கினர். அவர்களும் அரசனுடன் நல்ல தொடர்பு வைத்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். லூயி ஐந்து வயதிலேயே பட்டத்திற்கு வந்ததால் அக் காலத்தில் அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தவர் கார்டினல் மஸாரின் என்பவ ராவர். பெயரளவில் லூயி மன்னனின் அன்னையான ஆன் அரசியார் அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்தார். கார்டினல் மஸாரின் இத்தாலிய நாட்டைச் சார்ந்தவராக இருந்தபோதிலும், ரிச்சல்யூவின் சிபாரிசையும், ஆன் அரசியாரின் அபிமானத்தையும் பெற்று, நாளடைவில் ஃபிரெஞ்சு நாட்டின் பிரதம அமைச்ச

ராகவே பணியாற்றி வந்தார். அவருடைய கண்காணிப்பில் வளர்ந்து வந்த லூயி மன்னன் சிறு வயதிலேயே போர்க்களத்தில் நேரடியாகப் பங்கெடுத்துக்கொண்டார். அரசாங்க அலுவல்களிலும் அவர் நன்கு பயிற்சிபெற்றார். மஸாரின் 1661-ல் இறந்த பிறகு லூயி அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்து மூன்று ஆகிறது.

மஸாரினுக்குப் பிறகு யார் அடுத்த பிரதமர் என்ற வினு அப்பொழுது எழுந்தது. "நானேதான் அரசரும், பிரதமரும்" என்று லூயி அதற்குப் பதில் அளித்தார். "தம்மையே அரசு" என்று அவர் பறைசாற்றிக்கொண்டார். அவர் வெறும் அரசனுக மட்டும் இல்லாது, ஆட்சி செய்யவும் முற்பட்டுவிட்டதால் 'பிரதம அமைச்சர்' பதவியின் முக்கியத்துவம் அகன்றுவிட்டது. அவர் எதேச்சாதிகாரத்தைச் செலுத்தவேண்டும் என்று விரும்பினர். அதனால், நாட்டில் எந்த நிறுவனமும், எந்த அதிகாரியும், லூயி மன்னனின் அதிகாரத்திற்கு மறு பேச்சின்றி கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று விரும்பினர். அரசர் சில அதிகாரங்களை ஒரு சில அதிகாரிகளுக்கு அளித்தார். அவர்கள் அமைச்சர்களைப் போன்று பணியாற்றினர். ஆனால், அவர்கள் அரசனிடமிருந்து ஆணைகளைப் பெற்றுக்கொள்கிறவர்களாக இருந்தனரே தவிர, தங்கள் விருப்பப்படி எதையும் செய்ய முடியாதவர்களாக இருந்தனர். அரசாங்க அலுவல்களை அவர் தம் குடும்ப அலுவல்களைப்போன்று கவனித்து வந்தார். நாள் ஒன்றுக்குக் கட்டாயமாக ஐந்து மணி நேரமாவது அரசாங்க அலுவல்களைக் கவனிக்க அவர் ஒதுக்கியிருந்தார். அவருடைய வேலைகள் அனைத்தும், திட்டமிட்டபடியே ஒழுங்காகவும், முறையாகவும் நடைபெறவேண்டும். அவருடைய அதிகாரிகளில் பெரும்பான்மையோர் நடுத்தர வகுப்பினரிடமிருந்து தேர்ந்து எடுக்கப்பெற்றவர்களாவர். பிரபுக்களுடைய திறமையிலும், அவர்களுடைய விசுவாசத்திலும், அவருக்கு அதிக நம்பிக்கை கிடையாது. அவரால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அதிகாரிகள் மிகவும் திறமை மிக்கவர்களாக இருந்தனர்.

அப்பொழுது கால்பர்ட் என்பவர் நாட்டின் நிதி அமைச்சராகப் பணியாற்றி வந்தார். ஃபிரெஞ்சு நாட்டிற்கு அவர் செய்த சீர்திருத்தங்களும் நன்மைகளும் அளவு கடந்தவையாகும். மிகவும் உண்மையாக உழைத்து மன்னனிடமும் மக்களிடமும் அவர் நல்ல பெயர் எடுத்துக்கொண்டார். அவர் செய்த சில சீர்திருத்தங்களாவன :

அவர் நாட்டின் வரவு செலவுகளைச் சீரமைத்தார். வரி வசூல் முறைகளை ஒழுங்குபடுத்திப் பல ஊழல்களையும், லஞ்ச முறை

கூயும் ஒழித்தார். நாட்டின் தொழில் வளங்கூப் பெருக்குவதற்கு வியாபாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் பண உதவியும் ஊக்க மும் அளித்தார். உள்நாட்டுத் தொழில்களுக்கு ஆதரவு தருவதற் காகக் காப்பு வரிகூ விதித்தார். அதனால் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற பொருள்களுக்குக் கிராக்கி ஏற்பட்டது. மேலும், அமெரிக்காவில் குடியேறுவதற்கான வசதிகூ மக்களுக்குச் செய்துகொடுத்தார். ஃபிரெஞ்சுக் கிழக்கு இந்தியக் கம்பெனி நிறுவுவதற்கு இவரே மூலகாரணமாக இருந்தார். இவர் செய்த இந்தச் சீர்திருத்தங்களால், மக்கள் பல விதங்களில் நன்மை பெற்றனர்.

கால்பர்ட்டைத் தவிர, மற்றும் பல அதிகாரிகள் கோண்டே, டூரின், வாபான் ஆகியோர் மிகவும் திறமையாகப் பணியாற்றினர். கோண்டே ஒரு சிறந்த தளபதி; வாபான் ஒரு சிறந்த பொறியியல் நிபுணர். லூயியின் ஆட்சி ஒளிர்வுபெற, அவருடைய திறமையுடன், மற்றும் மேற்கூறிய அதிகாரிகளின் திறமையும் சேர்ந்திருந்தது. மேற்கூறிய அதிகாரிகளின் உதவியால்தான் அவருடைய புகழும் பொலிவடைந்தது. இவர் பல கலைஞர் கூயும், அறிஞர்கூயும் விஞ்ஞானிகூயும் ஆதரித்தார். அவர் காலத்தில் மோலியர் என்ற சிறந்த நாடக ஆசிரியர் இருந்தார். அவர் சிறப்பு மிக்க நகைச்சுவை நாடகங்கூ இயற்றினர். ரேசின் என்பவர் பிரபல கவிஞராக இருந்தார். லூயி காலத்திய அரண்மனை வாழ்க்கைக் குறிப்புகூ 'மேடம் தே செவிக்னி' மிகவும் நகைச்சுவைத் ததும்பக் கடிதங்கள் வாயிலாக எழுதி யுள்ளார். செயின்ட் சைமன் என்பவர், பிரபுக்களுடைய வாழ்க்கை, அரசனுடைய இயல்புகள், மற்றும் அக்காலத்து பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப்பற்றி மிகவும் நயமாக எழுதியிருக் கிறார். இவர்களுக்கெல்லாம் லூயி மன்னன் நல்ல ஆதரவு அளித்தார். கலைகள் வளர்வதற்கு ஒரு சிறந்த கலைக் கழகத்தை நிறுவினர். இக் கழகம் வளர்ச்சியுற மிகவும் உதவியவர் கால்பர்ட்டாவர். இக் கழகம் ஆரம்பித்த ஒரு பத்திரிகை "ஜர்னல் தே ஸேவாண்ட்ஸ்" இனியும் தொடர்ந்து வெளியிடப் படுகிறது. இதைத் தவிர, கால்பர்ட் ஒரு வான் நோக்கி நிலையத் தையும் பாரிஸ் நகரத்தில் நிர்மாணித்தார். லூயி தொடங்கி வைத்த அரண்மனை நூலகம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அவ்விதமான நூலகம் ஐரோப்பாவிலேயே அப்பொழுது இல்லை. அங்கே பல இலட்சக்கணக்கான நூல்கள் சேகரித்து வைக்கப்பட் டிருந்தன. ஒரு விஞ்ஞானக் கழகம்கூட அங்கே ஆரம்பிக்கப் பட்டது. இலக்கியத்தையும், விஞ்ஞானத்தையும் ஆதரித்ததைப் போன்றே, லூயி மன்னன் பல கட்டடங்கூ நிர்மாணித்து

அழியாப் புகழைப் பெற்றார். அவர் நிர்மாணித்த வெர்சேல்ஸ் அரண்மனை மிகவும் அழகு வாய்ந்தது. அந்த அரண்மனையிலே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கண்ணாடி மாளிகை அற்புத வேலைப் பாடுகள் கொண்டவையாகும். பல வரலாற்றுப் புகழ்பெற்ற உடன் படிக்கைகள் இங்கே கையெழுத்திடப் பெற்றிருக்கின்றன. அரண்மனையைச் சுற்றிலும் உள்ள கண்கவர் தோட்டமும், அதன் அமைப்பும் மிகவும் அழகாக இருந்தன. இந்த அரண் மனையைப் பார்ப்பதற்கே பலர் அங்கே சென்றனர். பல ஐரோப்பிய மன்னர்கள் இந்த அரண்மனையைப் போன்று சிறிய அளவில் கட்டியிருக்கின்றனர். இதைத் தவிர, செயின்ட் ஜெர்மேய்ன், கிளவுட்ஸ், ஆகிய மாளிகைகளையும் நிர்மாணித்திருக்கிறார். லூயி மன்னன் காலத்தில் ஃபிரெஞ்சு நாடு மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு நாகரிகத்தைக் கற்பித்துக் கொடுத்தது என்று கூறலாம். இலக்கியத்திலும், விஞ்ஞானத்திலும், பண்பாட்டிலும் ஃபிரெஞ்சு மக்கள் அப்பொழுது மிகச் சிறந்து விளங்கினர் என்பதே லூயி அரசனின் நல்லாட்சிக்குச் சான்றாகும்.

சமயக் கொள்கை

லூயி மன்னனின் எதேச்சதிகாரம் சமயத் துறையிலும் நன்கு வெளிப்படுகின்றது. அவர் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர். அதனால், அந்த நாட்டு மக்களெல்லாம் கத்தோலிக்கர்களாகவே இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். சமயப் புரட்சி ஃபிரெஞ்சு நாட்டைப் பொறுத்தளவிலும் வெற்றிப்பெறவில்லை. ஃபிரெஞ்சு நாட்டில் உள்ள பெரும்பான்மையோர் கத்தோலிக்கச் சமயத்தையே பின்பற்றியபோதிலும் வடமேற்கு ஃபிரெஞ்சுப் பகுதியில், சில செல்வமிக்க வணிகர்களும் தொழிலதிபர்களும், சீமான்களும், பிராடஸ்டண்டு சமயத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். கார்டினல் ரிச்சல்யூ அவர்களுடைய சேவை நாட்டிற்கு மிகவும் அவசியம் என்று கருதி அரசியல் காரணங் களுக்காக மட்டும், அவர்களுடைய சமய உணர்ச்சிகளை மதித்து நடந்துகொண்டார். இந்த ஃபிரெஞ்சுப் பிராடஸ்டண்டுகள் ஹ்யூகனோட்டுகள் என்று அழைக்கப்படுபவர். கார்டினல் ரிச்சல்யூவின் சமயக் கொள்கையில் ஃபிரெஞ்சு ஹ்யூகனோட்டுகள் திருப்தி அடைந்தனர். அதனால் அவர்கள் வழக்கம்போல தங்களுடைய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஹ்யூகனோட்டுகள் அனுபவித்து வந்த சமய உரிமைகளை ரத்து செய்து, மேற்கொண்டு நான்ட்ஸ் சாசனமும் செல்லாது என்று அறிவித்தார். அதனால் அவர்கள் மிகவும் கவலை அடைந்தனர். லூயி மன்னன் அவர்களை உடனே கத்தோலிக்கச் சமயத்தில் சேர்ந்துகொள்ள வேண்டு மென்று கட்டளையிட்டார். சிலர் பயந்து கத்தோலிக்கச் சமயத்தில்

சேர்ந்துகொண்டனர். ஆனால், பெரும்பான்மையினர் கத்தோலிக்கச் சமயத்தில் சேர மறுத்துவிட்டனர். லூயி அவர்களைப் பல கொடுமைகளுக்குள்ளாக்கினர். பலருடைய உயிர்களையும் பறித்துக்கொண்டார். வன்முறை நிறைந்த அவருடைய சமயக் கொள்கை அவருடைய ஆட்சியின் சிறப்பை மிகவும் குறைத்து விட்டது. அவருடைய நல்லாட்சிக்கு இக் கொள்கை ஒரு களங்கமாக வாய்த்துவிட்டது. அதிருப்தியுற்ற பல ஹ்யூகனோட்டுகள் ஃபிரான்ஸ் நாட்டை விட்டு வெளியேறினர். பெரும்பான்மையினர் பிரஷ்யாவிற்கும், ஹாலந்திற்கும் சென்று குடியேறினர். அந்த நாடுகளில் அவர்கள் நன்கு வரவேற்கப்பெற்றனர். அந் நாடுகளில் தொழில் வளம் பெருக அவர்களுக்கு அரசாங்கம் ஆதரவு அளித்தது.

அவர் காலத்தில் பிரான்சிஸ் ஜான்சனிஸ்டு இயக்கம் என்ற ஒரு சமய இயக்கம் தொடங்கப்பெற்றது. அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தூய்மையான கத்தோலிக்க இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், அரசனுடைய அங்கீகாரம் பெற்ற சமயக் கொள்கைக்கு இது மாறுபட்டதாக இருந்ததால், லூயி இந்த இயக்கத்தை அறவே ஒடுக்கிவிட்டார். இந்த ஜான்சனிஸ்டுகள் (Jansenists) ஆடம்பரத்தையும், கேளிக்கையையும், மகிழ்ச்சியையும் அறவே வெறுத்து, வெறும் தூய்மையான வாழ்க்கையைமட்டும் குறிக்கோளாகக் கொண்டு வாழ விரும்பினர். லூயி இவர்களையும் இவர்களது கொள்கைகளையும் அறவே வெறுத்தார்.

லூயி மன்னனின் சமயக் கொள்கையை உருவாக்குவதில் மேடம் மெயின்டனன் என்ற பெண்ணுக்கும் அதிக பங்கு இருந்தது. அவருடைய சமயக் கொள்கைக்குப் பெரிதும் ஆக்க மளித்தவள் இவளேயாகும். அவள் தொடக்கத்தில், லூயி மன்னனின் பல மனைவிகளுக்குப் பிறந்த பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள நியமனம் செய்யப்பெற்ற ஆயா போன்றவளேயாவள். ஆனால், நாளடைவில் இவளுக்கும் லூயிக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு, பிறகு காதலாக மாறியது. அவர் இவளை இரகசியமாகத் திருமணமும் செய்து கொண்டதாக ஒரு வதந்தியும் அப்பொழுது உலவியது.

லூயி போப்பாண்டவரிடம் ஒரு சமரச ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். ஃபிரெஞ்சுத் திருச்சபை போப்பினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருந்தது. குருமார்களைத் தேர்ந்தெடுப்பதிலும் கூடப் போப் அடிக்கடி தலையிட்டு வந்ததால், லூயி போப்பினுடைய அதிகாரத்தை வரையறுத்து ஃபிரெஞ்சுத் திருச்சபையை

நிர்வகிக்கும் பொறுப்பை அவரே ஏற்றுக்கொண்டார். இந்த சமரச ஒப்பந்தத்தால், நீண்ட காலமாகவே ஃபிரெஞ்சு மன்னர்களுக்கும் போப்புகளுக்கும் இருந்த சிக்கல்கள் ஒருவிதமாக முடிவடைந்தன.

வெளிநாட்டுக் கொள்கை

ஃபிரெஞ்சுப் பேரரசை மிகவும் வலிமைமிக்கதொரு நாடாக்க வேண்டும் என்பதே அவருடைய முக்கியமான குறிக்கோளாகும். மற்ற ஐரோப்பிய நாடுகளும் அவருடைய ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்பினார். அதனால், அவர் ஃபிரெஞ்சு எல்லைகளை விரிவடையச் செய்யவேண்டிய ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்ற நேர்ந்தது. அவருடைய நாட்டின் எல்லைகள் வடக்கிலும் கிழக்கிலும் ரைன்நதி வரையிலும், தென் கிழக்கில் ஜுரா, ஆல்ப்ஸ் மலைகள்வரையிலும், தெற்கே மத்தியத் தரைக் கடல், பைரனீஸ் வரையிலும் பரவியிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். இக் குறிக்கோளை நிறைவேற்ற அவர் வாழ் நாட்களில் பெரும் பகுதியைப் போர்க்களங்களிலேயே கழித்துப் பிறகு சலித்துவிட்டார் என்றுதான் கூறவேண்டும். அவருடைய ஆக்கிரமிப்பு அளவு கடந்துவிட்டதால் மற்ற ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து அவரை எதிர்த்தன.

அவருடைய முதல் ஆக்கிரமிப்பு ஸ்பானிய நெதர்லாந்தின் மீது தொடுக்கப்பெற்றது. அந்த நாடு அவருக்குத்தான் சேர வேண்டுமென்று அவர் முறையிட்டார். ஸ்பெயின் நாட்டு மன்னனை இரண்டாம் சார்லஸின் ஒரு தங்கையை அவர் திருமணம் செய்திருந்தார். இந்த நாடு, அதனால் அவருக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டதாகப் பறைசாற்றினார். இரண்டாவது சார்லஸ் அரசனுக்கு வாரிசு இல்லாததால், ஸ்பெயின் நாடுங்கூட இவருக்குத்தான் சேரவேண்டும் என்று பிரச்சாரம் செய்து வந்தார். அதனால்,ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்திற்கு உண்மையில் லூயிதான் மன்னன் என்று அறிவித்தார். நெதர்லாந்து மக்கள் லூயியைத் தங்கள் மன்னனாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அதனால் ஆத்திரமடைந்த லூயி 1667-ல் அந்த நாட்டின்மீது படையெடுத்தார். வெகு எளிதில் நெதர்லாந்து நாட்டைச் சுற்றியுள்ள சிறு நகரங்களை ஆக்கிரமித்துக்கொண்டார். பிறகு, ஃபிரெஞ்சுக் காம்டே பகுதியையும் கைப்பற்றிக்கொண்டார். இந்த ஆக்கிரமிப்புப் பொதுவாக ஐரோப்பிய நாடுகளையும் குறிப்பாக ஹாலந்து நாட்டையும் அதிர்ச்சியுறச் செய்தது. அதனால் ஹாலந்து, இங்கிலாந்து, ஸ்வீடன் ஆகிய ஃபிரான்சின் அண்மையிலுள்ள நாடுகள் ஒன்றுசேர்ந்து ஃபிரான்சின் படைகளை எதிர்த்துப்

போரிடுவது என்று முடிவு செய்தன. பிறகு லூயி அவசரமாக ஸ்பெயினுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். இந்த உடன்படிக்கைக்கு எயிக்ஸ்-லா-சேப்பேல் (Aix-la-Chapelle) உடன்படிக்கை என்று பெயர். இந்த உடன்படிக்கையின்படி, ஸ்பானிய நெதர்லாந்தின் அண்மையில் லூயி கைப்பற்றிய சிறிய நகரங்களை வைத்துக்கொள்ள லூயி அனுமதிக்கப் பெற்றார். ஆனால் ஃபிரெஞ்சுக் காம்டேவை, அவர் திரும்பவும் தந்துவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பெற்றது. இந்த உடன் படிக்கையில் லூயி மிகவும் திருப்தி அடைந்தார். இருந்தாலும் ஒரு சிறிய நாடான ஹாலந்து அவருடைய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்திவிட்டதே என்று அவர் கொதிப்படைந்தார். அதனால் ஹாலந்துடன் இணைந்துள்ள இங்கிலாந்தையும், ஸ்வீடனையும், விலக்கிவிடவேண்டும் என்பதற்காகப் பல வெல் திறன் முறைகளைப் பின்பற்றினார். அப்பொழுதிருந்த இங்கிலாந்து அரசன் இரண்டாவது சார்லஸ் சிறிது பண ஆசைப் பிடித்தவராக இருந்தார். அதனால் லூயி அவருக்கு லஞ்சம் கொடுத்து அவர் பக்கம் இழுத்துக்கொண்டார். இதையொட்டி, டோவர் என்ற இடத்தில் அவ்விரு அரசர்களிடையே ஓர் இரகசிய உடன் படிக்கை ஏற்பட்டது. இங்கிலாந்தின் உதவியைக் கத்தரித்து விட்ட லூயி, இப்பொழுது ஹாலந்தின்மீது படையெடுக்க விரும்பினார்.

1672-ல் ரைன் நதியைக் கடந்து, தெற்கு ஹாலந்தை அவர் வெகு எளிதில் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், ஆரஞ்ச் வம்சா வளியைச் சார்ந்த வில்லியம் என்பவர், ஆம்ஸ்டர்டாமின் கால்வாய்களைத் திறந்துவிட்டு நகரையே வெள்ளக் காடாக்கி விட்டார். அதனால் லூயி அந்த நகரத்தின்மீது படையெடுக்க முடியாமல் போய்விட்டது. ஹாலந்துக்கு உதவியாக எதிர்பாராத வகையில் ஜெர்மானியப் பேரரசன் ஒரு படையை அனுப்பி வைத்தார். இந்த நெருக்கடியான சமயத்தில் இங்கிலாந்து லூயி மன்னனிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து, ஹாலந்துக்கு உதவி செய்ய முன்வந்தது. ஆறு ஆண்டுகளாகப் போர் செய்து சலித்துவிட்ட லூயி கடைசியாக 1678-ல் நிம்விகன் என்ற இடத்தில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி லூயிக்கு ஃபிரெஞ்சுக் காம்டே தரப்பெற்றது. அவர் கைப்பற்றிய தெற்கு ஹாலந்து பகுதியை, ஹாலந்திற்கே திரும்பவும் தந்து விட்டார். இந்த உடன்படிக்கையினால், ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஃபிரெஞ்சுக் காம்டேவில், ஃபிரான்சும் ஸ்பெயினும் செய்து வந்த போர்கள் ஓய்ந்தன. அடுத்த பத்து ஆண்டுகள்வரையிலும் போர் இல்லையெனினும் லூயி ஸ்டராஸ்பர்கையும் மற்ற சில

நகரங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டே இருந்தார். பேரரசன் இந்த ஆக்கிரமிப்பைப் பலமாகக் கண்டித்துங்கூட லூயினுடைய ஆசை நிற்கவில்லை.

இதற்குப் பிறகு லூயி அருகிலுள்ள பிராடஸ்டண்டுகளுக்குச் சேர்ந்த பகுதியான பாலடினேட்டின்மீது ஆக்கிரமிப்புச் செய்தார். அப் பகுதி தமக்குத்தான் சொந்தம் என்று பறைசாற்றிக் கொண்டிருந்தார். பிராடஸ்டண்டுகளை மிகவும் கொடுமைப் படுத்தி, நான்ட்ஸ் சாசனத்தை ரத்து செய்துவிட்டதால் மற்றப் பிராடஸ்டண்டு நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து லூயி மன்னனின் பேராசைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று தீர்மானம்செய்தனர். மீண்டும் ஐரோப்பிய பிராடஸ்டண்டு நாடுகளெல்லாம் வில்லியம் தலைமையில் ஒன்றுகூடி ஃபிரான்ஸ் நாட்டை எதிர்க்க முன்வந்தனர். இப் போரை ஆக்ஸ்பர்க் நேச நாடுகளின் போர் (The War of the League of Augsburg) என்று அழைத்தனர். பிராடஸ்டண்டு நாடுகளின் கூட்டணியைக் கண்டு ஆத்திரம் அடைந்த லூயி பாலடினேட்டையும், மற்றும் அதன் அருகிலுள்ள பல நகரங்களையும் சூறையாடினர். அந்த நகரங்களை அவர் அறவே அழித்துவிட்டார். இந்த ஆக்ஸ்பர்க் போர் பத்து ஆண்டுகள்வரையிலும் ஐரோப்பாவின் பல பகுதிகளில் நிகழ்ந்து, பின்பு ரைஸ்விக் என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இந்த உடன்படிக்கை யின்படி, லூயி ஆக்கிரமித்துக்கொண்ட நாடுகளை அவரவர் களுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார். லூயி மன்னன் வில்லியமை இங்கிலாந்தின் அரசன் என்பதை அங்கீகரித்து, இதுவரையிலும் அவர் ஸ்டூவர்ட் வம்சாவழியில் சேர்ந்த மூன்றாவது ஜேம்ஸ்தான் இங்கிலாந்தின் அரசன் என்று வற்புறுத்திக் கொண்டிருந்ததை நிறுத்திக்கொண்டார். ஆனால், இந்த உடன்படிக்கையின்படி லூயி நடந்துகொள்ளவில்லை.

ஸ்பானிய வாரிசுரிமைப் போர்

இதுதான் லூயி மன்னனின் இறுதிப் போராகும். ஸ்பெயின் நாட்டு அரசன் இரண்டாவது சார்லஸ் இறக்கும்பொழுது, அவருக்கு ஆண் வாரிசு இல்லை. இரண்டாவது சார்லஸ் எழுதி வைத்துப்போன உயிலில், லூயினுடைய பேரனான ஆஞ்சோ கோமகனான பிலிப், ஸ்பெயின் நாட்டு அரசனுகப் பட்டம் ஏற்க வேண்டுமென்று எழுதி வைத்திருந்தார். இதனால் லூயி வெளிப் படையாகவே வெளியிட்ட அறிக்கை ஒன்றில், பிலிப் ஸ்பெயின் நாட்டு மன்னன் மட்டுமன்று, அவரே ஃபிரான்ஸ் நாட்டு அரசனு

வதற்கும் எவ்விதத் தடையுமில்லை என்று கூறினர். ஐரோப்பாவில் ஃபிரான்சும், ஸ்பெயினும் அப்பொழுது பெரிய வல்லரசுகளாக இருந்தன. இரண்டு பெரிய நாடுகளும், அதுவும் கத்தோலிக்க நாடுகளும் பிலிப்பின்கீழ் ஒன்றுக இணைந்துவிட்டால் ஃபிரான்சின் ஆதிக்கம் அளவிற்கு மீறிவிடும் என்று மற்ற நாடுகள் பயந்தன. அதனால் ஸ்பெயின் நாட்டிற்குப் பிலிப் அரசனு வதைவிட, பேரரசன் முதலாம் லியோபால்ட் அரசனுவதையே விரும்பினர். இவரை ஸ்பெயின் நாட்டு அரசனுக்க மற்ற ஐரோப்பிய நாடுகள் முயற்சி செய்தன. பிறகு இரண்டாம் சார்லஸ் எழுதிவைத்த உயில்படியே பிலிப் ஆஞ்சோ, ஸ்பெயின் நாட்டின் ஐந்தாம் பிலிப்பாக முடிசூட்டப்பெற்றார். இதனால் அதிர்ச்சியுற்ற இங்கிலாந்து அரசன் மூன்றும் வில்லியம் ஒரு பெரியக் கூட்டணியை 1701-ல் ஏற்படுத்தினர். லூயி மன்னனின் பழைய எதிரிகளான, இங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மானியப் பேரரசு ஆகிய நாடுகள் இந்தக் கூட்டணியில் சேர்ந்து கொண்டன. இந்த நாடுகள் ஒன்று சேர்ந்து ஃபிரான்சைத் தாக்குவதென்று முடிவு செய்தன. இந்தப் போர் நடக்கும் பொழுதே மூன்றாவது வில்லியம் இறந்துவிடவே, ஆன் அரசியார் இப் போரைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

இப் போரில் மிகச் சிறப்பான முறையில் கூட்டணிப் படைகளை நடத்திச் சென்றவர் ஆங்கில தளபதி ஜான் சர்ச்சில் என்ற மார்ல்பரோ கோமகனுவர். இப் போர் ஐரோப்பாவில் மட்டுமல்லாது, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலும், இந்தியா விலும்கூட நிகழ்ந்தது. கூட்டணிப் படை ஃபிரெஞ்சுப் படையை, பிளன்ஹிம், ராமிலேஸ், ஆடுநார்டே, மால் பிளாகேட், ஆகிய இடங்களில் தோற்கடித்தது. பிளன்ஹிம்மில் மார்ல்பரோ கோமகன் பெற்ற வெற்றி மிகவும் சிறப்பானதாகும். கூட்டணிப் படைகள் இவ்வளவு ஒற்றுமையுடன் போர் புரியும் என்று லூயி நினைக்கவில்லை. இந்த வெற்றிகள் லூயி மன்னனைக் கதிகலங்கச் செய்துவிட்டன. ஃபிரெஞ்சு நாட்டு மக்கள் லூயி செய்த வீணான போர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். போர்கள் காரணமாக அதிக வரிகள் செலுத்தும் இம் மக்கள் எப்பொழுது சமாதானம் ஏற்படும் என்று ஏங்கி இருந்தனர். அந்த நாட்டின் செல்வம் முழுவதும் லூயினுடைய ஆக்கிரமிப்பு வெறிக்கு விரயமானதுதான் மிச்சம். பத்தாண்டுக் காலம் போர் புரிந்த பிறகு லூயி மன்னனும் எப்படியாவது ஓர் உடன்படிக்கை ஏற்பட்டால் போதும் என்று விரும்பினர். அதன்படி 1713-ல் யூட்ரக்ட் என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதற்கு யூட்ரக்ட் உடன்படிக்கை என்று பெயர்.

இந்த உடன்படிக்கையால் பல மாற்றங்கள் ஐரோப்பாவில் ஏற்பட்டன. முப்பதாண்டுப் போருக்குப் பிறகு ஏற்பட்ட வெஸ்ட் பேலியா உடன்படிக்கைகூட இவ்வளவு மாறுதல்களைச் செய்ய வில்லை. லூயி மன்னனின் பேரன் ஐந்தாம் பிலிப் ஸ்பெயின் நாட்டு அரசனுகப் பதவியேற்றதை மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் அங்கீகரித்தன. ஸ்பெயினுக்குச் சொந்தமான காலனிகளுக்கும் அவரேதான் அரசன் என்று ஏற்றுக்கொண்டனர். ஆனால், அவர் ஃபிரான்ஸ் நாட்டிற்கு அரசனுகக்கூடாது என்ற நிபந்தனையை விதித்தனர். அதனால் ஃபிரான்சும், ஸ்பெயினும் ஓர் அரசரின் ஆட்சியின்கீழ் இணையும் அபாயம் தவிர்க்கப்பெற்றது. ஐரோப்பா வில் சம ஆதிக்க நிலை ஏற்படுத்தப்பெற்றது. ஆஸ்டிரியாவிற்கு ஸ்பானிய நெதர்லாந்து தரப்பெற்றது. இதற்குப் பிறகு இதை ஆஸ்டிரிய நெதர்லாந்து என்று அழைத்தனர். அதனால் ஃபிரான்சிற்கும் ஹாலந்திற்கும் ஒரு பெரிய குறுக்கு எல்லை அமைக்கப்பெற்றது. ஹாலந்தைச் சுற்றியுள்ள சில கோட்டைகள், ஹாலந்திற்கே அளித்தனர். ஹாலந்தின் பாதுகாப்பிற்காக அக் கோட்டைகள் பயன்படுத்தப்பெற்றன. ஸ்பெயினுக்குச் சொந்தமான மிலான், நேபிள்ஸ் ஆகிய பகுதிகளை ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தில் விட்டனர். இத்தாலியில் ஆஸ்டிரியாவின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு இது நல்ல வாய்ப்பாக இருந்தது. ஃபிரான்சிட மிருந்து, நோவாஸ்கோஷியா, நியூபவுண்ட்லேண்ட், ஹட்ஸன் ஆகிய பகுதிகளைப் பறித்து இங்கிலாந்திடம் தந்தனர். இதனால் வட அமெரிக்காவிலிருந்து ஃபிரெஞ்சுக் குடியேற்றம் அகற்றப் பெற்றது. இவைகளைத் தவிர, ஜிப்ரால்டரும் இங்கிலாந்திற்குத் தரப்பெற்றது. இது மிகவும் கேந்திர முக்கியத்துவம்பெற்ற இடமாகும். இதனால் இங்கிலாந்தின் கடல் வலிமை, மத்தியத் தரைக் கடல் பிரதேசங்களில் அதிகமாகியது. யூட்ரக்ட் உடன் படிக்கைக்குப் பிறகு ஃபிரெஞ்சு ஆதிக்கம் ஐரோப்பாவில் மிகவும் குறைந்துவிட்டது. அதனுடைய இடத்தை இங்கிலாந்து கைப்பற்றிவிட்டது.

வாழ்நாள் முழுவதும் போரிட்டு ஃபிரெஞ்சு நாட்டின் சீரழிவைத் தேடித்தந்த லூயி மன்னன் சாகும்தறுவாயில், "இனி மேல் எந்த ஃபிரெஞ்சு மன்னனும் போரிடக்கூடாது" என்று அறிவுரை கூறிவிட்டு இறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய பேரப்பிள்ளையான பதினைந்தாம் லூயி ஐந்தாவது வயதில் பட்டத்திற்கு வந்தார் (1715–1774). லூயினுடையப் போர்கள் காரணமாக நாட்டின் நிதிநிலைமை மிகவும் சீர்கேடுற்றுவிட்டது. மேலும் சுமார் 15,000 பிரபுக்கள் வரையிலும் அவருடைய அரண்மனையிலேயே வசித்து வந்ததால், அவர்களுடைய தலையீடு

அரண்மனையில் அதிகமாகிவிட்டது. அவர்கள் அரசனைச் சுற்றிக் கொண்டே இருந்தனர். அதனால் அவர்களுடைய மதிப்பும் செல்வாக்கும் மிகவும் குறைந்துவிட்டன. நாட்டில், பிரபுக்களால் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்கள், போர்கள் எல்லாம் சிறிது ஓய்ந்திருந்தன. ஆடம்பரத்தை விரும்பும் லூயி, அதே சமயத்தில் நாட்டின் இலக்கிய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் அதிக ஆதரவு அளித்தார். ஃபிரான்ஸ் அப்பொழுது ஐரோப்பாவிலேயே மிகவும் தலைசிறந்த நாடாக விளங்கியது.

2. மாபெரும் பீட்டர்

ரஷ்யாவின் எழுச்சி

பீட்டர் ரஷ்யாவின் அரசனுவதற்கு முன்னர் அந்த நாடு மிகவும் பின் தங்கிய, நாகரிக வளர்ச்சியற்ற, முறையான அரசாங்கமற்ற, ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பற்ற நிலையில் இருந்தது. பத்தாவது நூற்றுண்டுவரையிலும் ரஷ்ய நாட்டு மக்கள் கிறித்துவ மதத்தில் சேராமல் இருந்தனர். ரூரிக்கின் பேரனான விளாடிமிர் என்பவர் அரசனான பிறகுதான், அந்த நாட்டிலே கிறித்துவ மதம் பரவத் தொடங்கியது. அவர் அம் மக்களை வற்புறுத்திக் கிறித்துவ மதத்தில் சேரச் சொன்னார். பத்தாவது நூற்றுண்டிற்குப் பிறகு இரண்டு நூற்றுண்டுகளாக ரஷ்யாவின் பல பகுதிகளில் ஆதிக்கப் போர் ஏற்பட்டு, நாட்டின் ஒற்றுமை சீர்குலைந்து வந்தது. பதின்மூன்றுவது நூற்றுண்டில் மங்கோலியர்கள் செங்கிஸ்கான் தலைமையில் ரஷ்யாவின்மீது படையெடுத்து எளிதில் அங்குள்ள பல பகுதிகளையும் ஆக்கிரமித்துக்கொண்டனர். அப் பகுதியிலுள்ள ரஷ்ய மக்கள் மங்கோலிய ஆதிக்கத்திற்கு அடிபணிந்தனர். மங்கோலியர்களின் ஆதிக்கம் ஏறக்குறைய இரு நூறு ஆண்டுகளுக்குமேல் அங்கு நீடித்தது. அவர்கள் மாஸ்கோவைத் தலைநகரமாக வைத்து ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுடைய ஆதிக்கம் இவ்வளவு ஆண்டுகள் நீடித்துங்கூட, ரஷ்யர்கள்மீது, அவர்களின் மொழியினையும், மற்றும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் அவர்கள் திணிக்கவில்லை. இருப்பினும் சில பழக்க வழக்கங்கள் அவர்களுடைய சமுதாயத்தில் நுழைந்துவிட்டன. சிறப்பாக அவர்களுடைய உடையில் இம் மாறுதல்கள் காணப்பெற்றன.

மங்கோலிய ஆதிக்கம் அங்கே சீர்குலைய ஆரம்பித்தவுடன், மாஸ்கோவில் வாழும் மக்கள் மங்கோலியர்களின் ஆதிக்கத்தை

எதிர்த்துப் போராடினர். அந்தப் போராட்டத்தில் வெற்றி அடைந்து அவர்கள் சுதந்தரம் பெற்று வாழ முற்பட்டனர். பிறகு மாஸ்கோவை ஆட்சி செய்த இரண்டாம் ஐவான் (Ivan II) தம்மை ரஷ்ய அரசன் என்று கூறிக்கொண்டார். அவருடைய மகனுன மூன்ரும் ஐவான் 1380-ல் மங்கோலியப் படையை முறியடித்து அவர்களுடைய ஆதிக்கத்தை அறவே ஒழித்தார். இவர் திறமைமிக்க அரசராவர். இவர் நாற்பத்து மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்தார். இந்த அரசன்தான் முதன் முதலில் ஜார் (Tsar or Czar) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். பைசாந்தியப் பேரரசின் இளவரசியான சோபியாவை இவர் மணமுடித்துக்கொண்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் 1453-ல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிள் நகரத்தையும் கைப்பற்றிக்கொண்டனர். சோபியா இளவரசி, அவளுடன் பல கிரேக்க அறிஞர்களையும் அழைத்து வந்தாள். மிகவும் பிற்போக் கான ரஷ்ய மக்களுக்கு, அவர்கள் கல்வி அறிவு புகட்டி, அம் மக்களை நாகரிகமாக்கினர். மூன்ரும் ஐவானுக்குப் பிறகு நான்காம் ஐவான் பட்டத்திற்கு வந்தார். அவர் ஐரோப்பிய நாடுகளுடன் நல்ல தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினர். அதற்காக மேற்கு ஐரோப்பாவில் ஒரு பகுதியைக் கைப்பற்ற வேண்டுமென்று முயற்சி செய்தார். இந்த முயற்சி இவருடைய காலத்தில் வெற்றி பெறவில்லை. இவருடைய காலத்தில்தான் இங்கிலாந்து நாட்டிற்கும், ரஷ்யாவிற்கும் வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டது. 1553-ல் ஓர் ஆங்கிலேய வர்த்தகக் கப்பல் ரஷ்யாவின் வடக்கேயுள்ள வெண் கடலில் (White Sea) இறங்கியது. இந்தியாவுக்கும், சீனுவுக்கும் வடகிழக்கு வழியாக ஒரு கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று வெள்ளையர்கள் முயற்சி செய்துகொண்டிருந்தனர். இக் கப்பல் தலைவனுன ரிச்சர்டு கான்சலர் என்பவரை ஐவான் நல்ல முறையில் வரவேற்று, எச் சமயத்திலும், எப்பொழுதும் ரஷ்யர்களுடன் வர்த்தகம் செய்ய அனுமதி அளிப்பதாக வாக்குறுதி அளித்தார். இங்கிலாந்துக்கும், ரஷ்யாவுக்கும் ஏற்பட்ட வர்த்தக உறவிற்கு இது முதல் தொடக்கமாகும். அப்பொழுது ஆங்கிலேய அரசியாக இருந்த முதலாம் எலிசபெத் இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டதல்லாமல் ஆங்கிலேயத் தூதுவர் ஒருவரையும் ரஷ்யாவில் அமர்த்தினர். நான்காம் ஐவானுக்குப் பிறகு நாட்டில், உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டதால் அங்கே அமைதி அடியோடு சீர்குலைந்து விட்டது. இச் சமயத்தில்தான் ரஷ்யர்கள் ஸ்வீடன் நாட்டைச் சார்ந்த கஸ்டாவஸ் அடால்பஸ் என்ற மன்னரிடம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டனர்.

பீட்டர் மன்னன் பட்டத்திற்கு வரும்பொழுது அவர் மிகவும் இளைஞராகவே இருந்தார். பீட்டர் பத்தாவது வயதிலிருந்தே, அவருடன் ஒன்றுவிட்ட அண்ணன் ஐவானுடன் சேர்ந்தே ரஷ்ய அரசு கட்டிலில் ஏறவேண்டும் என்றும், ஐவானின் தங்கையான சோபியா அதுவரையிலும் ஆட்சி நடத்தி வருவதென்றும் ஏற்பாடாகியிருந்தது. ஆனால், பீட்டர் நல்ல வீரனாகவும், திறமை மிக்கவனாகவும் வளர்ந்து வருவதைப் பார்த்துப் பொறுமையுற்ற சோபியா, அவரைக் கொன்றுவிடத் திட்டமிட்டாள். இச் சதித் திட்டம் எப்படியோ அம்பலமாகிவிட்டது. அப்பொழுது அவள் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த ஸ்டெரெல்டிஸி (Streltsi) என்ற இராணுவப் படையினர் பீட்டரைக் கொன்று விடுவதென்று முடிவு செய்து ஒரு கலகத்தை விளைவித்தனர். பீட்டர் ஒரு மடத்திற்குச் சென்று புகலிடம் பெற்றார். நல்ல சமயத்தில் பீட்டருடைய நண்பனும் சிறந்த தளபதியுமான கார்டன் என்பவர் ஒரு படையுடன் வந்து இக் கலகத்தை அடக்கினர். இம் மாதிரியான இராணுவக் கலகம் மீண்டும் ஒருமுறை நிகழ்ந்தது. கலகம் செய்தவர்களைப் பீட்டர் மிகவும் கடுமையாகத் தண்டித்தார். இக் கலகத்திற்கு மூலகாரணமாக இருந்த சோபியாவைச் சிறைச் செய்து ஒரு கன்னி மடத்திற்கு அனுப்பிவிட்டார். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவள் அங்கேயே இறந்துவிட்டாள்.

இக் கலகங்களை அடக்கிய உடன் பீட்டர் எவ்விதத் தடையும் இன்றி முழு அரசனாகப் பதவியேற்றார். பீட்டர் சிறு வயதிலேயே அவருக்கென்று சில கொள்கைகளை வகுத்துக்கொண்டவராவர். கூடியவரையிலும், அவற்றைப் பின்பற்ற வேண்டுமென்று உறுதிகொண்டிருந்தார். ரஷ்யாவில் நிலையான அரசாங்கத்தை நிறுவவும், அங்கே ஒழுங்கையும், அமைதியையும் ஏற்படுத்தவும் அவர் பலமிக்கதொரு இராணுவத்தை உருவாக்கினர். சிறு வயதிலேயே, அவர் தம்முடைய நண்பர்களையெல்லாம் அழைத்து அவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து வந்தார். இப் பயிற்சியெல்லாம் பிரியோ பிராஸிஸ்கி (Preo Brazisk) என்ற அரண்மனையில் நிகழ்ந்தது. அவருடைய தோழர்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, அவர்கள் விருப்பப்படி நடந்து வருவதைக் கண்டு மனமுடைந்து, அவர்களுக்குச் சிறந்த ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதித்தார். முதலில் ஐம்பது இளைஞர்களைக் கொண்ட இக்குழு பிறகு பெரிய இராணுவப் படையாக மாறிவிட்டது. சிறு வயதிலிருந்தே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கொள்கைகளாகக் கொண்ட பீட்டர் அவருடைய முரட்டுச் சுபாவத்தையும், ஒழுக்கமற்ற வாழ்க்கையும் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது விந்தையாகும். ஒரு சமயத்தில்

பெர்லின் நகரத்தில், பிரஷ்ய நாட்டு இளவரசனுல் கொடுக்கப் பட்ட ஒரு விருந்து நிகழ்ச்சியில், பீட்டர் தம்முடைய நிதானத்தை இழந்து, தமக்கு வேண்டிய நண்பரும், சிறந்த தளபதியுமான லேஃபார்ட் (Lefort) என்பவரைக் கத்தியால் குத்த முற்பட்டார். அவருடைய இந்த வெறிச் செய்கையை உணர்ந்து, பிறகு அவரிடம் மன்னிப்புக் கேட்டதுமின்றி, "ரஷ்ய மக்களைச் சீர்திருத்தம் செய்ய முயன்றுவரும் நான் என்னையே சீர்திருத்தம் செய்து கொள்ள முடியவில்லையே" என்று வருந்தினர். முறையான படிப்பும் போதிய அறிவு வளர்ச்சியும் இல்லாதது, பீட்டருக்குப் பெரும் குறையாகும். எனினும் இக் குறையைப் போக்குவதற்கு, அவர் பல அந்நிய நாடுகளுக்குச் சென்று புதிய அனுபவங் களைப்பெற முயற்சி செய்தார். பிரஷ்யா, ஹாலந்து, இங்கிலாந்து ஆகிய பல ஐரோப்பிய நாடுகளுக்கு அவர் விஜயம் செய்து, அங்குள்ள ஆட்சி முறைகளையும் நன்கு தெரிந்துகொண்டார். இங்கிலாந்திலும், ஹாலந்திலும் அவர் கப்பல் கட்டும் தொழிற் சாலையில் மாறு பெயரில், ஒரு சாதாரண தொழிலாளி யாகவே பணியாற்றிக், கப்பலை நிர்மாணிக்கும் தொழில் நுட்பங்களை நன்கு அறிந்துகொண்டார். ரஷ்யாவைப் பெரிய வல்லரசாக்கவும், பிறர் அதைப் போற்றவும் வேண்டுமென்றுல், சிறந்த இராணு வத்தைத் தவிர நல்லதொரு கடற்படையும் வேண்டுமென்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் கப்பல் கட்டும் தொழிலில் நல்ல அனுபவமும் பெற்றிருந்ததால், ரஷ்யாவிலும், சிறந்ததொரு கப்பல் கட்டும் தொழிற்சாலையை நிர்மாணித்தார். மேலும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சிறந்த போர் வீரர்களையும், திறமை மிக்கத் தொழில் வல்லுநர்களையும் மற்றும் பல கலைஞர்களையும் ஏராளமான பொருட் செலவில் ரஷ்யாவுக்குக் கொண்டுவந்தார். ரஷ்ய மக்களைச் சீர்திருத்தம் செய்வதென்றுல், முதலில் அவர் களுடைய பழங்கால நடைமுறை பாவனைகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினர். வெறும் வார்த்தைகளால், அவர்கள் மாறமாட்டார் கள் என்பதை உணர்ந்த அவர், அவற்றை ஆணைகளாகவே மக்கள் கருத வேண்டுமென்று உத்தரவிட்டார். எதிர்ப்பு இருந்த போதிலுங்கூடப் படிப்படியாக அவர்கள் ஐரோப்பியர்களைப் போன்று உடை உடுத்திக் கொள்வதிலும், கல்வி கற்பதிலும், சமூகப் பழக்க வழக்கங்களிலும் பழகிவிட்டதால், ரஷ்யர்கள் முதல் முதலாக நாகரிகத்தின் பாதையில் அடியெடுத்து வைத்தனர். ரஷ்யர்களது நீண்ட தாடிகளும் அகற்றப் பெற்றன. பீட்டரே கத்தரிக்கோலைக் கையில் எடுத்துக் கொண்டு தாடிக்காரர்களைப் பார்த்து, அவர்களது தாடிகளை வெட்டி விடுவதாகப் பயமுறுத்தி வந்தார். மேலும்

ஐரோப்பியக் கலைகள், கட்டடங்கள், இசை, கல்வி, ஆகிய எல்லாத் துறைகளிலும் "ஐரோப்பிய மயம்" ஏற்பட்டது. அவ்விதமான மாறுதல்கள் அந் நாட்டு மக்களுக்குப் புதிய நம்பிக்கையும் தைரியத்தையும் கொடுத்தன. அவர்களும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல், வர்த்தகம், சமுதாய விவகாரங்களில் தலையிடுவதற்கும் அவர்களையும் மற்ற ஐரோப்பிய நாடுகள் மதிக்கத்தக்க நிலையை ஏற்படுத்தித் தந்தவர் மாபெரும் பீட்டரேயாவர். இவருடைய சீர்திருத்தங்களை எதிர்த்தவர்களில் முக்கியமானவர், அவருடைய மகன் அலக்சஸ் என்பவராவர். அவர் தந்தைக்கு முற்றிலும் மாறுபட்டக் கொள்கைகளை உடையவர். சீர்திருத்தங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. சோம்பேறித்தனமாகவும் உல்லாசமாகவும் அவர் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தார். பலமுறை பீட்டர் அவரை ஆட்சி முறையில் தேர்ச்சிப்பெற பயிற்சி அளிக்க முன் வந்தும் அவர் அதைப்பற்றிக் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. அதனால், பீட்டர் அவரை வெறுத்து உதாசீனம் செய்துவிட்டார். பீட்டர், தாம் புதிதாகக் கட்டிய பீட்டர்ஸ்பர்க் நகரத்தை அலங்கரிப்பதிலும், அதனைத் தலைநகராக்குவதிலும் முனைந்திருக்கும்பொழுது அலக்சஸ், "நான் அரசனான பிறகு, மீண்டும் மாஸ்கோவைத் தான் தலைநகராக்குவேன்" என்று தந்தையின் முயற்சியை அலட்சியம் செய்து பிரச்சாரம் செய்துவந்தார். பீட்டர் வெளி நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருக்கும்பொழுது அலக்சஸ் ஜெர்மனிக்குச் சென்று தலைமறைவாக இருந்துவிட்டார். அவரைக் கண்டுபிடித்து, பிறகு அவர் மீது "தேசத் துரோகக் குற்றச்சாட்டை" விதித்து மரண தண்டனை அளித்தார். மகனையும் கூட மரண தண்டனைக்குள்ளாக்கியப் பீட்டரின் கொடிய மனப் பான்மை இந் நிகழ்ச்சியால் நன்கு வெளிப்படுகிறது.

வெளிநாட்டுக் கொள்கை

ரஷ்யா ஐரோப்பாவில் சிறந்த நாடாக விளங்கவேண்டுமென்றால், பால்டிக் கடலில் ஆதிக்கம் பெறவேண்டும் என்று அவர் முடிவுசெய்தார். பால்டிக் கடலின் ஆதிக்கம் ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு பெறுவதற்குச் சாத்தியமாக இருக்குமென்று அவர் கருதினார். அதனால்தான் அங்கே எப்படியும் "ஒரு ஜன்னலைத் திறந்து", ஐரோப்பிய விவகாரங்களை உற்று நோக்க வேண்டுமென்று அவர் உறுதிகொண்டார். ஆனால், பால்டிக் கடல் அக் காலத்தில் "ஸ்வீடனுடைய ஏரியாகத்"தானிருந்தது. அப் பக்கம் ரஷ்யர்கள் வராதபடி, கஸ்டாவஸ் அடால்பஸ் என்பவர் மிகவும் பயமுறுத்தி வைத்திருந்தார். அவருக்குப் பிறகு வந்த பன்னிரண்டாம் சார்லஸ் அப்பொழுது பன்னிரண்டு

வயதுதான் நிரம்பப் பெற்றவராக இருந்தபோதிலும் அவர் மிகச் சிறந்த தளபதி என்று புகழ் பெற்றிருந்தார். பீட்டரின் சிறந்த தளபதிகளான கார்டனும், லேயார்டும் அப்பொழுது இறந்து விட்டனர். இருப்பினும் தம்மைத்தாமே நம்பி வாழவேண்டு மென்று அவர் உறுதிகொண்டிருந்தார். பீட்டர் மீண்டும் நல்ல முறையில் இராணுவத்தைச் சீரமைத்து, ஸ்வீடன்மீது படை யெடுப்பதற்குத் தயாரானார். ஸ்வீடன்மீது படையெடுப்பது அச் சமயத்தில் அவ்வளவு எளிதான காரியமல்ல. அதனால் பீட்டர் போலந்து அரசருடன் ஒரு நேச உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படிப் போலந்து மன்னன் ஸ்வீடனைச் சார்ந்த லிவோனியா மாகாணத்தின்மீது படையெடுப்பதென்றும், சேர்ந்தாற்போல ரஷ்யர்கள் எஸ்தோனியா மாகாணத்தின்மீது படையெடுப்பதென்றும் முடிவு செய்யப்பெற்றது. வைக்கிங் வம்சாவளியைச் சேர்ந்த மிகவும் திறமை மிக்கப் பன்னிரண்டாம் சார்லஸ் இவர்களுடைய போர் திட்டங்களைக் கண்டு கலங்க வில்லை. எஸ்தோனியா மாகாணத்திலுள்ள நார்வா நகரத்தை ரஷ்யர்கள் தாக்கினர். சார்லஸ் ஒரு சிறிய படையுடன் அங்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது நல்ல பனிப்பெய்து கொண் டிருந்தது. ஸ்வீடனிலிருந்து ஒரு படை ரஷ்யர்களை எதிர்நோக்கி வருவதுங்கூட ரஷ்யர்களுடைய கண்களுக்குத் தெரியவில்லை. நல்ல சமயம் பார்த்து, சார்லஸின் படை ரஷ்யர்களைத் தாக்கி, இரண்டு மணி நேரத்தில் ரஷ்யர்களை விரட்டிவிட்டனர். சார்லஸின் படையில் இருந்தவர்களைவிட, சிறைப்பிடிக்கப்பெற்ற ரஷ்யர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்தது. பீட்டர் இப்போரில் கலந்து கொள்ளவில்லை. தோல்வியுற்ற இச் செய்தியைப் பீட்டர் அமைதியாகவும் அலட்சியமாகவும் கேட்டுக்கொண்டார். "நாம் எப்படி அவர்களை வெற்றிப் பெறுவது, என்பதைத் தெரிந்து கொள்வதற்கான நல்ல பாடத்தை ஸ்வீடன் நமக்குக் கற்பித்திருக் கிறது" என்று அவர் கூறினர். அதற்குப் பிறகு, ரஷ்யர்கள் மீண்டும் ஸ்வீடன்மீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தனர். சார்லஸ் மன்னன் அவர்களுடைய யுத்த ஏற்பாடுகளை அலட்சியம் செய்து, போலந்திற்குள் நுழைந்து பல நகரங்களைச் சூறையாடிக்கொண்டிருந்தார்.

இச் சமயத்தில் நேவா நதிக்கரையிலுள்ள நோட்பர்க் என்ற சிறிய இடத்தை ரஷ்யர்கள் 1702-ல் பிடித்துக்கொண்டனர். இவ் வெற்றியைப் பீட்டர் மிகவும் முக்கியமான வெற்றியாகக் கருதினர். அதற்கு அருகில்தான் அடுத்த ஆண்டில் பீட்டர்ஸ்பர்க் என்ற புதிய நகரை நிர்மாணிப்பதற்கு அவர் அஸ்திவாரமிட்டார். இந்த நகரின் எதிர்காலத்தை ஒட்டித்தான்

ரஷ்ய மக்களின் நல்வாழ்க்கையும் நாகரிகமும் ஏற்படும் என்று அவர் உறுதியாக நம்பினார். அதனால்தான் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கு நியமித்து, இந்த நகரத்தைக் கட்டுவிக்கத் தொடங்கினார். 1704-ல் எங்கு முதன்முதலில் ரஷ்யர்கள் ஸ்வீடனால் தோற்கடிக்கப்பெற்றனரோ, அதே நார்வா என்ற இடத்தில் போரைத் தொடங்கிப் பல எதிர்ப்புக்களுக்கிடையே அந்த நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். பழி வாங்கும் வகையில் இப் படையெடுப்பு அமைந்திருந்தது. ரஷ்யர்கள் ஒழுங்கீனமாகவும், மிகவும் கொடுமையாகவும் இந்த வெற்றிக்குப் பின்னர் நடந்து கொண்டனர். அந்த நகரத்தைச் சூறையாடியதல்லாமல், அந்த நகரத்து மக்களையும் கொன்றுகுவித்தக் காட்சி பீட்டருக்கே பொறுக்கவில்லை. இக் கொடுமைகளை நிறுத்தும்படி, அவர் உடனடியாக உத்தரவிட்டார். அவரது உத்தரவுகளை மதிக்காது, கொடுமைகளைத் தொடர்ந்து செய்து வந்த சில படை வீரர்களை அவர் கைப்படக் கொன்றார். நார்வா நகரைப் பிடித்த பிறகு இன்கிரியா என்ற மாகாணமே அவர் ஆதிக்கத்திற்குள் வந்து விட்டது. பிடித்தப் பகுதியைப் பாதுகாக்க அலெக்சாந்தர் மென்சிகாப் என்ற தளபதியை அங்கு விட்டுவைத்தார். இந்தத் தளபதி ஆரம்பத்தில் மாஸ்கோ நகரத்து வீதிகளில் கடலை விற்றுக் கொண்டிருந்தவர். இவருடைய திறமையைக் கண்டு பீட்டர் இவரைத் தளபதியாக்கினர்.

மிகவும் அதிர்ச்சியடைந்த பன்னிரண்டாம் சார்லஸ் மன்னன் போலந்துமீது அதிக உக்கிரமாகத் தாக்கினர். பிறகு ரஷ்யாமீது படையெடுத்துச் சென்றார். "ஜார் மன்னனுக்கு நல்ல பாடத்தைக் கற்பிக்கச் சிறந்த இடம் மாஸ்கோதான்" என்று பெருமிதமாகப் பேசி ரஷ்யாவை நோக்கிப் படையெடுத்தார். அவர் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி கிழக்குத் திசையில் மாஸ்கோ நகரை அடையாது தெற்கே சென்று யூக்ரேய்ன் பகுதிகளில் படையெடுத்தது அவர் புரிந்த பெரிய தவறாகும். இதற்கு முக்கிய காரணமாக இருந்தது, கொசாக்கர்களின் தளபதியான மேஸப்பா என்பவராவர். யூக்ரேய்ன் பகுதியில் அப்பொழுது கடுமையாகப் பனிப் பெய்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான ஸ்வீடிஷ் போர் வீரர்கள் குளிரின் கொடுமை தாங்காது, பசியினாலும் பிணியினாலும் மாண்டுவிட்டனர். இவ்வளவு இடையூறுகளையும் பொருட்படுத்தாது, அசட்டுத்தனமாகத் தன் படைகளைச் சார்லஸ் முன் நடத்திச் சென்றார். தென்மேற்கு ரஷ்யாவிலுள்ள புல்டாவா என்ற இடத்தில் ஒரு பெரிய போர் நிகழ்ந்தது. ஸ்வீடிஷ் படை வீரர்கள் தங்களுடைய இன்னல்களையும் பொருட்படுத்தாது மிகச் சிறந்த முறையில் போரிட்டனர்.

சார்லஸ் மன்னனின் வீரச் செயல்கள் இப் போரில் பளிச்சிட்டன. ஆனால், வெற்றி ரஷ்யர்களுக்குக் கிடைத்தது. இவ் வெற்றிக்குப் பின், சார்லஸ் துருக்கிக்கு ஓடிவிட்டார். அங்கே சுமார் ஐந்து ஆண்டுகள் தங்கியிருந்தார். இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் ஸ்வீடனுடைய பெரும் பகுதியை ரஷ்யாவும், போலந்தும் ஆக்கிரமித்துக்கொண்டன.

எப்படி ஐரோப்பியர்களுடன் தொடர்பு கொள்வதற்குப் பால்டிக்கடல் ஆதிக்கம் அவசியமாக இருந்ததோ, அதைப் போன்றே கீழ்த்திசை நாடுகளுடன் வர்த்தகம் செய்வதற்கும், தவிர அரசியல் தொடர்பு வைத்துக்கொள்வதற்கும் கருங்கடலில் ரஷ்ய ஆதிக்கம் வலுக்க வேண்டுமென்றும் கருதி 1711-ல் துருக்கியின் மீது படையெடுத்தனர். இப் படையெடுப்பில் பீட்டரும், அவருடைய படையும் அழிந்துவிடும்படியான சந்தர்ப்பம் ஒன்று நேர்ந்தது. ஆனால், இந்த நிலையைத் தவிர்த்த பெருமை பீட்டரின் மனைவியான காதரைனைச் சார்ந்ததாகும். இப் படையெடுப்பின்போது காதரைனும் சென்றிருந்தாள். இந்தக் காதரைன் என்பவள் மென்சிகாப் இளவரசியிடம் ஒரு சாதாரண தோழியாகவே முன்னர் பணியாற்றி வந்தாள். இவள்மீது காதல் கொண்டு, பீட்டர் தம்முடன் இவளை அழைத்துக்கொண்டார். அவள் தம் மனைவி என்று வெளிப்படையாகவே அறிவித்தார். துருக்கியரால் தோற்கடிக்கப்பெற்று, மிகுந்த ஆபத்தான நிலையில் இருக்கும்பொழுதுதான் காதரைன் அவளுடைய எல்லா ஆபரணங்களையும், சேமித்து வைத்திருந்த பணத்தையும் துருக்கிச் சுல்தானிடம் தந்து பீட்டரையும் அவரது படையையும் காப்பாற்றினாள். அவளால்தான் துருக்கியர்களுக்கும் பீட்டருக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு அவர் துருக்கிமீது படையெடுப்பதை நிறுத்திக்கொண்டார்.

பீட்டர் தம்முடைய வாழ்நாள் முழுவதும் மிகவும் பாடுபட்டு ரஷ்ய மக்களை நாகரிகமாக்க வேண்டுமென்றும், அவரது நாட்டைப் பிற ஐரோப்பிய நாடுகள் மதிக்க வேண்டுமென்றும் பெரு முயற்சி செய்து ஓரளவிற்கு வெற்றியும் கண்டார். அவருடைய உழைப்பு மிகவும் கடினமானது. 1725-ல், ஐம்பத்து மூன்றுவது வயதில் அவர் உயிர் நீத்தார். அவருடைய குணாதிசயங்கள் குறைபாடுகள் கொண்டதாக இருந்தும், அவர் நாட்டிற்கும், மக்களுக்கும் செய்த சேவை மிகவும் சிறப்பானதாகும். அதனால் ரஷ்ய மக்கள் அவரை ரஷ்யாவின் தந்தையென்றும், மாபெரும் பீட்டர் என்றும் அழைத்தனர்.

3. இரண்டாம் காதரைன் (1762-1796)

பீட்டருக்குப் பிறகு அவருடைய சீர்திருத்தங்களையும் பணிகளையும் தொடர்ந்து செய்தவர் ரஷ்ய அரசி இரண்டாம் காதரைன் என்பவராவர். அவள் மிகவும் திறமைமிக்க அரசியாக விளங்கினர். அவளுடைய கணவன் மூன்றாம் பீட்டர் கொல்லப் படவே, இவள் பட்டத்திற்கு வந்தாள். தன்னுடைய கணவனின் கொலைக்குக் காதரைனும் உடந்தையாக இருந்தாள் என்று ஒரு வதந்தி உலவி வந்தது. காதரைன் அரசியின் தனிப்பட்ட வாழ்க்கை மிகவும் குறைபாடுள்ளதாக இருந்தது. அவளுடைய காமக் களியாட்டங்களுக்கு அளவில்லை. இருப்பினும் பொது வாழ்க்கையில் அவள் ரஷ்ய மக்களுக்கு நல்ல சேவை செய் திருக்கிறாள்.

வெளிநாட்டு விவகாரங்களில் பீட்டரின் கொள்கைகளைப் பின்பற்றினாள். பால்டிக்கிலும், துருக்கியிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதே அவளுடைய குறிக்கோளாகும். அவள் போலந்தின் பலவீனமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த நாட்டின் விவகாரங்களில் அதிகமாகத் தலையிட்டாள். மேலும் போலந்து அரசனுக அவளுடைய நெருங்கிய நண்பனன ஸ்டானிஸ்லாஸ்போனியா டோவஸ்கியை நியமனம் செய்தாள். ரஷ்யாவின் போலந்து ஆக்கிரமிப்புத் துருக்கியின்மீது படை யெடுக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது. ஏனெனில், ரஷ்யாவின் கொடுமைகளைச் சகிக்காது பெருவாரியான போலந்து மக்கள் துருக்கியில் தஞ்சம் புகுந்தனர். ரஷ்யத் துருப்புகள் இவர்களை விரட்டிக்கொண்டு துருக்கியிலும் வந்துவிட்டதால், ரஷ்யாவிற்கும் துருக்கிக்கும் (1768–1774) வரையிலும் போர் ஏற்பட்டது. துருக்கிச் சுல்தானுக்கு ஃபிரான்சின் ஆதரவு இருந்தது. ஃபிரான்சின் தூண்டுதலால்தான் இந்தப் போரும் ஆரம்பிக்கப் பெற்றது. காதரைனுக்குத் துருக்கிச் சுல்தான்மீது போரிட விருப்ப மில்லை யெனினும், சூழ்நிலை காரணமாகப் போரிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ரஷ்ய தளபதிகள் மொலடேவியா, வாலாச்சியா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துப் பிறகு கிரேக்கர் களையும் துருக்கிச் சுல்தானுக்கு எதிராகப் புரட்சி செய்யும்படி தூண்டிவிட்டனர். 1770-ல் நிகழ்ந்த செஸ்மி என்ற கடற்போரில் துருக்கியக் கடற்படை தோற்கடிக்கப்பெற்றது. காதரைனின் கடற் படையில் ஆங்கிலேய மாலுமிகள் பணியாற்றினர்.

1771-ல் ரஷ்ய துருப்புகள் கிரிமியாவைக் கைப்பற்றின. ரஷ்யாவின் துரிதமான வெற்றிகளைக் கண்டு பயந்துபோன மாபெரும் பிரடிரிக் போலந்து விவகாரங்களை விரைவில் முடித்துக்

கொள்ள விரும்பியதால் போலந்தின் முதல் பங்கீட்டை (First Bartition of poland) ஏற்பாடு செய்தார். ஆனால், போர் மட்டும் நீடித்து வந்தது. இச் சமயத்தில்தான் ரஷ்யாவின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள விவசாயிகளும், கொசாக்கர்களும், புகச்சேவின் தலைமையில் அரசியின் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்தனர். அரசிக்கு இப் புரட்சியை அடக்குவது மிகவும் கடின மாகிவிட்டது. இந்தப் புரட்சியின் காரணமாக அவளது துருக்கியப் போரும் தடைப்பட்டது. ஆஸ்டிரியர்களும் ரஷ்யாவின் வெற்றிகளைக் கண்டு அஞ்சி, ரஷ்யாவின்மீது போர் தொடுக்கும் எண்ணம் கொண்டிருந்தனர். இப்படியே விட்டு விட்டால், பெரிய ஐரோப்பிய போர் ஏற்படலாம் என்று கருதிப் பிரடிரிக் இந்தப் போலந்து பங்கீட்டை ஏற்பாடு செய்தார். இந்தப் பங்கீடு ஒரு வழிப்பறிக் கொள்ளையைப் போன்றதாகும். ஆஸ்டிரியா விற்கும், பிரஷ்யாவிற்கும் பாதகம் விளைவிக்காமல் சில போலந்து பகுதிகளை ரஷ்யா எடுத்துக் கொள்வதில் தடை ஏதுமில்லை என்று முடிவு செய்யப்பெற்றது. மேலும் இந்தக் கொள்ளையில் ஆஸ்டிரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் பங்கு தரப்பட்டது. இதன்படி போலந்திலுள்ள வெண் ரஷ்யப் பகுதியையும் (White Russia), டிவினுவிற்கும், டினைப்பர் பகுதிக்கும் இடையேயுள்ள பிரதேசத் தையும் ரஷ்யாவுக்குத் தந்தனர். பிரஷ்யாவிற்கு டேன்ஸிக், தார்ன் பகுதிகளைத் தவிர, போலிஷ் பிரஷ்யாவும் தரப்பட்டது. மொத்தத்தில் போலந்தின் மூன்றில் ஒரு பாகத்தையும், அங்குக் குடியிருப்பவர்களின் ஐம்பது சதவிகித மக்களையும், ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்டிரியா ஆக்கிரமித்துக்கொண்டன.

1774 ஜூலை 21ஆம் தேதியன்று ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் ஏற்பட்ட போர் நின்றது. குசுக் கைநார்ஜி (Kuchuk Kainarji) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கையும் செய்துகொள்ளப்பெற்றது. இதனால் ரஷ்யாவிற்குக் கின்பர்ன், யெனிகேல், கெர்ட்ச் ஆகிய கிரிமியாவில் உள்ள பகுதிகளும், கருங்கடலில் ஆதிக்கம் பெற்றது. மொலடேவியா, வலாச்சியா பகுதிகளிலுள்ள கிறித்து வர்கள் சார்பில் தலையிடும்படியான சில உரிமைகளும் ரஷ்யா விற்குத் தரப்பெற்றன.

1783-ல் காதரைன் கிரிமியாவில் அமைதியை நிலைநிறுத்த வேண்டி, அதை ஆக்கிரமித்துக்கொண்டாள். இங்கிலாந்தும் ஆஸ்டிரியாவும் துருக்கியின் கோபத்தைத் தணித்து, ரஷ்யாவின் மீது போர் தொடுக்க வேண்டாமென்று ஆலோசனை கூறின. ஆனால், காதரைன் துருக்கியின்மீது இரண்டாவது முறையாகப் போர் தொடுத்தாள். கிரிமியாவில் உள்ள டார்டார்கள் துருக்கிச் சுல்தா

னுடன் சேர்ந்து ரஷ்யாவிற்குப் பல இடையூறுகளை விளைவித்தனர். இப் போரில் ரஷ்யாவிற்கு உதவியாக ஆஸ்டிரியாவும் சேர்ந்து கொண்டது. ஏற்கனவே 1781-ல் துருக்கியப் பேரரசைச் சீர்குலையச் செய்யவேண்டுமென்று ரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் ஓர் உடன் படிக்கையைச் செய்திருந்தன. ஆஸ்டிரியப் பேரரசின் இரண்டாம் ஜோசப் ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருந்தபோதுதான் இந்த உடன் படிக்கை ஏற்பட்டது.

ரஷ்யத் துருப்புகள் டான்யூப்பின்மீது படையெடுத்தன. ஆனால், இச் சமயத்தில் பின்லாந்துமீது ஸ்வீடன் படையெடுத் திருந்தது. இதனால் ரஷ்யாவின் தாக்குதலில் சிறிது ஆர்வம் குறைந்திருந்தது. மேலும் ஆஸ்டிரியா இப் போரில் ஈடுபடக் கூடாது என்று பிரஷ்யா விரும்பியதால் மெதுவாக ஆஸ்டிரியா பின் வாங்கிக்கொண்டது. இச் சமயத்தில் ஆஸ்டிரியப் படைகள் கைப்பற்றிய பெல்கிரேட்டையும் துருக்கிச் சுல்தானிடம் தந்து விட்டு வடக்குப் போஸ்னியாவில் உள்ள ஒரு சிறு பகுதியைப் பெற்றுக்கொண்டு துருக்கிச் சுல்தானுடன் தனியாக ஓர் ஒப்பந்தத் தைச் செய்துகொண்டனர். அதற்குச் சிஸ்டோவா உடன்படிக்கை (Treaty of Sistova) என்று பெயர். ஆஸ்டிரியர்கள் நல்ல சமயத்தில் போரிலிருந்து விலகிவிட்டபடியாலும், பிரஷ்யாவின் இடையூறுகள் போலந்தில் அதிகமாகிவிட்டதாலும் காதரைன் போரை நிறுத்திக்கொண்டாள். ஜாஸி என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கையையும் (Treaty of Jassy) செய்து கொள்ளப் பெற்றது. ரஷ்யாவுக்கு இந்த உடன்படிக்கை மூலமாக ஆக்ஸ் கோவ் பகுதியும் (Oczakov) டினஸ்டர் நதிக்கரையோரமுள்ள ஒரு பகுதியும் தரப்பெற்றன. ரஷ்யா துருக்கிக்கு மொலடாவி யாவையும், பெஸரேபியாவையும் திருப்பித் தந்துவிட்டது.

முதல் போலந்து பங்கீட்டிற்குப் பிறகு ரஷ்யாவும் பிரஷ்யாவும் இடைவிடாது போலந்து மக்களுக்கும் போலந்து அரசாங் கத்திற்கும் இடையூறுகளை விளைவித்துக் கொண்டிருந்தன. இதன் காரணமாக, 1793-ல் இரண்டாவது போலந்து பங்கீடு நிகழ்ந்தது. ரஷ்யா லித்துவேனியாவில் பெரும் பகுதியையும் மேற்கு யூக்ரேய்ன் பகுதியையும் ஆக்கிரமித்துக்கொண்டது. ரஷ்யப் படைகள் எப்பொழுதுவேண்டுமென்றாலும் போலந்தில் நுழைய அனுமதிபெற்றது. மேலும் போலந்தின் வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடவும் ரஷ்யாவிற்கு உரிமை தரப்பெற்றது. இந்தப் பங்கீட்டை எதிர்த்துப் போலந்து மக்கள் தாடஸ் கோசூஸ்கோ (Thaddevs Kosscuszko) தலைமையில் ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தினர். இக் கிளர்ச்சி ஒடுக்கப்பெற்றது.

அதனால், மீண்டும் போலந்தைப் பங்குப் போட்டுக் கொள்வதென்று முடிவு செய்தனர். 1795-ல் நிகழ்ந்த போலந்தின் மூன்றாவது பங்கீட்டில், ரஷ்யா, லித்துவேனியாவில் உள்ள எஞ்சியப் பகுதிகளையும் அதன் வசப்படுத்திக்கொண்டது. பிரஷ்யா, வார்சாவை எடுத்துக்கொண்டது. ஆஸ்டிரியா எஞ்சியிருந்த கிராக்கோவ் பகுதியைப் பிடித்துக்கொண்டது. இதனால் ரஷ்யாவின் மதிப்பு, ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் பெரிதும் உயர்ந்துவிட்டது.

உள்நாட்டுக் கொள்கை

ஃபிரான்சிலுள்ள நல்லாட்சி வல்லரசைப் போன்றே ரஷ்யாவிலும் நிறுவவேண்டும் என்று காதரைனுக்கு விருப்பம் இருந்தது. அதனால், ஃபிரான்சின் ஆட்சி முறையைப் பின்பற்ற முயன்றாள். ஆனால், அச் சமயத்தில் ரஷ்யப் பிரபுக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, அவர்களையும் திருப்தி செய்து பல சலுகைகளை அளித்தாள். ஏனெனில், அவள் பட்டத்திற்கு வருவதற்கே, அந்தப் பிரபுக்கள்தான் காரணமாக இருந்தனர். தென் கிழக்கு ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு, அவள் மாகாண நிர்வாகத்தில் அதிக அக்கரை எடுத்துக்கொண்டாள். மாகாண நிர்வாகத்திலுள்ள பல அரசியல் நிறுவனங்களிடையே நல்ல உறவை ஏற்படுத்திக்கொண்டாள். இந்த மாகாண நிர்வாகத்தில் பிரபுக்களுக்கு நிறைய அதிகாரங்களையும் அளித்தாள். பிரபுக்களுக்குப் பிடிக்காத விவசாயிகளின் பிரச்சினைகளில் அவள் தலையிடவில்லை. காதரைன், நாட்டில் கல்வி, இலக்கியம், சிற்பம் ஆகிய கலைகள் வளர நல்ல ஆதரவு அளித்தாள். அதனால், மக்களுடைய மூடப்பழக்க வழக்கங்கள் சிறிது குறைந்தன. ரஷ்யாவிற்கு ஒரே சட்டத் தொகுப்பு அவசியம் என்று உணர்ந்ததால், மாஸ்கோவில் பல பிரதிநிதிகள் கொண்ட ஒரு சட்டக் குழுவை 1767–1768-ல் நியமித்தாள். சட்டக் குழு பிரதிநிதிகளிடையே ஏற்பட்ட பலத்த விவாதங்களால் ஒரு முடிவும் ஏற்படவில்லை. மாபெரும் பீட்டர் வகுத்த வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைகளில் இவள் நம்பிக்கை வைத்து, ரஷ்யாவின் மதிப்பை மிகவும் உயர்த்தினாள். இளவரசியை ரஷ்ய மக்கள் "மாபெரும் காதரைன் அரசி" (Catherine the Great) என்று அன்புடன் அழைத்தனர்.

4. இரண்டாம் மகா பிரடிரிக் (1740–86)
(Frederick the Great)

இரண்டாம் பிரடிரிக், பிரடிரிக் வில்லியம் என்ற பிரஷ்ய அரசரின் புதல்வனுவர். பிரடிரிக் வில்லியம், பிரஷ்யாவின்

இராணுவ வலிமையை மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு உணர்த்தினர். அவர் திறமைமிக்கப் பிரஷ்யப் படையைத் திரட்டு வதிலேயே ஆர்வம் உடையவராக இருந்தார். அதனால்தான் அவரைச் "சார்ஜன்ட் அரசர்" என்று கூறுவர். அவ்வளவு ஆர்வம் இராணுவத்தில் கொண்டிருந்ததால், அவர் தம் மகனையும் ஒரு பெரிய இராணுவ தளபதியாக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவராக இருந்தார். ஆனால், பிரடிரிக் இளைஞராக இருந்த பொழுது, இலக்கியத்திலும் இசையிலும் அதிகப் பற்றுடையவராக இருந்தார். அதனால் தந்தைக்கும் மகனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மகனைச் சிறையிலும் அடைக்கச் செய்தார். அதனால் மட்டும் மகனுடைய மனம் மாறிவிடும் என்று அவர் நினைத்தார். ஆனால், அவர் மனம் மாறவில்லை. பிரடிரிக் வில்லியமின் நெருங்கிய உறவினர்கள் தலையிட்டுப் பிரடிரிக்கை விடுதலை செய்தனர்.

ஆனால், இரண்டாம் பிரடிரிக் பட்டத்திற்கு வந்தவுடன் அனைவரும் வியக்கும்படி, அவர் இராணுவத்தில் ஈடுபட்டதுமன்றி, ஐரோப்பாவிலேயே அவரைப்போன்ற முதல் தரமான தளபதி யாரும் அப்பொழுது இல்லை என்ற பெரும் புகழையும் பெற்றார்.

ஒளிர்வுசால் வல்லரசுகளில் இரண்டாம் பிரடிரிக் முன்னணி யில் நிற்கிறார். அவர் மக்களின் தலைசிறந்த பணியாளனைத் தம்மைக்கருதிக் கொண்டார். ஆனால், அவரும் முழு எதேச்சாதிகார ஆட்சியைத்தான் மேற்கொண்டார். தம் ஆட்சியின்கீழுள்ள எல்லா அரசாங்க நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு துறையிலும் அனுபவம் மிக்க, திறமை மிக்க அதிகாரிகளை நியமித்து, அவர்களெல்லாம் அரசனிடத்திலே பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவருடைய மேற்பார்வையில்தான் ஒவ்வொரு நிறுவனமும் செயலுற்றது. காடுகளை அகற்றி, கழனிகளை ஏற்படுத்தி, நிலங்களைச் சாகுபடிக் கேற்ப உருவாக்கிக் கொடுத்தார். அவரே குடியானவர்களுக்கு நேரடியாக, ஆடுமாடுகளையும் விதைகளையும், மற்ற கடன் உதவி களையும் அளித்தார். அவருடைய காலத்தில் பிரஷ்யாவிலும், போமிரேனியாவிலும், மேக்டிபெர்க்கிலும், பலர் வெளிநாடுகளி லிருந்து வந்து குடியேறினர். ஃபிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்ட பல 'ஹ்யூகனோட்டுகள்' பிரஷ்யாவில் குடியேறினர். பிரடிரிக் அவர்களுக்கு ஆதரவு அளித்தார். அவர்களுடைய சமய உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளித்தார். ஹ்யூகனோட்டுகள் தொழில் வல்லுநர்களாக இருந்ததால் பிரஷ்யாவில் அவர்கள் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கப் பல உதவிகளை அளித்தார். அவருடைய காலத்தில், சில்க், வெல்வெட், லினன் ஆகிய

உற்பத்திப் பொருள்களுக்கு ஆதரவு அளித்தார். இரும்பு, ஈயம் போன்ற உலோகப் பொருள்கள் எடுக்கும் சுரங்கத் தொழிற் சாலைகள் நிறுவப்பெற்றன. நாட்டிலே, ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாக்க ஒரு பொதுச் சட்டத்தை உருவாக்கினர். அவர் எல்லாச் சமயங்களைச் சார்ந்த மக்களிடமும் அன்பாக நடந்து கொண்டார். இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த துருக்கியர்கள் பிரஷ்யாவில் வந்து குடியேறினாலும் அவர்களுக்கு வேண்டியப் பள்ளிவாசல்களைக் கட்டித் தருவதாக அவர் கூறினர். சமயப் பொறையில்லாத அந்தக் காலத்தில் இவ்வித நாகரிகப் பண்பாடு அவரிடம் அமைந்திருந்தது. அவர் சிறந்த இலக்கிய மேதைகளுக்கு ஆதரவு அளித்தார். அவருக்குச் சிறு வயதிலிருந்தே, ஃபிரெஞ்சு மொழியில் நல்ல ஆர்வம் இருந்தது. அப்பொழுது ஃபிரான்சிலிருந்த மிகவும் புகழ்பெற்ற இலக்கிய மேதையான வால்டேர் என்பவர் இவருடைய நெருங்கிய நண்பராகச் சில காலம் பெர்லினிலேயே இருந்து வந்தார்.

வெளிநாட்டுக் கொள்கை

இரண்டாம் பிரடிரிக் எப்படியாவது பிரஷ்யாவின் எல்லைகளை விஸ்தரிக்க வேண்டுமென்று நினைத்தார். அப்பொழுது அவருக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. ஆஸ்டிரியப் பேரரசரான ஆரும் சார்லஸ் ஆண் சந்ததியின்றி இறந்துவிடவே அவருடைய மகளான மேரியாதெரிசா, ஆஸ்டிரியாவின் பேரரசியானார். மேரியா தெரிசா பட்டத்திற்கு வருவதற்குப் பல எதிர்ப்புகள் ஏற்படுமென்று ஊகித்த ஆரும் சார்லஸ் ஏற்கனவே ஐரோப்பிய அரசர்களை அழைத்து அவர்களிடம் மேரியாதெரிசாவை ஆஸ்டிரியாவின் பட்டத்து அரசியாக்க, அவர்களிடமிருந்து பொதுவான சம்மதம் பெற்றிருந்தார். அந்த ஒப்பந்தத்தில் பிரடிரிக்கின் தந்தையும்கூடக் கையெழுத்திட்டிருந்தார். ஆனால், மேரியாதெரிசா பட்டத்தரசியான உடனேயே, இரண்டாம் பிரடிரிக் ஒரு படையை அனுப்பி சைலிஷியா (Silesia) என்ற வளம் மிக்கப் பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டார். அவருடைய ஆக்கிரமிப்பு ஒரு பெரிய ஐரோப்பியப் போருக்கே காரணமாகிவிட்டது. அந்தப் போரை ஆஸ்டிரிய வாரிசுரிமைப் போர் (1740–48) என்று அழைப்பர். இப் போரில் ஃபிரான்ஸ் பிரஷ்யாவிற்கும், இங்கிலாந்து ஆஸ்டிரியாவிற்கும் உதவி செய்தன. இப் போர் 1748-ல் முடிவுற்றது. இதற்குப் பிறகு, அயிஸ்-லா-சாப்பேல் (Aix-La-Chapelle) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கையும் ஏற்பட்டது. அந்த உடன் படிக்கையின்படி, பழைய நிலைமை அப்படியே நீடிப்பது என்றும், ஆனால், சைலிஷியாவைப் பிரடிரிக் வைத்துக் கொள்வதென்றும் ஏற்பாடாகியது.

ஆனால், மேரியாதெரிசாவிற்கு இந்த உடன்படிக்கை பெரும் ஏமாற்றத்தையே அளித்தது. பிரடிரிக்கிடம் சைலிஷியா இருக்கும் வரையிலும் அந்த அரசியால் தூங்க முடியவில்லை. அதனால் அவள் மீண்டும் ஐரோப்பிய அரசர்களிடம் முறையிட்டாள். எப்படியும் சைலிஷியாவை அவள் திரும்பவும்பெற பெரும் முயற்சியில் ஈடுபட்டாள்.

அதன் விளைவாகத்தான் மற்றொரு ஐரோப்பியப் போர் ஏற்பட்டது. ஏழாண்டுக் காலம் அந்தப் போர் நிகழ்ந்ததால், அந்தப் போருக்கு ஏழாண்டுப் போர் (Seven Years War, 1756–63) என்று அழைத்தனர். இந்தப் போரில் ஃபிரான்ஸ் ஆஸ்டிரியா விற்கு உதவி செய்ய முன் வந்தது. ஃபிரான்சின் உதவியைப் பெற்றுள்தான் தம்முடைய நிலப்பகுதிகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று மேரியாதெரிசா கருதினாள். இதுவரையிலும், ஃபிரான்சிற்கும் ஆஸ்டிரியாவிற்கும் பகைமை இருந்து வந்தது. ஆனால், பழைய பகைமையை மறந்து இவ்விரண்டு நாடுகளுக்கு இடையே நட்புறவு ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்தவர் ஆஸ்டிரியாவின் அரசியல் தூதுவராக இருந்த காளிட்ஸ் என்பவரே யாவர். ஆஸ்டிரியாவின் சார்பாக, ஃபிரான்ஸ் மட்டுமல்லாது, ரஷ்யாவும், ஸ்வீடனும், சாக்சனியும்கூட உதவி செய்தன. பிரஷ்யாவிற்கு, இங்கிலாந்து மட்டுமே உதவி செய்தது. ஃபிரான்சும் இங்கிலாந்தும் மீண்டும் ஐரோப்பியப் போரில் ஈடுபட்டதால், அவைகளுக்குச் சொந்தமான காலனிகள் உலகில் எங்கெங்கு இருந்தனவோ, அங்கெல்லாம் இப் போர் நிகழ்ந்தது. அதனால், அமெரிக்காவிலும், இந்தியாவிலும்கூட இப் போர் நிகழ்ந்தது. தவிர, இப் போர் ஐரோப்பாவின் பல போர் முனை களிலும் நிகழ்ந்தது. அதனால் பிரடிரிக்கோடு தொடர்புள்ள இப் போரின் சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கு கூறுவோம்.

பிரடிரிக் இவ்வளவு பெரிய கூட்டணியை எதிர்பார்க்கவில்லை. தவிர, இங்கிலாந்தின் உதவியும் அவருக்குத் திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. இங்கிலாந்தின் கடற்படை ஃபிரான்சின் கவனத்தை ஈர்த்திருந்ததால், அவருடைய மற்ற எதிரிகளின் கவனம் முழுவதும் பிரஷ்யாவை வளைத்துப் பிடித்துக் கொள்வதி லேயே இருந்தது. பிரஷ்யாவின்மீது நான்கு புறங்களிலிருந்தும் தாக்குதல்கள் கிளம்பின. ஆனால், பிரடிரிக் எதிரிகள் தாக்குகின்ற வரையிலும் காத்துக் கொண்டிருக்கவில்லை. அவர் மின்னல் வேகத்தில் படைகளை முதலில் செலுத்திச் சாக்ஸனியை ஆக்கிர மித்துக்கொண்டார். பிறகு அங்கிருந்து பொஹிமியாவிற்குள் படை களைச் செலுத்தி, அதன் தலைநகரான பிரேக் என்ற நகரத்தையும்

தம் வசமாக்கிக்கொண்டார். 1757-ல் எதிரிகளால் தோற்கடிக்கப் படவே மேலும் அவரால் முன்னேறிச் செல்ல முடியவில்லை. மேற்குப் பக்கமாக ஃபிரான்ஸ் தாக்க முற்பட்டது. ஆஸ்டிரியப் படையினர் சைலிஷியாவைத் தாக்கினர். ரஷ்யர்கள் கிழக்குப் பிரஷ்யாவைத் தாக்கினர். ஸ்வீடன் போமிரேனியாவைத் தாக்கியது. நான்கு புறங்களிலிருந்தும் கிளம்பிய இத் தாக்குதல் களைச் சமாளிப்பது மிகவும் கடினமாகத்தானிருந்தது. இருந்தாலும் பிரடிரிக் மிகவும் வீரத்துடனும், நம்பிக்கையுடனும் ஒவ்வொரு எதிரிப்படையையும் தனித்தனியாகத் தாக்கிப் போரிட்டார். 1757 நவம்பர் 5ஆம் தேதியன்று ஃபிரெஞ்சுப் படையை ரோஸ்பாச் (Rossbach) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். அடுத்த மாதத்திலேயே லூத்தன் (Leuthen) என்ற இடத்தில் ஒரு பெரிய ஆஸ்டிரியப் படையைத் தோற்கடித்தார். இந்த இரண்டுப் போர்க் களங்களிலும் அவர் பெற்ற வெற்றிகள் எதிரிகளைச் சிதறடித்து விட்டன. ஐரோப்பாவின் முதல் தளபதி என்ற பட்டத்தையும் பெற்றார். இச் சமயத்தில் இங்கிலாந்து ஃபிரான்சின்மீது தீவிர மாகத் தாக்கி, அதனுடைய கவனத்தைப் பிரஷ்யாவின்மீது செலுத்த முடியாமல் செய்துவிட்டது. 1758-ல் ஸ்வீடன் இப் போரிலிருந்து விலகிக்கொண்டது. இருந்தபோதிலும் ரஷ்யர்களின் தாக்குதல் மிகவும் பெரிய அளவில் இருந்ததால் அவரால் சமாளிக்க முடியவில்லை. 1759-ல் குனர்ஸ்டார்ப் (Kunersdorf) என்ற போர்க் களத்தில் ரஷ்யர்கள் பிரடிரிக்கின் படைகளைத் தோற்கடித்தனர். 1760-ல் ஆஸ்டிரியர்களும், ரஷ்யர்களும், பிரஷ்யாவைச் சேர்ந்த பல பகுதிகளையும் கைப்பற்றிக்கொண்டனர். தவிர, பெர்லின் நகரத்தை நோக்கியும் முன்னேறிவிட்டனர். பிரடிரிக் இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் தவித்தார். அவருடைய பெரும்படைகள் அழிந்துவிட்டன. இத்தனை ஆண்டுகள் போர் செய்து வந்ததால் அரசாங்க நிதி மிகவும் குறைந்துவிட்டது. இச் சமயத்தில் 1761-ல் இங்கிலாந்தின் பிரதம அமைச்சர், பிட் பதவியிலிருந்து விலகி விட்டார். அவருக்குப் பின்னர் வந்த அமைச்சர் இப் போரில் அதிகக் கவலை கொள்ளவில்லை. இப் போரிலிருந்து விலகிக் கொள்ளவும் ஆலோசனை செய்து வந்தார். இந் நிலையில், பிரடிரிக் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை என்று முடிவு செய்தார். ஆனால், எதிர்பாராதவிதமாக ரஷ்ய அரசியான எலிசபெத் இறந்துவிட்டதால், அவளுக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த மூன்றாம் பீட்டர் பிரடிரிக்கின் நண்பராக இருந்ததால், பிரஷ்யாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டார். அவருக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த அவரது மனைவி காதரைன் 1763-ல் அந்தச் சமாதானத்தை உறுதி செய்து கொண்டாள்.

இதற்குள் இங்கிலாந்தும், ஃபிரான்சும் ஏழாண்டுக் காலம் வரையிலும் போரிட்டு ஓய்ந்துவிட்டதால் அந்த நாடுகளும் விரைவில் 1763-ல் சமாதான உடன்படிக்கையைப் பாரிஸ் நகரில் செய்துகொண்டன. அதற்குப் பாரிஸ் சமாதான உடன்படிக்கை (The Treaty of Paris) என்று பெயர். இதைத் தொடர்ந்து, ஆஸ்டிரியாவும், பிரஷ்யாவும் ஹூபர்ட்ஸ்பர்க் (Hubertsberg) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கையை 1763-ல் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கையின்படி, பிரடிரிக் சைலேஷியாவைத் தம் வசமே வைத்துக்கொண்டார். ஆனால், மேரியா தெரிசாவிற்கு நஷ்ட ஈடு அளிக்கும் வகையில் போலந்தைப் பங்கிட்டுக் கொண்டபோது ஆஸ்டிரியாவிற்குக் கிழக்குக் கேலிஷியாவும் (East Galicia) லொடாமீரியாவும் (Lodomeria) கொடுக்கப்பட்டன. போலந்தைப் பிரஷ்யா, ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் பங்குப் போட்டுக்கொண்டன. இந்த முதல் போலந்து பங்கீட்டிலும் பிரஷ்யாவிற்கு மேற்கிலுள்ள பகுதி கிடைத்தது. அதனால் பிரஷ்யாவின் எல்லைகளும் விரிவடைந்தன. ஐரோப்பிய வல்லரசுகளில், பிரஷ்யாவும் முக்கியமான வல்லரசு என்று கருதப்பட்டது. பிரஷ்யாவின் இச் சிறப்பிற்கு இரண்டாம் பிரடிரிக் மிகவும் முக்கிய காரணமாக இருந்தார்.

போலந்து பிரிவினை 1772

பிரடிரிக் தம்முடைய கடைசிக் காலத்தில் ஒரு பெரிய களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டார். நல்ல பெயரும் புகழும் பெற்றிருந்த அவர் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அங்கீகரித்து, எவ்விதமான காரணமுமின்றி போலந்து நாட்டைக் கொள்ளை அடித்து, அந்த நாட்டைப் பங்குப் போட்டுக்கொண்டனர். இரண்டாவது காதரைன் என்ற ரஷ்ய அரசியார் போலந்தை ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பினாள். இக் காரியத்தில் அவள் பிரடிரிக்கையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டாள். போலந்து நாட்டு அரசன் இறந்தவுடன் அங்கே குழப்பம் ஏற் பட்டது. அந்தச் சமயத்தில் காதரைன் போலந்தை ஆக்கிரமிக்க ஒரு படையை அனுப்பினாள். ஆஸ்டிரியாவையும் எப்படியாவது இந்தச் சிக்கலில் தலையிடாமல் இருக்கச் செய்வதற்காக மேரியா தெரிஸாவிற்குப் போலந்தின் ஒரு பகுதியைப் பரிசாக அளிப்பதாகக் காதரைன் ஆசை காட்டினாள். இந்த லஞ்சத்தை மேரியாதெரிஸா மனமில்லாமலேயே ஒப்புக்கொண்டாள். ஏனெனில், இதை நிராகரித்தால் ரஷ்யாவும் பிரஷ்யாவும் ஒன்று சேர்ந்து அவளுக்கு இடையூறுகளைத் தருவார்கள் என்று அஞ்சினாள். மேலும் அவளுக்கு உதவி செய்ய வேறு எந்த நாடும் அப்பொழுது தயாராக இல்லை. ஐரோப்பிய நாடுகளெல்லாம் போலந்து பிரிவினையை

ஒரே குரலாக எதிர்த்தனர். இருப்பினும் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் போலந்தைப் பங்குப் போட்டுக் கொண்டன. பிரடிரிக்கிற்கு மேற்குப் பிரஷ்யா கிடைத்தது. இதனால் பிரஷ்யாவின் எல்லை பால்டிக் கரையோரம்வரையிலும் பரவியது. அவருடைய வாழ்நாளில் மற்றுமொரு பெரிய நிகழ்ச்சி நடந்தது. ஜெர்மனியின் ஒற்றுமைக்கும், ஜெர்மன் ஒரே நாடாக எப்பொழுதாவது விளங்க வேண்டுமென்று அவர் கண்ட கனவை நனவாக்க அவர் ஜெர்மானிய அரசர்களுடன் ஒரு கூட்டமைப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். இந்த ஒப்பந்தத்தின் அவசியத்தை அப்பொழுதே ஜெர்மனியின் அரசர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். முப்பதாண்டுப் போர் காலத்தில், ஜெர்மனியில் ஒற்றுமை இல்லாததால் ஐரோப்பிய வல்லரசுகள் அந்த நாட்டின் அரசியலில் தலையிட்டன. தவிர, ஆஸ்டிரியாவின் ஆதிக்கம் வளர்ந்து வருவது ஜெர்மனியின் சுதந்தரத்திற்கே ஆபத்து என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். அதனால்தான் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள அவர்கள் முன்வந்தனர். அப்பொழுது ஏற்பட்ட அந்த ஒப்பந்தத்தின் விளைவுகளை யாரும் சரியானபடி புரிந்து கொள்ளவில்லை எனினும், ஜெர்மனி ஒரே ஐக்கிய நாடாகத் திகழ வேண்டுமென்ற பிஸ்மார்க்கின் சாதனைக்குப் பிரடிரிக் வழிகாட்டியாக இருந்தார் என்று கூறுவது மிகையாகாது.

நாற்பத்தேழு ஆண்டுகள்வரை சிறந்த முறையில் ஆட்சி செய்து 1786-ல் அவருடைய 75ஆவது வயதில் அவர் உயிர் நீத்தார். அவருடைய வாழ்நாளிலேயே, பிரஷ்ய மக்கள் அவரை "மாபெரும் பிரடிரிக்" என்று பெருமையுடன் அழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

5. ஆஸ்டிரியப் பேரரசன் இரண்டாம் ஜோசப்

ஆஸ்டிரியப் பேரரசி மேரியாதெரிஸா 1780-ல் இறந்து விடவே, அவளுக்குப் பின்பு, அவளுடைய மகனான இரண்டாம் ஜோசப் பேரரசனாகப் பட்டத்திற்கு வந்தார். ஹாப்ஸ்பர்க் பரம்பரையினருக்குச் சொந்தமான எல்லாப் பகுதிகளும் அவருடைய ஆட்சிக்குட்பட்டவையாகவே இருந்தன.

அவருடைய அன்னை மேரியாதெரிஸாவிற்குப் பெரிய எதிரியாக இருந்த மாபெரும் பிரடிரிக்கின்மீது அளவு கடந்த வெறுப்பும், அந்தச் சமயத்தில் அவருடைய சாதனைகளைக் கண்டு பெருமிதமும் கொண்டிருந்தார். ஒரு நல்ல அரசனுக்கு எடுத்துக் காட்டாக அவர் விளங்கினார் என்று ஜோசப் கருதினார். பிரடிரிக் பிரஷ்யாவில் செய்த சீர்திருத்தங்களைப் போன்று அவர்

ஆஸ்டிரியாவிலும் செய்தார். நாட்டிலுள்ள பல பிளவுபடுத்தும் சக்திகளை அழித்து மன்னனது அதிகாரத்தை வலிமையாக்கப் பெருமுயற்சி செய்தார். சமய வழிபாடுகளில் சகிப்புத் தன்மையைக் காட்டினார். இதனால் ஆஸ்டிரியாவில் பல சமயத் தினரும் ஒன்றுபட்டு வாழவும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டது. நாட்டிலே ஒருமைப்பாட்டை உருவாக்க அவர் மேற்கொண்ட பல வழிகளில், ஜெர்மன் மொழியை ஆட்சி மொழியாக அங்குக் கொண்டு வந்ததேயாகும். அப்பொழுதுதான் மொழி அடிப் படையில் மக்கள் ஒன்றுபட முடியும் என்று கருதினர்.

சமயப் பொறையிழந்த மக்களிடையேயும் இனவெறிக் கொண்ட மக்களிடையேயும் மொழி, மற்றும் பண்பாட்டு வேறு பாடுகள் உடைய மக்களிடமும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது ஜோசப்புக்கு மிகவும் கடினமான காரியமாக இருந்தது. இருப்பினும் பிரஷ்யாவில் பிரடிரிக் இவ்விதமான வேறுபட்ட மக்களை ஒன்றுக இணைத்து ஆட்சி புரிந்து வந்தார் என்ற தூண்டுதலில், இவரும் பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது இந்த முயற்சியைத் துவக்கினர்.

ஆஸ்டிரியாவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது ஏன் முடியாத காரியம் என்றால் கடந்த ஐந்நூறு ஆண்டுகளாகச் சுதந்தரநிலை எய்திய பல நாடுகள் அங்கு எதேச்சையாக ஆட்சி புரிந்து வந்திருக்கின்றன. ஆஸ்டிரியப் பகுதிகள் நீண்ட காலமாகவே ஹாப்ஸ்பர்க் அரச பரம்பரையினருக்குக் கீழ்ப்படிந்து வந்துள்ளன. இதைத் தவிர, ஹங்கேரியிலும், அதனுள் இருந்த டிரான்சில்வேனியா பகுதியிலும் மகயார்கள் என்ற ஓர் இனத்தவர் பெரும்பான்மையாக இருந்தனர். இவர்கள் இனவெறிப் பிடித்த வர்கள். தவிர, இவர்கள் பழைய நிலமானியக் கொள்கையை விட்டுவிட்டுப் புதிய முறைகளைப் பின்பற்றும் எண்ணம் கொள்ள வில்லை. பொஹிமியா மொரேவியா பகுதிகளில் 'செக்' என்ற இனத்தவர் குடியிருந்தனர். அவர்கள் பிராடஸ்டண்டுச் சமயத் தைச் சார்ந்தவர்கள். அவர்களிடையே தேசிய உணர்ச்சி வளர்ந்து வந்தது. கத்தோலிக்கச் சமய அடிப்படையில் மட்டும் சில இத்தாலியப் பகுதிகள் ஆஸ்டிரியாவுடன் சேர்ந்திருந்தன. மொழி, இனம், பண்பாடு ஆகிய எல்லா வகைகளிலும் அவர்கள் வேறு பட்டிருந்தனர்.

யூட்ரக்ட் உடன்படிக்கைக்குப் பிறகு ஆஸ்டிரிய நெதர்லாந்தும் (பெல்ஜியமும்) ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தில் வந்தது. இப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஆஸ்டிரியாவைவிட ஃபிரான்சின்

பக்கமே அதிக ஈடுபாடு இருந்தது. மேலும் மொழியிலும், பண்பாட்டிலும், ஆஸ்டிரிய மக்களிடமிருந்து மிகுந்த வேறு பாடுகளை உடையவர்களாவர். இவ்வளவு வேற்றுமைகளை உடைய மக்களையும், அவர்களுடைய உணர்ச்சிகளையும் ஒன்று படுத்துவதென்பது அவ்வளவு எளிதில் நிறைவேறக்கூடிய சாதனையாக ஜோசப்பிற்குப் படவில்லை. இருப்பினும் அவரால் முடிந்தவரையிலும் இந்த வேற்றுமைகளைக் குறைப்பதில் அவர் ஈடுபட்டிருந்தார். ஜெர்மன் மொழியைப் பொதுவான ஆட்சி மொழியாக்குவதும் மக்களுக்குக் கல்வி வசதிகளைச் செய்து கொடுத்தலும் சமயப் பொறையை நிலைநிறுத்துவதிலும் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால், பல்வேறு பகுதிகளி லுள்ள மக்கள் இப் புதிய சீர்திருத்த மனப்பான்மையையும் தேசிய உணர்ச்சியையும் அறவே வெறுத்தனர். பொஹிமியாவிலும், ஹங்கேரியிலும் கிளர்ச்சிகள் நிகழ்ந்தன. கத்தோலிக்க உரிமை களைக் காக்கப் பெல்ஜியத்திலே புரட்சி நடந்தது. அதனால் அவருடைய திட்டங்கள் நிறைவேறவில்லை. இந்தத் தோல்வியே அவரை விரைவில் இறக்கும்படிச் செய்தது.

6. ஃபிரெஞ்சுப் புரட்சி (1789-1799)

1789-ல் ஃபிரான்சில் ஒரு பெரிய புரட்சி நிகழ்ந்தது. அந்தப் புரட்சி முதலில் அரசியல் புரட்சியாகத் தொடங்கிப் பிறகு சமுதாயத்திலும் சமயத் துறையிலுங்கூடப் புரட்சியை ஏற்படுத் தியது. இதற்கு முன்னர் ஐரோப்பாவிலோ அல்லது உலகிலுள்ள வேறு எந்த நாட்டிலோ இவ்வித புரட்சி ஏற்படவில்லை. இப் புரட்சி ஃபிரான்சிலே ஏற்பட்டதுங்கூட எதிர்பாராதவிதமாகத்தான். இதைத் தொடங்குவதற்குத் திட்டங்கள் முதலிலேயே உருவாக்கப் படவில்லை. அல்லது இப் புரட்சியைக் கொள்கையாக வைத்துக் கொண்டு அரசியல் தலைவர்களோ அல்லது சீர்திருத்தவாதிகளோ முதலிலேயே இப் புரட்சியைப்பற்றிச் சிந்திக்கவில்லை. தொடக் கத்தில் போர்போர்ன் ஆட்சி மக்களுடைய நலன்களைக் கவனிக் காது மிகவும் பொறுப்பற்ற விதமாக நடத்தப்பட்டதால் அவ் வாட்சியில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டு மென்றே மக்கள் நினைத்தனர். ஆனால், சீர்திருத்தங்கள் ஏற்படாமல் போனதால் மக்கள் அதிருப்தியுற்று அரசாங்கத்தை மாற்றி அமைக்க முயன்றனர். நாளடைவில் சமுதாயத்தில் மறைந்து கிடந்த பல குறைபாடுகளும் ஒன்றுகச் சேர்ந்து இப் புரட்சிக்கு விறுவிறுப்பு அளித்தன. அதனால், புரட்சி நீடிப் பதற்குக் கொள்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் ஆகிய தத்துவங்கள் இப் புரட்சியுடன்

தொடர்புபெற்றன. இவற்றை அடைய முற்படும்பொழுது, பொறுப் பற்றத் தனி மனிதனின் எதேச்சாதிகார ஆட்சியை அப்புறப்படுத்தி விட்டு மக்களுடைய குரலுக்கு மதிப்புத் தருகின்ற பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குடியரசு ஆட்சியை ஏற்படுத்த முற்பட்டனர். இப் புரட்சிப் பல கட்டங்களில் புதிய திருப்பங்களைப் பெற்று, எதிர் பாராத விதமாகப் பல புதிய அனுபவங்களையும், படிப்பினையையும் மற்றும் பல புதிய தலைவர்களையும் ஃபிரான்சிற்கு அளித்து வரலாற்றிலேயே புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்தியது என்று கூறினால் மிகையாகாது.

போர்போன் மன்னர்களின் ஆட்சி

பதினென்காம் லூயி மன்னனுடைய ஆட்சிக் காலத்திலிருந்தே ஃபிரான்சில் அரசியல்நிலை சரியில்லை என்று கூறலாம். அவர் ஆயுட் காலத்தில் பெரும்பகுதியைப் போர்களைச் செய்வதிலேயே கழித்துவிட்டார். அதனால், ஃபிரான்சில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. அவருக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த பதினைந்தாம் லூயி சரியானபடி ஆட்சி செய்ய முடியாதநிலை ஏற்பட்டுவிட்டது. பதினைந்தாம் லூயி பல குறைபாடுகளையும் வாரிசாகப் பெற்றதன்றி அவருடைய குண இயல்புகளும் மக்களுக்கு எவ்விதத்திலும் திருப்தி அளிக்காமல் இருந்தன. பதினைந்தாம் லூயி மன்னன்கூட, அப்பொழுது ஐரோப்பாவில் நிகழ்ந்த இரண்டு பெரிய போர்களில் ஈடுபட்டிருந்தார். அத்துடன் அவருடைய ஆடம்பரச் செலவுகளும் மற்றக் கேளிக்கைகளும் அரசாங்க நிதியைக் காலியாக்கிவிட்டன. அவருடைய காதல் கிழத்திகளும், மற்றும் அரசனைச் சுற்றி வலம்வந்த பிரபுக்களும், சீமாட்டிகளும் அரசாங்கப் பணத்தைத் தங்கள் சொந்தப் பணமாகவே நினைத்து செலவு செய்தனர். மக்களுக்கு வேண்டிய தேவைகளைப்பற்றி அரசனும் அதிகாரி களும் சிறிதும் கவலைப்படவில்லை. உணவுப் பற்றுக்குறையும் பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து நாட்டிலே மிகுந்த அதிருப்தியான நிலையை ஏற்படுத்திவிட்டன. அப்பொழுதிருந்தே மக்கள் குமுறிக்கொண்டிருந்தனர். பதினைந்தாம் லூயி மட்டும் குமுறிக்கொண்டிருந்த மக்களின் உணர்ச்சியை நன்றாக உணர்ந்து கொண்டார். ''எனக்குப்பின் பிரளயம்'' ஏற்படப் போகின்றது என்று கூறினாரே தவிர, பிரளயம் ஏற்படாமல் தடுப்பதற்கு அவர் எதுவும் செய்யவில்லை. அவருடைய நீண்டகால ஆட்சி முடிவுற்ற பொழுது மக்கள் பெருமூச்சுவிட்டனர்.

அவருக்குப்பின் பதவிக்கு வந்தவர் பதினாறும் லூயி என்னும் அரசனுவர். அவர் மிகவும் நல்லவர்தான். ஆனால், ஆட்சிப்

பொறுப்பைத்தான் பிரபுக்களிடமும், அவருடைய மனைவியான மேரி அந்துவானேத் என்ற ஆஸ்டிரிய இளவரசியிடமும் கொடுத்துவிட்டார். அவர் எடுப்பார் கைப்பிள்ளையாகவே இருந்து விட்டதால் பிரபுக்களின் ஆட்சி ஏற்பட்டுவிட்டது.

மேரி அந்துவானேத் ஆஸ்டிரியப் பேரரசி மேரியாதெரிஸா வின் மகள். அவருக்கு ஃபிரெஞ்சு மக்களைப் பற்றியோ, அல்லது அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. அவள் ஃபிரெஞ்சு நாட்டு மக்களைப் புரிந்துகொள்ள முயற்சி எடுக்கவே இல்லை. அவள் ஃபிரெஞ்சு அரண்மனையில் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்தினாள். அவளுடன் போட்டியிட்டுக்கொண்டு மற்றச் சீமாட்டிகளும் அரசாங்க நிதியைக் காலி செய்தனர். அரண்மனையிலே எப்பொழுதும் சூழ்ச்சிகளும் பெண்களின் சிபாரிசுகளும், அவர்களின் அநாவசிய மான தலையிடுதலும் பெருகிவிட்டன. அதனால், அதிகாரிகளுங் கூட இலஞ்சம், மற்ற ஊழல்களில் ஊறிவிட்டனர். இவர்களுடைய ஊழல்களை எடுத்துக்கூறும் மக்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களைச் சரியானபடி விசாரணை செய்யும் பழக்கம் கிடையாது. அவர்களைக் கைது செய்வதற்குப் பொதுவான ஆணைப் பத்திரங் கள், அரசனுடைய முத்திரையிட்டுப் பிரபுக்களிடம் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. பாராளுமன்றம் இரண்டு தலைமுறை களுக்கு முன்னர் மூடப்பட்டது. அது இன்னும் திறக்கப்படவே இல்லை. அதனால் மக்கள் மிகவும் அதிருப்தி அடைந்திருந்தனர். வரையறுக்கப்பெற்ற அதிகாரங்களை அரசன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென்றும் கோரினர். இவையெல்லாம் நிராகரிக்கப்படவே மக்கள் அரசன் மீதும், அரசியின்மீதும், பிரபுக்கள்மீதும் ஆத்திரமடைந்தனர். புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலையை இவர்களே ஏற்படுத்தி விட்டனர்.

சமுதாய நிலை

ஃபிரெஞ்சுச் சமுதாயத்தில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. பிரபுக்கள் கும்பல் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவர்களுக்குச் சிறந்த பதவிகள் கொடுக்கப்பட்டன. அவர்களிடம் நிறைய நிலங்கள் இருந்த போதிலும் அவர் களெல்லாம் வரி கொடுக்காமலேயே இருந்தனர். அரசாங்கமும் அவர்களுக்கு வரி விதிப்பிலிருந்து விதிவிலக்கு அளித்தது. எல்லாச் சலுகைகளையும் பெற்ற பிரபுக்கள், மற்ற மக்களை மட்டும் அரசாங்கத்திற்குரிய எல்லாக் கடமைகளையும், மற்றும் எல்லா உரிமைகளையும் ஒழுங்காகச் செலுத்த வற்புறுத்தினர்.

நிலமானியமுறை அமுலில் இருந்தது. கிராமங்களில் பிரபுக்களுடையக் கொடுங்கோன்மை ஆட்சி தலைவிரித்தாடியது. ஏழைக் குடியானவர்கள் அடிமைகளைப் போலப் பிரபுக்களின் நிலங்களில் அதிக நேரம் உழைத்தனர். ஆனால், அவர்களுக்குச் சாதாரண வசதிகளுங்கூட கிடைக்கவில்லை. கிராமங்களில் உள்ள மக்கள் பொதுவாகப் புரட்சியை ஆதரித்ததே, இப் பிரபுக்களின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதற்காகத்தான். புரட்சியின் முதல் விளைவு ஃபிரான்சிலே நிலமானியமுறை ஒழிக்கப்பட்டுச் சமத்துவமான நிலை ஏற்படுத்த முயன்றதேயாகும். பிரபுக்களின் செல்வமும் அதிகாரங்களும் பெருகுகின்ற அதே நேரத்தில், ஏழைகளும் நடுத்தர வகுப்பினரும் வறுமையில் வாடினர். நாட்டில் உள்ள பெரும்பான்மையோர் பட்டினியால் சாவதும், ஒரு சிலர் அசீரண நிலையில் சாவதையும் அப்பொழுது ஃபிரான்சில் காண முடிந்தது. நடுத்தர மக்களும் மற்ற தொழிலாளர்களும் எவ்வித உரிமையும் வசதியும் இன்றி முணுமுணுத்துக் கொண்டே வாழ்ந்தனர்.

இச் சமயத்தில்தான் புதிய இலக்கியங்கள் ஃபிரான்சிலே தோன்றின. அரசியல் சிந்தனையாளர்களும் புரட்சிகரமாக எழுத முற்பட்டனர். அந்த இலக்கியங்கள் மக்களிடையே புதிய மனப்பான்மையை ஏற்படுத்தின. ரூசோ என்பவர் "சமுதாய ஒப்பந்தம்" என்ற சிந்தனையைத் தூண்டும் ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அந்த இலக்கியம் ஏற்கனவே அமெரிக்க மக்களிடையே சுதந்தர உணர்ச்சியை ஏற்படுத்திப் பெரும் புகழ் பெற்றுவிட்டது. ஃபிரான்சிலே புரட்சி ஏற்படுவதற்கு முன்னர், அமெரிக்காவில் காலனி ஆதிக்கம் ஒழிக்கப்பெற்று புதியதொரு குடியரசு அரசாங்கம் ஏற்பட்டது. ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு கூட்டு அரசாங்கம் ஏற்பட்டது. ஃபிரெஞ்சு மக்களும் இவ்விலக்கியத்தைப்பற்றிச் சிந்திக்க முற்பட்டனர். ரூசோவின் "சமுதாய ஒப்பந்தம்" ஃபிரான்சிலே புரட்சி ஏற்படுவதற்கான மனப்பான்மையை வளர்த்தது. பிற்காலத்தில் கார்ல் மார்க்ஸ் எழுதிய 'முதல்' என்ற நூல் எப்படி ஒரு பொதுவுடமைப் புரட்சியை ரஷ்யாவில் ஏற்படுத்தியதோ, அதைப் போலத்தான் ரூசோவின் சமுதாய ஒப்பந்தமும் ஃபிரான்சிலே குடியரசு அரசாங்கத்தை ஏற்படுத்தியது. மக்களிடத்திலேதான் 'இறைமை' இருக்கிறது என்று ரூசோ வற்புறுத்தினர். அதனால் மக்கள் அளவுக்குமீறிய பொறுமையுடன் அரசாங்கத்தின் கொடுமைகளைச் சகித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், ஆட்சி மக்களுடைய நலன்களைப் புறக்கணித்துவிடும் நிலையில் இருந்ததால் அவ்வாட்சியைப் புரட்சியின் மூலமாகக்

கவிழ்த்துவிட்டுப் புதிய குடியரசு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று கூறினர். மக்களுடைய பொது அபிப்பிராயத் திற்கு மதிப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினர். இத் தத்துவம் முற்றிலும் புதியதல்ல என்றாலும், அப்பொழுதிருந்த சூழ்நிலையில் மக்களின் சிந்தனையைத் தூண்டியது. வால்டேர் என்ற மற்றொரு அறிஞர் மிகவும் துணிச்சலுடன், அப்பொழுது ஃபிரெஞ்சுத் திருச்சபையில் காணப் பெற்ற ஊழல்களையும், மத குருமார்களின் பக்தியற்ற நடத்தையைப் பற்றியும், அவருடைய நூல்களில் கண்டித்து எழுதினர். மக்களுக்குத் திருச்சபையில் காணப்பெற்ற ஊழல்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனால், சமயத்துறை யிலும் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று மக்கள் விரும்பினர்.

மான்டஸ்கோ என்பவர் ஃபிரான்சிற்கு ஒரு வரையறுக்கப் பெற்ற அரசாங்கம் வேண்டும் என்று எழுதினர். இங்கிலாந்திலே ஏற்பட்டிருந்த பாராளுமன்ற ஆட்சியைப் போன்று ஃபிரான்சிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கூறினர். அப்பொழுதுதான் 'அதிகாரப் பிரிவினை' ஏற்படுவதற்குச் சாத்தியமாகும் என்று கூறினர். இவருடைய கருத்துகளை, அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு உருவாக்கிய அரசியல் அமைப்பில் அமெரிக்க அறிஞர்கள் ஏற்றுக் கொண்டனர். அதனால், ஃபிரான்சிலும் பாராளுமன்றத்தை மீண்டும் நிறுவவேண்டுமென்றும், அரசனுடைய அதிகாரங்களை வரையறுக்க வேண்டுமென்றும் எழுந்த கருத்துகள் மக்களை மிகவும் கவர்ந்தன. இவர்களைத் தவிர, மற்ற பல அறிஞர்களும் கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள் ஆகிய நூல்களை இயற்றி, பல அரிய கருத்துகளை வெளியிட்டனர். புரட்சி ஏற்படுவதற்கான மனப்பக்குவத்தை அவர்கள் ஏற்படுத்தினர்.

பொருளாதார நிலை

அரசாங்க நிதியைத் திட்டமிட்டுச் செலவு செய்யாமல் வெறும் ஆடம்பரங்களுக்கு மட்டும் செய்ததால் மக்களின் முக்கிய மான தேவைகளுக்கும், சீர்திருத்தங்களுக்கும் போதிய பணம் இல்லாமல் போய்விட்டது. அதனால், வரிகள் அதிகமாக விதிக்கப் பட்டன. ஆண்டுதோறும் வரிவிதிப்பிலிருந்து நிறைய வருமானம் அரசாங்கத்திற்கு வந்தபோதிலும் அந்த வரிப்பணத்தை மக்களுக் காகச் செலவு செய்யப்படும் பழக்கம் குறைந்துவிட்டது. தவிர, வரிவிதிப்புப் பாமர மக்களையும் நடுத்தர மக்களையும்தான் அதிக மாகப் பாதித்தது. ஆனால், அவர்களிடமிருந்த உடமைகளோ மிகவும் குறைவாகவே இருந்தன. அதற்கு மாறாகப் பிரபுக்

களிடமும், மத குருமார்களிடமும் நிறைய நிலங்களும் உடைமைகளும் இருந்த போதிலும், அவர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமல் விதி விலக்குப்பெற்று வந்தனர். அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி விதிவிலக்குகளைப் பெற்றதைப் போன்று, நிறையச் சலுகைகளையும் பெற்றிருந்தனர். அதனால், பிரபுக்கள்மீதும், பக்தியற்ற வாழ்க்கையைக் கொண்ட மத குருமார்கள்மீதும் மக்களுக்குப் பொதுவாக அதிருப்தி ஏற்பட்டிருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் அச் சமயத்திலிருந்த பொருளாதார நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஃபிரான்சின் பொருளாதார நிலை மிகவும் நன்றாகவே இருந்தது. வரிகளுங்கூட ஏறக்குறைய ஃபிரான்சிலிருந்ததைப் போன்றுதானிருந்தன. ஆனால், ஃபிரான்சிலே ஏற்பட்டிருந்த விழிப்புணர்ச்சி மட்டும் மற்ற நாடுகளில் காணப்படவில்லை. அதனால்தான், அவர்கள் புரட்சியை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தனர். ஃபிரான்சில் மக்கள் செலுத்தி வந்த சில முக்கியமான வரிகளாவன: டெய்லி (Taille) என்பது சொத்துடையவர்கள் செலுத்தும் ஒரு வரியாகும். விங்டிமி (Vingtieme) என்ற வரியும் சொத்துகள்மீது விதிக்கப்பெற்ற ஒரு வரியாகும். கேபிடேஷன் (Capitation) என்ற வரி ஆட்களின்மீது விதிக்கப்பட்ட ஒரு நூதன வரியாகும். கேபிலே (Gabelle) என்ற வரி உப்பு வரியாகும். இவைகளைத் தவிர, மற்ற மறைமுகமான வரிகளும் வசூலிக்கப்பெற்றன. அவைகள், மதுபானங்கள், காகிதம், இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகிய பொருள்கள்மீது விதிக்கப்பட்டவையாகும். இவ் வரிகளைத் தவிர, பாமர மக்கள் பிரபுக்களுக்குச் சில நிலமானிய வரிகளையும், சேவைகளையும் செலுத்தும் பழக்கத்தைக் கொண்டவர்களாக இருந்தனர். பிரபுக்களின் நிலங்களில் வேலை செய்கின்றவர்கள் சில சமயங்களில் ஊதியம் பெற்றுக்கொள்ளாமலேயே உழைக்கக் கடமைப்பட்டவர்களாக இருந்தனர். அத்தகைய சேவைக்குக் கார்வி (Corvee) என்று பெயர். பிரபுக்களின் கொடுமையும் நிலமானிய முறையும் நீடித்தன. நிலமானிய வரிகளைத் தவிர, மக்கள் திருச்சபைகளுக்கும் வரிகளைச் செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருந்தனர்.

1788–89 ஆவது ஆண்டில் ஃபிரான்சில் பஞ்சநிலை ஏற்பட்டது. உணவுப் பொருள்களின் விலை மிகவும் உயர்ந்துவிட்டது. பாமர மக்களுக்குக் குறைந்த விலையில் நல்ல ரொட்டி கிடைக்கவில்லை. அதனால், அவர்கள் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்கவேண்டுமென்று கோரினர். மற்றக் குறைபாடுகளையும் தீர்த்து வைக்கும்படி அரசாங்கத்திடம் முறையிட்டனர். ஆனால்,

அரசாங்கம் இக் குறைகளைத் தீர்த்து வைக்க உடனடியாக முன் வரவில்லை. சில குறைபாடுகள் பல தலைமுறையாக நீடித்து வந்ததால் அவைகளைத் தீர்க்கவும் முடியவில்லை. ஃபிரான்சில் நிதி அமைச்சர்களாகப் பதவியிலிருந்த பலர், இந் நிலையைச் சமாளிக்க முயன்றனர். டர்காட் (Turgot) என்ற நிதி அமைச்சர் மிகவும் திறமையுடையவர். நிதி நெருக்கடியைச் சமாளிக்க அவர் சில வழிகளைப் பின்பற்றினர். எந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தாலும், முதலில் அரண்மனையில் குடியிருந்த பிரபுக்களின் செலவுகளைவும், அரசக் குடும்பத்தின் செலவுகளையும் குறைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். பிரபுக்கள் பெற்று வந்த அரசாங்க மானியங்களைக் குறைக்கவும், சிலவற்றை அடியோடு நிறுத்தவும் அவர் கட்டளையிட்டார். வரி விதிப்பு களில் ஒரேமாதிரியான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர். தவிர, மக்களுடைய பிரதிநிதிகள் அரசாங்க நிறுவனங்களில் பங்கு பெறவும், சமயச் சீர்திருத்தங் களைக் கொண்டு வரவும் முயன்றதால், பிரபுக்களிடமிருந்தும் மத குருமார்களிடமிருந்தும் அவருக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. அரசியாரின் ஆதரவு பிரபுக்கள் பக்கமே இருந்தது. அதனால், டர்காட் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். மக்கள் மிகவும் ஏமாற்றமடைந்தனர். அவருக்குப் பதிலாகக் கிளக்னி (Clugny) என்பவர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் டர்காட் செய்த சீர்திருத்தங்களை ரத்து செய்து, பிரபுக்களின் ஆதரவையும் அரசியாரின் ஆதரவையும் பெற்றுக்கொண்டார். டர்காட் ரத்து செய்த கார்வி, மற்றும் பல வரிகளையும் அவர் புதுப்பித்தார். அரசாங்க நிதியைப் பெருக்க அவர் ஒரு புதிய பரிசுக் குலுக்கல் முறையை ஆரம்பித்து அதன் மூலமாக நிதி நெருக்கடியைச் சமாளிக்க முயன்றார். அவருக்குப் பின்னர் நெக்கர் என்பவர் பதவிக்கு வந்தார். அவர் ஒரு பேங்கர். அதனால், அவருக்கு நிறைய கடன் வாங்குகின்ற திறமையிருந்தது. அவர் அதிகக் கடன் வாங்கியே நெருக்கடியைச் சமாளிக்க முயன்றார். அவர் பதவியில் இருந்தபொழுது ஃபிரான்ஸ், அமெரிக்கச் சுதந்தரப் போராட்டத்தில் பங்கு பெற்றது. இப் போரில் ஃபிரான்சிற்கு நிறைய வெற்றிகள் கிடைத்தன. மேற்கு இந்தியத் தீவுகள், மைனர்க்கா (Minorca), ஜிப்ரால்டர் ஆகிய பகுதிகள் ஃபிரான்ஸ் வசம் வந்தன. ஆனால், ஃபிரான்ஸ் பெற்ற வெற்றி களைக் காட்டிலும், ஃபிரான்சிற்கு இதனால் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடிதான் மிகவும் அபாயத்தைக் கொடுத்தது. அதனால், மேலும் கடன் வாங்க நேரிட்டது. மக்களிடம் நம்பிக்கை வைக்கும் அளவில் நெக்கர் அரசாங்கத்தின் வரவு செலவு களையும் அரசாங்கத்தின் சீரான நிதிநிலையையும் மக்களுக்கு

அறிவித்து மேலும் கடன் பெற்றார். இதுவரையிலும் பிரபுக்களுக்கு நெக்கர்மீது நல்ல நம்பிக்கை இருந்தது. ஆனால், அவர் பிரபுக்களின் சில சலுகைகளை அகற்ற வேண்டுமென்று கூறியவுடன், அவர் மீதிருந்த நம்பிக்கையை இழந்து அவரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டனர்.

மற்ற இருவர் இப் பதவிக்கு வந்தனர். அவர்களால் நிதி நெருக்கடியைச் சமாளிக்க முடியவில்லை. 1783–1787 வரையிலும் கலோன் (Callone) என்பவர் நிதி அமைச்சராக இருந்தார். அவர் அரசாங்க நிதி முழுவதையும் காலியாக்கிவிட்டார். மேற்கொண்டு அவரால் கடன்பெற முடியவில்லை. பிரபுக்களுக்கு வரி செலுத்து வதிலிருந்து இதுவரை விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவற்றை ரத்து செய்துவிட வேண்டுமென்று அரசரிடம் அவர் ஆலோசனை கூறினார். ஆனால், பிரபுக்கள் நாட்டின் நலனுக்காக, இச் சிறு தியாகத்தையுங்கூடச் செய்யத் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக கலோன் (Callone) மீது பிரபுக்கள் பல குற்றச் சாட்டுகளைச் சுமத்தினர். அரசாங்கத்தின் நிதி சரியானபடிக்குக் கணக்குக் கொண்டு வரப்படவில்லையென்று குற்றம் சாட்டினர். அக் கணக்குகளைத் தணிக்கைச் செய்யவேண்டுமென்று கூறினர். அவர்கள் பெரிய சீர்திருத்தவாதிகளைப் போன்று நடித்தனர். ஆனால், அவர்களுடைய சலுகைகளை மட்டும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. கலோன் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

ஆர்ச்பிஷப்பாக இருந்த லோம்னி டெ பிரின் (Lomenie de Brienne) என்பவர் நிதி அமைச்சர் பதவிக்குக் கொண்டுவரப் பட்டார். மக்களுடைய அதிருப்தி அதிகமாகிக் கொண்டே வந்தது. 'ஸ்டேட்ஸ் ஜெனரல்' அல்லது ஃபிரெஞ்சுப் பாராளு மன்றத்தை உடனடியாகக் கூட்டவேண்டுமென்று மக்கள் ஆரவாரம் செய்தனர். மே 5, 1789-ல் வேறு வழியின்றி 'ஸ்டேட்ஸ் ஜெனரல்' கூட்டப்பட்டது. 175 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் இச் சபை கூட்டப்பட்டது.

தேசிய சபை (National Assembly)

175 ஆண்டுகளுக்குப் பிறகு மிக நெருக்கடியான நிலைமையில் இந்தச் சட்டசபை கூட்டப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை லூயி மன்னன் செய்தார். இந்தப் பழைய சட்டசபையில் மூன்று சபைகள் இருந்தன. ஒன்று பிரபுக்கள் சபை, மற்றொன்று குருமார்கள் சபை, மூன்றுவது மக்கள் சபையாகும். வழக்கமாக இந்த மூன்று சபைகளும் தனித்தனியாகத்தான் கூடிச்

செயல்படும். இச் சபைகளில் எப்படி வழக்காறுகள் பின்பற்றப் படுகின்றன என்பதைப்பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது. வழக்கமாகச் சபைக்கு ஒரு வாக்காகத்தான் இருந்தது. தனித் தனியாக ஒவ்வொரு பிரதிநிதிக்கும் வாக்குரிமை இல்லை. மூன்று சபைகளிலும் ஒரே அளவில் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர். இந்த முறை பழைய முறையாகும். இதை 1788-ல் நிலைப்பதும், இதையே மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதும் அர்த்த மற்றது என்று மக்கள் கருதினர். ஆனால், வாக்கெடுப்பு முறையும் மூன்றுவது சபையான மக்கள் சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாக்க வேண்டுமென்றும் பெரிய கிளர்ச்சி செய்தனர். தவிர, இந்த மூன்று சபைகளும் தனித் தனியே கூடி நிலைமையை விவாதிப்பது நாட்டிற்கு நன்மை பயக்காது என்று மக்கள் கருதினர்.

1789 மே, 5-ம் நாளில் ஃபிரெஞ்சு ஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டப் பெற்றது. முதலில் தனித்தனியாகத்தான் கூட்டப்பெற்றது. ஒவ்வொரு சபையிலும் பிரதிநிதிகள் ஏராளமான சீர்திருத்த மனுக்களைக் கொண்டு வந்தனர். நாட்டிற்கு ஓர் அரசியல் அமைப்பு வேண்டுமென்றும் அரசனுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டுமென்றும், வலிமைமிக்க மக்கள் சபை ஏற்படுத்த வேண்டுமென்றும் நிறைய விண்ணப்பங்கள் வந்திருந்தன. மக்கள் சபை பிரதிநிதிகள் பழைய வாக்கெடுப்பு முறையை ஏகோபித்து எதிர்த்தனர். எல்லாச் சபைகளும் ஒன்று கூடியே முதலில் செயல்பட வேண்டுமென்று கூறினர். 300 அங்கத்தினர் களிலிருந்து 600 அங்கத்தினர்களாக்க வேண்டுமென்று கூறினர். ஒரு சில பிரபுக்களையும் குருமார்களையும் தவிர, இக் கோரிக்கை களைப் பிரபுக்கள் சபையும், குருமார்கள் சபையும் ஏற்றுக்கொள்ள வில்லை. அதனால், அதிருப்தியடைந்த மக்களுடைய பிரதிநிதிகள், மூன்று சபைகளும் ஒன்றுகக் கூடினால்தான் நல்ல பயன் விளையும்; இல்லையெனில் இரண்டு சபைகளையும் விலக்கிவிட்டு, மக்கள் சபை மட்டும் பலமுள்ள சட்டசபையாகத் திகழ அதிகாரம் வேண்டுமென்று அரசனிடம் முறையிட்டனர். முடியாட்சியை அவர்கள் அறவே வேண்டாம் என்று கிளர்ச்சி செய்யவில்லை. அவர்களுக்கு அப்பொழுது தேவையாக இருந்தது நல்லாட்சியே யாகும். ஆனால், சுய அறிவே இல்லாத பதினாறும் லூயி மன்னன் மக்களுடைய தேவைகளைப் புரிந்துகொண்டதாகவே தெரிய வில்லை. மூன்று சபைகளும் ஒன்றுகக் கூடுவது சாத்தியமில்லை. தனித்தனியாகத்தான் கூடவேண்டுமென்று அரசன் இறுதியாகக் கூறினர். ஆனால், மக்கள் சபையில் அங்கம் வகித்த ஒரு பிரதிநிதி யான மிராபோ என்பவர், "அப்படியென்றால் இந்த இடத்தை

விட்டு நகரப்போவதில்லை; எங்களை அப்புறப்படுத்த வேண்டுமெனில் துப்பாக்கி முனையில்தான் செய்யவேண்டும்'' என்று கூறினர். அதனால் லூயி மிகவும் பயந்துவிட்டார். ஸ்டேட்ஸ் ஜெனரல்கூட வேண்டியதில்லை என்று கூறிவிட்டுச் சென்றார். ஆனால், மக்கள் சபை அங்கத்தினர்கள் எல்லோரும் அருகில் இருந்த டென்னிஸ் மைதானத்தில் ஒன்றுகூடித் தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும்வரை கிளர்ச்சி செய்தே தீருவோம் என்று உறுதியான முடிவெடுத்துக்கொண்டனர். மேலும், மற்ற சபைகளைப்பற்றிக் கவலைப்படாமல் நாட்டின் 97 சதவிகிதம் பிரதி நிதித்துவம் பெற்றுள்ள மக்களுடைய பிரதிநிதிகளே ஒரு தேசிய சபையை (National Assembly) ஏற்படுத்தி நாட்டிற்கு மிகவும் தேவையான ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டனர். தேசிய சபையை அமைத்த உடன் பிரபுக்களுக்கும், மத குருமார் களுக்கும் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. மக்கள் சபை அங்கத்தினர் களின் பிடிவாதத்தைக் கண்டு லூயி மன்னன் பயந்துவிட்டார். வேறு வழியின்றி மூன்று சபைகளும் ஒரே இடத்தில் கூட்டு வதற்குச் சம்மதத்தைத் தெரிவித்தார். ஆனால், ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற மூன்று சபைகளைக்கொண்ட சபை தேசிய சபை யாக மாற்றப்பெற்றது. தேசிய சபையின் முதல் வேலையாக நாட்டிற்கு வேண்டிய அரசியல் அமைப்பை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இப் பணியில் ஈடுபட்டிருந்த தேசிய சபை அங்கத் தினர்களுக்குப் பேரதிர்ச்சி ஏற்படும்படியாக லூயி பல பிரபுக் களின் ஆலோசனையைக் கேட்டு, அதன்படி சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து திறமைமிக்கப் போர் வீரர்களை அழைத்து, அதிகப் பிரசங்கிகளான மக்களின் பிரதிநிதிகளை வீட்டிற்கு அனுப்புவதில் கவனம் செலுத்தினர். மேலும், மக்க ளுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்த நிதி அமைச்சரான நெக்கர் என்பவரை லூயி மன்னன் விலைவுகளைக் கருதாது பதவியிலிருந்து விலக்கிவிட்டார். அந்நிய துருப்புகள் குவிதலைப் பார்த்த பிறகும், நிதி அமைச்சரை நீக்கிவிட்ட செய்தி கேட்டும் மக்களுடைய பிரதி நிதிகள் உள்ளம் குமுறினர். இதனால் குழப்பமான நிலை ஏற்பட்டது. அரசனின் துருப்புகள் எந்தக் கொடுமையையும் வன்முறையையும் இழைக்கத் தயங்காது என்று கருதிய ஃபிரெஞ்சு மக்கள் அவர் களின் அடக்குமுறையிலிருந்து விடுதலை அடைய வேண்டுமெனில் அவர்களும் துணிந்து துருப்புகளைத் தாக்குவது என்ற முடிவுக்கு வந்திருந்தனர். அரசாங்கம் திடுக்கிடும்படியாகச் செயல்களைப் புரிந்து காட்டவேண்டுமென்றும், வன்முறை ஆட்சியை ஒழித்துக் கட்ட வேண்டுமென்றும் அவர்கள் துடித்துக்கொண்டிருந்தனர். மக்களிடையே குமுறுதலும், உணர்ச்சியும் தியாகமும் ஒருங்கு சேர்ந்த பிறகு அவர்களை அடக்கவோ, அல்லது கட்டுப்

படுத்தவோ முடியாமல் போய்விட்டது. ஒரு கூட்டம் பாஸ்டைல் என்ற சிறைச்சாலையை நோக்கி முன்னேறியது. கொடுங்கோன்மை ஆட்சி ஒழிக என்று முழங்கிக்கொண்டு சென்ற பாரிஸ் நகர மக்கள் கொடுங்கோல் ஆட்சியின் சிகரம் போன்றமைந்த அச் சிறைச்சாலையை இருந்த இடம் தெரியாது தகர்த்து எறிந்து விடத் திட்டமிட்டனர். இந்தப் பாஸ்டைல் சிறைச்சாலையில் பலர் நரகவேதனை அடைந்துவருவதாக மக்கள் நம்பியிருந்தனர். உண்மையில் விசாரணையின்றியே பலர் இங்குச் சிறைப்படுத்தப் பெற்றனர். இந்தக் கொடுங்கோல் ஆட்சியின் சின்னத்தைத் தகர்த்தெறிந்தால் அரசன் வழிக்கு வருவார் என்று நம்பினர். ஆனால், இச் சிறைச்சாலை நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது. உணர்ச்சி வசப்பட்டிருந்தக் கூட்டம் சிறைக்குள் செல்ல வேண்டுமென்று அனுமதி கேட்டதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அது மட்டுமல்ல; அக் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஏறக்குறைய நூறு பேர் உயிரை இழக்கவேண்டி நேர்ந்தது. இதனால், ஆத்திரமடைந்த கூட்டத்தினர் ஆவேசத் துடனும் ஆத்திரத்துடனும், அவர்கள் எடுத்து வந்திருந்த ஆயுதங்களால் கோட்டையைக் காவல் புரிந்துவந்த படை யினரைத் தாக்கி, பிறகு அவர்களைக் கைது செய்தனர். சிறைக் கதவுகளை உடைத்தெறிந்தனர். கைதிகளை விடுதலை செய்தனர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்த அளவில் கைதிகள் இல்லை. ஏழு பேர் மட்டும்தான் அங்கிருந்தனர். அவர்களுள் ஒருவனுக்குப் பைத்தியம் பிடித்திருந்தது. மற்றொருவனுக்கு அவன் ஏன் கைது செய்யப்பட்டான் என்றே தெரியாமல் இருந்தது. ஆனால், இக் கைதிகளையெல்லாம் மிக்கக் குதூகலத்துடனும், மகிழ்ச்சியுட னும் விடுதலை செய்து பெரியதொரு வெற்றி விழாக் கொண் டாடினர்.

1789 ஜூலை 14ஆம் நாளன்று நடந்த இந் நிகழ்ச்சி புரட்சியின் தொடக்கம் என்றே கருதவேண்டும். மக்கள் துணிந்தால், கோட்டை களும், கொத்தளங்களும் தூளாக்கப்படுவதை அவர்கள் நேரில் அனுபவித்தனர். அப்பொழுது மக்களிடம் தோன்றிய அப் புதிய துணிச்சல் தொடர்ந்து ஏற்பட்ட பல புரட்சிகரமான நிகழ்ச்சி களுக்கும் காரணமாக இருந்தது. மனித இரத்தத்தைக் குடித்துப் பழகிப்போன புலிக்கு எப்படி மனித இரத்தம் அடிக்கடித் தேவைப் படுகின்றதோ, அதைப் போன்று இரத்தத்தைக் கண்டு பழகிப் போன புரட்சிக் கூட்டத்தினருக்கு உயிர்களைப் பலி வாங்குவதும், பலி கொடுப்பதும் சாதாரண நிகழ்ச்சிகளாகவே போய்விட்டன. அவர்களுடைய புதிய அனுபவம் மக்களுடைய முழு சக்தியை யும் புரட்சியின்பால் இழுத்துவிட்டது. இந்த ஜூலை 14ஆம்

நாளை ஒரு திருவிழா நாளாகவும், மனித உரிமைகளின் நாளாகவும், கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற புனித நாளாகவும் இன்றும் ஃபிரெஞ்சு மக்கள் தேசிய விழாவாகவே கொண்டாடுகிறார்கள்.

பாஸ்டைல் நிகழ்ச்சிக்குப் பிறகு, தேசிய சபை அரசாங்கத்தை மாற்றி அமைத்தது. பாரிஸ் நகரத்திற்குக் கம்யூன் அல்லது நகரசபை அரசாங்கம் நிறுவப்பெற்றது. அதற்குத் தலைவராக ஒரு மேயரை நியமித்தது. இதைப் போன்றே ஃபிரான்சிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் கம்யூன்கள் நிறுவப்பெற்றன. நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் நிர்வகிக்கத் தேசியத் தொண்டர் படை அமைக்கப்பெற்றது. இத் தொண்டர் படையில் பல இளைஞர்கள், புரட்சி ஆதரவாளர்கள் வந்து சேர்ந்தனர். இதற்குத் தளபதியாக லெபேய்ட் என்பவர் நியமிக்கப்பெற்றார். நாடெங்கிலும் பாரிஸ் மக்களின் புரட்சியைப் பற்றியே பேசிவந்தனர். எங்கும் புரட்சி மயமாகவே இருந்தது. இதனால், கிராமப் பகுதிகளில் பிரபுத்துவ முறையை எப்படியும் அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடனும், பிரபுக்கள்மீது பழி வாங்கவேண்டுமென்ற நோக்கத்துடனும், அவர்களுடைய கோட்டைகளைத் தகர்த்தெறிந்தனர். அவர்களுடைய சொத்துகளைச் சூறையாடினர்; கொளுத்தினர். பிரபுக்களின் உயிருக்கும் ஆபத்து நேரிட்டது. இச் செய்திகள் பாரிஸ் நகரத்திற்கு எட்டியவுடன் தேசிய சபை ஆகஸ்டு முதல் தேதியன்று கூடி இரவோடு இரவாகப் பிரபுத்துவ முறையை ஒழித்துவிட முடிவு செய்தனர். பிரபுக்களுடைய சலுகைகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பெற்றன. அவர்களுக்கென்று அளிக்கப்பட்டிருந்த வரிவிலக்குச் சலுகைகள், விருப்பம்போல் எந்தப் பண்ணையிலும் வேட்டையாடுதல், இலவசமாகக் குடியானவர்களிடமிருந்து வேலை வாங்குதல், அவர்களுடைய விருதுகள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர். இனிமேல் நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒரே விதமாகத்தான் நடத்தப்பெறுவர். சொத்துகளை உடையவர்கள் எல்லோருமே வரி கொடுக்கவேண்டும். வேலை வாய்ப்புகள் எல்லோருக்கும் ஒரேவிதமாக இருக்கவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். மக்களிடையே சமத்துவமான மனப்பான்மை இருக்க வேண்டும் என்று தேசிய சபையினர் நினைநாட்டினர். இந்தச் சீர்திருத்தங்களை எல்லாம் தேசிய சபையினர் ஒரே இரவில் சட்ட மூலமாகக் கொண்டு வந்தனர். இதன் விளைவாகப், பிரபுக்கள் அவர்களுடைய வீடு, வாசல், சொத்துகளை விட்டுவிட்டு உயிருக்குப் பயந்து அயல்நாடுகளுக்கு ஓட்டம்பிடித்தனர். துன்பம் என்பதே என்னவென்று தெரியாமல் இருந்த இந்த

பிரபுக்களின் நிலைமை மிகவும் சீர்கேடுற்று, அவர்கள் மிகவும் சாதாரண மக்களாகவே வாழ வேண்டியவர்களாகி விட்டனர்.

மேலும், தேசிய சபையினர் நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளையும் சீரமைப்புச் செய்ய முன்வந்தனர். பழைய மாகாணங்கள், மாவட்டங்கள், கிராமப் பகுதிகள் என்றில்லாது ஒரே விதமாக, "டிபார்டுமெண்டுகளாக" அல்லது பகுதிகளாகச் சீரமைத்து அவற்றையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தினுள் கொண்டு வந்தனர். பழைய பிரபுத்துவ முறைகள் எல்லாம் கைவிடப்பெற்றன. இப் பகுதிகள் பழைய பிரபுக்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தபோதிலும் ஒரே விதமான ஆட்சி முறையை அமுல் செய்வதற்கு வசதியாக இருந்தது. சீரமைக்கப் பெற்ற ஒவ்வொரு பகுதிக்கும், நதியின் பெயரையும், மலையின் பெயரையும் வைத்தனர். ஆனால், தேசிய சபை சாதித்த எல்லாச் சாதனைகளைக் காட்டிலும் அச் சபை தயாரித்த மனித உரிமைகளின் சாசனம்தான் மக்களுடைய இறைமை சக்தியை வெளிக்காட்டியது. அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப் பெற்றன. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற குறிக் கோள்களை அடிப்படையாக வைத்து, மக்களுடைய உரிமைச் சாசனம் தயாரிக்கப்பட்டிருந்தது. இச் சாசனம் அப்பொழுது ஒரு புதுமையான சாதனை என்றே கருதவேண்டும். இது மற்றக் குடியரசுகளுக்கு வழிகாட்டிபோல அமைந்திருந்தது. அமெரிக்கக் குடியரசின் கூட்டரசாங்க அரசியல் அமைப்பிலும் மக்களுடைய உரிமைகளைப்பற்றி ஓர் அறிக்கை சேர்க்கப்பட்டிருந்தது. இதை யொட்டியே, ஃபிரெஞ்சுத் தேசிய சபையும் இச் சாசனத்தைத் தயாரித்தது. பதினெட்டாவது நூற்றாண்டில் தோன்றிய மக்களாட்சி முறைக்கே இந்தச் சாதனை புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இப் பெருமை தேசிய சபைக்கே உரித்தானதாகும். பல ஆண்டுகளாகப் புரிந்து வந்த கொடுங்கோன்மை ஆட்சியை எதிர்த்துத் தொடங்கப்போகும் போர்க் குரலே இச் சாசனம் என்று கருதப்பெற்றது. லூயி மன்னனுக்கு இச் சாசனத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய சாதாரண பகுத்தறிவும்கூட இல்லாமல் போய் விட்டது. அதனால், அவர் இச் சாசனத்தில் கையெழுத்திட மறுத்தார். அதனால் தேசிய சபை அங்கத்தினர்களுக்கு முதன் முறையாக அரசன்மீது அதிருப்தி ஏற்பட்டது. இதற்கேற்ப, அரசரும், அவருடைய மனைவியுமான மேரியா அந்துவானேத் அண்மையிலுள்ள நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு புரட்சி இயக்கத்தை அடக்குவதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர். தவிர, அண்மையிலுள்ள நாடுகளிலிருந்து

ஏராளமான துருப்புகள் வரவழைக்கப்பெற்றிருந்தன என்ற ஒரு புரளியும் நாட்டில் உலாவியது. இவற்றையெல்லாம் கேள்வியுற்ற மக்கள் மன்னன் குடியிருந்த வெர்சேல்ஸ் அரண்மனையை நோக்கிப் பவனி வந்தனர். அந்த ஆண்டில், எதிர்பாராதவிதமாகக் குறைவான விளைச்சல் ஏற்பட்டிருந்ததால் உணவுப் பற்றாக் குறையும் ஏற்பட்டது. உணவுப் பொருள்களின் விலையும் மிகவும் உயர்ந்துவிட்டது. இதன் காரணமாகப் பாரிஸ் மக்கள் மிகவும் அதிருப்தியுற்றிருந்தனர். இதையும் அரசாங்கத்தால் ஏற்பட்ட கொடுமையென்றே நம்பினர். அதனால் இந்தக் கொடுமை நீடிக்கக்கூடாது என்று கருதினர். உடனடியாக இதற்கொரு முடிவும் காணவேண்டும் என்று உறுதி செய்துகொண்டனர். திரள் திரளாக மக்கள் திரண்டனர். அக் கூட்டத்தில் பெண்களும் பெருவாரியாகப் பங்கெடுத்துக்கொண்டனர். ஆண்களும், பெண் களும், அவர்கள் கைகளுக்குக் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பலத்த முழக்கங்களுடன் வெர்சேல்ஸ் அரண்மனையை நோக்கிச் சென்றனர். அவர்கள் செல்லும்பொழுது, "எங்களுக்கு உணவு வேண்டும், அல்லது அரசனின் இரத்தம் வேண்டும்" என்று முழங்கினர். இவர்களுடைய ஆவேசத்தைக் கண்டு பயந்த லெபேய்ட் தேசியத் தொண்டர் படையுடன் சென்றார். வெர்சேல்ஸ் அரண்மனையை அடைந்தவுடன் அவர்கள் உள்ளே நுழைந்து அரண்மனைக் கதவு, ஜன்னல்கள், மேஜை, நாற்காலிகளை எல்லாம் உடைக்க ஆரம்பித்துவிட்டனர். அரசியின் அறைக்குள் சென்று பெண்கள் அவளைப் படாதபாடு படுத்திவிட்டனர். அரசனையும் பிடித்து அவரிடம் சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டனர். அரசனையோ, அல்லது அரசியையோ அவர்கள் கொலை செய்ய வேண்டுமென்று சிறிதும் நினைக்கவில்லை. இனியும் அவர்கள் அரசனிடம் விசுவாசமுள்ளவர்களாகவே காணப் பெற்றனர். அவர்களுடைய கோரிக்கைகளை அரசனிடம் தெரிவித் தனர். அவற்றையெல்லாம் அரசன் கவனிப்பதாக வாக்குறுதியளித் தார். அரசக் குடும்பம் இனிமேல் டூலியரிஸ் அரண்மனையில்தான் இருக்க வேண்டுமென்று மக்கள் கட்டளையிட்டனர். டூலியரிஸ் அரண்மனை பாரிஸ் நகரத்தில் இருந்தது. பாரிஸ் நகரத்திலேயே அரசக் குடும்பத்தினர் தங்கியிருந்தால் எல்லாம் ஒழுங்காக நடை பெறும் என்று மக்கள் நினைத்தனர். மன்னனும் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று நடப்பதாகக் கூறினர். இந்த இட மாற்றத்தை ஒட்டி, தேசிய சபையும் அதனுடைய அலுவல்களைப் பாரிஸ் நகரத்திற்கே மாற்றிக்கொண்டது. இந்த மாற்றத்திற்குப் பிறகு தேசிய சபை பாரிஸ் கம்யூனுக்குக் கைப்பாவையாகி விட்டது. புரட்சியின் கொடுமைகள் எல்லாம் அப்பொழுதிருந்து தான் ஆரம்பமாயின.

பிரபுத்துவ முறையை ஒழித்தத் தேசிய சபை அதனுடைய கவனத்தைத் திருச்சபைமீது செலுத்த முற்பட்டது. ஃபிரெஞ்சுத் திருச்சபைகள், மடாலயங்கள் ஆகிய நிறுவனங்கள் எல்லாம் மிகவும் செல்வம் கொழித்திருப்பனவாகும். திருச்சபை மக்களிட மிருந்து "டைத்" (Tithe) என்ற வரியை இதுவரை வசூலித்து வந்தது. இதன் காரணமாக அந்தத் திருச்சபை ஏராளமாகப் பணத்தைச் சேமித்து வைத்திருந்தது. மேலும், திருச்சபையில் பணியாற்றிய குருமார்கள் அவர்களுடைய சமயப் பணிகளைச் செய்யாது அவசியமற்ற வகையில் மக்களுடைய சாதாரண பிரச்சினைகளில் தலையிட்டு வந்தனர். அவர்களிடையே ஊழல் மிகுந்துவிட்டது. அதனால் எல்லா மடாலயங்களும் அரசாங்கத்தின் நேரடியான கண்காணிப்பில் கொண்டுவரப்பெற்றன. மேலும், அவைகளின் சொத்துகளையும் அரசாங்கம் பறித்துக்கொண்டது. மத குருமார்கள் அரசாங்கத்தின் பணியாட்களாயினர். அவர்கள் செய்யும் வழிபாட்டுப் பணிகளுக்காக அவர்களுக்கு அரசாங்க நிதியிலிருந்து சம்பளம் தரப்படும் என்று தேசிய சபை அறிவித்தது. இந்தப் புரட்சிகரமான மாறுதலினால் திருச்சபையில் காணப்படும் ஊழல்கள் ஒழிக்கப்படும் என்றும் அரசாங்கத்தின் வருவாயும் அதிகமாகும் என்று தேசிய சபை கருதியது. டாலிரேண்ட் என்பவரும் திருச்சபையின் சொத்துகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார். தேசிய உடமையாக்கப் பெற்ற திருச்சபையின் நிலங்களை அரசாங்கமே விற்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் நிலங்களின் விலை மிகவும் குறைந்துவிடும் என்று அவர் கூறினார். அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று கருதி, திருச்சபை சொத்துகளை அரசாங்கம் ஈடாகக் காட்டிக் காகிதச் செலாவணி அடித்து நிதி நிலைமையைச் சரிசெய்து கொள்வதென்று தீர்மானித்தது. நாளடைவில் ஏராள மான காகிதச் செலாவணியை அடித்து அரசாங்கம் விநியோகம் செய்ததால் நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டது. "டைத்" என்ற திருச்சபை வசூலித்து வந்த வரியை அரசாங்கம் ரத்து செய்து விட்டது.

இந்த மாறுதல்களால், பிரபுக்களும், குருமார்களும் மிகவும் அதிருப்தியுற்றிருந்தனர். அவர்கள் மாறுவேடம் அணிந்து ஃபிரெஞ்சு நாட்டைவிட்டு அயல் நாடுகளுக்கு வெளியேறி விட்டனர். இங்கிலாந்திற்கும், அமெரிக்காவிற்கும் மற்ற நாடு களுக்கும் சென்று அவர்கள் குடியேறினர். டாலிரேண்டும் கூடப் பாரிஸ் கம்யூனினால் நாடுகடத்தப்பட்டதால் சிறிது காலம் அவர் இலண்டன் நகரத்திலும், நான்கு ஆண்டுகள் அமெரிக்காவிலும் கழித்த பின்புதான் மீண்டும் தாய் நாட்டிற்குத்

திரும்பினர். பிரபுக்களின் வெளியேற்றம் ஃபிரெஞ்சு மக்களிடையே புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்தும் என்று மக்கள் கருதினர். பாரிஸ் நகரத்திற்கு இருப்பிடத்தை மாற்றிக்கொண்ட தேசிய சபை நாளடைவில் அதன் மதிப்பை இழந்துவிட்டது. பாரிஸ் நகரத்துக் கூட்டத்தினர் புதிய அரசாங்கத்தை நிறுவி விட்டதாகக் கருதினர். இச் சூழ்நிலையில் பாரிஸ் கம்யூன் மிகவும் வலிமை மிக்க நிறுவன மாக மாறிவிட்டது. "பற்றுக்குறை அரசி" (Deficit Madam) என்று நையாண்டிச் செய்யப்பட்ட அரசி மேரியா அந்துவானேத்திற்காக ஆஸ்டிரிய நாட்டுப் பேரரசனுன லியோபால்ட் புரட்சிக்காரர்கள்மீது படையெடுக்கத் தயாராக இருந்தார். ஃபிரெஞ்சு நாட்டிலிருந்து வெளியேறிய பல பிரபுக்களும், இராணுவ அதிகாரிகளும் அந்நிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு புரட்சியை அடக்கி அரசரையும், அரசியையும் பழைய எதேச்சாதிகார தகுதிக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்று ஓயாது திட்டமிட்டுக் கொண் டிருந்தனர். அரசனுடைய சகோதரரான ஆர்டாய் கோமகன் பிரபுக்களின் சார்பாக ஒரு படையைத் திரட்டிக் கொண்டிருந்தார். அதனுல் ஃபிரெஞ்சு மக்கள் அரசன்மீதும், அரசியின்மீதும் அதிக சந்தேகம் கொண்டனர். அவர்களும் மக்களுடைய புரட்சியை அடக்குவதற்கு உடந்தையாக இருப்பார்களோ என்று கருதினர். எப்பொழுது திருச்சபையைத் தேசியமயமாக்குவதற்கு அரசன் தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தாரோ, அன்றைய தினத்தி லிருந்தே எப்படியும், ஃபிரெஞ்சு நாட்டிலிருந்து வெளியேறி ஆஸ்டிரியாவிற்குச் சென்றுவிட முடிவு செய்துவிட்டார். அதனுல் மாறுவேடத்தில் அரசனும், அரசியும், அவர்களுடைய குழந்தை யும் பாரிஸ் நகரைவிட்டுத் தப்பித்துச் சென்றனர். ஆனுல் வாரனே என்ற நகரத்தின் அருகே சென்று கொண்டிருக்கும்பொழுது அவர் களைப் புரட்சியாளர்கள் அடையாளம் கண்டுகொண்டனர். உடனடியாக அவர்களைப் பாரிஸ் நகரத்திற்கு அனுப்பி வைத்தனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு புரட்சியாளர்கள் அரசன்மீது வைத் திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர். அப்பொழுதுகூடத் தேசிய சபை அங்கத்தினர்கள் அரசன்மீதோ, அல்லது அரசியின்மீதோ கடும் நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்தனர். அவர்களுக்கு முடியாட்சியை அறவே ஒழித்துவிட வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை நன்கு வெளிப்படுத்தினர். வரையறுக்கப்பெற்ற முடியாட்சியைத்தான் அவர்கள் விரும்பினர். ஆனுல், மன்னனின் விஷயத்தில் மிகவும் விழிப்பாகவே இருந்தனர். இச் சமயத்தில் தான் ஆஸ்டிரியாவின் தலைமையில் பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஃபிரெஞ்சு அரசரின் அந்தஸ்தைக் காக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டன. ஃபிரெஞ்சு நாட்டில் ஏற்பட்டிருந்த புரட்சியை அடக்கி அரசன், மற்றும் பிரபுக்கள்

ஆகியோரின் செல்வாக்கை மீண்டும் ஃபிரெஞ்சு நாட்டில் நிறுவ வேண்டும் என்று முடிவு செய்தனர். ஃபிரெஞ்சு நாட்டு மக்களைப் பின்பற்றி, மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சி மனப்பான்மை பரவி விடுமோ என்று மற்ற ஐரோப்பிய மன்னர்கள் பயந்தனர். 1791 ஆகஸ்டு 27ஆம் தேதியன்று லியோபால்ட் மன்னன் பிலினிட்ஸ் என்ற இடத்தில் ஓர் அறிக்கையை விடுத்தார். அந்த அறிக்கையின்படி, பிரஷ்யாவும், ஆஸ்டிரியாவும் சேர்ந்து ஃபிரான்சில் நடக்கும் புரட்சியைத் தடுக்கத் துருப்புகளை அனுப்புவது என்று தீர்மானித்தன. இச் செய்தியை அறிந்த ஃபிரெஞ்சு மக்கள் கொதிப்படைந்தனர். ஜாக்கபைன்ஸ் கட்சியைத் தவிர, மற்றக் கட்சியினர்களான கிரோன்டிஸ்டுகளும், ஃபியுலெண்டுகளும் (Fevillants) போர் செய்வதை விரும்பினர். போர் ஏற்பட்டால் ஒரு சமயம் பழையபடி மன்னனின் ஆட்சி நிறுவப்படலாம் என்று அவரை ஆதரிப்போர் நினைத்தனர். ஆனால், போர் ஏற்பட்டால் புரட்சி மனப்பான்மை கெட்டுவிடும்; அதனால் எதேச்சாதிகார ஆட்சி வலிமையுறலாம் என்று ஜாக்கபைன்எனினர் நினைத்தனர். அவர்கள் நினைத்ததும் ஒரு விதத்தில் சரியே. ஏனெனில், நெப்போலியன் போனபார்டே பதவிக்கு வருவதற்குச் சாதகமான சூழ்நிலை போரினால் ஏற்பட்டதேயாகும். 1791–92 வரை போரைப்பற்றி ஃபிரான்சில் அதிகமாகப் பேச்சு அடிப்பட்டது. போருக்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டு வந்தன. கிரோன்டிஸ்டுகள் தேசிய சபையில் போர் நடவடிக்கைகளைப்பற்றி வேண்டிய முயற்சிகளை எடுத்தனர். ஃபிரெஞ்சுப் பிரபுக்களின் சதித் திட்டங்களுக்கு மற்ற ஐரோப்பிய மன்னர்கள் ஆதரவு அளிக்கக்கூடாது என்று தேசிய சபை எச்சரிக்கை விடுத்தது. ஆஸ்டிரியப் பேரரசனுடன் சேராதவாறு ஜெர்மன் அரசர்களுக்குப் போதிய பணம் தருவதென்று முடிவு செய்தனர். இந்த நிலையில் மேரி அந்துவானேத் எப்படியும் ஃபிரெஞ்சு முடியாட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தாள். முடியுமானால், அதற்காக ஒரு ஐரோப்பிய வல்லரசுகளின் சபையைக் கூட்டுமாறு வேண்டிக்கொண்டாள். அப்பொழுது நார்போர்ன் என்ற அமைச்சர் உடனடியாக மூன்று படைகளை ஃபிரெஞ்சு எல்லைகளுக்கு அனுப்பி வைத்தார். போர் அரசரின் பெயராலேயே நடக்கவேண்டுமென்று அவர் விரும்பினர். ஃபிரெஞ்சு மக்கள் புரட்சிக்காகவும், ஆனால் அதே சமயத்தில் அரசனுக்காகவும் போரிட வேண்டிய மன நிலையை ஏற்படுத்தினர். இப் போரில் கலந்துகொள்ள பல ஃபிரெஞ்சு மக்கள் ஆர்வம் காட்டினர். போர்க் குரல் பாரிஸ் வீதிகளில் முழங்கியது. மக்கள் இப் போரை ஆதரித்தனர். ஆனால், போர் தொடங்கிய முதல் ஐந்து மாதங்களில், ஃபிரெஞ்சுப் படைகள் மிகவும் கேவலமாகத் தோற்

கடிக்கப்பெற்றன. பழைய துருப்புகளிடையே கலகமும், புதிய தொண்டர்ப் படையினரிடையே திறமையின்மையும் ஒழுக்கமின்மையும் காணப்பெற்றன. இப் படையினர் பல இடங்களில் படுதோல்வியுற்றனர். அப் படையினருக்குப் போதிய போர்க் கருவிகள் வழங்கப்பெறவில்லை. அவர்களுக்குச் சரியாக உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை. அரசியின் சதித் திட்டங்கள் வேறு அருவருக்கத்தக்க நிலையில் இருந்தன. ஆஸ்டிரிய நெதர்லாந்தில் படையெடுத்த ஃபிரெஞ்சுத் துருப்புகள் விரட்டப்பெற்றன. லாபேய்ட் தோற்றுப்போய் பின்வாங்கினர். லியோபால்ட் டில்லன் என்பவர் அவருடைய ஆட்களாலேயே கொல்லப்பட்டார். இவர்களுடைய நிலையைக் கண்டு ஆஸ்திரியத் துருப்புகள் கேலி செய்தனர். "இவர்களிடம் போர் செய்வதற்குத் துப்பாக்கிகளும் கத்திகளும் வேண்டாம், சவுக்கு இருந்தாலே போதுமானது" என்று கூறி சிரித்தனர். வெற்றி அவர்களுடையதே என்று இறுமாப்புக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கவனம் முழுவதும் எங்கே ஆஸ்டிரியாவுக்குத் தெரியாமல் காதரைன் பிரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டு போலந்தைப் பிரிவினை செய்துகொள்ளப் போகிறாளோ என்பதைப் பற்றித்தான் இருந்தது. அதற்கேற்றவாறு பிரஷ்யாவும் அது வரையிலும் போர் தொடுக்காமலேயே இருந்துவிட்டது. ஜூலை 25-க்குப் பிறகுதான் அவர்கள் போரில் நேரிடையாகக் கலந்து கொண்டனர். ஆஸ்டிரியர்களும் பிரஷ்யர்களும் சேர்ந்த ஒரு கூட்டுப் படையைப் பிரஷ்யத் தளபதி பிரன்ஸ்விக் என்பவர் நடத்திச் சென்றார். 20,000 ஆஸ்டிரியா வீரர்களும், 42,000 பிரஷ்ய வீரர்களும், 8000 ஃபிரெஞ்சுப் பிரபுக்களும் ஒன்று திரண்ட பெரிய படைக்கு எதிராக ஃபிரெஞ்சுத் துருப்புகள் எம்மாத்திரம்? அதனால் போரிட வேண்டிய அவசியம் இருக்காது என்று பிரன்ஸ்விக் இறுமாந்து அப் படைகளை ஊர்வலமாகவே நடத்திச் சென்றார். இது வரையிலும் பொறுமையுடன் இருந்த லியோபால்ட் மன்னன் இப்பொழுது தீவிரமாக ஃபிரெஞ்சு அரசியலில் தலையிடுவது என்று முடிவு செய்து, ஃபிரெஞ்சுப் புரட்சியினரும் ஜாக்கபைன்களும் அந்த நாட்டின் அமைதியையும் முடியாட்சியையும் சீர்குலைக்கின்றனர் என்று ஒரு கண்டன தீர்மானத்தை அனுப்பிவைத்தார். ஜெர்மானிய அரசர்களும், பிரஷ்ய மன்னனும் ஒன்று சேர்ந்து ஃபிரெஞ்சுப் புரட்சியை அடக்குவதில் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் பெரிதும் முயன்றார். ஆனால், தேசிய சபை சரியான பதிலைத் தயாரித்து லியோபால்ட் மன்னனுக்கு அனுப்பும் வேளையில் அவர் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு அவருடைய மகன் இரண்டாம் பிரான்சிஸ் பட்டத்திற்கு வந்தார். தந்தையைக் காட்டிலும் அவர் ஃபிரெஞ்சுப் புரட்சியை அதிகமாக வெறுப்பவராக இருந்தார். அதனால் அவருடைய

தலைமையில் மேலும் புரட்சியை அடக்குவதற்குத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றன.

போர் சமயத்தில் நார்போர்னின் அமைச்சரவை கலைக்கப் பெற்றது. அவருக்குப் பதிலாகப் பிரிஸ்ஸாட் (Brissot) என்பவர் பிரதம அமைச்சராக நியமனம் செய்யப்பெற்றார். வெளிநாட்டு அமைச்சராகத் துமோரியஸ் (Dumouriez) என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவர் பிரஷ்யாவை எப்படியாவது ஆஸ்டிரியாவின் பக்கம் சாராமல் பிரிக்க முயன்றார். அவரால் அதைச் சாதிக்க முடியவில்லை. அதனால் அவர் தீவிரமாகப் போர் செய்வது என்று முடிவு செய்தார். 1792 ஏப்ரல் 20ஆம் தேதியன்று, அரசன் வாயிலாகவே ஹங்கேரி பொஹிமியா மன்னன்மீது போர்ப் பிரகடனம் அறிக்கையொன்றை வாசிக்கச் செய்தார். இந்த அறிக்கையைக் கிரோன்டிஸ்டுகள் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். "மக்களுடைய விருப்பமும் இதுதான்" என்று தேசிய சபை அங்கத்தினர்கள் ஆரவாரித்தனர்.

பிரன்ஸ்விக் ஐந்து மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஃபிரெஞ்சுப் படையினரின் தோல்விகளைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால், பல தோல்விகளுக்குப் பிறகு ஃபிரெஞ்சு நாட்டில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. கிரோன்டிஸ்டுகளுடைய அமைச்சரவை தோல்விகளுக்குச் சரியான சமாதானம் அளிக்காது கவிழ்ந்தது. பிரஸ்ஸாட்டும் அவருடைய அமைச்சர்களும் பதவி இழந்தனர். பிரஸ்ஸாட்டுக்குப் பதில் டேண்டன் பதவிக்கு வந்தார். அவர் ஜாக்கபைன்ஸ் கட்சித் தலைவர். அக்கட்சியினர் தீவிரமான புரட்சி மனப்பான்மை கொண்டவர்களாவர். இவர்கள் தொடக்கத்தில் போர்த் தவிர்க்கப்படவேண்டும் என்றுதான் நினைத்தனர். ஆனால், கிரோன்டிஸ்டுகள் போரில் இறங்கி நாட்டில் பயங்கரமான குழப்பத்தை ஏற்படுத்திவிட்டனர். அவர்கள் நினைத்தது வேறு; ஆனால், நடந்தது வேறு. இந்தப் போர்க் காரணமாக முடியாட்சி மேலும் கண்டனத்திற்குள்ளாகும்; முடியாட்சியை எதிர்த்து மக்கள் பொங்கி எழுவர் என்று நினைத்தனர். ஆனால், திறமையற்ற படையெடுப்புகளால் அவர்களுடைய பதவிகளுக்கே ஆபத்து ஏற்பட்டுவிட்டது. இந்தக் குழப்பமான நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்டு ஜாக்கபைன்கள் தேசிய சபையினுள் விவாதங்கள் நிகழும்பொழுது மக்கள் கூட்டத்தை அனுமதித்துவிட்டனர். எங்குப் பார்த்தாலும் "உணவு இல்லை", "வசதி யில்லை" என்ற பல அதிருப்தியான குரல்கள் கேட்டன. ஒழுக்கமும், கட்டுப்பாடுமில்லாத இந்தச் சூழ்நிலையில் முடியாட்சி அதிகமாகத் தூற்றப்பெற்றது. வேண்டு

மென்றே இதைப் பெரிதாக்கிக் காண்பித்தனர். ஜாக்கபைன்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இந்தச் சூழ்நிலை மிகவும் சாதகமாக அமைந்தது. போரில் வெற்றிப்பெற வேண்டுமென்றால் ஜாக்கபைன்களுக்கு முழு அதிகாரமும் வேண்டும் என்று வற்புறுத்தினர். இச் சமயத்தில் லாபேய்ட் (Lafayette) பாரிஸ் நகரத்திற்குள் நுழைந்து அமைதியை நிலைநிறுத்த முயன்றார். அவரால் முடியவில்லை. அரசனின் ஆட்சியையாவது மீண்டும் கொண்டுவரலாம் என்று முயன்றார். அதுவும் அவரால் முடியவில்லை. படை பலத்தின் உதவியால், இக் காரியத்தைச் சாதித்து விடமுடியும் என்று நினைத்தார். ஆனால், அவரது வேண்டுகோளைப் படையினர் நிராகரித்துவிட்டனர். வேறு வழியின்றி அவர் எதிரிகளிடம் சரணடைந்துவிட்டார்.

கிரோன்டிஸ்டுகளும்கூடத் தங்களுடைய அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்காக அரசனையே ஆதரித்தனர். எந்த விதத்திலும் ஓர் ஒப்பந்தத்தை அரசரிடம் செய்து கொள்வதென்று அவர்கள் நினைத்தனர். ஆனால், இவ்விதமான முடிவுகளை மக்கள் ஏற்க மறுத்துவிட்டனர். அரசனும்கூட அவர்களை நம்பத் தயாராக இல்லை. அவர்களுடைய உதவியையும் அவர் நாடவில்லை. அதனால் ஜாக்கபைன்கள் கையில் இப்பொழுது அதிகாரம் கிடைத்துவிட்டது. மக்களுடைய குரல்களை அவர்கள் பிரதிபலிப்பர் என்று பறைசாற்றினர். மக்களும் இவர்களை நம்பினர். ஆனால், அவர்களுடைய தூண்டுதலின் பேரில் ஒரு பெருங்கூட்டம் அரண்மனைக்குள் புகுந்து அரசனைப் பிடித்துக்கொண்டனர். அவருடைய தலையில் புரட்சியின் சின்னமான சிவப்புத் தொப்பியைப் போட்டுப் பார்த்தனர். புளிப்பான திராட்சை ரசத்தை அவர் வாயில் ஊற்றினர். அவரைக் கண்ட விதமான கேள்விகளைக் கேட்டு கேலி செய்தனர். அதே விதமாகச் சில பெண்கள் அரசியையும் கேலி செய்தனர். அவருடைய அறையிலுள்ள கண்ணாடிகளைத் தூளாக்கினர். விலையுயர்ந்த பொருள்களை எடுத்துச் சின்னாபின்னப் படுத்தினர். எல்லாக் குறைகளையும் அரசன் கவனிப்பதாகக் கூறினர். ஆனால், அரசனுடைய வாக்குறுதிகளை நம்பும் காலம் மலையேறிவிட்டது. இருவரையும் சிறைச் செய்தனர். அவர்களை விசாரணை செய்யவேண்டுமென்று மக்கள் கூக்குரலிட்டனர். தேசிய சபை அங்கத்தினர் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். ஒவ்வொருவராக இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்தனர். இறுதியில் இவ் விசாரணையைப் பாரிஸ் நகரத்து கம்யூனிடம் ஒப்படைத்தனர். இந்தப் பாரிஸ் கம்யூன் 1792 ஆகஸ்டு 10ஆம் நாளன்று நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு மிகவும் பலம் பெற்றுவிட்டதுமின்றி

தேசிய சபையும்கூட இனி கூட்டப்படாமல் போவதற்கு வழி செய்துவிட்டது. இவ் விசாரணையை நடத்த ஒரு விசாரணைக் குழுவினரை நியமித்தனர். இக் குழுவில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஜாக்கபைன்ஸ் கட்சியைச் சார்ந்தவர்களேயாவர். அப் பொழுது அவர்கள்தான் மக்கள். புரட்சியைத் தொடர்ந்து செய்யும் பொறுப்பையும் அவர்களே ஏற்றுக்கொண்டனர். மன்னனின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். மன்னனின் ஆதரவாளர்கள் அத்தனை பேரையும் தூக்குமேடைக்கு அனுப்பினர். பிரபுக்கள், குருமார்கள், மன்னனின் ஆதரவாளர்கள், கிரோன்டிஸ்டுகள் ஆக அத்தனை பேரும் நடுங்கிக் கொண்டுதான் அப்பொழுது இருந்தனர். அரசாங்கத்தைக் கைப்பற்றிய ஜாக்கபைன்கள் நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்காகப் புரட்சியின் எதிர்ப்பாளர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் அத்தனை பேரையும் கொன்று குவித்தனர். இறந்தவர்கள் மக்களுடைய கோபத்திற்கு ஆளாகிவிட்டனர். என்ன செய்ய முடியும் என்று டேண்டன் நீலிக் கண்ணீர் சொரிந்தார். ஏறக்குறைய 1600 பேர்கள் இவ்விதமாக மக்களுடைய கோபத்திற்கு ஆளாகிவிட்டனர். இந்தப் படுகொலைகள் 1792 செப்டம்பர் மாதம் மட்டும் நிகழ்ந்தன. அதனால் இவர்களது பயங்கரமான ஆட்சி மக்களை நடுக்கமுறச் செய்தது.

7. கன்வென்ஷன்
(Convention)

புரட்சி சபை (1792 செப்டம்பர்–1795 அக்டோபர்)

தேசிய சபை கலைக்கப்பெற்றது. புரட்சிப் பாதை வேறு வழியில் திரும்பியது. பழைய மன்னர்களின் எதேச்சாதிகார ஆட்சி முடிவடைந்தது. மேற்கொண்டு செய்யப்படும் புரட்சி முடியாட்சியை விரட்டுவதற்கல்ல; ஆனால், மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காகச் செய்யப்படுவதாகும் என்று கூறினர். முதலில் புரட்சியின் எதிர்ப்பாளர்களை உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் அடக்கியாகவேண்டும் என்று ஜாக்கபைன்கள் உறுதி செய்துகொண்டனர். அவர்கள் எல்லாப் பழைய இயக்கங்களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும், வழக்காறுகளையும் ஒரே நொடியில் தகர்த்தெறிந்தனர். அவர்கள் ஒரு புதிய அரசியல் அமைப்பையும் தயாரித்தனர். 1792 செப்டம்பர் 20ஆம் தேதியன்று ஃபிரான்ஸ் குடியரசு நாடென்று அறிவித்தனர். அன்றிலிருந்தே ஃபிரான்சின் எதிரிகள் அதிகமாகிவிட்டனர். பிரஷ்யாவும், ஆஸ்டிரியாவும் தீவிரமாகத் தாக்கின. ஆனால் ஃபிரெஞ்சுக் குடியரசு படைகள்

புரட்சியில் பெற்ற வெற்றி காரணமாக ஒரு குறிக்கோளுக்காகப் போராடுகிறோம் என்ற மகிழ்ச்சியுடன் சண்டையிட்டதால், குடியரசு தோன்றியது முதல் ஆறு மாதங்கள் வெற்றி மேல் வெற்றி பெற்றனர். முதலில் ஏற்பட்ட இழிவு இவ் வெற்றிகளால் மறைந்தது. பிரஷ்யத் துருப்புகளை வால்மி என்ற இடத்தில் ஃபிரெஞ்சுப் படை தோற்கடித்தது. பிரஷ்யத் தளபதி பிரன்ஸ்விக், டேண்டனுடன் ஒரு தற்காலிக ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு ஃபிரெஞ்சு எல்லைகளை விட்டுக் கடந்து சென்றனர். பிரன்ஸ்விக் நினைத்திருந்தால் ஃபிரான்ஸ்மீது படையெடுத்தது மட்டு மல்லாமல் அந்த நாட்டை வெகு எளிதில் கைப்பற்றியும் இருந் திருக்கலாம். ஆனால், நல்ல வாய்ப்பை நழுவவிட்டுவிட்டார். ஏனெனில், ஃபிரெஞ்சு மக்கள் குடியரசை நிறுவிய களிப்பில் உற்சாகத்துடன் காணப்பெற்றனர். அந்த உணர்வு அவர் களுக்கு ஒரு புதிய சக்தியைக் கொடுத்தது. அதற்காக மட்டுமல்ல, பிரஷ்யப் படையினர் பின் வாங்கியது. பரம்பரையாகப் பிரஷ்யர் களுக்கும் ஆஸ்டிரியர்களுக்கும் இருந்த பொருமை, வேற்றுமை ஆகிய தன்மைகள் அப்பொழுதும்கூடச் சிறிதும் குறைந்த பாடில்லை. தவிர, போலந்தைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில், ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் மிகவும் தீவிரமாக முனைந்திருந்ததால், ஏமாற்றமடையாது போலந்து பிரச்சினையில் சிறிது கண்காணிப்பாகவே இருந்துவிட வேண்டுமென்று நினைத்தனர். எப்படியிருப்பினும் குடியரசு துருப்புகள் பெற்ற வெற்றி, சாதாரண வெற்றியாக இருந்த போதிலும், அந்த வெற்றியின் காரணமாகக் குடியரசு தப்பித்தது என்ற நிலை ஏற்பட்டது. அதனால் குடியரசின் மதிப்பும்கூட ஐரோப்பாவில் உயர்ந்துவிட்டது என்று கூறலாம்.

வால்மியில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து குடியரசின் படைகள் சேவாய், நைஸ் ஆகிய பகுதிகளையும் பிடித்துக் கொண்டன. மேலும் ஜெர்மனி நாட்டினுள் நுழைந்து, ஸ்பையர்ஸ், வர்ம்ஸ், மெயின்ஸ், மற்றும் பிராங்பர்ட் ஆகிய இடங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டன. டூரின், ஜெனேவா, ரோம் ஆகிய நகரங்களிலும் குடியரசுக் கொடியைப் பறக்கவிடப் போவதாகக் குடியரசுச் சபை அறிவித்தது. துமோரியஸ், பெல்ஜியம் நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். 1792 நவம்பர் 6ஆம் தேதியன்று ஜமாப்ஸ் என்ற இடத்தில் ஒரு பெரிய வெற்றியை அடைந்தார். அடுத்த நாள் மான்ஸ் நகரத்தினுள் புகுந்தனர். குடியரசுப் படைகளை மக்கள் வரவேற்றனர். பிரஸ்ஸல்ஸ் நகரமும் அவர்கள் வசமாயிற்று. ஆஸ்டிரிய நெதர்லாந்து முழுவதும் ஃபிரெஞ்சுப் படைகளின் ஆதிக்கத்தினுள்

கொண்டுவரப்பட்டது. ரிச்சல்யூவும், பதினான்காம் லூயி கனவு கண்டிருந்த இயற்கை எல்லைகள் வரையிலும் ஃபிரெஞ்சு நாடு பரவியிருக்க வேண்டுமென்ற கனவைக் குடியரசு நனவாக்கிவிடும் காலம் வந்துவிட்டது. மீண்டும் ஃபிரெஞ்சுப் படைகள் ஐரோப்பாவின் பெரும் பகுதியைப் பிடித்து அப் பகுதிகளில் எல்லாம் குடியரசுக் கொடியைப் பறக்கவிட வேண்டுமென்று எண்ணம் பிறந்தது. ஐரோப்பாவில் எங்கெல்லாம் மன்னர்களது எதேச் சாதிகார ஆட்சியிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்களோ அங்கெல்லாம் குடியரசுப் படைகள் தியாக உணர்ச்சியுடனும் மற்ற மக்களின் உரிமைகளையும், சுதந்தரத்தையும் பாதுகாப்பதற்குத் தயார் என்று மார்தட்டினர் ஃபிரெஞ்சு மக்கள். இக் குடியரசு வெறியும், ஐரோப்பாவிலுள்ள மற்றப் பகுதி மக்களின் சுதந்தர உணர்ச்சியும் எதேச்சாதிகாரத்தில் இது வரையிலும் நீந்திக்கொண்டிருந்த மன்னர்களைப் பெருமளவில் அதிர்ச்சியுறச் செய்தது. இதனால் மற்ற ஐரோப்பிய மன்னர்களுக்கும்கூட ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி ஒரு கூட்டணியைச் சேர்ப்பதென்று அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்தனர். இச் சமயத்தில்தான் 1793 ஜனவரி 21ஆம் தேதியன்று பதினான்காம் லூயிமீது குற்றம் சாட்டி, அவரை கில்லட்டினுக்கு அனுப்பினர். தலையை வலியின்றி வெட்டி எடுக்கும் கூர்மையான வாளையுடைய ஓர் இயந்திரத்தைத்தான் கில்லட்டின் என்று அழைத்தனர். லூயி மன்னன் எவ்விதமான பரபரப்பும் இன்றி அமைதியாகத்தான் சாவை எதிர்நோக்கி நின்றார். "தம்முடைய மரணம்தான் நாட்டின் மக்களுடைய நலத்தைக் காக்கும் என்று அவர்கள் கருதினால், நான் மகிழ்ச்சியுடன் சாகிறேன்", என்று இறுதியாக அந்த மன்னன் கூறினார். லூயி மன்னனது தலையை மற்ற ஐரோப்பிய மன்னர்களுக்குப் பரிசாக அளிக்க வேண்டுமென்று சில புரட்சியாளர் விரும்பினர் போலும்! லூயி மன்னனது பரிதாபகரமான மரணம் மற்ற ஐரோப்பிய மன்னர்கள் விரைவில் ஒன்று சேரும்படியான நிலைக்கு இழுத்துவிட்டது.

ஏற்கனவே இயற்கை எல்லைகளுக்குப் ஃபிரெஞ்சுப் பகுதியை விஸ்தரிக்க வேண்டும் என்று குடியரசு சபை நிர்ணயம் செய்திருந்ததால் ஃபிரெஞ்சு நாடு, ஆஸ்டிரியா, பிரஷ்யா, இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்பெயின், போர்ச்சுகல், நேபிள்ஸ், டஸ்கனி ஆகிய நாடுகளுடன் நேரடியாகவே மோத நேரிட்டது. பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஃபிரெஞ்சு நாட்டின்மீது படையெடுத்து அங்கு நிறுவப்பட்டிருக்கும் குடியரசு அரசாங்கத்தைக் கலைத்து, மீண்டும் முடியாட்சியைக் கொண்டுவர வேண்டு

மென்று ஒரு கூட்டணியை 1793-ல் ஏற்படுத்தினர். இதுதான் ஃபிரான்சிற்கு எதிராகக் கிளம்பிய முதற் கூட்டணியாகும்.

சமீபத்தில் அடைந்த வெற்றிகளால் உண்மையான நிலை யையும்கூடக் குடியரசுச் சபை அறிந்துகொள்ள முடிய வில்லை. இவ்வளவு நாடுகள் கொண்ட எதிர்ப்பணியை எப்படிப் புதிய குடியரசு அரசாங்கம் சமாளிப்பது என்பதைப்பற்றியெல்லாம் கவலை கொள்ளவில்லை. துமோரியஸ் மீண்டும் அவருடைய துணிச்சலுடன் ஹாலந்து நாட்டைத் தாக்கினர். ஆனால் வெற்றி கிடைக்கவில்லை. மீண்டும் ஆஸ்டிரியப் படைகளுடன் நீர்விண்டின் என்ற இடத்தில் போரிட்டுத் தோற்கடிக்கப்பெற்றார். இந்தப் போரினால் ஃபிரான்சிற்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. பிரஸ்ஸல்ஸ் நகரையும் இழந்துவிட்டது. அதைவிடப் பெரிய அவமானம் என்னவெனில், துமோரியஸ் தாமே பதவிக்கு வரவேண்டுமென்ற ஆசையும் வைத்திருந்தார். இவரது திட்டத்தை அறிந்துகொண்ட குடியரசு அரசாங்கம் அவரைக் கைதுசெய்ய அதிகாரிகளை அனுப்பி வைத்தது. தளபதி துமோரியஸ் அந்த அதிகாரிகளைப் பிடித்து மேரி அந்துவானேத்தின் உயிர் பணயமாக ஆஸ்டிரியப் படை களிடம் ஒப்படைத்துவிட்டனர். மேலும், அவரும், எதிரிகளிடம் சரணடைந்துவிட்டார். பெல்ஜியத்தை இழந்துவிட்ட பிறகு ஃபிரான்சின்மீதே கூட்டணிப் படைகள் தாக்க ஆரம்பித்து விட்டன. டங்கிர்க் நகரை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டனர். ஆஸ்டிரியப் படைகள் ஆஸ்டிரிய நெதர்லாந்தில் முன்னேறிக் கொண்டிருந்தன. லில்லி நகரம்வரை அவர்கள் முன்னேறி விட்டனர். ஜெர்மனி, பிரஷ்யா ஆகிய நாடுகளின் படைகள் பிராங்பர்ட், மெயின்ஸ் ஆகிய பகுதிகளை மீட்டு அல்சாஸ் பகுதி யில் நுழைந்துவிட்டன. தெற்கே, ஸ்பெயின் நாட்டுப் படைகள் பைரனிஸ் மலையைத் தாண்டி, ரோஸலின் பகுதியை ஆக்கிர மித்துக்கொண்டனர்.

இந்த நெருக்கடியான நேரத்தில் குடியரசு அரசாங்கம் கட்டாய இராணுவ சேவையை அமுலாக்கியது. எங்கும் குடியரசுப் படைகளைத் திரட்டுவதிலும், நிதி சேகரிப்பதிலும், தீவிரமாக முனைந்திருந்தனர். ஆனால் ஃபிரான்சின் எல்லாப் பகுதிகளிலும் குடியரசு அரசாங்கத்திற்குத் தகுந்த ஆதரவு கிடைக்கவில்லை. மன்னரைக் கொன்ற அரசாங்கத்திற்கு ஆதரவு தரமுடியாது என்று ஃபிரான்சின் மேற்குப் பகுதிகளான பிரிட்டானியும், லாவெண்டியும் குடியரசு அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் விளை வித்தன. சண்டையிட்டால் குடியரசிற்கு எதிராகத்தான் சண்டை யிடுவோமே தவிர, ஆதரித்துச் சண்டையிட முடியாது என்று

உறுதியாக அப் பகுதியிலுள்ள மக்கள் கூறினர். இக் கலகத்தின் முதல் கட்டத்தில், குடியரசு அரசாங்கம் கலகம் விளைவித்தவர்களை அடக்கிவிட்டனர். ஆனால் இரண்டாவது கட்டத்தில், நிலக் கிழார்களும் ஒன்று சேர்ந்துவிட்டதால் கலகத்தை அடக்குவது சிறிது கஷ்டமாகிவிட்டது கலகக்காரர்கள் பதினேழாம் லூயியை அந்நாட்டு அரசனுகப் பாவிப்பதாகப் பிரகடனம் செய்தனர். பல இடையூறுகளுக்குப் பிறகுதான் இந்தக் கலகம் ஒடுக்கப்பெற்றது. மற்றும் பாரிஸ் கம்யூனின் ஆதிக்கத்தையும் ஜாக்கபைன்களின் கொடுங்கோன்மை ஆட்சியையும் எதிர்த்து, கிரோன்டிஸ்டுகளின் தூண்டுதலால் கேவன், போர்த்யோ நகரங்களில் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சியை எளிதில் அடக்கிவிட்டதுமின்றி கிரோன்டிஸ்டுகளின் இயக்கத்தையும் வேரோடு அறுத்து விட்டனர். இதைத் தொடர்ந்து, மன்னனது ஆதரவாளர்களும், மிதவாதிகளும், பிரபுக்களும், குருமார்களும், கலகக்காரர்களுக்கு ஆதரவு அளித்தவர்களும், ஆதரவு அளித்ததாகச் சந்தேகப்பட்ட வர்களும், மற்றும் பலரும் கில்லட்டினுக்கு அனுப்பப்பெற்றனர்.

ஃபிரான்ஸ் நாட்டின் உள் நாட்டுக் கலகங்களும், வெளியே யிருந்து வந்த படையெடுப்புகளும் மக்களைப் பெரும் அளவில் கலங்கச் செய்துவிட்டன. அவர்களுடைய வாழ்வில் அமைதியே குன்றிவிட்டது. இக் குழப்பமான சூழ்நிலை ஜாக்கபைன்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

ஆக்கிரமிப்பாளர்களின் படையெடுப்புகளிலிருந்தும், தேசத் துரோகிகளான கிரோன்டிஸ்டுகளின் கலகங்களிலிருந்தும் மக்கள் விடுபட்டுச் சுதந்தரமாகவும் சமத்துவமாகவும் வாழவேண்டு மென்றால், மக்கள் ஜாக்கபைன்களிடம் தளராத நம்பிக்கையை வைக்கவேண்டும் என்ற உணர்வை அவர்கள் மக்களிடம் பதிய வைத்தனர். மக்கள் அமைதியுடனும், சுதந்தரத்துடனும் வாழ் வதற்கு வசதி செய்து தருவதற்காகப் பொதுமக்களது பாதுகாப்புக் குழு (Committee of the Public Safety) ஒன்று அமைக்கப் பெற்றது. நாட்டின் நிர்வாகப் பொறுப்பு முழுவதும் இந்தக் குழுவிடமே தரப்பெற்றது. தொடக்கத்தில் இக் குழுவில் இருபத் தைந்து அங்கத்தினர்கள் இருந்தனர். ஆனால் கிரோன்டிஸ்டுகள் படிப்படியாக ஒழிக்கப் பெற்றதால் அவர்களுடைய பிரதிநிதித்து வத்தை அகற்றிவிட்டு குழுவின் அங்கத்தினர்களின் தொகையை ஒன்பது பேர்களாகக் குறைத்துக்கொண்டனர். இப் பாதுகாப்புக் குழு ஒரு சர்வாதிகாரிக்கு இருக்கவேண்டிய அதிகாரங்களை வைத்துக்கொண்டது. இதனுடைய ஆதிக்கத்தை எதிர்த்துக் கேட்பதற்கு ஆளில்லை. அப்படி எதிர்த்துக் கேட்டால், அவன்

கில்லட்டினுக்குப் பலியாகி விடுவான். ''மன்னர்களது சர்வாதிகாரத்தை ஒழிக்க இப்படி ஒரு தற்காலிகச் சர்வாதிகாரம் பொருந்திய குழுவினர் தேவைப்படுகின்றது'' என்று டேண்டன் கூறினர். இப் பாதுகாப்புக் குழுவின் முதல் வேலையாக எல்லாக் கிரோன்டிஸ்டுகளையும் தூக்கு மேடைக்கு அனுப்பினர். அதற்குப் பிறகு, அக் குழுவினர்களிடையே கட்சிப் பூசல்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. பெரிய புரட்சித் தலைவனான டேண்டன்கூடத் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டார். இவரை இக்கதிக்கு ஆளாக்கியவர் ரோபஸ்பியர் என்பவராவர். பெண்களை வெறுக்கின்றவரும் நாணயத்தையே பெரிதும் மதிக்கின்றவரும், அதே சமயத்தில் மக்களாட்சியில் தளராத நம்பிக்கை வைத்திருப்பவருமான இந்த ரோபஸ்பியர் டேண்டனின் வெளிநாட்டுக் கொள்கையில் ''சமாதானம்'' வேண்டும் என்ற கொள்கையை ஆதரிக்கவில்லை. டேண்டன், மற்றும் அவரைச் சேர்ந்த கேமில் டெஸ்மோலின்ஸ் மற்றும் பலர் பரிதாபமான முடிவை எய்தினர். குடியரசின் தொடக்கத்தில் ஏற்பட்ட பிரம்மாண்டமான மாறுதல்களில் ஒன்றான ''பகுத்தறிவு வணக்கமும்'' ஒன்றாகும். இந்த இயக்கத்திற்கு ஒரு பெரிய தூணாக இருந்தவர் ஹெபர்ட் என்பவராவர். அவரைச் சார்ந்தவர்களையெல்லாம் 'நாத்திகர்கள்' என்று குற்றம் சாட்டித் தூக்கு மேடைக்கு அனுப்பினர். பெண்களில் முக்கியமாக மேடம் ரோலாண்ட், மேடம் துபாரி, மேடம் எலிசபெத், சார்ஸ் கார்டே, பிறகு அரசியான மேரியா அந்துவானேத்தும் கில்லட்டினுக்கு இரையாகினர். எங்குப் பார்த்தாலும் படுகொலைகளும், பயங்கர ஆட்சியுமே நிலவியிருந்தன. மக்கள் பீதியடைந்தனர். எல்லாரையும் ஒருங்கே கொன்றுவிட்டால் யார்மீதும் சந்தேகமே இருக்காது என்று ஹெபர்ட் கூறினர். 1793 ஜூலையிலிருந்து 1794 ஜூலை வரையிலும் இந்த பயங்கர ஆட்சி நீடித்தது. இச் சமயத்தில் நீதி விசாரணை என்ற முறைகளே கிடையாது. எதையும் குறையாக எடுத்துக் கூறவும் முடியாது. குறைகளைக் கூறினால் 'தேசத் துரோகம்' என்ற குற்றம் சாட்டப்படும். விசாரணை மிகவும் சுருக்கமாகவும் ஒருதலையாகவும் இருந்தது. புரட்சி நீதி மன்றங்களில் பணியாற்றிய நீதிபதிகள் ரோபஸ்பியரின் சர்வாதிகார ஆட்சிக்குட்பட்டவரேயாவர். அவர்களிடம் நியாயத்தை எதிர்பார்க்கவும் முடியவில்லை. இந்த ஓராண்டில் மட்டும் ஏறக்குறைய 16,000 பேர் படுகொலை செய்யப்பட்டிருப்பர் என மதிப்பிடப்படுகின்றது. இந்த இரத்த வெறிப்பிடித்த ஆட்சி நாளடைவில் சலிப்படைந்துவிட்டது. புரட்சி சபையிலுள்ள அங்கத்தினர்களையே ரோபஸ்பியர் சந்தேகப்பட்டு குற்றம் சாட்டினர். அதனால் அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ரோபஸ்பியரையே எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். ஜூலை 1794-ல் அவரும், அவருக்கு உடந்தை

யாக இருந்த மற்றும் 92 பேரையும் கில்லட்டினுக்கு அனுப்பி வைத்தனர். தேசத் துரோகிகள் என்று கருதப்பெற்ற மற்றவர் களுக்கும் தரப்பட்ட அதே தண்டனையை இவருக்கும் அளித்தனர். இவருடன் புரட்சியின் பயங்கர ஆட்சியும் முடிவடைந்தது. மக்களிடையே பெரும் மகிழ்ச்சித் தோன்றியது. இக் கொடிய ஆட்சியில் சாதித்தது என்னவென்றால், ஒரு மாபெரும் சர்வாதி காரத்தை நிலைநிறுத்தியதேயாகும். பாரிஸ் நிர்வாகத்தைச் செயின்ட் ஜஸ்ட் என்பவர் நிர்வகித்து வந்தார். அவருடைய முயற்சியின் பேரில்தான் ஐந்தாம் படையினரைக் கண்டு பிடிக்கும் ஒரு பெரிய நிறுவனத்தை ஏற்படுத்தினர். ஹெரால்ட் செச்சல்ஸ், ராஜிய உறவுகளைக் கவனித்து வந்தார். புரட்சியாளர்களின் கப்பற்படை நிர்வாகத்தைச் செயின்ட் ஆண்டிரியும், கார்னட் என்பவர் படைகளை நிர்வாகம் செய்வதிலும் தீவிரமான அக்கரை எடுத்துக்கொண்டனர். புரட்சிச் சபை நிறையப் பணத்தைச் சேமித்து வைத்துத் திறம்பட படைகளைச் செலுத்திக் குடியரசு நிர்வாகத்தைச் சர்வாதிகார அடிப்படையில் நடத்திச்சென்றனர். வர்த்தகம், வாணிகம், சமயம், கல்வி ஆகியத் துறைகளிலும் அவர்கள் சிறப்பான கவனம் செலுத்தினர். பல படுகொலைகளின் மீது அமைக்கப்பெற்ற கொடிய சர்வாதிகார ஆட்சியாக இருந்த போதிலும் நிர்வாகம் செம்மையாக நடைபெற்றது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். நெப்போலியன் ஒரு சர்வாதிகாரியாகச் செயலாற்றுவதற்குத் தக்கச் சூழ்நிலையை அமைத்துக் கொடுத் தவர் இப் புரட்சிச் சபையினரேயாவர். இப் புரட்சிக் குழுவினர் நிறைவேற்றிய மற்றொரு சாதனை, புரட்சிக் கொடியை மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் நிலைநாட்டியதாகும். 1794ஆம் ஆண் டிற்குப் பிறகு புரட்சிப் படையினருக்கு எங்கும் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. புளூரில் கிடைத்த வெற்றியால் பெல்ஜியத் தைக் கைப்பற்றினர். கெய்சர்ஸ்லார்டரில் கிடைத்த வெற்றியால் ரைன் பகுதி கிடைத்தது. 1795-ல் ஹாலந்தின்மீது வெற்றிகரமாகப் படையெடுத்தனர். அதே ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரஷ்யாவும், ஸ்பெயினும் பேஸல் என்ற இடத்தில் ஃபிரெஞ்சுக் குடியரசிடம் ஒப்பந்தம் செய்துகொண்டன. புரட்சிச் சபையும், பாதுகாப்புக் குழுவினரது சபையும் கலைக்கப்படுவதற்கு முன்னர், மிகவும் பெரியதொரு ஐரோப்பியக் கூட்டணியை முறியடித்த பெருமை பாதுகாப்புக் குழுவின் நிர்வாகத் திறமையைக் காட்டுகின்றது. ரோபஸ்பியரின் வீழ்ச்சிக்குப் பிறகு, பாரிஸ் கம்யூன், ஜாக்கபைன் சங்கம், புரட்சி நீதிமன்றம், பாதுகாப்புக்குழு ஆகிய நிறுவனங் கள் எல்லாம் கலைக்கப்பெற்றன. புரட்சிச் சபையில் புதியதொரு கட்சி உருவாகியது. 1793-ல் ஏற்படுத்திய அரசியல் அமைப்புக் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக 1795-ல் புதியதொரு அரசியல்

அமைப்புக் கொண்டுவரப்பட்டது. ஒரு நிர்வாகச் சபையும், ஈரங்கச் சட்டசபையும் கொண்ட ஓர் அரசியல் அமைப்பில் பழைய சமத்துவம், சுதந்தரம் என்ற பிடிவாதமான கொள்கை களிலிருந்து சிறிது விலகி, மீண்டும் பிரபுக்களையும், குருமார் களையும் வாழவிடும் ஒரு கொள்கையைக் கொண்டுவந்தனர். டைரக்டரி என்று கூறப்படும் இந்த நிர்வாகச் சபையினரின் ஆட்சி 1795–1799 வரையிலும் நீடித்தது.

டைரக்டரி (Directory) அரசாங்கம் 1795-ல் கடைசியில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றபொழுது, ஃபிரான்சில் பொருளாதார நெருக்கடியும், புரட்சிக்கு எதிரான இயக்கமும், போர்க் கூடாது என்று கூறுகின்ற இயக்கமும் வலிமை பெற்றிருந்தன. கன்வென் ஷன் ஆட்சி விட்டுவைத்தப் பல சிக்கலான பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு டைரக்டரி அரசாங்கத்தின் மீது விழுந்தது. தவிர, நாட்டில் புரட்சியின் எதிர்ப்பாளர் கூட்டம் மிகவும் அதிகமாகிவிட்டது. அதே சமயத்தில் மிக முன்னேற்ற மான சீர்திருத்தங்கள் வேண்டுமென்ற ஓர் இயக்கமும் மக்களிடையே ஆதரவுபெற்று வந்தது. ஆனால், டைரக்டரி அரசாங்கத்தைத் திறம்பட நிர்வாகம் செய்ய நல்ல அரசியல் வாதிகள் அப்பொழுது இல்லை. பல திறமை மிக்கவர்கள் புரட்சிப் புயலில் சிக்கி உயிரிழந்தனர். பலர் நாடு கடத்தப்பெற்றனர். தவிர, இவ்வரசாங்கத்தின் அரசியல் அமைப்பின்படி, சட்ட சபைக்கும், நிர்வாகத்திற்கும் எவ்விதத் தொடர்புமின்றி அதிகாரப் பிரிவினை செய்யப்பட்டிருந்தது. அதனால் எந்த நடவடிக்கையையும் உடனடியாக எடுப்பதற்கு அந்த டைரக்டரி அரசாங்கத்தால் முடியவில்லை. இவ்வரசாங்கம் பதவியேற்றபொழுது, அரசனின் ஆதரவாளர்கள் மீண்டும் முடியாட்சியை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யும் நோக்கத்தில் ஒரு கலகம் விளைவித்தனர். அக் கலகத்தை 'டைரக்டரி' அடக்கிவிட்டது. அதற்குப் பிறகு பேபியூப்ஃ (Babeuf) என்ற தீவிரவாதி ஆரம்பித்தச் சதித்திட்ட இயக்கத்தை (Babeuf Conspiracy) ஒடுக்கினர். இந்தப் பேபியூப்ஃ என்பவர்தான் ஃபிரான்சிலே சோஷியலிச இயக்கத்தையே ஆரம்பிப் பதற்குக் காரணமாக இருந்தார். ஆனால், அவருடைய இயக்கத் திற்குச் 'சோஷியலிசம்' என்ற பெயரை மட்டும் அவர் கொடுக்க வில்லை. ஃபிரான்சிலே உள்ள எல்லா மக்களிடமும் செல்வம் சமமாக இருக்கவேண்டுமென்றும், தனிப்பட்டவர்களிடம் சொத்துடமை இருக்கக்கூடாதென்றும் அவரும், அவரைப் பின்பற்றிய சமத்துவ வாதிகளும் திட்டமிட்டனர். இவருடைய கொள்கைகள் பெரும் பாலும் பதினெட்டாவது நூற்றாண்டில் ஃபிரான்சில் சிறப்பாக விளங்கிய அறிஞர்களிடமிருந்தும், (Philosophes), ஹெர்பர்ட்

(Herbert) என்ற நாத்திகவாதியிடமிருந்தும், அவருக்கும் சற்று முன்னர்த் தோன்றிய "என்ரேக்ஸ்" (The Enrages) என்ற தொழிலாளர் இயக்கத்திடமிருந்தும் பெற்றவைகளாகும். ஹெர்பர்டிஸ்டுகள், என்ரேக்ஸ்டுகள், பேபியிஸ்டுகள் (Babeuvists) ஆகியோர் கலகம் செய்யத் தயங்கவில்லை. அதனால் அந்த இயக்கத் தலைவர்கள் எல்லாம் அரசாங்கத்தால் சிறைப்படுத்தப்பெற்று, பிறகு மரண தண்டனைக்குள்ளாகினர்.

இந்த டைரக்டரி அரசாங்கம் உள்நாட்டு நிர்வாகத்தில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. புரட்சி அரசாங்கம் நிர்வாகம் செய்தபொழுது மடாலயங்களின் நிலங்கள், பிரபுக்களின் நிலங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியது. மடாலயங்களின் நிலங்களைத் தேசியமயமாக்கியது. அந்த நிலங்களைத்தான் ஈடாக வைத்துக்கொண்டு அரசாங்கம் நிறைய காகிதச் செலாவணியை அச்சடித்து விநியோகம் செய்தது. நாளடைவில் ஃபிரான்சில் பணவீக்கம் ஏற்பட்டுப் பொருள்களின் விலைகள் மிகவும் அதிகமாக ஏறிவிட்டன. இந்த அஸிக்நாட்ஸ் (Assignats) என்ற அரசாங்கம் விநியோகித்து வந்த செலாவணிப் பத்திரங்களை முதலில் 'டைரக்டரி' அரசாங்கம் நிறுத்தியது. அவற்றை ரத்து செய்ததால், ஓரளவிற்கு விலைவாசிகள் குறைந்தன. இந்த அரசாங்கம் வரிவசூல் செய்யும் முறையைச் சீரமைத்துக்கொடுத்தது. மறைமுக வரிகளை விதித்தது. புதிதாக நிர்வாக அதிகாரிகளை நியமனம் செய்து, அவர்களுடைய பொறுப்பில் வரிவசூல் செய்வதும், வரி விதிப்பில் மாறுதல் செய்வதும் கொடுக்கப்பெற்றது. தொழில் வளர்ச்சிக்கும், விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கும் பள்ளிச் சீர்திருத்தங்களுக்கும் இவ்வரசாங்கம் நல்ல ஆதரவு அளித்தது. பள்ளிகளில் கிறித்துவர்களாகப் பயிற்சி பெறுவதைக் காட்டிலும், நல்ல குடிமக்களாகத் திகழ வேண்டும் என்ற அளவில் பள்ளிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பெற்றன. இவ்வரசாங்கம் பல சாதனைகளைப் புரிந்த போதிலும் மக்களிடையே நல்ல ஆதரவைப்பெற முடியவில்லை. இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஜாக்கபைன்களும், புரட்சி எதிர்ப்பாளர்களும் அடிக்கடி தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். இருந்த போதிலும், பொதுத் தேர்தல்களில் ஊழல்களைப் புரிந்தும், எதிர்க்கட்சித் தலைவர்களை ஒடுக்கியும், இராணுவத்தை அவர்கள் விருப்பத்திற்குப் பயன்படுத்தியும், இராணுவம் பெற்ற சில முக்கியமான வெற்றிகளைக் கொண்டும் பதவியில் 1799 வரை நீடித்தது. இந்த 'டைரக்டரி' அரசாங்கத்தில் பணியாற்றிய அமைச்சர்கள் ஊழல்களுக்கும் லஞ்சத்திற்கும் பெயர்போனவர்கள் என்று கூறப்படுகின்றது.

நெப்போலியன் போனபார்டே (Napoleon Bonaparte)

கார்ஸிகா என்ற தீவில் 1769 ஆகஸ்டு 15ஆம் தேதியன்று நெப்போலியன் போனபார்டே பிறந்தார். அச் சமயத்தில் கார்ஸிகா ஃபிரான்சின் ஆதிக்கத்தில் இருந்தது. கார்ஸிகாவில் விடுதலை இயக்கம் ஆரம்பமாகியது. அங்கே பல கட்சிகள் இருந்தன. அவை அத் தீவின் நிர்வாகத்தையே சிதறடித்துக் கொண்டிருந்தன. போனபார்டே சிறுவயதிலிருந்தே அத் தீவின் அரசியல் எதிர்காலத்தைப்பற்றி கவனமாகக் கவனித்து வந்திருக் கிறார். இத்தாலியக் குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும் நெப்போலியன் போனபார்டேவை ஃபிரெஞ்சுப் புரட்சி அதிக மாகக் கவர்ந்தது. பத்து வயது முதற்கொண்டே ஃபிரான்ஸ் நாட்டிலே கல்வி பயின்று வந்ததால், அநேகமாக ஃபிரெஞ்சுக் காரராகவே மாறிவிட்டார் என்று கூறவேண்டும். ஃபிரெஞ்சு மொழியைப் படித்து, பிறகு ஆறு ஆண்டுகளுக்கு இராணுவப் பயிற்சிபெற்று வந்தார். அவர் பள்ளியில் படிக்கும்பொழுதும், இராணுவப் பயிற்சி பெறும்பொழுதும், ஃபிரெஞ்சுப் பிரபுக்களின் பிள்ளைகள் அவருடைய ஏழ்மையைக் கண்டு ஏளனம் செய்வார் களாம். அந்த இழிவையையும், சிறுமையையும் மிகவும் பொறுமை யுடன் சகித்துக்கொண்டிருந்தார். "செல்வம் ஒன்று மட்டும்தான் என்னைக்காட்டிலும் அவர்களைச் சிறந்தவர்களாக்குகிறதே தவிர, பண்பாட்டில் என்னைவிட அவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகத் தானிருக்கிறார்கள்" என்று ஒரு சமயம் நெப்போலியன் அவருடைய தந்தைக்கு எழுதினார். அந்த நாட்களிலிருந்தே ஃபிரெஞ்சுப் பிரபுக்களின் மீது ஆத்திரமும், புரட்சி இயக்கத்தில் நம்பிக்கையும் வைக்க ஆரம்பித்தார். அவருடைய சொந்த நாடான கார்ஸிகாவை யும் எப்படியாவது விடுதலை அடையச் செய்ய வேண்டுமென்ற எண்ணமும் அடிக்கடி அவரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

அதனால், இராணுவப் பயிற்சி முடிந்த பிறகு ஒரு சிறிய இராணுவ அதிகாரியாக (இரண்டாவது லெப்டினன்டு) பதவி யேற்றார். அவருடைய கவனம் முழுவதும் கார்ஸிகாவின் அரசியல் சூதாட்டத்தில் ஊன்றியிருந்ததால், இராணுவத்தை விட்டுங்கூட, அடிக்கடி கார்ஸிகாவுக்குச் சென்று அரசியல் விடுதலை இயக்கத் திலே பங்குகொண்டார். அவருடைய குடும்பத்தின் நிதி நிலையும் சீர்கேடுற்றிருந்ததால், அதனையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. இராணுவ முறைகளில் நன்கு தேர்ச்சிப் பெற்ற நெப்போலியன் கற்பனை உள்ளம் படைத்தவர். அவருடைய கனவுகளை நனவாக்குவதெப்படி என்று திட்டம் தீட்டுவதில் வெகு திறமைசாலியாக இருந்தார். இருப்பினும் வகையின்றி, ஆதர

வின்றி, ஆழம் தெரியாது கார்ஸிகாவின் விடுதலை இயக்கத்தில் இறங்கியதால் கோபமடைந்த அரசாங்கம் நெப்போலியன் குடும்பத்தினரை அத் தீவிலிருந்து வெளியேற்றிவிட்டது. பின்பு எல்லோரும் ஃபிரான்சிலேயே குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுதிருந்து அவருக்கு, அத் தீவின்மீதிருந்த பற்று அகன்றுவிட்டது. பிறகு, அப்பொழுது நிர்வாகம் செய்து கொண்டிருந்த 'டைரக்டரி' அரசாங்கத்தின் நன்மதிப்பை இரு முறை பெற்றதால், டைரக்டரி அவரை எடுத்த எடுப்பிலேயே இத்தாலியப் படையெடுப்பின்போது ஒரு தளபதியாக்கியது. புரட்சிச் சபை கலைக்கப்பெற்றுப் புதிய அரசியல் அமைப்பின்படி சட்டசபை கூடுவதைச் சில காலிகள் தடுக்கவும், அச் சபையின் நடவடிக்கைகள் நடைபெறுத வண்ணம் பெரும் கூச்சலும், ஆர்ப் பாட்டங்களும் செய்து கொண்டிருந்தவர்கள்மீது மிகவும் துணிச்ச லுடன் நெப்போலியன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் அக் கூட்டத்தினர் கலைந்தனர். அதனால் டைரக்டரியின் ஆதரவைப் பெற்றார். மக்கள் கூட்டத்தை அச் சூழ்நிலையில் ஒரு சிறிய இராணுவ அதிகாரி சுடுவதற்குப் பெரிய துணிச்சல் வேண்டும். இந்தத் துணிகரமான செய்கையைக் காட்டி சட்டசபை ஒழுங் காகச் செயலாற்ற வழி செய்து தந்த நெப்போலியனின் எதிர்காலம் அப்பொழுதிருந்தே மலரத் தொடங்கியது.

மிகச் சாதாரண உயரமும், தளபதி பதவி ஏற்கும்பொழுது மிகவும் மெலிந்திருந்த நெப்போலியன் இரும்பு உள்ளமும், ஆதிக்க வெறியும் பிடித்தவர் என்பதை அவருடைய செய்கை களும், பேச்சுக்களும் எளிதாகவே எடுத்துக்காட்டின. ஃபிரெஞ்சுக் குடியரசு அரசாங்கத்தின் புகழ் மற்ற ஐரோப்பிய நாடுகளில் பரவிக்கொண்டிருந்தது. அடிமைத்தளைகளிலிருந்து மக்களை விடுதலை செய்து, அவர்களுடைய உரிமைகளைப் போராடி யாவது பெறவேண்டுமென்ற இலட்சியக் கொள்கைகள் பல நாடு களின் ஆதரவைப் பெற்றிருந்தபோதிலும், அந்த நாடுகளை ஆண்டு வந்த அரசர்கள் அவ்வளவு எளிதில் அவர்களுடைய பரம்பரை முடியாட்சியை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. இச் சூழ் நிலையில்தான் "டைரக்டரி" இத்தாலிய நாடுகள்மீது போர் தொடுத்திருந்தது. அப் படைக்குத்தான் நெப்போலியனைத் தளபதி யாக நியமனம் செய்தனர். அப் படையில் பணியாற்றிய போர் வீரர்களுக்குப் போதிய இராணுவப் பயிற்சியோ அல்லது ஆயுதங் களோ, அல்லது உடையோ, உணவோ ஒன்றுமே சரியாகத் தரப் படவில்லை. இருப்பினும் தளராத உறுதிகொண்ட நெப்போலியன் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு ஃபிரெஞ்சு மக்களே பிரமிக்கும்படியாக மாபெரும் வெற்றிகளைப் பெற்றுக்

காட்டினார். எதிரிகள் எதிர்பார்க்காத சமயத்தில் போராடுவதும், எதிரிப் படைகளைப் பிளவுச் செய்யும் உபாயங்களைப் பின்பற்றுவதிலும், பீரங்கிப்படையை நன்கு பயன்படுத்துவதிலும், அவர் மிகத் திறமைசாலியாகக் காணப்பெற்றார். 1796–1797 வரையிலும் நெப்போலியன் நடத்திய போர்கள் மிகவும் சிறப்பானவையாகும். இருபத்தேழு வயதுக்கு நிரம்பிய ஓர் இளம் தளபதி திறமையே இல்லாதப் படையை வைத்துக்கொண்டு சாதித்த வெற்றிகள் மிகவும் பிரசித்தமானவையாகும். இவ்வளவு சிறிய வயதில் தளபதியாக வெற்றிக்கொடி நாட்டிய மாசிடோனிய வீரர் அலெக்சாந்தரைப் போன்றே இவரும் வீரச் செயல்களைப் புரிந்தார்.

1796 ஏப்ரல் 13ஆம் தேதியன்று நெப்போலியன் ஆஸ்டிரியப் படைகளை மில்லிசிமோ (Millesimo) என்ற போர்க்களத்தில் முறியடித்தார். ஏப்ரல் 22-ல் பியட்மாண்டிஸ் படைகளை மோண்டாவி என்ற இடத்தில் தோற்கடித்து அந் நாட்டு அரசனை விக்டர் அமாடியூசை ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளச் செய்தார். அதன்படி சேவாய், நைஸ், ஆகிய பகுதிகள் ஃபிரெஞ்சுக் குடியரசிற்குத் தரப்பெற்றன. மே 10ஆம் தேதியன்று ஆஸ்டிரியர்களைத் துரத்திக்கொண்டு வந்து லோடி என்ற இடத்தில் முறியடித்தார். பிறகு மிலான் நகரத்திற்குள் அவர் படைகளைச் செலுத்தி லம்பார்டியைக் கைப்பற்றிக் கொண்டார். பார்மா, மொடனு, நேபிள்ஸ் ஆகிய நாடுகள் நெப்போலியனுடைய படைகளை எதிர்க்க முடியாது நிறைய பணம் கொடுத்துச் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டன. போப்பும்கூட நெப்போலியனுடன் ஒரு சமரச உடன்படிக்கையைச் செய்து கொண்டார். பழைய இத்தாலிய நகரங்களான நேபிள்ஸ், பார்மா, மொடனு, ரோம் ஆகிய நகரங்களிலிருந்து, எல்லாக் கலைப் பொருள்களையும் கைப்பற்றிக்கொண்டு வந்துவிட்டார். மே 16ஆம் தேதியன்று, ஃபிரெஞ்சுக் குடியரசைப்போன்று, லம்பார்டி குடியரசு ஒன்றை நிறுவினார். பிறகு 1797 பிப்ரவரி மாதத்தில் மான்துவா என்ற நகரை முற்றுகையிட்டார். ஆஸ்டிரியப் படைகள் நான்கு முறை இந்த முற்றுகையிலிருந்து விடுபெற முயற்சி செய்தன. இறுதியில் சரணடைந்தன. மேலும் ஆஸ்டிரியப் படைகளை ரோவரேடோ, பெலானு என்ற இடங்களில் முறியடித்தார். அர்கோலா, ரிவோலி ஆகிய இடங்களில் அவர் அடைந்த வெற்றி ஆஸ்டிரியப் படைகளை அவர்களுடைய தலைநகரை நோக்கி விரைந்தோடச் செய்தன. ரோம் நகரத்தின்மீது படையெடுத்து வருகையில் போப் அவருடன் டாலண்டினே என்ற இடத்தில் ஒரு சமரச ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். தவிர ரோமாக்னு, பொலாக்னு, பெர்ராரா ஆகிய இடங்களையும் நெப்போலியனிடம்

கொடுத்து சரணடைந்தார். இச் சமயத்தில் ஆர்ச்டியூக் சார்லஸ் ஜெர்மனியிலிருந்து ஒரு பெரும் படையுடன் நெப்போலியனை இத்தாலியிலிருந்து விரட்டி அடிக்க வேண்டுமென்று வந்து கொண்டிருந்தார். ஆனால் நெப்போலியன் இப் படைகளை ஆஸ்டிரிய எல்லையிலேயே சந்திக்க வேண்டும் என்பதற்காக முன்னேறிக் கொண்டிருந்தார். வெனிஸ் நகரத்தைப் பிடித்துக்கொண்டார். பழைய வெனிஸ் நகரம் சூறையாடப்பெற்றது. ஆஸ்டிரியத் தலைநகரான வியன்னாவின் அருகே நெப்போலியன் நெருங்கிவிட்டதைக் கண்டு ஒரு தற்காலிக உடன்படிக்கையை லியோபென் என்ற இடத்தில் செய்துகொண்டனர். அதன்படி வட இத்தாலியில் நெப்போலியன் வென்ற இடங்களான பார்மா, மொடனா, டஸ்கனி ஆகிய பகுதிகளை ஒன்றுக இணைத்து ஒரு குடியரசு அரசாங்கத்தை நிறுவி அதற்குச் சிசால்பைன் ரிபப்ளிக் (Cisalpine Republic) என்று பெயரிட்டார். இந்த ஏற்பாட்டிற்கு ஆஸ்டிரியப் பேரரசனும் ஒப்புக்கொண்டார். மேலும் வெனிஷியன், டால்மேஷியா, இஸ்டிரியா, மான்துவா, பெஸ்சீரா, பால்மோநோவோ ஆகிய பகுதிகளைத் தவிர ஒக்லியோவிற்கு அப்பாலுள்ள எல்லா நிலப் பகுதிகளையும் ஃபிரான்சிற்குத் தந்துவிட ஆஸ்டிரிய மன்னன் ஒப்புக்கொண்டார். இந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்த மற்றொரு உடன்படிக்கையைக் கேம்போ போர்மியோ (Campo Formio) என்ற இடத்தில் 1797 அக்டோபர் 17ஆம் தேதியன்று செய்துகொண்டார். இந்த உடன்படிக்கையின்படி இத்தாலியில் உள்ள சிறு நாடுகளைப் ஃபிரான்சும் ஆஸ்டிரியாவும் தங்கள் விருப்பம்போல மாற்றிக்கொண்டனர். அங்கு வாழும் மக்களின் பழக்க வழக்கங்களைப்பற்றியோ அவர்களது விருப்பங்களைப் பற்றியோ அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அதன்படி ஆஸ்டிரிய நெதர்லாந்து முழுவதும் ஃபிரான்சுக்குக் கிடைத்தது. ரைன் நதியின் இடதுபுறமுள்ள பகுதிகளையும் நாளடைவில் ஃபிரெஞ்சு அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆஸ்டிரியா எடுத்துக் கொள்ளுமென்று அறிவிக்கப்பெற்றது. ஆஸ்டிரிய மன்னர் பெரும் பகுதியான வெனிஷியாவைப் பெற்றார்.

இந்த உடன்படிக்கை ஏற்பட்டதால் நெப்போலியனுடைய மதிப்புப் பன்மடங்கு உயர்ந்துவிட்டது. நெப்போலியனைச் சந்தித்துப் பேச பல அரசர்களும், சிற்றரசர்களும், பிரபுக்களும் தவம் கிடந்தனர். பேச முடியவில்லையெனில் ஒருமுறை கண்ணாலாவது பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தனர். ஃபிரெஞ்சுக் குடியரசு இப்பொழுது, இத்தாலியில் லம்பார்டிக் குடியரசு, சிசால்பைன் குடியரசு ஆகிய அரசாங்கங்களை நிறுவியது. இச் செய்கை ஃபிரெஞ்சு மக்களின் புரட்சி

மனப்பான்மைக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. நெப்போலியன் அடைந்த இவ்வளவு வெற்றிகளும் ஃபிரெஞ்சு மக்களை ஒரே வெற்றி ஆரவாரத்தில் மூழ்கடித்தன. எங்குப் பார்த்தாலும் மக்கள் நெப்போலியன் அடைந்த வெற்றிகளைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர். நெப்போலியனுடைய பெயர் ஒவ்வொரு ஃபிரெஞ்சுக் குடிமகன் இதயத்திலும் நன்கு பதிந்துவிட்டது. மக்களிடையே இவருடைய பெயர் ஒரு புதிய மந்திர சக்தியை ஏற்படுத்தி விட்டது. இவ் வெற்றிகளைக் கண்டு நெப்போலியனுக்கே மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. திறமையற்ற 'டைரக்டரி' அரசாங்கத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருந்த நன்மைகளெல்லாம், லஞ்சம், ஊழல், நாணயமின்மை, ஆட்சியின்மை என்ற குறைபாடுகளேயாகும். அதனால் ஃபிரெஞ்சு நாடு உருப்பட வேண்டுமென்றால், முதலில் இந்த அரசாங்கம் மாறவேண்டுமென்றும், திறமைமிக்க ஒரு தலைவன் அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டுமென்றும், அத் திறமைமிக்கத் தலைவர் நெப்போலியனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும் என்ற எண்ணம் அவரிடம் குடிகொண்டுவிட்டது. மக்களாட்சியில் நெப்போலியனுக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. மக்களிடமே ஆட்சிப் பொறுப்புச் சிக்கிவிட்டால், நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படுவதற்கான சூழ்நிலை இருப்பதை அவர் உணர்ந்தார். புரட்சியின் குழந்தையாகப் பிறந்த நெப்போலியன், புரட்சியின் வெற்றி காலத்தில் புரட்சியின் விளைவுகளையும், பயன்களையும் காலால் மிதித்து, ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினார். அப்படிச் சர்வாதிகார ஆட்சி ஏற்படும் பொழுது, புரட்சியின் அரும்பெரும் சாதனைகளான மக்களின் உரிமைகளை அவர் பறித்துவிடத் தயாராகவே இருந்தார். அவர்களுடைய உரிமைகளைப் பறிக்கும்பொழுது, நெப்போலியன் அவர்களுக்கு நல்லாட்சியைக் கொடுத்தால் அவர்கள் வாயடைத்து இருப்பார்கள் என்று கருதினார். ஃபிரெஞ்சு மக்கள் இயற்கையாகவே பெருமையையும் புகழையும் விரும்புவார்கள் என்ற காரணத்தால், அவர்கள் உரிமைகளைவிட புகழையே பெரிதும் விரும்புவர் என்று மக்களின் மனப்பாங்கை மதிப்பிடத் தவறவில்லை. மக்களுடைய இந்த மனப்பான்மையை நன்குணர்ந்திருந்த நெப்போலியன் மேலும் மேலும் ஃபிரெஞ்சு மக்கள் புகழ் ஓங்க, வெற்றி மேல் வெற்றியை அளித்துக்கொண்டே இருந்தார். ஃபிரெஞ்சு மக்களுடைய வெற்றி விழாக்கள், நெப்போலியனுக்குப் பதவி உயர்வை அளித்துக்கொண்டே இருந்தன. 27ஆவது வயதில் இத்தாலியப் படையெடுப்பின்போது தளபதியாக இருந்தவர், 28ஆவது வயதில் ஃபிரெஞ்சுப் படைகளுக்குப் பிரதம தளபதியாகப் பதவியேற்றார். அவருடைய 30ஆவது வயதில், ஃபிரான்சிற்கே சர்வாதிகாரியாகப்போவார் என்பதை நெப்போலி

யனைத் தவிர மற்ற யாரும் எதிர்பார்க்கவில்லை. நெப்போலியன் அவ்வளவு விரைவில் முன்னேறக் காரணமாக இருந்தது, அவருடைய உறுதியான உள்ளமும், தளராத நம்பிக்கையும், துணிச்சலான செய்கைகளுமாகும்.

எந்தச் செயலையும் பாவபுண்ணியம் நோக்காது தமக்குச் சாதகமாகவே செய்து கொள்ளக் கூடிய கற்பனையும், செயலாற்றும் திறனையும் பெற்றிருந்தார். இந்த இயல்புகளுடன் அவருக்கு அளவுக்குமீறிய இராணுவத் திறமையும் இருந்தது. நெப்போலியன் ஒரு பெரிய அதிருஷ்டசாலி. ஏனெனில், அவர் பதவிக்கு வரும் சமயத்தில், பெரிய வல்லரசு நாடுகள் எல்லாம் பலவீனமடைந்தன. ஜெர்மனி நாட்டில் ஒற்றுமையில்லை. பிரஷ்யர்களுக்குத் திறமைமிக்கப் படையில்லை. ஆஸ்ரிடியா அதன் புகழை இழந்துவிட்டது. இத்தாலியில் ஏராளமான சிறிய நாடுகள் மிகவும் எளிதாக வல்லரசுகள் கைப்பற்றிக்கொண்டன. மேலும் ஃபிரெஞ்சு நாட்டைச் சுற்றியிருந்த சிறிய நாடுகள் எல்லாம் சிறு நாடுகளாகவே இருந்தன.

எகிப்துமீது படையெடுப்பு

கேம்போ ஃபோர்மியோ உடன்படிக்கை செய்துகொண்ட பிறகு நெப்போலியனுடைய புகழ் ஃபிரெஞ்சு நாடு முழுவதும் பரவியது. அவர் பாரிஸ் நகரத்திற்குச் சென்றிருந்தபொழுது அவருக்குப் பெரிய வரவேற்பு அளிக்கப்பெற்றது. மக்களுடைய ஆதரவு அவர் பக்கம் இருப்பதை அவர் நன்குணர்ந்தார். ஆனால், அதே சமயத்தில் அவர் ஃபிரெஞ்சு நாட்டின் அரசாங்கத்தைக் கைப்பற்றும் சமயம் வரவில்லை என்பதையும் தெரிந்திருந்தார். மேலும் மேலும் ஃபிரெஞ்சு மக்களுக்குப் பல வெற்றிகளை அளித்து, அவர்களுடைய இதயங்களைக் கவரவேண்டும் என்று அவர் திட்டமிட்டார். அப்பொழுது ஃபிரான்ஸ் நாட்டிற்கு மிகப் பெரிய எதிரியாக இருந்தது இங்கிலாந்து நாடாகும். அதனுடைய ஆணவத்தை அடக்க வேண்டுமெனில், முதலில் அதனுடைய கடல் ஆதிக்கத்தைத்தான் அடக்க வேண்டுமென்று நெப்போலியன் உணர்ந்திருந்தார். ஆனால், கடற்படையைச் சீரமைப்பதற்கு அப்பொழுது நேரமில்லாததால், இங்கிலாந்திற்குச் சொந்தமான மற்ற குடியேற்ற நாடுகளுடன் அது செய்யும் வியாபாரம், மற்றும் அவைகளுக்கிடையே ஏற்படும் போக்கு வரத்து ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதற்குச் சரியான போர்க்களத்தை அவர் எகிப்தில் கண்டார். எகிப்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை அடக்கி விட்டால் இந்தியாவின்மீதுள்ள ஆங்கிலேயரின் பிடியும் சிறிது தளரும் என்று அவர் நினைத்தார். தவிர, ஃபிரான்ஸ் இந்தியாவில்

அதனுடைய ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்குச் சரியாக இருக்கும் என்று அவர் கருதி எகிப்து நாட்டின்மீது படையெடுப்பதற்கு அவர் ''டைரக்டரியிடம்'' உத்தரவு பெற்றுக்கொண்டார். பல வெற்றிகள் பெற்ற நெப்போலியனுடையப் புகழைக் கண்டு ''டைரக்டரி'' அரசாங்கத்தின் நிர்வாகிகளுக்கே அவர்மீது பொருமை ஏற்பட்டுவிட்டது. அதனால் நெப்போலியன் பாரிஸ் நகரத்திலிருந்து தள்ளியிருப்பதே நல்லது என்று அவர்களும் கருதினர். அதனால் எகிப்தின்மீது படையெடுப்பதற்கு உடனடியாகவே அவர்கள் சம்மதம் அளித்தனர்.

நெப்போலியன் எடுத்த எடுப்பிலேயே 1798 ஜூலை முதல் தேதியன்று கெய்ரோவிற்கு அருகில் துருக்கியப் படைகளை முறியடித்தார். இதற்குப் ''பிரமிட் போர்'' என்று பெயர். ஃபிரெஞ்சுக் கடற்படை புறப்பட்டதைத் தெரிந்துகொண்ட ஆங்கிலேயக் கடற்படைத் தளபதி நெல்சன் அக் கடற்படையைப் பின்பற்றி வந்திருந்தார். ஆனால், உறுதியாக நெப்போலியனது படைகள் எகிப்திற்குத்தான் போகிறது என்பது அவருக்குப் பிறகுதான் தெரிய வந்தது. நெல்சனுடையக் கடற்படை நைல் நதிக்கரையில் நிகழ்ந்த போரில் (ஆகஸ்டு 1798) பெரும் வெற்றி பெற்றது. முதல் முறையாக முறியடிக்கப் பெற்ற நெப்போலியனுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இருப்பினும் இந்தத் தோல்வி ஃபிரெஞ்சு மக்களுக்கு எட்டாதவாறு பார்த்துக் கொண்டார். இந்தத் தோல்வியின் விளைவாக, நெப்போலியனது படைகளுக்கும் மற்ற ஐரோப்பியப் பகுதிகளுக்குமுள்ள போக்கு வரத்துகள் துண்டிக்கப்பெற்றன. இச் சமயத்தில் துருக்கி ஃபிரான்ஸ் நாட்டின்மீது போர் தொடுத்தது. அதற்கு உதவியாக நெல்சன் கப்பற்படையும் இருந்தது. ஆனால், நெப்போலியன் தரை மார்க்கமாகத் துருக்கியைத் தாக்குவது என்று முடிவு செய்திருந்ததால் 1799-ல் சிரியாவினுள் நுழைந்து, அங்கு அவரை எதிர்த்து வந்த துருக்கியப் படைகளுடன் போரிட்டார். ஏக்கர் என்ற நகரத்தினருகில் நெப்போலியன் சிறிது பின் வாங்க நேரிட்டது. போதிய உணவு வசதியும், தளவாடங்களுமின்றி ஃபிரெஞ்சுப் படையினர் பல இன்னல்களைப் பெற நேர்ந்தது. தொத்து நோய் அவர்களிடையே பரவியது. பல இடையூறுகளுக்கிடையே நெப்போலியன் படையினரைக் கெய்ரோவிற்குக் கொண்டு வந்து சேர்த்தார். துருக்கியர்மீது மீண்டும் படையெடுக்க வேண்டும் என்றுதான் நெப்போலியன் எண்ணியிருந்தார். ஆனால், ஃபிரெஞ்சு நாட்டின் அரசியல்நிலை இவருக்குச் சாதகமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, இந்த வாய்ப்பைத் தவரவிடாது பாரிஸ் நகரத்திற்கு அவர் விரைந்து சென்றார்.

அப்பொழுது ஐரோப்பாவிலுள்ள எல்லா வல்லரசுகளும் ஃபிரான்ஸ் நாட்டை எதிர்த்துப் போரிடுவது என்று ஒரு கூட்டணியை நிறுவினர். இக் கூட்டணியின் சவாலை ஏற்றுக் கொண்டு டைரக்டரி அரசாங்கம் தவித்துக் கொண்டிருந்தது. டைரக்டரி அரசாங்கம் லஞ்சத்திற்கும், திறமையின்மைக்கும் பெயர் போனதாக இருந்தது. மக்களுக்கு அந்த அரசாங்கத்தின் மீது அதிக நம்பிக்கை இல்லை. பாரிஸ் நகரத்தில் ஏற்பட்டுள்ள இந்தக் குழப்பமான அரசியல் சூழ்நிலை நெப்போலியன் பதவிக்கு வர ஏற்றதாக இருந்ததால், தம்முடைய படை வீரர்களை அனுதைகளாக விட்டுவிட்டுப் பாரிஸ் நகரத்திற்கு மாறு வேடத்தில் சென்றுவிட்டார். அங்குச் சென்று டைரக்டரி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகப் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தார். இவருடைய திட்டங்களுக்கு ஆதரவளிக்க எத்தனையோ மக்களின் பிரதிநிதிகள் தயாராகக் காத்திருந்தனர். இரண்டு சட்டசபை களிலும், குறிப்பாக மேல் சட்டசபையில் நெப்போலியனைப் பதவியில் அமர்த்துவதற்கு நிறைய ஆதரவு இருந்தது. நெப்போலிய னுடைய தம்பியான லூஷியன் போனபார்டேயின் உதவியால் கீழ்ச் சட்டசபையில் ஃபிரெஞ்சு அரசாங்கத்தின் நிர்வாகப் பொறுப்பைத் தளபதி நெப்போலியனிடமும் மற்றும் இரண்டு தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவர்களிடமும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்களைக் "கான்சல்கள்" என்று அழைக்க வேண்டு மென்றும், இப் புதிய அரசியலை வேறு அரசியல் அமைப்பின் மூலமாக மாற்றிக்கொள்ள மேல்சபை ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பெற்றது. ஏதாவது எதிர்ப்பு இருந்தால் நெப்போலியன் துருப்புகளுடன் வருவதற்குச் சித்தமாக இருந்தார். ஆனால் எதிர்ப்பு ஒன்றும் ஏற்பட வில்லை. எதிர்ப்பாளர்களை யெல்லாம் முதலில் நெப்போலியன் மடக்கிவிட்டார். இதற்குப் பிறகு மேல் சபையான "எல்டர்கள் சபை" புதிய அரசியல் அமைப்பைத் தயாரித்தது.

8. கான்சலேட் அரசாங்கம்

(The Consulate 1799–1804)

1799 அக்டோபர் மாதத்தில் நெப்போலியன் ஃபிரான்ஸ் நாட்டிற்குத் திரும்பினார். டைரக்டரி அரசாங்கத்தில் அப்பொழுது நிறைய ஊழல்கள் மலிந்திருந்தன. ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும் லஞ்சத்திற்குப் பெயர் போனவராக இருந்தார். உலகத்தில் தோன்றிய எந்த அரசாங்கமும் டைரக்டரியைப் போன்று லஞ்சத்திலும் திறமையின்மையிலும் தோய்ந்திருக்கவில்லை. இந்தக்

குழப்பமான நிலைமை நெப்போலியனுக்கு நல்ல வாய்ப்பை அளித்தது. மூன்று வாரங்களில் இந்த டைரக்டரி அரசாங்கத்தைக் கவிழ்த்து வேறு அரசாங்கத்தை நிறுவினர். இந்த அரசாங்கத்தைத்தான் "கான்சலேட்" என்று கூறுவர். நாட்டின் நிர்வாகப்பொறுப்பு மூன்று கான்சல்களிடையே ஒப்படைக்கப் பெற்றது. அம் மூன்று கான்சல்களில் முதன்மையானவர் நெப்போலியனேயாவார். உண்மையில் அவரே முழு நிர்வாக அதிகாரத்தையும் தம்மிடமே வைத்துக்கொண்டார். இருப்பினும் ஜனநாயக முறையில் அரசாங்கம் அமைய வேண்டுமென்று அப்பொழுது மக்கள் விரும்பி இருந்ததால், அவர்களுடைய உணர்ச்சிகளை அப்பொழுது மதித்து நடக்க இந்த அரசியல் அமைப்பை ஏற்படுத்தினர். பிறகு சட்டங்களை இயற்றுவதற்கு நான்கு அங்கங்களைக்கொண்ட ஒரு சட்டசபையை அமைத்தனர். "கவுன்சில் ஆப் ஸ்டேட்" என்ற கீழ்ச் சபையும், செனேட் என்று கூறப்படுகின்ற ஒரு மேல் சபையும் அமைக்கப்பெற்றன. இந்த 'செனேட்' சபைக்கு, முதல் கான்சலே அங்கத்தினர்களை நியமனம் செய்தார். அவர்களுடைய பதவிக் காலம் நிரந்தரமானதாகும். இந்த இரண்டு சபைகளைத் தவிர, ஒரு "டிரிபுயூனேட்" குழுவினரும் (Tribunate), இக் குழுவினரைச் செனேட் சபை அங்கத்தினரும் தேர்ந்தெடுத்தனர். மற்றொரு சபையில் பல ஃபிரெஞ்சு மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற 300 பிரதிநிதிகளைச் செனேட் சபையினர் நியமனம் செய்தனர். ஜனநாயக முறையில் இந்த அரசியல் அமைப்பு அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, உண்மையில் இந்த நான்கு சபைகளுக்கும் சட்டம் இயற்றுவதிலும் அல்லது நிர்வாகம் செய்வதிலும் நெப்போலியனே சர்வாதிகாரியாகத் தோன்றினர். அவருக்கு உறுதுணையாக மற்ற கான்சல்களும், அவரால் நியமிக்கப்பெற்ற பெரிய அதிகாரிகளும் இராணுவத்தினரும் இருந்தனர். மக்களுடைய நன்மைக் காகவே இப் புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்தியதாக அவர்களிடையே நெப்போலியன் பிரச்சாரம் செய்தார். அதற் கேற்ப, இந்த அரசியல் அமைப்பையும் குடிமக்களின் ஒப்புதலுக்கு முன் வைத்து அவர்களுடைய சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார். அதனால் நெப்போலியனுடைய சர்வாதிகாரத்திற்கு மக்கள் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டவில்லை என்று தெரிந்து கொண்டார்.

அவர் முதலில், நாட்டில் அமைதியையும் சட்டத்தையும் நிறுவ முயன்றார். ஆனால் அதே சமயத்தில் போரிலும் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மக்கள் விரும்புவது குடியரசின் வெற்றி என்பதை நன்குணர்ந்த அவர் மீண்டும் இத்தாலிய நாடுகள்

மீது போர் தொடுக்க ஆரம்பித்தார். மேரன்கோ (Marengo) என்ற இடத்தில் 1800-ல் சிறப்பான வெற்றியைப் பெற்றார். அதைப்போல மார்ஷூ என்பவர் ஜெர்மனியில் பல வெற்றிகளை அடைந்தார். ஹோஹன் லிண்டன் (Hohen Linden) என்ற இடத்தில் அவர் அடைந்த வெற்றியால் ஜெர்மனியிலுள்ள சிறு நாடுகளில் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தைச் செலுத்த முடிந்தது. மேலும் இந்த வெற்றியால் ஆஸ்டிரியர்கள் முழுவதும் பயந்துவிட்டனர். அதனால் நெப்போலியனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டு மென்று ஆஸ்டிரிய அரசன் விரும்பினர். இதனால் கூட்டணி முறியடிக்கப்பெற்றது. 1801-ல் லூனிவில் (Luneville) என்ற இடத்தில் ஆஸ்டிரியா ஓர் உடன்படிக்கையை நெப்போலிய னுடன் செய்துகொண்டது. இந்த உடன்படிக்கையால் ஃபிரான் சிற்கு இத்தாலியில் சர்வ ஆதிக்கமும், ஜெர்மனியில் ரைன் நதி வரையிலும் ஃபிரான்சின் எல்லைகள் விரிவடைவதற்கும் ஒப்புக் கொள்ளப்பெற்றன. கார்டினல் ரிச்சல்யூ காலத்திலிருந்து ஒவ் வொரு ஃபிரெஞ்சு மன்னரும் இந்த விதமான கனவைக் கண்டு கொண்டிருந்தார்களே தவிர, யாரும் இதுவரையிலும் இதைச் சாதிக்கவில்லை. பதினான்காம் லூயி மன்னனும் இந்த எல்லைகளை விரிவாக்கப் பல போர்களில் ஈடுபட்டார். ஆனால் அவர் வெற்றி காணவில்லை. இந்த உடன்படிக்கைக்குப் பிறகு ஃபிரான்சின் மதிப்பு மிகவும் உயர்ந்துவிட்டது. 1793ஆம் ஆண்டிற்குப் பிறகு இங்கிலாந்தும் ஃபிரான்சிடம் பகைமை கொண்டிருந்தது. ஆனால் 1802-ல் ஃபிரான்சும், பிரிட்டனும் ஆமியன்ஸ் (Amiens) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன.

சீர்திருத்தங்கள்

ஃபிரான்ஸ் குடியரசு ஆனதற்குப் பிறகு பொதுவாக எல்லா ஐரோப்பிய நாடுகளுமே அதற்கு விரோதமாகவே இருந்தன. ஆனால் 1801, 1802ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட உடன் படிக்கைகளால் முதல் தடவையாகப் ஃபிரான்சின் எதிரிகள் சமாதானமாக இருக்க முன் வந்தனர். மேலும் இவ்விதமான அமைதி ஃபிரெஞ்சு நாட்டு மக்களுக்கு மிகவும் அவசியமான தேவையாக இருந்தது. நெப்போலியன் இந்த அமைதியான சூழ் நிலையை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டார். ஏற்கனவே ஃபிரெஞ்சு நாட்டில் மக்களிடையே ஏற்பட்டிருந்த கலவரங்களும் குழப்பமான நிலையும் மாறிக்கொண்டிருந்தன. நாட்டைவிட்டு ஓடிப்போன பிரபுக்களும் மற்றக் குருமார்களும் மீண்டும் அழைக்கப் பெற்றனர். அவர்களுடைய சொத்துகள் திரும்பவும் தரப் பட்டன. அவர்களுடைய வாழ்க்கை மீண்டும் புனரமைக்கப் பெற்றது. தவிர, சட்டத்தையும் அரசாங்கத்தின் ஆணையையும்

மக்கள் மதிக்கும்படியான பயத்தை ஏற்படுத்தினர். புரட்சிச் சமயத்தில் மக்களிடையே பலவிதமான கருத்துகள் தலையிட்டு, அவர்களுடைய வாழ்க்கையைக் கெடுத்துவிட்டன. அளவிற்கு மீறிய உரிமைகளும் சுதந்தரமும் பிறருடைய வாழ்க்கையைப் பாதிக்காத வரையிலும், அதற்கேற்பக் கட்டுப்பாட்டுக்குள் இருப் பதிலும்தான் அடைய முடியும் என்ற பல அனுபவங்களை மக்கள் தெரிந்துகொண்டனர். அதனால்தான் நெப்போலியனைச் சர்வாதிகாரி யாக மாற்றும்பொழுது, அவர்கள் உரிமைகள் பறிபோய்விட்டன என்று தெரிந்தும்கூட, மக்கள் இந்த மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்து, நாட்டில் நல்ல அரசாங்கம் ஏற்பட்டு, எங்கும் அமைதி யும், ஒழுங்கும் ஏற்பட வேண்டுமென்று விரும்பியதே காரண மாகும். அந்த அமைதியான காலத்தில் நெப்போலியன் சில சிறப் பான சீர்திருத்தங்களைச் செய்தார். பெரும்பான்மையான சீர்திருத் தங்கள் நிலைத்துவிட்டன. தற்போதுள்ள ஃபிரெஞ்சு அரசாங்க அமைப்பின் ஒழுங்கிற்கும் சட்டத்தை இயற்றிய சிறப்பிற்கும் முக்கிய காரணமாக இருந்தவர், நெப்போலியன் என்று கூறுவதில் வியப்பில்லை.

1799-ல் இயற்றப்பெற்ற அரசியல் அமைப்புப் பல மாற்றங் களுக்குள்ளாகி விட்டது. ஒவ்வொரு மாற்றமும் அரசாங்கத்தைப் பலம் பொருந்தியதாகச் செய்தது. 1802-ல் ஏற்பட்ட மாற்றத் தினால் நெப்போலியனுடைய பதவிக் காலம் பத்தாண்டிலிருந்து ஆயுள் முழுவதற்கும் என்றாகிவிட்டது. தவிர, நெப்போலிய னுக்குப் பிறகு யார் அந்தப் பதவியை நிர்வகிப்பது என்ற பிரச்சினை யும் அவரிடமே விட்டுவிட்டனர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 'கான்சலேட்' அரசியல் அமைப்பு கைவிடப்பெற்றது. 1804-ல் நெப்போலியன் பேரரசனாகப் பட்டம் சூட்டிக் கொண் டார். அவருடைய முடிசூட்டு விழா போப்பினுடைய சம்மதத்தின் பேரிலேயே நடைபெற்றது. போப்பும்கூட அந்த முடிசூட்டு விழாவிற்கு வந்திருந்தார். தமக்குத்தாமே முடிசூட்டிக்கொண்ட பெருமை நெப்போலியனைத்தான் சாரும். அதற்குப் பிறகு குடியரசு அரசாங்கம் பேரரசாக மாறிவிட்டது.

மக்களுடைய புரட்சிக் கொள்கைகள் அடியோடு மாறுவதற் கான காரணங்கள் யாவை? சுருக்கமாகக் கூறினால், கொள்கை களல்லாது, வெறும் கருத்துகளின் அடிப்படையில் இயற்றப் பெற்ற புரட்சிக் குடியரசு அரசாங்கத்தை நிர்வகிக்கப் போதிய லட்சியவாதிகள் தோன்றுததால், குடியரசு அரசாங்கம் நிலைத்திருக்க முடியவில்லை. அவ்விதமான சூழ்நிலையில்தான் நெப்போலியன் போன்ற சர்வாதிகாரிகள் பதவிக்கு வர முடிந்தது.

அதிருப்தியுற்ற மக்களின் உள்ளங்களைப் பல்வேறு வழிகளில் நெப்போலியன் திருப்தினர். எங்குச் சென்று போரிட்டாலும், வெற்றி! வெற்றி!! ஃபிரெஞ்சு மக்களின் புகழ் ஐரோப்பிய மக்களைக் கலங்கச் செய்தது. இத்தனை வெற்றிகளையும் ஃபிரெஞ்சு மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தவர், நேற்று வரையிலும் மிகச் சாதாரணமாக இருந்த ஒரு ஃபிரெஞ்சுக் குடிமகன்தான். இன்று பேரரசராக வரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார் என்று நினைக்கும் பொழுது, ஃபிரெஞ்சு மக்கள் பெருமிதம் அடைந்தனர்; 'சமத்துவம்' என்ற கருத்தை ஒருவிதமாக உணர்ந்தனர். ஆனால் ஃபிரெஞ்சுப் புரட்சியின் குழந்தையாக வளர்ந்த நெப்போலியன் புரட்சிக் கொள்கைகளை வீசி எறிந்துவிட்டுத் தம்மை நிரந்தரப் ஃபிரெஞ்சுப் பேரரசராக உருவாக்கிக் கொண்டதுமின்றி ஒரு புதிய அரச பரம்பரையையும் உருவாக்கிக்கொண்டார். ஆனால், ஃபிரெஞ்சு மக்கள் புரட்சிக் கொள்கைகளை நாளடைவில் மறந்து விடுவர் என்று நெப்போலியன் உணர்ந்தே, அவர்களுடைய கவனத்தை வேறு வழியில் திருப்பப் புதிய புதிய சாதனைகளையும், சீர்திருத்தங்களையும், பல துணிச்சலான வெற்றிகளையும் பெற்றுக் கொடுக்கத் துணிந்தார்.

நெப்போலியன் பேரரசை நிறுவியவுடன் பிரதிநிதிகள் சபையின் தோற்றத்தையும் மாற்றி அமைத்துவிட்டார். கவுன்சில் ஆப் ஸ்டேட் (Council of State) சபையைப் பிரைவி கவுன்சிலாக மாற்றி அமைத்தார். டிரிபுயூனேட் (Tribunate) என்ற சபையை ஐந்து பகுதிகளாகப் பிரித்தார். அந்தச் சபைகளின் கூட்டங்களெல்லாம் இரகசிய முறையில் செயலாற்றப்பெற்றன. அச் சபைகளின் அங்கத்தினர்களை நெப்போலியனே தேர்ந்தெடுத்தார். பேரரசுக்குகந்த நீதிமன்றத்தை நிறுவினர். அதில் பணிபுரிய பெரிய அதிகாரிகளும், சிறிய அதிகாரிகளும் இளவரசர்களும், பிரபுக்களும் நியமனம் செய்யப்பெற்றனர். இந்த மாற்றங்கள் எல்லாம் பழைய போர்போர்ன் அரச பரம்பரையில் இருந்தவற்றைப்போல இருந்தன. மத்திய அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகளையும், அதிகாரங்களையும் மிகவும் குறைத்துவிட்டார். உண்மையில் அவருடைய ஸ்தலஸ்தாபன சீர்திருத்தங்கள் நீண்ட காலம் வரையிலும் நீடித்திருந்தன. 1790-க்குப் பிறகு ஸ்தலஸ்தாபன ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. அதனால் ஜனநாயக முறை அமுலில் இருந்தது. மேலும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரமும் போதிய அளவில் பிரிக்கப் பட்டிருந்தது. ஆனால் அந்த முறையை நெப்போலியன் அகற்றி விட்டுப் போர்போர்ன் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இருந்த

முறையைச் சிறிது மாற்றி அமைத்துக்கொண்டார். புதிய ஸ்தல ஸ்தாபன ஆட்சியில் அதிகாரிகளுக்கு முழு அதிகாரமும் அளிக்கப் பட்டது. அதிகாரிகள் மத்திய அரசாங்கத்தால் நியமனம் செய்யப் பட்டவர்களாவர். மக்கள் அதிகாரிகள்மீது குறை கூறுவதைத் தவிர்ப்பதற்காக அதிகாரிகளுக்கு நிறைய அதிகாரங்கள் கொடுக்கப் பட்டதுமல்லாமல், அவர்கள் செய்யும் காரியங்களுக்கு மக்களிடம் எவ்விதமான விளக்கத்தையோ அல்லது சமாதானத்தையோ தரவேண்டியதில்லை என்ற பழக்கம் ஏற்பட்டது. அவர்களைக் கண்டிப்பதற்கு "கவுன்சில் ஆப் ஸ்டேட்" என்ற சபைக்கே (Council of State) அதிகாரம் இருந்தது. 1870 வரை இவ்விதமான ஸ்தல ஸ்தாபன ஆட்சியே பின்பற்றப்பட்டு வந்தது. ஃபிரான்ஸ் நாட்டைப் பல மாவட்டங்களாகப் பிரித்து (Departments) ஒவ்வொரு மாவட்டப் பகுதிக்கும் ஒரு பிரிபெக்ட் (Prefect) என்ற நிர்வாக அதிகாரியும் அவருக்கு ஆட்சி செய்வதில் துணைப் புரிய இரண்டு குழுக்களும் அமைக்கப்பெற்றன. டிபார்டுமெண்டு களுக்கு அடுத்தபடியாக வரும் சிறு பகுதிகளுக்கு அராண்டஸ் மெண்ட் (Arrondisement) நிர்வாகத்திற்கு ஒரு உதவி பிரிபெக்கும் (Sub-Prefect) அவருக்கு ஆலோசனை கூற ஓர் ஆலோசனைக் குழுவும் நிறுவப்பட்டது. அதைப்போன்று கம்யூன்களுக்கு, மேயர் களும் கவுன்சிலர்களும் நியமனம் செய்யப்பட்டனர். இவர்களெல் லாம் மத்திய அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டனர். நீதி நிர்வாகத்திற்காகச், சிவில், கிரிமினல் வழக்கு மன்றங்களும் நிறுவப் பெற்றன. நெப்போலியனது மிகச் சிறப்பானதும், நீடித்து நிற்பது மான சீர்திருத்தம், சட்டத்தைத் திருத்தியதேயாகும். நாட்டின் பல மாவட்டங்களில் பலவிதமான சட்டங்களை மக்கள் பின்பற்றி வந்தனர். சில பழக்க வழக்கங்கள் சட்டங்களாகப் பாவிக்கப் பட்டன. அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களது பழக்க வழக்கங் களுக்கு ஏற்பச் சட்டங்களைப் பரிசீலனை செய்து நீதிபதிகள் நியாயம் வழங்குதலில் பல குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்பட்டன. அதனால் பல முரண்பாடுகள், சட்டத்தைப் பின்பற்றுவதில் ஏற்பட்டன. இந்த முரண்பாடுகளையெல்லாம் அகற்றிவிட்டு நாட்டுக்கு ஒரே சிவில் சட்டம், கிரிமினல் சட்டம் இருக்க வேண்டிய அவசியத்தை நெப்போலியன் உணர்ந்தார். இதற்காக ஒரு சட்டக் குழுவினரை நியமித்து எல்லாச் சட்டங்களையும், பரிசீலனை செய்து, நாட்டிற்கு ஒரே மாதிரியான சட்ட அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் நெப்போலியனேயாவார். நெப்போலி யனின் சட்ட அமைப்பு அதனால் மிகவும் போற்றப்படுகின்றது. இன்றும்கூட இந்தச் சட்ட அமைப்பின் அடிப்படையில்தான் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளிலும், குறிப்பாக ஃபிரான்சிலும் பின்பற்றப்படுகின்றது.

நெப்போலியனது நிலச் சீர்திருத்தங்களும் குறிப்பிடத் தக்கவையாகும். இத்துறையில் புரட்சி அரசாங்கம் செயலாற்றிய பல முறைகளை அப்படியே வைத்துக்கொண்டார். ஏனெனில், பல நிலக்கிழார்களிடமிருந்து நிலம் பறிமுதல் செய்யப் பட்டுக் குடியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அந்த நில ஆட்சி முறை நல்லதாகத் தோன்றியதால் அந்த அடிப் படையை அவர் பின்பற்றினார். அதைப் போலத்தான், பல திருச்சபைகளிலிருந்தும் முன்பு பறிமுதல் செய்யப்பெற்ற சொத்துகளை அரசாங்கம் வைத்துக் கொள்வதென்று முடிவு செய்ததும், தவிர, திருச்சபையை நிர்வாகம் செய்யும் அதிகாரத்தை யும் அரசாங்கமே வைத்துக்கொண்டதும். அதே சமயத்தில் ரோமன் கத்தோலிக்கச் சமயத்தை நாட்டின் சமயமாக ஏற்றுக் கொண்டார். அதனால் கத்தோலிக்கத் திருச்சபையின் செல்வமும், அதிகாரமும் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப் பெற்றன. மற்ற ஆட்சித் துறைகளைப் போன்று சமயத்துறை ஒன்றையும் அரசாங்கம் நிறுவியது. "மக்களுக்கு ஒரு மதம் அவசியம்தான். ஆனால், அந்த மதம் அரசாங்கத்தின் கையில்தான் இருக்க வேண்டுமென்று" நெப்போலியன் கூறினார். இதுபற்றி ஏழாம் போப் பயஸ்டன் ஒரு சமரச ஒப்பந்தத்தைச் (Concordat) செய்து கொண்டார். அதனால் சமய வழிபாடுகள் ரோமில் பின்பற்றப் பட்டதைப் போன்று ஃபிரான்சிலும் பின்பற்றப்பட்டன. ஃபிரான்ஸ் நாட்டுத் திருச்சபைகள் அரசாங்கத் துறைகளாக மாறின. அதனால் போப்பின் அதிகாரம் இந்தத் திருச்சபைகள்மீது செல்லத்தக்கவை அல்ல என்று அறிவிக்கப்பெற்றது. போப்பிற்கு இதைவிட ஆத்திரமூட்டும் செய்கை என்னவென்றால் நெப்போலியன் அழுலுக்குக் கொண்டு வந்த சீர்திருத்தமான 'விவாக ரத்து' ஃபிரான்சில் மட்டுமல்லாது இத்தாலியிலும்கூட அழுலுக்குக் கொண்டு வந்தார். மேலும் ஃபிரெஞ்சுத் திருச்சபை அரசாங்கத் திற்கு அடிபணிந்து நடப்பதைப் போப் விரும்பவில்லை. அதனால் என்னதான் போப்புடன் சமரச உடன்படிக்கை செய்து கொண்டாலும் இருவரிடையே மனக்கசப்பு நீடித்திருந்தது.

இவைகளைத் தவிர, நெப்போலியன் மற்றப் பல சீர்திருத்தங் களையும் செய்தார். 1800-ல், அவர் ஒரு பெரிய பாங்கியை (Bank of France) ஃபிரான்சில் நிறுவினார். நிதிநிலையைச் சீரமைத்தார். லஞ்சம் வாங்கும் அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டித்தார். நிலத் தீர்வைகள் ஒழுங்காக வரையறை செய்யப்பெற்றன. அதற்கு வேண்டும் வரி விதிப்புகளை முறையாகச் செய்தும், வரி வசூலையும் சரியாகச் செய்து நாட்டின் நிதிநிலையை உறுதிப் படுத்திக்கொண்டார். நெப்போலியன் எப்படித் திருச்சபைகளை

அரசாங்கத்தின் கண்காணிப்பில் கொண்டு வந்தாரோ அதைப் போன்றே ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள எல்லாக் கல்வி நிலையங்களையும் அரசாங்கத்தின் நேரடியான ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தார். அதனால் எல்லாப் பள்ளிகளும் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றே நிறுவப்பெற்றன. உயர்நிலைக் கல்வி நிலையங்களில் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களேயாவர். இவ்வாசிரியர்களுக்குப் பிரத்தியேகமான பயிற்சி தருவதற்கு ஓர் ஆசிரியர் கல்வி நிலையம் பாரிஸில் நிறுவப்பெற்றது. அனுமதிச் சீட்டு இல்லாத எந்த ஆசிரியரும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் வேலை செய்ய முடியாது. இந்த ஆசிரியர்களின் வேலைகளைக் கண்காணிப்பதற்குப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்பெற்றது. இப் பல்கலைக் கழகம் மாணவர்களுக்குத் தேவையான பாடத் திட்டங்களையும் தயார் செய்தது. மேலும் பல்வேறு தொழிற் கல்வி நிலையங்கள் ஃபிரான்ஸின் பல பகுதிகளில் நிறுவப்பெற்றன.

நெப்போலியனது பொதுப்பணித்துறை நன்கு பணியாற்றியது. அவருடைய முயற்சியால் 229 நெடுஞ்சாலைகள் அமைக்கப் பெற்றன. அவற்றில் 30 சாலைகள் ஃபிரெஞ்சு எல்லைப் பகுதிகளிலுள்ள நகரங்கள் வரையிலும் போடப்பெற்றன. பாரிஸ் நகரத்திலிருந்து, நீரின், மிலான், நேப்பிள்ஸ், ரோம் ஆகிய முக்கியமான நகரங்களை இணைக்கும் பெரிய சாலைகளும் நிர்மாணிக்கப்பெற்றன. அணைகள், நீர்ப்பாசன வசதிகள் தோற்றுவிக்கப்பெற்றன. கலைக் கழகம் ஒன்று நிறுவப்பெற்றது. பாரிஸ் நகரம் வனப்புமிகு அழகு நகரமாகத் தோற்றுவிக்கப்பட்டது. அங்குப் பல பூங்காக்களும் சிலைகளும் அந் நகரத்தை அழகு செய்தன.

நெப்போலியன் கடல் கடந்த பேரரசை அமைப்பதற்காக, மீண்டும் மேற்குத் தீவுகளில் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை நிறுவ முயன்றார். ஸ்பெயினிடமிருந்து நெப்போலியன் லூஷியானுவைப் பெற்றார். ஆனால் உடனடியாக அதை அவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு விற்றுவிட்டார். இந்தியாவிலும்கூட ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை நிறுவப் பல முயற்சிகளைச் செய்தார். ஆனால் கடல் கடந்த பேரரசை அவரால் நிறுவ முடியவில்லை. ஏனெனில், அப்பொழுது அவர் பல ஐரோப்பியப் போர்களில் ஈடுபட்டிருந்ததே காரணமாகும்.

நெப்போலியனின் படையெடுப்புகள்

ஃபிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட ஏமியன்ஸ் உடன்படிக்கையை (Treaty of Amiens) ஒரு தற்காலிகச் சமரசமாகத்தான் இரு நாடுகளும் கருதின. நாளடைவில் இரு நாடு

களுக்கிடையே வெறுப்பு அதிகமாகிக்கொண்டே வந்தது. நெப்போலியன் எப்படியும் இங்கிலாந்தைப் பணியவைக்க வேண்டுமென்று உறுதிகொண்டார். அதனால் இங்கிலாந்தின்மீது படையெடுப்பதற்காகவே தனிப்பட்ட ஒரு கப்பற்படையை அமைத்து "ஆங்கிலேயக் கால்வாயில்" (English Channel) நிறுத்தி வைத்திருந்தார். இங்கிலாந்தின் கடற்படை வலிமை மிக்கது என்பதை நெப்போலியன் அறிந்திருந்தார். உண்மையில், இங்கிலாந்தின் கப்பற்படை வலிமையால் மட்டுமே ஆங்கிலேயர்களும் ஃபிரெஞ்சுக் காரர்களும் மேற்கொண்ட பெரிய போராட்டங்களில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றுக்கொண்டே வந்தனர். இந்த முறையும் ஆங்கிலேயக் கடற்படையைச் செலுத்திய "அட்மிரல் நெல்சன்" 1805 அக்டோபரில் ஒரு ஃபிரெஞ்சு—ஸ்பானியக் கூட்டுக் கப்பற்படையை டிரபல்கார் (Trafalgar) என்ற இடத்தில் முறியடித்தார். இந்தத் தோல்வியின் காரணமாக நெப்போலியன் இங்கிலாந்தின்மீது படையெடுக்கும் திட்டத்தைத் தற்காலிகமாக மாற்றிக்கொண்டு ரைன் நதிப் பகுதிகளின்மீது ஆதிக்கம் செலுத்த முயன்றார்.

இச் சமயத்தில்தான், இங்கிலாந்தின் முயற்சியால் மூன்றாவது கூட்டணியை ஐரோப்பிய நாடுகள், நெப்போலியனின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்காக அமைத்தனர். இந்தக் கூட்டணியில் இங்கிலாந்து, ஆஸ்டிரியா, ரஷ்யா, நேபிள்ஸ், ஸ்வீடன் ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. இந்தக் கூட்டணியை எதிர்ப்பதற்கும், இதன் திட்டங்களைச் சிதறடிப்பதற்கும் நெப்போலியன் இந்த நாடுகள்மீது தனித் தனியாகப் போர் தொடுத்தார். முதலில் ஆஸ்டிரியாவின்மீது படையெடுத்தார். 1805 அக்டோபர் 20ஆம் தேதியன்று 'உல்ம்' (Ulm) என்ற இடத்தில் ஆஸ்டிரியப் படைகளை விரட்டியடித்தார். அப் படைகள் நெப்போலியனிடம் சரணடைந்தன. நவம்பர் மாதத்தில் அவர் வியன்னாவைப் பிடித்துக்கொண்டார். இதுவரையிலும் ஐரோப்பிய வரலாற்றிலேயே, வியன்னாவை எந்த நாடும் கைப்பற்றியதில்லை. அதே ஆண்டில் ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளின் கூட்டுப் படைகளை ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்ற இடத்தில் முறியடித்தார். ரஷ்யாவின் அரசன் முதலாம் அலெக்சாந்தர் எஞ்சியிருந்த படைகளுடன் அவருடைய நாட்டிற்கு விரைந்து சென்றார். ஆஸ்டிரியப் பேரரசன் இரண்டாம் பிரான்சிஸ் 1805-ல் பிரஸ்பர்க் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டார். 1806-ல் நெப்போலியன் பல தெற்குப் பகுதியில் உள்ள ஜெர்மன் நாடுகளையும், ரைன் பகுதியில் உள்ள ஜெர்மன் நாடுகளையும் அவர் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தார். இந்த நாடுகள் அடங்கிய பகுதிக்கு ரைன் கூட்டரசாங்கம் (Confede-

ration of the rhine States) என்ற பெயரிடப்பட்டது. இந்த ரைன் கூட்டரசாங்கத்தின்கீழ், பவேரியா, பேடன், வர்டர்ம்பர்க் ஆகிய நாடுகளும் இடம்பெற்றன. சுமார் 354 நாடுகள் கொண்ட இப் பகுதியை 36 நாடுகள் கொண்ட ஒரு பகுதியாக்கினர். இந்த நாடுகள் நெப்போலியனது ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன. அடுத்த நூற்றாண்டில் நிகழ்ந்த ஜெர்மானிய ஐக்கிய இயக்கத்திற்கு நெப்போலியனே வழிகாட்டினர். ஜெர்மனியின் பெரும்பாலான நாடுகள், ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டதால், அங்கே 'புனித ரோமப் பேரரசு' இனியும் பெயரளவில் இருப்பதற்கும்கூடக் காரணமில்லை. அதனால் அந்தப் பேரரசை நெப்போலியன் இருந்த இடம் தெரியாமல் ஒழித்துவிட்டார். ஏறக்குறைய 800 ஆண்டு களாகப் பெயரளவில் இருந்து வந்த இந்தப் பேரரசு 1806-ல் அறவே மறைந்துவிட்டது. புனித ரோமப் பேரரசன் என்று இது வரையிலும் பட்டம் ஏந்திய ஆஸ்டிரிய மன்னர்களும், அந்தப் பட்டத்தைக் கைவிட்டு, இனிமேல் வெறும் "ஆஸ்டிரியப் பேரரசன்" என்று மட்டுமே அழைத்துக்கொண்டனர்.

1795-க்குப் பிறகு பிரஷ்யா ஐரோப்பியப் போர்களில் கலந்து கொள்ளாது நடுநிலைமை வகித்து வந்தது. ஆனால் பெரும்பான்மை யான ஜெர்மானிய நாடுகளை, நெப்போலியன் பணிய வைத்த பிறகு பிரஷ்யாவின் சுதந்தரத்திற்கும் ஆபத்து நேரிடலாம் என்ற காரணத்தால் மூன்றாவது கூட்டணியில் சேர்ந்துகொண்டது. ஆனால், 1806-ல் பிரஷ்யப் படைகள் ஜீனா (Jena) என்ற இடத்திலும், ஆர்ஸ்டாட் (Aurestadt) என்ற இடத்திலும் நெப்போலியனால் தோற்கடிக்கப்பட்டன. நெப்போலியனது இவ் வெற்றிக்குப் பிறகு ஃபிரெஞ்சுப் படைகள் விரைந்து சென்று பெர்லின் நகரைக் கைப்பற்றின. அதனால் நெப்போலியனது ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டதுமின்றி, ஏராளமான கப்பத்தையும் நெப்போலியனுக்கு அளித்தது. பெர்லினிலிருந்துதான் நெப்போலியன் "பெர்லின் ஆணைகள்" (Berlin Decrees) என்ற பொருளாதார முற்றுகையை இங்கிலாந்தின்மீது கொண்டு வந்தார். இந்தத் திட்டத்தை வெளியிட்ட பிறகு ரஷ்ய அரசனை முதலாம் அலெக்சாந்தர் மீது நெப்போலியன் படையெடுத்தார். 1807-ல் பிரைட்லாண்டு (Friedland) என்ற இடத்தில் ரஷ்யப் படைகளைத் தோற்கடித்த உடன் முதலாம் அலெக்சாந்தர் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தார். டில்சிட் (Tilsit) உடன்படிக்கை இம் மன்னர் களிடையே கையெழுத்தாயிற்று. அதன்படி நெப்போலியனது ஆதிக்கத்தை முதலாம் அலெக்சாந்தர் ஏற்றுக்கொண்டார். தவிர, அவர் இங்கிலாந்தின்மீது செலுத்தப்படும் பொருளாதார முற்றுகையையும் திறம்பட நடத்துவதற்கு ஒத்துழைப்பதாகவும்

வாக்குறுதியளித்தார். "நீயும் நானும் இல்லையெனில், ஐரோப்பா எங்கே?" என்று அலெக்சாந்தர் நெப்போலியனிடம் கூறினர். இந்த உடன்படிக்கையின்படி ஸ்வீடனுக்குச் சொந்தமான பின்லாந்தை ரஷ்யா ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஸ்வீடன் மூன்றுவது கூட்டணியில் இங்கிலாந்துடன் சேர்ந்து நெப்போலியனை எதிர்த்ததற்காக ஸ்வீடன்மீது இவ்விதமாகப் பழிவாங்கப்பட்டது. பிரஷ்யாவிடமிருந்து பெற்றுக் கொண்ட சில மேற்குப் பகுதிகளும், இனியும் சில ஜெர்மன் நாடுகளும் ஹனேவர் (Hanover) உட்பட வெஸ்ட்பேலியா (Westphalia) இராச்சியம் என்று அமைத்து அதற்கு நெப்போலியனது தம்பியான ஜெரோமை (Jerome) அரசனுக்கினர்கள். போலந்து மாகாணங்கள் மாற்றி அமைக்கப்பட்டு அதைக் கிராண்டு டூச்சி ஆப் வார்ஸா (Grand Duchy of Warsaw) என்று அழைத்தனர். இந்த டில்சிட் உடன்படிக்கைக்குப் (Treaty of Tilsit) பிறகு இங்கிலாந்து ஒரு சமரச உடன்படிக்கை செய்து கொள்ளத் தயாராக இருந்தது. இல்லையெனில் அதன் மீது படையெடுப்பதென்றும், டென்மார்க், ஸ்வீடன், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் இங்கிலாந்தின் பொருள்களை வாங்கக் கூடாதென்றும் அறிவிக்கப்பட்டது. இவ்விதமாக நெப்போலியனும் அலெக்சாந்தரும் தங்களுக்குள் ஐரோப்பாவைப் பிரித்துக் கொள்வதற்கும், ஆதிக்கம் செலுத்துவதற்கும் பெரிய திட்டங்களைத் தீட்டினர்.

டில்சிட் உடன்படிக்கைக்குப் பிறகு நெப்போலியனது ஆதிக்கம் ஐரோப்பா முழுவதும் பரவியிருந்தது. அப்பொழுது ஃபிரெஞ்சுப் பேரரசு வடக்கில் ரைன் பகுதிகள் உட்பட, பெல்ஜியம், ஹாலந்து வட கடல்வரை பரவியிருந்தது. தெற்கில் சேவாய், பியட்மாண்ட், ஜெனேவா, பார்மா, டஸ்கனி, இத்தாலியக் கடற்கரை, ரோம் வரையிலும் பரவியிருந்தது. இத்தாலிய இராச்சியமும் நேப்பிள்ஸ் நாட்டைத் தவிர இப் பேரரசில் அடங்கியிருந்தது. இதைத் தவிர நெப்போலியனது ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட வெஸ்ட்பேலியா இராச்சியம், ரைன் கூட்டரசாங்கம், வார்சா கோமகனின் இராச்சியம், 1808-க்குப் பிறகு நேபிள்ஸ், ஸ்பெயின் இராச்சியங்களும் நெப்போலியனின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன. இவ்விதமான பெரும் பேரரசு இதற்கு முன்னர் ஐரோப்பாவில் ஏற்பட்டதே இல்லை. நெப்போலியனுடைய, "மன்னர்களது ஐரோப்பியக் கூட்டரசாங்கம்" என்ற அவருடைய திட்டம் வெற்றி பெரும் கட்டத்தில் இருந்தது. இந்தக் கூட்டரசாங்கத்தின் சிற்பியாகவும், அதிபராகவும் நெப்போலியனே பதவி ஏற்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கும்பொழுதுதான், நெப்போலியனை

எதிர்த்துப் பல சக்திகள் ஒன்றுக உருவாகிக்கொண்டிருந்தன. நெப்போலியனுடைய பிரம்மாண்டமான பேரரசின் அமைப்பில் ஒற்றுமையோ, அல்லது மக்களின் இணக்கமோ காண்பது அரிதாகி விட்டன. ஏனெனில், நெப்போலியன் தம்முடைய விருப்பம்போல நாட்டு எல்லைகளை மாற்றி அமைத்துக்கொண்டார். புதிய இராச்சியங்களை உருவாக்கினர். அப் புதிய இராச்சியங்களுக் கெல்லாம் தம்முடைய நெருங்கிய உறவினர்களையே அரசர்களாக நியமித்தார். மற்ற நாடுகளின் சுதந்தர உணர்ச்சிகளையோ அல்லது அவர்களின் பொருளாதார செழிப்பையோ அவர் மதித்து நடந்த தாகத் தெரியவில்லை. சமயம் கிடைத்தபொழுது, அவர் போரில் ஈடுபட்டு, அந்த மக்களைக் கத்தி முனையில் அடக்கி வைத்திருந்தார். பெரிய பேரரசில் ஒற்றுமையும், இணக்கமும் இல்லாதபொழுது எதிர்ப்புகள் கிளம்புவது இயற்கையே. வலிமை மிக்க எதிரிகள் ஒருபுறம் எதிர்த்ததால், அவர்களை ஒரு பக்கம் அடக்கியும், மறு புறம் அவர்களுக்கு நல்லாட்சி தருவதாகப் பசப்புவதும் நாளடைவில் வெற்றியளிக்கவில்லை. ஆஸ்டிரியா, பிரஷ்யா, ரஷ்யா, இத்தாலிய நாடுகள் அனைத்தும் நெப்போலியனின் சர்வாதி காரத்திற்குப் பணிந்து நடந்த போதிலும் கடற்படை வலிமை கொண்ட இங்கிலாந்து நெப்போலியனது ஒவ்வொரு திட்டத் தையும் சீர்குலைத்துக்கொண்டே வந்தது. அதனால் ஆத்திர மடைந்த நெப்போலியன் இங்கிலாந்தின்மீது திட்டமிட்ட பொருளாதார முற்றுகையை (Continental System) ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டார். இந்தத் திட்டம் வெற்றியுடன் நிறைவேற வேண்டுமென்றால் மற்ற ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசிய மாகின்றது. இங்கிலாந்தின் செழிப்பும் அதன் வலிமையும் அந் நாட்டின் வாணிகத்திலும் தொழில் வளர்ச்சியிலும் அடங்கி யிருந்ததால் இங்கிலாந்தின் வர்த்தகத்தை அழிப்பதற்கு மற்ற ஐரோப்பிய நாடுகளும், ஆங்கிலேயரின் உற்பத்திப் பொருள்களை வாங்காது செய்யவேண்டும். இந்தப் பொருளாதார முற்றுகையைக் கண்டு இங்கிலாந்து சிறிதும் பயப்படாது ஃபிரான்சின்மீது எதிர் இயக்கம் (Orders in Council) ஒன்றை இங்கிலாந்து ஆரம்பித்தது. இதன்படி நெப்போலியனை அண்டிய நாடுகளுக்கு ஆங்கிலேயரின் பொருள்களை விற்பதில்லை என்று இங்கிலாந்து அரசாங்கம் முடிவு செய்தது. உண்மையில், இங்கிலாந்துக்கு இந்தப் பொருளாதார முற்றுகையால் பெரிய நஷ்டம் ஏற்படவில்லை. உலகத்தில் பல பாகங்களிலும் காலனிகளை ஏற்படுத்திக்கொண்ட இங்கிலாந்திற்கு நல்ல வர்த்தக வாய்ப்புகள் இருந்துகொண்டே வந்தன. ஆனால் ஃபிரான்ஸ், மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தான் இதனால் நஷ்டம் ஏற்பட்டது. ஆங்கிலேயப் பொருள்களைக்

கள்ளத்தனமாகக் கடத்தி ஏராளமான இலாபத்தை வைத்து விற்றனர். இதனால் சாதாரண மக்களுக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. ஆங்கிலேயரின் பொருள்களை விற்பனை செய்ய ஸ்பெயினும், போர்ச்சுகல்லும் நல்ல கள்ளக் கடத்தல் இடங்களாயின. அந்த நாடுகளிலிருந்து எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏராளமான ஆங்கிலேயர்களின் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. நெப்போலியனின் பொருளாதார முற்றுகை நன்முகச் செயலாக்கப்படாததால், அத் திட்டம் முறிவடையும் கட்டத்தில் இருந்தது. இச் சமயத்தில், ரஷ்யாவும், ஹாலந்தும் கூட இந்தத் திட்டத்திற்குச் சரியான ஆதரவு அளிக்க முன் வரவில்லை. அந்த நாட்டினர் எப்பொழுதும் போலவே ஆங்கிலேய வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்தனர். இதனால் ஆத்திர மடைந்த நெப்போலியன், அவருடையத் திட்டம் தோல்வி அடையக் காரணமாக இருந்த போர்ச்சுகல், ஸ்பெயின், ஹாலந்து, ரஷ்யாவின்மீது போர் தொடுத்து அந்த நாடுகளைப் பழி வாங்குவது என்று முடிவு செய்தார். முதலில் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகள்மீது போர் தொடுத்தார். இதைத்தான் தீபகற்பப் போர் (Peninsular War) என்று அழைத்தனர்.

தீபகற்பப் போர் (1808–1814)

அப்பொழுது ஸ்பெயின் நாட்டரசனாக இருந்த நான்காம் சார்லஸ் அரசனுக்கும், அவருடைய மைந்தரான பெர்டினண்டுக்கும் சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது. இதனால் ஏற்பட்டிருந்த குழப்பத்தையும், பிரிட்டன்மீது சுமத்தப்பெற்ற பொருளாதார முற்றுகையைச் சரிவர செயலாற்றவில்லை என்ற கோபத்தையும் பயன்படுத்திக்கொண்டு நெப்போலியன் நான்காம் சார்லசைப் பட்டத்தைத் துறந்துவிட வேண்டுமென்று இரகசியமாகவும், பிறகு மிரட்டியும் கேட்டார். இவை பயன் அளிக்காமல் போனதால் ஸ்பெயின் அரசனைச் சிறைப்படுத்தினர். ஸ்பெயின் நாட்டிற்கு, நெப்போலியனது தம்பியான ஜோசப் போனபார்டேவை அரசனுக்கினர். அதனால் ஸ்பானிய மக்கள் மிகவும் அருப்தி அடைந்தனர். அவர்களின் குமுறல் அதிகமாகி வந்தது. நெப்போலியன் அவர்களுக்கு நல்ல ஆட்சியை ஏற்படுத்திக் கொடுப்பதாக உறுதியளித்தார். ஆனால். அவர்கள் அந்நியனின் நல்ல ஆட்சியைவிட, அவர்களது மோசமான ஆனால், சுயாட்சியைத்தான் விரும்புவதாகக் கூறினர். "நல்ல ஆட்சியை நாங்கள் ஏற்படுத்திக் கொள்வோம்" என்று கூறினர். அதற்குப் பிறகு ஸ்பானிய விடுதலை படைகள் நாடெங்கிலும் அமைக்கப்பெற்றன. அவர்கள் ஃபிரெஞ்சுப் படைகளை நேருக்கு நேர் சந்தித்துப்

போரிடாமல், கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றி, அடிக்கடி ஃபிரெஞ்சுப் படைகளைத் துன்புறுத்தி வந்தனர். ஸ்பானியப் படைகள் ஒரு சமயம் நேரிடையாக ஃபிரெஞ்சுப் படைகளுடன் போரிட்டிருந்தால் பலமுறை தோல்வியுற்றிருக்கலாம். ஆனால், அவ்விதத் தோல்விகளை, இக் ''கொரில்லா''ப் போர் முறையினால் தவிர்த்தனர். அடிக்கடி முற்றிலும் எதிர்பாராத விதமாக ஸ்பானியப் படைகள் மறைந்திருந்து தாக்கியதன் விளைவாக, ஃபிரெஞ்சுப் படைகளில் நிறுவியிருந்த ஒழுக்கம் குன்றலாயிற்று. அவர்களிடையே முதன் முதலாகத் தோல்வி மனப்பான்மையும், கட்டுப்பாடற்ற நிலையும் ஏற்படலாயின. திறமை மிக்க ஃபிரெஞ்சுப் படைகளில் இவ்விதமான ஒழுக்கக் குறைவும், கட்டுப்பாடற்ற தன்மையும் தளபதிகளிடையே ஒற்றுமையின்மையும் ஏற்பட்டதால், அவர்களை எளிதாக ஸ்பானியக் கொரில்லாக்களால் தோற்கடிக்க முடிந்தது. ஸ்பானியப் படைகளுக்குப் போர்ச்சுகல்லும் இங்கிலாந்தும் உதவின. போர்ச்சுகல்லின்மீது தாக்கிய ஃபிரெஞ்சுப் படைகளை ஆங்கிலேயத் தளபதியான ஆர்தர் வெல்லஸ்லி பல அரண்களை அமைத்து ஃபிரெஞ்சுப் படைகளை முன்னேற விடாது செய்துவிட்டார். டாரஸ் வெட்ரா என்ற இடத்தில் ஃபிரெஞ்சுப் படைகள் அடியோடு முறியடிக்கப்பெற்றன. ஃபிரெஞ்சுத் தளபதி மெஸனா, தயாவீரா, சலமாங்கா, விட்டோரியா ஆகிய இடங்களில் தோற்கடிக்கப்பெற்று இறுதியில் ஸ்பெயினிலிருந்தே விரட்டப்பெற்றார். ஸ்பெயின் அரியணையை உடனடியாகக் காலி செய்துவிட்டு, ஜோசப்பும் ஓடிவிட்டார். அதனால் நெப்போலியனுக்குப் பெரிய அவமானம் ஏற்பட்டது. ஐரோப்பாவிலேயே ஃபிரெஞ்சுப் படைகள் முதன் முதலாக ஸ்பெயினில் தோல்விகளைக் கண்டன. அதனால் இதன் விளைவாக, ஃபிரெஞ்சு நாட்டிலும் மக்கள் நெப்போலியன்மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர் என்று கூறலாம். ஸ்பெயின் நாட்டில் ஃபிரெஞ்சுப் படைகள் தோல்வியுறுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தது, ஆங்கிலேயரின் தலையீடும், ஸ்பெயினுக்கு அவர்கள் அளித்த ஒத்துழைப்புமேதான். கடல் வழியாக ஆங்கிலேயர்கள் ஸ்பெயினுக்கும் போர்ச்சுகல்லுக்கும் ஏராளமான உதவி அளித்தனர். தவிர, சர் ஆர்தர் வெல்லஸ்லி ஒரு சிறந்த தளபதி என்ற உண்மையை நிரூபித்துக் காட்டினார். ஸ்பானியர்கள் அவ்வளவு தீவிரமான தேசப்பற்று உடையவர்கள் என்பதை நெப்போலியன் சரியாக உணரவில்லை. அவர்களெல்லாம் பக்திமான்களே தவிர, போர் செய்யத் தெரியாதவர்கள் என்று நெப்போலியன் தவறுதலாக மதிப்பிட்டிருந்தார். ஸ்பெயின் நாட்டைப்பற்றிய புவியியல் அமைப்பைப்பற்றி, ஃபிரெஞ்சுப் படையினருக்குச் சரியாகப் புரியவில்லை. அதனால்தான் ஸ்பானியக்

கொரில்லாக்கள் மறைந்திருந்து தாக்குதலை நடத்த முடிந்தது. நல்ல ஆட்சியை அளிக்கப்போவதாக நெப்போலியன் ஸ்பானியர் களிடையே பறைசாற்றிய போதிலும், அவர்கள் விரும்பியது சுயாட்சிதான் என்பதை அவர்களுடைய போராட்டத்திலேயே நன்கு வெளிப்படுத்தினர்.

1813-ல் தீபகற்பப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே, நெப்போலியன் ரஷ்யாமீது படையெடுக்கும் பொருட்டு, ஒரு மாபெரும் படையைத் திரட்டினார். அப் படையில் பல இலட்சக் கணக்கான போர் வீரர்கள் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பல நாடுகளிலிருந்தும் போர் வீரர்கள் அமர்த்தப்பெற்றதால், அவர்களிடையே தேசப்பற்று இல்லாம லிருந்ததில் வியப்பில்லை. ஒரு வகையில் பெரும்பான்மையோர் கூலிக்கு அமர்த்தப்பெற்றவர்களாகவே தோன்றினர். ஆனால் பெயரளவிற்கும், பார்வையளவிற்கும் இதைப்போன்ற மிகப் பிரம்மாண்டமானதொரு படையை ஐரோப்பாவில் யாரும் கண்ட தில்லை என்ற புகழ் மட்டும் இருந்தது. இப் பெரிய படையைச் செலுத்தி ரஷ்யர்களை வெகு எளிதாகப் போர் செய்யாமலேயே மிரட்டிப் பணிய வைத்து விடலாம் என்று நெப்போலியன் கற்பனை செய்து பார்த்திருப்பார். ரஷ்யாவை வெகு எளிதாகக் கைப்பற்றிக் கொண்ட பிறகு, இந்தியாவின்மீதும் படையெடுக்க அவர் திட்ட மிட்டிருந்தார். ஐரோப்பாவில் மட்டுமல்லாது, ஆசியாவிலும் அவ ருடைய அரசியல் ஆதிக்கம் நிலைபெற வேண்டும் என்று கருதினர். ஆனால், அவருடைய திட்டங்கள் நிறைவேறவில்லை. இயற்கையே அவருக்கு எதிரியாக அமைந்துவிட்டது. அவர் எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே, கொடும் பனி ரஷ்யாவில் ஆரம்பமாகிவிட்டது. இச் சூழ்நிலையில்தான், நெப்போலியன் அவரது படைகளை மிகவும் துரித மாக ரஷ்யாவினுள் செலுத்தினர். படை வீரர்களும் வேகமாக முன்னேறி ரஷ்யப் பகுதிகளைக் கைப்பற்றி வந்தனர். ஆனால் ரஷ்யர்கள் போரிடாமல் பின்வாங்கி வந்தபோதிலும், அவர்கள் "நாசமாக்குதல் கொள்கையைப்" பின்பற்றி, உணவுக் கிடங்கு களையும், வீடுகளையும், பாலங்களையும், பயிர்களையும் அழித்துச் சென்றனர். இதனால் முன்னேறிவரும் ஃபிரெஞ்சுப் படைகளுக்குத் தங்க இடமுமின்றி, உண்ண உணவுமின்றி, கொடுமையான பனியிலும், குளிரிலும் பல தொல்லைகளுக்குள்ளாகினர். இந்தச் சூழ்நிலையிலும்கூட, நெப்போலியனே முன்னின்று தம் படை வீரர் களுக்கு உற்சாகமூட்டித் துரிதமாக முன் செலுத்தினர். ஃபிரெஞ்சுப் படை மாஸ்கோ வரையிலும் வந்து சேர்ந்தது. அதற்குமேல் அவர் தம் படைகளைச் செலுத்த முடியவில்லை. அதனால் பின் வாங்க வேண்டிய மிகக் கட்டாயமான நிலை ஏற்பட்டது. படையெடுப்பின்

போது ஏற்பட்ட இடையூறுகளைக் காட்டிலும், பின்வாங்கும் பொழுது அவருக்கு அதிக இன்னல்கள் ஏற்பட்டன. பல ஆயிரக் கணக்கான வீரர்கள், குளிர் தாங்காது உயிர் துறந்தனர். ஃபிரெஞ்சு எல்லைக்கு அப் படை வரும்பொழுது மூன்றில் ஒரு பங்கு படை யினர்தான் உயிருடன் வந்து சேர்ந்தனர். உயிருடன் வந்தவர்களும் மிகவும் பரிதாபமான நிலையில்தான் இருந்தனர். நாட்டின் செல்வத் தையும், மக்களின் ஆற்றலையும், போர் வீரர்களின் உயிரையும் நெப்போலியன் வீணுக்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அவரது நாட்டிலேயே அவருக்கு எதிராகக் கொந்தளிப்பு ஏற்பட்டது. அவர் ரஷ்யாவில் பின்வாங்கிக் கொண்டிருக்கும் பொழுதே, அவர்மீது நடவடிக்கை எடுப்பதென்று தீர்மானிக்கப் பெற்றது. நேச நாடுகளின் முயற்சியால் பதினெட்டாம் லூயி ஃபிரெஞ்சு நாட்டின் மன்னராகப் பிரகடனம் செய்யப் பட்டார். நெப்போலியன் பட்டத்தைத் துறக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவரை எல்பா (Elba) என்ற தீவிற்குக் கைதியாக அனுப்பினர்.

ஆனால் நெப்போலியன் எப்படியோ எல்பாவிலிருந்து தப்பி யோடி, ரூலுஸ் என்ற நகரத்திற்குள் நுழைந்தார். அவருக்கு மீண்டும் ஆதரவாளர்கள் கிடைத்தனர். பதினெட்டாம் லூயி மன்னன்மீது ஃபிரெஞ்சு மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அதனால் அவர்கள் மீண்டும் நெப்போலியனையே பட்டத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று தீவிரமாக இருந்தனர். நெப்போலியனுடைய ஆதரவாளர்கள் அதிகமாகிக்கொண்டே வந்தனர். இச் சூழ்நிலை யில், மீண்டும் நெப்போலியன் பேரரசன் என்ற பட்டத்தை இரண் டாவது முறையாகச் சூட்டிக்கொண்டார். நூறு நாட்களில் அவர் இழந்த இப் பட்டத்தை மீண்டும் பெற்றுவிட்டார்.

இழந்தப் பட்டத்தைப் பெற்றவுடன் அவரது பழிவாங்கும் உணர்ச்சிதான் அவரை அதிகமாக ஆட்கொண்டது. எப்படியும் இங்கிலாந்தையும், அதனுடைய நேச நாடுகளின் கூட்டணியை யும் முறியடித்துவிட வேண்டுமென்று அவர் முடிவுசெய்தார். இதைப்போன்றே, நான்காவது முறையாக ஒன்று சேர்ந்த கூட்டணிப் படைகள், தங்களுடைய முழு முயற்சியுடன் ஒரு படையைத் திரட்டி நெப்போலியனது, படையை லெப்சிக் (Leipzig) என்ற இடத்தில் முறியடித்தனர். இதைப் "பல நாடு களின் போர்" (Battle of the Nations) என்று அழைக்கின்றனர். இப் போரில் நெப்போலியன் தோல்வியுற்றபோதிலும், சிறிதும் தளராது மீண்டும் இறுதியாகப் போர் தொடுத்து நேச நாடுகளின் கூட்டணியை முறியடிப்பது என்று உறுதிகொண்டிருந்தார்.

1815-ல் வாட்டர்லூ (Watterloo) என்ற இடத்தில் அவர் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டார். இப் போரில் தோல்வி அடையவில்லை என்று நெப்போலியன் கூறிக்கொண்டபோதிலும், இப் போருக்குப் பிறகு நேச நாட்டுப் படையினர் பாரிஸ் நகரை நோக்கி விரைந்தனர். அதன் பின்னர்தான், நெப்போலியன் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். அவர்கள் அட்லாண்டிக் கடலில் உள்ள செயின்ட் ஹெலினு (St. Helena) என்ற தீவிற்குக் கைதியாக அனுப்பினர். 1821-ல் அவர் அத் தீவிலேயே கைதியாக இறந்து விட்டார். ஆறு ஆண்டுகள் அத் தீவில் நெப்போலியன் கைதியாக இருந்தபொழுது, அவருக்குரிய மரியாதையுடன் அவர் நடத்தப்பட வில்லை என்று குறைபட்டுக்கொண்டார். அப்பொழுது அவருக்கு மூளை கோளாறு ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற வதந்தியும் நிலவி வந்தது.

நெப்போலியனது வீழ்ச்சிக்குக் காரணங்கள்

புரட்சியின் குழந்தையாகத் தோன்றிய நெப்போலியன், புரட்சிக் கருத்துகளை நாளடைவில் புறக்கணித்துவிட்டார். ஃபிரெஞ்சு மக்கள் நெப்போலியன்மீது கொண்டிருந்த மோகத்தைக் காட்டிலும் அவருடைய புரட்சிக் கருத்துகளிலும், அவருடைய உரிமைகளிலும் அதிகப் பற்றுதல் கொண்டிருந்தனர். ஆனால், ஃபிரெஞ்சுக் குடியரசு அரசாங்கம் அமைகின்ற சமயத்தில் ஃபிரெஞ்சு நாட்டில் ஒழுக்கமும், சட்டமும், அமைதியும் குறைந்து வன்முறைகளில் மக்கள் ஈடுபட்டதால், அவ்விதமான குழப்பங்களை அகற்றி ஒரு நல்ல, வலிமை மிக்க அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவல் ஃபிரெஞ்சு மக்களிடம் இருந்தது. அதன் விளைவாகத்தான் ஃபிரெஞ்சு நாட்டு மக்களுக்குப் பல வெற்றிகளையும், அந்நாட்டிற்கு மங்காப் புகழையும் தேடித் தந்த நெப்போலியனிடம் மக்கள் நம்பிக்கை வைக்கத் தொடங்கினர். மேலும் மேலும் வெற்றிகளை அளித்து வந்ததாலும், ஐரோப்பாவில் உள்ள மிக வலிமைமிக்க வல்லரசுகளும் அவருக்கு அடிபணிந்த காரணத்தாலும், அவர் படிப்படியாக தமது அதிகாரத்தைத் தளபதியிலிருந்து சர்வாதிகாரியாகவும், பிறகு வாழ்நாள் முழுவதும் அப் பதவியிலேயே தொடர்ந்து பணியாற்ற சட்டமியற்றியும், பிறகு அண்மையில் உள்ள மற்ற ஐரோப்பிய அரசர்களைப்போல், அவர்களைவிட இன்னும் ஒருபடி அதிகமாகச் சென்று 'பேரரசன்' என்ற பட்டத்தைப் போப் முன்னிலையில் தமக்குத்தாமே சூட்டிக்கொண்டு திறமையுடன் ஆட்சி செய்தார். நெப்போலியனுடைய இந்த வளர்ச்சியைக் கண்டு ஃபிரெஞ்சு மக்கள் அப்பொழுது பெருமை கொண்டனர். ஒரு சாதாரண குடிமகன் ஒரு பேரரசனாக வர முடிந்ததற்குப் புரட்சியே காரணம்

என்று கருதியிருந்தனர். அப்பொழுதெல்லாம் ஃபிரெஞ்சு மக்கள் நெப்போலியன் கொண்டு வந்த வெற்றிக் களிப்பில் மிதந்து வந்தனர். அவருடைய பயனுள்ள திறமைமிக்கச் சீர்திருத்தங்கள் மூலமாக நாட்டில் அமைதியும், ஒழுக்கமும் நிலைநாட்டப்பெற்றன. புரட்சிக் காலத்தில் தோன்றிய பல குறைகளை அகற்றினர். இவற்றையெல்லாம் அவர் செய்கின்றபொழுது, ஃபிரெஞ்சு மக்கள் அவரைப்பற்றி வேறு எவ்விதமான எண்ணமும் கொண்டிருக்கவில்லை. புரட்சிக் கருத்துகளுக்கு அவர் அவ்வளவாக இசைந்து போகாமல் இருந்ததைப்பற்றியும் கவலை கொள்ளவில்லை. ஆனால் வெற்றிக் களிப்பில் மக்களை மூழ்கடித்திருந்த நெப்போலியனுக்குத் தோல்விகளும் ஏற்படலாயிற்று. தீபகற்பப் போரில் அவருக்கு முதன் முதலாகத் தோல்வி ஏற்பட்டது. அவருடைய ஆட்சிக்கும், அதிகாரத்திற்கும் ஆட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தது ஸ்பெயின் நாடே ஆகும். அதைத் தொடர்ந்து ரஷ்யாவின்மீது தொடுத்த போரிலும் அவர் வெற்றி காணவில்லை. தீபகற்பப் போரில் ஏற்பட்ட இழிவை ரஷ்யப் போரில் அகற்றிவிடலாம்; மக்கள் மனத்தில் மறைந்துவரும் அவருடைய பெயரையும் புகழையும் மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்ற காரணத்தால்தான், எங்குமே இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க வேண்டிய அளவில் ஒரு மாபெரும் படையைத் திரட்டினர். ஆனால் உடனடியாகத் தோல்வி மேல் தோல்வி நெப்போலியனுக்கு ஏற்பட்டதால், அவர் மக்களுடைய கவனத்தை வேறு வழிகளில் திருப்புவதற்குப் பதிலாக, மக்களுடைய கவனம் முழுவதும் அவர் பக்கமே திரும்பிவிட்டது. அதனால் ரஷ்ய படையெடுப்பில் தோல்வியுற்ற பிறகு அவர் பட்டத்தைத் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நெப்போலியன் மீண்டும் பட்டத்தைச் சில ஆதரவாளர்கள் உதவியைக் கொண்டு பெற்றார் என்று கூறுவதைக் காட்டிலும், நேசநாட்டுப் பிரதிநிதிகள் பதினெட்டாம் லூயியை ஃபிரெஞ்சு அரசனாக மீண்டும் கொண்டு வந்தது, ஃபிரெஞ்சு மக்களுக்கு மீண்டும் பழைய நினைவுகள் வந்துவிடவே, நெப்போலியனே மேல் என்று நினைக்கத் தொடங்கினர். அதனால்தான் இரண்டாவது முறையும் அவர் பட்டத்திற்கு வர முடிந்தது. ஆனால் அவர்மீது படிந்திருந்த சில இழிவுகளை அகற்றும் பொருட்டும், பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலிட்டதாலும், ஐரோப்பிய நேச நாடுகளின் கூட்டணியை எதிர்த்துப் போரிட வேண்டியதாயிற்று. விதி வழி சென்ற நெப்போலியனுக்கு இதுவரையிலும் வெற்றி தேவதை உறுதுணையாக இருந்தது. ஆனால் அதே விதி வழியில் தோல்வியும் அவரை அடுத்தடுத்து, லெப்சிக்கிலும், வாட்டர்லூவிலும் சந்தித்து. மேலிருந்து கீழே தள்ளிவிட்டது.

நெப்போலியன் போனபார்டே தம்மைப்பற்றி மிகவும் அதிகமாக மதிப்பிட்டுக்கொண்டார். எந்த வழியில் அவர் ஃபிரெஞ்சு மக்களின் பேரரசனாக வந்தார் என்பதை மறந்துவிட்டார். அவருடைய படையெடுப்புகளே ஒரு வரம்பிற்குள் கொண்டு வந்திருக்கவேண்டும். மற்ற நாடுகளின் சுதந்தரத்தையும், உரிமைகளையும் அவர் அறவே புறக்கணித்துவிட்டதால், மற்ற ஐரோப்பிய நாடுகளின் ஒருமித்த எதிர்ப்பை அவர் சமாளிக்க நேரிட்டது. மூன்று முறைகள் ஐரோப்பிய நாடுகளின் கூட்டணியை முறியடித்து விட்டதாலும், பழம்பெருமை மிக்க வல்லரசுகளை தம் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்துவிட்டதாலும், ஐரோப்பிய நாடுகள் எல்லாம் செத்து வீழ்ந்துவிட்டன; தம்மை அசைப்பதற்கு வேறு எந்த நாடும் இவ்வுலகில் இல்லை என்ற கற்பனையில்தான் இருந்தார். ஆனால் அவருடைய ஆதிக்க வெறிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இங்கிலாந்து முழுமூச்சுடன் மற்றுமொரு கூட்டணியை உருவாக்கியது. தோல்வியே கண்டிராத நெப்போலியனையும் தோல்வியைக் காணச் செய்து, அந்த நாட்டுக் கடற்படைத் தளபதியிடமே அவரைச் சரணடையவும் செய்தது. அவருடைய ஆதிக்க வெறியே அவருடைய அழிவுக்கும் காரணமாக இருந்தது.

நெப்போலியன் தமக்கு அடங்கிய ஐரோப்பிய அரசர்களை வைத்துக்கொண்டே ஒரு கூட்டரசாங்கத்தை உருவாக்க வேண்டுமென்று திட்டம் தீட்டினார். அந்தத் திட்டத்தில், அவரையும் ஃபிரெஞ்சு நாட்டையும்தான் மிகவும் பிரதானமாக நினைத்துக் கொண்டாரே தவிர, மற்ற நாடுகள் சுதந்தரம் இழப்பதைப் பற்றியோ, அல்லது அவர் விருப்பப்படி எல்லைகளை மாற்றி அமைப்பதும், மக்கள் வெவ்வேறு இடங்களில் குடியிருக்கச் செய்வதும் நாளடைவில் பெரியதொரு ஐரோப்பிய எதிர்ப்பை உருவாக்கும் ஒரு சூழ்நிலையை அவர் எதிர்பார்க்கவில்லை. காலதாமதமின்றியே அவ்விதமான சூழ்நிலை வெகு விரைவில் தோன்றிவிட்டது. அவருடைய முதல் எதிரியான பிரிட்டன்மீது மற்ற ஐரோப்பிய நாடுகளும் அவருடன் சேர்ந்து பொருளாதார முற்றுகையைச் செய்யவேண்டும் என்ற கட்டளையை மற்ற ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்த ஒத்துழைப்பின்மையிலிருந்தாவது அவர்ஒரு பாடத்தைக் கற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஒத்துழைப்புத் தராத நாடுகள் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் அளவில் அவர் போர்த் திட்டங்களைத் தீட்டியது அவருடைய வீழ்ச்சிக்கு முதல் அறிகுறியாகும்.

முன்பிருந்த திறமைமிக்க இராணுவம் அவரிடம் பிறகு இல்லாமல் போய்விட்டது. படை பலத்தை அதிகரிக்கவேண்டும்

என்ற காரணத்தால், அவருடைய ஆதிக்கத்தின் கீழிருந்த பல நாடுகளிலிருந்தும் போர் வீரர்கள் அமர்த்தப்பெற்றனர். அவர்கள் வெறும் கூலிக்குப் போரிடுபவர்களாகவே பணியாற்றினர். அதனால் ஃபிரெஞ்சு இராணுவத்தின் திறமை குறைந்தது. தவிர, தனி மனிதனின் சக்தியும், திறமையும் ஓரளவிற்கும், சில காலத்திற்கும் தான் பயன்படும். அவைகளுக்கு ஓர் எல்லை உண்டு. அதனால் தனி மனிதனின் சர்வாதிகாரம் கொண்ட நெப்போலியனது ஆட்சி சீர்குலைந்ததில் எவ்வித வியப்பும் இல்லை.

7. வியன்ன உடன்படிக்கை

(1815)

நெப்போலியன் போனபார்டேயின் பேரரசு சீர்குலைந்து கொண்டிருக்கும்தருவாயில் ஐரோப்பிய வல்லரசுகளான பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்டிரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதி நிதிகள் ஒன்றுகூடி மீண்டும் ஐரோப்பாவை எப்படிச் சீரமைக்க வேண்டும் என்ற பிரச்சினைகளை ஆராய முனைந்தனர். நெப்போலியனை அரச கட்டிலிலிருந்து அகற்றி எல்பா தீவிற்கு முதன் முதலாகக் கைதியாக அனுப்பியதிலிருந்தே, வல்லரசுகளின் "ஐரோப்பியச் சீரமைப்பு" ஆர்வம் மிகுந்து காணப்பெற்றது. அதனால் 1814-ல் சாமாண்ட் (Chaumont) என்ற இடத்தில் வல்லரசுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடிப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர். நெப்போலியன் உருவாக்கிய அரச பரம்பரையை ஃபிரான்சில் மட்டுமல்லாது ஐரோப்பாவில் எப் பகுதியிலும் வேரூன்றவிடாது செய்யவேண்டுமென்பது அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது. அதனால் உடனடியாகப் பழைய ஃபிரெஞ்சு அரச பரம்பரையைச் சார்ந்த பதினெட்டாம் லூயியை ஃபிரெஞ்சு நாட்டு அரசனாகப் பிரகடனம் செய்தனர். பிறகு நெப்போலியனது ஆட்சிக் காலத்தில் ஆக்கிரமிப்புச் செய்து சேர்க்கப்பெற்ற நாடுகளை, எவ்விதமாக அவைகளின் உரிமையாளர்களுக்கே மீண்டும் தந்து விடுவதென்றும் ஆலோசித்தனர். ஃபிரெஞ்சு எல்லைகளை எவ்வாறு வரையறுப்பதென்றும், அவற்றைக் கட்டுப்படுத்துவதென்றும் விவாதித்தனர். அச் சமயத்தில்தான் நெப்போலியன் எல்பா தீவிலிருந்து தப்பித்து விட்டதுமின்றி, ஃபிரெஞ்சு மக்களுடைய ஆதரவுடன் மீண்டும் பேரரசன் என்று தம்மைப் பிரகடனம் செய்து கொண்டார். அதனால், ஐரோப்பாவின் சீரமைப்புப் பிரச்சினைகள் ஒத்திப் போடப்பெற்றன. ஒரே ஆர்வத்துடனும் முழு முயற்சியுடனும் வல்லரசுகள் ஒருங்கே சேர்ந்து நெப்போலியனை வாட்டர்லூ என்ற இடத்தில் 1815-ல் முறியடித்த பிறகு, மீண்டும் பாரிஸ் நகரத்தில் வல்லரசுகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி

ஐரோப்பியச் சீரமைப்பை எப்படிச் செய்வது என்று பரிசீலனை செய்தனர். பாரிஸ் நகரத்திலே ஒத்திகையை முடித்துக்கொண்டு வியன்னு நகரில் ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டி அங்குப் பல பிரச்சினைகளை விவாதித்தனர்.

இந்த மாநாட்டைக் கூட்டுவதில் ஆஸ்டிரியாவின் பிரதம அமைச்சர் மெட்டர்னிக் (Metternic) அதிக முயற்சி எடுத்துக் கொண்டார். மெட்டர்னிக் ஒரு பிற்போக்குவாதி, அவருக்குப் புரட்சி எண்ணங்களும், முற்போக்கான கருத்துகளும் பிடிக்காத வைகளாகும். பழைய வல்லரசுக் கொள்கைகளில் அதிக ஈடுபாடுடையவர். அதனால் முடியாட்சி ஐரோப்பாவில் அழிந்து விடக்கூடாது என்ற எண்ணம் கொண்டிருந்தார். அவருடைய முயற்சியில் உருவாக்கப்பெற்ற மாநாட்டில் அவருடைய பிற்போக்கான கொள்கைகளைத்தான் அதிகமாக வலியுறுத்தினர். ஐரோப்பாவில் புரட்சியும், தேசியமும் வளர்ச்சியுறுதவாறு எவ்வளவு தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவ்வளவையும் கொண்டு வர முயன்றார். முற்போக்கான கருத்துகளில் எழாத எந்தத் தீர்மானமும் பொதுவாக மக்களுடைய விருப்பங்களுக்குப் புறம்பானவையாகவே இருந்தது. பொதுவாக இந்த மாநாட்டிற்கும் பொதுமக்களுடைய அபிப்பிராயங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றே கூறலாம். அரசர்களும், அரசர்களுடைய பிரதிநிதிகளும்தான் இந்த மாநாட்டில் மிகவும் ஆடம்பரமாகக் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் பிரிட்டனின் பிரதிநிதியாக அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சரான காசல்ரே பிரபு கலந்துகொண்டார். இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் முற்போக்கான கருத்துகளையும், தெளிவான எண்ணங்களையும் கொண்டிருந்தவர்களில் இவரும் ஒருவராவர். ஏனெனில், பிரிட்டனில் ஏற்கனவே பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை நல்லவிதமாக வேரூன்றி வளர்ந்து வந்தது. அங்கு மக்களுடைய அபிப்பிராயங்களுக்கு நல்ல மதிப்புக் கொடுக்கப்பெற்றது. மெட்டர்னிக்கின் கொள்கைகளை அவர் ஆதரிக்கவில்லையெனினும், அந்த மாநாட்டில் கலந்து கொண்ட மற்ற அரசர்களின் கொள்கைகளும் ஏறக்குறைய மெட்டர்னிக்கின் கொள்கைகளைப் போன்றுதான் இருந்ததால், அவற்றை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தார். தவிர, பிரிட்டனுக்கும் ஃபிரான்சிற்கும் ஏறக்குறைய இரு நூற்றாண்டுக் காலமாகவே, பெரும் போராட்டங்கள் நிகழ்ந்திருந்த போதிலும், கடுமையான கடல் ஆதிக்கப் போட்டியும், பேரரசு போட்டியும் இருந்த போதிலும், அவருக்கு இந்த மாநாட்டில்

ஃபிரான்சின்மீது பழிவாங்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தபோதிலும் அவர் ஃபிரான்சிடம் பெருந்தன்மையாகவும், கழிவிரக்கம் காட்டக் கூடிய அளவில்தான் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்ள விரும்பினர். இதைப் போன்றே முதல் உலகப் போர் (1914–18) முடிந்த பிறகு ஜெர்மனியின்மீது திணிக்கப்பெற்ற உடன்படிக்கை பழிவாங்கும் எண்ணத்துடன் அமைக்கப்பெற்றது. அவ்விதமாக இந்த மாநாட்டில் பழிவாங்கும் உணர்ச்சிகளுக்கு இடம்தராமல் பாதுகாத்ததில் முக்கியக் காரணமாக இருந்தவர் பெரும்பாலும் கேஸல்ரே பிரபு என்றுதான் கூறவேண்டும். இந்த மாநாட்டில் ரஷ்யாவின் சார்பாக அந்த நாட்டு அரசர் முதலாம் அலெக்சாந்தர் கலந்துகொண்டார். அவர் பெருந்தன்மை படைத்தவரெனினும் முரண்பட்டக் கொள்கைகளைக் கொண்டிருந்தார். அவரை மற்றப் பிரதிநிதிகள் சரியாகப் புரிந்துகொள்ளவோ, அல்லது மற்றவர்கள் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவோ முடியாத நிலையை அவர் ஏற்படுத்திக்கொண்டார். பிரஷ்யாவின் சார்பாக ஹெயின்டன்பர்க் கலந்துகொண்டார். தோற்கடிக்கப்பெற்ற ஃபிரான்சின் சார்பாக நெப்போலியனின் மறு பகுதி என்று அழைக்கப்படும் டேலிராண்ட் என்பவர் கலந்துகொண்டார். அவருடைய பிடிவாதமான விவாதத் திறமையாலும் தெளிவானக் கருத்துகளாலும் மற்றப் பிரதிநிதிகளை அவர் மிகவும் கவர்ந்து ஃபிரான்சிற்குச் சாதகமான உடன்படிக்கையைச் செய்துகொண்டது, பெரும்பாலும் அவரது முயற்சியே என்று கூறலாம். வியன்னாவில் கூடிய பல நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டமும், அவர்களுடைய கருத்துகளும், சுயநலங்களும் பல நாடுகளின் கவனத்தை அப்பொழுது ஈர்த்தன.

இந்த மாநாட்டில் ஏற்பட்ட தீர்மானங்கள் பெரும்பாலும் ஐந்து ஐரோப்பிய வல்லரசுகளின் பெரும் முயற்சியால் ஏற்பட்டவை யாகும். இப் பெரிய வல்லரசுகளான பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்டிரியா, ஃபிரான்ஸ், பிரஷ்யா ஆகிய நாடுகள் அவைகளின் சுயநலங்களை முதலில் கவனித்துக்கொண்டன. இருப்பினும் ஓரளவிற்கு அவ்வளவு வெளிப்படையாக அந்த சுயநலங்கள் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரிட்டனுக்கு ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற விருப்பம் இல்லை. அதனுடைய ஆவல் முழுவதும் பெரிய கடல் கடந்த பேரரசை அமைப்பதற்கான சூழ்நிலையைத் தேடிக் கொள்வதில் தான் இருந்தது. அதைப்போலவே ரஷ்யாவிற்கு முக்கியமாக ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. இருப்பினும் பால்டிக் கரையோரத்தில் ஏதாவது ஆதிக்கம் செலுத்த ஒரு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண் டிருந்தது. இத்தாலியில் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருந்த

ஆஸ்டிரியாவிற்கும், அங்கே சில பகுதிகளான லம்பார்டி, வெனிஷியா ஆகியவற்றைப் பெறுகின்ற நிலைமையை ஏற்படுத்திக் கொண்டது. ஜெர்மனியின் சிறு நாடுகளை ஐக்கியப்படுத்துவதில் அல்லது ஜெர்மனியின் சிறு நாடுகளை ஆதிக்கம் செய்ய வேண்டிய தலைமையை யார் நிர்வகிப்பதென்ற பெரும் பிரச்சினையில் விளைந்த ஆஸ்டிரியா, பிரஷ்யா மோதல் அப்பொழுதிருந்தே ஆரம்பமாகி விட்டது என்று கூறலாம். பல நாடுகளின் தன்மைகளுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப சுயநலக் கருத்துகள் உடன்படிக்கை நிபந்தனைகளில் காணப்படுவதை மறுக்க முடியாது. இருப்பினும் எல்லா ஐரோப்பிய நாடுகளும் நெப்போலியனது ஆக்கிரமிப்பி லிருந்து விமோசனம் பெற்றிருந்ததால், அந்த ஆக்கிரமிப்பின் விளைவுகளை ஒரு சிறிதாவது குறைத்து 1792-க்கு முன்பிருந்த சூழ்நிலையை ஏற்படுத்திச் சில பொதுவான கொள்கைகளைப் பெரிய வல்லரசுகள் ஒப்புக்கொள்ளும்படி நேர்ந்தது. அவை யாவன :—

(1) நெப்போலியனது ஆக்கிரமிப்பால் பட்டம் துறந்த பழைய அரசர்களுக்கே மீண்டும் அவர்களுடைய நாடுகளைத் தந்து விடல். (2) நெப்போலியனை முறியடிப்பதற்கு ஒத்துழைத்த எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் நஷ்டஈடு கொடுத்தல். (3) ஐரோப்பாவில் சமநிலையைத் தோற்றுவித்தல். மேற்கூறிய இந்த மூன்று கொள்கைகளின் அடிப்படையில்தான் நிபந்தனைகள் உடன்படிக்கையில் இடம்பெற்றன. முதல் கொள்கையின்படி ஃபிரான்ஸ் நாடு போர்போர்ன் வம்சாவளியைச் சேர்ந்த பதினெட்டாம் லூயிக்கே மீண்டும் அளிக்கப்பெற்றது. ஆனால், அந்த நாட்டின் எல்லைகள் மிகவும் குறுக்கப்பெற்றன. அவ்வெல்லைகள் 1792-ல் இருந்ததைப் போன்றே இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பெற்றது. ஃபிரான்ஸ் நஷ்டஈடாகச் சுமார் 700,000,000 பிராங்குகளைத் தரச் சம்மதித்தது. ஸ்பெயினின் அரச பதவி மீண்டும் போர்போர்ன் அரச பரம்பரையினருக்கே அளிக்கப்பெற்றது. அதைப் போலவே பழைய அரசனுக்கே போர்ச்சுகல்லும் தரப்பெற்றது. ஜெர்மனியில் உள்ள சுமாரான நாடுகளெல்லாம். அந்தந்த நாட்டு அரசர்களிடம் தரப்பெற்றன. ஆனால், மிகச் சிறிய நாடுகளை யெல்லாம் ஒன்றும் கவனிக்கவே இல்லை. அவைகளெல்லாம் ஆஸ்டிரியாவிற்குப் பெரிய தலைவலியைக் கொடுப்பதாக இருந்த தால் நெப்போலியன் ஏற்படுத்திய 36 நாடுகளைக் கொண்ட ரைன் கூட்டரசாங்கத்தைக் கலைக்காது அப்படியே வைத்துக் கொள்வ தென்று முடிவு செய்யப்பெற்றது. இந்தப் பிரச்சினையில் பெரும் அக்கரை கொண்ட ஆஸ்டிரியாவும் பிரஷ்யாவும் இந்த முடிவை ஒப்புக்கொண்டன. ரைன் கூட்டரசாங்கத்தைக் கலைக்காது

அப்படியே வைத்துக்கொண்டதால்தான் ஓரளவிற்குப் பிஸ்மார்க் ஜெர்மனியை ஐக்கியப்படுத்த முடிந்தது என்று கூறலாம். வட இத்தாலியில் உள்ள பல சிறிய நாடுகளான பியட்மாண்ட், டஸ்கனி, பார்மா, மொடனா ஆகியவை அந்தந்த நாட்டு அரச பரம்பரையினரிடமே ஒப்புவிக்கப்பெற்றன. போப்பின் நாடுகளும் அவரிடமே ஒப்புவிக்கப்பெற்றன.

நெப்போலியனை முறியடிப்பதற்காகப் பல ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து செயலாற்றின. அதனால், அந்த நாடுகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்ய வேண்டுமென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பெற்றது. இக் கொள்கையின்படி வல்லரசுகள் தங்களது விருப்பம் போன்று நடந்துகொண்டன. அதனால் பெரிய குழப்பம் ஏற்பட்டுவிட்டது. சான்ரூக, ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்திலிருந்து நெதர்லாந்து பகுதி விடுதலை அடைந்த போதிலும், அங்குள்ள பெல்ஜியம் ஹாலந்துடன் இணைக்கப் பெற்றது. ஹாலந்து மக்கள் முன்னேற்றவாதிகளும், பிராடஸ் டண்டுச் சமயத்தைச் சார்ந்தவர்களுமாவர். இவர்களிடையே ஒற்றுமையும் நட்பும் ஏற்படுவதென்பது முடியாத காரியமாகும். இதைத் தெரிந்திருந்தும் இவ்விதமான ஒரு ஏற்பாட்டை வல்லரசுகள் உருவாக்கின. இதனால் தொடர்ந்து பெரிய கிளர்ச்சி அங்கு ஏற்பட்டது. பெல்ஜியம் புரட்சி செய்யவும் முற்பட்டது. 1830-ல் அது தனிச் சுதந்தர நாடாகப் பிரகடனம் செய்து கொண்டது. இதைப் போன்றே, டென்மார்க்கிடமிருந்து நார்வே பகுதியைப் பிரித்து ஸ்வீடன் நாட்டிடம் ஒப்படைத்தன. நார்வீஜிய மக்களும், ஸ்வீடிஷ் மக்களும் இதனால் அமைதியை இழந்தனர். ஸ்வீடன் நாட்டிலிருந்து பின்லாந்து பிரிக்கப்பெற்று ரஷ்யாவின் ஆதிக்கத்தினுள் விடப்பெற்றது. அதனால், பின்லாந்து மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. 1905-ல் அவர்கள் தனி நாடாகப் பிரகடனம் செய்ய கிளர்ச்சி செய்தனர். பெரிய வல்லரசுகளுக்கு இவ்விதமாக எல்லைகளைப் பற்றியும், அந்தந்த நாட்டு மக்களுடைய பொருளாதார உரிமைகளையும், சமயக் கொள்கைகளையும் மதிக்காது ஏற்பாடு செய்ததால், அரை நூற்றாண்டிற்குப் பிறகு அடங்கி யிருந்த பல நாடுகளில் தேசிய உணர்ச்சி ஏற்பட்டுப் பெரிய கிளர்ச்சிகளும் போராட்டங்களும் ஏற்பட்டன. ஆஸ்டிரியாவிற்கு ஈடு செய்யும் வகையில் லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகள் தரப்பெற்றன. பிரிட்டனுக்குப் பல கடற்கரைப் பகுதிகளும் தீவுகளும் ஈடாகத் தரப்பெற்றன. அதன்படி மொரிஷியஸ், மால்டா, ஐயோனியன் தீவுகள், ஃபிரெஞ்சு, ஸ்பானிய மேற்கு இந்தியத் தீவுகள் கியானா, கேப் காலனி, சிலோன் ஆகிய இடங் களைப் பிரிட்டன் வைத்துக்கொண்டது.

மூன்றுவது கொள்கையான, ஐரோப்பாவில் சமநிலை ஏற்படுத்துவதற்காக, முதலில் ஃபிரெஞ்சு நாட்டு எல்லைகளைக் கண்காணிப்பதற்காகவும் இனிமேல் எந்த ஃபிரெஞ்சு மன்னனும் நெப்போலியனைப் போன்று ஐரோப்பாவில் படையெடுத்துச் சீர்குலைவு ஏற்படுத்தாதிருக்கவும், பல சிறிய சுதந்தர நாடுகளைப் ஃபிரான்ஸ் நாட்டைச் சுற்றிலும் அமைத்தனர். தெற்கில் பியட்மாண்டும், சுவிட்சர்லாந்தும், கிழக்கே சுற்றிலும் ஜெர்மன் நாடுகளும் பெல்ஜியம், ஹாலந்தும் ஃபிரான்சின் எதிர்கால ஆக்கிரமிப்புகளைத் தடுக்க ஏற்படுத்தப்பெற்றன. தவிர, ஒவ்வொரு வல்லரசிற்கும் பல தடுப்புகள் அமைக்கப்பெற்றன. இவ்விதமாகச் சமநிலைக் கொள்கையை அவர்கள் உருவாக்கினர்.

வியன்னா மாநாட்டின் முடிவுகளின்படி ஐரோப்பாவில் ஐம்பது ஆண்டுகள் வரையிலும் அமைதி நிலவியிருந்தது. அதுவே அந்த மாநாட்டின் அரும்பெரும் சாதனையாகும். பல குற்றங் குறைகள் இருப்பினுங்கூட இந்த மாநாட்டின் நோக்கம் நல்லதாக இருந்ததால் ஏற்பாடுகள் எல்லாம் விரைவில் செயலாற்றப்பெற்றன. இந்த மாநாடு கீழைச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கான எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்பது வேண்டாத ஒரு குற்றச்சாட்டாகும். ஏனெனில், அந்தச் சிக்கலை அவர்கள் எதிர் பார்க்கவும் இல்லை; துருக்கி அவ்வளவு விரைவில் "ஐரோப்பாவின் நோயாளி" ஆகும் என்று எதிர்பார்க்கவுமில்லை.

இந்த மாநாட்டின் தொடர்ச்சியாகப் புனிதக் கூட்டணி (Holy Alliance) ஒன்றை ஏற்படுத்துவதற்கு ரஷ்ய அரசன் முதலாம் அலெக்சாந்தர் பெரிதும் முயன்றார். இடைக் காலத்தில் ஐரோப் பாவின் ஒற்றுமையும், வளர்ச்சியும் கிறித்துவச் சமயத்தின் அடிப்படையில்தான் வளர்ந்தன என்ற எண்ணத் தூண்டுதலால், அலெக்சாந்தர் சமயத்தின் அடிப்படையில் கிறித்துவ நாடு களெல்லாம் ஒன்றுக இணைந்து ஐரோப்பாவில் அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்ற ஒரு கருத்தை வலியுறுத்தினர். எண்ணம் நல்லதாக இருந்தபோதிலும், அலெக்சாந்தரின் இந்தப் 'புனிதக் கூட்டணி' இயக்கத்திற்கு மற்ற ஐரோப்பிய நாடுகள் ஊக்கமளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது; பிரிட்டனின் பிரதிநிதியான கேஸல்ரே பிரபு இந்தக் கொள்கையைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளவில்லை. அலெக்சாந்தருக்கு ஏதோ மூளை கோளாறு ஏற்பட்டிருக்கிறதென்று அவர் கூறினர். "வெறும் வார்த்தைகள்" என்று மெட்டர்னிக் இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கவில்லை. ஓரளவிற்கு ரஷ்யாவின் ஆதிக்கம் ஏற்படாதிருப்பதற்குத்தான் இந்த இயக்கத்தைப் பல நாடுகள் ஆதரிக்கவில்லை என்று கருதவேண்டி யிருக்கிறது.

8. ஐரோப்பிய ஒருமைப்பாடு

(1815-1822)

(Concert of Europe)

ஐரோப்பாவில் உள்ள நாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு ஏற்பட வேண்டிய அவசியத்தை, நெப்போலியனுடைய ஆக்கிர மிப்புப் போர்களுக்குப் பிறகு வல்லரசுகள் உணர்ந்தன. ஒருமைப்பாடு இந்த நாடுகளுக்கிடையே காணப்பட்டால், போர்கள் தவிர்க்கப்பெற்று அமைதி நிறுவ முடியும் என்று உண்மையாகவே ஐரோப்பிய அரசியல்வாதிகள் கருதினர். ஓர் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை 1791-ல் ஆஸ்டிரியாவின் முதல் அமைச்சரான கானிஸ்ட் என்பவர் வெளியிட்டார். ஆனால், 1815-ல் ஆஸ்டிரியாவின் சான்சலரான மெட்டர்னிக்கின் ஆதரவால் இத் திட்டம் உருவாக்கப்பெற்றது. இத் திட்டம் வெற்றியுறப் பிரிட்டன், ஆஸ்டிரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளும் "நான்கு நாடுகளின் உடன்படிக்கை" ஒன்றைச் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கையின் முக்கிய நோக்கம், ஃபிரான்சுடன் ஏற்பாடாகியிருந்த உடன்படிக்கை நிபந்தனைகளைச் சரிவர செயலாற்றவும், ஐரோப்பாவில் அமைதியை நிறுவு வதற்கும் எனக் கூறப்பட்டது. தவிர, இந்த நான்கு நாடுகளிடையே நட்பு நீடித்து இயங்கவேண்டும் என்பதும் ஒரு நோக்கமாகும். இந்த ஒருமைப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் அடிக்கடி இவ்வல்லரசுகள் மாநாடுகளைக் கூட்டித் தங்களுடைய நட்புறவு களையும், மற்றும் பல பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளவும், ஐரோப்பாவில் அமைதியை நிலைநிறுத்தவும் முயற்சி செய்ய வேண்டுமென்று முடிவு செய்தன. இதன்படி நான்கு நாடுகளின் உடன்படிக்கைக்குப் பிறகு பல மாநாடுகள் வெவ்வேறு இடங் களில் கூட்டப்பெற்றன. இந்த மாநாடுகளில் எல்லாம் பெரும் பங்கு எடுத்துக் கொண்டவர் மெட்டர்னிக் என்பவராவர். 1818-ல் எயிக்ஸ்-லா-சாப்பேல் (Aix-La-Chapelle) என்ற நகரத்திலும்,

1820-ல் திரோபா (Truppau)விலும், 1821-ல் லெய்பாச் (Laibach) என்ற நகரிலும், 1822-ல் வெரோனு(Verona)விலும் மாநாடுகள் கூட்டப்பட்டன. 1823-க்குப் பிறகு இம் மாநாடுகள் கூட்டப்பட வில்லை. அத்துடன் நான்கு நாடுகளின் உடன்படிக்கையும் முறிந்து விட்டது.

1. எயிக்ஸ்-லா-சாப்பேல் மாநாடு

(Congress of Aix-La-Chapelle 1818)

நான்கு ஐரோப்பிய வல்லரசுகளும் பெரும் முயற்சி செய்து எயிக்ஸ்-லா-சாப்பேல் (1818) ஒரு மாநாட்டைக் கூட்டினர். 'ஐரோப்பியச் சீரமைப்பு'ச் செம்மையுற செயலாற்றப்பட்டதா என்பதைப் பரிசீலனை செய்ய அவர்கள் விரும்பினர். இந்த நிலையில் ஃபிரான்சின்மீது விதிக்கப்பெற்ற பெரும் நஷ்டஈட்டுத் தொகையை அந்த நாடு தந்துவிட்டதுமின்றி, மிகவும் அமைதியான முறையில் முடியாட்சியையும் மேற்கொண்டது. அதனால் ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் ஃபிரான்சும் பங்குபெற வேண்டும் என்று மற்ற வல்லரசுகள் விருப்பம் தெரிவித்தன. மேலும் வியன்னு காங்கிரசில், விதிக்கப்பெற்ற நிபந்தனைகளையெல்லாம் ஃபிரான்ஸ் நல்லபடியாக மேற்கொண்டதால், நேச நாடுகளின் படைகளை அங்கிருந்து வெளியேற்ற முடிவுசெய்தனர். பெரும் பான்மையான பிரச்சினைகளில் சுமுகமான முடிவே ஏற்பட்டது, இந்தக் காங்கிரசின் பெரும் சாதனையாகும். வேறு எந்தக் காங்கிர சிலும் இவ்வளவு நட்புரிமையுடன் சிக்கல்களைத் தீர்த்து வைத்த தாகத் தெரியவில்லை. சில மேல் நோக்கான பிரச்சினைகளில்தான் வல்லரசுகள் தங்கள் சம்மதங்களைத் தெரிவித்தனவே தவிர, வேறு இராச்சியப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசும்பொழுது அவர்களுடைய சுயநலங்களே முக்கியமாகக் கருதப்பெற்றன. நான்கு வல்லரசு களின் கூட்டணியில் ஃபிரான்சைச் சேர்த்துக் கொள்வதென்று முடிவு செய்தனர். ஆனால், எந்த நிபந்தனைகளின்மீது சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதில் ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. ரஷ்ய அரசன் முதலாம் அலெக்சாந்தர் தமது சிருஷ்டியான "புனித உடன்படிக்கை" (Holy Alliance) என்பதைத்தான் அடிப்படையாக வைத்து ஃபிரான்சைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினர். இந்தப் புனித உடன்படிக்கை ஓர் 'உதவாக்கரை' என ஏற்கனவே பிரிட்டனும் ஆஸ்டிரியாவும் புறக்கணித்திருந்தன. அதனால் அலெக்சாந்தரின் இந்த ஆலோசனையை நிராகரித்துவிட்டு ஒரு தனி உடன்படிக்கை மூலமாகவே ஃபிரான்சை நான்கு வல்லரசுகளின் கூட்டணியில்

சேர்த்துக்கொண்டன. அப்பொழுதிருந்து நான்கு வல்லரசுகளின் கூட்டணி, ஐந்து வல்லரசுகளின் கூட்டணியாக மாறியது. ஐரோப்பாவின் பெரிய நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தைச் செயலாற்ற முன் வந்தன. அப்பொழுது இந்த நாடுகள் ஒரு சர்வதேச சங்கத்தை இயற்றியதைப் போலத்தான் கருதவேண்டும். ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளில் ஏற்பட்டிருந்த சிக்கல்களெல்லாம் இந்த ஐந்து வல்லரசுகளின் கூட்டணியில் சமர்ப்பிக்கப்பெற்றன. பெரும் பான்மையான சிக்கல்களை இச் சபையே தீர்த்துவைத்தது. இதன் நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் காணும்பொழுது, மேற்கொண்டு ஐரோப்பாவில் போர்களே ஏற்படாது என்ற புதிய நம்பிக்கையும் பிறந்தது. இந்தக் காங்கிரசின் சாதனையை மிகவும் புகழ்ந்து மெட்டர்னிக் பேசினார். ஆனால், இந்த ஐந்து வல்லரசுகளின் சபை ஐரோப்பிய உள்நாடுகளின் பிரச்சினைகளிலும் தலையிட்டுச் சில புரட்சி இயக்கங்களையும், முன்னேற்றக் கருத்துகளையும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டுமென்றும், எப்பொழுதுமே ஐரோப்பிய நாடுகளில் முடியாட்சியும், பழைய அரசியல் கருத்துகளும்தான் நிலவியிருக்க வேண்டுமென்றும் விரும்பியது. இக் கொள்கையைப் பிரிட்டன் மட்டுமே ஆதரிக்கவில்லை. காலப்போக்கில் ஏற்படும் மாறுதல்களையும், முன்னேற்றக் கருத்துகளையும் தடுப்பதானது அந்தந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும் உரிமைகளையும் மதிக்காது, அவர்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகும் என்று பிரிட்டன் கருதியது. மற்ற நாடுகளிடையே போர் ஏற்படாமல் தவிர்ப்பதே, ஐந்து வல்லரசுகளின் முக்கியக் கடமையாகுமே தவிர, மற்ற நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடுவது வேண்டாததும், அனுபவமில்லாததுமாகும் என்று பிரிட்டன் கருதியது. ஆனால், ஆஸ்டிரியாவோ, ரஷ்யாவோ பிரிட்டனுடைய கொள்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன. அதனால் பிரிட்டனுக்கும், மற்ற வல்லரசுகளுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. பிரிட்டனும் முதன் முதலாக மற்ற வல்லரசுகளின் சுயநலங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றது. ரஷ்யாவின் முயற்சியால், ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை வரையறுத்தும், அந்தந்த நாட்டு மக்களின் அரசியல் இறைமையைப் பாதுகாக்கவும் ஓர் அறிக்கை விட வேண்டுமென்று வற்புறுத்தியது. ரஷ்யா விடுத்த இந்த அறிக்கையானது ஐரோப்பாவின் "பழைய நிலையை" நிலைநிறுத்துவதற்காக வெளியிடப்பட்டதால், ஆஸ்டிரியாவும், பிரஷ்யாவும் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டன. ஆனால், முற்போக்கான கொள்கைகளைக் காண்பதில் பிரிட்டன் அதிக ஆர்வமுடையதாக இருந்ததால் இதில் கையெழுத்திடவில்லை. தவிர, இந்த நாடு

களின் கொள்கையை வெளிப்படையாகக் கண்டிக்கவும் முற்பட்டது. இக் கொள்கைகள் ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் வேரூன்றியிருந்தால் இத்தாலியிலோ அல்லது ஜெர்மனியிலோ, இணைப்பு இயக்கங்களும், சுதந்தர இயக்கங் களும் தோன்றியிருக்கமாட்டா. மீண்டும் பெல்ஜியம், போலந்து ஆகிய நாடுகள் சுதந்தரம்பெற வழியே இல்லாது போயிருக்கும். ரஷ்யாவின் இந்த அறிக்கையை ஆஸ்டிரியா அங்கீகரித்தது பிரிட்டனுக்கு ஏமாற்றத்தை அளிக்கவில்லை. ஆனால், பிரிட்டனுடைய கடல் வாணிபத்தைக் கட்டுப் படுத்தும் நோக்கத்துடன், ரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் ஒன்று சேர்ந்து தென் அமெரிக்காவிலுள்ள ஸ்பெயினுக்குச் சொந்தமான காலனிகளுக்கும் பிரிட்டனுக்கும் எவ்விதமான தொடர்பும் இருக்கக்கூடாதென்றும், பிரிட்டனுடைய உதவியின் பேரில்தான் ஸ்பெயினுக்குச் சொந்தமான காலனிகளில் விடுதலை இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன என்று பிரிட்டன்மீது குற்றம் சாட்டினர். அதனால், ஸ்பெயினுக்கு உதவி செய்ய ரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் முன் வந்தன. ஸ்பெயினுடைய கப்பல்களைக் கடற்கொள்ளைக் காரர்கள் வழி மறித்து இன்னல்களை விளைவிக்கிறார்கள் என்ற பிரச்சினை கிளம்பியபொழுது, இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரஷ்யா வற்புறுத்தியது. இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு ரஷ்யா மத்தியதரைக் கடலில் அதனுடைய கடலாதிக்கத்தை வலிமையாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணி யதைப் பிரிட்டன் அறிந்து, இந்த அறிக்கையை ஆதரிக்கவில்லை.

இவற்றைத் தவிர, மற்றும் பல வழக்குகளை ஐரோப்பிய நாடுகள், இந்த வல்லரசுகள் சபை முன்பு கொண்டுவந்தன. நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகளிடையே ஏற்பட்ட இணைப்பைச் சரிவர செயலாற்றவில்லை என்று ஸ்வீடிஷ் மன்னன் சார்லஸ் ஜான் பெர்னடோட்டிடம் விளக்கம் கோரினர். மனேக்கா மன்னன் ஆட்சியைச் சரியாக நடத்த வேண்டுமென்று அந்த மன்னனுக்கு உத்தரவிட்டனர். ஆஸ்டிரியா, ரஷ்யா ஆகிய நாடு களிலுள்ள யூத மக்களின் சீரமைப்புப் பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டன. ஆகவே, பல ஆக்க வேலைகளில் இந்த காங்கிரஸ் அக்கறை எடுத்துக்கொண்டது என்பதை மறுக்க முடியாது.

2. திரோப்பா காங்கிரஸ்

(The Congress of Troppau 1820)

இந்தக் காங்கிரஸ் கூட்டப்படுவதற்குள் வல்லரசுகளுக் கிடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்துவிட்டன. 1820-ல்

ஸ்பெயின் நாட்டு அரசனுன ஏழாம் பெர்டினுன்டை எதிர்த்து ஸ்பெயினில் ஒரு புரட்சி ஆரம்பிக்கப்பெற்றது. அப் புரட்சி யாளர்கள் ஸ்பெயினில் வரையறுக்கப்பெற்ற முடியாட்சி வேண்டு மென்றும் 1812-ல் ஒப்புக்கொள்ளபெற்ற அரசியல் அமைப்பு வேண்டுமென்றும் பெரிய கிளர்ச்சி செய்தனர். முடியாட்சியின் பாதுகாவலனுகக் கருதிய ரஷ்ய அரசன் முதலாம் அலெக்சாந்தர் இவ்விதமான புரட்சி இயக்கம் அடக்கப்பட வேண்டுமென்றும் அதனுல் ஐந்து வல்லரசுகள் உடனடியாக ஒரு நேசப்படையை அனுப்ப வேண்டுமென்றும் விரும்பினர். இந்த விவகாரம் ஸ்பெயின் நாட்டு மக்களுப்பற்றியது. அதனுல் இதை உள்நாட்டு விவகார மாகவே கருத வேண்டுமென்றும், வெளிநாடுகளின் தலையீடு அங்கு ஏற்படக்கூடாதென்றும் பிரிட்டனின் பிரதிநிதி கேஸல்ரே அறிவித் தார். மேலும், ஐந்து வல்லரசுகளின் கூட்டணி உலகில் உள்ள நாடுகளின் அரசாங்கத்தைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட தல்ல. அல்லது அந்த நாடுகளில் ஏற்படும் உள்நாட்டுப் பிரச்சிகை களில் தலையிடுவதற்காக அமைக்கப்பட்டதுமல்ல. இவையெல்லாம் ஐந்து வல்லரசுகளின் உடன்படிக்கையில் இடம் பெருதவை யாகும். அதனுல் ரஷ்யாவின் புரட்சியை அடக்கும் ஆர்வத்திற்குப் பிரிட்டன் ஆதரவளிக்கவில்லை. இந்தக் கொள்கையை ஆஸ்டிரியச் சான்சலரான மெட்டர்னிக் ஆதரித்ததுதான் ஆச்சரியமாகும். ஸ்பெயின் புரட்சியில் ரஷ்யா தலையிடுவதை மெட்டர்னிக் ஆதரித்துவிட்டால் ரஷ்யாவின் படைகள் ஸ்பெயினில் குவிந்து விடும். அதனுல் மேற்கு ஐரோப்பாவில் ரஷ்யாவின் ஆதிக்கம் நிலை பெற்றுவிடலாம் என்று மெட்டர்னிக் சந்தேகித்தார். அதற்காகத் தான் ஸ்பெயினைப் பொறுத்தவரையில், அவரது பிற்போக்கான கொள்கையைச் சிறிது நிறுத்தி வைத்தார். மெட்டர்னிக்கின் திடீர் கொள்கை மாற்றம் அலெக்சாந்தருக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. இருப்பினும் இப் புரட்சி ஸ்பெயினுடன் நிற்பதாகத் தெரியவில்லை. வரையறுக்கப்பெற்ற முடியாட்சியும் அரசியல் அமைப்பும் வேண்டுமென்று போர்ச்சுகல், நேப்பிள்ஸ், பியட் மாண்ட் ஆகிய பகுதிகளிலும் புரட்சி இயக்கங்கள் பரவின. ஸ்பெயினில் ஏற்றுக்கொண்ட 1812ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புப் போன்று அந்த நாடுகளிலும் வேண்டுமென்று புரட்சி நடந்தது. இதனுல் இத்தாலியில் நிலைநாட்டப்பட்டிருந்த ஆஸ்டிரிய ஆதிக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டது. உடனே அவர் பழையபடி ரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டு ஐந்து வல்லரசுகளின் காங்கிரஸ் ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று முயற்சி செய்ததின் விளைவாகவே திரோப்பா காங்கிரஸ் 1820-ல் கூட்டப்பட்டது. ஆஸ்டிரியாவில் உள்ள திரோப்பா நகரில் கூட்டப்பட்ட இந்த மாநாட்டின் முதல் தீர்மானம் 1815-க்குப் பிறகு எந்தெந்த நாட்டில்

புரட்சி செய்து அந் நாட்டின் அங்கீகரிக்கப்பெற்ற அரசாங்கங்களை மாற்றி அமைத்தனரோ அந்த நாடுகளெல்லாம் ஐந்து ஐரோப்பிய வல்லரசுகளின் நட்பை இழந்துவிட்டனவாகும் என்று கொண்டு வரப்பட்டது. மற்ற நாடுகளில் இவ்விதமான புரட்சி ஏற்படும் காலங்களில் வல்லரசுகள் அமைதியான வழிகளிலோ அல்லது படை பலத்தினாலோ, அந்தப் புரட்சி இயக்கங்களை அடக்குவதோடு மட்டுமின்றி, அந் நாடுகளை எப்படியும் ஐரோப்பிய நேச நாடுகளுடன் சேர்ந்துகொள்ளச் செய்யும் முயற்சிகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் எவ்விதமான பொருளும் இல்லை என்று கேஸல்ரே அறிவித்து, இந்த அறிக்கையில் பிரிட்டன் கையெழுத்திட முடியாது என்று கூறினார். அதனால் திரோப்பா காங்கிரஸ் கலைக்கப்பட்டது.

ஆனால் அடுத்த ஆண்டிலேயே லெய்பாச் (Laibach) என்ற இடத்தில் 1821-ல் மற்றொரு காங்கிரஸ் கூட்டப்பெற்றது. இந்தக் காங்கிரசால் ஆஸ்டிரியாவிற்கு அனுகூலமாக ஒரு தீர்மானம் பிரிட்டனின் சம்மதமின்றியே நிறைவேற்றப்பட்டு அதன்படி நேப்பிள்சிலும், பியட்மாண்டிலும் மாற்றி அமைக்கப்பட்ட அரசாங்கங்களைக் கலைத்து, அந்த நாடுகளைப் பழைய மன்னர்களிடமே ஒப்புவிப்பது என்று அறிவித்தனர். 1821 மார்ச் மாதத்தில் சிறிதும் தாமதம் செய்யாமல், ஆஸ்டிரியப் படைகள் பியட்மாண்டிலும், நேப்பிள்சிலும் பிரவேசித்து 1812ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி நியமிக்கப்பெற்ற புதிய அரசாங்கங்களைச் சீர்குலைத்தன. இந்தப் பிற்போக்கான நடவடிக்கைகளைப் பிரிட்டன் வன்மையாகக் கண்டித்தது.

3. வெரோனா காங்கிரஸ்

(Verona Congress 1822)

வெரோனா காங்கிரஸ் 1822-ல் கூட்டப்படுவதற்கு முன்னரே கேஸல்ரே என்ற பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சருக்குப் பதிலாக ஜார்ஜ் கேனிங் என்பவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். ஐரோப்பிய ஒருமைப்பாடு திட்டத்தில் கேஸல்ரேவுக்கு உள்ள ஆர்வமும் நம்பிக்கையும் ஜார்ஜ் கேனிங்குக்கு இல்லை என்று கூறப்பட்டது. இச் சமயத்தில் துருக்கியின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிரீஸில் (Greece) ஒரு புரட்சி ஏற்பட்டது. ஸ்பெயினில் நிலைமை மிகவும் சீர்கேடுற்றிருந்தது. இந்த வாய்ப்பை ஃபிரான்ஸ் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று விரும்பியது. இச் சூழ்நிலையில்தான் வெரோனா காங்கிரஸ் கூட்டப்பட்டது. ஐரோப்பிய

ஒருமைப்பாட்டுத் திட்டத்தின் சார்பாகக் கூட்டப்பெற்ற நாடுகளுள் பிரிட்டனும் கலந்துகொண்டது. பிரிட்டன் கலந்துகொண்ட மாநாடுகளில் இதுவே கடைசியாகும். துருக்கியை எதிர்த்துக் கிரேக்கர்கள் புரட்சி செய்ததை ரஷ்ய அரசர் ஆதரித்தார். கிரேக்கர்களும் ரஷ்யர்களும் ஒரே கிறித்துவ வழிபாட்டைப் பின் பற்றுகிறவர்களாதலின் அச் சமயத்தினரைப் பாதுகாக்கும் பொறுப்பு ரஷ்யாவைச் சார்ந்தது என்று அலெக்சாந்தர் அறிக்கை விடுத்தார். எப்படி ஆஸ்டிரியா அதன் ஆதிக்கம் இத்தாலியில் மறைந்துவிடக்கூடாது என்பதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டி, ஓரளவிற்குச் சம்மதம் பெற்றுப் பியட்மாண்டிலும், நேப்பிள்சிலும் புரட்சி இயக்கத்தை அடக்கியதோ, அது போன்றே துருக்கியின் ஏகாதிபத்தியம் கிரீஸில் இருக்கக்கூடாது என்பதற்காக அலெக்சாந்தர் ஒரு மாநாடு கூட்டினார். ஆனால், துருக்கியப் பேரரசு அவ்வளவு விரைவில் சீர்குலைந்துவிடக் கூடாதென்று பிரிட்டனும், ஆஸ்டிரியாவும் விரும்பின. எவ்விதத்திலும் சீர்குலைந்து வரும் துருக்கியின் பகுதிகள் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குள் மாறி விடக் கூடாதென்று பிரிட்டனும், ஆஸ்டிரியாவும் எச்சரிக்கை யாகவே இருக்கவேண்டியநிலை ஏற்பட்டது. ரஷ்யாவின் ஆர்வத்தைத் தடுப்பது மிகவும் கடினமாகிவிட்டது. மெட்டர்னிக் மிகத் திறமையாக இந்த மாநாட்டில் ஸ்பெயின் பிரச்சினைகளுக்கு முதலிடம் அளித்து அதிக நேரத்தை இந்தப் பிரச்சினைக்கே செலவிட்டார். அதன் பயனாக ஸ்பெயின் பிரச்சினைகளில் ஃபிரான்ஸ் தலையிடுவதற்கான அனுமதி தயக்கத்துடனேயே தரப் பெற்றது. இந்த அனுமதியைப் பிரிட்டன் ஆதரிக்க மறுத்தது. அதனால் பிரிட்டன் இந்தக் காங்கிரசிலிருந்து வெளியேறியது. அத்துடன் ஐந்து வல்லரசுகளின் ஒருமைப்பாட்டுத் திட்டமும், உடன்படிக்கையும் முறிந்தனவென்று கூறலாம். 1823-ல் ஃபிரான்சின் தலையீட்டின் பேரில் ஸ்பெயின் நாட்டு அரசனை பெர்டினண்ட் பட்டத்திற்கு மீண்டும் கொண்டு வரப்பட்டார். இச் சமயத்தில் தான் ஸ்பெயினுக்குச் சொந்தமான தென்அமெரிக்கக் காலனிகளில் விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. அந்தக் காலனி களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பு வேண்டும் என்பதற்காகப் பெர்டினண்ட் ஓர் ஐரோப் பியக் காங்கிரசைக் கூட்ட முயன்றார். ஆனால் கேனிங், பிரிட்டனின் சார்பாக ஒரு பிரதிநிதியையும் அனுப்பப் போவதில்லை என்று கூறினார். இதன் விளைவாகத்தான், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியான மன்ரோ என்பவர் இனிமேல் ஐரோப்பியர்களது தலையீடு அமெரிக்கக் கண்டங்களில் ஏற்படக்கூடாது என்று திட்ட வட்டமாகக் கூறினார். அது மட்டுமின்றி ஸ்பெயினிலிருந்து விடுதலைப் பெற்ற காலனிகளைச் சுதந்தர நாடுகளாக அங்கீகாரம்

செய்தார். இந்த மன்ரோ அறிக்கையாவது, "புதிய உலகம் பழைய உலகத்திற்கு அளித்திருக்கும் சவாலாகும்" என்று ஒரு கருத்து நிலவியிருந்தது. இந்த அறிக்கை வெளியான பிறகு ஐரோப்பிய நாடுகளின் தலையீடு அமெரிக்காவில் அதிகமாகக் குறைந்துவிட்டது.

1824-ல் ரஷ்ய அரசன் முதலாம் அலெக்சாந்தர் துருக்கியப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கே ஒரு மாநாட்டைச் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் கூட்டினார். இந்த மாநாட்டிற்கும், பிரிட்டன் ஒரு பிரதிநிதியையும் அனுப்பவில்லை. இந்த மாநாட்டில் தகராறுகள் முற்றவே எவ்விதமான முடிவும் ஏற்படவில்லை. இத்துடன் ஐந்து வல்லரசுகளின் ஆதிக்கம் ஐரோப்பாவில் குறைந்தது. உண்மையில் ஐரோப்பாவின் ஒருமைப்பாடும் சீர்குலைந்தது. "அவரவர்கள் நாடு அவரவர்களுக்கே; எல்லோருக்கும் கடவுள் இருக்கிறார்" என்று கேனிங் அப்பொழுது கூறினார். ஐரோப்பாவில் மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்தன. இவ்வைந்து வல்லரசுகளின் கூட்டணியில் குலைவு ஏற்பட்டாலும், அவ்வப்பொழுது ஐரோப்பாவில் ஏற்படுகின்ற சில சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் "காங்கிரஸ்" மாநாடுகள் கூட்டப்பெற்றன. ஆனால் அவைதான் ஐரோப்பாவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவேண்டும்; அமைதியை நிலைநிறுத்தவேண்டும் என்ற எண்ணங்கள் மறைந்துவிட்டன. இதற்கு முக்கிய காரணம் வல்லரசுகளுக்கிடையே முதலில் ஒருமைப்பாடு இல்லாமையே காரணமாகும். இவ்வல்லரசுகள் தங்களுக்குள் சந்தேகங்களை வளர்த்துக்கொண்டன. மேலும் 1815–25 வரை கூட்டப்பெற்ற பல மாநாடுகளிலும், பிரிட்டனைத் தவிர, மற்ற வல்லரசுகள் எல்லாம் பிற்போக்கு எண்ணங்களைக் கொண்டிருந்தன. அந்த அடிப்படையில் மற்றச் சிறிய நாடுகள் அவைகளுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று வல்லரசுகள் தவருக மதிப்பிட்டன. அந்த மாநாடுகளில் எல்லாம் அதிக அக்கறை கொண்டவர் மெட்டர்னிக்கேயாவர். அவருடைய ஆர்வமும் முயற்சியுமே, ஐரோப்பாவில் பல மாநாடுகள் கூட்டப்படுவதற்குக் காரணமாக இருந்தன. ரஷ்ய அரசரான முதலாம் அலெக்சாந்தரை மையமாக வைத்துக்கொண்டுதான் இந்த மாநாட்டு நடவடிக்கைகள் நிகழ்ந்தன என்று கூறினால் மிகையாகாது. ஒரு தனி மனிதனை நம்பி மற்ற வல்லரசுகள் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை வெற்றியுறச் செயலாற்றும் என்பதும் நடைமுறையில் சாத்தியமாகாது. கேஸல்ரே 1822-ல் தற்கொலை செய்துகொண்டார். அலெக்சாந்தர் 1825-ல் இறந்துவிட்டார். 1830-ல் லூயி பிலிப் ஃபிரெஞ்சு அரசனாக முடிசூட்டப் பெற்றார். 1848 வரை ஆஸ்டிரியாவின் சான்சலராக இருந்து பிறகு வீழ்ச்சியுற்ற

மெட்டர்னிக்கை மற்ற வல்லரசுகள் கைவிட்டுவிட்டன. இருப் பினும் சர்வதேச சங்கம் முதல் உலகப் போர் முடிந்த பிறகு ஏற்படுவதற்கு என்ன காரணங்கள் இருந்தனவோ, அதே காரணங் கள்தான் ஐரோப்பிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கும், பல மாநாடுகளைக் கூட்டுவதற்கும் காரணமாக இருந்தன. அமைப்பில் சர்வதேச சங்கம் முறையானதும், திட்டவட்டமானதாகவும் இருந்தது. உலக நாடுகளின் பாதுகாப்புக்காகவும் அமைதிக் காகவும் அரசியல், நட்பு, பொருளாதார வளர்ச்சி என்ற பல கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பெற்றன. ஆனால் அவ்வப்போது கூட்டப்பெற்ற இந்தக் காங்கிரசுகள் ஐந்து வல்லரசு களின் ஆதிக்கம் பெற்றவையாகவும், அமைதியை நிலைநாட்டுவது என்ற கொள்கையைத் தவிர, மற்ற எல்லாவற்றிலும் பிற்போக்கான எண்ணங்களையே பின்பற்றின. அதனால் இந்தக் காங்கிரசுகள் எல்லாம் ஒரு குறுகிய கால அளவிற்குத்தான் (1815–1825) அதாவது பத்து ஆண்டுகளுக்குமேல் அவற்றின் செல்வாக்கை நீடிக்க முடியவில்லை. சர்வதேச சங்கத்தின் வளர்ச்சியும் தடைபட்டிருந்தாலும் வேறு பெயரில் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அது மீண்டும் நிலைபெற்றுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

9. தேசிய ஜனநாயக இயக்கங்கள்

(1815–1850)

ஃபிரெஞ்சுப் புரட்சி ஐரோப்பாவில் தேசிய ஜனநாயக இயக்கங்கள் தோன்ற வழி வகுத்தது. மக்களுடைய அரசியல் வாழ்வு சுதந்தரத்தையும் உரிமைகளையும் அடிப்படையாகக்கொண்டு மலர ஆரம்பித்தது. இந்த உணர்ச்சிகளை ஐரோப்பிய மக்களிடமிருந்து பிரித்து வைத்துவிட முடியுமென்று ஆஸ்டிரியா, ரஷ்யா, பிரஷ்யா ஆகிய வல்லரசுகள் எவ்வளவு முயன்றும் இந்தக் காரியத்தை அவற்றுல் சாதிக்க முடியவில்லை. ஐரோப்பாவில் வல்லரசுகளின் ஆதிக்கம் நிலைநிறுத்தப்பட்டால், ஒரு சமயம் சிறு நாடுகள் பயந்து அவ்வப்போது காங்கிரசுகளில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களை மதித்து நடக்கும் என்ற நம்பிக்கை படிப்படியாகக் குறைந்துவிட்டது. அதனுல் வியன்னு காங்கிரஸில் தோற்றுவிக்கப்பட்ட ஐரோப்பிய எல்லைக் கோடுகள் அர்த்த மற்றவையாகிவிட்டன. விருப்பம் போன்று சீரமைக்கப்பட்ட பல சிறு நாடுகளின் முடியாட்சி வரையறுக்கப்பெற்றது. ஆங்காங்கே அரசியல் அமைப்புகள் வேண்டுமென்று புரட்சிப் புயலும், மக்களின் கூக்குரலும் கிளம்பின. பல நாடுகளின் தேசிய உணர்ச்சி நீண்ட காலமாகவே அந்நிய ஆட்சியின் ஆதிக்கத்தில் சிறைப் பட்டிருந்தது. இப்பொழுது விடுதலை ஆர்வம் மக்களிடையே தோன்றிவிட்டது. முதலில் துருக்கியின் ஆட்சியை எதிர்த்து, ஸெர்பியாவும் (Serbia), கிரீசும் (Greece) புரட்சி செய்தன. 1817-ல் ஓரளவிற்கு ஸெர்பியா சுயாட்சியும் பெற்றது. ஆனுல் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஸெர்பியாவின் ஆட்சிப் பொறுப்பு ரஷ்யா விடம் தரப்பெற்றது. துருக்கியின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிரீஸ் விடுதலைப் போராட்டம் நடத்தியது. கிரீஸ் நாடு விடுதலை பெற வேண்டுமென்று பல ஐரோப்பிய நாடுகள் உண்மை யிலேயே விரும்பின. இதைத் தொடர்ந்து, பல சிக்கல் களும் கிளம்பின. கிரீஸ் சுதந்தரம் பெறுவதைவிட துருக்கி

யின் பேரரசு சீர்குலைவதைத்தான் பெரிதும் விரும்பினர். முதலாம் ஜார் நிக்கோலஸ் 1825-ல் கிரீஸ் நாட்டிற்கு எவ்வித உதவியையும் அவர் அளிக்க முன்வந்தார். மற்ற ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிரீஸ் சுதந்தரத்துடன் வாழவேண்டுமென்ற ஆசை இருப்பினும், இந்தப் பணியை ரஷ்யா மேற்கொண்டதால், மற்ற நாடுகள் அதிகமாக விரும்பவில்லை. அதனால் துருக்கியின் பேரரசு நீடித்திருப்பதில், ஆஸ்டிரியா விருப்பம் கொண்டது. ஆனால் பிரிட்டனும், ஃபிரான்சும் தொண்டர்ப் படைகளைக் கிரீசுக்கு அனுப்பின. இவ்வளவு ஆர்வமுடையவர்களாக இருந்தும், ரஷ்யாவுடன் இணைந்து கிரேக்க விடுதலைப் போராட்டத்தை நடத்திவைக்க வேண்டுமென்று மற்ற வல்லரசுகள் கருதவில்லை. மிகவும் எச்சரிக்கையான ஒத்துழைப்பை மட்டும் அளித்தன. 1827-ல் அந்த நாடுகள் துருக்கியுடன் ஒரு நடுநிலைமை ஏற்பாட்டையும்கூடச் செய்து வைக்க முன்வந்தன. ஆனால், இந்த ஏற்பாட்டை அறியாத பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி நவேரினை (Navarino) என்ற இடத்தில் துருக்கி–எகிப்தியக் கப்பற்படையைச் சிதறடித்துவிட்டார். அப்பொழுதிருந்த பிரிட்டிஷ் பிரதம அமைச்சர் வெலிங்டன் கோமகன் துருக்கியிடம் இந்த நிகழ்ச்சிக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டார். இதைப் போன்றே மோரியாவை ஃபிரெஞ்சுத் துருப்புகள் பிடித்துக்கொண்டன. 1828-ல் ரஷ்யா துருக்கிமீது போர்ப் பிரகடனம் செய்தது. 1829-ல் இரு நாடுகளுக்கிடையே ஏட்ரயநோபிள் (Adrionople) என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படிக் கிரீஸ் சுதந்தரம் பெற்றது.

பெல்ஜியம்

1815-க்குப் பிறகு பெல்ஜியமும் ஹாலந்தும் ஒன்றுக இணைக்கப்பெற்றன. பெல்ஜியம் மக்களும், ஹாலந்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வார்கள் என்று கருதப்பட்டது. ஆனால், அதற்கு மாறுக, இவ்விரு பகுதியினருக்கும் அதிக வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. ஆதலால் மனக்கசப்புத்தான் அதிகமானது. இந்த இணைப்புப் புதிய வேறுபாடுகளை உருவாக்கவே, அவர்களிடையே தேசிய உணர்ச்சி அதிகமாகக் காணப் பெற்றது. அதனால் பெல்ஜியம் தனி நாடாக விளங்கவேண்டுமென்ற ஆர்வம் அம் மக்களிடையே ஏற்பட்டது. இந்த ஆர்வத்தை அடக்க, டச்சு அரசாங்கம் அதிக ஆதிக்கம் செலுத்த முற்பட்டது. பெல்ஜியம் மக்களின் மத உரிமைகள் மதிக்கப்படவில்லை; அவர்களுடைய பொருளாதார உரிமைகள் போற்றப்படவில்லை என்ற பலவிதமான குறைபாடுகள் தோன்றவே, அங்கே டச்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி ஆரம்பிக்கப்பட்டது. 1830

ஆகஸ்டு மாதம் பிரஸ்ஸல்சில் லிபரல்களும், கத்தோலிக்கர்களும் ஒன்றுகூடி ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தனர். அப்பொழுது அவர்களுடைய மாகாணங்களில் சுய ஆட்சியைப் பெற்றுல் போதுமானது என்று அவர்கள் கருதினர். ஆனுல், இந்த இயக்கத்தைத் தீவிரவாதிகள் ஏற்றுக்கொண்டு முழு சுதந்தரம்தான் வேண்டுமென்று புரட்சி செய்தனர். டச்சு ஆதிக்கம் தளர்ந்தது. இந்தச் சூழ்நிலையை ஃபிரான்ஸ் அதனுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்த முயன்றது. ஆனுல், அதற்குப் பிரிட்டன் விடவில்லை. பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சரான பாமர்ஸ்டன் (Palmerston) பெல்ஜியத்தின் சுதந்தரத்தை அங்கீகரித்துத்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தினர். பிறகு 1831-ல் அது சுதந்தர நாடென்று அங்கீகரிக்கப்பெற்றது. லியோபால்ட் என்பவர் பெல்ஜியத்தின் மன்னராக முடிசூட்டப்பெற்றார். ஹாலந்து நாட்டிற்குச் சாதகமாக ரஷ்யா இருந்ததால் சிறிது காலம் ஹாலந்து பெல்ஜியத்தைச் சுதந்தர நாடாகக் கருதவில்லை. பிறகு 1839-ல் ஹாலந்தும் அதனுடைய அங்கீகாரத்தை அளித்தது. பெல்ஜியம் ஒரு நடுநிலைமை நாடாக விளங்க வேண்டுமென்று வல்லரசுகள் விரும்பின. அதனுல் பெல்ஜியத்தின்மீது எவ்விதமான ஆக்கிரமிப்பும் ஏற்படாவண்ணம் வல்லரசுகள் பாதுகாப்பு அளித்தன.

போலந்து

முதலாம் ஜார் அலெக்சாந்தர் போலந்து மக்களுக்கு ஓர் அரசியல் அமைப்பை அளித்திருந்தார். அதன்படி, ஓரளவிற்கு அந்த நாட்டு மக்கள் திருப்தி அடைந்திருந்தனர். 1825-ல் முதலாம் ஜார் நிக்கோலஸ் பட்டத்திற்கு வந்தவுடன் போலந்து மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அரசியல் அமைப்பை ரத்து செய்துவிட்டார். அதனுல் போலந்து மக்கள் நிக்கோலஸ் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். போலந்து மக்களுடைய கிளர்ச்சிக்கு நல்ல ஆதரவு கிடைக்கவில்லை. மெட்டர்னிக்கும்கூடப் போலந்து மக்களுக்கு உதவி செய்யலாம் என்று கருதினுரே தவிர, உண்மையில் அவர்களுக்கு உதவி அளிக்கவில்லை. இதற்குள் ரஷ்யத் துருப்புகள், புரட்சி செய்தவர்களை மிகவும் கடுமையாக நடத்தினர். இதன் காரணமாகப் போலந்து விடுதலை இயக்கம் பிசுபிசுத்துவிட்டது. 1830-ல் ஃபிரான்சிலும், பெல்ஜியத்திலும் நடந்த புரட்சியைப் போன்று இதுவும் இருந்ததென்ருலும் போலந்து ரஷ்யாவின் ஆதிக்கத்தை அவ்வளவு எளிதாக விரட்ட முடியவில்லை. புரட்சிக்குப் பிறகு போலந்து மக்களுக்கு எவ்விதமான சுயாட்சியும் அளிக்கப்படவில்லை. தவிர, ரஷ்யாவின் ஆதிக்கம் வலுவடைந்தது என்றே கூறவேண்டும்.

ஸ்பெயினும் போர்ச்சுகல்லும்

இவ்விரண்டு நாடுகளிலும் ஒரேவிதமான காரணங்களினால் தேசிய இயக்கம் வலுவடைந்தது. இரண்டு நாடுகளும் அதிகமான காலனிகளை வைத்திருந்தன. அந்தச் சமயத்தில் எங்கும் சுதந்தரப் போராட்டம் நடைபெற்றதால் காலனிகளிலும்கூட விடுதலை கோரி புரட்சி செய்ய ஆரம்பித்தன. அதனால், இவ்விரு நாடுகளும் தங்களுடைய காலனிகளைப் படிப்படியாக இழந்துகொண்டே வந்தன. தவிர, இவ்விரு நாடுகளிடையே வாரிசுரிமை காரணமாகக் குழப்பமான அரசியல் நிலைமை ஏற்பட்டிருந்தது. அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு வரையறுக்கப்பட்ட முடியாட்சியும் அரசியல் அமைப்பும் வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்தனர். ஸ்பெயின் நாட்டு அரசனாக இருந்த போர்போர்ன் வம்சாவழியைச் சார்ந்த ஏழாம் பெர்டினண்ட் என்ற அரசன் ஒரு பிற்போக்குவாதி. அவர் பட்டம் எய்துங்காலை ஸ்பெயினுக்குச் சொந்தமான அமெரிக்கக் காலனிகள் சுதந்தரப் போராட்டத்தில் இறங்கியிருந்தன. இப் போராட்டங்களை அடக்குவதற்கு இந்த அரசனால் முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எதிர்ப்பும், மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் உதவி செய்ய முன்வராமையும்தான். இச் சமயத்தில் ஸ்பெயின் நாட்டு மக்கள் பெரும் அதிருப்தி அடைந்திருந்தனர். பெர்டினண்ட் 1812-ல் தரப்பட்ட அரசியல் அமைப்பை ரத்து செய்துவிட்டு மீண்டும் அரசனின் எதேச்சாதிகாரத்தை நிலைநிறுத்த முயன்றதுதான் அவர்களது அதிருப்திக்குக் காரணமாகும். பழைய சமய நீதிமன்றங்கள் அவைகளின் முழுக் கொடுமையுடன் நிறுவப் பெற்றன. மடாலயங்களுக்கு முன்போல சொத்துச் சேகரிக்கும் உரிமைகள் தரப்பட்டன. முற்போக்குவாதிகள் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பெற்றனர். இந்த எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து 1820-ல் ஸ்பானிய மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால், புரட்சியாளர்களுக்கு வெற்றி ஏற்படவில்லை. ஃபிரெஞ்சுத் துருப்புகளின் உதவிகொண்டு கொடுங்கோன்மை ஆட்சியைப் பெர்டினண்ட் தாம் இறக்கும்வரையிலும் (1833) செலுத்தினர். அவர் இறந்த பிறகு ஸ்பெயினில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. அங்கே இரு கட்சிகள் தோன்றின. டான் கார்லோஸ் (Don Carlos) என்ற பெர்டினண்டின் தம்பியும், இசபெல்லா என்ற பெர்டினண்டின் மகளும் பட்டத்திற்காக ஓர் உள்நாட்டுப் போரை ஆரம்பித்தனர். அரசியல் அமைப்பின்படி முடியாட்சி அரசாங்கம் நிறுவப் போவதாக இசபெல்லா அறிக்கைவிட்டதால், அவளுடைய கட்சிக்குத்தான் அதிக ஆதரவு கிடைத்தது. இவளே இரண்டாம் இசபெல்லா என்று ஸ்பானிய அரசியாக முடிசூட்டப்பெற்றார்.

ஆனால், வாரிசுரிமைப் போரின் மிகக் கெடுதலான விளைவுகள் இவள் பட்டத்திற்கு வந்த பிறகுதான் ஏற்பட்டன. எங்குப்பார்த் தாலும் பழிவாங்குதலும், நாடு கடத்தலும், அரசியல் குழப்பமும், புரட்சியும் நீடித்திருந்தன. அவளால் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியவில்லை. இவ்விதமான உள்நாட்டுக் குழப்பம், போர்ச்சு கல்லிலும் ஏற்பட்டது. 1807-ல் நிகழ்ந்த நெப்போலியனின் படை யெடுப்பின்போது போர்ச்சுகல் மன்னன் ஆரும் ஜான், அவருக்குச் சொந்தமான பிரேசில் (Brazil) காலனிக்குப் போய்விட்டார். 1820-ல் புரட்சிக்குப் பிறகே, அவர் போர்ச்சுகல்லுக்கு மீண்டும் திரும்பினர். 1826-ல் அவர் இறந்துவிடவே டோம் பீட்ரோ என்ற அவருடைய மகன் பிரேசில் பேரரசன் என்று பட்டம் சூட்டிக் கொண்டதல்லாமல் போர்ச்சுகல் நாட்டின் ஆதிக்கத் தையும் பெறவேண்டி., அவனுடைய ஏழு வயது நிரம்பிய மகள் டோனு மேரியாவைப் போர்ச்சுகல் பட்டத்திற்கு உரியவள் என்று பிரகடனம் செய்தார். ஆனால், அவருடைய மாமனான டோம் மைகல் என்பவர் தமக்குத்தான் பட்டம் உரித்தானது என்று உரிமை கொண்டாடினர். இவருடைய கட்சி எதேச்சாதிகார முடியாட்சியைக் கொண்டு வரவேண்டு மென்பதாகும். ஆனால், டோனு மேரியாவின் கட்சிப் போர்ச்சுகல் மக்களுக்கு அரசியல் அமைப்பைத் தருவதாக வாக்களித்தது. இவ்விரு கட்சிகளிடையே வெறுப்பு வளர்ந்து, நாளடைவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. 1834-ல் டோம்பீட்ரோ ஆங்கிலேயர்கள், ஃபிரெஞ்சுக்காரர்களின் உதவியால் அவருடைய மகனையே அரசியாக முடிசூட்டினர். இருப்பினும், அவள் பட்டத்திற்கு வந்த பிறகும் குழப்பமான நிலை நீடித்தது. ஒரு வகையில் ஸ்பெயினில் ஏற்பட்ட குழப்பமும் இதற்குக் காரணமாக அமைந்தது.

இதைப் போன்றே மக்கள் இயக்கங்கள் டென்மார்க்கிலும், ஸ்வீடனிலும் தோன்றின. ஸ்வீடிஷ் ஆதிக்கத்தை விரட்டுவதற்காக நார்வேயிலுங்கூட ஒரு தேசிய இயக்கம் தோன்றியது. ஆனால், 1905-ல்தான் இந்த இயக்கம் வெற்றி கண்டது. சுவிட்சர்லாந்திலும் கூடச் சமய வேறுபாடுகளும் அரசியல் வேறுபாடுகளும் மிகுந் திருந்தன. கத்தோலிக்கர்களும் பிராடஸ்டண்டுகளும் ஓயாது சண்டைபோட்டுக் கொண்டிருந்தனர். 1847-ல்தான் ஒரு கூட்டரசாங்க முறையில் அரசியல் அமைப்புத் தயாரிக்கப் பெற்றது. அதனால் நிரந்தரமான குடியரசு அரசாங்கம் நிறுவப் பெற்று, அமைதி ஏற்பட்டது.

ஃபிரான்சு (1815–1850)

வியன்னு காங்கிரசின் ஏற்பாட்டை ஃபிரான்ஸ் ஏற்றுக் கொண்டது. அதன்படி பதினெட்டாம் லூயி ஃபிரெஞ்சு அரசனுக

முடிசூட்டப்பெற்றார். நெப்போலியனது திறமைமிக்க ஆட்சிக்குப் பிறகு லூயி மன்னனின் ஆட்சி எடுபடவில்லை. அப்பொழுது ஃபிரான்சில் பலவிதமான கட்சிகள் தோன்றியிருந்தன. அரசனது ஆட்சியை வெறுக்கின்றவர்களும், முடியாட்சிதான் வேண்டும் என்கின்றவர்களும், வரையறுக்கப்பெற்ற முடியாட்சி வேண்டும் என்கின்றவர்களும் அங்குப் பலவிதமான கருத்துகளைப் பரப்பி வந்தனர். இச் சூழ்நிலையில் லூயி எதேச்சாதிகார ஆட்சியைச் செலுத்த முடியாது என்பதை நன்குணர்ந்திருந்தார். அதனால் மக்களைத் திருப்திச் செய்வதற்காக ஓர் அரசியல் அமைப்பை அவர்களுக்கு அளித்தார். இந்த அரசியல் அமைப்பு முடியாட்சிக்கு ஒரு வரையறையாகவே கருதவேண்டுமல்லாது, ஃபிரெஞ்சுக் குடியரசு மனப்பான்மையில் தயாரிக்கப்பெற்ற அரசியல் அமைப்பு அல்ல. பொதுவாகச் 'சமத்துவம்' என்ற கருத்தை அங்கீகரித்தும் சட்ட சபை ஒன்று நிரந்தரமாக மக்களுக்கு நிறுவப்பட வேண்டுமென்றும் அரசனால் ஏற்றுக்கொள்ளப்பெற்றன. இத்துடன் ஒரு மேல் சபையும் நிறுவப்பெற்றது. அந்த மேல் சபையின் அங்கத்தினர்கள் பிரபுக்களாகவே இருந்தனர். அவர்கள் அரசனால் நியமனம் செய்யப்பட்டவர்களாவர். சட்டசபை ஆட்சி மக்களுக்கு அளிக்கப் பட்டிருந்தாலும்கூடப் பிரதிநிதித்துவ முறையும், வாக்குரிமையும் பல குறைபாடுகள் கொண்டதாகவே இருந்தன. வாக்குரிமைப் பரவலாக இல்லை. ஆயிரம் பிராங்குகள் வரி செலுத்துபவர்கள் இரண்டு வாக்குரிமைகளைப் பெற்றிருந்தனர். நிர்வாகம் புரியும் அமைச்சர்கள் சட்டசபைக்குக் கட்டுப்பட்டவர்களாக இல்லை. அதனால் சட்டசபையின் மதிப்புக் குறைந்தது. இவற்றைப் போன்று பல குறைகள் காணப்படினும் இந்த அரசியல் அமைப்பை மக்கள் ஏற்றுக்கொண்டனர். இந்த அரசியல் அமைப்பில் காணப்பெற்ற புதிய புரட்சிக்கும் பழைய முடியாட்சிக்கு மிடையே ஏற்பட்ட ஒரு சமரச ஏற்பாடு என்றதால் மக்கள் இந்த அரசியல் அமைப்பைத் தற்காலிகமாக ஏற்றுக்கொண்டனர். சில பிரபுக்களும், குருமார்களும், அரசனை ஆதரிக்கின்றவர்களும் அதிகாரம் பெற்று விட்டதால், படிப்படியாகப் புரட்சிக் கொள்கைகளை அகற்றவும், எதேச்சாதிகாரத்தை நிலைநிறுத்தவும் வழி வகுத்தனர். பிரபுக்களை மக்கள் விரும்பவில்லை என்பதே அவர்கள் நன்குணர்ந்திருந்தனர். ஒரு சமயத்தில் அவர்கள் நாட்டை விட்டே விரட்டப்பெற்றனர். மீண்டும் வந்த அவர்கள் "எதையும் மறந்ததாகவும் தெரியவில்லை; அல்லது புதிதாக எதையும் கற்றுக்கொண்டதாகவும் தெரியவில்லை." அவர்களால் மீண்டும் ஆபத்து ஏற்படும்நிலை காணப்பெற்றது. இவர்களைப்போன்றே குருக்களும்கூடப் படிப்படியாகத் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்த முதலில் கல்வித் துறையில் பிரவேசித்தனர். பிறகு பழையபடி சொத்துச் சேர்ப்பதில் முனைந்

தனர். இவ்விதமான பழைய பிற்போக்கான கொள்கைகளை ஃபிரெஞ்சு மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். புரட்சியின் வடுக்கள் அவர்களுடைய நெஞ்சத்தில் ஆழமாகப் பதிந்திருந்தன. உண்மையில், புரட்சியின் அடிப்படையில்தான் நவீன ஃபிரான்ஸ் உதயமாயிற்று என்று கூறுவதில் தவறில்லை. பதினெட்டாம் லூயி மன்னனின் தம்பியான பத்தாம் சார்லஸ் பட்டத்திற்கு வந்தார். அவர் காலத்தில் பிற்போக்குச் சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இயங்க ஆரம்பித்தன. பிரபுக்களின் சீரமைப்பிற்காகப் பல இலட்சக் கணக்கான பிராங்குகள் செலவழிக்கப்பட்டன. மத குருமார்கள் ஏராளமான அதிகாரங்களைப்பெற்றனர். அவர்கள் மூலமாக, அவர்களுக்காகவே அரசன் ஆட்சி செய்வதைப் போன்றிருந்தது. எதேச்சாதிகார ஆட்சியில் வழக்கமாகக் காணப்படும் எல்லாத் தீமைகளும் தலையெடுக்க ஆரம்பித்தன. விவாக ரத்துச் சட்டம் கைவிடப்பட்டது. புரட்சிக் காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா நிலச்சீர்திருத்தங்களும் மிகவும் பாதிக்கப்பெற்றன. இந்தக் குறைபாடுகளை எடுத்துக் கூறவும், மக்களுக்குப் பேச் சுரிமை இல்லாமல் இருந்தன. எழுத்துச் சுதந்தரம் மிகவும் கட்டுப்படுத்தப்பெற்றிருந்தது. சட்டசபைக்கும், அரசனின் அமைச் சர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் அதிகமாகத் தோன்றின. ஆதலால் சட்டசபையின் மதிப்பு மிகவும் குறைந்திருந்தது. இதனால் ஃபிரெஞ்சு மக்கள் மிகவும் அதிருப்தியுற்றிருந்தனர். இதற்குப் பரிகாரம் மற்றொரு புரட்சிதான் என்பதை அவர்கள் உணர்ந்தனர். அதனால் 1830-ல் மற்றொரு புரட்சியை அவர்கள் ஆரம்பித்து, அதில் வெற்றியும் கண்டனர். இதன் விளைவாக, சார்லஸ் நாட்டைவிட்டே ஓடிவிட்டார். அவர் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று அங்கு தஞ்சம் புகுந்தார். ஃபிரெஞ்சு மக்கள் மீண்டும் ஒரு குடியரசு அரசாங்கத்தை நிறுவவேண்டுமென்று விரும்பினர். ஆனால், பழைய புரட்சியில் பெரும் பங்கெடுத்துக் கொண்ட லாபேய்ட் முற்றிலும் ஒரு குடியரசு அரசாங்கம் வேண் டாம் என்றும் வரையறுக்கப்பெற்ற முடியாட்சியை நிலைநிறுத்த லாம் என்று ஆலோசனை கூறினர். அந்த ஆலோசனையை ஏற்றுப் போர்போர்ன் வம்சத்தின் மற்றொரு கிளையான ஆர்லியன்ஸ் வம்சா வழியிலிருந்து லூயி பிலிப் என்பவரை ஃபிரெஞ்சு மக்களின் அரசனாக நியமித்தனர். இந்த அரசன் புரட்சியின் சின்னத்தையே தம்முடைய கொடியாகப் பொறித்துக்கொண்டார். இந்த மன்னனின் ஆட்சி 1830–48 வரை நீடித்தது. இவரது ஆட்சியில் யாருமே திருப்தி அடையவில்லை. இதற்குக் காரணம், மன்னன் எல்லோரையும் திருப்தி செய்ய முயன்றதேயாகும். கத்தோலிக்க ஆதரவாளர்கள், புரட்சியின் அடிப்படையில் நிறுவப்பெற்ற இந்த வரையறுக்கப்பெற்ற ஆட்சியைச் சிறிதும் விரும்பவில்லை.

புரட்சிக்கும் கத்தோலிக்கச் சமயத்தினருக்கும் வெகுதூரம். அதனால் இவர்கள் புரட்சிக்குக் காரணமாக இருந்தவர்களையும், மற்றும் பல முற்போக்குவாதிகளையும் தீவிரமாகக் கட்டுப்படுத்த வேண்டு மென்றும், கத்தோலிக்க நாடான ஆஸ்டிரியாவுடன் நட்புரிமை கொண்டாட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். முழுக் குடியரசை ஆதரிக்கும் முற்போக்குவாதிகள் அதிகமான சீர்திருத்தங்கள் வேண்டுமென்று கோரினர். வயது வந்த எல்லோருக்குமே வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று கோரினர். இச் சமயத்தில்தான் நெப்போலியன் போனபார்டேயின் வீரச் செயல் களையும், அவரது சாதனைகளையும்பற்றி மக்கள் பேசி வந்தனர். அவரைப்பற்றி பல கதைகள் எழுதப்பெற்றன. நெப்போலியனின் தம்பி மகனான லூயி நெப்போலியன் ஃபிரெஞ்சு மக்களிடையே அடிக்கடி நெப்போலியனது சாதனைகளை நினைவுறுத்திக்கொண்டே இருந்தார். இந்த எதிர்ப்புச் சக்திகளைவிட சோஷியலிச இயக்கமும் அப்பொழுது லூயி பிலிப்புக்குப் பேராபத்தை விளைவித்தது. புரட்சிக் காலத்திலிருந்து இதுவரை பல்வேறு கட்டங்களில் பல தரத்தினர் அநேக நன்மைகளைப் பெற்றுள்ளனர். குடியானவர் களுக்கு நிலம் கிடைத்தது. பிரபுக்களின் சீரமைப்பிற்குப் பணம் கிடைத்தது. பறிமுதல் செய்யப்பெற்ற நிலங்களில் ஒரு பகுதி திரும்பவும் தரப்பெற்றது. மத குருமார்களின் செல்வாக்கு மீண்டும் நிலைநிறுத்தப்பெற்றது. லூயி பிலிப் காலத்தில் நடுத்தர மக்களுக்கு நல்ல பதவிகளும் வாய்ப்புகளும் தரப்பட்டன. விவசாயிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் நல்ல இலாபம் கிடைத்தது. இவ்விதமாகப் பலர் நன்மையடைந்துள்ளனர். ஆனால், ஏழைத் தொழிலாளர் களின் நன்மைகளுக்காக யாரும் புரட்சி செய்யவில்லை. அவர்கள் பக்கமே யாருடைய கவனமும் திரும்பவில்லை. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் சீர்கேடுற்றிருந்தது. இச் சமயத்தில்தான் ஃபிரான்சில் சோஷியலிச இயக்கம் ஆரம்பமாகியது. இந்த ஃபிரெஞ்சுச் சோஷியலிசச் சிற்பிகள் செயின்ட் ஸைமன் (Saint Simon), ஃபோரியர் (Fourier), லூயி பிளாங் (Louie Blanc), பிரவ்தான் (Prowdhan) ஆகியோராவர். ஆரம்பக்கட்டத்தில் அவர்கள் குடியரசுக் கட்சியுடன் தொடர்பு வைத்துக்கொண் டிருந்தனர். ஆனால், தொழிலாளர்களுடைய நலன்களில் அவர் களுக்கு அக்கறை ஏற்படவில்லை என்பதை உணர்ந்து, தனிக் கொள்கைகளையும், தனித் திட்டங்களையும் தங்களுக்கென்றே உருவாக்கிக்கொண்டனர். இந்தச் சோஷியலிச இயக்கத்திற்கு அப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சி என்று பெயரிடப்பட்டிருந்தது. லூயி பிளாங் என்பவர்தான் இந்தக் கட்சிக்கு முதன் முதலாக ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொடுத்தார். அவ ருடைய கொள்கைகளை, அவர் எழுதிய சிறு நூலில் "தொழிலாளர்

களின் சீரமைப்பு" (The Organisation of Labour) காணலாம். அந்தச் சிறிய நூலில், "ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை செய்யும் உரிமை இருக்கிறதென்றும் அந்த உரிமையை அளிப்பதும், பாதுகாப்பதும் சமூகத்தின் கடமை" என்றும் அவர் கூறுகிறார். "மனிதனை மனிதன் சுரண்டும் பழக்கம் முடியவேண்டும்; வேலையைச் செய்யும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இலாபத்தில் பங்கு பெறும் உரிமை இருக்கிறது" என்றும் கூறினார். ஆனால், நாடெங்கும் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற அரசு, தேசிய தொழிற்சாலைகள், தொழிலாளர் நலன்கள் ஆகியவை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று பிரச்சாரம் செய்தார். ஆனால், லூயி பிலிப்பின் ஆட்சிக் காலத்தில் இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையைத் தொழிலாளர்கள் இழந்து விட்டனர். அவருடைய ஆட்சிக் காலத்தில் எல்லோரிடமும் மனக்கசப்பும், உள்ளக் குமுறலும்தான் அதிகமாக வெளித் தோன்றியதே தவிர, வேறு சீர்திருத்தங்களும், வாழ்க்கை வசதிகளும் ஏற்பட வாய்ப்பே இல்லாது போய்விடும் சூழ்நிலை ஏற்பட்டது. உள்நாட்டுக் கொள்கையில்தான் இவ்விதமான அதிருப்தி நிலவியிருந்தது என்றில்லை; வெளிநாட்டுக் கொள்கையிலும் குறிப்பிடத்தக்க வெற்றியோ அல்லது புகழோ ஃபிரான்சிற்கு ஏற்படவில்லை. அதனால் மக்கள் கவனம் சிறிதும் வேறு பக்கத்தில் திருப்பப்படவில்லை. எகிப்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் பிரச்சினைகளிலும் ஃபிரான்சின் மதிப்பு மிகவும் குறைந்துவிட்டது. 1840-ல் ஏற்பட்ட இலண்டன் சமாதான மாநாட்டிலும் ஃபிரான்சிற்கு எதிர்பாராத பலன் கிடைக்கவில்லை.

லூயி பிலிப் தம்முடைய மக்களிடையே 'சமத்துவம்' என்ற கொள்கையைப் பின்பற்றுவதாக அவர் பறைசாற்றினார். அவருடைய மகன் நான்காம் ஹென்றி கல்லூரிக்கு நடந்து செல்வதிலும், வழியில் மற்ற மக்களுடன் கைகுலுக்கிக் கொள்வதிலும், தமது மனைவி மற்றப் பாமரப் பெண்களிடம் நன்றாகப் பழகுவதிலும்தான், சமத்துவமான கொள்கை இருக்கிறது என்று கருதினார் போலும்! இப்படிச் செய்ததால், அவர் ஃபிரெஞ்சு மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றுவிட்டதாக நினைத்தார். இந்தப் பாசாங்கு அதிக நாட்கள் நீடிக்கவில்லை. அரசனாலும் கடைசிவரையிலும் இப்படி நடந்துகொள்ள முடியவில்லை. ஆரம்பத்தில் காணப்பெற்ற சமத்துவ மோகம் படிப்படியாக இறங்கிவிட்டது. மெதுவாக அரசனின் ஆடம்பரத்தையும் அதிகாரத்தையும் புதுப்பிக்கப் பல வழிகளை அவர் பின்பற்றினார். முதல் பத்து ஆண்டுகளில் அவருடைய ஆட்சி திடீரென்று முறிந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டது. எங்கு நோக்கினும், கலகங்களும், புரட்சிகளும், வேலை நிறுத்தங்

களும், தொழிலாளர்களின் கிளர்ச்சிகளும் மிகுதியாகக் காணப் பெற்றன. 1832, 1834-ல் ஃபிரெஞ்சுக் குடியரசுக் கட்சியினர் அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். லியன்ஸ், மார்சேல்ஸ் இன்னும் தெற்கு ஃபிரான்சிலுள்ள பல நகரங்களிலும் தொழிலாளர் வேலைநிறுத்தங்களும், கலகங்களும் ஏற்பட்டன. லாவெண்டி நகரத்தில், டி பெர்ரி சீமாட்டியினால் ஒரு கிளர்ச்சி நடந்தது. 1835–1846 வரை லூயி பிலிப்பைக் கொலை செய்யப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன. ஆனால், 1840-ல் கிஸ்ஸாட் பிரதம அமைச்சராகப் பதவியேற்ற பிறகு இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் மிகவும் கொடுமையாக ஒடுக்கப்பெற்றன. அரசனுடைய செல்வாக்கு நிலைநிறுத்தப்பட்டதைப் போன்ற ஒரு நிலை இருந்தது. 1848-ல் நிகழ்ந்த புரட்சிக்கு இந்த வன்முறை ஆட்சியே முன்னோடியாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் நெப்போலியனது ஆட்சியின் பெருமையை மக்கள் உணர்ந்தனர். ஏனெனில், அவரது ஆட்சியில் எல்லா மக்களும் நன்மைகளைப்பெற்றனர் என்ற அபிப்பிராயம் இருந்தது. கிஸ்ஸாட், கிளர்ச்சி இயக்கங்களை அடக்கினரென்றாலும், பாராளுமன்ற சீர்திருத்தங்கள் வேண்டும் என்பவர்களையும், வாக்காளர் பட்டியல் திருத்தப்படவேண்டும் என்று கூக்குரலிடுபவர்களையும் அவரால் அடக்க முடியவில்லை. இந்தச் சீர்த்திருத்தங்களை எப்படியும் கொண்டுவர வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும், முடியாட்சியை ஆதரிக்கும் கட்சி உட்பட ஒன்று சேர்ந்தன. அதனால் இச் சீர்திருத்தங்களை மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டுப் பல பிரச்சாரக் கூட்டங்கள், எல்லா முக்கியமான நகரங்களிலும் கூட்டப்பெற்றன. சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைப்பற்றி எல்லாக் கட்சியினரும் பேசினர். "சீர்திருத்த விருந்துகள்" (Reform Banquets) எல்லா நகரங்களிலும் ஏற்பாடாயின. 1848 பிப்ரவரி 22ஆம் தேதியன்று அவ்விதமான சீர்திருத்த விருந்து பாரிஸ் நகரிலும் நடைபெற்றது. அரசாங்கம் அதை நிகழவிடாது தடுத்தனர். அதனால் இந்த விழாவில் பல தலைவர்கள் கலந்துகொள்ள முடியவில்லை. எனினும் அங்கு குழுமியிருந்த பாமர மக்கள் மிகவும் ஆத்திரமடைந்திருந்தனர். கிஸ்ஸாட்டைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்தனர். சீர்திருத்தங்கள் அவசியம் வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தினர். இதன் விளைவாகக் கிஸ்ஸாட் 23ஆம் தேதியன்று பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பிறகு குடியரசுக் கட்சியினர் ஃபிரான்ஸ் நாட்டை ஒரு குடியரசு நாடென்று பிரகடனம் செய்யவேண்டுமென்று கூறினர். சோஷியலிஸ்டுகள் தங்களுடைய திட்டத்துடன் இக் கிளர்ச்சியில் குதித்தனர். கிளர்ச்சிகள் பெருகின. இவையே பிறகு புரட்சி ஏற்படக் காரணமாக அமைந்தன. இப் புரட்சி ஏற்பட்டவுடன், புரட்சியாளர்களை அடக்க ஃபிரெஞ்சுப் படை

கொண்டு வரப்பெற்றது; ஆனால் பயனில்லை. படையினரும் புரட்சி இயக்கத்தை ஆதரித்தனர். புரட்சியை அடக்குவதில் அரசன் வெற்றிபெறவில்லை. அதனால் அவர் முடிதுறந்தார். ஆனால், அவருக்குப் பதிலாக அவரது மகனை அரசனாகப் பிரகடனம் செய்தார். ஆனால் மக்களும், பத்திரிகையாளரும் முடியாட்சி ஃபிரான்சிற்குக் கூடவே கூடாது என்று பிடிவாதமாகக் கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாகக் குடியரசுக் கட்சியும் சோஷிய லிஸ்டுக் கட்சியும் ஒன்று சேர்ந்து ஆலோசனைகளை நடத்தி ஒரு இடைக்காலக் குடியரசு அரசாங்கத்தை ஃபிரான்சிற்கு நிறுவினர். குடியரசின் மற்ற விவரங்களை ஆராய்வதற்கு ஒரு தேசிய மாநாடு கூட்டுவதென்றும் முடிவு செய்தனர். இந்த ஏற்பாட்டை மற்ற மாவட்டங்கள் ஒப்புக்கொண்டன. புரட்சியின் ஒரு பகுதி வெற்றிகரமாக நிகழ்ந்தது.

புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் குடியரசுக் கட்சி யினருக்கும், சோஷியலிஸ்டுக் கட்சியினருக்கும் மோதல் ஏற்பட்டது. சோஷியலிஸ்டுக் கட்சி, குடியரசு அரசாங்கம் நிறுவப்படுவதுடன் சமதர்மக் கொள்கைகளையும் செயலாற்ற வேண்டுமென்று விரும்பியது. எல்லா மக்களுக்கும் உழைப்பதற் கான உரிமையைத் தரவேண்டுமென்று சோஷியலிஸ்டுகள் தீவிர மாக முனைந்திருந்தனர். பிப்ரவரி 25ஆம் தேதியன்று ஓர் இடைக் கால அரசாங்கம் நிறுவப்பெற்றது. அதற்கு அடுத்த நாளே உழைக்கும் உரிமை மக்களுக்குத் தரப்பட்டிருக்கிறதென்று பிரகடனம் செய்தனர். உடனடியாகத் தேசிய தொழிற்சாலைகள் நாடு முழுவதும் நிறுவப்படும் என அரசாங்கம் பறைசாற்றியது. தேசிய மாநாடு ஒன்று கூட்டப்பெற்று அரசியல் சட்டத்தை விவாதிப்பது என்று கூறினர். இந்தத் தேசிய மாநாட்டிற்கு உடனடியான அவசியம் ஏற்பட்டுவிடவில்லை என்றும், அதற்குள் சோஷியலிஸ்டுக் கொள்கைகளை மக்களிடத்திலே பிரச்சாரம் செய்ய அவகாசம் வேண்டும் என்று சோஷியலிஸ்டுக் கட்சியினர் அபிப்பிராயப்பட்டனர். "தொழிலாளர் காலம்" வந்துவிட்டது என்று அம் மக்களிடையே மகிழ்ச்சி ஆரவாரம் காணப்பெற்றது. சிவப்புக் கொடியை அவர்கள் தேசியச் சின்னமாக வைத்துக் கொண்டனர். லூயி பிளாங் தலைமையில் தொழிலாளர் முன் னேற்றத்தைக் கவனிக்க ஒரு பரிசீலனைக் குழு (கமிஷன்) நியமிக்கப்பெற்றது. சோஷியலிஸ்டுகளின் செல்வாக்கு மிக வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது. குடியரசுக் கட்சியினர் இவர்களது முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் கண்டு அஞ்சினர். அரசியல் புரட்சியிலிருந்து சமுதாயப் புரட்சிக்கு மக்களுடைய கவனம் திருப்பப்பெற்றது. குடியரசுக் கட்சியினர்

இன்னும் "அரசியல் சீரமைப்பு"ச் செய்வதிலேயே இருந்தனர். தேசியக் காவற்படை, இந்த சோஷியலிஸ்டுக் கட்சியை ஆதரிக்க வில்லை. இந்த நிலையில் தேசிய மாநாடு கூட்டுவதென்றும், அம் மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவர் என்றும் கூறப்பெற்றது. குடியரசுக் கட்சியின் சார்பாக அதிக மான அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத் தேர்தலில் வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. இத் தேர்தலில் சோஷியலிஸ்டுக் கட்சி தோற்றுவிட்டதாக ஏற்றுக் கொள்ள மறுத்தது. அந்தக் கட்சிக்கு ஏராளமான தொழிலாளர் களின் ஆதரவு இருந்தது. இருப்பினும் இவர்களது எதிர்கால வாழ்வு தேசியத் தொழிற்சாலைகள் நன்முக இயங்குவதைப் பொறுத்திருந்தது. இவ்விதமாக நிறுவப்பெற்ற தேசியத் தொழிற் சாலைகளில் வேலை தேடி, கிராமப் பகுதிகளிலிருந்து கூட்டம் கூட்ட மாக வந்தனர். மே மாதக் கடைசியில் சுமார் ஒரு லட்சம் பேர் வேலை தேடி வந்தனர். இவர்களுக்கெல்லாம் வேலை எப்படிக் கொடுப்பது என்பது பெரும் பிரச்சினையாகிவிட்டது. ஒவ்வொரு தொழிலாளருக்கும், நாளொன்றுக்கு ஒரு பிராங்கு வீதம் அரசாங்கம் கூலியாகத் தந்ததால், ஏராளமானத் தொழிலாளர்கள் சோஷிய லிஸ்டுக் கட்சியின் கட்டளைகளை ஏற்கத் தயாராக இருந்தனர். இவர்களின் ஆதரவை முக்கியமாகக் கொண்டு சோஷியலிஸ்டுக் கட்சியினர் மே மாதத்தில் ஒரு கிளர்ச்சி செய்தனர். அது பயன் அளிக்கவில்லை. ஆதலால் ஜூன் மாதத்தில் மற்றொரு கிளர்ச்சி இயக்கத்தை ஆரம்பிப்பதென்று திட்டமிட்டிருந்தனர். ஆனால், இந்தத் தேசியத் தொழிற்சாலைகளால் நாட்டிற்கு எவ்விதப் பயனும் இல்லை என்றுகூறி பாராளுமன்றம் இவற்றையெல்லாம் மூடி விடும்படி உத்தரவிட்டது. தொழிலாளர்களை எல்லாம் பாரிஸ் நகரைவிட்டு முதலில் வெளியேறும்படி உத்தரவிட்டது. இந்த உத்தரவுகளை எதிர்த்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன் விளைவாகப் பாரிஸ் நகரில் உள்நாட்டுப் போர் இவர் களிடையே ஆரம்பமானது. பாராளுமன்றத்தின் உத்தரவை அமல் நடத்தப் படையின் உதவியை அரசாங்கம் நாடியது. படை வீரர் களும் மூன்று நாட்கள் விடாது சோஷியலிஸ்டுகளையும் தொழி லாளர்களையும் வன்மையாகத் தாக்கினர். பிறகுதான் இந்தக் குழப்பம் ஓய்ந்தது. ஃபிரான்சின் சோஷியலிசமும் நசுக்கப்பெற்றது. 1870 வரை சோஷியலிஸ்டுகள் ஃபிரான்சில் தலைதூக்க முடிய வில்லை. பின்பு ஃபிரான்சிற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பைத் தயாரித்தனர். அதன்படி பாராளுமன்ற அங்கத்தினர்களும், ஜனாதிபதியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று நிர்ணயம் செய்தனர். ஜனாதிபதி தேர்தலுக்கு லூயி நெப்போலியன் என்பவரும் போட்டியிட்டார். குடியரசுக் கட்சியின் சார்பாக நின்ற

வேட்பாளர் தோற்றுவிட்டார். லூயி நெப்போலியன், நெப்போலியன் போனபார்டேவின் தம்பி லூயினுடைய மகன். நெப்போலியன் போனபார்டேவிற்கு ஃபிரான்சில் இருந்த செல்வாக்குக் காரணமாகத்தான், லூயி நெப்போலியன் சுமார் 50 லட்சம் ஓட்டுகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மூன்றும் நெப்போலியன்

லூயி நெப்போலியன் ஏற்கனவே இருமுறை ஃபிரெஞ்சு அரியாசனத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தார். அவை பயனளிக்க வில்லை. அதனால் ஃபிரெஞ்சு அரசனை லூயி பிலிப்பையே கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார். சதித்திட்டம் வெற்றி யளிக்காத தால் அவர் கைது செய்யப்பட்டார். சிறையிலிருந்து தப்பி அவர் இங்கிலாந்திற்குச் சென்றார். பிறகுதான் ஃபிரான்சிற்கு வந்து, ஜனாதிபதி தேர்தலில் 1848-ல் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவருடைய நான்கு ஆண்டுப் பதவிக்காலம் முடிவதற்குள் 1851 டிசம்பர் 2ஆம் தேதியன்று திடீர் தாக்குதலை நடத்தி ஒரு புதிய அரசாங்கத்தை நிறுவினார். பிறகு அவருடைய பெரியப்பா செய்ததைப் போன்று மக்கள் வாக்கெடுப்பு வைத்து, அடுத்த பத்து ஆண்டுகளுக்கும் அவரே நீடித்து ஜனாதிபதியாகப் பதவியில் இருப்பது என்று மக்களின் சம்மதத்தைப் பெற்றார். அடுத்த ஆண்டிலேயே 1852-ல் இரண்டாவது பேரரசை நிறுவிய பெருமை யைப் பெற்றார். லூயி நெப்போலியன், மூன்றும் நெப்போலியன் என்ற பெயருடன் "கடவுளின் கருணையாலும் பொதுமக்களின் சம்மதத்தாலும் ஃபிரெஞ்சுப் பேரரசனைப் பட்டம் சூட்டிக் கொண்டார்." நெப்போலியன் போனபார்டேவின் மகன் இரண்டாம் நெப்போலியன் என்று தம்மை அழைத்துக்கொண்டதால், இரண் டாவது நெப்போலியன் என்று பெயர் வைத்துக்கொள்ளாது மூன்றும் நெப்போலியன் என்று பட்டம் சூட்டிக்கொண்டார்.

பதினெட்டு ஆண்டுகள்வரையிலும் அவர் ஐரோப்பாவை ஆதிக்கம் செய்து வந்தார். அவருடைய செல்வாக்குக்கு முக்கிய காரணமாக இருந்தது அவருடைய பெரியப்பாவின் பெயரை அவர் வைத்துக்கொண்டதேயாகும். அவரும் தம்முடைய பெரியப்பா வைப் போன்று ஒரு பெரிய பேரரசனாக வரவேண்டுமென்று முயற்சி செய்தார். அவர் நெப்போலியனுடைய பெயரை மட்டும் பெற்றாரே தவிர, அவருடைய குண இயல்புகளைப் பெறவில்லை. நெப்போலியனுக்கு இருந்த திறமையும் சக்தியும் இவரிடம் காணப் படவில்லை. ஆனால், இவர் செயல் புரிவதைக் காட்டிலும், கற்பனை செய்வதிலும், புதிய திட்டங்களைத் தீட்டுவதிலும் வல்லவராக இருந்தார். மக்களுக்கு நல்ல சீர்திருத்தங்களையும், நல்ல திட்டங்

கூயும் கொடுக்கவேண்டுமென்று பெரு நோக்கம் கொண்டவராக இருந்த போதிலும், ஆரம்ப காலத்திலிருந்து சதித்திட்டங்கூத் தீட்டுவதில் பழகிப் போயிருந்த இவருக்கு நல்ல காரியங்கூச் செய்யும்பொழுதும்கூட அவற்றை இரகசியமாகவும் சதி ஆலோசகூ போன்றுமே தீட்டுவார். ஐரோப்பாவிலுள்ள பல சிறிய நாடுகளின் உதவிக்குச் சென்ற போதிலும் ஏதாவது ஒரு காரணம் காட்டி, அல்லது காரணம் காட்டாமலும்கூடத் திடீரென்று அந்த உதவியை நிறுத்திவிடுவார். அதனால் சில சமயங்களில் அவரால் உதவிக்குப் பதில் உபத்திரவமே தோன்றியது. அவருடைய கொள்கைகளும், செயல்களும் முரண்பாடுடையனவாக இருந்தன. இத்தாலிய மக்களுக்குச் சுதந்தரம் வாங்கித் தரவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருந்தது. அவர் ஆரம்ப காலத்தில் புரட்சிக்காரராக இருந்தபொழுது தேசியத்தையும், மற்ற நாடு களின் சுதந்தரத்தையும் போற்றினர். ஆனால், அவர் பேரரசனுக மாறிய பிறகு அந்த உணர்ச்சிகள் முற்றிலும் மறையவில்லை. அதன் காரணமாகவே அவர் இத்தாலியச் சுதந்தர இயக்கத்திற்கு உதவ முன்வந்தார். ஆனால், ஒரு சண்டைக்குப் பிறகு, அவருடைய எண்ணம் மாறிவிட்டது. உதவியைத் திடீரென்று நிறுத்திவிட்டார். முரண்பாடான கொள்கைகளும், சூழ்ச்சிமிக்க ஆலோசகூகளும் அவரை ஓர் அரசியல்வாதி என்று கூறுவதைவிடத் திறமைமிக்க சதிகாரன் என்று கூறுவதே பொறுத்தமுடையதாகின்றது. நல்லதைத்தான் மக்களுக்குச் செய்யவேண்டுமென்று ஆரம்பித்து, பல தொல்லைகூயும், குழப்பத்தையும் ஏற்படுத்துவது நெப்போலி யனது தனிச் சிறப்பாகும். ''இவரை நம்பவே முடியாது'' என்று ஆஸ்டிரிய நாட்டு இராச்சியத் தூதுவர் கூறுகிறார். ஆனால், பல துணிச்சலான செயல்களாலும், புதுமையான கொள்கைகளாலும், போர்களாலும் மக்கள் மனத்தை ஈர்க்கவேண்டுமென்ற அவரது எண்ணம் உள்நாட்டுக் கொள்கையிலும் சரி, வெளிநாட்டுக் கொள்கையிலும் சரி, இறுதியில் வெற்றியளிக்கவில்லை.

உள்நாட்டுக் கொள்கை

1851-ல் இராணுவத்தின் உதவியைக் கொண்டு அரசாங்கத்தை நிறுவியபோதிலும், நெப்போலியனுக்கு எதேச்சாதிகாரம் செலுத்த வேண்டுமென்ற எண்ணமில்லை. அவர் மக்களுடைய விருப்பங் கூயும், நலன்கூயும் பெரிதும் மதிக்கின்றவர். பொது மக்களிடையேதான் அரசியல் இறைமை இருக்கின்றது என்று முழுவதும் நம்புகின்றவர். அதனால்தான் அவர் திடீரென்று தாக்குதலை நடத்தி அரசாங்கத்தை நிறுவிய போதிலும் 1851-ல் அவர் பொதுமக்கள் வாக்கெடுப்பு எடுத்து மேலும் பத்து ஆண்டு களுக்கு அவருடைய பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டார்.

மீண்டும் 1852, 1857, 1863, 1869 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்த தேர்தல்களில் மக்களுடைய சம்மதத்தைப் பெற்ற பிறகே அவர் திருப்தியடைந்தார். மக்களுடைய சம்மதத்தின் மூலமாக அவர்களுடைய இறைமையை நெப்போலியனுக்கு மாற்றியிருப்பதால் அவரே குடிமக்களுடைய தலைவன் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைந்தார். அரசியல் உரிமைகளைப்பற்றி ஃபிரெஞ்சு மக்கள் அதிகமாகக் கவலைப்படுவதில்லை என்று நெப்போலியன் உணர்ந்திருந்தார். அவர்களுக்கு வேண்டிய முக்கியமான உரிமைகள் எல்லாம் சமூக வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும்தான் இருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்கேற்பப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டார். என்னதான் மக்களுடைய சம்மதத்தைப் பெற்று ஆட்சி செய்தாலும், நெப்போலியன் எதேச்சாதிகார ஆட்சியைத்தான் நிறுவினர் என்று அவர்களுடைய செயல்களிலிருந்து யூகிக்கவேண்டியிருக்கிறது. அவருடைய செல்வாக்கின் காரணமாகவும், அதிகாரத்தின் காரணமாகவும், மக்களை அவர் விருப்பத்திற்கேற்பத் திருப்ப அவர் பல வழிகளைப் பின்பற்றினர். இரண்டாவது பேரரசின் அரசியல் சட்டம், நெப்போலியன் போனபார்டேவின் "கான்சலேட்" அரசியல் அமைப்புப் போன்றிருந்தது. நிர்வாகமும், சட்டசபையும் பேரரசரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தாலும், தேர்தல் காலங்களில், தக்க நடவடிக்கைகளின் மூலம் அரசனுக்குப் பிடிக்காதப் பிரதிநிதிகளுக்கும், கட்சி அங்கத்தினர்களுக்கும் எவ்வளவு இடையூறு கொடுத்தரமுடியுமோ அவற்றை எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார். இவருடைய செல்வாக்கு ஓங்கியிருப்பதற்குச் சாதகமாகவே வாக்காளர் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தன. அரசனுக்குப் பிடிக்காதப் பகுதிகளில் வாக்கெடுப்பின் எண்ணிக்கையும் குறைக்கப்படுவதற்கான பல வழிகள் பின்பற்றப்பட்டன. இதற்குச் சாதகமாக அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. எழுத்துச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம் கட்டுப்படுத்தப் பெற்றன. பத்திரிகைகள் பலத்தத் தணிக்கைக்குள்ளாகின. சங்கம் அமைத்தல், கூட்டங்கள் நடத்தல் ஆகிய நடவடிக்கைகள் எல்லாம் அதிகமாகக் கண்காணிக்கப் பெற்றன. கல்வி நிலையங்களும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பெற்றன. பழமையின் சின்னமாகக் கருதப்பெற்ற தாடியையும்கூடப் பேராசிரியர்கள் எடுத்துவிட வேண்டும் என்று உத்தரவிடப்பெற்றது. 1858-ல் ஆர்ஸினி என்பவர் நெப்போலியனைக் கொலை செய்ய முயற்சி செய்த பொழுதிருந்து, அவருக்கு அடக்கு முறையைப் பல

வழிகளிலும் செலுத்த நல்ல வாய்ப்புக் கிடைத்தது. பெரும் பான்மையான பாமர மக்களும், குடியானவர்களும் நெப்போலி யனது ஆட்சியில் நன்மை அடைந்தனர். அதனால் அவர்கள் நெப்போலியனை ஆதரித்ததில் வியப்பில்லை. இருப்பினும் அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் வேண்டுமென்றும், மற்றும் பல குறைகளைக் கூறிக்கொண்டும் இருந்தனர். பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்டு வந்ததால் எழுத்தாளர்களும் இவரது ஆட்சியைப்பற்றிச் சிறப்பாக எழுதவில்லை. அக் காலத்தில் மிகச் சிறந்த எழுத்தாளர்களாக விளங்கிய தையர்ஸ், மைகலேட், லூயி பிளாங், ஜார்ஜ் ஸாண்ட், விக்டர் ஹ்யூகோ ஆகியோர் இவரது ஆட்சியை மிகவும் கடுமையாகத் தாக்கினர். அதனால் அவர்கள் நாடு கடத்தப்பெற்றனர். இருப்பினும் அவர்கள் தாக்குதலை மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. வெளிநாட்டுக் கொள்கையிலும் சரி, இவரது ஆட்சியில் யாராவது ஒரு பகுதி யினருக்கு அதிருப்தி ஏற்பட்டுக்கொண்டே இருந்தது.

இக் குற்றம் குறைகளைக் கூடியவரையிலும் களைவதற்கு அவர் பெரிதும் முயற்சி செய்தார். அவர் பட்டத்திற்கு வந்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அரசியல் அமைப்பில் சீர்திருத் தங்கள் செய்ய வேண்டுமென்று உணர்ந்தார். அதனால் அவருடைய எதேச்சாதிகாரம் தளர்ந்து, "தாராள மனப்பான்மை யுடைய பேரரசு" (Liberal Empire) என்று அழைக்கும் அளவிற்கு மக்களின் கவனம் திருப்பப்பெற்றது. படிப்படியாகச் சட்ட சபைக்கு அதிக அதிகாரங்களை வழங்கினர். 1860-ல் சட்டசபை ஆரம்பக் கூட்டத்தில் பேரரசரின் பேருரைக்குப் பிறகு, அரசாங்கக் கொள்கைகளின்மீது விவாதம் நடத்தச் சட்டசபைக்கு உரிமை அளிக்கப்பெற்றது. 1861-ல் வரவு செலவுத் திட்டத்தின் மீது பகுதி பகுதியாக விவாதித்து நிறைவேற்ற உரிமை அளிக்கப் பெற்றது. 1867-ல் பேரரசர் உரைமீது விவாதம் நடத்தப்படுவதை நிறுத்திவிட்டார். அதற்குப் பதிலாக அமைச்சர்களையே கேள்விகள் கேட்பதற்கும், அரசாங்கக் கொள்கைகளில் உள்ள குற்றம் குறைகளை விவாதிப்பதற்கும் சட்டசபைக்கு அதிகாரம் வழங்கப் பெற்றது. 1869-ல் அமைச்சர்கள் சட்டசபைக்கு அடங்கி நடப் பவர்களாவர் என்றும் அறிவிக்கப் பெற்றது. சட்டசபை அங்கத் தினர்கள் சட்டமியற்றும் உரிமையைப் பெற்றனர். இவ்விதமாகச் சட்டசபையின் அதிகாரங்கள் விரிவடைந்தன. ஏறக்குறைய இங்கிலாந்து நாட்டின் வரையறுக்கப்பெற்ற முடியாட்சி போன்ற அரசியல் அமைப்பு ஃபிரான்சிலும் கொண்டு வரப்பட்டது. மக்களிடையே இந்த அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் திருப்தி யளித்தன. இதற்கேற்ப 1870-ல் எமிலி ஆலிவர் என்பவர்

அமைச்சராக நியமனம் செய்யப்பட்டது, அரசாங்கத்தின் பல எதிர்பாளர்களை அமைதியுறச் செய்தது. மக்களுடைய சம்மதம் பெற்ற அந்த வரையறுக்கப்பெற்ற பேரரசுக்கு நல்லகாலம் பிறக்கும்பொழுது 1871-ல் ஸெடான் (Sedan) போர்க்களத்தில் ஜெர்மானியர்களால் அவர் தோற்கடிக்கப் பெற்றார். அதனுல் ஃபிரான்சின் இரண்டாவது பேரரசும் வீழ்ச்சியுற்றது.

நெப்போலியனது உள்நாட்டுக் கொள்கை ஓரளவிற்கு மக்களுடைய ஆதரவைப் பெற்றே இருந்தது. மக்களுடைய நலன்கள், அரசாங்கத்தால் நன்கு கவனிக்கப்பெற்றன. பொருளாதாரத் துறையில் நாடு முன்னேற்றமடைவதற்கு அவர் மிகவும் பாடுபட்டார். தொழிற்சாலைகள் நிறுவப்பெற்றன. விவசாயிகளுக்கு நல்ல ஆதரவு அளிக்கப்பெற்றது. நீர்ப்பாசன வசதிகள் செய்து தரப்பெற்றன. நல்ல சாலைகளும், ரயில் போக்குவரத்துகளும் ஃபிரான்ஸ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கொண்டுவரப்பெற்றன. பாரிஸ் நகரம் மேலும் அழகு செய்யப்பட்டது. பிரம்மாண்டமான கட்டடங்கள் தோன்றின. பல தொழில் வர்த்தகப் பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்தும் அந்தந்த நாடுகளுடைய வர்த்தகப் பொருள்கள் வந்து குவிந்தன. இருப்பினும் நெப்போலியன் தடையிலாத வர்த்தகத்தைப் பெரிதும் ஆதரித்தார். அதனுல் வெளிநாடுகளிலிருந்து நிறைய உற்பத்திப் பொருள்கள் ஃபிரான்சில் வந்து குவிந்தன. இதனுல் உள்நாட்டுத் தொழில் அதிபர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தங்களுடைய தொழில்களை முன்னேறச் செய்ய வழியில்லாது போய்விட்டது. 1860-ல் இங்கிலாந்து நாட்டுடன் தடையிலாத வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை காப்டன் கேவாலியர் ஒப்பந்தம் (Cobden Chevalier Treaty) செய்துகொண்டார். இவர் காலத்தில் பாரிஸ் தலைநகரம் செழிப்புற்றிருந்தது. கேளிக்கைகளுக்கும் நாகரிகத்திற்கும் அது இருப்பிடமாக இருந்தது. நெப்போலியனது மனைவியார் இயுஜின் (Eugenie) அரண்மனையைமிகவும் கலகலப்பாக வைத்திருந்தார். நெப்போலியன் எல்லா பகுதியினருக்கும் நல்லது செய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டவர். ஆனுல், செயலளவில் எல்லோருக்கும் ஓரளவிற்கே அவரால் நன்மைகள் ஏற்பட்டன. இதனுல் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக எல்லாப் பகுதியினரும் ஏதாவது அவர்மீது குற்றம் குறைகளைக் கூறிக்கொண்டே இருந்தனர்.

வெளிநாட்டுக் கொள்கை

லூயி நெப்போலியன் ஜனுதிபதியாக இருந்தபொழுதும், பேரரசனுக இருந்தபொழுதும் ஐரோப்பாவில் சமாதானம் நிலைத்திருக்க வேண்டுமென்றுதான் விரும்பினர். ஆனுல், அவர்

கொள்கைக்கு முரணாக, அவர் பல போர்களில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நெப்போலியன் ஒரு தேசியவாதி. அவருடைய நாட்டில் மட்டுமல்லாது, மற்ற நாடுகளிலும் தேசிய இயக்கங்களை அவர் ஆதரித்தார். இத்தாலி, ஜெர்மனி, போலந்து ஆகிய நாட்டு மக்கள் தேசிய உணர்ச்சி பெறுவதற்கும், சுதந்தரம் பெறவும் அவர் உதவி செய்ய முன்வந்தார். அவர்களுடைய இயக்கத்திற்கு முதலில் நல்ல ஆதரவு அளித்தார். மற்ற நாடுகள் சுதந்தரத்துடன் வாழவேண்டுமென்ற பெரு நோக்கமே அவரைப் ஃபிரெஞ்சு மக்கள் விரும்புவதற்கு முதற் காரணமாக இருந்தது. அவருடைய பெரியப்பாவின் போர்ச் செயல்களும், அவற்றின் மூலம் அவர் பெற்ற புகழும், பெருமையும் இவரை விட்டு அகல வில்லை. அதனால் சமாதானக் கொள்கையை அவர் விரும்பிய போதிலும், அவரையும் அறியாது பல போர்களில் அவர் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஃபிரெஞ்சு மக்களுக்கு நீடித்த புகழையும், வெற்றியையும் கொடுத்தாக வேண்டும் என்ற எண்ணத்தால் அவர்தம் கொள்கைகளையும் விட்டுக் கொடுத்து விட்டார். மற்ற நாடுகளுக்குச் சுதந்தரம் வாங்கித் தருவதற்கு இவர் பல தியாகங்களையும் செய்யத் தயாராக இருந்தார். அதே சமயத்தில், ஃபிரான்சிற்குத் தியாகத்தில் பரிசாகச் சில நிலப் பகுதிகள் பெறவேண்டிய நிலையும் ஏற்பட்டது. நாடு பிடிப் பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்து பிரிட்ட னுடன் போட்டியிட்டார். அல்ஜிரியா முழுவதையும் அவர் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தினுள் கொண்டு வந்தார். பிரிட்டனுடன் சேர்ந்து சீனர்களுக்குச் சொந்தமான துறைமுகப்பட்டணங் களையும் ஆதிக்கம் செய்தார். ஐரோப்பிய உற்பத்திப் பொருள் களைச் சீனாவில் விற்பனை செய்வதற்கு நெப்போலியன் பெரிதும் உதவினார். 1858-ல் அன்னம், கொச்சின்–சீனாவிலும், 1863-ல் கம்போடியாவிலும் ஃபிரெஞ்சு ஆதிக்கம் நிலைநிறுத்தப்பெற்றது. மெக்சிகோ (Mexico) நாட்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நாகரிகம், ஆதிக்கம் பரவப் போதிய சூழ்நிலை இருப்பதைக் கண்டு, நெப்போலியன் இதை எப்படியும் தடுக்கவேண்டுமென்று முடிவு செய்தார். அதனால் அவர் மன்ரோ கொள்கையை மீறி மெக்சிகோ நாட்டை ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்க நிலையமாக்க முயன்றார். ஃபிரெஞ்சுக் கத்தோலிக்கர்களைத் திருப்திச் செய்வதற்காக மெக்சிகோவில் கத்தோலிக்கச் சமயத்தை நிலைநிறுத்த முயன்றார். ஃபிரெஞ்சுப் பொருள்களை விற்பனை செய்வதற்கு மெக்சிகோ பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று விரும்பினார். அதனால் அவர் மெக்சிகோவிற்கு 30,000 பேர் கொண்ட ஒரு படையை அனுப்பி வைத்தார். அப்பொழுதிருந்த மெக்சிகோ அரசாங்கமும், ஃபிரான்ஸ், இங்கிலாந்து ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குத் தர

வேண்டிய கடனைத் திருப்பித்தர முடியாது என்று அறிவித்தது. இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு நெப்போலியன் மெக்சிகோவில் தலையிட்டார். நிலைமையை நன்கு பயன்படுத்திக் கொண்டு, ஆஸ்டிரேலியா இளவரசனான மேக்ஸிமிலானை (Maximilan) மெக்சிகோவின் அரசனாக நியமித்தார். அமெரிக்க ஐக்கிய நாடு இவருடைய கொள்கையை வன்மையாகக் கண்டித்து, மெக்சிகோவிலிருந்து ஐரோப்பிய நாடுகள் வெளியேறு விடில் போர் பிரகடனம் செய்ய நேரிடும் என்று உறுதியாக அறிவித்தது. அதற்குப் பிறகுதான் நெப்போலியன் மெக்சிகோவி லிருந்து தமது துருப்புக்களைப் பின்வாங்கச் செய்தார். ஆனால், மேக்ஸிமிலான் பின்வாங்க முடியாது என்று அறிவித்து, அங்கேயே குழப்பிக்கொண்டிருந்ததால் அவர் மெக்சிகர்களால் சிறைச்செய்யப்பட்டுப் பிறகு சுட்டுக் கொல்லப்பட்டார். எடுத்த காரியத்தைத் திடீரென்று கைவிட்டுவிடுவதால், இவருக்கு ஆதர வாக இருந்த மற்றவர்கள் பல சங்கடங்களுக்குள்ளானார்கள்.

நெப்போலியனது கொள்கைகளும், செய்கைகளும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டிருந்தன. இத்தாலிய மக்கள் சுதந்தரம் அடைய வேண்டும் என்று அவர் விரும்பியது உண்மை. அதற்கேற்ப ஓர் உடன்படிக்கையையும் செய்துகொண்டார். அதற்கு மேல் சென்று, ஆஸ்டிரியாவின்மீது போர் செய்து செல்பாரனை (Salferino) என்ற இடத்தில் வெற்றியும் பெற்றார். ஆனால் இந்தப் போர்க்களத்தில் வெற்றி யாருடைய பக்கம் என்று உறுதியாக்கப் படவில்லை. ஆனால் இந்தச் சண்டைக்குப் பிறகு நெப்போலியன் மனம்மாறிவிட்டார். அதற்கு அவர் காரணம் கொடுக்கவில்லை. இத்தாலியச் சுதந்தர இயக்கத்தை அவர் நடுவழியில் கைவிட்டு விட்டார். அதைப் போன்றே, ஜெர்மானியர்களது தேசிய இயக்கத் திற்கு நல்ல ஆதரவையும், பாராட்டுதல்களையும் அளித்த நெப்போலியன், அந்த இயக்கம் தெற்கு ஜெர்மனியில் வெற்றி பெறுது பல இடையூறுகளைச் செய்ததுமல்லாமல் 1870–71ல் ஜெர்மனியுடன் போரும் தொடுத்தார். அந்தப் போர்தான் அவருடைய பதவிக்கே முடிவு தேடித்தந்தது. தவிர, பேரரசின் வீழ்ச்சிக்கும் காரணமாக இருந்தது. அதனால் நண்பர்களையும் பகைத்துக் கொள்ளக்கூடிய திறமை நெப்போலியனுக்கு இருந்தது. பகைவர்களாக யாரை வேண்டுமென்றாலும் மாற்றிவிடக்கூடிய நிலையையும் ஏற்படுத்தினார். ருமேனியப் பிரச்சினையில் அவர் சில நன்மைகளைச் செய்திருக்கிறார். 1856-ல் மாலடேவியாவும் (Moladavia) வாலாச்சியாவும் (Wallachia) சுயாட்சிப் பெற்ற பகுதி களாக நிறுவப்பெற்றன. பிறகு ருமேனியாவின் ஐக்கியத்திற்காக உதவி, வெற்றியும் பெற்றார். அதைப் போன்று போலந்து

மக்களுக்கு விடுதலை வாங்கித்தர வேண்டும் என்று ஃபிரெஞ்சுக் கத்தோலிக்க மக்கள் விரும்பினர். ஏனெனில், போலந்து மக்களும் கத்தோலிக்கரேயாவர். அப்பொழுது போலந்து, ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்களுக்கு விடுதலை வாங்கித்தர வேண்டுமென்ற ஆர்வம் இருந்தபோதிலும், பிரஷ்யாவும், ஆஸ்டிரியாவும் ரஷ்யாவிற்கு உதவி செய்ய முன்வரும் என்றநிலை இருந்ததால் போலந்து மக்கள் 1863-ல் ரஷ்யாவை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தபொழுது பேசாமல் இருந்துவிட்டார். இதன் விளைவாகப் போலந்து மக்கள் வன்மையாக நசுக்கப்பட்டனர். ஃபிரான்சிலுள்ள கத்தோலிக்கர்களுக்கு இதனால் பெரிய அதிருப்தி ஏற்பட்டது.

ரோம் நகரத்திலும் குடியரசு நிறுவப்பெற்ற பொழுது நெப்போலியன் ஃபிரெஞ்சுத் துருப்புகளை அனுப்பி, குடியரசைக் கலைத்து போப்பாண்டவரை மீண்டும் பதவியிருலிக்க உதவி செய்தார். 1849–1870 வரை ஃபிரெஞ்சுத் துருப்புகள் ரோம் நகரத்திலேயே நிறுத்தப்பெற்றிருந்தன. ஃபிரான்சிலுள்ள கத்தோலிக்கர்களைத் திருப்தி செய்வதற்காக இந்த நடவடிக்கையை அவர் எடுத்துக் கொண்டார். அதைப்போன்று துருக்கியப் பிரச்சினையிலும் அவர் தலையிட்டார். ரஷ்யா, துருக்கியிலுள்ள கிறித்துவர்களின் சார்பாகத் தலையிட்டு வந்தது. அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ரஷ்யாவிடம் தரும்படி ரஷ்ய மன்னன் முதலாம் நிக்கோலஸ் (Nicholus-I) துருக்கிச் சுல்தானைக் கேட்டுக்கொண்டார். ஆனால், ஃபிரான்சிற்கு அப்பொழுது ரஷ்யாவைக் கண்டாலே பிடிக்காது. 1812-க்குப் பிறகு ஃபிரெஞ்சு மக்கள் ரஷ்யர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற ஓர் எண்ணத்தை வளர்த்து வந்தனர். ஆனால், அந்தப் பழி உணர்ச்சியைக் காட்டிக் கொள்ளும் வாய்ப்பே எழவில்லை. துருக்கியிலுள்ள கிறித்துவர்களின் சார்பாக ரஷ்யா தலையிடுவதை ஃபிரான்ஸ் விரும்பவில்லை. அதனால் நெப்போலியன் தாம்தான் துருக்கியிலுள்ள கிறித்துவர்களுக்குப் பாதுகாவலனாக இருக்க வேண்டுமென்று துருக்கிச் சுல்தானிடம் கேட்டுக்கொண்டார். அந்த உரிமையும் நெப்போலியனிடமே கொடுக்கப்பட்டது. மேலும், துருக்கியைத் தூண்டிவிட்டு ரஷ்யாவின்மீது போர் தொடுக்கத் தூண்டினார். ரஷ்யாவின் அபாயம் நெருங்கிக் கொண்டிருப்பதைத் துருக்கிச் சுல்தான் நன்கறிவார். அதனால் இந்த வாய்ப்பை நழுவவிடாது ரஷ்யாமீது போர் தொடுத்தார். இதற்குத்தான் கிரிமியப் போர் என்று பெயர். இந்தப் போரில் ஃபிரான்சும், இங்கிலாந்தும் துருக்கியின் பக்கமாகச் சேர்ந்து ரஷ்யாவை எதிர்த்துச் சண்டையிட்டனர். ஆரம்பத்தில் பல தோல்விகள் ஏற்படினும் இறுதியில், ஃபிரான்சும், இங்கிலாந்தும் துருக்கியைச் சீர்குலையவிடாது

பாதுகாத்தனர். 1856-ல் நிகழ்ந்த பாரிஸ் மாநாட்டில் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த மாநாட்டிற்கு நெப்போலியன் தலைமை வகித்தார். இது அவருடைய பெருமையை அதிகரித்தது. ஐரோப்பிய நாடுகளின் விவகாரங்களிலும், அமெரிக்கா, ஆசியா நாடுகளின் பல பிரச்சினைகளிலும் நெப்போலியனின் தலையீடு இருந்தது. உலகில் எந்தப் பகுதியில் ஏதாவது ஒரு கிளர்ச்சி ஏற்பட்டால் அங்கு அவசியம் நெப்போலியனது தலையீடும் இருந்தது.

"மத்திய ஆசியாவில் எந்தப் பகுதியிலாவது அகால மழைப் பெய்தது என்றாலும் அதற்குக் காரணம் நெப்போலியனது திட்டங்களேயாகும்" என்று நகைச்சுவையுடன் பிஸ்மார்க் கூறுகிறார். மூன்றாவது நெப்போலியனுடைய வெளிநாட்டுக் கொள்கை எல்லா ஐரோப்பியப் பிரச்சினைகளில் கலந்திருந்தது. ஆனால் அதே சமயத்தில் அவருடைய கொள்கை மாறுட்டத்திலும், முரண்பாட்டிலும், இறுதியில் நண்பர்கள்கூட எதிரிகளாயினர். அவரது வெளி நாட்டுக் கொள்கையால் நாட்டிற்கும், அவருக்கும், பெரிய நஷ்டம் ஏற்பட்டது. அதனால் பெரிய தொல்லைகளும் ஏற்பட்டன. பிஸ்மார்க் முன்பு, அவரது அரசியல் திட்டங்கள் பயனளிக்கவில்லை. (1870–71) ஃபிரான்சிற்கும் ஜெர்மனிக்கும் நடந்த போரில் நெப்போலியன், ஸெடான் (Sedan) என்ற போர்க்களத்தில் தோற்றுவிட்டதால் அவருடைய அரச பதவியை இழக்க வேண்டியதாயிற்று.

10. கீழைச் சிக்கல்

பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் துருக்கி, ஐரோப்பாவில் ஒரு பெரிய வல்லரசாகத் திகழ்ந்தது. இந்தப் பேரரசில் பலதரப்பட்ட தேசிய இனத்தவரும் குறிப்பாகக் கிறித்துவர்களும் குடியிருந்தனர். அந்த மக்கள் தொகையில் பெருமளவிற்குப் பல்கர்களும், அல்பேனியர்களும், மாசிடோனியர்களும், கிரேக்கர்களும் குடியிருந்தனர். இவர்களெல்லாம் கிறித்துவச் சமயத்தைச் சார்ந்தவர்களாவர். இப் பகுதிகளில் உள்ள மக்களை எல்லாம் துருக்கிச் சுல்தான் அடக்கி ஆதிக்கம் செலுத்திவந்தார். ஆனால், இவர்கள் தேசிய உணர்ச்சிபெற்று, விடுதலைப் பெறவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தனர். ஆதலால், சுல்தானின் ஆட்சி இவர்களைப் பொறுத்தவரையிலும், அந்நிய ஆட்சியாகவும், அடக்குமுறை ஆட்சியாகவும் இருந்தது. முகமதியர்களுக்கும், கிறித்துவ மக்களுக்குமிடையே அடிக்கடி சமயச் சச்சரவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் கிறித்துவர்கள் எல்லாம் ஸ்லாவ் (Slav) இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால், அவரவர்களிடையே, துருக்கியை எதிர்ப்பதற்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டனர்.

அதன்படி கிளர்ச்சிகளும், கலகங்களும், இந்தக் கிறித்துவப் பகுதிகளில் ஏற்பட்டுக்கொண்டே இருந்தன. இம் மக்களுக்குச் சாதகமாக ஐரோப்பிய வல்லரசுகளும் தலையிட்டன. ஸ்லாவ் இனத்தவரை ஆதரிக்க வேண்டுமென்றும், அதனால் இவர்களின் பாதுகாப்பிற்கும், இவர்களது சமய உரிமைகளை நிலைநிறுத்தும் பொறுப்பையும் ரஷ்யா துருக்கிச் சுல்தானிடம் கோரியது. மேலும், இந்த ஸ்லாவ் இனத்தவர்கள் கிரேக்கத் திருச்சபையைச் சார்ந்தவர்களாக இருந்ததால், இனத்தின் அடிப்படையிலும், பண்பாட்டின் அடிப்படையிலும், இவர்கள் ரஷ்யர்களுடன் இணைந்திருக்க வேண்டும் என்று ரஷ்யா நினைவுறுத்தத் தவறவில்லை. துருக்கிச் சுல்தான் அவராகவே இந்தக் கிறித்துவப் பகுதிகளுக்குச் சுதந்தரம்

தரவில்லை யெனின், சமாதான முறையிலோ அல்லது அவசிய மானால் பலாத்கார முறையிலோ அவர்களுக்குச் சுதந்தரத்தை வாங்கித்தர முடியும் என்று ரஷ்யா பயமுறுத்தியது. ரஷ்ய மன்னன் முதலாம் ஜார் நிக்கோலஸ் வெளிப்படையாகவே ரஷ்யாவைத் துண்டாடப் பிரச்சாரம் செய்வதும், பயமுறுத்துவதும் மற்ற ஐரோப் பிய வல்லரசுகளின் பொறுமையைக் கிளறிவிட்டது. துருக்கியின் சீர்குலைவை ரஷ்யா இரண்டாம் காதரைன் காலத்திலிருந்தே எதிர் பார்த்திருந்தது. சமயம் வாய்க்கும்பொழுது துருக்கியின் கடற்கரைப் பகுதிகளைக் கைப்பற்ற ரஷ்யா முயன்றது. இதை யொட்டியே பல உடன்படிக்கைகள், புகேரஸ்ட் உடன்படிக்கை 1812. அட்ரியா நோபிள் உடன்படிக்கை 1829, யுன்கியர் ஸ்கெலஸ்ஸி உடன்படிக்கை (Unkiar Skelessi) 1833-ல் செய் யப்பெற்றன. இச் சமயத்தில்தான் துருக்கியின் பல்வேறு மாகாணங்களில் கிளர்ச்சி ஏற்பட்டது. முகமது அலி (Mohamet Ali) என்பவர் துருக்கிச் சுல்தானின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட ஒரு பிரபு. அல்பேனியாவில் புகையிலை வியாபாரம் செய்துகொண்டிருந்தவர். அவருக்கு எழுதவும் தெரியாது; படிக்க வும் தெரியாது. ஆனால், எப்படியோ துருக்கிக்குச் சேர்ந்த எகிப்து மாகாணத்தின் பாஷாவாகிவிட்டார். கிரேக்கர்களின் கலகத்தை அடக்குவதற்கு இவரும் இவருடைய மகனை இப்ராகியும் துருக்கிச் சுல்தானுக்கு மிகவும் உதவியாக இருந்தனர். இந்தச் சேவைக்குப் பரிசாகத்தான் அவர்களுக்குக் கிரீட் தீவைக் கொடுத்தார். தாங்கள் செய்த சேவைக்கு, இது ஒரு சிறிய பரிசுதான் என்று தந்தையும் மகனும் அதிருப்தி அடைந்திருந்தனர். அவர்கள் சிரியா (Syria) வேண்டுமென்று கேட்டனர். சுல்தான் மறுக்கவே சிரியாவை ஆக்கிரமிப்புச் செய்து பெற அவருடைய மகனை இப்ராகிம் தலைமை யில் ஒரு படையை 1831-ல் அனுப்பினர். ஏக்கர், டமாஸ்கஸ், ஆகிய நகரங்களைக் கைப்பற்றிய பிறகு கான்ஸ்டாண்டிநோபிள் மீதும் படையெடுத்தார். இதனால் சுல்தான் மற்ற ஐரோப்பிய வல்லரசுகளின் உதவியைக் கோரினர். அப்பொழுது எல்லா வல்லரசுகளும் பெல்ஜியம் விவகாரத்தில் ஈடுபட்டிருந்ததால் ரஷ்யாவைத் தவிர, மற்ற எந்த நாடும் உதவ முன்வரவில்லை. ரஷ்யாவின் உதவியை அவ்வளவாக விரும்பாத துருக்கிச் சுல்தான் மனமில்லாது ரஷ்யாவின் உதவியை ஏற்றுக்கொண்டார். சமயத்தை நழுவவிடாது ரஷ்யத் துருப்புகள் ஏராளமாகப் பாஸ்பரஸின் அருகில் இறக்கப்பெற்றன. கப்பல்களையும் அங்கு கொண்டு வந்து நிறுத்தினர். மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்யாவின் எண்ணத்தைப்பற்றிச் சந்தேகம் கிளம்பியது. துருக்கி யின் எல்லைகளிலிருந்து ரஷ்யர்கள் வெளியேற வேண்டுமென்று வேண்டுகோள் விடப்பெற்றன. ரஷ்யா இதைப்பற்றிக் கவலைப்

பட்டதாகத் தெரியவில்லை. அதனால் மற்ற ஐரோப்பிய வல்லரசுகளின் ஆலோசனையின்மீது முகமது அலிக்கே சிரியாவைத் தந்து விடுவதே அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்றதென்று துருக்கிச் சுல்தான் ஒரு முடிவுக்கு வந்தார். இதையொட்டியே ரஷ்யாவிற்குப் பாஸ்பரஸில் சில சலுகைகளை அளித்து, யுன்கியர் ஸ்கெலஸ்ஸி என்ற உடன்படிக்கை 1833-ல் செய்யப்பட்டது.

1839-ல் துருக்கிச் சுல்தான் முகமது அலியிடமிருந்து சிரியாவை மீண்டும் பெறும் பொருட்டு ஒரு படையை அனுப்பினார். ஆனால், சுல்தானுக்குப் பெரிய தோல்வியே ஏற்பட்டது. முகமது அலி ஆத்திரமடைந்து துருக்கியைத் தாக்குவதென்று திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார். இவருக்கு ஃபிரான்சின் அரசன் லூயி பிலிப் உதவியாக இருந்தார். துருக்கியை வீழ்த்துவதற்கான பல மிரட்டல்களில் இதுவும் ஒன்று என்றுணர்ந்த பிரிட்டிஷ் பிரதமர் பாமர்ஸ்டன் எப்படியும் துருக்கியை இந்த மிரட்டல்களிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்று முடிவு செய்தார். முதற்படியாகப் பாமர்ஸ்டன் முகமது அலியை அடக்குவதற்காக அலக்சாண்டிரியாவுக்கு ஒரு கப்பற்படையை அனுப்பினார். மேலும் ஆஸ்டிரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நாடுகளின் உதவியைக் கோரி முகமது அலியின் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார். இதை ஆலோசனை செய்ய இலண்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதற்குப் பிறகு, முகமது அலிக்குச் சொந்தமான எகிப்திலும், ஏக்கரிலும் மட்டும்தான் ஆட்சி செய்ய வேண்டுமே தவிர, துருக்கிச் சுல்தானுடைய எந்தப் பகுதியையும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது என்று அறிவிக்கப்பெற்றது. இந்த எச்சரிக்கையை மீறினால், முகமது அலியிடமிருந்து ஏக்கர் நகரமும் பறிமுதல் செய்யப்படும் என்று முகமது அலிக்கு மற்றொரு எச்சரிக்கையும் விடுத்தனர். இதைக் கண்டு முகமது அலியும், அவருக்கு உதவி செய்ய முன் வந்த லூயி பிலிப் மன்னனும் ஆத்திரம் அடைந்தனர். ஃபிரான்ஸ் இங்கிலாந்தின்மீதும், துருக்கியின்மீதும் போர் தொடுக்கப் போவதாகப் பயமுறுத்தியது. ஆனால், இது வெறும் மிரட்டல் என்று பாமர்ஸ்டன் நன்கறிந்திருந்தார். சிறிது நாட்களுக்குப் பிறகு முகமது அலி இலண்டன் மாநாட்டு ஆலோசனையை ஏற்றுக்கொண்டார். அதனால் துருக்கியின்மீது தொடுக்கப்பெற்ற போர் தவிர்க்கப்பெற்றது. பாமர்ஸ்டனுக்கு இது ஒரு பெரிய வெற்றியாகும்.

இருப்பினும் ரஷ்ய அரசர் முதலாம் ஜார் நிக்கோலஸ் துருக்கியின்மீது இருந்த ஆசையை விடவில்லை. அவர் ரஷ்யாவில் உள்ள ஆங்கிலேயத் தூதுவரிடம் கூறியதாவது, "துருக்கி நெருக்

கடியான நிலையில் இருக்கின்றது. அதன் சீர்குலைவு உறுதி. அது இப்பொழுது ஒரு நோயாளிபோல் இருக்கின்றது. தகுந்த முன்னேற்பாடு செய்வதற்கு முன்னரே, அது அழிந்துவிடலாம். அதன் காரணாக ஐரோப்பாவில் பெரிய கலகமும், குழப்பமும் ஏற்படலாம். அதனால் ஓர் ஐரோப்பியப் போரே ஏற்படலாம். ஆனால், ரஷ்யாவும் இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்தால், இந்தப் போர் தவிர்க்கப்படலாம். இதற்கு ஈடாக ரஷ்யாவிற்குக் கான்ஸ்டாண்டிநோபிளும், இங்கிலாந்திற்கு எகிப்தும், கிரீட்டும் சொந்தமான பகுதிகளாக்கிக்கொள்ளலாம்.'' இங்கிலாந்திற்கு எகிப்தைச் சொந்தமாக்கிக்கொள்ளும் விருப்பம் இல்லை. சூயஸ் கால்வாய் அப்பொழுது இல்லை. ரஷ்யாவுடன் ஆப்கானிஸ்தானத்திலுள்ள தூரக் கிழக்கு விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளவில்லை. இந்தியாவின்மீது ரஷ்யாவின் கண்ணோட்டம் இருந்துகொண்டே வந்தது. அதனால் முதலாம் நிக்கோலஸ் கூறுவதையெல்லாம் பாமர்ஸ்டன் நம்பத் தயாராக இல்லை. துருக்கிச் சீர்குலைந்து வருவது என்பது வெறும் கட்டுக் கதையாகும். ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கிக்கு நல்லவிதமாக உதவி செய்தால் அது மீண்டும் நல்ல நிலையில் இருக்க முடியும் என்று கூறினர். அதனால் அவர் நிக்கோலஸின் ஆலோசனையை ஏற்க மறுத்தார். துருக்கியின் மீது ஆக்கிரமிப்புச் செய்வதற்கான வாய்ப்புகளை ரஷ்யா எதிர் பார்த்துக்கொண்டிருந்தது. ரஷ்யாவின் செல்வாக்குப் படிப் படியாகப் பால்கன் பகுதிகளில் பரவி வந்தது. இதனால் மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் சிறிது விழிப்புடனேயே இருந்தன. பால்கனில் ரஷ்ய ஆதிக்கம் பரவுவதால், உடனடியாகப் பாதிக்கப் படும் நாடு ஆஸ்டிரியாவாகும். பால்கனில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை அனுமதிப்பதைவிட துருக்கிச் சீர்குலைவதைத் தடுப்பதே, சிறந்த கொள்கையென்று ஆஸ்டிரியா கருதியது. அதனால் ஆஸ்டிரியாவிற்கும் ரஷ்யாவிற்கும் பகைமை வளர்ந்தது. எங்கு இந்தியாவின்மீது ரஷ்யா ஆக்கிரமிப்பைச் செலுத்தப்போகின்றதோ என்று விழிப்புடன் இங்கிலாந்து இருந்தது. அதனால் பிரிட்டன், ரஷ்யா உறவு பாதிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே ஃபிரான்சிற்கும், ரஷ்யாவிற்கும் ஸ்லாவ் கிறித்துவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது யார் என்ற விவகாரத்தில் பலத்த போட்டி இருந்தது. அதனால் அந்த இரு நாடுகளுக்கும் பகைமை வளர்ந்ததில் வியப்பில்லை. இந்தப் பிரச்சினைத் தீர்க்கப்படாதவரையிலும் கீழைச் சிக்கல் மேலும் குழப்பநிலை அடைய நேரிடும் என்று வல்லரசுகள் தெரிந்திருந்தும் இதை யார் சார்பாகத் தீர்த்து வைப்பது என்ற ஒரு சங்கடமானநிலை இருந்தது. ரஷ்யா, ஸ்லாவ் மக்களின் பாதுகாவலனாக இருப்பதைப் பிரிட்டன் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. முடிவு செய்யாமல், இந்தப் பிரச்சினையைத் துருக்கிச்

சுல்தான் காலம் கடத்திக்கொண்டே வந்தார். அதனுல் ரஷ்யா ஆத்திரமடைந்து 1853 ஜூலை மாதத்தில் மாலடேவியா, வாலாச்சியா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டது. இப் புதிய நிலையைப் பரிசீலனை செய்ய ஐரோப்பிய வல்லரசுகள் வியன்னுவில் கூடின. இதை மாநாட்டில் ரஷ்யாவே துருக்கியி லுள்ள கிறித்துவர்களுக்குப் பாதுகாவலாக இருக்கட்டும் என்ற முடிவைத் துருக்கிச் சுல்தானுக்கும், ரஷ்ய ஜாருக்கும் தெரிவித்தனர். ஆனுல், அவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள உள்நாட்டுப் பிரச்சினைகளில் ரஷ்யா எவ்விதத்திலும் தலையிடக்கூடாது என்று ரஷ்யாவிற்கு அறிவிக்கப்பட்டது. பிரிட்டனுடைய ஆதரவுடன் துருக்கி ரஷ்யாவிற்கு ஓர் எச்சரிக்கை விடுத்தது. அந்த எச்சரிக்கையில், ரஷ்யா ஒரு கிறித்துவச் சுதந்தர நாட்டை அதனுடைய ஆதரவில் துருக்கியில் நிறுவ முயற்சி செய்யக்கூடாது என்பதேயாகும். ரஷ்யா இந்த உரிமையை இழந்துவிட சம்மதிக்க வில்லை. அதனுல் துருக்கிச் சுல்தான் ரஷ்யாவின்மீது 1853 அக்டோபர் மாதத்தில் போர் தொடுத்தார். துருக்கிக்கு வேண்டிய ஆதரவு அளித்தது பிரிட்டனேயாகும். டேன்யூபை (Danube) நோக்கித் துருக்கியப் படைகள் சென்றன.

துருக்கியை மையமாக வைத்துக்கொண்டு மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் அரசியல் சூதாட்டத்தை நடத்திக்கொண்டிருந்தன. துருக்கியின் சீர்குலைவே இதற்குக் காரணமாகும். மேற்கூறிய காரணங்களால் ஐரோப்பிய வல்லரசுகள் கிரிமியப் போரில் ஈடுபடலாயின. கீழைச் சிக்கலில் கிரிமியப் போர் ஒரு முக்கிய மான கட்டமாகும்.

கிரிமியப் போரின் போக்கு

பால்கனில் ரஷ்யாவின் செல்வாக்கை நிறுவ முடியாமல் செய்யவும் இந்தியாவின்மீது படையெடுக்க ஒரு வாய்ப்பை ரஷ்யாவிற்குத் தராதவாறும் பார்த்துக்கொள்ளும் பொறுப்புப் பிரிட்டனைச் சார்ந்ததாக இருந்தது. ஃபிரெஞ்சுப் பேரரசன் மூன்றும் நெப்போலியன் துருக்கியிலுள்ள கிறித்துவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாக வும், அந்தக் கிறித்துவர்களுக்குப் போலந்தில் ஏற்பட்ட ரஷ்யக் கொடுமைகள் இங்கேயும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதும் ஃபிரான்சின் கடமையென்றும் அவர் அறிவித் தார். முக்கியமாக, வாய்ப்புக் கிடைக்கும்பொழுது மற்ற நாடு களின் வெளி விவகாரங்களில் தலையிடுவதும், பிறகு போரில் ஈடுபட்டு, ஃபிரெஞ்சு மக்களுக்கு வெற்றியும், தமக்குப் புகழையும் பெற்றுக்கொள்வது நெப்போலியனுடைய குண இயல்பாகும்.

தவிர, அவருடைய பெரியப்பாவான முதலாம் நெப்போலியன் ரஷ்ய மன்னனுன ஜார் அலெக்சாந்தரால் பல தீமைகளுக் குள்ளானவர். அவற்றுக்குப் பழிவாங்கும் சமயம் இப்பொழுது தான் கிட்டியது என்று இறுமாந்திருந்தார். மூன்றும் நெப் போலியன் இக் காரணங்களால் துருக்கியின் சார்பாகப் போர் செய்வது என்று முடிவு செய்தார். கவூரின் தூண்டுதலால் ஸார்டினு (Sardinia) என்ற இத்தாலிய நாடும் துருக்கியின் சார்பாகச் சேர்ந்து போரிட்டது. மற்ற வல்லரசுகளின் கண்களுக்கு ஸார்டினுவின் முக்கியத்துவம் தெரியவேண்டும் என்பதற்காக, அது போரில் ஈடுபட்டது. பிரஷ்யா, கீழைச் சிக்கலின் விளைவுகளை மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து வந்தபோதிலும், அந்த நாடு போரில் இறங்கவில்லை. அதனுடைய சக்தியைக் கிரிமியப் போரில் செலவழித்துவிட விரும்பவில்லை. அதனால், பிரஷ்யா நடுநிலைமை வகித்தது. ஆஸ்டிரியாவிற்கு ரஷ்யர்களிடமிருந்தும் மற்ற ஐரோப்பிய வல்லரசுகளிடமிருந்தும் சில சலுகைகளைப்பெற வேண்டியிருந்ததால், நடுநிலைமை வகிப்பதுதான் நல்லது என்று கருதியது.

இரண்டுக் கண்டங்களில் கிரிமியப் போர் நிகழ்ந்தது. முதலில் ரஷ்யப் படைகள், கீழ் டேன்யூபில் உள்ள மாலடேவியா, வாலாச்சியா ஆகிய பகுதிகளை ரஷ்யா ஆக்கிரமித்துக்கொண்டது. இச் சமயத்தில்தான் பிரிட்டனும், ஃபிரான்சும் துருக்கிக்கு உதவி செய்ய முன் வந்தன. ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட பகுதிகளி லிருந்து ரஷ்யா பின்வாங்கிக்கொண்டது. அந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்து கொண்டிருக்கலாம். ஆனால், அவர்கள் ரஷ்யாவிற்கு ஒரு படிப்பினையைத் தரவேண்டுமென்பதற்காக மேலும், போரைத் தொடர்ந்து, கிரிமியாவில் உள்ள செபாஸ்டபூலை (Sebastapool) தாக்கினர்.

கிரிமியப் போரின் இரண்டாவது கட்டத்தில் பிரிட்டன் தீவிர மாகப் பங்குகொண்டது. பிரிட்டனுடைய யுத்த ஏற்பாடுகள் திட்டமிட்டுச் செய்யப்படாததால், ரஷ்யாவை முறியடிக்கும் வாய்ப்பை இழந்துவிட்டது. 1854 செப்டம்பர் 20 ஆம் தேதியன்று நேசப்படைகள் கிரிமியாவில் இறங்கின. அல்மா என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் வெற்றியும் பெற்றன. இந்த வெற்றி யைப் பயன்படுத்தியிருந்தால் செபாஸ்டபூல் என்ற துறைமுக நகரை வெகு எளிதில் பிடித்திருக்கலாம். இதைச் செய்யாதது நேச நாடுகளின் தவருகும். இதற்குப் பதிலாக ஃபிரெஞ்சு ஆலோசனையை ஏற்று, நேசப்படைகள் தெற்கே முன்னேறி

பாலக்லாவா (Balaklava) என்ற பகுதியைக் கைப்பற்ற முயற்சி செய்தன. பாலக்லாவாவிலும், இங்கர்மேனிலும் (Inkerman) நேசப் படைகள் ரஷ்யத் துருப்புகளை முன்னேற விடாதபடித் தோற் கடித்தன. 1855 ஆகஸ்டு மாதத்தில் ஃபிரெஞ்சு ஸார்டினியத் துருப்புகளும் சேர்ந்து டெகர்நயா (Tchernaya) என்ற போர்க் களத்தில் ரஷ்யர்களைத் தோற்கடித்தன. மூன்று வெற்றிகளைப் பெற்ற போதிலும் செபாஸ்டபூலைச் சரியானபடி நேச நாடுகளின் துருப்புகளால் பாதுகாக்க முடியவில்லை. ரஷ்யர்கள் பாலக்லாவை நோக்கித் தாக்கினர். நேச நாட்டுத் துருப்புகள், கடும் தாக்குதல் களுக்குள்ளாகின. அவர்கள் அடைந்த தொல்லைகளுக்கு ஓர் அளவே இல்லை. அவர்களுக்கு எதிராக இயற்கையும் சதி செய்தது. கடும் புயல், பனி, இவற்றைவிட காலரா ஆகிய தொற்றுநோயினால் நேசப் படையில் பலர் இறந்தனர். பலர் உயிருக்கு மன்றாடினர். போதிய உணவும், போதிய வைத்திய வசதிகளும் போர் வீரர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்பொழுது தான் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற பெண்மணி காயமடைந் தவர்களுக்கும் நோய்ப்பட்டவர்களுக்கும், மிகச் சிறப்பான சேவை களைச் செய்து தன்னலமற்றத் தியாகி என்ற மங்காப் புகழைப் பெற்றார். இந்தப் போர் முடிந்த பின்பும்கூட, அவர் நர்சுகளின் நிறுவனத்தை ஏற்படுத்தி, மற்ற நர்சுகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினர். செஞ்சிலுவைச் சங்கத்தின் தோற்றமே ஓரளவிற்கு இப்பொழுதிருந்துதான் ஆரம்பமாகியது. நேசப் படை களின் தொல்லைகளைப் பற்றியும், பெரும்பான்மையோர் வைத்திய வசதியுமின்றி இறந்ததைப் பற்றியும் இங்கிலாந்திலுள்ளவர் களுக்குத் தெரியவே, ஆங்கிலேய மக்கள் பெரிய ஆர்ப்பாட்டங் களைச் செய்து, பிரதம அமைச்சரான அபர்டீன் பிரபுவை ராஜிநாமா செய்யக் கோரினர். அவர் ராஜிநாமாச் செய்யவே பாமர்ஸ்டன் 1855-ல் பிரதமரானார். அதே ஆண்டில் ரஷ்ய ஜாரான முதலாம் நிக்கோலஸ் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவர் இரண்டாம் அலெக்சாந்தர் என்பவராவர். அவர் சமா தானத்தை விரும்பினர். ரஷ்ய மக்களுக்கும் இந்தப் போரினால் பெரிய நஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்களும் சமாதானத்தையே எதிர்பார்த்தனர். அவர்களுக்குப் போரைத் தொடர்ந்து நடத்து வதற்குப் போதிய போக்குவரத்து வசதிகள் கிடைக்கவில்லை. மேலும் காகசஸ் பகுதியில் உள்ள கார்ஸ் (Kars) நகரை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. ஆனால், சமாதான பேச்சு வார்த்தைகள், நான்கு அம்சங்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பெற்றன. இதற்குள் நடுநிலைமை வகித்து வந்த ஆஸ்டிரியாவும், ரஷ்யாவிற்கு இறுதி எச்சரிக்கை விடுத்தவுடன் ரஷ்யா போரை நிறுத்தியது. பாரிஸ் நகரத்தில் 1856-ல் ஒரு சமாதான உடன்படிக்கை

ஏற்பாடாகியது. அதன்படி ரஷ்யா அதற்குச் சொந்தமான பெஸராபியா (Bessarabia) பகுதியைக் காலி செய்து டேன்யூபி விருந்து வெகு தூரத்திற்கு அப்பால் அதனுடைய எல்லையை அமைத்துக் கொள்வது; இந்த டேன்யூப் பகுதியிலுள்ள ரஷ்யாவின் ஆதிக்கத்தை நிறுத்திக்கொண்டு அதற்குப் பதிலாக இந்தப் பகுதிகளில் துருக்கியின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்வது; கருங்கடலில் (Black Sea) யுத்தக் கப்பல்களைத் தவிர, மற்ற எல்லா நாடுகளின் வர்த்தகக் கப்பல்களை அனுமதிப்பது. துருக்கியின் சுதந்தரத்தை உறுதிபடுத்தியும் எந்த வல்லரசும் சுல்தானிடமோ, அல்லது சுல்தானின் குடிமக்களுடைய விவகாரங்களிலோ தலையிடக்கூடாதென்றும், இந்தப் பாரிஸ் உடன்படிக்கையில் நிர்ணயம் செய்யப்பெற்றன. ஆனால், துருக்கிச் சுல்தான், மொலடேவியா, வாலாச்சியா, ஸெர்பியா ஆகிய பகுதிகளில் வசிக்கும் கிறித்துவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கியும், அவர்களுடைய சமய விவகாரங்களில் பிரவேசிப்பதில்லையென்றும் உறுதிமொழி அளித்தார். இந்த உடன்படிக்கை துருக்கிச் சுல்தானுக்கு நன்மை அளிக்கக் கூடியதாகவே இருந்தது. மேலும் துருக்கியின் சீர்குலைவும் தவிர்க்கப்பெற்றது.

கீழைச் சிக்கலின் இரண்டாவது கட்டம்

பாரிஸ் உடன்படிக்கைக்குப் பிறகு துருக்கியில் இருபது ஆண்டுகள் வரையிலும் அமைதி நிலவியிருந்தது. பாரிஸ் மாநாடு முடிவடைந்த உடனேயே ஃபிரெஞ்சுப் பேரரசன் மூன்றும் நெப்போலியன் ருமேனியப் பகுதிகளான மாலடேவியா, வாலாச்சியா ஆகியவற்றை இணைக்கவேண்டும் என்ற பிரச்சினையில் ஈடுபட்டார். 1861-ல் இந்த இணைப்பு வெற்றிகரமாகவே நடந்தது. அதைவிட ருமேனியாவிற்குச் சுதந்தரமும் கிடைத்தது. கூஸா (Cowza) என்ற பிரபு ருமேனியாவிற்கு அரசரானார். இந்த அரசன் பல சீர்திருத்தங்களைச் செய்தும், மக்கள் அவர்மீது திருப்தி கொள்ளவில்லை. இதற்கு முக்கிய காரணமாக இருந்தது, அவர் மடாலயங்களை எல்லாம் ஒழித்ததால்தான். அதனால் அவர் பட்டத்தை விடவேண்டியநிலை ஏற்பட்டது. பிறகு ஹோகன்ஸாலர்ன் ஸிக்மாரிங்கன் (Hohenzollern Zigmaringen) வம்சா வழியைச் சார்ந்த இளவரசன் சார்லஸ் அல்லது கேரால் என்பவர் பட்டத்திற்கு வந்தார். 1914 வரை அவர் ஆட்சி செய்தார்.

1876-ல் மீண்டும் இந்தக் கீழைச் சிக்கல் ஆரம்பமாகியது. பாரிஸ் உடன்படிக்கையில் வாக்களித்தபடி துருக்கிச் சுல்தான் தம் கிறித்துவக் குடிகளுக்குச் சலுகைகள் அளிக்கவில்லை. அதற்குப் பதில் அவர்களுக்குப் பல கொடுமைகள் இழைக்கப்பெற்றன.

அவர்களுடைய மத உரிமைகளும், அரசியல் உரிமைகளும் நாளடைவில் பறிபோய்விடும் நிலைமை வந்துவிட்டது. துருக்கியிலேயே லஞ்ச ஊழல்கள் பெருகிவிட்டன. ஆட்சி மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. ஹெர்ஸிகோவினு, மாண்டிநிக்ரோ ஆகிய பால்கன் பகுதிகளிலுள்ள கிறித்துவர்கள், துருக்கிச் சுல்தானது கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இவர்களைப் பின்பற்றிப் பல்கேரியர்களும் ஸெர்பியர்களும் கலகம் விளைவித்தனர். இந்தப் பால்கன் பகுதியில் உள்ள கிறித்துவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தங்களது சுதந்தரத்தை எப்படியும் அடைய வேண்டுமென்று உறுதியாக இருந்தனர். இவர்களுக்கெல்லாம் ரஷ்யா ஆதரவளித்தது. அகில ஸ்லாவ் இயக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், தக்கச் சமயத்தில் ரஷ்யா அதன் ஆதிக்கத்தைப் பால்கனில் மீண்டும் பரப்பவேண்டுமென்று விரும்பியது. ஆனால், துருக்கிச் சுல்தான் இக் கலகக்காரர்களை எப்படியும் ஒடுக்கி விடுவதென்று இராணுவத்தை அப் பகுதிகளுக்கு அனுப்பினர். அப் படையினர் பெண்கள், குழந்தைகள் என்றெல்லாம் பாராது பல படுகொலைகளைப் புரிந்தனர். ஐரோப்பிய வல்லரசுகள் இப் படுகொலைகளைக் கேட்டு மனம் வெந்தனர். பல்கேரியாவில் நிகழ்ந்த படுகொலைகளைக் கேட்ட ஆங்கிலேய மக்கள் கொதிப்படைந்தனர். சுமார் 30,000 பேர் வரையிலும் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டது. அப்பொழுது ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த கிளாட்ஸ்டன்கூட வெளியில் வந்து துருக்கியின் அக்கிரமங்களைக் கண்டித்து ஒரு சிறு நூலை வெளியிட்டார். அதில் துருக்கியை மூட்டை முடிச்சுகளுடன் அப் பகுதிகளிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று அவர் மிகவும் வன்மையாகக் கண்டித்தார். அந்த நாட்டு மக்களுடைய அபிப்பிராயத்தைத்தான் அவர் பிரதிபலித்தார். ஆனால், கிளாட்ஸ்டன் அப்பொழுது பதவியில் இல்லை. அப்பொழுதிருந்த டிஸ்ரேலி என்பவர் துருக்கியின் அக்கிரமங்களைவிட ரஷ்யாவின் அபாயத்தைத்தான் மிகவும் பெரிதாக நினைத்துக்கொண்டிருந்தார். துருக்கியின் விவகாரங்களை விவாதிக்கக் கான்ஸ்டாண்டிநோபளில் வல்லரசுகள் மாநாடு கூட்டப்பெற்றது. துருக்கியின்மீது அபாண்டங்களைச் சுமத்த ரஷ்யா தயாராக இல்லை. ரஷ்யாவுக்குச் சார்பாக வந்த வல்லரசைத் தம் பக்கம் இழுக்கலாம் என்று ரஷ்யாவின் ஜார், இரண்டாம் அலெக்சாந்தர் பெரும் முயற்சியில் ஈடுபட்டார். ஃபிரெஞ்சுப் பேரரசரான மூன்றும் நெப்போலியன் ரஷ்யாவின் உறவை வேண்டியிருந்த போதிலும், வெளிப்படையாக ரஷ்யாவை நேச நாடுகளுடன் சேர்த்துக் கொள்ளவோ அல்லது தனிப்பட்ட முறையில் ஓர் இரகசிய உடன்படிக்கையைச் செய்து கொள்ளவோ துணியவில்லை. பிரஷ்யாவும், ஆஸ்டிரியாவும்

நடுநிலைமை வகித்தன. ஃபிரான்சிற்கு இது பிடிக்கவில்லை. இத்தாலியின் ஐக்கிய இயக்கமும் சுதந்தர இயக்கமும் நெப்போலியனது தேசியக் கொள்கைகளாக இருந்ததால் ரஷ்யா இந்த விவகாரத்தில் ஃபிரான்சிற்கு ஆதரவாக இருப்பதாகவும், இத்தாலி விஷயத்தில் தலையிடாமல் இருப்பதாகவும் நெப்போலியனிடம் அறிவித்தது. துருக்கியின் சீர்குலைவு ஏற்படாத வண்ணம் பாதுகாக்கப் பிரிட்டன் அதனுடைய செல்வாக்கைப் பிரயோகித்தது. நெப்போலியனுக்குப் பிரிட்டனுடைய ஆதரவும் தேவைப்பட்டது. முதலாம் நெப்போலியன் செய்ய முடியாதவற்றை மூன்றாம் நெப்போலியன் செய்ய முயன்றார். பிரிட்டனின் உறவு ஃபிரெஞ்சு வெல் திறன் வரலாற்றில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இப்படிப் பலவிதமான நோக்கங்களைக் கொண்ட வல்லரசுகளின் பிரதிநிதிகள் கான்ஸ்டாண்டிநோபிளில் கூடிய பொழுது துருக்கிச் சுல்தான் அப்துல் ஹமீது வல்லரசுகளைப் பேதிர்ச்சிக்குள்ளாக்கினர். துருக்கிக்கு ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்தி அதைச் செயலாற்றினர். அதன்படி, துருக்கியிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் சுயாட்சி சலுகைகளும், பல உரிமைகளும் தரப்பெற்றன. அரசியல் அமைப்பை ஏற்படுத்தி விட்டதால் இந்த வல்லரசுகள் மேலும் எவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவாதித்தனர். துருக்கியில் உள்ள கிறித்துவர்கள்மீது செலுத்தி வந்த ஆதிக்க உரிமையை ரத்து செய்ய வேண்டுமென்று கோரினர். ஆனால், இந்த மாநாட்டில் விவாதங்களைத் தவிர உருப்படியான எந்த முடிவும் செய்யப்படவில்லை. பாரிஸ் மாநாட்டின் முடிவுகளை எப்படியும் ரத்து செய்துவிட வேண்டும் என்று ரஷ்யா முயற்சி செய்தது. அந்த முயற்சியிலும் வல்லரசுகள் பலதரப்பட்ட எண்ணங்களைக் கொண்டிருந்ததால் ரஷ்யா, மற்ற வல்லரசுகளின் ஆதரவைப் பெற முடியவில்லை. ஆனால் ரஷ்யா சமயம் பார்த்து 1877 ஏப்ரல் 14ஆம் தேதியன்று துருக்கியின்மீது போர் பிரகடனம் செய்தது. ஆஸ்டிரியா–ஹங்கேரி நடுநிலைமை வகித்தன. தவிர, ருமேனியா, ரஷ்யாவிற்கு உதவி செய்ய ஒப்புக் கொண்டது. டேன்யூப் நதிக்கரை பிரதேசங்களைத் தாக்க ருமேனியா ஒரு கேந்திர நிலையமாக இருந்தது. ரஷ்யப் படைகள் ஜூன் 22ஆம் தேதியன்று டேன்யூப் நதியைக் கடந்து கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கி முன்னேறினர். வழியில் பிளவ்நா (Plevna) கோட்டையையும், சோபியா, அட்ரியானோபிள் நகரங்களையும் கைப்பற்றினர். ஏற்கனவே காக்ஸஸில் உள்ள கார் பகுதி ரஷ்யர்கள் வசம் சிக்கியது. ஸெர்பியன், மாண்டிநிக்ரோ துருப்புகள் ரஷ்யர்களுக்கு உதவி செய்தன. துருக்கிச் சுல்தானுக்கு இப்பொழுது நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அதனால் அவர் ரஷ்யாவுடன் சமாதான உடன்படிக்கை செய்துக் கொள்ளத்

தயாராக இருப்பதாக அறிவித்தார். இந்த வேண்டுகோளை ஏற்று 1878-ல் சான் ஸ்டபனே (San Stefano) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கையைத் தயாரித்தனர். இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி மாண்டிநிக்ரோ, ஸெர்பியா, ஆகிய பகுதிகள் விஸ்தரிக்கப்பெற்றுத் தனிச் சுதந்திரம் பெற்ற நாடுகளாகிவிட்டன. போஸ்னியாவிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு அப் பகுதிகளின் பாதுகாப்பு, ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய இரு நாடுகளின் பொறுப்பில் விடப்பட்டது. ஆர்மீனியர்களுக்கும் சீர்திருத்தங்கள் தரப்பெற்றன. ஆசியாவில் ரஷ்யாவிற்கு பேடம் (Batum), கார்ஸ் (Kars) ஆகிய பகுதிகளும் கிடைத்தன. ஐரோப்பாவில் ரஷ்யாவிற்குச் சொந்தமான டோப்ரூட்ஜா (Dobrudja) பகுதியை ருமேனியாவிற்கு அளித்துவிட்டு, பெஸரேபியா (Bessarabia) பகுதியை ருமேனியாவிடமிருந்து ரஷ்யா பெற்றுக் கொண்டது. இவைகளைவிட முக்கியமானது புதிய பல்கேரியா நாடு (Bulgaria) ஒன்று நிறுவப்பெற்றது. அதனுடைய எல்லைகள் டேன்யூபிலிருந்து ஏகியன் (Aegean) வரையிலும் பரவியிருந்தன. தெற்கே கருங்கடல் வரையிலும், மேற்கே மொனஸ்டிர் (Monastir) வரையிலும் விஸ்தரிக்கப்பெற்றன. இந்தப் புதிய நாடு ஒரு கிறித்துவ அரசாங்கத்தால், சுயாட்சி உரிமைகளுடன் ஆட்சி செய்யப்படும் என்று ஏற்பாடாயிற்று. சான் ஸ்டபனே உடன் படிக்கை ரஷ்யாவின் மகத்தான வெற்றியை எடுத்துக் காட்டியது. இதனால் பால்கனில், ரஷ்யாவின் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அங்குப் புதிதாக ஏற்பட்ட நாடுகளெல்லாம் ரஷ்யாவின் முயற்சியால் நிறுவப் பட்டன என்பது தெரிந்ததே. அப் பகுதியிலுள்ள ஸ்லாவ் இனத் தினர் ரஷ்யாவிற்கு மிகவும் ஆதரவாக இருப்பார்கள் என்று பொதுவாக நம்பினர். ரஷ்யாவும் 1856-ல் பாரிஸ் உடன்படிக்கையினால் ஏற்பட்ட இந்த இழிவை மாற்றிவிட்டது.

ஆனால் இந்த உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு, ஐரோப்பிய வல்லரசுகள் ரஷ்யாவின் இந்த வெற்றிச் சாதனையை அங்கீகரிக்க முன் வரவில்லை. ரஷ்யா வாக்களித்தபடி, ஆஸ்டிரியாவிற்குப் போஸ்னியா, ஹெர்ஸிகோவினாவில் தனி ஆதிக்கம் செலுத்த வாய்ப்பளிக்கவில்லை. ருமேனியாவின் உதவிக்காகத் தகுந்த பரிசை ரஷ்யா தரவில்லை என்ற வருத்தம் ருமேனியர்களுக்கு இருந்தது. புதிதாக நிறுவப்பெற்ற எல்லாக் கிறித்துவ நாடுகளுக்கும் பல்கேரியாவைக் கண்டு பொறுமை ஏற்பட்டது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டிஷ் பிரதமர் டிஷ்ரேலியும், ஆஸ்டிரியா அரசனும் இந்தச் சான் ஸ்டபனே உடன் படிக்கையை மறு பரிசீலனை செய்து திருத்தி அமைக்க வேண்டு

மென்று வற்புறுத்தினர். ரஷ்யா அவர்களது விருப்பத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஆனால், இங்கிலாந்து ரஷ்யாமீது போர் தொடுக்கப் போவதாகப் பயமுறுத்தியது. ஆஸ்டிரியாவிற்குத் துணையாகப் பிஸ்மார்க்கும் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளத்தான் வேண்டுமென்று ரஷ்யாவை வற்புறுத்தினர். ஐரோப்பிய வல்லரசுகள் ஒன்றுகச் சேர்ந்துவிட்டதால், ரஷ்யா வேறு வழியின்றி ஓர் ஐரோப்பிய மாநாட்டைப் பெர்லினில் கூட்டிப் புதிய உடன்படிக்கையைச் செய்துகொள்ள சம்மதித்தது.

1878-ல் ஓர் ஐரோப்பிய வல்லரசுகளின் மாநாடு பெர்லின் நகரத்தில் புதிய ஜெர்மன் பேரரசின் சான்சலரான பிஸ்மார்க்கின் தலைமையில் கூடியது. இந்த மாநாட்டில் ரஷ்யாவின் பால்கன் ஆதிக்கத்தை எப்படிக் குறைப்பது என்றும், சான் ஸ்டபனோ உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிபந்தனைகளை எப்படி மாற்றுவது என்றும் அதிகமாக விவாதித்தனர். பிறகு கீழ்க்கண்ட முடிவுகளை இந்த மாநாட்டில் செய்தனர்.

ரஷ்யாவிற்குத் தரப்பெற்ற பெஸரேபியா, பேட்டம், அர்தஹான், (Ardahan) கார்ஸ் ஆகிய பகுதிகளை அப்படியே அங்கீகரித்தனர். ருமேனியா, ஸெர்பியா, மாண்டிநிக்ரோ, தனிச் சுதந்தர நாடுகளாக அங்கீகரிக்கப்பெற்றன ருமேனியாவிலிருந்து பிரிக்கப்பெற்ற பெஸ்ரேபியாவிற்குப் பதிலாக டோப்ரூட்ஜா (Dobrudja) என்ற பகுதி ருமேனியாவிற்குத் தரப்பெற்றது. போஸ்னியா, ஹெர்ஸிகோவினா ஆகிய பகுதிகளின் அரசியல் ஆதிக்கம் ஆஸ்டிரியாவிற்கு மட்டும் தரப்பெற்றது. ரஷ்யாவின் ஆதிக்கத்தில் ஆசியப் பகுதிகளான கார்ஸ், பேட்டம் இருக்கின்ற வரையில், இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் சைப்ரஸ் தீவுகளின் ஆட்சியும் ஒப்படைக்கப்பட்டது. எதிர்காலத்தில் டூனிஸ் பகுதியில் ஃபிரான்ஸ் ஆதிக்கம் செலுத்த அனுமதி கோரியது. அல்பேனியா, டிரிபோலி ஆகிய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்த இத்தாலி கோரியது. ஜெர்மனி மட்டும் ஒன்றும் கேட்காது, மற்ற நாடுகளின் நோக்கங்களைக் கவனித்து வந்தது. அதனால் சுல்தானின் பாராட்டுதலை மட்டும் அடைந்தது. சுல்தான் அவருடைய ஆதிக்கத்தின்கீழுள்ள ஆசிய மக்களுக்குப் பல உரிமைகள் அளிப்பதாக வாக்களித்தார். சான் ஸ்டபனோ உடன்படிக்கையால் நிறுவப்பெற்ற பல்கேரியா, இப்பொழுது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பெரும்பகுதியான மாசிடோனியாவைத் துருக்கியிடமே தந்துவிட்டனர். ஒரு பகுதியான கிழக்கு ருமேலியாவைத் (East Rumelia) துருக்கியின் பாதுகாப்பில் விட்டனர். ஆனால், அங்கே கிறித்துவ அரசாங்கமே நிறுவப்படவேண்டுமென்று ஒப்புக்

கொள்ளப்பெற்றது. எஞ்சியிருந்த பகுதியைச் சுதந்தர பல்கேரியா நாடென்று அங்கீகரிக்கப்பெற்றது.

கிரீட் (Crete), தெஸ்ஸலி (Thessaly), எபிரஸ் (Epirus) மாசிடோனியாவின் ஒரு பகுதி ஆகியவற்றைக் கிரீஸ் கோரியது. ஆனால், அதனுடைய கோரிக்கையை மாநாடு ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தப் பெர்லின் மாநாட்டு முடிவுகள் ஓரளவிற்கு ரஷ்யாவின் ஆதிக்கத்தைப் பால்கனில் குறைத்தன. ஆனால், வெகு விரைவில் ரஷ்யா அதன் கவனத்தை ஆசியாவின் பக்கமும், அத்துடன் பால்கனிலும் செலுத்தியது. போஸ்னியா (Bosnia), ஹெர்ஸிகோவினு (Herzegovina) ஆகிய பகுதிகளில் நிறுவப்பெற்ற ஆஸ்டிரியா ஆதிக்கம் ரஷ்ய ஆதிக்கத்தைவிட மோசமாக இருந்தது. போஸ்னியர்கள் ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தைச் சிறிதும் விரும்பவில்லை. ஆஸ்டிரியாவிற்குச் சாதகமாக ஜெர்மனி இந்த மாநாட்டில் உதவியதால், நாளடைவில் ரஷ்யா அதனுடைய இராச்சிய உறவை ஃபிரான்சுடன் பலப் படுத்திக் கொண்டது. இதனால் 1894-ல் ஃபிரெஞ்சு–ரஷ்ய உடன்பாடு ஏற்பட்டது. ஜெர்மனி ரஷ்யாவின் உறவை நிரந்தர மாக இழந்துவிட்ட நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் அவைகளின் உறவைப் பயன்படுத்திக் கொண்டன. ஐரோப்பாவில் வல்லரசுகளின் ஆதிக்க வெறியும், போட்டியும், கோஷ்டிகளைச் சேர்த்துக் கொள்ளுதலும் வலு வடைந்தன. அதனால் அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டது. முதல் உலகப் போர் நேர்வதற்கான சூழ்நிலை இந்த மாநாட்டில் உருவாக்கப் பெற்றது. துருக்கியின் சீர்குலைவைத் தவிர்த்ததால், எல்லா வல்லரசுகளும் சமயத்தை நழுவவிடாது பல சலுகைகளைத் துருக்கியில் பெற்றன. ஆனால், அந்த வல்லரசுகளுக்கிடையே போட்டியும் பொறுமையும் வளர்ந்தன. துருக்கிச் சுல்தான் தம் ஆசியக் குடிகளுக்கு வாக்குறுதியளித்த உரிமைகளை நிறை வேற்றவில்லை. முன்னர், ஐரோப்பியக் குடிகளுக்கு அளித்த உரிமைகளை எப்படி நிறைவேற்றுதவாறு அவர்களுடைய வெறுப் பையும் பகைமையும் பெற்றுக்கொண்டாரோ, அதே போன்று ஆசியப் பகுதிகளிலும் சுல்தானின் ஆட்சி வெறுக்கப்பெற்றது. பால்கன் பகுதியில் பல சிறிய நாடுகள், ருமேனியா, பல்கேரியா, ஸெர்பியா, மாண்டிநிக்ரோ, கிரீஸ் போன்றவை நிறுவப்பெற்றதால் அந்த நாடுகளுக்கிடையே மனக்கசப்பு வளர்ந்துகொண்டே வந்தது. துருக்கியின் தலையீடு இப்பொழுது நேரிடையாகவே பால்கன் விவகாரங்களில் ஏற்பட்டது. ஐரோப்பாவில் மீண்டும் துருக்கியை ஏற்படுத்தியதாகப் பெருமையடித்துக் கொண்ட

டிஸ்ரேலி மீண்டும் ஒரு கீழைச் சிக்கலைத் தோற்றுவித்தார், ஆனால், முப்பது ஆண்டுகளுக்குள் துருக்கி ஓர் ஆசிய நாடாக ஆக்கப் பெற்றது.

பல்கேரியா சிறிதாக்கப்பெற்ற உடன் அதனுடைய பலம் மிகவும் குறைந்துவிடும் என்று வல்லரசுகள் கருதின. ஆனால், வல்லரசுகள் நினைத்தவாறு நடக்கவில்லை. அதற்கு மாறாக பல்கேரியா, கிழக்கு ருமேலியாவை 1885-ல் ஆக்கிரமித்துக் கொண்டது. அது மட்டுமல்ல, ரஷ்யாவினுடைய ஆதிக்கத்திலிருந்தும், ஐரோப்பிய வல்லரசுகளின் பிடியிலிருந்தும் நீங்கி எதேச்சையாக ஆட்சி புரியத் தொடங்கியது. இது வல்லரசுகளுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது. பிரிட்டன் நினைத்தவாறு சைப்ரஸ் தீவுகள் நல்ல கப்பற்படை நிலையமாக இருக்குமென்று நம்பினர். ஆனால், இது பிரிட்டனுக்கு நல்ல பயனளிக்கவில்லை.

ஐரோப்பாவில் துருக்கி முழுவதுமாகச் சீர்குலையாமல் ஓரளவிற்குக் காப்பாற்றப் பெற்றது. அதனால் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே சமநிலை ஏற்படுமென்றும், பால்கனில் ரஷ்ய ஆதிக்கத்திற்குத் துருக்கி ஒரு தடுப்பாக இருக்கும் என்றும் நம்பினர். ஆனால், எதிர்பார்த்த விதமாக ஒன்றும் நடைபெறாது, பால்கனிலேயே முதல் உலகப் போருக்கு வேண்டிய சூழ்நிலையை வளர்த்துக்கொண்டன.

கீழைச் சிக்கலும் பால்கன் போர்களும் (1878–1913)

பெர்லின் மாநாட்டுடன் கீழைச் சிக்கல் முடிந்து விடவில்லை. அம் மாநாட்டு முடிவுகள் சில சிக்கல்களை வளர்த்தியும், சில புதிய சிக்கல்களை உருவாக்கியும் விட்டன. சான் ஸ்டபனோ உடன்படிக்கையில் பல்கேரியாவைத் துண்டாடாது, அப்படியே ஐக்கிய பல்கேரியாவை உருவாக்கியது. எங்கு ரஷ்யாவின் கைப்பாவையாக அது மாறிவிடுமோ என்று வல்லரசுகள் அதை மூன்று பகுதிகளாகப் பிரித்து, பல புதிய சிக்கல்களைத் தோற்றுவித்தன. அதனால் கிழக்கு ருமேலியப் பகுதிக்கும், பல்கேரியப் பகுதிக்கும் இருந்த ஒருமைப்பாடு மிகவும் பாதிக்கப்பெற்றது. சில ஆண்டுகளில், கிழக்கு ருமேலியாவும், பல்கேரியாவும் இணைந்து விடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இந்த இணைப்பை வல்லரசுகளால் தடுக்க முடியவில்லை. 1879-ல் பேட்டன்பர்க்கைச் சேர்ந்த அலெக்சாண்டர் என்பவர் பல்கேரிய மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1886 வரை அவர் அந்தப் பகுதியில் ஆட்சி செய்து வந்தார். அவர் சிறந்த போர் வீரர்; சிறந்த அரசியல்வாதி; சிறந்த குணங்களைக்

கொண்டவர். அவர் துருக்கிக்கு எதிராக ரஷ்யாவின் பக்கத்தில் சேர்ந்து போரில் ஈடுபட்டிருக்கிறார். அதனால் அவருக்கு ரஷ்யாவின் ஆதரவு இருந்தது. அவர் ரஷ்ய ஜாருக்கு நெருங்கிய உறவினர். ரஷ்ய இராணுவ உடையிலேயே பல்கேரிய அரசியல் அமைப்பின் மீது உறுதிமொழி எடுத்துக்கொண்டார். நாளடைவில், பல்கேரிய விவகாரங்களில் ரஷ்யாவின் தலையீடு அதிகமாகிக் கொண்டே வந்தது. ஜார் இரண்டாம் அலெக்சாந்தர் இறந்து விடவே மூன்றும் அலெக்சாந்தர் 1881-ல் பட்டத்திற்கு வந்தார். அவருடைய காலத்தில் ரஷ்யாவின் தலையீடு மிகவும் அதிகரித்து விட்டது. பல முக்கியமான பதவிகளில் ரஷ்யர்கள் பதவி வகித்தனர். எல்லா அரசாங்கத் துறைகளிலும் ரஷ்யர்களின் நியமனம் அளவுக்கு மீறிவிட்டது. இவர்களைப் பல்கேரிய அரசன் கண்டித்தாலோ, அல்லது ஆணையிட்டாலோ, ரஷ்ய அதிகாரிகள் "நாங்கள் ஜாரிடம்தான் உத்தரவு பெறுவோமே தவிர, உம்மிடம் பெற மாட்டோம்" என்று கூறினர். இந்தச் சொற்கள் பல்கேரிய மன்னரை மிகவும் புண்படுத்தின. ரஷ்யாவிடம் இந்த அதிகாரிகளின் நடத்தையைப்பற்றிப் புகார் செய்தபொழுது, ரஷ்ய ஜார் இயற்கையாகவே பல்கேரிய அரசனை வெறுக்க ஆரம்பித்தார். இவ்விதமாக இரு நாடுகளிடையே இருந்த பகைமை வளர்ந்து கொண்டே வந்தது. கிழக்கு ருமேலியாவில், அலெக்சாந்தரைக் கேட்காதவாறே, பல கட்சிகள் ஒன்று சேர்ந்து, பல்கேரியாவுடன் இணைந்துகொள்வதென்று முடிவு செய்தன. ஆனால் ஏற்கனவே, ரஷ்ய ஜாரிடம் சிறிது காலத்திற்குக் கிழக்கு ருமேலியா தனியாகவே இருக்கட்டும் என்று கூறியிருந்தார். எதிர்பாராத விதத்தில் நிகழ்ச்சிகள் ஏற்பட்டதை ரஷ்யா விரோதமாக எடுத்துக் கொண்டது. ஆனால், அலெக்சாந்தர் ருமேலிய மக்களின் விருப்பத்தை ஏற்று நடப்பது என்று முடிவு செய்தார். கிழக்கு ருமேலியா துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்தது. அதனால் துருக்கியச் சுல்தான் அப்துல் ஹமீது பல்கேரியாமீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக ரஷ்யாதான் ருமேலியா–பல்கேரியா இணைப்பை அங்கீகரிக்காது, பல்கேரியாவை மிரட்டியது. ரஷ்ய அதிகாரிகள் அனைவரும் பல்கேரியாவை விட்டு வெளியேறினர். ஆஸ்டிரியாவும் பிரிட்டனும் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. ஆனால், பிஸ்மார்க் ரஷ்யாவின் சார்பாகப் பேசினார். ரஷ்யாவின் ஆட்சேபம் சரியானதே என்றார். இதைத் தொடர்ந்து அலெக்சாந்தர் கிழக்கு ருமேலியாவிற்குக் கவர்னர் ஜெனரலாகத் துருக்கியச் சுல்தானால் நியமனம் செய்யப்பெற்றார். பிறகு ரஷ்யாவின் எதிர்ப்பு அதிகமானவுடன், அந்தப் பதவியை வெறும் கவர்னராக மாற்றினார்கள். அப்பொழுதும் ரஷ்யாவிற்குத் திருப்தி அளிக்கவில்லை. ரஷ்யாவின்

ஆதரவில்லாமல், பல்கேரிய மக்கள் எவ்வித நலனையும் அடைய முடியாது என்று ரஷ்ய ஜார் கூறினார். பல்கேரியாவில் ரஷ்ய உளவாளிகள் பலவிதமான தொல்லைகளைத் தந்தனர். பிறகு அவர்கள் அலெக்சாந்தரைக் கடத்திக்கொண்டு போய்விட்டனர். இச் செயலைக் கண்டித்துப் பிரிட்டிஷ் அரசியார் விக்டோரியா, ரஷ்ய ஜாருக்குக் கடிதம் எழுதினர். ஆனால் ரஷ்யாவின் மிரட்டுதல்கள் அதிகமானவுடன், அலெக்சாந்தர் மிகவும் மனமுடைந்து, "ரஷ்யா எனக்கு அளித்த மகுடத்தை ரஷ்யாவிற்கே திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று கூறி முடிதுறந்தார். அலெக்சாந்தர் சிறிது ஆத்திரத்துடன் இந்த முடிவுக்கு வந்த போதிலும், ரஷ்யாவிற்கு இந்தச் செய்கை மிகவும் திருப்தி அளித்தது. இருப்பினும் பல்கேரியாவின் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்ததாகத் தெரியவில்லை. அலெக்சாந்தர் முடி துறந்த பிறகு, ரஷ்யா பல்கேரியாவை அதன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயற்சி செய்தது. இந்த விவகாரத்தில் பிஸ்மார்க் ரஷ்யாவிற்கு உடந்தையாக இருந்தார். பல்கேரியாவை ரஷ்யா ஆக்கிரமிப்பதற்கு ஆஸ்டிரியா சம்மதிக்கவில்லை. இதனால் ஜெர்மனிக்கும், ஆஸ்டிரியாவிற்கும் பகைமை ஏற்படும் போல இருந்தது. இதற்கு முன்னர் 1881-ல் ஜெர்மனி, ஆஸ்டிரியா, ரஷ்யா ஆகிய மூன்று பேரரசர்களும் ஒன்று சேர்ந்து பேரரசர்கள் உடன்படிக்கை ஒன்று செய்திருந்தனர். அந்த உடன்படிக்கையை பிஸ்மார்க் சுட்டிக்காட்டி, ரஷ்யாவின் ஆதிக்கத்தைப் பல்கேரியாவில் அனுமதிக்குமாறு ஆஸ்டிரிய மன்னரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், ஆஸ்டிரிய மன்னன் ஜெர்மனி, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளுக்கிடையே 1879-ல் ஏற்பட்ட இரண்டு வல்லரசர்களின் ஒப்பந்தத்தைக் காட்டி ஜெர்மனி, ஆஸ்டிரியாவிற்கு உதவி செய்யாமல் இருந்தால், ஜெர்மனியின் உறவு பொருளற்றது என்று கூறிவிட்டார். பல்கேரிய விவகாரத்தில் பிஸ்மார்க் ஆஸ்டிரியாவுடனே அல்லது ரஷ்யாவுடனே பகைமையை வளர்த்துக் கொள்ள விருப்பமில்லை. இதற்குள் மற்றொரு ஆலோசனை ஆஸ்டிரிய மன்னரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி ஆஸ்டிரியாவும், ரஷ்யாவும், பால்கன் முழுவதையும் ஆக்கிரமித்துப் பங்குபோட்டுக்கொள்வது என்பதாகும். பிஸ்மார்க்குக்கு இந்த ஆலோசனை சம்மதமே. ஆனால், பால்கன் அருகிலேயே ரஷ்யாவின் ஆதிக்கம் இருக்கக்கூடாது என்று ஆஸ்டிரிய மன்னன் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இந்தச் சூழ்நிலையில் பல்கேரிய மன்னன் பதவியைப் பல அரசக் குடும்பத்தினருக்குத் தருவதாகப் பறைசாற்றியும் யாரும் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. பிறகு 1887-ல் சாக்ஸ் கோபர்க்கெதா பரம்பரையைச் சேர்ந்த பெர்டினன்ட்

இளவரசன் பல்கேரிய மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவர் 1918 வரை பதவியிலிருந்தார். பல்கேரியாவிற்குப் பெர்டினண்ட் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பிரிட்டன், ஆஸ்டிரியா, இத்தாலி ஆகிய நாடுகள் வரவேற்றன. ரஷ்யா இந்தத் தேர்தலைப் பலமாக ஆட்சேபித்தது. இந்த விவகாரத்தில் ஆஸ்டிரியா, ரஷ்யாமீது போர் தொடுக்கவும் தயாராக இருந்தது. ஆனால், பிஸ்மார்க்கின் தலையீட்டினால் இந்தப் போர் தவிர்க்கப் பெற்றது. பல்கேரியாவிற்கு வேறு எந்த மன்னனையும் தேர்ந் தெடுத்துக்கொள்ளட்டும். ஆனால், பெர்டினண்ட் மன்னனாக வரக் கூடாது என்று ரஷ்யா விடாப்பிடியாக இருந்தது. ஆனால், பெர்டினண்டே 1918 வரையிலும் மன்னனாகப் பல்கேரியாவில் ஆட்சி புரிந்தார். ஜார் மூன்றும் அலெக்சாந்தர் இறந்துவிடவே, அவருக்குப் பிறகு இரண்டாம் நிக்கோலஸ் ரஷ்ய ஜாரானார். அதனால் பல்கேரிய விவகாரங்களில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. பெர்டினண்டின் ஆட்சியில் ஸ்டாம்புலாப்ஃ (Stambullof) என்பவர் பெரிதும் உதவியாக இருந்தார். 1894-ல் அவர் பதவியை விட்டுவிட்டார். அடுத்த ஆண்டில் அவர் கொல்லப்பட்டார். அவர் இறந்த பிறகு பெர்டினண்ட் ரஷ்யாவுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொண்டார். 1902-ல் துருக்கியின் ஆதிக்கத்தி லிருந்த பகுதியும் விடுதலைபெற்றுத் தனிச் சுதந்தர நாடாக விளங்கியது. பெர்டினண்டும் அவருடைய அரசியாரும் ரஷ்யா விற்கு விஜயம் செய்தனர். அதற்குப் பிறகு ரஷ்யாவின் தலையீடு பல்கேரியாவில் குறைந்துவிட்டது. பால்கன் போர்களிலும் பெர்டினண்ட் பங்கெடுத்துக்கொண்டார்.

ஆர்மீனியா

ஐரோப்பாவிலுள்ள துருக்கியின் ஆதிக்கம் சிறிது ஒடுங்கவே, துருக்கியச் சுல்தான் ஆர்மீனியாவின்மீது அடக்குமுறை ஆட்சி யைச் செலுத்தினர். ஆர்மீனியா, ஆசியா மைனரில் உள்ள ஒரு பகுதியாகும். அங்குக் கிறித்துவர்கள் மிகுதியாக இருந்தனர். அவர் கள் மீது கொடுங்கோன்மை ஆட்சி புரியத் துருக்கியச் சுல்தான் தயங்கவில்லை. ஆர்மீனியர்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்ட பொழுது, பல ஆர்மீனிய மக்கள் அந்தக் கிளர்ச்சியில் கொல்லப் பெற்றனர். இதனால் ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கியச் சுல்தானை வன்மையாகக் கண்டித்தன. பிரிட்டிஷ் பிரதமர் சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) துருக்கியின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் ரஷ்யாவின் ஒத்துழைப்பு அவசியமாகத் தேவைப்படுவ தால், ரஷ்யாவை இந்த விவகாரத்தில் தலையிட்டு ஒரு முடிவு காணுமாறு தூண்டினர். ஆனால், ரஷ்யாவுக்கு ஆர்மீனியாவின் விவகாரத்தில் சிறிதும் அக்கறையில்லை. ஏனெனில் ஆர்மீனியக்

கிறித்துவர்களின் மதக் கோட்பாடுகளுக்கும் ரஷ்யக் கிறித்துவர் களின் மதக் கோட்பாடுகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. தவிர, பல்கேரியாவை ரஷ்யா ஆதிக்கம் செய்யத் தடையாக இருந்தது பிரிட்டன் என்று அதற்குத் தெரியும். அதனால் ஆர்மீனிய விவகாரத்தில் ரஷ்யா, பிரிட்டனுக்கு உதவி செய்ய சிறிதும் விரும்பவில்லை. இந்த இரு வல்லரசுகளுக்கும் இருந்த பகைமை காரணமாக ஆர்மீனியப் படுகொலைகளை விசாரிக்க எந்த நாடும் முன்வரவில்லை. துருக்கியச் சுல்தானுக்கு இதனால் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இப் படுகொலைகளின் விளைவாக, மீண்டும் சுல்தானின் கொடுங்கோன்மை ஆட்சி ஆசியாவில் வளர நேர்ந்தது.

கிரீட் (Crete)

1896-ல் கிரீட்டன்கள் துருக்கியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்தனர். அவர்களுடைய புரட்சிக்கு முக்கிய காரண மாக இருந்தது, கிரீஸ் நாட்டுடன் கிரீட்டை இணைய முடியாதபடி துருக்கியத் தடை செய்ததேயாகும். ஏற்கனவே, ஐரோப்பிய வல்லரசுகள் கிரீட்டிற்குப் பல சலுகைகளைத் துருக்கியச் சுல்தானிட மிருந்து பெற்றுக் கொடுத்திருந்தன. ஏறக்குறைய கிரீட்டன்களின் ஆட்சி சுதந்தரமாகத்தான் நடைபெற்றுவந்தது. அதனால் துருக்கியச் சுல்தான், கிரீட்டன்களின் புரட்சியை அடக்க உறுதி கொண்டார். வல்லரசுகளும் கிரீட்டன்களைப் போரிடாதவாறு தடுத்து நிறுத்தின. ஆனால், கிரீட்டன்களுக்கு உதவி செய்ய கிரீஸ் முன் வந்தது. 1897-ல் துருக்கிக் கிரீஸ்மீது போர் தொடுத்தது. இந்தப் போரில் கிரீஸ் தோல்வியுற்றது. தவிர, அந்த நாட்டிற்கு இதனால் நிறைய இழப்பும் ஏற்பட்டது. கிரீசிலிருந்து ஒரு பகுதியைச் சுல்தானுக்குத் தரவேண்டியநிலை ஏற்பட்டது. கிரீட்டன்களுக்குத் துருக்கியின் ஆதிக்கத்திலேயே சுயாட்சி உரிமைகள் தரப்பெற்றன. ஆனால், 1905-ல் கிரீட் கிரீஸ் நாட்டுடன் இணைந்துவிட்டது. ஐரோப்பிய வல்லரசுகள் 1913 வரை இந்த இணைப்பை அங்கீகரிக்கவில்லை.

பிஸ்மார்க் பதவியிலிருந்த வரையிலும் ஜெர்மனி துருக்கிய விவகாரங்களில் தலையிடாமல் இருந்துவிட்டது. ஆனால், ஜெர்மனி பல வழிகளிலும் துருக்கிக்கு உதவி செய்துவந்தது. துருக்கியப் படைகளில் பல ஜெர்மானியர்கள் உயர்ந்த பதவிகளை வகித்தனர். அவர்கள் துருக்கியப் படை வீரர்களுக்கு இராணுவப் பயிற்சியும், நவீன யுத்தத் தளவாடங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் கற்பித்து வந்தனர். 1896-ல் துருக்கியப் படைகளுக்குத் தளபதியாக வான்டெர் கோல்ட்ஸ் (Vonder Goltz) பணியாற்றினார். அதனால்

துருக்கிய விவகாரங்களில் ஜெர்மனி தலையிடுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருந்தன. பெர்லின் மாநாட்டிலும்கூடப் பிஸ்மார்க் நடுநிலைமைக் கொள்கையைத்தான் பின்பற்றினர். அதனால் துருக்கியச் சுல்தானுக்கு ஜெர்மனிமீது நல்ல நம்பிக்கை இருந்தது. இந்த நல்ல உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்ள பெர்லின்-பாக்தாத் நகரங்களை இணைக்கும் ஒரு ரயில்வே மார்க்கத்தை உருவாக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. 1908-ல் துருக்கியில் ஒரு புரட்சி ஏற்பட்டது. இந்தப் புரட்சியைச் செய்தவர்கள் துருக்கியில் அப்பொழுது புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட துருக்கிய இளைஞர்கள் கட்சியினராவர். (Young Turks). பல உள்நாட்டுக் குழப்பங்களுக்குப் பிறகும், பல கொலைகளுக்குப் பிறகும், 1876-ல் அப்துல் ஹமீது என்பவர் துருக்கியச் சுல்தானுகப் பதவிக்கு வந்தார். அவர் பட்டத்திற்கு வரும்பொழுது துருக்கியில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதனால் துருக்கிய மக்களைத் தம் பக்கம் இழுப்பதற்கு அவர்களுக்கு ஓர் அரசியல் அமைப்புக் கொடுப்பதாக அறிவித்தார். ஆனால், உள் நாட்டுப் போர்களும், வெளிநாட்டுப் போர்களும் முடிந்தவுடன் அந்த அரசியல் அமைப்பை அவர் ரத்து செய்துவிட்டார். அதனால், துருக்கிய மக்களுக்கு அவர்மீது மீண்டும் அதிருப்தி ஏற்பட்டது. எங்கும் கிளர்ச்சிகள் நிகழ்ந்தவாறு இருந்தன. ஆனால், எப்படியும் அவர் பதவியில் நீடித்திருப்பதென்று முடிவு செய்தார். துருக்கிய மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக அவர் ஆர்மீனியாவில் வன்முறை ஆட்சியைச் செலுத்தி, உரிமை கோரிய பல ஆர்மீனியக் கிறித்துவர்களைப் படுகொலை செய்ய ஆதரவளித் தார். அவருடைய கொடுமைகளுக்கு அளவே இல்லை. அவரைப் போன்ற கொடுங்கோல் மன்னனைப் பார்த்திருக்க முடியாது. "அவரைப்பற்றிப் பேசுவதே பாவமாகும்" என்று கிளாட்ஸ்டன் கூறுகிறார். அவருடைய ஆட்சிக் காலத்தில் துருக்கியப் பேரரசின் எல்லைகள் சரிந்து வீழ்ந்துகொண்டே வந்தன. டூனிஸ், எகிப்து, கிரீட் இன்னும் மற்றப் பகுதிகளிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதற்குப் பிறகுதான் இவரது ஆட்சியை எதிர்த்து நாடெங்கும் இரகசியப் புரட்சிக் கழகங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இந்தப் புரட்சிக் கழகங்கள்தான் நாளடைவில் துருக்கிய இளைஞர்கள் கட்சியாக மாறின. இந்தக் கட்சியில் சேர்ந்தவர்கள், வெளிநாடு களில் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களாவர். இந்த இளைஞர் கட்சியினர் 1909-ல் அப்துல் ஹமீது சுல்தான் அரசப் பதவியிலிருந்து இறக்கினர். அவருக்குப் பதிலாக அப்துல் ஹமீதின் ஒரு தம்பியை ஐந்தாம் முகமது பட்டத்திற்குக் கொண்டுவந்தனர். அந்த அரசன் துருக்கிய மக்களுக்கு அரசியல் அமைப்பையும் பாராளுமன்ற ஆட்சி முறையையும் அளித்தார்.

இச் சமயத்தில், ஸ்லாவ் இனத்து மக்கள் பெருவாரியாக வசிக்கும் போஸ்னியா (Bosnia), ஹெர்ஸிகோவினு (Herzegovina) ஆகிய பகுதிகளை ஆஸ்டிரியா ஆக்கிரமித்துக்கொண்டது. இந்த ஆக்கிரமிப்பை ஸெர்பியா (Serbia) சிறிதும் விரும்பவில்லை. ஏனெனில் ஸெர்பியாவும், ஸ்லாவ் (Slav) இனத்து மக்கள் வசிக்கும் நாடாகும். ஸெர்பியாவின் ஆதிக்கத்தினுள், போஸ்னியாவும், ஹெர்ஸிகோவினுவும் வந்துவிடும் என்று ஸெர்பியா நினைத் திருந்தது. அதனுல் ஆஸ்டிரியாவின் ஆக்கிரமிப்பு அவர்களுக்குப் பெரிய அதிர்ச்சியை அளித்தது. 1878-ல் ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கையின்படி போஸ்னியா, ஹெர்ஸிகோவினு, நோவி பஸார் மாவட்டம் (Novibazar) ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தில் இருந்தபோதிலும், அப் பகுதிகளின் உரிமை இன்னும் துருக்கி யைத்தான் சார்ந்திருந்தது. இதே நிலைமையில்தான் கிழக்கு ருமேலியாவும் இருந்தது. துருக்கியில் குழப்பங்கள் ஏற்படவே, அண்மையில் உள்ள ஐரோப்பிய வல்லரசுகளும் கூடியவரையில் சில நிலப் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்யத் தயங்கவில்லை. ஆஸ்டிரியாவின் வெளிநாட்டு அமைச்சர் கவுன்ட் வான் ஆரந்தால் (Count Von Aehrenthal) ஆஸ்டிரியா-ஹங்கேரி என்ற இரட்டை முடியாட்சியில் வசித்து வந்த பலதரப்பட்ட இனத்தவர்களின் கவனத்தை இழுப்பதற்கு ஏதாவது பரபரப்பையூட்டும் செயலைச் செய்யத் திட்டமிட்டிருந்தார். அதனுல்தான் அவர் 1908-ல் ரஷ்ய வெளிநாட்டு அமைச்சரான இஸ்வோல்ஸ்கியைச் (Izvolsky) சந்தித்து நிகழ்த்திய உரையாடலில் போஸ்னியா, ஹெர்ஸிகோவினு ஆகிய இரு பகுதிகளையும் ஆஸ்டிரியா ஆக்கிரமிக்க அனுமதித்தால், அதற்குப் பதிலாக ரஷ்யா, ஸ்டெரெயிட்ஸ் (Straits) பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்ய அனுமதிக்கலாம் என்று கூறினர். ஏதோ பேச்சளவில்தான் இந்த உரிமையைக் கேட்கிறார் என்று இஸ்வோல்ஸ்கி அப்பொழுது எவ்விதமான ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. இவ்வளவு விரைவாக ஆஸ்டிரியா அப் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்யும் என்று அவர் சிறிதும் நினைக்கவே இல்லை. ஆஸ்டிரியா இப் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்தவுடன், பல்கேரியா கிழக்கு ருமேலியாவை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டது. பெர்டினண்ட் பல்கேரியாவின் அரசனென்று பிரகடனம் செய்தனர். இதனுல் துருக்கியின் உரிமைகள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டன. துருக்கிய இளைஞர் கட்சி உடனடி யாக ஆஸ்டிரியா-ஹங்கேரியின் பொருள்களை வாங்கக்கூடாது என்று பிரச்சாரம் செய்தது.

ஸெர்பியா அரசாங்கம், போஸ்னியா, ஹெர்ஸிகோவினு பகுதிகளை இணைத்துக்கொள்ள நீண்ட காலமாகவே திட்டமிட்டுக்

கொண்டிருந்தது. அதனால் ஆஸ்டிரியாவின் ஆக்கிரமிப்பு, அவர் களைப் போர் தொடுக்கவும் தயாராக இருக்கச் செய்தது. ஆனால், ஸெர்பியா தனியாக ஆஸ்டிரியாவைத் தாக்குகின்ற வலிமை இல்லாத காரணத்தால் ரஷ்யாவின் உதவியை நாடியிருந்தது. ரஷ்யர்களும் ஸெர்பியாவுக்காகப் பரிந்து பேச முன் வந்தனர். ஆஸ்டிரியாவின் இந்த ஆக்கிரமிப்புப் பெர்லின் உடன்படிக்கைக்கு முரண்பட்டதாகும் என்று அவர்கள் ஆஸ்டிரியாவைக் கண்டித் தனர். மூன்று நேச நாடுகள் (Triple Entente) இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஓர் ஐரோப்பிய வல்லரசுகள் மாநாட்டைக் கூட்டுவதற்கு முயற்சி செய்தனர். ஆனால், அதற்குள் ஆஸ்டிரியா துருக்கிக்கு இப் பகுதிகளை இழந்ததற்காக நஷ்டஈடு கொடுத்துத் துருக்கியுடன் சமாதானம் செய்துகொண்டது. ஸெர்பியர்களுக்கு இந்த ஏற்பாடு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. இச் சிக்கலை ஒரு போர் மூலமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று துடித்துக்கொண் டிருந்தது. ஆனால், ஜெர்மனி ஆஸ்டிரியாவுக்கும், ரஷ்யாவுக்கும் ஆதரவாக இருந்தது. ரஷ்யா அப்பொழுதுதான் ஜப்பானிடம் தோற்று அதன் பலவீனத்தை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டி விட்டது. ஜெர்மனியின் ஆதரவு திட்டவட்டமாக ஆஸ்டிரியா வுக்கு இருந்ததால், 1909-ல் ஸெர்பியா ஆஸ்டிரியாவின் ஆக்கிர மிப்பை அதிருப்தியுடன் ஒப்புக்கொள்ள நேரிட்டது. அதனால் ஒரு சர்வதேச மாநாடு இதற்காகக் கூட்டப்படவில்லை. இந்த நிகழ்ச்சி யில் ஜெர்மனி–ஆஸ்டிரியா ஒப்பந்தம்தான் உறுதியாகப் பின்பற்றப் பட்டது. ரஷ்யாவிற்கு அதன் நேச நாடுகள் முழு ஆதரவையும் அளிக்காதது அதிருப்தி அளித்தது.

புதிய துருக்கியச் சுல்தான் ஐந்தாம் முகமது ஆட்சியில் துருக்கியில் அமைதி ஏற்படும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், இத்தாலி, துருக்கிக்குச் சொந்தமான டிரிபோலியை (Tripoli) ஆக்கிரமிப்புச் செய்ய 1911-ல் துருக்கியின்மீது போர் தொடுத்தது. இந்த ஆக்கிரமிப்பை இத்தாலி செய்வதற்கு முன்னர், ரஷ்யாவுடன் இத்தாலி ஓர் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்திருந்தது. டிரிபோலியைக் கைப்பற்ற ரஷ்யா இத்தாலிக்கு ஆதரவு அளிப்பதென்றும், அதைப்போல ரஷ்யா ஸ்டெரெயிட்ஸ் (Straits) பகுதியை ஆக்கிரமிப்புச் செய்ய இத்தாலி உதவி செய்வது என்று ஏற்பாடாகியிருந்தது. இவர்களது இரகசிய ஒப்பந்தத்தை ஜெர்மனி அப்பொழுது அறியவில்லை. அதனால் மூன்று வல்லரசு களின் ஒப்பந்தம் (Triple Alliance) சரிவர செயல்படாது போகும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், ரஷ்யாவைத் தவிர, மற்ற ஐரோப்பிய வல்லரசுகளும்கூட இத்தாலிக்குச் சாதகமாகத்தான் ஆப்பிரிக்காவில் இத்தாலியின் ஆக்கிரமிப்புகளுக்கு ஆதரவு

அளித்தன. 1896-ல் இத்தாலி அபிசினியாவைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அதன்மீது போர் தொடுத்தது. ஆனால், அதே ஆண்டில் அடுவா (Adva) என்ற இடத்தில் இத்தாலியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அதற்குப் பிறகுதான் ரஷ்யா இத்தாலியை டிரிபோலியில் ஆக்கிரமிப்புச் செய்ய, அதற்கு ஆதரவு அளித்தது. ஃபிரான்ஸ் மொராக்கோவைக் கைப்பற்றும் திட்டம் உறுதியாகத் தெரிந்தவுடன்தான் இத்தாலி டிரிபோலிமீது போர் தொடுத்தது. இத்தாலி டிரிபோலியை ஆக்கிரமிப்புச் செய்துகொண்டு துருக்கியின்மீது 1911-ல் போர் தொடுத்தது. இத்தாலி–துருக்கியப் போர் ஜெர்மானியர்களுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியது. ஏனெனில், ஜெர்மனி இத்தாலியுடன் நேச உறவு வெளிப்படையாகவே கொண்டிருந்தது. அதே சமயத்தில் துருக்கியுடனும் ஜெர்மனி நல்ல உறவுகளை வைத்துக்கொண்டிருந்தது. ஆஸ்டிரியா விற்குப் பால்கன் பகுதிகளில் இத்தாலி எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யாதிருக்கும்வரையிலும், அதற்கு மற்றப் பிரச்சினைகளைப்பற்றி அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. பால்கனில் உள்ள நிலைமை மாறாது அப்படியே இருக்க வேண்டுமென்று ஆஸ்டிரியா விரும்பியது. மூன்று வல்லரசுகள் ஒப்பந்தத்தில் உள்ள உறவு மிகவும் பாதிக்கப்பட்டு, அந்த நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்ற நிலைமை வந்துவிட்டது. ஆனால், இந்த மூன்று வல்லரசுகளின் ஒப்பந்தம் முறிந்துவிடவில்லை. ஏனெனில், இந்தப் பிரச்சினை விரைவில் தீர்ந்துவிட்டது. இத்தாலியின்மீது துருக்கித் தீவிரமாக அப்பொழுது போரில் இறங்கிவிட்டால், அதன் அண்மையில் உள்ள பால்கன் நாடுகளும் துருக்கியின்மீது படையெடுக்கின்ற சாத்தியக்கூறுகளைத் துருக்கிக் கவனிக்காமல் இல்லை. அதனால் இத்தாலியுடன் ஏதோ பெயரளவிற்கு ஓராண்டுக் காலம் வரையிலும் போர் செய்துவிட்டு, 1912-ல் லஸ்ஸானே (Lausanne) என்ற இடத்தில் துருக்கி–இத்தாலிய உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன்படி, இத்தாலிக்கு டிரிபோலியும், சிரினெய்கா (Cyrenaica) ஆகிய பகுதிகள் கிடைத்தன.

இத்தாலிக்கும் துருக்கிக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே துருக்கியப் பால்கன் போர்களில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1878-ல் ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கையின் பல நிபந்தனைகள் இச் சமயத்தில் சரிவர பின்பற்றப்படவில்லை. 1912-ல் பால்கன் நாடுகளில் சங்கம் நிறுவப்பெற்றது. இச் சங்கத்தில் பல்கேரியா, மாண்டிநிக்ரோ, கிரீஸ் ஆகிய நாடுகள் அங்கத்தினர்களாயின. ஸெர்பியா, பல்கேரியா, கிரீஸ் ஆகிய நாடுகள் மாசிடோனியாவில் சில பகுதிகளைப் பெறும் நம்பிக்கையில் இருந்தன. மாசிடோனியா

அப்பொழுது துருக்கியின் ஆதிக்கத்திலேதான் இருந்தது. 1912-ல் முதல் பால்கன் போர் ஏற்பட்டது. பல்கேரியர்களது சாதனை இந்தப் போரில் மிகவும் சிறப்பாக இருந்தது. பல்கேரியர்கள் துருக்கியப் படையைக் கிர்க் கில்லிஸி (Kirk killise) என்ற இடத்திலும், லல் பர்காஸ் (Lull Burgas) என்ற இடத்திலும் தோற்கடித்தனர். பிறகு அவர்கள் அட்ரியானோபிள் (Adrianople) நகரைக் கைப்பற்ற விரைந்தனர். ஸெர்பியர்களும், துருக்கியர்களைக் குமனேவ் (Kumonov) என்ற இடத்தில் முறியடித்து யுஸ்கப் என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டனர். மீண்டும் அவர்கள் பிரிலெப் (Prilep) என்ற இடத்தில் வெற்றி பெற்றனர். கிரேக்கப் படையினரும் சலோனிகா (Salonika) என்ற பகுதியைக் கைப்பற்றினர். அடுத் தடுத்துத் துருக்கியர்கள் பல போர்களில் தோல்வியுற்றனர். சமாளிக்க முடியாத நிலையில் துருக்கியர்கள் 1912 இறுதியில் பால்கன் நாடுகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளத் தயாராக இருந்தனர். இல்லாவிடில் துருக்கியின் சீர்குலைவு உறுதி யாகியிருக்கும். இருப்பினும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் திருப்தியாக இல்லாததால், மீண்டும் போர் ஆரம்பமாகியது. அட்ரியானோபிளைப் (Adrianople) பல்கேரியர்களும், ஸெர்பியர்களும் சேர்ந்து கைப்பற்றினர். ஜெனினு (Janina), ஸ்குடாரி (Scutari) ஆகிய இடங்களை முறையே கிரேக்கர்களும் மாண்டிநிக்ரோக் களும் பிடித்துக்கொண்டனர். ஐரோப்பாவிலேயே பெரும் பகுதி துருக்கியப் பேரரசர்களிடம் இருந்தது. அதனால் இப்பொழுது கான்ஸ்டாண்டிநோபிளும் அதற்கு அண்மையிலுள்ள சிறு பகுதி மட்டும் துருக்கியின் எஞ்சியப் பகுதிகளாக இருந்தன. மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. 1813-ல் இலண்டன் நகரில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின் படி பால்கன் நாடுகளின் வெற்றிகளால் பெறப்பட்ட நாடுகளைத் துருக்கி இழந்துவிட்டது. ஆனால் கைப்பற்றிய நாடுகளைப் பிரித்துக் கொள்வதில் பால்கன் நாடுகளுக்கிடையே பலத்த வேறுபாடுகளும் அதனால் பகைமையும் ஏற்பட்டன. ஸ்குடாரியை (Scutari) மாண்டிநிக்ரோவிடம் ஒப்புவிப்பதை ஆஸ்டிரியாவும், இத்தாலியும் ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் அந்தப் பகுதியையும் சேர்த்து அல்பேனியா என்ற புதிய நாடு ஒன்று உருவாக்கப்பெற்றது. மாசிடோனியாவைப் பிரிப்பதில்தான் அதிக மனக்கசப்பு ஏற்பட்டது. ஸாலின்காப்ஃ பகுதியைப் பல்கேரியா, கிரீஸ் ஆகிய நாடுகள் தங்களுக்கே வேண்டுமென்று கோரின. டோப்ரூட்ஜா பகுதியை இன்னும் பெரிதாக்கவும், அப் பகுதி தங்களுக்கே வேண்டுமென்றும் ருமேனியா கோரியது. அல்பேனியா (Albania) என்ற புதிய நாடு தோன்றியதால், உண்மையில் ஸெர்பியாவிற்குக் கிடைக்கவேண்டிய பங்கு கிடைக்காமல் போய்விட்டது. துருக்கியை எதிர்த்துச் சிறப்

பாகச் சண்டையிட்ட பல்கேரியாவிற்குப் போதிய பங்கு தரப்பட வில்லையென்று அந்த நாடு அதிருப்தியடைந்தது. இந்த மனக் கசப்புக் காரணமாக இரண்டாவது பால்கன் போர் ஜூலை 1913-ல் ஆரம்பமாகியது. இந்தப் போர் ஒரு மாதம்தான் நீடித்தது. திடீரென்று பல்கேரியா ஸெர்பியாவைத் தாக்கியது. கிரேக்கர்களும் ருமேனியர்களும் ஸெர்பியாவிற்கு உதவி செய்தனர். பல்கேரியர்கள் இந்தப் போரில் தோற்கடிக்கப்பட்டனர். ஆகஸ்ட் 1913-ல் புகேரிஸ்ட் நகரில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அந்த உடன்படிக்கை யின்படி பல்கேரியா, கிழக்கு மாசிடோனியாவை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது. தெற்கு மாசிடோனியாவும், ஸாலின்காப்ஃ பகுதியும் கிரீசுக்குத் தரப் பெற்றன. டோப்ரூட்ஜா பகுதியை விரிவாக்கிக்கொள்ள ருமேனியா விற்கு அனுமதி அளிக்கப்பெற்றது. மாண்டிநிக்ரோவிற்கும் சிறிது அதிகமாக ஒரு பகுதி தரப்பெற்றது. இந்தக் குழப்பநிலையைத் துருக்கியும் பயன்படுத்தி அட்ரியானோபிள் நகரை மீண்டும் பெற்றன.

இரண்டு பால்கன் போர்களுக்குப் பிறகு ஆஸ்டிரியாவிற்கும், ஸெர்பியாவிற்கும் அதிக பகைமை வளர்ந்தது. ஸெர்பியர்களும், ஆஸ்டிரியர்களும் நல்லுறவுடன் ஆட்சி செய்யப் பல வழிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும், 1903-ல் ஸெர்பிய அரசன் அலெக்சாந்தர் இறந்த பிறகு அந்த நம்பிக்கையும் கைவிடப்பட்டது. ஏனெனில், அலெக்சாந்தருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த பீட்டர் மன்னன் ரஷ்யாவுடன் அதிக உறவை வைத்துக்கொண்டது. ஆஸ்டிரிய மன்னனுக்கு இது பிடிக்கவில்லை. மேலும், ஸெர்பியர்கள் ஆஸ்டிரியா விலுள்ள ஸ்லாவ் இனத்தினரை யெல்லாம் ஒன்று சேர்த்துப் புரட்சி செய்வரோ என்ற அச்சமும் இருந்தது. அதனால் வாய்ப்புக் கிடைக் கும்பொழுது ஸெர்பியாவின் கொட்டத்தை அடக்குவதற்கு ஆஸ்டிரியா தயங்கவில்லை. 1914 ஜூன் மாதத்தில் ஆஸ்டிரியா இளவரசன் ஆர்ச்டியூக் ஃபிரான்சிஸ் பெர்டினண்ட் என்பவர் போஸ்னியாவில் உள்ள சரோஜிவா என்ற நகரில் கொலை செய்யப் பட்டார். ஸெர்பியர்கள்தான் இந்தக் கொலைக்குக் காரணம் என்று கூறி ஆஸ்டிரியா அந்த நாட்டிற்கு இறுதி எச்சரிக்கையும், பிறகு அதன்மீது போரும் தொடுத்தது. ஜெர்மனி ஆஸ்டிரியாவை ஆதரித்தது. ஸெர்பியாவை ரஷ்யா ஆதரித்தது. ஃபிரான்ஸ் ரஷ்யாவை ஆதரித்தது. அதனால் பால்கன் போரின் விளைவு, முதல் உலகப் போர் ஏற்படக் காரணமாக இருந்தது.

11. இத்தாலிய ஒருமைப்பாடு இயக்கம்

(1850–70)

நீண்ட காலமாகவே இத்தாலி அந்நியர்களின் ஆக்கிரமிப்புக் களமாக இருந்து வந்தது. அதற்கு முக்கிய காரணம், இத்தாலியர்களிடையே ஒற்றுமை இல்லாமல் இருந்ததுவேயாகும். அவர்களுடைய அரசாட்சியும் சரியாக அமையவில்லை. அவர்களுடைய ஒருமைப்பாடு இயக்கம் தோன்றுவதற்கு முன்னர், இத்தாலி பல சிறிய நாடுகளாகச் சிதறுண்டு கிடந்தது. பியட்மாண்ட், ஸார்டினியா (Sardinia), மொடனு (Modena), பார்மா (Parma), டஸ்கனி (Tuscany), வெனிஷியா (Venetia), லம்பார்டி (Lombardy), நேபிள்ஸ் (Naples), ரோம் (Rome), வடக்குச் சிஸிலி (Sicily), தெற்குச் சிஸிலி என்ற பல சிறிய இராச்சியங்கள் இத்தாலியில் இருந்ததால் அவை மிகவும் பலம் குன்றியிருந்தன. அதனால் தான் ஆஸ்டிரியா, ஃபிரான்ஸ் ஆகிய வல்லரசுகளுக்கு இத்தாலி ஓர் ஆதிக்க நிலையமாக அமைந்துவிட்டது. இத்தாலியில் வேரூன்றிய அந்நிய ஆதிக்கத்தை விரட்ட அதற்குப் போதிய வலிமையோ, அல்லது தேசிய உணர்ச்சியோ ஏற்படவில்லை. ஆனால் 1850-க்குப் பிறகு இத்தாலிய மக்களிடையே படிப்படியாகத் தேசிய உணர்ச்சி ஏற்பட்டது. எங்குப் பார்த்தாலும் தேசியக் கழகங்கள் பல பெயர்களில் நிறுவப்பெற்றன. கார்பனேரி (Carbonari) என்ற இரகசியக் கழகம் இத்தாலிய மக்களுக்குத் தேசிய உணர்ச்சி அளிக்கப் பாடுபட்டது. இந்தக் கார்பனேரி சங்கம் இத்தாலிய மக்கள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவும், ஒரு நல்ல அரசாங்கத்தை நிறுவவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இந்தச் சங்கத்தின் கிளைகள் இத்தாலியில் உள்ள எல்லா இடங்களிலும், மற்றும் பல நாடுகளிலும் நிறுவப்பெற்றிருந்தன. இந்தச் சங்கத்தில் பல இளைஞர்கள் சேர்ந்தனர். இச் சங்கத்தின் கொடி, கருப்பு, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களைக் கொண்டிருந்தது. இந்தக் கொடி இத்தாலிய மக்களின் புரட்சிக் கொடியாக அமைந்திருந்தது.

ஸ்பெயினில் 1820-ல் நிகழ்ந்த அரசியல் புரட்சி நேபிள்ஸ் நாட்டு மக்களை மிகவும் கவர்ந்தது. நேபிள்ஸ் மக்களும், உரிமைகள் வேண்டுமென்றும், அதனால் அரசியல் சட்டம் ஒன்று தயாரிக்க வேண்டுமென்றும், இத்தாலிய இகரசியச் சங்கங்கள் மூலமாகப் புரட்சி செய்தனர். அப்பொழுது அரசனாக இருந்த முதலாம் பெர்டினண்ட் (Ferdinand) மக்களின் விருப்பத்தை மதித்து நடப்பதாகவும், அவர்களுக்கு உடனடியாக நல்ல அரசியல் அமைப்பை உருவாக்கித் தருவதாகவும் வாக்களித்தார். அதன்படி ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்பெற்றது. அந்த அரசியல் அமைப்பிற்குப் பெர்டினண்டும் அவரது மக்களும் மிகவும் பயபக்தியுடன் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். ஆனால், நாளடைவில் பெர்டினண்டின் வேடம் வெளிப்பட்டது. அரசியல் அமைப்பு எப்பொழுது கிழிக்கப்படும் என்று காத்திருந்த பெர்டினண்ட், ஆஸ்ரிடியப் பேரரசனின் உதவியைப் பெற்று, ஒரு பெரும் படையுடன் வந்து புரட்சிக்காரர்களை ஒடுக்கினர். நேபிள்சின் புரட்சித் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். மீண்டும் அரசன் அவருடைய எதேச்சாதிகார ஆட்சியை நிறுவிக் கொண்டார். அரசியல் அமைப்புக் கிழித்தெறியப்பெற்றது. இவ்வித மாக நேபிள்ஸில் 1820-ல் நிகழ்ந்த புரட்சி வெற்றியளிக்கவில்லை.

நேபிள்ஸில் நிகழ்ந்த புரட்சியைப் போன்றே பியட்மாண்டிலும் 1821-ல் நடைபெற்றது. ஆஸ்டிரியர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுதலையும் மக்களுக்கு வேண்டிய அரசியல் அமைப்பும் தான் புரட்சியாளர்களின் குறிக்கோள்களாக இருந்தன. வரையறுக்கப்பெற்ற முடியாட்சியைப் புரட்சியாளர்கள் பியட்மாண்டில் நிறுவவேண்டுமென்று விரும்பினர். ஏனெனில், சேவாய் (Savoy) வம்சாவழியில் வந்த விக்டர் இமானுவேல் பலம் குன்றியவராக இருந்தபோதிலும் மக்கள் அவரை முடிதுறக்க வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. இருப்பினும், விக்டர் இமானுவேல் பட்டத்தை அவர் தம்பியான சார்லஸ் பெலிக்ஸின் சார்பாக விட்டுவிட்டார். ஆனால், சார்லஸ் ஆல்பர்ட்தான் பட்டத்திற்கு வரவேண்டுமென்று மக்கள் விரும்பினர். இவ்விதமான ஒரு குழப்பம் அங்கு ஏற்பட்டதால், பியட்மாண்டிலும் புரட்சி வெற்றி அளிக்கவில்லை. லம்பார்டி, போப்பின் நாடு (Papal State) பார்மா, மொடனா ஆகிய நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது. ஆனால், எங்கும் இந்த இயக்கம் வெற்றியளிக்கவில்லை. இப் புரட்சியை அடக்குவதற்கு ஆஸ்டிரியாவிலிருந்து படைவீரர்கள் வரவழைக்கப் பெற்றனர். லம்பார்டியில் (Lombardy) புரட்சிக்காரர்களை வன்மையாகத் தண்டித்ததோடு, அங்கு ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தை மிகவும் உறுதியாக நிறுவினர்.

இத்தாலிய இளைஞர் கட்சி (Young Italy)

இந்த இயக்கத்தின் சிற்பி மாஜினி (Mazzini) என்பவராவார். கார்பனேரி இயக்கம் பல இடங்களில் புரட்சி செய்தும்கூட வெற்றி பெறவில்லை. அதனால் இத்தாலிய இளைஞர்களை ஒன்று சேர்த்து ஓர் இளைஞர் கட்சி தொடங்கப்பெற்றது. இளைஞர்களின் உதவியும், ஒத்துழைப்பும் இல்லாது எந்தப் புரட்சி இயக்கமும் வெற்றிபெறாது என்று மாஜினி கருதினார். அதனால் அவர்களுடைய ஆர்வத்தையும், தேசிய உணர்ச்சியையும் நல்ல விதத்தில் பயன்படுத்த அவர் முயற்சி செய்தார். அதனால் இந்த இளைஞர்களுக்கு நன்முகப் பயிற்சி அளித்து, இத்தாலியப் பாமர மக்களிடையே தேசிய உணர்ச்சியை அளிக்க, அவர்களைப் பிரச்சார வேலையில் ஈடுபடுத்தினார். அவர்கள் கடவுள், இத்தாலிய மக்கள், இத்தாலிய நாடு, என்ற குறிக்கோள்களை மக்களிடையே மிகவும் வற்புறுத்திப் பிரச்சாரம் செய்தனர். 1848–1849 ஆகிய ஆண்டுகளில் இத்தாலியத் தேசிய இயக்கம் மிகவும் வலிமைபெற்றது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து இத்தாலியை விடுதலையுறச் செய்ய வேண்டும் என்பது அவர்களது உறுதியான கொள்கையாக இருந்ததால் லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளில் ஆஸ்டிரியாவின் ஆட்சியை எதிர்த்துப் போர்புரிந்தனர். இப் புரட்சிக்கு ஆதரவாக ஸார்டினிய அரசன் சார்லஸ் ஆல்பர்ட் படைகளைத் திரட்டி ஆஸ்டிரியாவின் ஆட்சியை எதிர்த்துப் போர்புரிந்தார். டஸ்கனி, நேபிள்ஸ், போப்பின் நாடுகள் (Papal States) இவருக்குத் துருப்புகளை அனுப்பி உதவிபுரிந்தன. ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு அத் துருப்புகளை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டனர். சார்லஸ் ஆல்பர்ட் அதனால் தனிப்பட்ட முறையில் ஆஸ்டிரியாவுடன் போரிட்டுக் கஸ்டோஸா (Custozza) என்ற போர்க்களத்தில் 1848-ல் தோற்றுவிட்டார். அதனால் லம்பார்டியும், வெனிஷியாவும் ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்திலேயே இருந்துவிட்டன. மன்னர்களின் முயற்சியால் இத்தாலிய விடுதலை இயக்கம் வெற்றிபெறவில்லை. அதனால் மிதவாதிகளுக்குத் தோல்வியென்றே கூறலாம். நேபிள்ஸ், சிஸிலி, ரோம் ஆகிய நகர மக்கள் அரசியல் அமைப்பும் மற்றச் சீர்திருத்தங்களும் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். புரட்சி ஏற்படுவதற்கான நல்ல சூழ்நிலை இருந்ததால் மாஜினி, இளைஞர் கட்சியின் மூலமாக மக்களுடைய உரிமைகளைப்பெற புரட்சி செய்ய முன்வந்தார். ஒரு சில மன்னர்களின் போர் இப்பொழுது மக்களின் போராக மாறிவிட்டது. பியட்மாண்ட் ஸார்டினியா நாடுகளுக்கு வரையறுக்கப்பெற்ற முடியாட்சியும், அரசியல் அமைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்றமும் அளிக்கப்பெற்றன. அதனால் அந்த நாட்டு

மக்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். பியட்மாண்ட், ஸார்டினியா ஆகிய இரு நாடுகளும் இத்தாலியின் விடுதலை இயக்கம், ஒருமைப்பாட்டு இயக்கம் ஆகிய இரு மாபெரும் இயக்கங்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தன. அதனால் மற்ற இத்தாலிய மக்களுக்கும் வழிகாட்டியாக இந்த நாடுகள் அமைந்ததால் அந்த நாடுகளின் மன்னன் சார்லஸ் ஆல்பர்ட் முடி துறந்த பிறகு அவருடைய மைந்தனான இரண்டாம் விக்டர் இமானுவேல் என்பவர் இத்தாலிய மக்களின் தேசிய இயக்கத் திற்குத் தலைமை வகித்தார். அவர் இத்தாலியில் முதலில் ஒற்று மையை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பியதால் ஆஸ்டிரிய மன்னரிடம் முதலில் ஒரு சமரச உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இன்னும் இத்தாலிய நாடுகளில் எதேச்சாதிகார ஆட்சி நீடித்திருக்க வேண்டுமென்று மன்னர்கள் விரும்பியதால், மக்களுடைய புரட்சி பலத்த சோதனைக்குள்ளாகியது. நேபிள்ஸ், ரோம், சிஸிலி ஆகிய நாடுகளில் மன்னர்களது எதேச்சாதிகாரத் திற்குச் சிறிது வெற்றி ஏற்பட்டது. இத்தாலிய மக்கள் தேசிய உணர்ச்சி கொண்டிருந்தபோதிலும் அவர்கள் வெற்றி பெறுததற்கு முக்கிய காரணம், இத்தாலிய மன்னர்களுடைய பழைய முடியாட்சிக் கொள்கைகளைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் மேற்கொண்ட வன்முறைகளும், தவிர இத்தாலிய மக்கள் அவர்களது வலிமையை அதிகமாக நம்பி வெளி நாடுகளிலிருந்து உதவியைக் கேளாமல் இருந்ததுமேயாகும் என்று கூறப்படு கின்றது. மேலும் பியட்மாண்டைத் தவிர, மற்ற இத்தாலிய நாடுகளான லம்பார்டி, வெனிஷியா, டஸ்கனி, பார்மா, நேபிள்ஸ் சிஸிலி, ரோம், போப்பின் நாடு ஆகிய நாடுகளின் மன்னர்கள் இத்தாலிய இணைப்பு இயக்கத்தை ஆதரிக்காததும் ஒரு காரண மாகும். பியட்மாண்ட் அரசன் இரண்டாம் விக்டர் இமானுவேல் மட்டும் தம்முடைய மக்களுக்கு எல்லா உரிமைகளும் கொடுத்து விட்டதால் மற்ற இத்தாலிய மக்களும் இவருடைய தலைமையில் ஒற்றுமை இயக்கத்தையும் அதே சமயத்தில் விடுதலை இயக்கத் தையும் ஆரம்பிக்கவும் அதற்காகத் தியாகத்தைச் செய்யவும் காத் திருந்தனர். இத்தாலிய ஐக்கியத்திற்குக் காரணமாக இருந்தவர் களுள் பியட்மாண்ட், ஸார்டினியா அரசன் இரண்டாம் விக்டர் இமானுவேல் என்பவராவர். இந்த இயக்கத்திற்கு அவர் துருப்பு களை அனுப்பி உதவியும்; மேலும் தேசிய உணர்ச்சியை மற்ற இத்தாலிய நாடுகளில் பரப்புவதற்கு உறுதுணையாக இருந்தார். அதனால், இத்தாலிய மக்களுக்கு அவர்மீது அளவுகடந்த நம்பிக்கை ஏற்பட்டது. எதிர்கால ஐக்கிய இத்தாலிக்கு அவரே மன்னனாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அடுத்தபடியாக இத்தாலியத் தேசிய உணர்ச்சியை உருவாக்கிக் கொடுத்தவர்

மாஜினி என்பவராவர். இவருடைய முயற்சியால், இத்தாலியில் பல இளைஞர்கள் சங்கங்கள் நிறுவப்பெற்றது, மக்களிடத்தில் தேசிய உணர்வு ஏற்படும்படி அவர் வழிவகுத்தார். மக்களை முன்னேற்றப்பாதையில் இழுத்துச் சென்றவரும் அவரேயாவர். மக்களுடைய அரசியல் அறிவு வளர்ச்சி அடைவதற்கு அவர் முக்கியமானவராக இருந்தார். இரண்டாம் விக்டர் இமானுவேலுக்கு அமைச்சராகப் பணியாற்றிய காவூர் என்பவர் அறிவும், அனுபவமும் தேசிய உணர்ச்சியும் பெற்றவராவர். ஐக்கிய இத்தாலிய இயக்கம் வெற்றிபெற இவர் தம்முடைய பெரும் பங்கை அளித்திருக்கிறார். அதைப்போன்று கரிபால்டி என்ற போர்வீரர் தளபதியாக முன்நின்று இத்தாலியர்களைப் போர்க்களத்திற்கு இழுத்துச்சென்று இத்தாலிய மன்னர்களைத் தோற்கடித்திருக்கிறார். இந் நால்வரையும் இத்தாலிய ஐக்கியத்தின் சிற்பிகள் எனக் கூறலாம்.

பியட்மாண்டின் சிறு படைபலத்தினால் மட்டும் எதையும் சாதிக்க முடியாது என்று காவூருக்கு நன்றாகத் தெரியும். அதைப் போலவே, இத்தாலிய மக்களின் தேசிய ஆர்வத்தைக் கண்டும் ஆஸ்டிரியா பணிந்துவிடாது என்று காவூர் அறிந்திருந்தார். ஆனால், வலிமைமிக்க வல்லரசுகளின் உதவியிருந்தால்தான் ஆஸ்டிரியா பணியும் என்று காவூர் அறிந்திருந்தார். ஆனால், ஆஸ்டிரியாவிற்கு எதிராக எந்த வல்லரசு பியட்மாண்டுடன் சேர்ந்து உதவி செய்ய முன்வரும் என்ற ஐயப்பாடு காவூருக்கு இருந்தது. பியட்மாண்ட் என்ற நாடு இருப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளவும், மற்ற ஐரோப்பிய வல்லரசுகளின் இராச்சிய உறவுகளில் இடம் பெறவும், காவூர் பியட்மாண்ட் துருப்புகளைப் பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உதவிசெய்ய அனுப்பி வைத்தார். அப்பொழுது கிரிமியப் போர் ரஷ்யாவிற்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிரிமியப் போர் முடிந்த பிறகு ஐரோப்பிய வல்லரசுகளின் மாநாடுகளில் பியட்மாண்ட் கலந்து கொண்டாலும் எவ்வளவு முயற்சி செய்தும் நிரந்தரமான உதவியை எந்த வல்லரசும் காவூருக்கு அளிக்க முன்வரவில்லை. ஃபிரெஞ்சுப் பேரரசனான மூன்றாம் நெப்போலியன் தேசிய இயக்கங்களுக்கு நல்ல ஆதரவு அளித்து வந்தார். இந்த இயக்கத்திற்கு அவரால் தான் உதவி செய்யமுடியும் என்று காவூர் அவரைச் சந்தித்துப் பேச முயற்சி செய்தார். முதலில் நெப்போலியனுடன் சமரசப் பேச்சுகளை ஆரம்பிக்கும் முன்னர் ஐரோப்பாவில் தேசியத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற குறிக்கோளை உடையவர் என்பதற்காக ஃபிரான்சின் உதவியைப் பெறுவது என்பதும் சிறிது கடினமாகவே இருந்தது. அதனால் அவரைத் தம் பக்கம் ஈர்ப்பதற்கு,

ஃபிரான்சின் எல்லையைச் சேவாய் (Savoy) வரையிலும் விரிவாக்க, சேவாய்ப் பகுதியை ஃபிரான்சிற்குத் தரும் ஆலோசனையைக் காவூர் முதலில் நெப்போலியனிடம் சமர்ப்பித்தார். சேவாய் ஃபிரான்சிற்கு வருவதால் என்ன நன்மை இருக்கிறது என்பதை மூன்றும் நெப்போலியன் நன்குணர்வார். ஆனால், அவர் இந்தப் பரிசைப் பெறும்பொழுது ஆஸ்டிரியாவுடனும் போரிட வேண்டிய அவசியம் இருப்பதைக் கவனிக்கத் தவறவில்லை. அதனால் அவர் முன்னெச்சரிக்கையாக இருக்க நேரிட்டது. மூன்றும் நெப்போலியன் முதன்முதலில் கார்பனேரி இயக்கத்தில் சேர்ந்தவர்தான். இத்தாலி ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைப்பெற வேண்டுமென்று உண்மையிலேயே விரும்பினர். ஆனால், ஆஸ்டிரியாவின் பகைமை அவருக்குத் தடையாக இருந்தது. இச் சமயத்தில் ஆர்ஸினி (Orsini) என்ற இத்தாலியத் தேசபக்தன் நெப்போலியனைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபொழுது பிடிபட்டான். பிறகு அவன் தூக்கிலிடப் பட்டான். ஆனால், ஆர்ஸினி ஒரு தியாகியும், தேசபக்தனும் ஆவான் என்று அவனைப்பற்றி நெப்போலியன் பெருமையாகப் பேசினர். இத்தாலிய மக்களின் துடிப்பு இவன் மூலமாகப் பிரதி பலிக்கிறது என்று கருதி இத்தாலிய மக்களுக்கு எப்படியும் விடுதலை பெற்றுத் தருவதென்று நெப்போலியன் பரிசீலனை செய்தார். பிளாம்பியர்ஸ் என்ற இடத்தில் காவூரும் நெப்போலியனும் சந்தித்தனர்.

காவூர் தம் முழுத் திறமையையும் காண்பித்து, மூன்றும் நெப்போலியனுடன் ஓர் உடன்பாட்டைச் செய்துகொண்டார். அதன்படி மூன்றும் நெப்போலியன் 'பியட்மாண்டிற்குத் துருப்புகளை அனுப்பி உதவி செய்வது என்று ஒப்புக்கொண்டார். ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்தை லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளிலிருந்து விரட்டுவதற்கு மட்டும் அவர் உதவி செய்வதாக வாக்களித்தார். நேபிள்ஸ், ரோம் ஆகிய நாடுகளின் விவகாரங்களில் தாம் தலையிட முடியாது என்று கூறிவிட்டார். எஞ்சியுள்ள இத்தாலி ஒரு தனி நாடாக நிறுவப்பட வேண்டுமென்ற காவூரின் திட்டத்தை, ஏற்றுக்கொள்ள நெப்போலியனுக்கு, நைஸ் (Nice), சேவாய் (Savoy) ஆகிய பகுதிகளைத் தருவது என்று ஒரு முடிவுக்கு வந்தனர். மேலும் ஆஸ்டிரியாவின் ஆக்கிரமிப்பு ஏற்படும் பொழுதுதான் படைகளை அனுப்ப முடியும் என்று கூறிவிட்டார். இந்த உடன்பாடு ஏற்பட்டு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு போர் ஏற்பட்டது. இந்த ஒன்பது மாதங்களுக்குள் நெப்போலியனின் மனம் மாறிவிடுமோ என்ற ஐயப்பாடும் காவூருக்கு ஏற்பட்டது. இந்தக் காலத்தில் ஆஸ்டிரியாவின் ஆத்திரத்தையும், கோபத்தையும்

கிளறுவதற்கு எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவ்வளவையும் காவூர் செய்தார். ஆஸ்டிரியர் கூப் பத்திரிகைகளில் தாக்குவது, இராணுவ நடமாட்டம் செய்வது, அவர்களுடைய ஆட்சியைக் கண்டிப்பது என்று பல முறைகளாக் கையாண்டுக் கடைசியில் 1859-ல் ஆஸ்டிரியாவிற்கு ஆத்திரம் ஏற்பட்டுப் பியட்மாண்டின்மீது போர் தொடுத்தது. காவூர் இந்தச் சந்தர்ப்பத்தைத்தான் மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். அதனால், இந்தப் போரை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். நெப்போலியன் வாக்களித்தபடி பியட்மாண்டிற்கு உதவியாக அவரே முன்நின்று ஒரு பெரும் படையைச் செலுத்தி வந்தார். ஆஸ்டிரியர்கள் மேகண்டா (Magento), சால்பரினே (Salferino) ஆகிய போர்க்களங்களில் தோற்கடிக்கப்பட்டனர். அதனால், ஆஸ்டிரியர்கள் லம்பார்டியி லிருந்து விரட்டப்பட்டனர். சால்பரினே என்ற போரில் பல ஆயிரக்கணக்கான ஃபிரெஞ்சு வீரர்கள் உயிர் துறந்தனர். அதனால், நெப்போலியன் சிறிது மனக்கலக்கம் அடைந்தார். எவ்விதக் காரணமும் கூறுமல் திடீரென்று போரை நிறுத்தி ஆஸ்டிரியாவுடன் 1859-ல் வில்லாபிராங்கா என்ற இடத்தில் ஒரு சமரச ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். இதுபற்றி அவர் பியட் மாண்டைக் கலந்து ஆலோசிக்கவில்லை. இந்த ஒப்பந்தப்படி ஆஸ்டிரியா லம்பார்டியைப் பியட்மாண்டிற்குத் தந்துவிடுவது என்றும், வெனிஷியா ஆஸ்டிரியாவின் ஆதிக்கத்திலேயே இருப்ப தென்றும் முடிவு செய்யப்பட்டது. டஸ்கனி, பார்மா, மொடனு ஆகிய பகுதிகளின் அரசர்களைத் திரும்பவும் பட்டத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஓர் இத்தாலியக் கூட்டரசாங்கத்தைப் போப்பின் தலைமையில் நிறுவுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த நிபந்தனைகள் ஜூரி உடன்படிக்கையில் உறுதியாக்கப்பெற்றன.

மூன்றும் நெப்போலியன் இவ்வளவு விரைவில் தம்முடைய கொள்கைகளையும் கட்சியையும் மாற்றிக்கொள்வார் என்று காவூர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இந்த வில்லாபிராங்கா உடன் படிக்கை இத்தாலியத் தேசிய இயக்கத்தை அடியோடு ஒடுக்கி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. இந்த உடன்படிக்கை யின் நிபந்தனைகள் அமுலாக்கப்பட்டால், "நான் சதிகாரனும் புரட்சிக்காரனுமாகிவிடுவேன். இந்த உடன்படிக்கை அமுலாகக் கூடாது" என்று காவூர் கூறினர். இந்த உடன்படிக்கைக்குப் பிறகு அவர் மனமுடைந்து தம் பிரதம அமைச்சர் பதவியையும் ராஜினாமா செய்துவிட்டார். இருப்பினும் மன்னரின் வேண்டு கோளுக்கிணங்க, திரும்பவும் இப் பதவியை ஏற்றுக்கொண்டார். ஆனால், அவருடைய திட்டம் இரண்டு ஆண்டுகளில் வெற்றிபெற்றது.

வில்லாபிராங்காவில் ஏற்பட்ட உடன்படிக்கை நிபந்தனைகளை அமுல் நடத்துவதில் பல இடையூறுகள் இருந்தன. மத்திய இத்தாலியிலுள்ள டஸ்கனி, பார்மா, மொடனா ஆகிய பகுதிகள் பழைய அரசர்களையே திரும்பவும் பட்டத்திற்குக் கொண்டுவந்த போதிலும், மக்கள் அந்த மன்னர்களை அங்கீகரிக்க மறுத்து விட்டனர். மேலும், அவர்கள் போட்டி அரசாங்கங்களையும் நிறுவினர். ஸார்டினியா (Sardinia) பியட்மாண்ட் அரசனை இரண்டாம் விக்டர் இமானுவேல் தலைமையின்கீழ் அவர்கள் வாழ விரும்பினர். டஸ்கனி மக்கள் விக்டர் இமானுவேலின் ஆட்சியை ஏற்றுக்கொள்ள விரும்பினர். டஸ்கனி (Tuscany)யின் இந்த முடிவு மற்ற இத்தாலிய நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. இரண்டாம் விக்டர் இமானுவேல் இந்த நாடுகளுக்கு ஆதரவு அளித்தார். ஆனால், நேரடியாகவும் அதிகமான உதவியை அளித்தால் வல்லரசுகளின் கோபத்திற்கு ஆளாகவேண்டும் என்பதற்காக அவர் மறைமுகமான ஆதரவைமட்டும் அளித்தார். இந்தச் சமயத்தில்தான் காவூர் மீண்டும் நெப்போலியனுடைய உதவியை வேண்டினார். பிளாம்பியர்ஸ் உடன்பாட்டின்படி, சேவாம், நைஸ் ஆகிய பகுதிகளை நெப்போலியன் கேட்கவில்லை. ஏனெனில், அவர் உடன்பாட்டின்படி நடந்து கொள்ளாததால்தான் இந்த வாய்ப்பை அவர் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. ஆனால், காவூர் இந்த வாய்ப்பை மீண்டும் நெப்போலியனுக்கு அளித்தார். டஸ்கனி, மொடனா, பார்மா ஆகிய பகுதிகளைப் பியட்மாண்டுடன் இணைத்துக்கொள்வதற்கு நெப்போலியனுடைய ஆதரவு வேண்டுமென்று காவூர் கேட்டுக்கொண்டார். அந்த ஆதரவிற்காகச் சேவாயும், நைஸ் பகுதிகள் பரிசாக அவருக்கு அளிக்கப்படும் என்பதால் நெப்போலியன், அவருக்குப் பிரியமான பொதுமக்கள் வாக்கெடுப்பை அந்தப் பகுதிகளில் எடுத்து, அந்த முடிவின்படி காவூர் நடந்து கொள்ளட்டும் என்று கூறினார். இந்தப் பகுதிகளில் பொதுமக்கள் வாக்கெடுப்பு நடந்தது. பெருவாரியான மக்கள் பியட்மாண்டிடம் இணைந்துகொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தனர். 1860-ல் இரண்டாம் விக்டர் இமானுவேல் வட இத்தாலி, மத்திய இத்தாலி ஆகிய பகுதிகளுக்கு அரசனைப் பதவியேற்றார். நெப்போலியனுக்குச் சேவாயும், நைஸ் பகுதிகளும் தரப்பெற்றன. மற்ற வல்லரசுகள் நெப்போலியனின் புதிய இலாபத்தைக்கண்டு பொருமினர். இத்தாலிய ஐக்கிய முன்னணியில் தீவிரமாகப் பணியாற்றிய கரிபால்டி (Garibaldi) தான் பிறந்த ஊரான சேவாயை ஃபிரான்சிற்கு அளித்துவிட்டதால் மிகவும் கோபமும் ஆத்திரமும் அடைந்தார்.

இத்தாலிய ஒருமைப்பாட்டின் அடுத்தக் கட்டம் கரிபால்டியுடன் தொடர்புடையதாக இருந்தது. இரண்டு சிஸிலிகளின் அரசனுக இருந்த பெர்டினண்டு 1859-ல் இறந்துவிட்டார். அவருடைய மகன் இரண்டாம் ஃபிரான்சிஸ் பட்டத்திற்கு வந்த பிறகு ஆஸ்டிரியாவுடன் நெருங்கிய உறவு வைத்துக்கொண்டார். மேலும், மற்ற இத்தாலிய நாடுகள் பியட்மாண்டுடன் இணைந்து பல உரிமைகளைப் பெற்றதால் சிஸிலி மக்களும்கூட விக்டர் இமானுவேலைத் தங்கள் அரசனுக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். இத்துடன் அங்கே நேபிள்ஸ் (Naples) நாட்டின் ஆதிக்கம் அதிகமாகப் பரவியிருந்தது. சிஸிலி மக்கள் இந்த ஆதிக்கத்தை விரும்பவில்லை. தேசியக் கழகங்கள் மூலமாக மக்கள் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்டனர். தேசியக் கழகங்கள் பியட்மாண்ட் அரசனின் தலைமையில் இத்தாலிய ஐக்கியத்தை ஆதரித்தன. இதைச் சாதிக்கும் பொருட்டுப் பல புரட்சித் திட்டங்கள் உருவாக்கப்பெற்றன. இந்தப் புரட்சியை நடத்திக் கொடுக்கும்படி கரிபால்டியை அவர்கள் அழைத்தனர். இந்தப் புரட்சியைச் சிஸிலிய மக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றும், இந்தப் புரட்சி விக்டர் இமானுவேல் பெயரில் நடத்தப்பட வேண்டுமென்றும் கரிபால்டி ஒரு நிபந்தனையிட்டார். காவூர் நேரடியாக இந்தப் புரட்சி இயக்கத்திற்கு உதவியளித்தால் மற்ற வல்லரசுகளின் தலையீடு இருக்கும் என்று உணர்ந்திருந்ததால், அவர் மறைமுகமாகத்தான் இந்தப் புரட்சி இயக்கத்திற்கு ஆதரவு அளித்தார். கரிபால்டி ஒரு படை திரட்டுவதற்குக் காவூர் உதவியாக இருந்தார். 1860 மே, 5ஆம் தேதியன்று கரிபால்டி இரண்டு கப்பல்களுடனும் ஆயிரம் படை வீரர்களுடனும் ஜெனோவா நகரைவிட்டு மார்ஸலா நகரை வந்து சேர்ந்தார். கரிபால்டி வழியில் தம்முடைய போர் வீரர்களுக்குச் சிவப்புச் சட்டைகளை அணிவிக்கச் செய்தார். இரண்டு வாரங்களில் நேபிள்ஸ் படையினரை முறியடித்துப் பாலர்மோ நகரைச் சேர்ந்தனர். கரிபால்டியின் வரவைச் சிஸிலி மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று அவருக்கு உதவிசெய்ய முன்வந்தனர். கரிபால்டியும் சிஸிலியின் சர்வாதிகாரியென்று பிரகடனம் செய்துகொண்டார். மெஸினு நகரம் மட்டும் அவருக்கு ஆதரவு அளிக்காமல் இருந்தது. சிஸிலியில் ஏற்பட்ட புரட்சியைப் பின்பற்றி நேபிள்ஸ் நாட்டிலும் ஒரு புரட்சியை ஆரம்பித்தார். கரிபால்டியும் நேபிள்ஸ் நாட்டைப் பிடிப்பதற்கு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மெஸினு ஜலசந்தி வழியாகமட்டும் போகக் கூடாது என்று முதலாம் விக்டர் இமானுவேல் கரிபால்டிக்கு உத்தரவிட்டிருந்தார். அதே சமயத்தில் நேபிள்ஸ் நாட்டை ஆக்கிரமிக்கக்கூடாதென்றும் மூன்றும் நெப்போலியன் எச்சரிக்கை

விடுத்தார். இதற்குப் பிரிட்டனுடைய ஆதரவு வேண்டுமென்று மூன்றும் நெப்போலியன் கேட்டபொழுது, அவருடைய திட்டத்தைப் பிரிட்டன் ஏற்க மறுத்துவிட்டது. இத்தாலிய இயக்கத் திற்குப் பிரிட்டன் எவ்வித இடையூறையும் இழைக்க விரும்பவில்லை. ஆக்ஸ்டு மாதத்தில் கரிபால்டி மிகவும் துணிச்சலுடன் மெஸினா ஜலசந்தியைக் கடந்து காஸ்பிரியா நகரில் நுழைந்தார். அங்கிருந்து நேபிள்ஸ் நகரை நோக்கி முன்னேறினார். படையுடன் கரிபால்டி நுழைகிறார் என்றவுடன் நேபிள்ஸில் பெரிய குழப்பங்கள் ஏற்பட்டன. இரண்டாம் பிரான்சிஸ் அமைச்சர்களும், போர் வீரர் களும் அரசனுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டனர். மக்களும் இவருடைய எதேச்சாதிகாரத்தை வெறுத்தனர். விரைவில் கரிபால்டியும் நேபிள்ஸ் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார். அதற்குப் பிறகு இரண்டாம் பிரான்சிஸ் நாட்டைவிட்டு ஓடி விட்டார். கரிபால்டி நேபிள்ஸின் சர்வாதிகாரி என்று பிரகடனம் செய்தார்.

விக்டர் இமானுவேலுக்கு அடங்கி விசுவாசமுள்ளவராக இருப்பதை அறிவிப்பதற்கு அவரிடம் ஒப்படைக்கப்பெற்ற கப்பற் படையைச் சார்டினியக் கப்பற்படைத் தளபதி பெர்ஸனோவிடம் ஒப்புவித்துவிட்டார். கரிபால்டியின் பிரமிக்கத்தக்க வெற்றிகள் காவூருக்கு மகிழ்ச்சியை அளித்ததென்றாலும், இதனுடைய விளைவுகள் அபாயமானவை என்று கருதினார். கரிபால்டி ஒரு சமயம் தெற்கு இத்தாலியக் குடியரசை நிறுவத் திட்டமிடுகிறாரோ என்றும் சந்தேகப்பட்டார். ஆனால், அவருடைய சந்தேகம் விரைவில் நீங்கிவிட்டது. எல்லாம் விக்டர் இமானுவேலுவின் பெயரில்தான் நடத்தப்பெற்றது.

இந்தச் சமயத்தை நழுவவிடாது காவூரும் ஒரு படையைத் திரட்டிப் போப்பல் நகரின்மீது படையெடுத்தார். அம்பிரியா (Umbria) என்ற பகுதியில் நிகழ்ந்த புரட்சி இயக்கத்தைப் போப்பின் படைகள் தலையிட்டு ஒடுக்கிவிட்டன என்று கேள்வி யுற்றவுடன் அந்த இடத்தை நோக்கிக் காவூரின் படைகள் விரைந்தன. போப்பின் படைகளைக் கேஸல் பிடார்டோ (Castle Fidardo) என்ற இடத்தில் முறியடித்தார். இரண்டு வாரங்களில் அம்பிரியாவும், மார்ச்சுப் பகுதிகளும் பியட்மாண்டின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பெற்றன.

கரிபால்டியும் காவூரும் ஒருவருக்கொருவர் போட்டிப் போட்டுக் கொண்டு இத்தாலியப் பகுதிகளை இணைத்துக்கொண்டு வந்தனர். காபுவா (Capva) என்ற இடத்தில் கரிபால்டிக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. நேபிள்ஸ், சிஸிலி நாடுகளில் இதற்குள் பொது

மக்கள் வாக்கெடுப்பு நிகழ்ந்தது. பெருவாரியான மக்கள் பியட்மாண்டுடன் இணைந்து விடுவதென்று முடிவு செய்தனர். இதனால் விக்டர் இமானுவேல் நேபிள்ஸ் நகருக்கு விரைந்தார். வழியில் கரிபால்டி தம்முடைய படைகளை மன்னனிடம் ஒப்புவித்தார். மன்னனும், கரிபால்டியும் ஒருங்கே சேர்ந்து காபுவா (Capva), கேத்தா (Gaeta) ஆகிய இடங்களைப் பிடித்து நேபிள்ஸ் நகரில் நுழைந்தனர். 1860 நவம்பர், 9ஆம் நாளன்று இரண்டாம் விக்டர் இமானுவேல் நேபிள்ஸ், சிஸிலி ஆகிய நாடுகளின் அரசன் என்று பிரகடனம் செய்யப்பட்டது. 1861 மார்ச் மாதம் வெனிஷியா, ரோம் ஆகிய இரண்டு பகுதிகளைத் தவிர, மற்ற இத்தாலிக்கு விக்டர் இமானுவேலே அரசன் என்று அறிவித்தனர். காவூர் முழு இத்தாலிய ஐக்கியத்தைக் காண முடியவில்லையெனினும் ஓரளவிற்கு அவருடைய திட்டத்தின் வெற்றியைக் கண்ட பிறகே அவர் இறந்தார். இத்தாலிய ஐக்கியத்திற்கு அவர் செய்த சேவை மிகவும் மகத்தானதாகும். இத்தாலியை ஒரே நாடாக உருவாக்கியது அவர்தான். இந்தக் குறிக்கோளை அடைவதற்குத்தான் அவர் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். அவர் இறக்கும் பொழுதுகூட, "இத்தாலி உருவாக்கப்பட்டுவிட்டது. அது நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது" என்று இறுதியாகக் கூறினார்.

வெனிஷியா, ரோம் ஆகிய இரு பகுதிகளையும் இணைப்பதில் சிறு தடைகள் இருந்தன. இவைகளை இணைத்துக்கொள்வதில் ஆஸ்டிரியா, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் போரிட்டே இணைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. வெனிஷியாவை அடைவதற்கு இத்தாலி, பிரஷ்யாவுடன் 1866-ல் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. பிரஷ்யாவிற்கும் ஆஸ்டிரியாவிற்கும் நடக்க இருக்கும் போரில் இத்தாலி, பிரஷ்யாவின் பக்கம் சேர்ந்து, ஆஸ்டிரியப் படைகளைத் தெற்கே தாக்கவேண்டுமென்றும் இந்த உதவிக்கு வெனிஷியாவைத் தருவதென்றும் ஒப்புக்கொள்ளப் பெற்றது. அதன்படி "ஆஸ்டிரிய–பிரஷ்ய" போரில் இத்தாலி பிரஷ்யாவிற்கு உதவிசெய்தது. இத்தாலியர்களது தாக்குதல் ஒன்றும் பயனளிக்கவில்லை. எனினும் ஆஸ்டிரியர்கள் இரு முனைகளிலும் போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கஸ்டோஸா என்ற இடத்தில் இத்தாலியர்கள் படுதோல்வி அடைந்தனர். இருப்பினும் பிரஷ்யர்கள் ஆஸ்டிரியப் படைகளை ஸடோவா (Sadowa) என்ற போர்க்களத்தில் முறியடித்தனர். ஆஸ்டிரியாவும் சரணடைந்தது. வெனிஷியாவை இத்தாலியர்களுக்குக் கொடுத்து விடும்படி ஆஸ்டிரியாவுடன் பிஸ்மார்க் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி வெனிஷியாவை இத்தாலியர்கள் அடைந்தனர்.

ரோம் நகரில் 1849 ஆகஸ்டிலிருந்தே ஃபிரெஞ்சுத் துருப்புகள் நிறுத்தப்பட்டிருந்தன. 1870-ல் மூன்றும் நெப்போலியன் பிரஷ்யர்களுடன் போரிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் ரோமிலிருந்த ஃபிரெஞ்சுத் துருப்புகளை அவர் திரும்பப் பெற்றுக்கொண்டார். இத்தாலியர்களுக்கு ரோம் நகரம் இல்லாதது திருப்தியளிக்கவில்லை. அவர்களுடைய தலைநகரை டூரின் நகரிலிருந்து ரோம் நகரத்திற்கே மாற்றிக்கொள்ளவேண்டும் என்று விரும்பினர். 1862-ல் கரிபால்டியும்கூட ரோம் நகரைப் பிடிப்பதற்குத் திட்டமிட்டார். ஆனால், விக்டர் இமானுவேல்தான் சிறிது பொறுமையுடன் இருக்கும்படி கேட்டுக்கொண்டார். 1864-ல் ரோம் நகரைப் பியட்மாண்டுடன் இணைத்துக் கொள்வதுபற்றி மூன்றும் நெப்போலியனுடன் பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்தன. ஆனால், ரோம் இத்தாலியின் தலைநகரமாக விளங்குவதை நெப்போலியன் சிறிதும் விரும்பவில்லை. 1866-ல் ஃபிரெஞ்சுத் துருப்புகள் பின்வாங்கவே, கரிபால்டியின் படைகள் ரோம் நகரைத் தாக்கின. ஃபிரான்சிலுள்ள ரோமன் கத்தோலிக்கர்கள், நெப்போலியன் மீண்டும் ஃபிரெஞ்சுத் துருப்புகளை ரோமிற்கு அனுப்பி வைக்கும்படி வற்புறுத்தினர். ஃபிரெஞ்சுத் துருப்புகளும் போப்பின் துருப்புகளும் ஒன்று சேர்ந்து கரிபால்டியின் படைகளை மென்டானு (Mentana) என்ற இடத்தில் தோற்கடித்தன. அப்பொழுதிருந்த ஃபிரெஞ்சுப் பிரதம அமைச்சர், "ரோம் நகரம் இத்தாலியர்களுக்குக் கிடைக்கவே கிடைக்காது. ரோம் நகரத்தின்மீது இயற்றப்பட்ட ஆக்கிரமிப்பை ஒருபொழுதும் ஃபிரான்ஸ் சகித்துக்கொண்டிருக்க முடியாது" என்று கூறியது, ஃபிரான்சிற்கும் இத்தாலியர்களுக்கும் அதிக பகைமையை வளர்த்தது. ரோம் நகரம் இல்லாது, இத்தாலிய நாடு முழுமையடையாது என்ற காரணத்தால் அவர்கள் அந் நகரத்தைக் கைப்பற்ற நல்ல வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர். 1870-ல் ஃபிரான்சிற்கும், பிரஷ்யர்களுக்கும் ஏற்பட்ட போரின் காரணத்தினால், ஃபிரெஞ்சுத் துருப்புகள் ரோமிலிருந்து பின் வாங்கப்பட்டன. செப்டம்பர் மாதத்தில் மூன்றும் நெப்போலியன் ஸெடான் (Sedan) என்ற போர்க்களத்தில் முறியடிக்கப்பட்டார். 20ஆம் தேதி இத்தாலியப் படை ரோம் நகரில் நுழைந்தது. அதற்குப் பிறகு ரோம் நகரம் இத்தாலியர்களுக்குச் சொந்தமாகிவிட்டது. இத்தாலிய நாட்டிற்கு, ரோம் மீண்டும் தலைநகரமாகியது. தாந்தே காலத்திலிருந்து மாஜினி காலம் வரையிலும் இத்தாலியத் தேச பக்தர்கள் கொண்டிருந்த கனவு நனவாகியது. இத்தாலி இத்தாலியர்களுக்கே சொந்தமாகியது.

12. ஜெர்மனியின் ஐக்கியம்

(1860–1871)

ஜெர்மானிய நாடு பிஸ்மார்க்கினுல் (Bismarck) தோற்றுவிக்கப் பெற்று ஹிட்லர் காலத்தில் முடிக்கப்பெற்றது. அதற்கு முன்னர் ஜெர்மனியில் தேசிய உணர்வு காணப்பட்ட போதிலும், அங்கே எண்ணற்ற சிறுநாடுகள் இருந்தன. அந்தச் சிறிய நாடுகள் தனிச் சுதந்தரம் பெற்ற நாடுகளாக விளங்கின. அந்த நாடுகளுக் கிடையே எவ்வித ஒருமைப்பாடும் இருந்ததில்லை. அந் நாடு களிடையே அரசியல், பொருளாதார, சமய வேறுபாடுகள் மலிந்திருந்தன. இந்த வேறுபாடுகள் ஜெர்மனியை உருவாக்கு வதற்குத் தடையாக இருந்தன. தவிர, ஜெர்மனியை இதுவரை யிலும் உருவாக்க முடியாமல் போனதற்கு, மற்ற ஐரோப்பிய வல்லரசுகளும் தடையாக இருந்தன. அடிக்கடி அந்த வல்லரசு கள் ஜெர்மனியின் பிரச்சினைகளில் தலையிட்டன. முப்பதாண்டுப் போர் வெஸ்ட்பேலியா (Westphalia) உடன்படிக்கை 1648-க்குப் பிறகு முடிவுற்றது. அந்த உடன்படிக்கை ஜெர்மனியின் சீர்குலைவை நிரந்தரமாக்கியது. ஃபிரான்ஸ், டென்மார்க், ஹாலந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகள் ஜெர்மனி உருவாக்கப்படுவதற்குத் தடை யாக இருந்தன. ஐரோப்பாவில் 'சமநிலை' ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக, ஜெர்மனியில் சிறிய சிறிய நாடுகளை ஏற்படுத்தினர். அப்படித் தோன்றிய சில நாடுகளுக்கு எவ்வித வரலாற்றுத் தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. மற்றும் சில நாடுகள் சுதந்தர நாடுகள் சுதந்தர நாடுகளாகவே இருக்கத் தகுதியற்றவை யாக இருந்தன. இருப்பினும் அவை எப்படியோ தத்தளித்துக் கொண்டிருந்தன. அந்த நாடுகளிடையே பிரதேசப் பற்று அதிக மாக வளர்ந்துகொண்டு வந்தது. நாளடைவில் பிரஷ்யாவைச் சார்ந்த ஹோஹன்சாலர்ன் வம்சாவழியினர் ஆதிக்கம் செய்யத் தொடங்கினர்.

நெப்போலியன் போனபார்டேவின் ஐரோப்பியப் போர்களால், ஆஸ்டிரியாவும், பிரஷ்யாவும் முறியடிக்கப்பெற்றன. அந்த

நாடுகள் ஜெர்மனியில் செல்வாக்கை இழந்துவிட்டன. பழைய வெஸ்ட்பேலியா முறையில் பாதுகாக்கப்பட்ட ஜெர்மனியின் சிறு சிறு நாடுகள் நெப்போலியனின் படைக்கு முன்னர் போரிட முடியாது தங்களுடைய சுதந்தரத்தை இழந்துவிட்டன. சிறு சிறு நாடுகள் இருப்பதால்தான் ஐரோப்பாவில் சமநிலை பாதுகாக்கப்படும் என்ற பழையக் கொள்கை இப்பொழுது அடிபட்டுவிட்டது. இந்த ஜெர்மன் நாடுகளிலிருந்து நெப்போலியன் நிறைய உதவியை எதிர்பார்த்தார். அவரது படைக்கு வேண்டிய ஆட்களை அங்குத் திரட்டினர். அந்த அரசர்களிடமிருந்து நிறைய பண உதவியும் பெற்றார். போர்போர்ன் மன்னர்களுக்கு ஜெர்மன் நாடுகள் ஆபத்தை விளைவிக்காமல் இருந்தால் போதும் என்று கருதினர். ஆனால், நெப்போலியன் போனபார்டேவின் கொள்கை வேறுவிதமாக இருந்தது. இந்தச் சிறிய ஜெர்மன் நாடுகளை ஒன்றுக இணைத்து ஒரு கூட்டரசாங்கம் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று விரும்பினர். அப்பொழுதுதான், அந்த அரசாங்கத்திடமிருந்து படை உதவியும், பண உதவியும் கிடைக்கும் என்று அவர் கருதினர். ஆனால், ஜெர்மனியின் சிறு நாடுகளெல்லாம் பல்வேறு வேற்றுமைகளைக் கொண்டதாக இருந்ததால், அவரால் இந்தக் காரியத்தைச் சாதிப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இருந்தபோதிலும், ரைன் நதிக்கரையிலுள்ள சுமார் முப்பது ஜெர்மனி நாடுகளை இணைத்து, "ரைன் நாடுகளின் கூட்டரசாங்கத்தை" உருவாக்கினர். (Confederation of the Rhine States) இந்த அரசாங்கம் நெப்போலியனது ஆணைகளை ஏற்று நடக்கவும், அதே சமயத்தில் நெப்போலியனது நேசநாடுகள் என்று அழைப்பதற்குப் பெருமைதரக் கூடியதாகவும், இந்த ரைன் கூட்டரசாங்க நாடுகளை இணைத்தார். இந்தக் கூட்டரசாங்க நாடுகள் தங்கள் சுதந்தரத்தை இழந்து, நெப்போலியனுடைய ஆணைகளை ஏற்று நடக்கச் சம்மதித்தன. நெப்போலியன் காலத்தில் அடிக்கடி எல்லைகள் மாற்றப்பட்டு, அங்குக் குடியிருந்த மக்களை இடம் பெயரச் செய்யவும் அடிக்கடி செய்து வந்ததால், அந்த நாடுகளெல்லாம் உண்மையில் தங்களுடைய வலிமையை இழந்து நெப்போலியனது ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடாத நிலையில் இருந்தன.

ஜெர்மனியிலுள்ள சிறு நகரங்களும், மற்றும் மத குருமார்களின் ஆட்சியிலிருந்த நகரங்களும் அண்மையிலுள்ள ஜெர்மன் நாடுகளுடன் இணைக்கப்பெற்றன. ரைன் கூட்டரசாங்கத்தில் ஜெர்மானிய அரசர்கள் அங்கம் வகித்தனர். அந்த ரைன் கூட்டரசாங்கம், நெப்போலியனது கூட்டரசாங்கத்தை ஏற்றுக்கொண்டதே தவிர, அந்த நாடுகளின் தேசிய வளர்ச்சியையோ, அல்லது

மக்களின் நலன்களையோ பாதுகாத்ததாகத் தெரியவில்லை. நெப்போலியனது ஆட்சியை எதிர்க்குமளவிற்கு அந்தச் சிறு நாடுகளுக்குத் துணிவு ஏற்படவில்லை. அப்படி ஏதாவது துணிச்சல் ஏற்பட்டால் அவைகளின் அழிவும் உறுதி என்பதும் அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. இச் சிறிய நாடுகள் ஜெர்மனியில் உள்ள பெரிய இராச்சியங்களுடன் இணைந்தால் ஒரு சமயம் வலிமைபெற வாய்ப்பு இருந்தது. அப்படி ஜெர்மனியிலுள்ள பெரிய நாடுகள் பிரஷ்யா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, பவேரியா ஆகியவையாகும். பிரஷ்யாவிற்கும், ஆஸ்டிரியாவிற்கும் ஜெர்மன் நாடுகளைச் சீரமைக்கும் ஆசை இருப்பினும் முதலில் நெப்போலியன் ஒழிந்த பிறகே, அந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும். ஆஸ்டிரியாவிற்கும், பிரஷ்யாவிற்கும் நடுவேதான் ஃபிரான்ஸ் தலையிட்டு, இச் சிறிய நாடுகளைப் பாதுகாக்கப் போவதாகக் கூறியது. ஓரளவிற்கு ஜெர்மனி உருவாக்குவதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ நெப்போலியன் மேற்கொண்ட ஜெர்மன் கொள்கையே காரணமாக இருந்தது என்று கூறலாம்.

1848-ல் ஜெர்மனியிலுள்ள மிதவாதிகள் (Liberals) ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சமாதான முறையிலும், அரசியல் அமைப்பை உருவாக்கித் தருவதிலும் முடியும் என்று நம்பினர். இந்த முயற்சி பவேரியாவின் ஆதரவில் தீவிரமாக்கப்பட்டது. ஆனால், பவேரியாவிடம் வலிமை இல்லை; போதிய செல்வாக்கு மில்லை. இரண்டுமின்றி ஆஸ்டிரியாவையும், பிரஷ்யாவையும் பணிய வைக்க முடியாது. அதனால் பவேரியாவின் ஆதரவில் நிகழ்ந்த 1848 கிளர்ச்சிகள் வீணாயின. அந்தக் கிளர்ச்சிகள் ஒடுக்கப் பெற்றன.

"தீவிரவாதிகள் புரட்சியின் மூலமாக ஜெர்மனியை ஐக்கியப் படுத்தாவிடில், பிஸ்மார்க் ஜெர்மனியைப் பழைய முடியாட்சியின் வலிமையைக் கொண்டே இணைத்துவிடுவார்" என்று கார்ல் மார்க்ஸ் கூறினார். ஜெர்மன் நாடுகளில் தேசிய சக்திகள் வளர வாய்ப்பு அளித்தால் பிரஷ்யாவின் ஆதிக்கம் உறுதியாக ஏற்படும் என்று அவர் கருதினார். அதனால் இந்தச் சிறு நாடுகளின் தேசியம், புரட்சி என்ற கொள்கைகளெல்லாம் பரவாதவரையிலும், மேலும் இந்தச் சிறுநாடுகள் அப்படியே இருக்கும்வரையிலும் பிரஷ்யாவின் ஆதிக்கமும், மற்றச் சிறு நாடுகளுக்கு ஆதரவு அளிக்கும் செல்வாக்கும் அப்படியே இருக்கும் என்று நம்பினார். பிஸ்மார்க் நினைத்திருந்தால், ஜெர்மனியின் ஐக்கியத்தைப் படைபலம் கொண்டே சாதித்திருக்க முடியும். ஆனால், தேசியப் புரட்சி சக்திகளுக்குப் பயந்து கொண்டேதான் உடனடியாக அவர் அப்படிச் செய்யவில்லை.

மேலும் வெஸ்ட்பேலியா உடன்படிக்கை எப்படி ஜெர்மனியின் துண்டாடுதலைச் "சமநிலைக் கொள்கை" என்ற பெயரால் அந்நிய நாடுகள் ஜெர்மனியின் ஐக்கியத்தைச் சீர்குலைத்தனவோ அது போன்றே 1815–ல் வியன்னா உடன்படிக்கையிலும் இதே கொள்கையை ஆதாரம் காட்டி, ஜெர்மனி துண்டுத் துண்டாக இருப்பதையே ஐரோப்பிய வல்லரசுகள் விரும்பின. அதனால் பிஸ்மார்க் முதல் வேலையாக, இந்த வியன்னா உடன்படிக்கையின் விளைவுகளையும், அதன் நிபந்தனைகளையும் களைந்தெறிய முயற்சி எடுத்துக் கொண்டார். ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு எந்தெந்தச் சக்தி எதிராக இருந்ததோ, அதையெல்லாம் பல வழிகளைப் பின்பற்றி அகற்றினார்.

பிரஷ்யாவின் அரசனான முதலாம் வில்லியம் (1861–1888) புரட்சியையும், முன்னேற்றத்தையும் விரும்பாதவர். சட்டசபை அங்கத்தினர்கள் இவரது எதேச்சாதிகாரத்தை வன்மையாகக் கண்டித்தனர். படையைத் திரட்டும்பொழுதும் அதற்கு வேண்டிய செலவினங்களைச் சேகரிக்கும்பொழுதும் அவர் சட்டசபையின் அனுமதியைக் கோரினர். சட்டசபை இவருடைய கோரிக்கைகளை மறுத்துவிட்டது. அதற்குப் பதிலாக அரசனின் எல்லையற்ற அதிகாரங்களைக் குறைப்பதற்கான சில மசோதாக்களும், இராணுவக் குறைப்பும் ஜூரி விசாரணை முறையும், மேல்சபையின் சீரமைப்பும், சமய சார்பற்றப் படிப்பும், அமைச்சர்களின் சட்ட சபை பொறுப்பும் வேண்டுமென்ற கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இந்தக் கோரிக்கைகளை ஏற்க அரசன் மறுத்துவிட்டார். இதனால் பிரஷ்யாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. பலமுறை சட்ட சபை கலைக்கப்பெற்றது. அமைச்சர்கள் மாறிக்கொண்டே வந்தனர். அரசனின் ஆத்திரம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது. சட்டசபையின் அனுமதியில்லாது இராணுவ அதிகரிப்பையும் செலவினங்களையும் செய்வது என்று அரசன் துணிந்தார். இந்த நெருக்கடியான சமயத்தில்தான் அரசனின் அமைச்சர் வான்ரூன் என்பவர் பத்தாம்பசலிக் கொள்கையைப் பின்பற்றிப் பெயர் வாங்கினவரான ஆட்டோவான் பிஸ்மார்க் என்பவரைப் பிரதம அமைச்சராக்க ஆலோசனை கூறினர். ஜனநாயகக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளாதவரும், அவைகளுக்குப் பரம வைரியாகவும் இருப்பவரையும் பிரதம அமைச்சராக நியமித்ததும் அரசனுக்கு நல்ல காலம் பிறந்தது. அப்பொழுது, பிஸ்மார்க் மூன்றும் நெப்போலியன் அரசவையில் பிரஷ்யாவின் இராச்சியத் தூதுவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு அரசியல், வெல்திறன் துறைகளில் பத்து ஆண்டு அனுபவம் இருந்தது. பாரிஸ், பீட்டர்ஸ்பர்க், பிராங்பர்ட் ஆகிய

தலைநகரங்களில் அவர் இராச்சியத் தூதுவராகப் பணியாற்றியிருக்கிறார். இந்த அனுபவத்தினால் அவர் பல நாட்டு அரசர்களின் குணாதிசயங்களை நன்கறிந்திருந்தார். வல்லரசுகளின் தயவை எப்படிப் பெறுவதென்றும், அவைகளை எப்படித் தட்டிக்கழிப்பதென்றும் போன்ற அரசியல் பாடங்களை அவர் நன்கு கற்றிருந்தார். இவரைத்தான் முதலாம் வில்லியம் அழைத்துப் பிரதம அமைச்சராக்கினார். "நான் அரசனுடன் அழிந்துவிடுவேனே தவிர, சட்டசபை நெருக்கடியில் அரசனை ஒருபொழுதும் கைவிடமாட்டேன்" என்று பிஸ்மார்க் அரசனிடம் கூறினார். 1862-ல் பதவியேற்ற பிஸ்மார்க் அரசனுடையக் கொள்கைகளையும், முடியாட்சியை வேரூன்றச் செய்யவும், அரும்பாடுபட்டார். தவிர, பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மன் நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே ஜெர்மன் நாடாக இருக்க வேண்டுமென்று விரும்பினார். இந்தக் கொள்கைக்காக அவர் ஒவ்வொரு வாய்ப்பையும் நழுவவிடாது பயன்படுத்தினார். வாய்ப்பும், சூழ்நிலையும் இல்லையெனில் அவற்றை அவர் உருவாக்கத் தவறவில்லை. "ஜெர்மனி பிரஷ்யாவின் மிதவாதத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கவில்லை. ஆனால், பிரஷ்யாவின் வலிமையைத்தான் எதிர்பார்க்கிறது. பிரஷ்யாவின் எல்லைகள் நன்கு பாதுகாக்கப்படவில்லை. அதனால், அவை நன்கு பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு நல்ல இராணுவம் தேவைப்படுகின்றது. ஆனால், சொற்பொழிவுகளாலும், தீர்மானங்களாலும் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது. இந்த நெருக்கடியைத் தீர்க்க உறுதியான கொள்கை, 'இரத்தமும் இரும்பும்' என்ற கொள்கைதான் தேவைப்படுகின்றது" என்று கூறினார். 1848–1849-ல் நிகழ்ந்த தேசிய இயக்கங்களின் தவறுகளை இவர் நினைவுறுத்துகிறார். ஆனால், பாராளுமன்றமும், பத்திரிகைகளும் இவரது கொள்கைகளைக் கடுமையாகத் தாக்கின. ஆனால், அவர் பாராளுமன்றத்தைப் புறக்கணித்துவிட்டு, அதனுடைய சம்மதத்தைப் பெறுமலேயே புதிய வரிவிதிப்புகளையும், இராணுவ அதிகரிப்பையும் செய்தார். பாராளுமன்றம் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிய பொழுது அதைக் காலவரையின்றிக் கலைத்துவிட்டார். பத்திரிகைகள் பலத்தத் தணிக்கைக்குள்ளாகின. பேச்சுச் சுதந்தரமும், எழுத்துச் சுதந்தரமும் மிகவும் கட்டுப்படுத்தப்பெற்றன. சுமார் நான்கு ஆண்டுகள் வரையிலும், அவர் எல்லாவிதமான எதிர்ப்பையும் தாக்குதல்களையும் சமாளித்துக்கொண்டார். அவர் சென்ற இடங்களில் மக்கள் அவர்மீது கரி உமிழ்ந்தனர். அவர் பதவியேற்று ஓராண்டிற்குள் அவருடைய பதவி பறிபோய்விடும் என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால், முற்றும் எதிர்பாராத விதமாக அவருடைய பதவிக் காலம் 29 ஆண்டுகள் நீடித்தன.

ஜெர்மனிக்கும், ஜெர்மானிய அரசனுக்கும் அவர் உண்மையுள்ள ஊழியனைப் பணியாற்றினர்.

இந்த எதிர்ப்புகளுக்கிடையே ஜெர்மன் மக்களின் தேசியத்தைப் பிரஷ்ய மயமாக்குவதில் அவர் தவறவில்லை. ஆஸ்டிரியா, அதனால் பொருமைக் கொண்டு, ஜெர்மன் நாடுகளைச் சீரமைப்பதில் அது அதிகமாகப் பங்கு கொள்ளவேண்டுமென்று விரும்பியது. ஆகவே ஆஸ்டிரியாவின் தலைமையில் ஜெர்மானியச் சிற்றரசர்கள் மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. முதலாம் வில்லியமுக்கு இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு வந்தது. ஆனால், முதலாம் வில்லியம் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்று விடாப்பிடியாகப் பிஸ்மார்க் தடுத்துவிட்டார். ஆஸ்டிரியாவின் பகைமையை வில்லியம் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், ஜெர்மனியின் சீரமைப்பு வேண்டுமென்றால், அது பிரஷ்யாவின் ஆதரவில்தான் நடைபெற வேண்டுமென்றும், அப்பொழுது ஆஸ்டிரியாவை ஒதுக்கித்தான் ஆகவேண்டுமென்றும் பிஸ்மார்க் அரசருக்கு அறிவுரை கூறினர். பிரஷ்யா இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாததால், எவ்வித முக்கியமான முடிவையும் அவர்கள் செய்ய முடியவில்லை.

ஆனால் பிஸ்மார்க் ரஷ்யாவுடன் சமரசமான ஒரு கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பினர். அதனால், பல எதிர்புக்களிடையே போலந்தில் நிகழ்ந்த ரஷ்யாவின் கொடுமைகளைப் பிஸ்மார்க் பொறுத்துக்கொள்ளவும், ரஷ்யாவிற்காகப் பரிந்து பேசவும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்ல; ரஷ்யாவிற்கு எதிராக எந்த வல்லரசுடனும் உடன்படிக்கை செய்து கொள்வதில்லையென்றும் முடிவு செய்தார். தவிர, போலந்தில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை எதிர்த்து எந்தக் சிளர்ச்சி நிகழ்ந்தாலும், அதை ஒடுக்க முன்வருவதாக ரஷ்யாவுடன் ஓர் இரானுவ உடன்படிக்கையையும் செய்துகொண்டார். அதைப்போல் 1863-ல் நிகழ்ந்த போலந்து புரட்சியைப் பிஸ்மார்க் ஒடுக்கிவிட்டார். போலந்தின் தேசிய உணர்ச்சிகளை அவர் எப்பொழுதும் மதித்ததாகத் தெரியவில்லை. இந்தக் கொள்கை பிரஷ்யாவிற்கு எதிர்காலத்தில் பல நன்மைகளை அளித்தது. அதைப்போன்று ரஷ்யா மீது தொடுக்கப்பெற்ற கிரிமியப் போரிலும் பிரஷ்யா நடுநிலைமை வகித்தது. அதனால் ரஷ்யாவின் பகைமை எப்பொழுதும் பிரஷ்யாவிற்கு ஏற்படாது என்ற துணிச்சலில் 1866-ல் ஆஸ்டிரியாவுடனும், 1870-ல் ஃபிரான்சுடனும் போர் செய்து வெற்றி அடைந்தார். இங்கிலாந்துடன் நாடுபிடிக்கும் ஏகாதிபத்தியப் போட்டியில் கலந்து கொள்ளாது, தம்முடைய ஜெர்மானிய ஐக்கியக் கொள்கையிலேயே

ஈடுபட்டிருந்ததால் இங்கிலாந்திற்கும் பிரஷ்யாமீது பகைமை ஏற்படவில்லை.

பிஸ்மார்க்கின் போர்கள்

செலஸ்விக் (Schleswig), ஹால்ஸ்டின் (Holstein) விவகாரங்களில் பிஸ்மார்க் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏறக்குறைய 800 ஆண்டுகளாக இப் பகுதிகள் டேனிஷ் நாட்டுடன் இணைக்கப்பெற்றிருந்தன. இப் பகுதிகளில் குடியிருந்த மக்கள் டேனிஷ் அரசனின் ஆட்சியை ஏற்றுவந்தபோதிலும், அவர்களுக்கென்று தனி அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டனர். அவர்களுடைய பழக்க வழக்கங்களும் வேறுக இருந்தன. இந்த நாடுகளிடையே அதிகமான தேசிய உணர்ச்சி வளர்ந்து வந்தது. செலஸ்விக், டேனிஷ் தேசிய உணர்ச்சி கொண்டதாகவும், ஹால்ஸ்டின் ஜெர்மன் தேசிய உணர்ச்சி கொண்டதாகவும் இருந்தன. டென்மார்க்கில் உள்ள ஒரு டேனிஷ் கட்சி இந்த இரண்டு நாடுகளையும் டென்மார்க்குடன் இணைக்க முயற்சி செய்தது. அதைப் போல ஜெர்மனியில் உள்ள ஒரு ஜெர்மன் கட்சி அந்த இரு நாடுகளையும் ஜெர்மனியுடன் இணைப்பதற்கு முயற்சி செய்தது. வெவ்வேறு இனத்தவரை ஒன்றுபடுத்தும் முயற்சி நியாயமானதாகப் படவில்லை. இந்தச் சமயத்தில் டேனிஷ் அரசன் ஏழாம் பிரடிரிக் இறந்துவிடவே, அவருக்குப் பின் யார் பட்டத்திற்கு வருவதென்ற குழப்பம் ஏற்பட்டது. ஏழாம் பிரடிரிக் உயிருடன் இருக்கும் பொழுதே அவருடைய நாடு முழுவதற்கும் ஓர் அரசியல் அமைப்பை அளித்திருந்தார். ஜெர்மானிய இனத்தவர் இதை எதிர்த்தனர். இவர்கள் சார்பாகப் பிரஷ்யா இந்த விவகாரத்தில் தலையிட்டது. ஆனல் பிரிட்டன், ரஷ்யா, ஸ்வீடன், ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் டேனிஷ் அரசனுக்காகப் பரிந்து பேசின. பிரஷ்யர்கள் பின்வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தச் சிக்கலைப் பரிசீலனை செய்ய இலண்டனில் ஒரு மாநாடு கூட்டப்பெற்றது. பழைய நிலையை அப்படியே நீடிப்பதென்று அந்த மாநாட்டில் முடிவு செய்தனர். ஏழாம் பிரடிரிக்குப் பிறகு கிரிஸ்டியன் என்பவர் டேனிஷ் நாட்டிற்கும் செலஸ்விக், ஹால்ஸ்டின் பகுதிகளுக்கும் சேர்ந்து அரசனுவது என்று முடிவு செய்யப்பெற்றது. அதனல் பிரடிரிக் 1863-ல் இறந்த பிறகு, கிரிஸ்டியன் டேனிஷ் நாட்டிற்கு அரசனனுர். அகஸ்டன்பர்க் கோமகனன பிரடிரிக் என்பவர் இந்தப் பதவியைப்பெற பெரும் முயற்சி செய்தார். இம் முயற்சி முடியாது போய்விடவே, அவர் டேனிஷ் ஆட்சிக்கு விரோதமாகச் செலஸ்விக், ஹால்ஸ்டின் பகுதிகளில் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார். இவருக்கு ஆதரவாகச் சிறு ஜெர்மன் நாடுகளிலிருந்து படைகள் அனுப்பப்பட்டன. அவர், அப் படைகளின் உதவிகொண்டு

அப் பகுதிகளைத் தாக்கினர். இந்தப் பகுதிகள் டேனிஷ் ஆட்சியிலிருந்து விடுதலைப் பெற்று பிரடிரிக் கோமகனை எட்டாம் பிரடிரிக் என்ற பெயரில் அரசனாக ஏற்றுக்கொண்டன. ஆனால் இந்த இரண்டு பகுதிகளும் பிரடிரிக் கோமகனது ஆட்சியில் தனியாகச் சுதந்தரம் பெற்ற நாடாகப் பாவிக்கப் பிரஷ்யா மறுத்துவிட்டது. மற்றுமொரு சிறிய ஜெர்மன் நாடு தோன்றுவதைப் பிஸ்மார்க் விரும்பவில்லை. பிரஷ்யாவின் எதிர்ப்புமட்டும் இருந்தால், மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் இந்தப் பிரச்சினையில் தலையிடும் என்று கருதி பிஸ்மார்க் ஆஸ்டிரியாவையும் இந்தச் சிக்கலில் இழுத்துவிட்டார். ஜெர்மன் பாராளுமன்றத்தின் அனுமதியில்லாமலேயே ஆஸ்டிரியாவும் பிரஷ்யாவும் ஒன்றுக்சேர்ந்து 1864-ல் ஹால்ஸ்டின்மீது படையெடுத்தன. ஹால்ஸ்டின், செலஸ்விக் பகுதிகளில் உள்ள டேனிஷ் துருப்புகளை விரட்டி அடித்து டென்மார்க்மீதும் படையெடுக்க ஆரம்பித்தன. இச் சமயத்தில் வல்லரசுகள் தலையிட்டு ஒரு மாநாட்டைக் கூட்டிச் சமரசத்தை ஏற்படுத்த முயன்றனர். இந்த மாநாட்டில் மூன்று மாதங்கள் வரையிலும் விவாதித்த பிறகும் எவ்வித முடிவுக்கும் வரவில்லை. அதனால் இப் பகுதிகளைப்பெற மீண்டும் பிரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் படைகளை அனுப்பின. இப் படைகள் டென்மார்க் நகரையும், கோபன்ஹாகன் நகரையும் ஆக்கிரமித்துக்கொண்டன. அதனால், வியன்னாவில்கூடி ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்து கொள்ள டென்மார்க் ஒப்புக்கொண்டது. இதன்படிச் செலஸ்விக், ஹால்ஸ்டின் பகுதிகளைப் பிரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளுக்கு டென்மார்க் தந்துவிட்டது. அவர்களுக்கிடையே இப் பகுதிகளைப் பிரித்துக் கொள்ளும் ஏற்பாட்டையும் ஒப்புக்கொண்டது.

பிறகு இவ்விரு நாடுகளின் பிரதிநிதிகளும் காஸ்டின் என்ற இடத்தில்கூடி ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி இந்த இரண்டு பகுதிகளிலும் கூட்டு இறைமை இருக்கவேண்டுமென்றும், ஹால்ஸ்டினில் ஆஸ்டிரியா தற்காலிகமாக ஆட்சி செய்வதென்றும், பிரஷ்யா செலஸ்விக்கை ஆட்சி செய்வதென்றும் முடிவு செய்தனர். ஹால்ஸ்டினில் பிரஷ்யாவும் அடிக்கடி தலையிட சில வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டது. தவிர ஹால்ஸ்டின் "பிரஷ்யா ஸோல்வரின்" அல்லது பிரஷ்யப் பொருளாதார அமைப்பில் பங்கு பெறுவதற்கும் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால், நாளடைவில் இப் பகுதிகளின் ஆட்சியைப்பற்றி பிரஷ்யாவுக்கும் ஆஸ்டிரியாவிற்கும் மனக்கசப்பும் சந்தேகமும் ஏற்பட்டன. காஸ்டின் ஏற்பாடு, அந்த நாடுகளுக்கிடையே உள்ள சில கருத்து வேறுபாடுகளை மட்டுமே சரி செய்தது. ஆனால் உள்ளூறப் புகைந்துகொண்டிருக்கும் பகைமையைச் சரிசெய்ய முடியவில்லை. பகைமைவளர்ந்து வந்தது. அதனால் இரு நாடுகளும் போருக்கு ஆயத்தமாயின.

ஆஸ்டிரிய–பிரஷ்யப் போர் (1866)

பிரஷ்ய அரசன் முதலாம் வில்லியம் ஆஸ்டிரியாவுடன் போர் செய்ய விரும்பவில்லை. அதன் காரணமாகவே சில மாதங்கள் இரு நாடுகளுக்கிடையே சமாதானம் நிலவியிருந்தது. ஜெர்மனியின் ஐக்கியத்திற்கும், புதிதாக உருவாக்கப்படும் ஜெர்மனியைப் பிரஷ்யாவின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருவதலிலும், ஆஸ்டிரியாவின் தலையீட்டை எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்க முடியாதென்றும், கூடுமானல் ஆஸ்டிரியாவின்மீது போரிட்டு, அதனை முற்றிலும் ஒதுக்கிவிடவும் பிஸ்மார்க் முடிவு செய்திருந்தார். ஆஸ்டிரியாவுடன் போர் செய்ய அப்பொழுது அவருக்குச் சில காரணங்களும் தோன்றின. ரஷ்யாவின் ஆதரவு பிரஷ்யாவிற்கு இருந்தது. இத்தாலியில் ஆஸ்டிரிய ஆதிக்கம் வெறுக்கத்தக்க நிலையில் இருந்தது. அதனல் இத்தாலியர்கள் பிஸ்மார்க்குடன் சேர்ந்து ஆஸ்டிரியாவைத் தாக்க ஒப்புக்கொண்டனர். 1866-ல் ஓர் இரகசிய உடன்பாட்டைப் பிஸ்மார்க் இத்தாலியிடம் செய்து கொண்டார். இத்தாலியின் உதவிக்காக வெனிஷியாவை ஆஸ்டிரியாவிடமிருந்து பறித்து இத்தாலியர்களுக்குக் கொடுத்து விடுவதென்று முடிவுசெய்தனர். இத்தாலியின் படைபலத்தைப் பயன்படுத்துவதற்காகப் பிஸ்மார்க் இந்த உடன்படிக்கையை அவர் செய்துகொள்ளவில்லை. ஆனல், ஆஸ்டிரியா இரு போர் முனைகளிலும் சண்டை செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தினல் பிஸ்மார்க் எளிதாக ஆஸ்டிரியப் படைகளை முறியடித்துவிடலாம் என்று நம்பினர். ரஷ்யா, இத்தாலி ஆகிய வல்லரசுகளைத் தவிர, ஃபிரான்சின் ஆதரவையும் பெற அவர் விரும்பினர். 1865 அக்டோபர் மாதத்தில் மூன்றும் நெப்போலியனைச் சந்தித்து வருகின்ற ஆஸ்டிரிய பிரஷ்யப் போரில் நடுநிலைமை வகிக்கச் செய்தார். ஃபிரான்ஸ் நடுநிலைமைகொள்கையைப் பின்பற்றுவதற்கும் ஏதாவது இலாபம் கிடைத்தால் பரவாயில்லை என்று கூறியதால் பிஸ்மார்க் எல்லைகளின் சீரமைப்பைப்பற்றி ஆலோசிக்கலாம் என்று மழுப்பினர். இருப்பினும் நெப்போலியன் பிரஷ்யாவுடன் அப்பொழுது சமாதானமாகவே இருக்க விரும்பினர். ஆஸ்டிரியாவுடன் போர்த் தொடுப்பதற்குப் பல காரணங்கள் இருந்தன. செலஸ்விக், ஹால்ஸ்டின் பகுதிகளில் ஆஸ்டிரியா பிரஷ்யாவிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வருவதாக ஒரு குற்றச்சாட்டைப் பிஸ்மார்க் கிளப்பினர். மேலும் ஜெர்மனியின் சிறு சிறு நாடுகளெல்லாம் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதைப் பற்றியும் அந்த நாடுகளுக்கு ஆஸ்டிரியா உதவி செய்கிறதென்றும் பிஸ்மார்க் கூறினர்.

இந்தக் குற்றச்சாட்டுகளைக் கேட்டு ஆஸ்டிரியா ஆத்திரமடைந்தது. ஆஸ்டிரியாவும் இத்தாலியுடன் நடுநிலைமை ஒப்பந்தம்

செய்துகொண்டு, அதற்கு ஈடாக இத்தாலிக்கு வெனிஷியாவைத் தந்து விடுவதென்றும் ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், இத்தாலிய அமைச்சர் லாமர்மோவா இந்த ஒப்பந்தத்திற்குச் செவிசாய்க்கவில்லை. அவர் பிரஷ்யாவிடம் நட்புரிமையுடன் இருப்பதென்று முடிவு செய்தார். நெப்போலியனது நடுநிலைமைக் கொள்கையும் கலைக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பெற்றன. அதனால் நெப்போலியன் அவருக்கே உரித்தான பழக்கப்படி, ஐரோப்பிய மாநாட்டைக் கூட்டி இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறினார். ரஷ்யாவும், பிரிட்டனும் இந்த ஆலோசனையை ஏற்றனர். அதனால் பிஸ்மார்க்கும் வேறு வழியின்றி ஓர் ஐரோப்பிய மாநாட்டிற்கு ஒப்புக்கொண்டார்.

ஆஸ்டிரியா முதலில் இந்த மாநாட்டிற்கு ஒப்புக்கொண்டாலும், பிஸ்மார்க்குக்கு உள்ள செல்வாக்கை நினைக்கும்பொழுது முடிவுகள் பிரஷ்யாவிற்குச் சாதகமாகிவிடுமோ என்று பயந்தது. அதனால் மாநாட்டு விவாதங்களுக்கு ஆஸ்டிரியா நிபந்தனைகளை விதித்தது. அந்த நிபந்தனைகளை ஏற்றால் எவ்விதமான விவாதமும் முடிவும் ஏற்பட வழியில்லை. அதனால் மாநாடு கைவிடப்பட்டது. இந்தச் சூழ்நிலை பிஸ்மார்க்கிற்கு வெகு சாதகமாகிவிட்டது. அவர் ஆஸ்டிரியாவின்மீது போர்ப் பிரகடனம் செய்தார். இந்தப் போர் ஜூன் 16ம் தேதியன்று தொடங்கியது. பிரஷ்யப் படைகள் மிக வேகமாக முன்னேறினர். அவர்களுடைய முன்னேற்றத்தைப் பார்த்தால் சில நாட்களுக்குள் போர் முடிந்துவிடும் என்று நினைத்தனர். இருப்பினும் போர் ஏழு வாரங்கள் நிகழ்ந்தது. ஆனால், சரியானபடி ஒரு பத்து நாட்கள்தான் சண்டை நடந்திருக்கும். இந்தச் சண்டையில்தான் முதன்முறையாக நீடில் கன் (Needle-Gun) என்ற துப்பாக்கியைப் பிரஷ்யர்கள் உபயோகித்தனர். இத்தாலியர்களை ஜூன் 24ம் தேதியன்று ஆஸ்டிரியர்களுடன் கஸ்டோஸா என்ற போர்க்களத்தில் தோற்றனர். அதற்குப் பிறகு இத்தாலியப் படைகள் பின்வாங்கின. ஆஸ்டிரியத் துருப்புகள் பிரஷ்யப் போர்முனைக்கு விரைந்தன. ஆனால், அதற்குள் பிரஷ்யர்கள் வெகுதூரம் முன்னேறிவிட்டனர். சடோவா என்ற இடத்தில் ஆஸ்டிரியர்களைப் பிரஷ்யத் துருப்புகள் முறியடித்தன. வெற்றியுடன் அவர்கள் பிரேக் நகரத்தில் பிரவேசித்தனர். எவ்வளவு விரைவில் போரைத் தொடங்கினரோ, அவ்வளவு விரைவில் போரை முடித்து சமாதானம் செய்து கொள்ளவும் பிஸ்மார்க் தயாராக இருந்தார். ஏனெனில், ஆஸ்டிரியர்களது தோல்வி அவர்களைச் சமாதானத்திற்கு இழுத்துவிட்டது. அதனால், ஆகஸ்டு 23ஆம் தேதியன்றே பிஸ்மார்க் ஆஸ்டிரியர்களுடன் பிரேக் நகரில் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அவருக்கு வேண்டிய ஆஸ்டிரியாவின் தோல்வி கைகூடி விட்ட

தால், ஜெர்மனியின் ஐக்கியத்திற்கு இதுவரை இருந்த தடையும் நீங்கிவிட்டது. சமாதானம் செய்துகொள்வது இரு தரப்பினருக்கும் நல்லதென்று தெரிந்தும்கூட ஆஸ்டிரியா சிறிது காலம் தாமதம் செய்யவே மூன்றும் நெப்போலியன் மத்தியஸ்தம் செய்ய முன் வந்தார். அவருடைய தலையீட்டைப் பிஸ்மார்க் சிறிதும் விரும்ப வில்லை. அதனால் உடனே ஆஸ்டிரியாவுடன் சமாதானம் செய்து கொள்ள அவசரப்பட்டார். ஆஸ்டிரியாவை அவர் அதிக நஷ்டத் திற்குள்ளாக்க விரும்பவில்லை. பிறகு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள சாதகமான சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தார். ஆஸ்டிரியாவிடமிருந்து, அவர் எந்தப் பகுதியையும் பறித்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், வெனிஷியாவை மட்டும் இத்தாலிக்கு ஆஸ்டிரியா தந்துவிட வேண்டுமென்று வற்புறுத் தினார். இந்தப் போர் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் சுமார் 30 இலட்சம் பவுன்கள் என மதிப்பிட்டு அந்தத் தொகையை ஆஸ்டிரியா தரவேண்டுமென்று கோரினார். செலஸ்விக், ஹால்ஸ்டின் பகுதிகள் பிரஷ்யாவின் ஆட்சிக்கு மாறின. அத்துடன் ஹனேவர் இராச்சியமும் பிரஷ்யாவின் ஆதிக்கத்திற்குள் கொண்டு வரப்பெற்றது. மூன்றும் நெப்போலியனைத் திருப்திச் செய்வதற்காகச் சாக்ஸனி மட்டும் தனி நாடாக இருக்கப் பிரஷ்யா சம்மதித்தது. ஆனால், ஜெர்மன் கூட்டரசாங்கத்தில் சாக்ஸனி உறுப்பினராகச் சேரவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. இந்த ஏற்பாடு வில்லியமுக்குத் திருப்தியளிக்கவில்லை. தவிர, நெப்போலிய னுடைய தலையீட்டின் காரணமாகப் பவேரியா, பேடன், வர்டம்பர்க், தனிச் சுதந்தர நாடுகளாக இயங்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. ஆனால், அவை ஜெர்மன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து கொள்வதில் எவ்விதமான கட்டாயமும் இருக்கக்கூடாது என்று முடிவு செய்தனர். அவர்களுடைய விருப்பம் போன்று உறவுகளை நிர்ணயம் செய்துகொள்ளும் உரிமைகள் அந்த நாடுகளுக்குத் தரப்பட்டன. மெய்ன் நதிக்கு வடக்கேயுள்ள ஜெர்மன் நாடு களுக்கு "வட ஜெர்மானியக் கூட்டமைப்பு" (North German Confederation) ஏற்படுத்தி அதற்கு ஓர் அரசியல் அமைப்பு தயாரிப்பதென்று முடிவு செய்தனர். அதனால் பிரேக் (Prague) ஒப்பந்தம், பிஸ்மார்க்கின் கொள்கைகளைச் சாதித்துக்கொள்ள நல்ல வாய்ப்பை அளித்தது. பிஸ்மார்க்கின் ஜெர்மன் ஐக்கியக் கனவு நனவாகக்கூடிய சமயம் நெருங்கிவிட்டது. அதற்குத் தடையாக இருந்த ஆஸ்டிரியாவின் தலையீடும் இப்பொழுது அகற்றப்பெற்றது.

இந்தப் பிரேக் உடன்படிக்கையின் விளைவால், ஆஸ்டிரியாவின் அரசியலிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆஸ்டிரியாவிற்கு உதவி செய்யக்கூடிய வல்லரசுகள் ஒன்றும் இல்லை. அப்பொழுது

ஆஸ்டிரியாவின் இராச்சிய உறவுகள் நல்லபடியாக நிர்ணயம் செய்யப்படவில்லை. அவர்களுடைய வெல்திறனில் போதிய அனுபவமும் திறமையும் காணப்படவில்லை. அதனாலேயே ஆஸ்டிரியாவிற்குப் பல தீமைகள் ஏற்பட்டுவிட்டன. தவிர, ஆஸ்டிரியாவின் உள்நாட்டு விவகாரங்களிலும் பல குழப்பங்கள் ஏற்பட்டு ஆஸ்டிரியாவின் ஒற்றுமையைக் குலைத்து வந்தன. ஆஸ்டிரியாவில் போலந்தியர்கள், மகயார்கள், செக்குகள், ஜெர்மானியர்கள் ஆகிய பல இனத்தவர் வசித்துவந்தனர். ஆஸ்டிரிய அரசியல் அமைப்பில் இவர்களுக்கெல்லாம் தக்க சலுகைகளும், உரிமைகளும் தரப்படவில்லை. பெரும்பான்மையோர் ஜெர்மானியர்களாக இருந்ததால் ஜெர்மானியத் தேசிய உணர்ச்சி தான் மிகவும் அதிகமாகக் காணப்பெற்றது. அதனால், மற்ற இனத்தவர் ஜெர்மனியின் ஆதிக்கத்திற்குள்ளானார்கள். 1866-ல் ஆஸ்டிரியா தோற்கடிக்கப்பெற்ற பிறகு பல முன்னேற்றக் கட்சிகள் அங்குத் தோன்றி நாட்டிற்குத் தக்க அரசியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். ஹங்கேரி பகுதியில் வசித்துவந்த மகயார்கள் ஜெர்மானியர்களுக்குச் சமமாக எல்லா உரிமைகளும் பெற்று வாழவேண்டுமென்று போராட்டம் செய்தனர். இவர்கள் ஹங்கேரிக்கும் முழு சுயாட்சி தரப்பட வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்தனர். இவர்கள் இரட்டை அரசாங்கத்தை நிறுவும் கட்சியினர் (Dualists) என்று அழைக்கப் பெற்றனர். இந்த இரண்டு கட்சிகளையும் தவிர, மத்திய அரசாங் கத்தைப் பலப்படுத்தி ஜெர்மானியர்களின் ஆதிக்கத்தைப் பலப் படுத்த வேண்டுமென்ற "சென்டரலிஸ்டுகள்" (Centralists) என்ற கட்சியினரும் அங்கே இருந்தனர். இந்தக் கட்சிக் கொள்கைகளைத் தான் பெரும்பாலும் அப்பொழுதிருந்த அரசாங்கம் ஆதரித்தது. "ஜெர்மன் மயமாக்குதல்" என்ற கொள்கை 1859-ல் கைவிடப் பட்டது. ஏனெனில், ஹங்கேரியில் இந்தக் கொள்கைகளுக்கு அதிக எதிர்ப்பு இருந்தது. ஃபிரான்சிஸ் டீக் (Francis Deak) என்பவரும், தவிர தீவிர மகயார் தேசியத்தைப் பரப்பிவந்த லூயி கோசத் (Louis Kossuth) என்பவரும் மகயார்களுக்கு எல்லா உரிமைகளும் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். மற்ற இனத்த வரைப் புறக்கணித்தாலும் மகயார்களைப் புறக்கணிக்க முடிய வில்லை. அதனால் சடோவா தோல்விக்குப் பிறகு ஆஸ்டிரியாவின் அரசியல் அமைப்பையும் மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால் பல கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி யில், "பெடரலிஸ்டுகள்" தோல்வியுற்றனர். "டூயலிஸ்டுகள்" வெற்றி பெற்றனர். கவுன்ட் பூஸ்ட் என்ற ஆஸ்டிரிய அமைச்சரும், ஃபிரான்சிஸ் டீக் என்ற ஹங்கேரியத் தலைவரும் ஒரு சமரச உடன் பாட்டைச் (Ausgleich) செய்துகொண்டனர். அதன்படி ஆஸ்டிரியர்

களுக்கும் ஹங்கேரியர்களுக்கும், ''சமத்துவ அந்தஸ்து'' எல்லா உரிமைகளிலும் தரப்பெற்றது. ஆஸ்டிரியப் பேரரசு ஆஸ்டிரியா, ஹங்கேரி என்ற இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இந்த இரண்டு பகுதிகளுக்கும் தனித்தனி அரசன், தனித்தனி பாராளு மன்றம், தனித்தனி அரசாங்கம் இருக்கவேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கும் பேரரசன் ஆஸ்டிரியப் பேரரசனாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்தனர். ஆஸ்டிரியாவின் பேரரசனே ஹங்கேரியின் அரச னாகவும் தனி முடியாட்சி விழாவில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

இந்த இரண்டு நாடுகளுக்கும் இணைப்பாகப் பொது அமைச்சர்கள், வெளிநாட்டு விவகாரங்களைக் கவனித்துக் கொள் வதற்கும் நியமிக்கப்படுவர். அவர்களே நிதி, இராணுவம் ஆகியத் துறைகளையும் கவனித்துக்கொள்வர். இரண்டு கூட்டு அமைச்ச ரவைகளும், தங்களது வரவு செலவு திட்டத்தையும், தகராறுகளைத் தீர்ப்பதற்கும் இரண்டு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்றத்திலிருந்து 60 பிரதிநிதிகள் கொண்ட ஒரு சிறு குழுவின் பரிசீலனைக்கு விடப்படும். வேறுபாடுகள் தோன்றும் பொழுது எல்லாப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி விவாதமில்லாது அமைதியாகத் தீர்மானங்கள்மீது வாக்களிப்பர். பெரும்பான்மை வாக்குகள் பெற்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்று கொள்ள வேண்டும். இந்த ஏற்பாடு முதல் உலகப் போர் முடியும்வரை நல்ல விதமாகச் செயலாற்றப்பட்டு வந்தது. ஜெர்மன் விவகாரங் களிலிருந்து ஆஸ்டிரியா புறக்கணிக்கப்பட்ட பிறகு, ஆஸ்டிரியா அதனுடைய ஆதிக்கத்தைப் பால்கன் நாடுகள்மீது செலுத்தியது. போஸ்னியாவும், ஹெர்ஸிகோவினாவும் ஆஸ்டிரியர்களின் ஆதிக் கத்தின்கீழ் வந்துவிட்ட பிறகு, புதிய சிக்கல்கள் தோன்றின. இவை களைப்பற்றி ஏற்கனவே சரியான முடிவு செய்யப்படவில்லை. ஸ்லாவ் இனத்தினர் ஆஸ்டிரியர்களின் ஆதிக்கத்தை வெறுத்த னர். 1918-ல் முதல் உலகப் போர் முடிந்த பிறகு ஆஸ்டிரியா–ஹங்கேரி பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

ஃபிரெஞ்சு–ஜெர்மானியப் போர் (1870–71)

1867 ஜூலை முதல் தேதியன்று வடக்கு ஜெர்மானியக் கூட்டமைப்பின் அரசியல் அமைப்பு செயலாற்றப்பெற்றது. இந்தக் கூட்டமைப்பு நாடுகளுக்குச் சம அந்தஸ்து அளிக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் பிரஷ்யாவின் ஆதிக்கத்திற்குள்தான் அடங்கி செயலாற்றி வந்தது. இந்தக் கூட்டமைப்பின் எல்லைகள், தெற்கே மெய்ன் நதிவரையிலும் பரவியிருந்தன. அதற்குத் தெற்கேயுள்ள

நாடுகளான பவேரியா, வர்டம்பர்க், பேடன், வடக்கு ஜெர்மானியக் கூட்டமைப்பில் இணையவில்லை. இருப்பினும் அந்த நாடுகளுடன் பிஸ்மார்க் இராணுவ, பொருளாதார உறவுகளைப் பலப்படுத்தி ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். போர்க்காலத்தில் இந்த நாடுகள் பிரஷ்யாவிற்கு உதவி செய்வதாக ஒப்புக்கொண்டன. அதனால் ஃபிரான்ஸ், ஜெர்மன் கூட்டமைப்பை மிகவும் பொறுமையுடன் கவனித்து வந்தது. ஃபிரான்சின் முன்னேற்றத்திற்கு ஜெர்மனியின் ஒருமைப்பாடு தடையாக இருப்பதாக மூன்றும் நெப்போலியன் கருதினர். அதனால் ஜெர்மன் கூட்டமைப்பில், அவர் ஜெர்மன் நாடுகள் இணைவதற்கு எவ்வளவு தடைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்துவந்தார். ஜெர்மனியின் ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்திருந்த பிஸ்மார்க், ஃபிரான்சின் தலையீட்டை அறவே வெறுத்தார். இதற்காக அவர் போரிடவும் தயாராக இருந்தார். இருப்பினும், பகைமை அதிகமாகும்வரை பிஸ்மார்க் பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்தார். ஜெர்மன் நாடு உருவாக்கப்பட வேண்டுமென்றால், ஃபிரான்சுடன் போர் நடத்தியே தீரவேண்டுமென்றும், அது தவிர்க்க முடியாதது என்றும் அவர் முடிவு செய்து வைத்திருந்தார். அதற்கேற்பச் சூழ்நிலையும் மாறிக்கொண்டே வந்தது. மூன்றும் நெப்போலியன் திடீரென்று பேரரசனாக வந்தவர், ஃபிரெஞ்சு மக்களுக்குப் புகழையும், வெற்றியையும் அளித்துக்கொண்டே இருக்கவேண்டுமென்ற மனப்பான்மை கொண்டவர். ஐரோப்பியச் சிக்கல்களில் தலையிட்டு, ஃபிரான்சிற்குச் சாதகமாக ஏதாவது ஒன்றைச் செய்துகொண்டே இருந்தார். இத்தாலிய ஐக்கிய இயக்கத்தில் ஈடுபட்டு இத்தாலியர்களுக்குச் சுதந்தரம் வாங்கித் தருவதாகக் கூறி, பிறகு அவர்களுக்காகப் போரிடவும் செய்தார். ஆனால், அவரே இந்த இயக்கத்திலிருந்து பின்வாங்கிக்கொண்டார். பிரஷ்யாவின் வளர்ச்சியைத் தடை செய்ய ஆஸ்டிரியாவுடன் உறவு கொண்டிருந்தார். ஆனால், ஆஸ்டிரியர்கள் சடோவாவில் தோல்வியுற்றது, உண்மையில் ஃபிரான்ஸ் தோல்வியுற்றதாகவே மூன்றும் நெப்போலியன் நினைத்தார். இதைப்போன்றே, போலந்து, மெக்சிகோ ஆகிய நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டுக் கெட்டபெயரையும், தோல்வியையும் பெற்றுக்கொண்டார். இவற்றையெல்லாம் ஈடுசெய்ய அவர் பிரஷ்யாவைத் தாக்குவதென்று முடிவு செய்திருந்தார். பிரேக் ஒப்பந்தத்திற்குப் பிறகு நெப்போலியன் அவரது கோரிக்கைகளை மிகவும் வற்புறுத்திக் கேட்கவே, பிஸ்மார்க் நெப்போலியனின் உண்மையான நிலையை வெளிப்படுத்த விரும்பினர்.

நெப்போலியன் கேட்டது, பவேரியப் பேலடினேட்டின் ஒரு பகுதியும், மெய்ன்ஸ் பகுதியுமாகும். இந்நிலப் பகுதிகளைத்

தரமுடியாது என்று பிஸ்மார்க் கூறியதோடு நில்லாமல், பவேரியா விற்கு நெப்போலியன் உதவி செய்வதாகக் கூறுவது வெறும் பாசாங்கு என்று வெளிப்படையாகவே கூறினார். இதனால் பவேரியா எச்சரிக்கையாக, ஃபிரான்சின் பிடியிலிருந்து மெதுவாகத் தளர்ந்துகொண்டு பிரஷ்யாவுடன் நெருங்கியத் தொடர்பு வைத்துக்கொள்ள முற்பட்டது. இதனால் நெப்போலியனுக்குப் பெரிய அவமானம் ஏற்பட்டது. இருப்பினும் மூன்றும் நெப்போலியன் விடாது அவருடைய கோரிக்கைகளை வற்புறுத்திக்கொண்டே இருந்தார். பிஸ்மார்க், நெப்போலியனை இக்கட்டான நிலையில் இழுத்துவிடவேண்டும் என்று எண்ணி, லக்சம்பர்க்கை நெப்போலியன் விலை கொடுத்து வாங்குவதற்குத் தாம் தடையாக இருக்கப்போவதில்லை என்று கூறினார். இந்தப் பகுதியை விலைக்கு வாங்க முடியவில்லையெனினும் நெப்போலியன் போர் தொடுத்தாவது அப் பகுதியைப் பிடித்துக்கொள்ள பிரஷ்யா உதவி செய்ய வேண்டுமென்று இரகசியமாக ஃபிரெஞ்சுத் தூதுவர் பெனிடிட்டி எழுதிய கடிதத்தைப் பிஸ்மார்க் ''டைம்ஸ்'' பத்திரிகையில் 1870 ஜூலை 25ஆம் தேதியன்று பிரசுரம் செய்தார். பெல்ஜியத்தின் நடுநிலைமையை எப்பொழுதும் ஆதரித்து வந்த இங்கிலாந்திற்கு இதனால் கோபமூண்டது. ஃபிரெஞ்சு–ஜெர்மனியின் போரில், இங்கிலாந்து ஃபிரான்சிற்கு ஆதரவு தராத அளவில் பிஸ்மார்க் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டார்.

லக்சம்பர்க் என்ற பகுதி 1815-ல் நெதர்லாந்து அரசனுக்கு அளிக்கப்பெற்றது. அதற்குப் பதிலாக நெதர்லாந்திலுள்ள சில ஜெர்மன் பகுதிகள் பிரஷ்யாவிற்குத் தரப்பட்டன. 1839 உடன் படிக்கைக்குப் பிறகு லக்சம்பர்க்கின் பெரும்பகுதி பெல்ஜியத்துடன் இணைக்கப்பெற்றது. ஒரு சிறு பகுதி மட்டும் நெதர்லாந்து அரசனிடம் இருந்து வந்தது. அந்தச் சிறு பகுதியும்கூட ஜெர்மன் கூட்டமைப்பில் இணைந்திருந்தது. அதனுடைய தலைநகரைப் பிரஷ்யத் துருப்புகள்தான் பாதுகாத்து வந்தன. இது ஃபிரான்சிற்கு அண்மையில் இருந்ததால் இதன்மீது நெப்போலியனுக்கு ஒருகண் இருந்து வந்தது. இதற்கேற்ப நெதர்லாந்து மன்னனும் லக்சம்பர்க்கினால் எவ்வித நன்மையும் அடையாத காரணத்தால், இதைப் ஃபிரான்சிற்கு விற்றுவிடவும் தயாராக இருந்தார். ஒருவிதத்தில் நெப்போலியனின் வாயை மூட, லக்சம்பர்க்கை ஃபிரான்ஸ் விலைகொடுத்து வாங்கிக்கொள்ளட்டும் என்றுகூடப் பிஸ்மார்க் சம்மதித்தார். ஆனால், விலையை நிர்ணயம் செய்யும்பொழுது, அங்கிருந்த மக்கள் இந்த ஆலோசனையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அதனால் பிரஷ்யா இந்த வியாபாரத்தை நிறுத்திவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஜெர்மன் மக்களின் உணர்ச்சியும், தேசியமும் ஃபிரான்சிற்கு விரோதமாக வளர்ந்துவந்தன. இந்தச் சூழ்நிலையைப் பிஸ்மார்க் பயன்படுத்தி நெப்போலியன்மீது போர்தொடுத்திருக்கலாம். ஆனால் வட ஜெர்மானியக் கூட்டமைப்பு இன்னும் வலிமை பெருத நிலையில் இருந்ததால் மற்றொரு வாய்ப்பிற்காகப் பிஸ்மார்க் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆத்திரமடைந்த நெப்போலியன் ஓர் ஐரோப்பிய மகாநாட்டைக் கூட்டி, லக்சம்பர்க்கின், நடுநிலைமையைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். லக்சம்பர்க்கிலிருந்த பிரஷ்யத் துருப்புகள் உடனடியாகப் பின்வாங்க வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால், ஐரோப்பிய மாநாடு தவிர்க்கப்பெற்றது. 1867-ல் பாரிஸில் நடைபெற்ற மாபெரும் கண்காட்சிக்கு, வில்லியமும், பிஸ்மார்க்கும் விஜயம் செய்தனர். இரு நாடுகளுக் கிடையே இருந்த மனக்கசப்பு சிறிது குறைந்திருந்தது. நெப்போலி யனும் உள்நாட்டிலேயே பல சீர்திருத்தங்கள் செய்வதில் தீவிரமாக முனைந்திருந்தார். அதைப்போன்று, பிஸ்மார்க்கும், ஜெர்மானியக் கூட்டமைப்பை வலிமைபடுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

இந்த அமைதியான சூழ்நிலையைக் கெடுப்பதற்கு ஸ்பானிய வாரிசுரிமை பற்றிய சிக்கல் ஒன்று ஐரோப்பாவில் முளைத்தது. இந்த விவகாரத்தில் ஃபிரான்சிற்கும், பிரஷ்யாவிற்கும் நேரிடை யான மோதல் ஏற்பட்டது. 1868 வரை ஸ்பெயின் நாட்டை ஆண்டு வந்த இஸபெல்லா அரசியை இராணுவப் புரட்சி செய்து அகற்றி விட்டனர். அவளது ஆட்சியில் ஸ்பானிய மக்கள் எந்த நன்மையும் அடையவில்லை. இஸபெல்லாவிற்குப் பிறகு யார் பட்டத்திற்கு வருவது என்ற சிக்கல் கிளம்பியது. குடியரசு அரசாங்கத்தை நிறுவ மக்கள் பெருமுயற்சி செய்தனர். இருப்பினும் வரையறுக்கப் பெற்ற முடியாட்சி ஏற்படுத்துவது என்று முடிவு செய்தனர். ஸ்பானிய அரச பதவியை யாருக்குத் தருவது என்ற பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின. இந்தப் பதவியை ஏற்க யாரும் முன்வரவில்லை. பிறகு பிஸ்மார்க் ஹோகர்ன் சாலர்ன்–ஸிக்மேரிங்கன் அரச குடும்பத்தைச் சேர்ந்த லியோபால்ட் இளவர சனுக்கு இப் பதவியைத் தரும்படி சிபாரிசு செய்தார். ஆனால், லியோபால்ட் இந்தப் பதவியை ஏற்க முதலில் மறுத்துவிட்டார். பிறகு பிஸ்மார்க்கின் தூண்டுதலால் இப் பதவியை ஏற்க முன் வந்தார். ஆனால், மூன்றும் நெப்போலியனுக்கு இந்த ஆலோசனை சிறிதும் பிடிக்கவில்லை. ஸ்பெயினில், பிரஷ்யாவின் செல்வாக்கு மிகுந்துவிடும் என்று உணர்ந்த நெப்போலியன், லியோபால்ட் இந்தப் பதவியை ஏற்கக்கூடாது என்று வற்புறுத்தினர். இச் சிக்கலில் மீண்டும் ஃபிரான்சிற்கும், பிரஷ்யாவிற்கும் பகைமை

வளர்ந்தது. நெப்போலியனுக்கு உண்மையில் பிரஷ்யாமீது படை யெடுக்க விருப்பமில்லையெனினும், நெப்போலியனது மனைவியும், மற்றும் பல அதிகாரிகளும் பிரஷ்யாவின்மீது போர் தொடுத்தே யாக வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். இந்தக் கெடுபிடி நிலையில் ஃபிரெஞ்சுத் தூதுவர் பெனிடிட்டி வில்லியம் அரசனை எம்ஸ் நகரில் சந்தித்து, லியோபால்டின் பதவியைப்பற்றி அக்கறை காட்டாது விட்டுவிட வேண்டுமென்று வற்புறுத்தினர். இல்லையெனில் விளைவுகள் விபரீதமாகிவிடும் என்று வில்லியமை எச்சரித்தார். இதற்குப் பிறகு ஸ்பானிய அரச பதவிக்கு லியோபால்டைப் போட்டியிடவேண்டாமென்றும், வில்லியம் லியோபால்டிற்கு ஒரு தந்தி அடித்தார். லியோபால்ட் உடனே போட்டியிலிருந்து விலகிக்கொண்டார். இச் செய்தி உடனே பாரிஸ் நகரத்திற்கும் மேட்ரிட் நகரத்திற்கும் அனுப்பப்பட்டது. இது ஃபிரான்சிற்கு ஒரு பெரிய வெற்றியாகும் என்று மூன்றும் நெப்போலியன் கருதினர். இரு நாடுகளுக்கிடையே மீண்டும் சமாதானம் ஏற்படும்நிலை தோன்றியது. ஆனால், பிரஷ்ய அரசன் வில்லியமிற்கு லியோபால்ட் பின்வாங்கிவிட்டார் என்ற செய்தி தரப் படவில்லை. இந்தச் சமயத்தில் பெனிடிட்டி மீண்டும் வில்லியமைச் சந்தித்து லியோபால்ட் எப்பொழுதும் ஸ்பானியப் பட்டத்திற்குப் போட்டியிடக்கூடாது என்ற உறுதிமொழி கேட்டார். லியோபால்ட் பின்வாங்கிவிட்டார் என்ற செய்தி வில்லியமிற்கு ஆச்சரியத்தை அளித்தது. இந்த விவகாரம் இத்துடன் முடிந்தது என்ற அளவில், வில்லியம் பிஸ்மார்க்கிற்கு ஒரு தந்தி அடித்தார். இந்தத் தந்தி பிஸ்மார்க் கையில் கிடைத்தது. அப்பொழுது அவர் ரூன், மால்ட்க் ஆகியோருடன் விருந்துண்டுகொண்டிருந்தார். இத் தந்தி யைப் படித்தவுடன் எல்லோரும் விருந்து சாப்பிடுவதை நிறுத்தி விட்டனர். பிரஷ்யாவிற்கு ஏற்பட்ட அவமானத்தைக் கண்டு மனம் நொந்தனர். இச் சமயத்தில்தான் பிஸ்மார்க் எப்படியும் ஃபிரான்சின்மீது போர் தொடுப்பதென்று முடிவு செய்தார். அதற்குச் சாதகமாக வில்லியம் அடித்த தந்தியின் சில வார்த்தை களை அகற்றிவிட்டால் ஃபிரான்சின் சவாலுக்குப் பிரஷ்யா அளிக்கப் போகும் பதில்–போர்! என்று பொருள்பட விளங்கியது. மாற்றி அமைக்கப்பெற்ற இத் தந்தியைப் பிஸ்மார்க் பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார். ஜெர்மானிய மக்கள் குமுறினர். அதைப் போன்று, ஃபிரான்சிலே அன்று "பாஸ்டைல் வீழ்ச்சி" விழாவைக் குதூகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தவர்கள் இச் செய் தியைக் கேட்டு போர் முழக்கம் செய்தனர். ஃபிரெஞ்சுப் பேரரசர் மூன்றும் நெப்போலியன் சமாதானத்தையே விரும்பிய போதிலும், அவருடைய அமைச்சர்கள் பிரஷ்யாவின்மீது போர் தொடுப்பதை ஆதரித்தனர். அமைச்சரவையில் பிரஷ்யாவின்

மீது போர் தொடுப்பதென்று முடிவாகத் தீர்மானித்தனர். "திறந்த உள்ளத்துடனும், தெளிந்த மனச்சாட்சியுடனும்" போருக்குப் புறப்படத் தயாராகுங்கள் என்று ஃபிரெஞ்சுப் பிரதமர் ஆலிவர் கூறவே மக்களுடைய ஆரவாரமும் பொங்கியது.

இதைத்தான் பிஸ்மார்க் இவ்வளவு காலமாக எதிர்பார்த்திருந்தார். குறிப்பாக ரஷ்யா, ஆஸ்டிரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இந்த விவகாரத்தில் நடுநிலைமை வகித்தன. இது பிஸ்மார்க்கிற்கு மிகவும் ஆதரவாக இருந்தது. ஃபிரான்சின்மீது போர்தொடுக்க வேண்டும் என்று பிஸ்மார்க் ஏற்கனவே முடிவு செய்து வைத்திருந்ததால், ஃபிரான்சின் போர் பிரகடனம் அவரை எவ்வித அதிர்ச்சிக்கும் உள்ளாக்கவில்லை. படைகள் எல்லாம் அணிவகுப்பிற்குத் தயாராக இருந்தன. ஆனால், ஃபிரான்சின் நிலைமை இதற்கு நேர்மாறாக இருந்தது. போர் பிரகடனம் செய்த போதிலும், அது போருக்குத் தயாராக இல்லை. அதனால் அவசரமாகப் படைகளைத் திரட்ட வேண்டியிருந்தது.

1870 ஆகஸ்டு 2-ம் தேதியன்று 500000 பேர் கொண்ட பிரஷ்யப் படை ஃபிரான்சை நோக்கி முன்னேறியது. மற்றும் 500000 பேர் கொண்ட ஒரு படை அதற்கு ஆதரவாகப் பின் சென்றது. மூன்று ஜெர்மன் படைகள் போர்க்களத்தில் இறங்கின. மோசலே எல்லையோரமாக மெட்ஸ் நகரை நோக்கி ஸ்டெயின் மெட்ஸ் என்ற தளபதியின் தலைமையில் ஜெர்மன் துருப்புகள் முன்னேறின. இரண்டாவது படையும் பிரடிரிக் சார்லஸ் இளவரசன் தலைமையில் மெயின்ஸ் வழியாக மெட்ஸ் நகரை நோக்கி முன்னேறியது. மூன்றுவது படை பிரஷ்யப் பட்டத்து இளவரசன் பிரடிரிக்கின் தலைமையில் அல்சாஸ் பகுதியைக் கைப்பற்றி ஸ்டராஸ்பர்க் நகரை நோக்கி முன்னேறியது. இந்த மூன்று ஜெர்மானியப் படைகளும் ஃபிரெஞ்சுப் படைகளை முறியடித்தன. ஃபிரெஞ்சு அரசனின் தலைமையில் போரிட்டு வந்த ரைன் படைகளும், மெட்ஸ் நகரை நோக்கிப் பின்வாங்கின. இத் தோல்விகளெல்லாம் ஃபிரான்சில் பெரிய குழப்பத்தை ஏற்படுத்திவிட்டன. நெப்போலியனது ஆட்சியில் ஃபிரெஞ்சு மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். பிரதம அமைச்சர் ஆலிவர் ராஜினாமா செய்தார். நெப்போலியன் தம்முடைய தளபதி பதவியைப் பேஸேய்ன் என்பவரிடம் ஒப்படைத்தார். மெக்சிகோ படையெடுப்பில் சிறப்பெய்திய பேஸேய்ன் தலைமையில் போரிட்ட ஃபிரெஞ்சுப் படைகள் மும்முறை தோல்வியுற்றன. பிறகு கிராவிலாட் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டு மெட்ஸ் நகரின் வழியாகப் பின்வாங்கும்பொழுது, அவருடைய படைகளுடன்

ஜெர்மானியர்களால் சூழப்பெற்றனர். இப் படைக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அனுப்பவும் முடியாமல் போய் விட்டது. மேக்மோகன், அல்சாஸிலிருந்து மற்றொரு படையுடன் பேஸேய்னைக் காப்பாற்ற மெட்ஸ் நோக்கி விரைந்தார். வழியில் செடான் (Sedon) என்ற இடத்தில் மூன்றுவது படையை நடத்திச் சென்ற பட்டத்து இளவரசன் மேக்மோகனின் படையை முறி யடித்தார். செப்டம்பர் 2-ம் தேதியன்று நிகழ்ந்த இந்தப் போர் மிகவும் பிரசித்திபெற்றது. மேக்மோகன் படையுடன் நெப்போலிய னும் இருந்தார். மிகவும் பயங்கரமாகச் சண்டையிட்டப் பிறகு 80000 போர் வீரர்களுடன் நெப்போலியன் சரணடைய வேண்டிய அவசியமான நிலை ஏற்பட்டது. செடானில் அடைந்த தோல்வி இரண்டாவது ஃபிரெஞ்சுப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. நெப்போலியன் தம் மகுடத்தைத்தான் சரணடையச் செய்தாரே தவிர, ஃபிரான்சைச் சரணடையச் செய்யவில்லை என்று தெளிவாகக் கூறினர். நெப்போலியன் பட்டத்தைத் துறந்த பிறகு ஃபிரான்சில் ஒரு இடைக்கால குடியரசு நிறுவப்பெற்றது. அக் குடியரசு அரசாங்கம் போரை நிறுத்தாது தொடர்ந்து போரிட்டது. அப்பொழுது ஃபிரான்சின் வெளிநாட்டு அமைச்சரான ஜூல்ஸ் ஃபேவர் (Jules Favre) என்பவர் போருக்குப் பொறுப்பு நெப்போலியனே என்றும் ஃபிரான்சின் எல்லைகளில் எவ்வித மாற்ற மும் இல்லாதிருந்தால், சமாதானம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஓர் அறிக்கை விடுத்தார். மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டு ஃபிரான்சிற்குச் சாதகமாகச் சமாதான உடன்படிக்கை செய்து தரும்படி ஃபிரெஞ்சுப் பிரதமர் தையர்ஸ் (Thiers) வேண்டினர்.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே ஜெர்மானியப் படைகள் பாரிஸ் நகரைச் சூழ்ந்து கொண்டன. ஜெர்மானியப் படைகள் பாரிஸ் நகரைப் பிடிக்காத வாறு ஃபிரெஞ்சுக்காரர்கள் தீவிரமாகப் போரிட்டனர். ஆனால் அந்த முயற்சி வெற்றி யளிக்கவில்லை. செப்டம்பர் 27-ம் தேதியன்று ஸ்டராஸ்பர்க் வீழ்ந்தது. அக்டோபர் 27-ம் தேதியன்று பேஸேய்ன் மெட்ஸ் நகரைச் சரணாகதி செய்தார்; 1871 ஜனவரி 28-ம் தேதியன்று பாரிஸ் நகரம் பிடிபட்டது. இந்த நகரத்தைப் பிடிப்பதற்கு ஜெர்மானியர் மிகவும் பாடுபட்டனர். நான்கு மாதங்கள் வரையிலும் பாரிஸ் நகரம் முற்றுகை செய்யப்பட்டு, பிறகுதான் பிடிக்கப் பெற்றது.

பாரிஸ் நகரம் வீழ்ந்த பிறகு ஃபிரான்சின் புதிய தேசிய சட்ட சபைக்குப் பிரதிநிதிகள் தேர்தல்கள் நிகழ்ந்தன. புதிய அரசியல்

அமைப்பு எவ்விதம் இருக்கவேண்டுமென்ற பிரச்சினையில் வேறுபாடுகள் இருந்ததால் ஓர் இடைக்கால அரசாங்கத்தை அமைத்தனர். புதிய ஜனாதிபதியாகத் தையர்ஸ் என்பவரைத் தேர்ந்தெடுத்தனர். பிறகு தையர்ஸ் பிஸ்மார்க்குடன் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். பிஸ்மார்க் எக்காரணத்தைக்கொண்டும் அல்சாஸ்-லொரேய்ன் பகுதியை ஃபிரான்சிற்கு விட்டுக்கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். பிறகு பெல்போர்டைத் தவிர, அல்சாஸ்-லொரேய்ன் பகுதியை ஜெர்மானியர் வசம் விட்டுவிடுவதென்றும், ஃபிரெஞ்சு அரசாங்கம் நஷ்டஈடாக ஐந்தாயிரம் மில்லியன் பிராங்குகளை ஜெர்மனிக்குத் தரவேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதுவரை எந்த நாடும் இவ்வளவு பெரிய தொகையை நஷ்டஈடாகத் தந்ததில்லை. இந்த நிபந்தனைகளின் பேரில் பிராங்பர்ட் உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளிடையே செய்துகொள்ளப் பெற்றது. நஷ்டஈட்டுத் தொகை வசூல் ஆகும் வரை ஜெர்மனியின் இராணுவம் ஃபிரான்சில் இருக்கும் என்று அறிவிக்கப்பெற்றது. பிறகு பிரஷ்ய மன்னன் வில்லியம் வெர்சேல்ஸ் அரண்மனையில் 1871 ஜனவரி 18-ம் தேதியன்று ஜெர்மானியப் பேரரசனைப் பிரகடனம் செய்யப்பெற்றார். அப்பொழுதிருந்து கெய்சர் என்ற பட்டம் அந்த மன்னர்களுக்கு அளிக்கப்பெற்றது. ஜெர்மனியின் முழு ஐக்கியம், இந்தப் போருக்குப் பிறகு உருவாக்கப் பெற்றது. அந்த ஐக்கிய ஜெர்மனிக்குப் பிரஷ்யாவே தலைமை தாங்கி அரசாங்கத்தை ஆதிக்கம் செய்தது. பேடன், பவேரியா, வர்டம்பர்க் ஆகிய நாடுகள் ஜெர்மானியக் கூட்டமைப்பில் சேர்ந்துகொண்டன. ஆதலால் ஜெர்மனியின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பிஸ்மார்க்கே யாவர்.

ஜெர்மனியை உருவாக்குவதற்கு அவர் மூன்று போர்களைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால், ஜெர்மானியை உருவாக்கிய பிறகு 1871 முதல் ஜெர்மன் நாடு எக்காரணத்தைக் கொண்டும் மற்றொரு போரில் இறங்காதவண்ணம் பார்த்துக் கொண்டார். பிரஷ்ய ஃபிரெஞ்சுப் போரில், ஃபிரான்ஸ் தோல்வியுற்ற பிறகு, அங்கே மீண்டும் மூன்றாவது முறையாக ஒரு குடியரசு அரசாங்கம் அமைக்கப்பெற்றது. இந்தக் காரணத்தைக் காட்டியே, பிஸ்மார்க் ரஷ்ய ஜாரிடமும், ஆஸ்டிரிய-ஹங்கேரி பேரரசனுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டார். ஏனெனில், ஃபிரான்சின் குடியரசுக் கொள்கைகளுக்கும் ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய வல்லரசுகளின் முடியாட்சிக் கொள்கைகளுக்கும் சிறிதேனும் ஒருமைப்பாடு இருக்க முடியாதென்பதால், இந்த மூன்று பேரரசர்களும் ஒன்று சேர்ந்து

இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். இதன் விளைவாக 1872-ல் மூன்று பேரரசர்களின் உடன்படிக்கை (Drei Kaiserbund) ஒன்று ஏற்பட்டது. இப் பேரரசர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒன்று கூடித் தங்களுடைய உறவைப் புதுப்பித்துக் கொள்வதென்று முடிவு செய்தனர். 1875 வரை இந்தப் பேரரசர்களின் கூட்டம் நடை பெற்றது. அதற்குப் பிறகு இந்த உடன்படிக்கைத் தேய்ந்து கொண்டே போய்விட்டது. 1873-ல் ஃபிரெஞ்சுக் குடியரசிற்கு மேக்மோகன் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அவர் பழைய முடியாட்சியை ஃபிரான்சிற்குக் கொண்டு வரவேண்டுமென்று முயன்றார். இச் செய்தியே பிஸ்மார்க்கிற்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அதனால் மற்றப் பேரரசர்களும் மேக்மோகனை ஆதரிப் பார்களோ என்ற ஐயம் அவருக்கு உண்டாகியது. இதைத் தவிர, ஃபிரான்சின் வளர்ச்சி மிகவும் வேகமாக முன்னேறிக்கொண்டு வந்தது. ஜெர்மனிக்குத் தரவேண்டிய பெரிய நஷ்டஈட்டுத் தொகை திருப்பித் தரப்பெற்றது. அதனால் ஃபிரான்சில் விடப்பெற்றிருந்த ஜெர்மானியத் துருப்புகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன. ஃபிரெஞ்சுப் படைகள் நவீன முறையில் சீரமைக்கப்பெற்றன. ஃபிரான்சில் தேசிய உணர்ச்சி அதிகமாக வளர்ந்து விட்டதுமன்றி, ஜெர்மனிமீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன. அதனால் பிஸ்மார்க் ஜெர்மனியின் இராச்சிய உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இறங்கிவிட்டார். ஃபிரான்சின்மீது மற்றொரு போர்த் தொடுப்பது பற்றியும் அவர் பரிசீலனை செய்தார். ஆனால், இந்த சமயத்தில் ஃபிரான்சின்மீது போர்த்தொடுக்க அவர் அவ்வளவு துணிச்சல் கொள்ளவில்லை. ஆனால், அந்த நாட்டின்மீது ஒரு கெடுபிடிப் போரைச் செய்து கொண்டே வந்தார் என்றால் மிகையாகாது. மற்ற ஐரோப்பிய நாடுகளும் ஃபிரான்சின்மீது ஜெர்மனி போர் தொடுப்பதை விரும்ப வில்லை. இங்கிலாந்து நாட்டு விக்டோரியா அரசியார் ஃபிரான்சின் மீது போர் தொடுப்பதைப்பற்றி மிகவும் கடுமையாக ஜெர்மனிக்கு எச்சரிக்கை விடுத்தார். ஃபிரான்சின்மீது போர் தொடுக்கும் எண்ணம் தமக்கில்லை என்று பிஸ்மார்க் அறிவித்த பிறகே போர் பயம் ஓய்ந்தது.

ஆனால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் கீழைச் சிக்கல் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. 1875-ல் போஸ்னியர்களும், பல்கேரியர்களும் துருக்கிச் சுல்தானின் கொடுங்கோன்மை ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்தனர். 1876-ல் ஸெர்பியாவும், மாண்டிநிக்ரோவும் துருக்கியின்மீது போர் தொடுத்தன. இதனால் ரஷ்யாவின் ஜார் இவர்களுக்குச் சாதகமாகப் போர் புரிவது என்று முடிவு செய்தார். ரஷ்யா பால்கன் நாடுகளில் தலையிடுவதை

ஆஸ்டிரியா சிறிதும் விரும்பவில்லை. ஆனால் பிஸ்மார்க்கிற்கு இந்தச் சிக்கல் பெரிய தலைவலியைக் கொடுத்தது. ஏனெனில், ஆஸ்டிரியாவும், ரஷ்யாவும் எக்காரணத்தைக்கொண்டும் மோதவிடாது பார்த்துக்கொள்வதில்தான் ஜெர்மனியின் வலிமை அடங்கியிருக்கிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். மேலும் போரில் ஏதாவது ஒரு நாட்டுப் பக்கம் சேர்ந்து சண்டையிடும்படியான அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படும் என்ற நிலையைப்பற்றி மிகவும் கவலையுற்றார். தவிர, அவருக்குப் பால்கன் நாடுகளைப்பற்றிய கவலை சிறிதும் இல்லை. 1877-ல் ரஷ்யா துருக்கியின்மீது படையெடுத்துச் சென்று அட்ரியானோபிள் வரை முன்னேறிவிட்டது. துருக்கி வலுவிழக்க ரஷ்யாவுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டது. இதற்கு ஸான் ஸ்டபனே (San Stepano) உடன்படிக்கை என்று பெயர். அதன்படி பெரிய பல்கேரியா நாடு ரஷ்யாவின் ஆதிக்கத்தில் உருவாகியது. துருக்கி ஐரோப்பாவில் சிதறுண்ட சிறு பகுதிகளைக் கொண்டதாகிவிட்டது. இந்த உடன்படிக்கையைப் பிரிட்டன், ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டன. இந்தப் பிரச்சினையை ஐரோப்பிய மாநாட்டில் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று அந்த நாடுகள் வற்புறுத்தியதின் பேரில், பெர்லினில் பிஸ்மார்க் தலைமையில் ஒரு மாநாடு கூட்டப் பெற்றது. அச் சிக்கலைத் தீர்த்துவைக்கும்பொறுப்பு பிஸ்மார்க்கிற்கே தரப்பட்டது. "ஒரு நாணயமிக்கத் தரகராகவே" அவர் பணியாற்றுவதாகக் கூறினார். ரஷ்யாவும் பிஸ்மார்க்கிற்கு வேண்டிய நாடேயாகும். அதைப்போன்று, ஆஸ்டிரியாவும் வேண்டியநாடே. இருந்தபோதிலும், ஐரோப்பிய அரசியலில் துருக்கி இன்னும் நீடித்திருக்க வேண்டுமென்ற எண்ணம், பல சுயநலங்களுக்காக வல்லரசுகள் வற்புறுத்தியதின் பேரில், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஸான் ஸ்டபனே உடன்படிக்கை ரத்து செய்யப்பெற்று ஒரு புதிய உடன்படிக்கை உருவாக்கப்பெற்றது. இந்த உடன்படிக்கையின்படி ஏற்கனவே ரஷ்யா அடைந்த எல்லா இலாபங்களையும் இழக்க நேரிட்டது. துருக்கிமீது வெற்றி கொண்ட ரஷ்யா யாதொரு பயனையும் பெற இந்த மாநாடு சம்மதிக்கவில்லை. ஆனால், போரிலேயே பங்கு கொள்ளாத ஆஸ்டிரியா வெற்றியின் எல்லா நன்மைகளையும் அடைய இந்த மாநாடு உதவியது. அதனால்தான் ரஷ்யா மெதுவாக மூன்று பேரரசுகளின் உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொண்டது. ரஷ்யாவின் நட்பை உறுதியாக இழந்துவிட்ட பிறகு ஆஸ்டிரியாவின் உறவையாவது உறுதிப்படுத்திக்கொள்ள 1879-ல் இரண்டு பேரரசர்களின் உடன்படிக்கை (Dual Alliance) ஒன்றைச் செய்துகொண்டனர். ஆனால், ரஷ்ய ஜார் இரண்டாம் அலெக்சாந்தர் அவ்வளவு விரைவில் ஜெர்மனியிடமிருந்து விலகிக்கொள்ள

மனமில்லாது மீண்டும் மூன்று பேரரசர்களின் உடன்படிக்கையைப் புதுப்பிப்பதில் அக்கறை காட்டினர். ஆனால், ரஷ்யாவின் ஆதரவையும், பிஸ்மார்க் இழந்துவிடவில்லை. மூன்று பேரரசர்களின் உடன்படிக்கையைப் புதுப்பிப்பதில் புதிய நிபந்தனை என்று சேர்க்கப்பட்டது. அதாவது உடன்படிக்கையில் கையெழுத்திட்ட எந்த இரண்டு நாடுகளுக்குள் அபிப்பிராய பேதமோ அல்லது ஏதாவது சிக்கல்கள் பால்கன் விவகாரத்தில் நேர்ந்தால் மூன்றுவது நாடு மத்தியஸ்தம் செய்து கூறுகின்ற முடிவை ஒப்புக்கொள்வதென்று முடிவு செய்யப்பெற்றது. அதாவது பால்கன் நாடுகள் சம்பந்தமாக ஆஸ்டிரியாவும், ரஷ்யாவும் மோதிக்கொண்டால், ஜெர்மனி மத்தியஸ்தம் செய்து சுமுகமான உறவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. பிஸ்மார்க் மேலும் இத்தாலியையும் தம் பக்கம் இழுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினர். ஆனால், இத்தாலிக்கும் ஆஸ்டிரியாவிற்கும் நீண்டநாள் பகை இருந்து வந்திருக்கிறது. இரண்டு பேரரசர்கள் உடன்படிக்கையில் இத்தாலி சேர்ந்துகொள்ளத் தயங்கியது. ஆனால், உடன்படிக்கையில் சேர்ந்துள்ள நாடுகள் ஒன்றையொன்று தாக்கிக்கொள்ளாது என்ற நிபந்தனையிருப்பதால், இத்தாலி ஜெர்மனியுடன் சேர்ந்து கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தது. ஃபிரான்சிலுள்ள கத்தோலிக்கக் கட்சி மீண்டும் போப்பினுடைய அரசியல் அதிகாரத்தை இத்தாலியில் ஏற்படுத்த முயற்சிகள் செய்து கொண்டிருப்பதால் இத்தாலி ஃபிரான்சின்மீது நம்பிக்கை இழந்துவிட்டது. மேலும், ஃபிரான்ஸ் வட ஆப்பிரிக்காவிலுள்ள டூனிஸ் பகுதியை ஆக்கிரமிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்துதான் இத்தாலி 1882-ல் ஜெர்மனி, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளுடன் முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) செய்துகொண்டது. இந்த முக்கூட்டு ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தனர். 1912-ல் கடைசி முறையாக இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. 1915-ல் இத்தாலி இந்த ஒப்பந்தத்தை நிராகரித்துவிட்டு, ஃபிரான்ஸ், பிரிட்டனுடன் சேர்ந்து முதல் உலகப் போரில் ஈடுபட்டது.

1882-ல் பிஸ்மார்க்கின் புகழ் மிகவும் உச்சக்கட்டத்தில் இருந்தது. ரஷ்யா, ஆஸ்டிரியா, இத்தாலி ஆகிய நாடுகள் பிஸ்மார்க்கின் பக்கம் இருந்தன. 1887-ல் மூன்று பேரரசர்களின் உடன்படிக்கையிலிருந்து ரஷ்ய ஜார் மூன்றாம் அலெக்சாந்தர் விலகிக்கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தார். ஆனால், ஜெர்மனியுடன் தனியாக ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள விரும்பினர். இதனால், ரஷ்யா எதிர்காலத்தில் ஆஸ்டிரியாவுடன் போர்

தொடுக்கும் சூழ்நிலையை உருவாக்குகின்றது என்பதை உணர்ந்த பிஸ்மார்க், ஆஸ்டிரியாவுடன் செய்துள்ள ஒப்பந்தத்தைத் தெளிவாகக் கூறி மேலும் அந்த உறவை முறித்துக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்தார். அதனால் ஆஸ்டிரியா தாக்கப்பட்டால், ஆஸ்டிரியாவிற்கு ஜெர்மன் உதவி உறுதியாகக் கிடைக்கும் என்று தெளிவாக்கப்பட்டது. அதைப்போல, மூன்றும் அலெக்சாந்தர் ஃபிரான்சின்மீது ஜெர்மனி தாக்கினால், ரஷ்யா நடுநிலைமை வகிக்க முடியாது என்று பதிலுரைத்தார். இந்த சந்தேகமான சூழ்நிலையிலுங்கூட, ரஷ்யாவுடன் பிஸ்மார்க் ஓர் உறுதி மொழி ஒப்பந்தம் (Reinsurance Treaty) செய்துகொண்டார். இந்த ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்படும் என்று முடிவு செய்தனர். பிறகு, அவசியம் ஏற்படின் புதுப்பித்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டனர். 1890-ல் இந்த ஒப்பந்தம் காலாவதியாகி விட்ட பிறகு, இதைப் புதுப்பிக்கவில்லை. பிஸ்மார்க்கிற்கு இந்த ஒப்பந்தத்தில் நம்பிக்கையில்லை. எல்லாவற்றையும்விட, பிஸ்மார்க்கின் அரசியல் வாழ்க்கை அப்பொழுது முடிவடையும் தருவாயில் இருந்தது. அவருடைய அரும்பணிகள் நன்கு போற்றப்படவில்லை. 1888-ல் இரண்டாம் வில்லியம் கெய்சராகிவிட்டார். அவருக்குப் பிஸ்மார்க்கின்மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. அவரே ஆட்சி செய்ய விரும்பினார். ஆனால், பிஸ்மார்க் இவ்வளவு காலமாக ஆட்சி செய்து பழகிவிட்டதால், புதிதாக அனுபவமில்லாத ஓர் இளம் அரசனிடமிருந்து உத்தரவுகள் பெற்று கீழ்ப்படிந்து நடக்க விரும்பவில்லை. மேலும், பல வேறுபாடான அபிப்பிராயங்கள் இருவருக்கிடையே வளர்ந்துவிட்டன. 1890-ல் பிஸ்மார்க் தம்முடைய சான்சலர் பதவியை ராஜிநாமா செய்தார்.

இரண்டாம் வில்லியம் (1888–1918)

ஹோகர்ன் சாலர்ன் அரச பரம்பரையில் கடைசி அரசனாக இரண்டாம் வில்லியம் விளங்கினார். திறமைமிக்கப் பேரரசனாக விளங்கிய போதிலும் பொறுமையில்லாதவராக இருந்ததால் பல தவறுகளைப் புரிய நேர்ந்தது. அனுபவமிக்கப் பிஸ்மார்க்கின் ஆலோசனைகளையும் அவர் ஏற்க மறுத்தார். அரசனுக்கு மக்களை ஆட்சி செய்யும் தெய்வீக உரிமை இருக்கிறதென்று பத்தொன்பதாவது நூற்றாண்டில் கூறினால் அந்தக் கொள்கை கேலிக்குரியதாகி விட்டது. ஆனால், பேரரசைக் கொண்ட இரண்டாம் வில்லியம் ஜெர்மனியைப் பெரிய வல்லரசாக்க வேண்டுமென்ற கொள்கையை உடையவராக இருந்தார்.

பிஸ்மார்க் சான்சலர் பதவியை ராஜிநாமா செய்த பிறகு, பல சான்சலர்களை அவர் நியமனம் செய்தார். உண்மையில் சில

சான்சலர்கள் திறமை மிக்கவர்களாக இருந்தும், பதவியில் அதிக நாட்கள் நீடித்து இருக்க முடியவில்லை. அவர்கள் கெய்சரின் சொற்படி கேட்டே நடக்கவேண்டியிருந்ததால், இப்பதவி அடிக்கடி காலியாகிக்கொண்டே வந்தது. பிஸ்மார்க்கிற்குப் பிறகு ஜெனரல் வான் காம்ரிவி சான்சலர் பதவியை ஏற்றார். அவர் 1894 வரையிலும் இந்தப் பதவியில் இருந்தார். அந்தப் பதவி காலத்தில் சான்சலரின் செல்வாக்கு மிகவும் மங்கியிருந்தது. 1894–1900 வரை ஹோகன் லோ என்ற அரச பரம்பரையைச் சார்ந்த ஒருமுதியவர் இப் பதவியில் இருந்தார். அவருக்குப் பிறகு வான்பூலோ என்ற ஒரு சிற்றரசன் இப் பதவியை வகித்தார். பூலோவிற்குப் பிறகு பெத்மேன் ஹால்வெக், மைகேலிஸ், ஹெர்ட்லிங் பிரபு, பேடன் நாட்டைச் சார்ந்த மேக்ஸிமிலான் இளவரசன் ஆகிய பலர் சான்சலர் பதவி வகித்துவிட்டனர். மேக்ஸிமிலான் முதல் உலகப் போர் முடிந்த பிறகு ஜெர்மனியின் சார்பாக நேச நாடுகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தியவர். ஜெர்மன் குடியரசு பிரகடனம் செய்யப்பட்ட பிறகு அந்தக் குடியரசின் ஜனாதிபதியான பிரடிரிக் பெர்ட் என்பவரிடம் தம்முடைய அதிகாரத்தை ஒப்படைத்தார்.

பிஸ்மார்க்கும்கூட முடியாட்சியை முழுமனதுடன் ஆதரித்தவர் தான். அதனால் ஜெர்மனியின் எவ்வித முன்னேற்றமான அரசியல் பொருளாதார கொள்கைகள் உருவாக்கப்படவில்லை. சோஷியலிசக் கொள்கைகளை அவர் அறவே வெறுத்தார். அதனால் இந்த இயக்கத்தை அவர் அடக்கி வைத்திருந்தார். ஆனால், இரண்டாம் வில்லியம் பிஸ்மார்க்கைவிட முன்னேற்றமடைந்தவர் என்றே கூறவேண்டும். ஏனெனில், அவர் சோஷியலிஸ்டுகளுடன் சமாதானத்துடன் இருக்க வேண்டுமென்று விரும்பினர். மக்களுக்குத் தேவையான சமூக நலன்களைச் செய்தால் இந்த சோஷியலிச இயக்கம் தானாகவே வலிவிழந்துவிடும் என்று அவர் கருதினர். அதனால் அவர் இந்தக் கட்சியின் மீதுள்ள தடைகளை அகற்றினர். சோஷியலிஸ்டுகள் இந்தச் சூழ்நிலையை நன்கு பயன் படுத்திக்கொண்டு அவர்களுடைய கட்சிப் பிரச்சாரத்தை வெகு வேகமாக மக்களிடம் பரப்பினர்; அவர்கள் ஏராளமான நூல்களைப் பிரசுரம் செய்தனர். ரெய்ச்ஸ்டாக் என்ற ஜெர்மன் பாராளு மன்றத்தில் சோஷியல் டெமோகிராடிக் கட்சி நிறைய இடங்களைக் கைப்பற்றியது. அதனால் கெய்சர் மிகவும் அதிர்ச்சி அடைந்து விட்டார். அவர் எதிர்பார்த்த அளவில் இந்த இயக்கம் செல்வாக்கு இழந்துவிடவில்லை. அதற்கு மாறாக அதிக ஆதரவை மக்களிடமும் ரெய்ச்ஸ்டாக்கிலும் பெற்றுவிட்டது. அதனால் மீண்டும் இந்தக் கட்சியை அடக்குவதற்கு அவர் பல வழிகளைப் பின்பற்றினர்.

ரெய்ச்ஸ்டாக்கில், அவர் கலந்தாலோசிக்காமல் பல கொள்கைகளை வகுத்துக்கொண்டதாலும், சான்சலர் ரெய்ச்ஸ்டாக்கிற்குப் பொறுப்பாக இல்லாது கெய்சருக்கு அடங்கி நடப்பதாலும், அவருடையக் கொள்கைகளை மக்கள் பிரதிநிதிகள் மிகவும் வன்மையாகக் கண்டித்தனர். ரெய்ச்ஸ்டாக் பல சீர்திருத்தங்களை வேண்டுமென்று கிளர்ச்சி செய்தது. பாராளுமன்றச் சீர்திருத்தங்களும் வாக்காளர் பட்டியல் விஸ்தரிப்பும், தேர்தல் தொகுதிகளைச் சீரமைப்பதிலும், அமைச்சர்களின் பொறுப்பும் ஆகிய சீர்திருத்தங்கள் உடனடியாக வேண்டுமென்று பாராளுமன்ற அங்கத்தினர்களும், மற்றப் பொதுமக்களும் கோரினர்.

வெளிநாட்டுக் கொள்கை

இரண்டாம் வில்லியம் ஜெர்மனியை மிகவும் பலமிக்க உலக வல்லரசாக்க வேண்டுமென்று விரும்பினர். அப்பொழுது ஐரோப்பிய வல்லரசுகளிடையே தீவிரமாகக் காலனி வேட்டை நடந்து வந்தது. ஜெர்மனியும்கூடப் போட்டிப் போட்டுக்கொண்டு, ஆப்பிரிக்காவிலும், கிழக்கு இந்தியத் தீவுகளிலும், சீனாவிலும், காலனிகளைப் பெறுவதில் ஆர்வமுடையதாக இருந்தது. அதற்காகக் கெய்சர் பலமிக்க இராணுவத்தையும், அதைப்போன்று ஒரு கப்பற் படையையும் நவீன வசதிகளுடன் இயற்ற முன்வந்தார். 1895-ல் கீல் கால்வாய் (Kiel Canal) கட்டி முடிக்கப்பெற்றது. வட கடலில் உள்ள ஹெலிகோலாண்ட் பிரிட்டனுல் ஜெர்மனிக்குத் தரப்பெற்றது. நாளடைவில் ஜெர்மனியின் கப்பற்படை. வலிமைமிக்கதாகிவிடவே பிரிட்டனும் பயந்து அதனுடைய கப்பற்படையைப் பலப்படுத்திக் கொண்டது. புதிய கப்பல்கள், "டிரக்நாட்", சூப்பர் டிரக்நாட் (Super-Drednought) உருவாக்கப்பெற்றன. பிரிட்டனின் கடல் கடந்த பேரரசைப் பாதுகாப்பதற்கு மிகப் பெரிய கப்பற் படை தேவைப்பட்டது. இதுவரை பிரிட்டன் ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் தலையிடாது, அதனுடைய கவனம் முழுவதையும் காலனிகளைப் பிடிப்பதிலும், வியாபாரத்தைப் பெருக்குவதிலும் தான் இருந்து வந்தது. ஜெர்மனியின் காலனி மோகத்தைப் பிரிட்டன் தெரிந்துகொண்டவுடன், அதுவும் மிகவும் எச்சரிக்கையுடன் கடற்படையைப் பலப்படுத்திக் கொண்டது. விக்டோரியா அரசியாருக்கு இரண்டாம் வில்லியம் பேரப் பிள்ளை முறையாக வேண்டியிருந்ததால் பிரிட்டனுக்கும், ஜெர்மனிக்கும் அந்த அரசியார் உயிரோடு இருக்கும்வரையில் நல்ல உறவு இருந்தது. அதன் காரணமாகத்தான் ஹெலிகோலாண்டுங்கூட ஜெர்மனிக்குத் தரப்பெற்றது. ஆனல், இரண்டாம் வில்லியம் பிரிட்டனுடைய உறவை மெதுவாகக் கத்தரித்துக் கொண்டு அதனுடன் போட்டியிட ஆரம்பித்தார். பிரிட்டனின் ஆதிக்கத்திலுள்ள டிரான்ஸ்வால்

பகுதியில் 1896-ல் டிரான்ஸ்வால் சுதேச மக்களும், பிரிட்டிஷ் குடியேற்ற மக்களும் போரிட்டனர். குரூகர் (Kruger) என்ற டிரான்ஸ்வால் ஜனதிபதிக்கு, அவருடைய வெற்றியைப் பாராட்டி கெய்சர் ஒரு தந்தியை அனுப்பினர். கெய்சரின் இந்தச் செய்கை பிரிட்டனுக்குப் பாதகமாக இருந்தது. விக்டோரியா அரசியாரும் கூட மிகவும் வன்மையாகக் கண்டித்து வில்லியமுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதற்கு விளக்கம் தரும் வகையில், தமக்குத் தெரியாமலேயே இந்தத் தந்தி தரப்பட்டுவிட்டது என்று கூறினர். 1899–1902-ல் தென் ஆப்பிரிக்கப் போர்கள் நிகழ்ந்தன. அந்தப் போர்களில் போயர்களுக்குச் சாதகமாகக் கெய்சர் நடந்து கொண்டார். அதனால் பிரிட்டனுக்குக் கெய்சர்மீதிருந்த நம்பிக்கையும், ஆதரவும் குறைந்துவிட்டன. 1875–1903 வரை பிரிட்டன் மீண்டும் ஜெர்மனியுடன் நட்பாக இருக்க ஒரு உடன்படிக்கையைச் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பியது. இதனால் பிரிட்டனுடைய "தனித்திருக்கும் கொள்கை"யைச் சிறிது தளர்த்தியது. அப்பொழுது பிரிட்டிஷ் பிரதம அமைச்சராக இருந்த சாலிஸ்பரி பிரபு ஜெர்மனியுடன் உறவுகொள்ளும் கொள்கையில் சிறப்பான முயற்சி ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. மீண்டும், சேம்பர்லேய்ன் மூலமாகப் பிரிட்டன்–ஜெர்மனி உறவுகள் பலப்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கெய்சரிடம் சமர்ப்பித்தனர். ஆனால், இவற்றையெல்லாம் கெய்சர் நிராகரித்துவிட்டார். கெய்சர் பிரிட்டனின் நட்பைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பை இழந்து விட்டார் என்றே கூறவேண்டும். 1901-ல் விக்டோரியா அரசியார் இறந்துவிடவே ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் பகைமை அதிகமாக வளர்ந்தது. பெர்லின்–பேக்டாட் ரயில்வே இணைப்புத் திட்டம் இந்தியாவிற்கு ஆபத்தை விளைவிக்கலாம் என்று பிரிட்டன் கருதியது. விக்டோரியா அரசியாருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த ஏழாம் எட்வார்ட் ஃபிரெஞ்சு நாட்டுடன் நட்பைப் பலப்படுத்துவதில் மிகவும் அக்கரை கொண்டவராக இருந்தார். 1904-ல் பிரிட்டனும் ஃபிரான்சும் ஓர் இரகசிய ஒப்பந்தத்தை (Anglo–French Entente) செய்துகொண்டன. எவ்வளவு முயற்சி எடுத்துப் பிஸ்மார்க் இந்த ஐரோப்பிய வல்லரசுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொண்ட போதிலும், கெய்சர் அந்த முயற்சிகளை எல்லாம் வீணாக்கிவிட்டார். பிரிட்டன், ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் பகைமையை வளர்த்துக்கொண்டார். இரண்டாம் வில்லியம் காலத்தில் நான்குமுறை போர் ஏற்படும்படியான நெருக்கடி ஏற்பட்டது. மூன்று நெருக்கடிகள் தவிர்க்கப்பட்ட போதிலும், நான்காவது தடவை நெருக்கடி முற்றி முதல் உலகப் போரில் இழுத்துவிட்டது. வட மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மொராக்கோ சுதந்தரமாக அந்த நாட்டுச் சுல்தானால் ஆட்சி

செய்யப்பட்டுவந்தது. மொராக்கோவிற்கு அண்மையில் அல்ஜீரியா என்ற ஃபிரெஞ்சுப் பகுதி இருந்தது. அதன் காரணமாக ஃபிரான்ஸ் அடிக்கடி மொராக்கோவின் விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டுவந்தது. ஃபிரெஞ்சுக்காரர்கள் மொராக்கோவில் நிறைய முதலீடு செய்திருந்தனர். ஃபிரெஞ்சுப் பாங்கும்கூட அங்கு நிறுவப்பெற்றிருந்தது. ஃபிரான்ஸ் அதனுடைய பொருளாதார நலன்களைப் பெறும் நோக்கத்துடன் சுல்தானிடம் நிறைய சலுகைகளைக் கேட்டது. மொராக்கோவில் குழப்பம் ஏற்படும் பொழுது ஃபிரெஞ்சுத் துருப்புகளை அனுப்பவும், மேலும் சில கலால் வரிகளை வசூலிப்பதற்கும் வேண்டிய உரிமைகளைக் கேட்டது. ஃபிரான்ஸ் கோரும் இந்த உரிமைகளை அளித்தால், உறுதியாக ஃபிரான்சின் ஆதிக்கம் அங்கே ஏற்பட்டுவிடும் என்று சுல்தான் பயந்தார். இச் சூழ்நிலையில் 1905-ல் கெய்சர் சுல்தானுக்குச் சாதகமாக மொராக்கோ அரசியலில் தலையிட்டார். அப்பொழுது ஃபிரான்சின் நேச நாடான ரஷ்யா, ஜப்பானுடன் போரிட்டுக்கொண்டிருந்தது. அதனால் ஃபிரான்சிற்குச் சாதகமாக ரஷ்யா முன்வரும் நிலையில் இல்லை. ஃபிரான்சின் தனிச் சலுகைகள் மொராக்கோ சுல்தானால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று பிரிட்டன் கூறிக்கொண்டிருந்தது. அப்பொழுதுதான் பிரிட்டனும், ஃபிரான்சும் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. அதனால் ஜெர்மனி மொராக்கோ சிக்கலில் தலையிடும்பொழுது பிரிட்டன் அவ்வளவு விரைவில் ஃபிரான்சிற்கு உதவி செய்ய முன்வரும் நிலையில் இல்லை. அதனால் பிரிட்டன்–ஃபிரான்ஸ் இரகசிய ஒப்பந்தம் முறிவடைந்துவிடும் என்று கெய்சர் நம்பினார். கெய்சர் டேங்கயர் நகருக்குச் சென்று மொராக்கோ சுல்தானின் சுதந்தர ஆட்சியை நிலைநிறுத்தப் போவதாகப் பறைசாற்றினார். அதனால் சுல்தான் ஃபிரெஞ்சுக் கோரிக்கைகளை நிராகரித்தார். அதே சமயத்தில் மொராக்கோ சிக்கலைச் சர்வதேச மாநாட்டில் முடிவு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார். அநாவசியமான ஜெர்மன் தலையீட்டினால் ஃபிரான்ஸ் மிகவும் கொதிப்படைந்திருந்தது. ஃபிரெஞ்சு வெளிவிவகார அமைச்சரான டெல்காஸ் ஜெர்மனிமீது போர்தொடுக்க வேண்டுமென்று பதறினார். அமெரிக்கர்களின் ஆலோசனையின்படி மொராக்கோ சிக்கல் சர்வதேச மாநாட்டில் தான் தீர்க்கப்பட வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தப்படவே ஃபிரெஞ்சு அமைச்சர் டெல்காஸ் இராஜினாமா செய்தார். அதற்குப் பிறகு ஒரு சர்வதேச மாநாடு ஸ்பெயினில் உள்ள அல்ஜிசிராஸ் (Algeciras) என்ற ஒரு நகரில் கூட்டப்பெற்றது.

மொராக்கோவின் சுதந்தரம் அந்த மாநாட்டில் அங்கீகரிக்கப் பெற்றது. அதே சமயத்தில் ஃபிரான்சின் முக்கியமான கோரிக்கை

களும் ஏற்றுக்கொள்ளப் பெற்றன. மொராக்கோ துறைமுகப் பட்டினங்களில் ஃபிரான்சின் போலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தவும், மொராக்கோவிலுள்ள ஃபிரெஞ்சுப் பாங்கியை நிர்வகிக்கவும் ஃபிரான்சிற்கு உரிமை தரப்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளில் ஆஸ்டிரியா மட்டும்தான் ஜெர்மனிக்குச் சாதகமாக இருந்தது. மற்ற நாடுகளான பிரிட்டன், இத்தாலி, ரஷ்யா, ஸ்பெயின், அமெரிக்க ஐக்கியநாடு ஃபிரான்சிற்குத்தான் சாதகமாக இருந்தன. கெய்சர் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறுக இந்த மாநாட்டில் நடந்தது. பிரிட்டன், ஃபிரான்ஸ் மேலும் தங்களுடைய உறவுகளைப் பலப்படுத்திக்கொண்டன.

இரண்டாவது நெருக்கடி 1908-ல் பால்கன் நாடுகளில் ஏற்பட்டது. போஸ்னியா, ஹெர்ஸிகோவினு ஆகிய பால்கன் நாடுகளை ஆஸ்டிரியா ஆக்கிரமித்துக்கொண்டது. இந்த ஆக்கிர மிப்பு ஸெர்பியாவிற்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ரஷ்யாவின் ஆதரவை எதிர்பார்த்து, ஸெர்பியா ஆஸ்டிரியாவின்மீது போர் தொடுக்கப் போவதாகப் பயமுறுத்திக்கொண்டிருந்தது. கெய்சர் ரஷ்யாவிற்கு அளித்த எச்சரிக்கையில் ரஷ்யா ஸெர்பியாவிற்குச் சாதகமாகப் போரில் இறங்கினுல் ஆஸ்டிரியாவிற்குக் கெய்சர் உதவப் போவதாக மிகத் தெளிவாகக் கூறினுர். ரஷ்யா அப்பொழுது போர் செய்யத் தயாராக இல்லை. ரஷ்யாவின் உதவியில்லாது ஸெர்பியா போரில் வெற்றி காணமுடியாது என்று தெரிந்திருந்த தால், பேசாமல் இருந்துவிட்டது. இவ்விதமாக ஒரு நெருக்கடி தவிர்க்கப்பெற்றது.

மீண்டும் மொராக்கோவில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. மொராக்கோவில் உள்ள ஐரோப்பியர்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஃபிரான்ஸ் படைகளை அனுப்பி பெஸ் நகரைப் பிடிக்க முயன்றது. அதனுல் ஜெர்மனியின் வர்த்தகம் மொராக்கோவில் பாதிக்கப்படுவதாக அறிவித்து ஜெர்மன் யுத்தக் கப்பலான "பேன்தர்" என்பதை மொராக்கோவின் துறைமுகப்பட்டினமான "அகாடிர்" என்ற நகருக்கு அனுப்பிவைத்தார். அகாடிரை ஜெர்மனி ஆக்கிரமித்துக்கொண்டு, அதை ஜெர்மனியின் கடற் படைத் தளமாகப் பயன்படுத்தலாம் என்ற பயம் பிரிட்டனுக்கும், ஃபிரான்சிற்கும் ஏற்பட்டது. அதனுல் பிரிட்டன் இந்த ஆக்கிர மிப்பை அனுமதிக்க முடியாது என்று கூறியது. பிறகு கெய்சருக்கு ஃபிரெஞ்சுக் காங்கோவில் உள்ள ஒரு பகுதியைத் தருவதாக வாக்களித்த பிறகு கெய்சர், மொராக்கோவின்மீது ஃபிரான்ஸ் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதித்தார். இம்முறையும் போர் தவிர்க்கப்பட்டது.

ஆனால், அடுத்த முறையில் ஏற்பட்ட சிக்கல் போருக்கு வழி வகுத்துவிட்டது. ஆஸ்டிரியப் பட்டத்து இளவரசனான ஆர்ச்டியூக் ஃபிரான்ஸ்சிஸ் பெர்டினண்ட் என்பவர் போஸ்னியாவின் தலைநகரான சராஜிவா என்ற நகரத்தில் 1914 ஜூன் 28-ம் தேதியன்று கொலைசெய்யப்பட்டார். செர்பியாவின் தூண்டுதலால்தான் இந்தக் கொலை செய்யப்பட்டது என்று ஆஸ்டிரியா செர்பியாமீது குற்றம் சாட்டியது. குற்றச்சாட்டிற்குத் தக்க பதில் அளிக்கவில்லை என்ற காரணத்தால் ஆஸ்டிரியா செர்பியாமீது போர்ப் பிரகடனம் செய்தது. இந்தப் போர் பால்கன் நாடுகளுடன் நின்றுவிடும் என்று ஜெர்மனியும் ஆஸ்டிரியாவும் நினைத்தன. மேலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பால்கன் நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு ஆஸ்டிரியாவும், ஜெர்மனியும் திட்டமிட்டன. ஆனால், இந்த நாடுகள் நினைத்ததற்கு மாறுகவே எல்லாம் நிகழ்ந்தன. ஜெர்மனியின் எச்சரிக்கையைப் புறக்கணித்து ரஷ்யா செர்பியாவிற்குச் சாதகமாகப் போர்செய்ய முடிவுசெய்தது. அதனால் ஃபிரான்சின்மீது ஜெர்மனி போர் தொடுத்தது. இத்தாலி ஆரம்பக் கட்டத்தில் நடுநிலைமை வகித்தது. பெல்ஜியம் நாட்டின் நடுநிலைமை பாதிக்கப்பட்டதால், பிரிட்டன், ஜெர்மன்மீது போர்த் தொடுத்தது. கெய்சர் இப்படியெல்லாம் நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர் உண்மையில் இவ்வளவு பெரிய போரை விரும்பவே இல்லை. ஆனால், கெய்சரின் தவறுதல்களால்தான் இந்தப் போர் ஏற்பட்டது. இறுதியில் இந்தத் தவறுதல்களுக்காகக் கெய்சர் தம்முடைய பேரரசையும், பட்டத்தையும் துறந்து உயிருக்குப் பயந்து ஹாலந்து நாட்டிற்குச் சென்றுவிட்டார். அவர் இறக்கும் வரையிலும் அங்கேயே வசித்துவந்தார்.

13. முதல் உலகப் போர்

(1914–1918)

ஐரோப்பிய நாடுகளிடையே போட்டியும் பொறுமையும் அதிகமாக வளர்ந்துவிட்டன. இதற்கு முக்கியக் காரணமாக இருந்தது ஜெர்மானிய நாட்டின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியேயாகும். 1870-க்குப் பிறகு ஜெர்மானியத் தேசிய உணர்ச்சி அதிக வேகமாக வளர்ச்சி அடைந்தது. ஃபிரான்ஸ் 1870-ல் ஜெர்மனியிடம் தோற்று விட்ட பிறகு, ஃபிரெஞ்சு மக்கள் ஜெர்மனிமீது போர்த் தொடுக்கும் வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஜெர் மனியின் சான்சலராக இருந்த பிஸ்மார்க் இதை நன்குணர்ந் திருந்தார். அதனால் ஜெர்மனியைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளில் அவர் அக்கரை காட்டினார். தனியாகப் பிரான்ஸ் ஜெர்மனியைத் தாக்கினால் அதனால் பேராபத்து ஏற்படாது என்றும், ஆனால் அது மற்ற வல்லரசுகளுடன் சேர்ந்துகொண்டு தாக்கினால் ஜெர்மனியின் சீர்குலைவு உறுதி என்பதை நன்குணர்ந்திருந்தார். அதனால், பிஸ்மார்க் ஜெர்மனியுடன் நட்புறவு கொள்ள மற்ற வல்லரசுகளை வலியுறுத்திக்கொண்டிருந்தார்.

ஃபிரெஞ்சு மக்கள் புரட்சி மனப்பான்மை கொண்டவர் களாவர். அவர்கள் அடிக்கடி புரட்சி செய்து அந்த நாட்டின் முடியாட்சியைக் கவிழ்த்துக் குடியரசை நிறுவியிருந்தனர். மீண்டும் ஐரோப்பிய நாடுகளில் எங்குக் குடியாட்சிக் கருத்துகள் பரவி விடுமோ என்று பேரரசர்கள் பயந்தனர். இக் கருத்துகளை ஜெர்மனியில் பரவவிடாது தடுக்க வேண்டும் என்ற பழைய முடியாட்சிக் கொள்கையில் ஊறிப்போனவர் பிஸ்மார்க். அதனால் பிஸ்மார்க், மற்ற முடியாட்சி நாடுகளான ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளின் அரசர்களுடன் நட்புறவு வைத்துக்கொள்ளவும், இந்த நாட்டு அரசர்கள் ஃபிரான்சுடன் நட்புறவு வைத்துக் கொள்ளாமல் கண்காணித்தும் வந்தார். அதற்கேற்பச் சூழ்நிலையை யும் உருவாக்கினார். இந்த எச்சரிக்கை எதிர்பார்த்தப் பயனை

அளித்தது. ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளின் மூன்று பேரரசர்களும் "பேரரசர்களது உடன்படிக்கை" (The Three Emperor's League) ஒன்றை 1872-ல் செய்துகொண்டனர். இந்த உடன்படிக்கை வெறும் ஏட்டளவில் நின்றுவிட்டது. ரஷ்யா எந்தச் சமயத்திலும் மாறும் என்ற அவநம்பிக்கை பிஸ்மார்க்கிற்கு ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தது கீழைச் சிக்கலில், ரஷ்யாவும் ஆஸ்டிரியாவும் ஆதிக்கப் போட்டி நடத்திக்கொண்டே வருவதாகும். அந்தப் போட்டியைப் பயன் படுத்திப் பிஸ்மார்க் ரஷ்யாவை விட்டுவிட்டுத் தனியாக ஆஸ்டிரியாவுடன் "இரண்டு பேரரசர்கள் உடன்படிக்கை" (Dual-Alliance) ஒன்றை 1879-ல் செய்துகொண்டார். இதன் காரணமாக 1887-ல் மூன்று பேரரசர்களது உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமல் கைவிடப்பட்டது. ஆனால், அதே சமயத்தில் பிஸ்மார்க் ரஷ்யாவின் உறவைத் துண்டித்துக்கொள்ள விரும்பவில்லை. அதனால் ஓர் இரகசிய ஒப்பந்தத்தை அவர் ரஷ்யாவுடன் செய்துகொண்டார். 1890-ல் பிஸ்மார்க் சான்சலர் பதவியிலிருந்து விலகிக்கொண்ட பிறகு, இந்த இரகசிய உடன்படிக்கை புதுப்பிக்கப்படவில்லை. சந்தேகம் கொண்ட ரஷ்யா, மெதுவாக ஃபிரான்ஸ் நாட்டுடன் உறவு கொள்ள ஆரம்பித்தது. ஆனால், ரஷ்யாவைவிட இத்தாலியின் உறவு உறுதியாக இருக்குமென்று 1882-ல் "முக்கூட்டு உடன்படிக்கை" (Triple Alliance) ஜெர்மனி, ஆஸ்டிரியா, இத்தாலி ஆகிய நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்டது. போர் ஆரம்பமாகும் சமயத்தில் இந்த உடன்படிக்கையிலிருந்து இத்தாலி விலகிக்கொண்டது.

ஜெர்மனியின் ஆதரவால் செய்துகொள்ளப்பட்ட முக்கூட்டு உடன்படிக்கைக்கு எதிராக, ஃபிரான்சின் முயற்சியால் ரஷ்யாவுடன் 1894-ல் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. ஏற்கனவே காணப் பெற்ற ஃபிரான்சின் குடியரசுக் கொள்கைகளும், ரஷ்யாவின் எதேச்சாதிகார முடியாட்சிக் கொள்கைகளும் இந்த உடன்படிக்கைக்கு முட்டுக்கட்டையாக இல்லாதிருந்தது விந்தையே. இச் சமயத்தில் ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் வாணிகத்திலும், தொழில் உற்பத்தியிலும் காலனி பிடிப்பதிலும் பலத்த போட்டி ஏற்பட்டது. இதனால் பிரிட்டன் தன்னுடைய ஏகபோக உரிமைகளைப் படிப்படியாக இழந்துவிட்டது. இதற்கு மேலாக, ஜெர்மனியின் கப்பற்படையும் பெருகிவிட்டது. அதனால் பிரிட்டன் ஃபிரான்சுடன் நட்புறவு கொள்ளவேண்டியநிலை ஏற்பட்டது. பரம்பரையாகப் பிரிட்டனுக்கும் ஃபிரான்சிற்கும் பகைமை இருந்து வந்திருக்கிறது. ஆனால், ஜெர்மனியின் ஆபத்தே இவ்விரு நாடுகளையும் ஒன்றுசேரச் செய்தது. இதற்குத் தகுந்தவாறு, அகேடிர்

நிகழ்ச்சிக்குப் பிறகு 1911-ல் பிரிட்டன் மொராக்கோவில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் நீடிப்பதற்கு உதவியாக இருந்தது. மொராக்கோ சிக்கலில் தலையிட்டுப் பயன்பெறக் கருதியிருந்த ஜெர்மனிக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பிரிட்டன் ஃபிரான்ஸ் உறவு நீடித்துவிட்டது. அதுமட்டுமல்லாது ரஷ்யாவும் இந்தக் கோஷ்டியில் சேர்ந்து கொண்டது. 1907-ல் இந்த மூன்று நாடுகளும் ஓர் இரகசிய உடன்படிக்கை (Triple Entente) செய்துகொண்டன.

இவ்விதமான இரகசிய உறவுகள் காரணமாகவும், அதனால் ஏற்பட்ட வெல்திறன்களாலும் ஐரோப்பாவில் அமைதி குன்றி, எங்குப் பார்க்கிலும் போர்ப் பேச்சே அடிப்பட்டுக் கொண்டிருந்தது. முதல் உலகப் போர் ஏற்படுவதற்கு "வெல்திறன் முறைகளே" அளவுக்குமீறி பயன்படுத்தப்பெற்று, கோஷ்டி பிளவுகளே ஏற்படுத்தவும் காரணமாக அமைந்தன. ஐரோப்பாவில் தோன்றிய இரு கோஷ்டிகளிடையே பூசலும் பொருமையும் அவநம்பிக்கையும் படிப்படியாக வளர்ந்து வந்தன. மேலும், இந்த நாடுகளிடையே வெறுப்புப் பிரச்சாரம் வெகு விரைவில் பத்திரிகைகள் மூலமாகவும், வானொலி மூலமாகவும் பரவிக் கொண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் போர் பீதி, கலக்கம் ஏற்பட்டிருந்தன. அதனால் வல்லரசுகள் யுத்தத் தளவாடங்களே அதிகரிப்பதில் ஈடுபட்டன. கட்டாய இராணுவச் சேவையைக்கொண்டுவந்தனர். இந்தப் போர்க் குமுறல் மக்களிடையே பழகிப்போய்விட்டது. அதனால் அவர்கள் போரின் தீமைகளைப் பொருட்படுத்தாது போர் எப்பொழுது ஏற்படும் என்ற நிலையில் இருந்தனர். போர் மிகவும் அவசியம் தான் என்ற பொய்யான சூழ்நிலை உருவாக்கிவிட்டதால் போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

1914 ஜூன் 28-ம் தேதியன்று ஆஸ்டிரியப் பட்டத்து இளவரசன் ஃபிரான்ஸ் பெர்டினன்டும் (Franz Feridnand) அவரது மனைவியும் போஸ்னியாவின் தலைநகரமான சரோஜிவோ என்ற இடத்தில் ஒரு ஸெர்பியனால் கொல்லப்பட்டனர். ஸெர்பியர்கள்மீது ஆஸ்டிரியர்கள் ஆதிக்கம் செலுத்தியதால் இவ்விதமான ஒரு சதித்திட்டம் தீட்டப்பெற்றது. இந்தச் சதித்திட்டத்தை ஸெர்பிய அரசாங்கம் முன் கூட்டியே அறிந்திருந்தும், இக் கொலையைத் தடுக்காது விட்டது பெரிய போரையே மூளச்செய்துவிட்டது. 48 மணி நேரத்திற்குள் கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஆஸ்டிரிய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவிற்குத் தக்க பதிலை ஸெர்பிய அரசாங்கம் அளிக்கவில்லை. அதனால் ஆத்திர

மடைந்த ஆஸ்டிரியா ஜெர்மானியப் பேரரசன் எவ்வளவு சொல்லி யும் கேட்காது ஸெர்பியாவின்மீது 1914 ஜூலை 28-ம் தேதியன்று போர்ப் பிரகடனம் செய்தது. இதைக் கேள்வியுற்ற ரஷ்யா ஸெர்பியா விற்கு உதவி செய்யும் பொருட்டு, அடுத்த நாளே ஆஸ்டிரியாவின் மீது போர்த்தொடுத்தது. அப்பொழுது பிரிட்டனில் வெளிநாட்டு அமைச்சராக இருந்த சர் எட்வார்ட் கிரேயும் ஜெர்மன் பிரதமரான பெத்மேன் ஹால்வெக் என்பவரும் ரஷ்யாவின் ஆத்திரமான செயலை நிறுத்தும்படியாகக் கேட்டும் பயனளிக்காது போய் விட்டது. மேலும் போர் பல நாடுகளுக்குப் பரவாது, ஒரு குறிப் பிட்ட பகுதியில் நிகழ்ந்தால் போதுமானது என்ற அறிவுரையும் ரஷ்யா ஏற்க மறுத்தது. அதனால் 1914 ஆகஸ்டு முதல் தேதியன்று ஜெர்மனி ரஷ்யாவின்மீது போர்ப் பிரகடனம் செய்தது.

போரின் போக்கு : ஜெர்மானியப் படைகளின் வெற்றி

ரஷ்யர்கள் கிழக்குப் போர்க்களத்தில் தீவிரமாகக் கலந்து கொள்வதற்கு முன்னர் ஜெர்மானியப் படைகள் பெல்ஜியத்தை ஆக்கிரமித்து மேலும் ஃபிரான்ஸ் நாட்டையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று கெய்சர் திட்டமிட்டிருந்தார். அதனால் பெரும் பான்மையான படைகளைக் கிழக்குப் போர் முனையிலிருந்து அவசர மாகப் பின்வாங்கி, பெல்ஜியத்தின்மீது கடும் தாக்குதலை நடத்தினர். பெல்ஜியம் மக்கள், தங்களது நடுநிலைமை பறிக்கப்பட்டதென்று வெறும் கூச்சலிடுவார்களே தவிர, அவர்களால் பெரிய போர் செய்ய முடியாதென்று கெய்சர் எதிர்பார்த்தார். ஆனால், அவர் எதிர்பார்த்ததற்கு எதிராகப் பெல்ஜியம் படைகள் கடுமையாகப் போர் புரிந்தன. லீஜ் கோட்டையைச் சுமார் நாற்பத்தெட்டு மணி நேரம் காத்துப் போரிட்ட பிறகுதான் அதைச் சரண்டையச் செய் தனர். ஜெர்மானியப் படை தளபதி வான் கிளக் (Von Kluck) என்பவர் ஆகஸ்ட் 20-ம் தேதியன்று பிரஸல்ஸ் நகரைப் பிடித்தார். அதற்குப் பிறகு பெல்ஜியம் சரணடைந்தது. ஆயிரக்கணக்கான பெல்ஜிய மக்கள் அகதிகளாக இங்கிலாந்திற்குச் சென்றனர்.

இதற்குப் பிறகு, ஃபிரான்ஸ் நாட்டின் வடமேற்குப் பகுதியில் ஜெர்மானியப் படைகள் முன்னேறின. ஃபிரெஞ்சுப் பகுதிகளின் முக்கியமான பகுதிகள் பெல்ஜியத்தின் தென்கிழக்கே, தளபதி ஜாப்ரேயின் (Joffre) தலைமையில் நன்கு பாதுகாக்கப்பட்டன. ஆனால், ஜெர்மானியப் படைகள் ஃபிரெஞ்சு–பெல்ஜிய எல்லை யோரத்தில் முன்னேறி வந்ததால், பெரும் பகுதியை எதிர்ப்பின்றியே எளிதாகக் கைப்பற்ற முடிந்தன. ஃபிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியரை லொரேய்ன், லக்சம்பர்க் ஆகிய இடங்களில் கடுமையாக எதித்துப் போரிட்டும் பயன் அளிக்கவில்லை.

ஜெர்மானியர்களின் திட்டமும் எந்த முக்கிய நகரத்தையும் கைப் பற்றுவதைவிட, ஃபிரெஞ்சுப் படைகளை அழிப்பதே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால்தான் பாரிஸ் நகரத் திற்குள் பிரவேசிக்காதவாறு அந்த நகரைச் சுற்றிலும் உள்ள படைகளை ஒழிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஓரளவிற்குத்தான், இந்தத் திட்டத்தில் ஜெர்மானியர்கள் வெற்றி பெற்றனர். ஏனெனில், அதற்குள் ஃபிரெஞ்சுப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும் பாரிஸ் நகரை நோக்கி விரைந்தன. மார்ன் நதிக்கரையில் ஜெர்மானியர்களின் மூன்று படைப் பகுதிகள் வந்து குவிந்தன. அங்கிருந்து பாரிஸ் நகரத்திற்கு 20 மைல் தூரம்தான் இருந்தது. ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பாரிஸ் நகரை விட்டு ஓடினர். ஃபிரெஞ்சுத் தலைநகரம்கூடப் பாரிஸிலிருந்து, போர்டியோ நகருக்கு மாற்றப்பட்டது. இரு தரப்பினருக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டது. ஆங்கிலப் படைகளும், ஃபிரெஞ்சுப் படைகளும் கடும் தாக்குதல்களுக்குள்ளாகின. அந்தப் போரில் மட்டும் ஆங்கிலேயர்கள் காயமடைந்தோரும், சேதமடைந்தோரும் சுமார் 15,000 பேர் என மதிப்பிடப்படுகிறது. இவ்வளவு சேதங்களுக்கிடையே அவர்களது எதிர்ப்பு மிகவும் போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தது. அவர்கள் ஜெர்மானி யரின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் கேந்திர மான இடத்தில் தங்களது துருப்புகளை வைத்துக்கொண்டனர். ஃபிரெஞ்சுப் படைகளை அறவே அழிப்பதென்ற திட்டம் கைகூட வில்லை.

பல்வேறு படைப் பகுதிகளை அணிவகுத்துச் சென்ற ஜெர்மானியத் தளபதிகளிடையே தொடர்பு ஏற்படாமலேயே இருந்ததால்தான், அவர்களுடைய திட்டம் நிறைவேற முடியாமல் போய்விட்டது. தவிர, அவர்களது படைத் தலைவரான வான் மால்ட்க் இராணுவ நிர்வாகத்தைக் காலத்திற்கேற்றவாறு மாற்றிக் கொள்ளாததும் ஒரு காரணம். ஃபிரெஞ்சுத் தளபதி ஜாப்ரே, இந்தச் சீர்குலைவை நன்கு பயன்படுத்திக்கொண்டு அவரது படைகளைச் சீரமைத்துக்கொண்டதுமின்றி கேந்திரப் பகுதிகளில் படைகளை நிறுத்தி வைத்துக்கொண்டார். செப்டம்பர் 6–13 தேதி வரை மார்ன் நதிக்கரையில் நிகழ்ந்த போரில் ஜெர்மானியர்களின் முன்னேற்றம் மிகவும் தடைப்பட்டது. இதன் காரணமாக வான் மால்ட்க் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக வான் பால்கன் ஹேய்ன் நியமிக்கப்பெற்றார். இவருடைய திட்டப்படி, "ஆங்கிலேயக் கால்வாயில்" உள்ள துறைமுகப்பட்டினங்களான, டங்கிர்க், கலே, ஆஸ்டெண்டு ஆகிய நகரங்களைக் கைப்பற்றி ஃபிரான்சிற்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்டிருந்த நெருங்கியத்

தொடர்பையும் போக்குவரத்தையும் துண்டித்துவிட வேண்டு மென்பதாகும். இந்தத் திட்டத்தின் முதல் படியாக ஜெர்மானியப் படைகள் ஆன்ட்வர்ப்பைப் பிடித்துக்கொண்டன. நேசப் படைகள் ஜெர்மானியப் படைகளை முன்னேறவிடாதபடி செய்வதற்குக் கடலி லிருந்து சோம் நதி வரையிலும் எதிர்ப்புக் களங்களை அமைத்துக் கொண்டனர். யெப்ரஸ் (Ypres), ஆர்மின்டைர்ஸ் (Armen Tieres), அராஸ் (Arras) ஆகிய நகரங்களை ஜெர்மானியர் வசம் சிக்காத வாறு நேசப் படைகள் பாதுகாத்துக்கொண்டன. யெப்ரஸில் நிகழ்ந்த முதல் போர் மிகவும் கொடுமையாக இருந்தது. பல ஆங்கிலேயப் போர் வீரர்கள் இந்தப் போரில் இறந்துவிட்டனர். இந்தப் போரில் மட்டும் ஆங்கிலேயப் படைகளில் சேதமடைந்தவர் களும், காயமடைந்தவர்களும், சுமார் 50,000 பேர் என மதிப்பிடப் படுகிறது. இவ்வளவு கொடுமையானத் தாக்குதலை நடத்தியும் கூட ஜெர்மானியப் படைகள் அந்த நகரத்தைப் பிடிக்கவோ அல்லது அதற்கு அப்புறமோ போக முடியவில்லை. நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த போர் ஒரு மந்த நிலைக்கு வந்துவிட்டது. நேசப் படைகள் சுற்றிலும் அகழிகளை வெட்டிக்கொண்டு, ஜெர்மானியர் ஊடுருவிப் போகாதவாறு பாதுகாத்துக்கொண்டனர். இந்த அகழிகள் சுவிட்சர்லாந்திலிருந்து கடற்கரை வரையிலும் வெட்டப் பட்டிருந்தன. இவ்விதமான போர் ஒரு புதுமையான முறை யாகும். இதை ஜெர்மானியர்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த "அகழிப் போர் முறை" (The Trench Warfare) நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்தப் போர்களின் விளைவாக ஜெர்மானியர்கள் ஃபிரான்ஸ் நாட்டை எதிர்பார்த்தபடி அவ்வளவு விரைவாகப் பிடித்துவிட முடியவில்லை.

கிழக்குப் போர் முனையில் வான்மால்ட்க் எதிர்பார்த்ததற்கு முன்னரே, ரஷ்யர்கள் தீவிரமாகப் போரில் கலந்துகொண்டனர். ஆகஸ்டு மாதத்தில் கிழக்குப் பிரஷ்யா வரையிலும் அவர்கள் முன்னேறிவிட்டனர். ரஷ்யர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு ஜெர்மானியத் தளபதியான வான் ஹிண்டன்பர்க்கும் மற்றும் ஒரு தளபதியான லூடென்டார்ப் என்பவரும் நியமிக்கப்பட்டனர். அவர்களுடைய திறமையால் ரஷ்யத் துருப்புகள் தோல்வி மேல் தோல்வி கண்டன. தளபதி லுடென்டார்ப் ரஷ்யப் படைகளைக் கிழக்குப் பிரஷ்யாவில் சுற்றி வளைத்துக்கொண்டார். அவர் வசம் 120,000 கைதிகள் பிடிப்பட்டனர். கிழக்குப் பிரஷ்யாவிலிருந்து ரஷ்யர்களை விரட்டிவிட்டு, ரஷ்யாவுக்குச் சொந்தமான போலந்துப் பகுதியில், வான் ஹிண்டன்பர்க் தாக்குதலை நடத்தினர். இந்தப் போரிலும் ரஷ்யப் படையில் காயமடைந்தவர்களும், சேதமடைந்த வர்களும் சுமார் 300,000 பேர் என்று மதிப்பிடப்படுகிறது.

செர்பியாவைத் தாக்கிய ஆஸ்டிரியப் படைகள் வெற்றி பெறவில்லை. அவர்கள் பின்வாங்கத் தொடங்கினர். ரஷ்யத் துருப்புகள் ஆஸ்டிரியாவிற்குச் சொந்தமான போலந்து பகுதி அல்லது கேலிஷியா (Galicia)வின்மீது படையெடுத்து லெம்பர்க் என்ற பெரிய நகரத்தைக் கைப்பற்றினர். தக்கச் சமயத்தில் ஜெர்மானியர் ஆஸ்டிரியாவிற்கு உதவியாக வந்தனர். இல்லாவிடில் ஆஸ்டிரியாவின் மதிப்பு மிகவும் தாழ்வடைந்திருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஜெர்மனியின் பக்கம் துருக்கியும் சேர்ந்துகொண்டது. துருக்கி பிரிட்டன்மீதும், அதனுடைய நேச நாடுமீதும் போர்ப் பிரகடனம் செய்தது. துருக்கியினுடைய போர்ப் பிரகடனத்தால் எகிப்திற்கு அதிக ஆபத்து விளையக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உடனடியாகப் போர்க்காலம் முடியும் வரையிலும் எகிப்து பிரிட்டனின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்பட்டது. ரஷ்யா இச் சமயத்தில் மத்தியத் தரைக் கடலில் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ள முடியாதவாறு துண்டிக்கப்பட்டு விட்டது. துருக்கியினால், இந்தியாவிற்கும்கூட ஆபத்து நேரிடுமோ என்று பயந்தனர். அதனால்தான் துருக்கிக்குச் சொந்தமான பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகிய பகுதிகளின் மீது பிரிட்டன் தாக்கியது.

ஃபிரெஞ்சு–ஆங்கிலேயத் துருப்புகள் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஜெர்மனிக்குச் சொந்தமான டோகாலாண்ட், கேமரூன்ஸ் ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டன. தென் ஆப்பிரிக்கத் தளபதிகள் போதா (Botha), ஸ்மட்ஸ் (Smuts) ஆகியோர் ஜெர்மன், தென்மேற்கு ஆப்பிரிக்காவைக் கைப்பற்றினர்.

1902-ல் செய்துகொண்ட ஆங்கிலோ–ஜப்பானிய உடன்படிக்கையின்படி ஜப்பானும் நேச நாடுகளுடன் சேர்ந்து கொண்டது. அதனால், சீனாவில் உள்ள ஜெர்மன் காலனியான கியா-சௌ (Kia-Chaw) என்ற பகுதியையும், மற்றும் பசுபிக்கில் உள்ள பல ஜெர்மன் தீவுகளையும் ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. பிரிட்டனுக்கு உதவியாக நியுசிலந்தும், ஆஸ்திரேலியாவும் முறையே ஸாமோ (Samoa) ஜெர்மன் நியுகினியா ஆகிய தீவுகளையும் கைப்பற்றின. கிழக்கு ஆப்பிரிக்காவில் மட்டும் ஜெர்மானியர் 1917 வரை அப் பகுதியைப் பாதுகாத்தனர்.

1915 மே மாதத்தில் ஜெர்மானியப் படைகள் போலந்திற்குள் நுழைந்தன. அங்கிருந்து ரஷ்யத் துருப்புகளை விரட்டி அடித்தன. ஜூன் மாதத்தில் கேலிஷியா முழுவதும் ஜெர்மானியர் வசமானது. ஆகஸ்டு 4-ம் தேதியன்று போலந்து தலைநகரமான வார்ஸா

சரணடைந்தது. அந்த மாதக் கடைசியில் மற்றுமொரு கேந்திர நகரமான பிரட்ஸ் லிட்டோவஸ்க் வீழ்ந்தது. அதற்குப் பிறகு லித்துவேனியா (Lithvania) பகுதியும் கைப்பற்றப்பட்டது. ரஷ்யப் படைகள் ஜெர்மானிய, ஆஸ்டிரியப் படைகளுக்கு முன் எதிர்த்துச் சண்டையிட முடியாது பின்வாங்கினர். மேலும், ரஷ்யப் படைக்குப் பலத்த சேதமும் ஏற்பட்டது. இச் சமயத்தில் ரஷ்ய ஜார், அரசியின் பேச்சைக் கேட்டு இதுவரையிலும் தளபதியாக இருந்த கிராண்ட் டியூக் நிக்கோலஸ் (Grand Duke Nicholas) என்பவரைப் பதவியிலிருந்து நீக்கினர். அதனால் நிலைமை இன்னும் சீர்குலைய ஆரம்பித்தது. அரசரே தளபதி பொறுப்பை ஏற்றுப் படைகளை அணிவகுத்துச் சென்றார். ரஷ்ய அரசி அப்பொழுது ரஷ்யாவை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த ரஸ்புடின் என்ற ஜால வித்தைக்காரரின் கைப்பாவையாக இருந்தாள். அவள் ரஷ்ய அரசியலில் அதிகமாகத் தலையிட்டாள். ரஸ்புடினும், அரசியும் ரஷ்ய முடியாட்சி வீழ்ந்ததற்கு முக்கியக் காரணமாக இருந்தனர். கிழக்குப் போர் முனையில் போரிட்ட ரஷ்யப் படை வீரர்கள் பெரும் பாலும் துப்பாக்கியைப் பார்க்காதவர்களேயாவர். நான்கு வாரப் பயிற்சிக்குப் பிறகு அவர்கள் போர்க்களத்திற்கு அனுப்பப் பட்டனர். போர் வீரர்கள், போர்க் கருவிகள் இல்லாது போர் முனைக்கு அனுப்பப்பட்டனர். இறந்தவர்களிடமிருந்தோ அல்லது காயமடைந்தவர்களிடமிருந்தோ துப்பாக்கிகளை எடுத்துச் சண்டை செய்யவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால்தான் ரஷ்ய இராணுவ அமைப்பு மிகவும் சீர்குலைந்தது. ஜெர்மானியர்களும் மிக விரைவில் ரஷ்யப் பகுதிகளைக் கைப் பற்றினர். திறமையற்ற ரஷ்யப் படைகளுக்கு உதவி செய்யும் எண்ணம் நேச நாடுகளுக்கு இருந்தபோதிலும், அவர்களால் உதவி செய்ய முடியாத நிலையும் அப்பொழுது இருந்தது. ஏனெனில், மேற்குப் போர் முனையில் ஃபிரெஞ்சு, பிரிட்டிஷ் படைகள் கடும் தாக்குதல்களுக்குள்ளாகின. இருப்பினும் ரஷ்யர் வைப் பாதுகாப்பதற்காகப் பிரிட்டிஷ் படைகள் துருக்கியின்மீது தாக்குதலை நடத்தி, அங்கிருந்து ரஷ்யாவிற்கு உதவலாம் என்று பிரிட்டன் டார்டனல்ஸ்மீது தாக்குதலை நடத்தியது.

கேலிபோலி (Gallipoli) என்ற இடத்தில் நிகழ்ந்த சண்டையில் பிரிட்டிஷ் துருப்புகள் சர் ஐயான் ஹாமில்டன் (Sir Ian Hamilton) என்பவரின் தலைமையில் மிகவும் வீரமாகப் போர் புரிந்தும்கூட வெற்றி காண முடியவில்லை. அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சுவ்லா குடாவில் (Suvla Bay) பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கின. மிகவும் துணிச்சலுடன் உயிர் சேதத்தையும் மதிக்காது மலைகள் மீதும், குன்றுகள்மீதும் படைகளை நடத்திச் சென்றும்கூட இந்த

முறையும் வெற்றி காண முடியவில்லை. இப் படையெடுப்பில் பல ஆங்கிலேய வீரர்கள் உயிர் துறந்தனர். அவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ரூபர்ட்புரூக் என்ற கவிஞருமாவர்.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் இத்தாலி ஆஸ்டிரியாமீது போர் தொடுத்தது. ஆஸ்டிரியாமீது இத்தாலிப் போர் தொடுக்காததற்கு முன்னர் ஏப்ரல் 1915-ல் இத்தாலி, ஃபிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் "இலண்டன் உடன்படிக்கை" ஒன்றைச் செய்துகொண்டன. அதன்படி நேச நாடுகள் போரில் வெற்றி அடைந்த பிறகு, இத்தாலியின் போர்ச் சேவைகளுக்காக ஆல்ப்ஸ் மலையிலுள்ள பிரன்னர் கணவாய் (Brenner Pass), இஸ்டிரியா தீபகற்பம் (Peninsula of Istria), டால்மேஷியன் கரையோரம் (Dalmatian Coast Line) ஆகிய பகுதிகளைத் தருவதாக முடிவு செய்திருந்தனர்.

இத்தாலிப் போரில் இறங்கிய பிறகு, இத்தாலி, ஆஸ்டிரியா, எல்லையோரத்தில் மற்றுமொரு போர்முனை ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி ஆஷ்டிரியா உடனடியாக வீழ்ந்துவிடும் என்று எதிர் பார்த்தனர். ஆனால், அவ்விதமாக நிகழவில்லை. ஆஸ்டிரியா அதன் ஆதிக்கத்திலுள்ள ஸ்லாவ் துருப்புகளை இத்தாலிமீது தாக்க அனுப்பியது. ரஷ்யர்கள்மீது போரிட மறுத்த அந்த ஸ்லாவ் துருப்புகள் இத்தாலிமீது தீவிரமாகத் தாக்கின.

நேச நாடுகள் இன்னும் பரந்த மனப்பான்மையுடன் நடந்திருந்தால் கிரீஸ் நாட்டையும் அவர்கள் பக்கம் சேர்த்திருக்கலாம். கிரீஸ் பிரதமர் வெனிஸிலாஸ் (Venezelos) நேச நாடுகள் பக்கம் தான் சேரவேண்டுமென்று பிடிவாதமாக இருந்தார். அவர் துணைக் கொண்டுதான் சாலனிக்காவில் (Salonika) நேச நாடுகளின் துருப்புகள் வந்து குவிந்தன. இதற்காகக் கிரீஸ் அரசன் கான்ஸ்டன்டைன் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். கிரீஸ் அரசன், எந்தக் காரணத்தாலும் நடுநிலைமையை விட்டுவிடக் கூடாது என்ற கொள்கையுடையவர். நடுநிலைமையை ஆதரித்த போதிலும், ஜெர்மனியின் பக்கம்தான் அவருடைய அனுதாபம் இருந்தது. ஆனால், பிரிட்டனின் கடற்படை ஆதிக்கத்திற்குப் பயந்து ஜெர்மனியின் பக்கம் வெளிப்படையாகக் கிரீஸ் சேராமல் இருந்தது. ஆனால், பல்கேரியா ஜெர்மனியுடன் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டு அதன் பக்கமே சேர்ந்து கொண்டது. முதல் இரண்டு ஆண்டுகளில் ருமேனியா நடுநிலைமை வகித்தது. பிறகு ஆகஸ்டு 1916-ல் நேச நாடுகளுடன் சேர்ந்து கொண்டது. ருமேனியப் படைகள் ஹங்கேரியப் பகுதியான

டிரான்சில்வேனியாவைத் தாக்கின. ஆனால், எதிர்பார்த்தபடி நேச நாடுகளின் படைகள் ருமேனியாவின் உதவிக்கு வரவில்லை. அதற்கு மாறாக ஜெர்மன், ஆஸ்டிரியப் படைகள் அங்கு வந்து ருமேனியப் படைகளை அறவே அழித்துவிட்டன. தெற்கிலிருந்து வான்மேகன்சனும், மேற்கிலிருந்து வான்பேல்கன்யானும் ருமேனியாவைத் தாக்கினர். புகேரிஸ்ட் நகரம் ஜெர்மானியர் வசமாகியது. 1918-ல் புகேரிஸ்டில் ஜெர்மானியர்களால் ருமேனியாமீது ஓர் ஒப்பந்தம் திணிக்கப்பட்டது. அதன்படி ருமேனியா ஜெர்மானியர்களுக்குக் கோதுமையும், எண்ணெயும் தர ஒப்புக்கொண்டது.

1917-ல் கிரீஸ் நாட்டின் பிரதமராக இருந்து விலக்கப்பெற்ற வெனிஸிலாஸ் ஒரு கட்சியை உருவாக்கி அந்த நாட்டின் அரசனைப் பட்டத்திலிருந்து அகற்றினர். அவருடைய தலைமையில் ஓர் அரசாங்கம் நிறுவப்பெற்றது. கிரீஸ் இப்பொழுது நேச நாடுகளுடன் சேர்ந்துகொண்டது. சாலனிக்காவில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் துருப்புகளுக்குக் கிரீஸ் படைகள் மிகவும் உதவியாக இருந்தன. 1918 செப்டம்பரில் பல்கேரியாமீது இந்தப் படைகள் தாக்கின. இச் சமயத்தில் பிரிட்டனுக்கு உதவியாக ஸெர்பியாவும் துருப்புகளை அனுப்பி பல்கேரியாவைக் கைப்பற்றுவதில் தீவிரமாக முயற்சி எடுத்துக்கொண்டது. நேச நாடுகளின் துருப்புகள் துருக்கியின் தலைநகரமான கான்ஸ்டாண்டிநோபிளைப் பிடிப்பதற்கு விரைந்தனர். துருக்கியச் சுல்தான் சமாதானம் செய்து கொள்வதாகக்கூறி சரணடைந்தார்.

மேற்குப் போர்முனை : இரண்டாவது கட்டம்

1916-ல் ஜெர்மானியர்கள் வெர்டன்மீது கடும் தாக்குதலை நடத்தினர். ஆனால், ஃபிரெஞ்சுப் படைகள் பல சேதங்களுக்கிடையே அந்த நகரைப் பாதுகாத்தனர். ஸோம் பகுதியில் பிரிட்டிஷ் துருப்புகள் தாக்குதலை நடத்தியும் வெற்றிபெறவில்லை. 1917-ல் விமிரிட்ஜ், மெஸின்ஸ் ரிட்ஜ் (Messines Ridge) என்ற பகுதிகள் பிடிப்பட்டன. அதே சமயத்தில் ஃபிரெஞ்சுப் படைகள் இதுவரையிலும் கடும் போர் புரிந்து பல இன்னல்களை அனுபவித்ததால் அவர்களது முன்னேற்றம் குறைவாகத்தான் இருந்தது. அதனால் பெரும்பான்மையானப் போரை, பிரிட்டனும் 1918-ல் அமெரிக்க ஐக்கிய நாடும்தான் செய்யவேண்டியிருந்தன. 1918-ல் ரஷ்யர்கள் போரிலிருந்து பின்வாங்கிவிட்டனர். அதனால் கிழக்குப் போர்முனையிலிருந்த ஜெர்மன் துருப்புகள் எல்லாம் மேற்குப் போர்முனைக்குத் திருப்பப்பெற்றன. இருப்பினும் ஜெர்மானியரின் முன்னேற்றம் ஏமியன்ஸ் நகரத்துடன் நின்றுவிட்டது. அதற்கு மேல் பிரிட்டிஷ் துருப்புகளை ஊடுருவி அவர்களால் செல்ல

முடியவில்லை. ஃபிரெஞ்சுத் தளபதியான மார்ஷல் போச் (Marshal Foch) நேச நாடுகளின் மேற்குப் போர்முனைக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஜெர்மானியர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு மேலும் பல துருப்புகளை அங்கே கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாலஸ்தீனத்தில் வெற்றி பெற்ற பிரிட்டிஷ் படைகள் மேற்குப் போர்முனைக்கு விரைந்தன. இந்த நெருக்கடியான நிலையில்தான் அமெரிக்கர்கள் நேரிடையாகப் போரில் கலந்து கொண்டனர். அமெரிக்கப் படைகள் பெருமளவில் அங்கு வந்து குவிந்தன. இனியும் போரை நீடித்துக்கொண்டே போனால் ஜெர்மனி தோற்க வேண்டியநிலை ஏற்படும் என்று கருதியதால், ஜெர்மானியர் மிகவும் தீவிரமாகத் தாக்கினர். பெப்ரஸைப் பலமாகத் தாக்கிய போதிலும் அது அவர்கள் கையில் சிக்கவில்லை. இரு முறை அவர்கள் மார்ன் பகுதியைத் தாக்கினர். ஆனால், அவர்கள் அதற்குமேல் முன்னேற முடியவில்லை. மீண்டும் தாக்க முயன்ற போது ஜெர்மானியப் படைகள் விரட்டி அடிக்கப்பெற்றன. ஜெர்மானியருக்கு ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன. 1918 ஜூலை மாதத்தில் ஏற்பட்ட இறுதிப் போரில் ஜெர்மன் துருப்புகள் சிதறியோடினர். ஜெர்மானியர்களின் தோல்வி உறுதி செய்யப்பட்டது. கெய்சரும் ஹாலந்திற்குத் தப்பி ஓடிவிட்டார். நவம்பர் 11-ம் தேதியன்று போர் நிறுத்த நிபந்தனைகளை ஜெர்மனியின் தளபதிகள் ஏற்றுக்கொண்டனர்.

கிழக்குப் போர்முனை : இரண்டாவது கட்டம்

1917-ல் ரஷ்யாவில் போல்ஷ்விக் புரட்சி ஏற்படவே போர் செய்துகொண்டிருந்த ரஷ்யப் படை வீரர்களும் சமாதானம் ஏற்படும் என்ற எண்ணத்திலேயே இருந்துவிட்டனர். மேலும் அவர்களிடம் போதிய யுத்த தளவாடங்களும் இல்லாததால் ஜெர்மன் படைகளைத் திறமையுடன் எதிர்க்க முடியவில்லை. புரட்சி வெற்றியடைந்த பிறகும், இடைக்காலக் கெரன்ஸ்கி அரசாங்கம் போரை நீடித்தது. இதனால் ரஷ்யப் போர் வீரர்கள் பெரும் அதிருப்தி அடைந்தனர். பிறகு லெனின் அரசாங்கத்தைக் கைப்பற்றவே மார்ச் 1918-ல் ஜெர்மானியருடன் பிரஸ்ட்–லிட்டோவிஸ்கில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். இந்தச் சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு ஜெர்மனி அதனுடைய படைகள் அனைத்தையும் மேற்குப் போர் முனைக்கு அனுப்பியது.

கடற் போர்

பிரிட்டன் கடற் படையின் வலிமையால்தான் முதல் உலகப் போரில் வெற்றியடைய முடிந்தது. அதற்கு உதவியாகப்

ஃபிரெஞ்சுக் கடற்படையும் பிரிட்டனின் மற்ற டொமினியன்களின் கடற்படைகளும் உதவின. முக்கியமாகப் பிரிட்டிஷ் கடற்படைக்கு இங்கிலாந்தைப் பாதுகாத்துக் கொள்வதே பெரும் பணியாகி விட்டது. மேலும், யுத்தத் தளவாடங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றிவரும் வர்த்தகக் கப்பல்கள் ஜெர்மன் நாசகாரி களால் தாக்கப்படாது பாதுகாக்கப்பெற்றன. அதிக அளவில் கடற் போர்கள் நடைபெறவில்லையெனினும் போர் ஆரம்பித்து முதல் இரண்டு ஆண்டுகளில் சில கடற் போர்கள் ஏற்பட்டன. 1914 ஆகஸ்டு மாதத்தில் ஹெலிகோலாண்ட் போரில் மூன்று ஜெர்மன் நாசகாரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அடுத்த மாதத்தில் ஜெர்மன் சப்மேரின்கள் மூன்று பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை நாசமாக்கின. "எம்டன்" என்ற ஜெர்மன் யுத்தக் கப்பல் பல நேசநாடுகளின் வர்த்தகக் கப்பல்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. 1914 நவம்பரில் ஆஸ்திரேலிய யுத்தக் கப்ப லான "சிட்னி" மெடீன இந்துக் கடலில் மூழ்கடித்தது. தெற்கு பசுபிக்கில் நடைபெற்ற கலோநெல் கடற் போரில் ஜெர்மன் கப்பல்கள் இரண்டு சிறிய பிரிட்டிஷ் நாசகாரிகளை மூழ்கடித்தன. 1914 டிசம்பரில் பாக்லாந்து தீவுகளில் நிகழ்ந்த கடற் போரில் நான்கு ஜெர்மன் கப்பல்கள் நாசமாக்கப்பெற்றன. 1915-ல் ஜெர்மன் யுத்தக் கப்பல் "புருச்சர்" டாகர்பாங்கில் நிகழ்ந்த கடற் போரில் மூழ்கடிக்கப்பட்டது. 1916 மே மாதத்தில் நிகழ்ந்த ஜட்லாண்ட் கடற் போர்தான் மிகவும் பெரியது. இந்தப் போரில் இரு தரப்பினருக்கும் அதிக நஷ்டம் ஏற்பட்டது. இருப்பினும் பிரிட்டிஷ் கடற்படை தளபதி ஜெலிகோவின் திறமையால் ஜெர்மனியின் வெற்றி பயன் அளிக்கவில்லை. வட கடலின் ஆதிக் கத்தைப் பிரிட்டனிடமிருந்து அகற்ற முடியவில்லை. 1917-ல் ஜெர்மன் சப்மேரின்கள் பிரிட்டிஷ் கப்பல்களுக்கு அதிகச் சேதங்களை ஏற்படுத்தின. மேலும் பல வர்த்தகக் கப்பல்களையும் மூழ்கடித்து விட்டன. பெல்ஜியத்தில் உள்ள ஆஸ்டெண்ட், ஜீ பிரக் (Zee Brugge) என்ற இடங்களில் ஜெர்மானியச் சப்மேரின் தளங்கள் நிறுவப்பட்டிருந்தன. ஆனால், சர் ரோஜர்ஸ் கீஸ் என்ற பிரிட்டிஷ் கடற்படை தளபதி இந்தத் தளங்களைத் தாக்கி அறவே அழித்து விட்டார்.

விமானப் போர்

இந்தப் போரில்தான் முதன் முறையாக விமானப் போர் நிகழ்ந்தது. ஜெர்மனியில் பலதரப்பட்ட விமானங்கள் உற்பத்திச் செய்யப்பெற்றன. கவுண்ட் செப்ளின் (Count Zepplin) என்பவரின் முயற்சியால் 'செப்ளின்' என்ற வான ஊர்திகள் நிர்மாணிக்கப் பெற்றன. இங்கிலாந்தைத் தாக்குவதற்கு இவை பயன்படுத்தப்

பெற்றன. ஆனால், இவை அளவிற்கு மீறிய பெரிய விமானங்களாக இருந்ததால், எளிதில் இவற்றைப் பிரிட்டிஷ் படையினர் சுட்டு வீழ்த்தினர். இவற்றைத் தவிர, பல இராணுவ விமானங்களையும் ஜெர்மனி தயாரித்தது. நாளடைவில் பிரிட்டனும் போர் விமானங்களைத் தயாரிக்க ஆரம்பித்தது. ஜெர்மன் நகரங்கள்மீது பிரிட்டிஷ் விமானங்களும் குண்டுகளை வீசின. பல ஜெர்மானிய ரயில்வே இணைப்புகள் நாசமாக்கப்பட்டன. சப்மேரின்களின் நடமாட்டத்தைக் கவனிப்பதற்கும் விமானப்படை உதவியாக இருந்தது.

14. முதல் உலகப் போருக்குப் பிறகு

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட ஒரு கொலை காரணமாக 1914-ல் உலக அமைதியே சீர்குலைந்துவிட்டது. அதற்குப் பிறகு அந்த அமைதியை முழுவதுமாக நிலைநிறுத்த முடியவில்லை. இத்தப் போரில் சுமார் ஒரு கோடி இளைஞர்கள் உயிரிழந்தனர்; பலர் நோய்வாய்பட்டு இறந்தனர். பலர் ஆதரவற்றவர்களாகவும், அகதிகளாகவும் ஆகிவிட்டனர். ஐரோப்பாவில் மட்டுமின்றி, உலகில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் பொருளாதார மந்த நிலையும், வறுமையும், வேலையின்மையும் காணப்பெற்றன. இவ் வுலகத்தில் ஏற்பட்ட ஆன்மீக வளர்ச்சி மிகவும் குன்றி விட்டது. பல தலைமுறையினர் அரும்பாடுபட்டுச் சேகரித்த மூலதனமும் உற்பத்திச் சாதனங்களும் போக்குவரத்துச் சாதனங்களும் அழிந்தன. புதிய ஆர்வங்கள் முளைத்தபோதிலும் கடன் அமைப்பில்தான் அவை வளர்ச்சியடைய வேண்டிய புதிய சூழ்நிலை ஏற்பட்டது. பழைய அமைப்புச் சீரழிந்துவிடுகின்ற நிலைமையும் ஏற்பட்டது. ரஷ்யாவின் பழைய அமைப்பு முறை அழிந்துவிட்டது. ஜெர்மனியும் துருக்கியும் துண்டாடப்பெற்றன. அவைகளின் பேரரசுகளும் அழிந்துவிட்டன. ஆஸ்டிரியா–ஹங்கேரிய அரசும் சீர்குலைந்துவிட்டது. அதனால் புதிய அமைப்பு ஐரோப்பாவில் ஏற்பட்டது. ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் இதுவரையிலும் அடக்கி ஆளப்பட்ட இனங்கள் புதிய தேசிய எழுச்சிகொண்டு உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கின.

சமாதான உடன்படிக்கைகள்

போர் முடிந்த பிறகு வெற்றிகண்ட நாடுகள் ஐரோப்பாவில் சீரமைப்புச் செய்யவும், மற்றத் தோல்வியுற்ற நாடுகள் எவ்விதமான உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதென்றும் விவாதித்தன. வழக்கம்போல், வெற்றிபெற்ற நாடுகள் தோல்வியுற்ற நாடுகளைப் பழிவாங்கவும் தோல்வியுற்ற நாடுகள் எவ்வளவு நஷ்டஈடு கொடுப்பதென்றும் பரிசீலனை செய்தன. ஓரளவிற்குப் பிரிட்டன், ஃபிரான்ஸ்,

இத்தாலி ஆகிய ஐரோப்பிய நாடுகள் தோற்றுப்போன நாடுகள் மீது பல குற்றங்களைச் சுமத்தி அவைகளுக்கெல்லாம் அந்த நாடுகளே பொறுப்பு எனக்கூறி அவைகளை நடத்திய விதம் வெறுப்புணர்ச்சியைத்தான் அதிகமாகத் தூண்டியதே தவிர, நிரந்தரமான சமாதானத்தைக் காண சிறிதும் வழிவகுக்கவில்லை. ஆனால், இதைப்போன்று 1815-ல் ஏற்பட்ட வியன்னா மாநாட்டில் வெற்றியுற்ற நாடுகள் மிகவும் பெருந்தன்மையாகவும் தங்களது சுயநலத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தபோதிலும் பழிவாங்கு வதில் அக்கரை கொள்ளாதிருந்தது இங்கு ஒப்பிட்டுப் பார்த்தல் அவசியமாகிறது. 1919-ல் கூட்டப்பெற்ற பாரிஸ் மாநாட்டில், ஒரு மெட்டர்னிக்கோ, ஒரு கேஸல்ரேயோ, இல்லாதது மிகவும் துரதிர்ஷ்டமாகும். நேசநாடுகளின் பிரதிநிதிகளின் பெரும்பான்மை யோர் ஜெர்மனியை அழித்துவிடும் அளவில்தான் தீர்மானங்களை நிறைவேற்றினார்களே தவிர, பெருந்தன்மையாகவும், சமாதானமாக வும் அப்பொழுதிருந்த சிக்கல்களைக் களைய முன்வரவில்லை.

ஜெர்மனி, துருக்கி, ஆஸ்டிரியா–ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகள் சரணடைந்த பிறகு, அந்த நாடுகளுக்கு எதிர்காலமே இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சமேற்பட்டது. இருப்பினும் உட்ரோ வில்சன் முதலில் சமாதானத்தின் அடிப்படையாக 14 அம்சங்களைச் சமாதான மாநாட்டில் சமர்ப்பித்தார். வெற்றிகண்ட நாடுகளும், தோல்வியுற்ற நாடுகளும் முதலில் இந்த 14 அம்சங்களை ஏற்றுக்கொண்டன.

உட்ரோ வில்சனின் 14 அம்சங்களாவன :—

(1) சமாதான உடன்படிக்கைகளை வெளிப்படையாகச் செய்யவேண்டும்.

(2) கடல்களில் செல்ல சுதந்தரம்.

(3) சுதந்தரமான சர்வதேச வாணிகம்.

(4) தேசியப் பாதுகாப்புக்கு வேண்டிய யுத்தத் தளவாடங் களைத் தவிர, ஆயுதக் குறைப்புச் செய்தல்.

(5) நியாயமான குடியேற்ற நாட்டுக் கொள்கை.

(6) ரஷ்யப் பகுதியிலிருந்து வெளியேறல்; ரஷ்யாவின் அரசியல் வளர்ச்சியை நிர்ணயம் செய்வதில் தலையிடாமல் இருத்தல்.

(7) பெல்ஜியத்திலிருந்து வெளியேறல்; பெல்ஜியத்தின் இறைமையைக் குறைக்காமல், அதனுடைய சுதந்தரத் தைத் திரும்பவும் அளித்தல்.

(8) ஆக்கிரமித்த ஃபிரெஞ்சுப் பகுதியிலிருந்து வெளியேறல்; அல்சாஸ்–லோரேய்ன் பகுதியை ஃபிரான்சுக்கு அளித்தல்.

(9) ஒப்புக்கொள்ளப்பட்ட தேசிய இன அடிப்படையில் இத்தாலிய எல்லைகளை மாற்றி அமைத்தல்.

(10) ஆஸ்டிரியா–ஹங்கேரியில் உள்ள மக்களுக்குச் சுயாட்சி அளித்தல்.

(11) ருமேனியா, ஸெர்பியா, மாண்டிநிக்ரோ ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறுதலும், மீண்டும் அந்த நாடுகளின் சுதந்தரத்தை அளித்தலும், ஸெர்பியாவிற்குக் கடல் வழியை ஏற்பாடு செய்து கொடுத்தலும்.

(12) துருக்கியப் பேரரசில் உள்ள மக்களுக்குத் தேசிய இன அடிப்படையில் சுயாட்சி வளர்ச்சியுற வழிவகை செய்தல். துருக்கிய மாகாணங்களுக்குப் பாதுகாப்பான இறைமையை வழங்க வாக்குறுதி அளித்தல்.

(13) சுதந்தரமான போலந்தை உருவாக்குதலும், அதற்குத் தங்குத்தடையின்றி கடல் வழியை ஏற்பாடு செய்தலும்.

(14) பல நாடுகள் கொண்ட ஒரு சங்கத்தை அமைத்தலும், அதற்கான விதிமுறைகளை ஏற்படுத்தலும், எல்லா நாடுகளின் சுதந்தரத்திற்கு உறுதி அளித்தலும்.

தோற்றுப்போன நாடுகளிடம் தனித்தனியாக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பெற்றன. ஜெர்மனியிடம் ஜூன் 1919-ல் வெர்சேல்ஸ் உடன்படிக்கையும் (Treaty of Versailles); ஆஸ்டிரியாவுடன் செயின்ட் ஜெர்மேய்ன் உடன்படிக்கையும் செப்டம்பர் 1919 (St. Germain Treaty); ஹங்கேரியுடன் டிரயனுன் உடன்படிக்கையும் ஜூன் 1920 (Treaty of Trianon); பல்கேரியாவுடன் நியுலித் உடன்படிக்கையும் நவம்பர் 1919 (The Treaty of Neiully); துருக்கியுடன் செவரஸ் உடன்படிக்கையும் ஆகஸ்ட் 1920 (Treaty of Severes) பிறகு செவரஸ் உடன்படிக்கை திருத்தி அமைக்கப் பெற்று, லஸானே உடன்படிக்கையும் (Treaty of Laussane) ஜூலை 1923-ல் செய்துகொள்ளப்பெற்றன. இந்த லஸானே உடன்படிக்கையைத் தவிர, மற்ற எல்லா உடன்படிக்கைகளும் வெற்றியுற்ற நாடுகளால் திணிக்கப் பெற்றவைகளேயாகும். இந்த உடன்படிக்கைகளைத் தவிர, பாரிஸ் சமாதான மாநாட்டில் மற்றும் பல சிறிய உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. சிறுபான்மை உடன்படிக்கைகள் சர்வதேச மானியத்தில் விடப்பெற்ற நிலப்

பகுதிகளைக் குறித்த உடன்படிக்கைகள்; நஷ்டஈட்டைப் பற்றி நேசநாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள்; அசல் உடன்படிக்கைகளில் ஏற்பட்ட சில மாற்றங்கள் அல்லது சேர்க்கைகள். எடுத்துக்காட்டாக இத்தாலி, யூகோஸ்லாவ் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் ராபலோ ஒப்பந்தம் (Rapallo Agreement); முன்னைய மக்கள் வாக்கெடுப்பின் மூலமாக ஏற்பட்ட நிலப்பகுதியில் மாற்றங்கள். உதாரணமாக ஸ்கலஸ்விக் (Schleswig), கிளாகன்பர்ட் (Klagenfurt), ஆலன்ஸ்டின் (Allenstein), மேரிண்டர் (Marienwder), மேல் சைலிஷியா (Upper Silesia); மற்றும் நஷ்ட ஈட்டுக் குழுவினரின் முன்னைய முடிவுகள்–ஜெர்மனி எவ்வளவு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்தல்.

1919–20-ல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைகளின் பொதுவான அடிப்படையில் நிர்ணயம் செய்த நிலப்பகுதிகளின் பங்கீடு மூன்று வகைகளில் பிரிக்கலாம்.

(1) போர் நிகழ்ந்தபொழுது நேசநாட்டினரின் நிலப்பகுதி களில் ஏற்பட்ட சேதங்களுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்டஈடு.

(2) மக்களுடைய விருப்பத்திற்கு மாறுக ஆக்கிரமிப்புச் செய்த நிலப்பகுதிகளை மீட்சி செய்தல்.

(3) தேசிய இனத்தின் அடிப்படையில் எழும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளல். ஆனால், விசித்திரமான காரணத்தைக் காட்டி ஸார் பள்ளத்தாக்கை (Saar Basin) ஃபிரான்சுக்கு அளித்துவிட்டனர். ஏனெனில், போர் நிகழும்பொழுது ஜெர்மானியப் படையினர் ஃபிரான்சுக்குச் சொந்தமான பல நிலக்கரி வயல்களை அழித்து விட்டதே காரணமாகும். மார்ஸ்நெட் (Moresnet) மற்றும் அதன் அண்மையிலுள்ள காடுகளைப் பெல்ஜியத்திற்கு அளித்தனர். போர் சமயத்தில் எதிரிகள் பெல்ஜியத்தின் பல காடுகளை அழித்துவிட்டதற்காக இந்த நஷ்டஈடு தரப்பெற்றது.

இரண்டாவது காரணத்தின் அடிப்படையில்தான் அல்சாஸ்–லோரேய்ன் (Alsace–Lorraine) பகுதியை ஃபிரான்சுக்குத் தந்தனர். ஜனுதிபதி வில்சனின் பதினான்கு அம்சங்களில் இது நான்காவது அம்சமாக இடம் பெறுகிறது. இதே அடிப்படையில்தான் போலந்தும் மீட்கப்பட்டது. ஆனால், இதில் இனப் பிரச்சினையும் கலந்திருந்தது. போலந்து பங்கீட்டின்பொழுது இல்லாதச் சில பகுதிகளும்கூட புதிய போலந்தில் இடம்பெறுகின்றன; அல்லது புதிதாக இணைக்கப்பெற்ற பகுதிகளில் மக்கள் வாக்கெடுப்பு எடுப்பதென்றும் முடிவு செய்யப்பெற்றது. அப் பகுதிகளில்

வசிக்கும் பெரும்பான்மையானவர் போலந்து மக்களேயாவர் என்று கருதியதால்தான் அவர்கள் இம் முடிவுக்கு வந்தனர். வாக்கெடுப்பு எடுக்கப்படும் என்ற அடிப்படையில் மேல் சைலிஷியா (Upper Silesia) போலந்துடன் இணைக்கப்பெற்றது. மூன்றுவது வகையில் இனப் பிரச்சினையின் அடிப்படையில் சில பொருத்தங்கள் செய்யப்பெற்றன. அவைகளில் மூன்று முக்கியமான உதாரணங்களாவன :

(1) செக் இனத்தவர் பெரும்பான்மையாக வசிக்கும் பொஹிமியா, மொரேவியா, ஸ்லோவாக்கியா ஆகிய மாநிலங்களும், சில மாவட்டங்களும் உட்பட, செக்கோஸ்லாவேகியா (Czechoslovakia) என்ற சுதந்தர நாட்டை உருவாக்கினர்.

(2) பழைய ஆஸ்டிரியப் பேரரசில் இருந்த தெற்கு ஸ்லாவ் இனத்தவர் பெரும்பான்மையாக வசிக்கும் தெற்குப் பகுதியும், ஆட்ரியாடிக் மாகாணங்களும் ஸெர்பியாவுடன் (Serbia) இணைக்கப் பெற்றன. ஸெர்பியர்கள் குரோட்டுகள் (Croats) ஸ்லாவேனியர்கள் நாடு பிறகு, யூகோஸ்லேவியா (Yugoslavia) என்ற பெயரில் வழங்கப்பெற்றது.

(3) ருமேனியா இனத்தவர் வாழ்கின்ற டிரான்ஸில் வேனியா, புகோவினு ஆகிய மாவட்டங்கள் ருமேனியாவுடன் இணைக்கப்பெற்றன.

வெர்சேல்ஸ் உடன்படிக்கை (The Treaty of Versailles)

இந்த உடன்படிக்கை ஜெர்மனிமீது சுமத்தப்பட்டதாகும் என்று கூறுவதில் மிகையில்லை. ஆறுமாத காலம் பாரிஸ் சமாதான மாநாட்டில் எக் கட்டத்திலும் ஜெர்மானியர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. மே 7-ம் தேதியன்று ஜெர்மானியப் பிரதிநிதியாக வந்த அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கவுண்ட் ராண்டஸா (Count Rantzau) என்பவரிடம் இந்தச் சமாதான உடன்படிக்கையைக் கொடுத்து, மூன்று வாரங்களுக்குள் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாகத் தெரிவிக்கும்படி அறிவித்தனர். அப்பொழுதிருந்த வெய்மார் குடியரசு இந்த உடன்படிக்கையில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று அறிவித்தது. மேல் சைலிஷியாவில் பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்துவதற்கு மட்டும் நேசநாட்டினர் சம்மதித்து, மற்ற மாற்றங்கள் எதையும் செய்ய முடியாதென்றும் உடன்படிக்கையை, ஒன்று அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது அப்படியே நிராகரிக்கவேண்டுமென்று திட்டவட்டமாக அறிவித்தனர்.

உடன்படிக்கையை நிராகரித்தால் பெர்லின்மீது படையெடுப்பு நிகழும் என்ற பயம் ஜெர்மனிக்கு இருந்தது. ஜெர்மானியரின் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாததால், ஜெர்மன் குடியரசின் தேசிய சட்டசபையில், நீண்ட காரசாரமான விவாதங்களுக்குப் பிறகு இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தனர். அப் பொழுது அமைச்சர்–ஜனதிபதியாக இருந்த ஸ்கிட்மான் (Scheidemann) "இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடுகின்ற கை அழியட்டும்" என்று கூறினர்.

இந்த உடன்படிக்கையின்படி ஐரோப்பாவில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. 1871-ல் ஃபிரான்ஸ் இழந்த அல்சாஸ் பகுதியும், லொரேய்னில் ஒரு பகுதியும் ஃபிரான்ஸ் ஜெர்மனியிடமிருந்து பெற்றது. யூபென் (Eupen), மால்மெடி (Malmedy) ஆகிய பகுதிகளைப் பெல்ஜியம் திரும்பவும் பெற்றது. பெல்ஜியத்திலுள்ள பல காடுகளை ஜெர்மானியர் போர்ச் சமயத்தில் அழித்துவிட்டதால், நஷ்டஈடாக மார்ஸ்நெட் பகுதியைக் கொடுத்தனர். ஸ்கலஸ்விக்கின் வட பகுதியை டென்மார்க் பெற்றது. உடன்படிக்கையின்படி அங்கு நிகழ்ந்த பொதுமக்கள் வாக்கெடுப்பில் வட பகுதியில் உள்ளவர் டென்மார்க்கிலும், தெற்கிலுள்ளவர் ஜெர்மனியுடனும் இணைய முடிவு செய்தனர். போலந்து மொழி பேசுகின்றவர்கள் வாழ்கின்ற போஸனில் பெரும்பகுதியும், மேற்குப் பிரஷ்யாவும், கேஷ்யூப்ஸ் மாவட்டமும் (Kashubes), மேல் சைலிஷியாவும் ஜெர்மனியிடமிருந்து போலந்து பெற்றது. மேல் சைலிஷியாவில் 1921-ல் எடுத்த வாக்கெடுப்பிற்கு மாறுகச் சர்வதேச சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் அப் பகுதியைப் போலந்திற்கே அளித்தனர். சார் சமவெளிப் பகுதியை (Saar Valley) சர்வதேச சங்கத்தின் ஆணைக்குட்பட்ட சர்வதேசக் குழுவினரின் ஆதிக்கத்தில் கொண்டுவந்தனர். அப் பகுதியிலுள்ள நிலக்கரி வயல்களை ஃபிரான்ஸிடம் ஒப்படைத்தனர். மெமல் (Memel) பகுதியை முக்கியமான நேசநாடுகளிடம் ஒப்படைத்தனர். 1924-ல் அப் பகுதியை லிதுவேனியாவுக்கு அளித்தனர். மேல் சைலிஷியாவிலுள்ள ஒரு சிறிய பகுதியைச் செக்கோஸ்லாவேகியாவிடம் ஒப்படைத்தனர். தவிர, உடன்படிக்கையின் 80ஆவது நிபந்தனையின்படி ஆஸ்டிரியாவின் சுதந்தரத்தை மிகத் திட்டவட்டமாக ஜெர்மனி மதிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது.

ஜெர்மனியின் சில நிலப்பகுதிகளைப் போலந்திற்கு அளிப்பதில் டேன்சிக் (Danzig) துறைமுகமும் வருகின்றது. ஆனால், இத் துறைமுகப்பட்டினத்தில் மிகப் பெரும்பான்மையோர் ஜெர்மானிய மக்களாக இருப்பதால், அப் பட்டினத்தை ஒரு சுதந்தரமான

நகராக்கி விடுவதென்று முடிவு செய்தனர். அதனுடைய ஆதிக்கம் சர்வதேச சங்கத்தின் பொறுப்பில் விடப்படும். தவிர, போலந்து இந்தத் துறைமுகப்பட்டினத்தை நன்கு பயன்படுத்துவதற்காக அதற்குப் போஸனில் பெரும் பகுதியையும், மேற்குப் பிரஷ்யாவையும் அளித்தனர்.

ஐரோப்பாவில் இல்லாத மற்ற ஜெர்மானியப் பகுதிகள், மானியப் பகுதிகள் என்ற பெயரில் நேச நாட்டினருக்கு அளிக்கப் பெற்றன. அவைகளின் நிலப்பரப்பு 1,027,000 சதுர மைல்களுக்கு வருகின்றது. இந்த நிலப்பரப்பில் ஜெர்மன் நியுகினியும், ஜெர்மன் ஸாமோ, மற்றும் சிறிய பகுதிகளும் இடம் பெறுகின்றன. ஜெர்மனிக்குச் சொந்தமான குடியேற்றப் பகுதிகளைப் பறித்துக்கொண்டது. தவிர, அக் குடியேற்றப் பகுதிகளில் ஜெர்மானியரின் ஆட்சி மிகவும் கொடுமையாகவும், எதேச்சையாகவும் இருப்பதாக ஒரு காரணத்தையும் கற்பித்து, ஜெர்மானியர்களின் தேசிய மதிப்பைக் குறைத்தும் அவர்களுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தியும் விட்டனர். ஜெர்மனியிடமிருந்து பறிக்கப்பெற்ற காலனிகளைச் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைத்தனர். சர்வதேச சங்கம் இந்தக் காலனிகளைப் பிரிட்டன், ஃபிரான்ஸ், பெல்ஜியம், ஜப்பான், நியுஜிலந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிடம் விருப்பம்போல ஒப்படைத்தது. அந்தக் காலனிகள் சுயாட்சிபெறத் தகுதிபெற்ற பிறகு, அப் பகுதிகளிலுள்ள மக்களுக்கே அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பெற்றது. உலக வரலாற்றிலேயே வேறு எந்த நாட்டிலிருந்தும் அதற்குச் சொந்தமான காலனிகளை இவ்விதமாகப் பறிமுதல் செய்யப்படவில்லை. சீனா, சையாம், லைபிரியா, மொராக்கோ, எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளில் ஜெர்மனிக்கு இருந்த பிரத்தியேக உரிமைகள் ரத்துச் செய்யப்பெற்றன.

இவற்றைத் தவிர, ஜெர்மனியின் இறைமையிலும் சில கட்டுப்பாடுகளை விதித்து, அதை இழிவுக்குள்ளாக்கினர். ஜெர்மனிக்குச் சொந்தமான ரைன் நதியின் இரு புறங்களிலும் 50 கிலோ மீட்டர்கள் வரையிலும் ஜெர்மனி இராணுவத்தை வைத்துக் கொள்ளக்கூடாதென்ற நிபந்தனையை ஜெர்மனி ஏற்றுக்கொண்டது. ஹெலிகோலாண்டிலும் ஜெர்மனி வைத்திருந்த இராணுவ நிலையங்களை அகற்றிவிடவும், இராணுவத்தைக் கலைத்துவிடவும் சம்மதித்தது. ஜெர்மனியில் உள்ள எல்லா இராணுவ நிலையங்களும், போர்ப் பொருள்களும் அழிக்கப்பெற்றன. ஜெர்மன் இராணுவம் 100,000 பேர் கொண்ட படை அளவிற்குக் குறைக்கப் பட்டது.

உடன்படிக்கையின் 23 நிபந்தனையின்படி, இந்தப் போர் ஏற்பட்டதற்கான முழு பொறுப்பையும் ஜெர்மனியின்மீதே சுமத்தியதுதான் ஜெர்மனிக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சியாகும். அதனால் போரில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கும், சேதங்களுக்கும் ஜெர்மனியே நஷ்டஈடு அளிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. போர் ஏற்படுவதற்கு ஜெர்மனியே பொறுப்பாளி என்று நேசநாட்டினர் முடிவு செய்துவிட்டதால், இந்தப் போர் ஏற்படுவதற்கு யார் பொறுப்பாளிகளோ அவர்களைச் சர்வதேச நீதிக் குழுவினரின் முன்பு விசாரிக்கவேண்டும் என்று அறிவித்தனர். அதன்படி கெய்சரைப் போர்க் குற்றவாளியாக விசாரணை செய்ய வேண்டுமென்று அறிவித்தனர். ஆனால், இந்த நிபந்தனையைச் செயலாற்ற முடியவில்லை. ஏனென்னில், ஜெர்மானியப் பேரரசர் நெதர்லாந்து அரசாங்கத்திடம் புகலிடம் பெற்றுவிட்டதால் அந்த அரசாங்கம் அவரைப் பிடித்துக் கொடுக்க மறுத்துவிட்டது. அந்த அரசாங்கம் நேச நாடுகளின் வேண்டுகோளைப் பொருட்படுத்தவில்லை. மற்றும், மற்றப் போர்க் குற்றவாளிகளை இராணுவ நீதிமன்றங்கள் முன்பு விசாரணை செய்ய வேண்டுமென்றனர். அதன்படி சுமார் நூறு குற்றவாளிகளின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இப் பட்டியல்படி ஒரு சில குற்றவாளிகளை மட்டுமே விசாரணைக்குக் கொண்டு வந்தனர்.

ஜெர்மனி மொத்தமாக எவ்வளவு தொகையைத் தரவேண்டுமென்று நேசநாட்டினர் நிர்ணயம் செய்யவில்லை. அப் பொறுப்பை நஷ்டஈட்டை நிர்ணயம் செய்யும் குழுவினரிடம் ஒப்படைத்தனர். நஷ்டஈட்டுக் குழுவினர் தீர்மானித்த மொத்த நஷ்டஈட்டுத் தொகையை ஜெர்மனி 1921 மே முதல் தேதி முதற்கொண்டு முப்பது ஆண்டுக் காலத்திற்குள் கொடுத்துவிடவேண்டும் என்று முடிவு செய்தனர். அதற்குள் நஷ்டஈட்டுக் குழுவினர் ஜெர்மனி சுமார் 1,0000,000,000 தொகையைக் கொடுக்க வேண்டுமென்று அறிவித்தனர். இந்தத் தொகையை ஜெர்மனி பல தவணைகளில் கொடுத்துவிடச் சில சலுகைகளை அளித்தனர். ஜெர்மனியால் இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்க முடியுமா என்பது பற்றி நேசநாட்டினர் கவலை கொள்ளவில்லை.

மற்ற உடன்படிக்கைகள்

ஆஸ்டிரியா–ஹங்கேரி சீர்குலைந்தது. டிரென்டினே (Trentino), வடக்கு அடிஜ் (North Adige), டிரயஸ்ட் (Trieste) மற்றும் அதைச் சுற்றியுள்ள இத்தாலியப் பகுதிகளை ஆஸ்டிரியா இத்தாலிக்கே தந்துவிட்டது. போஸ்னியா, ஹெர்ஸிகோவினா, டால்மேஷியன் கரை, யூகோஸ்லேவியாவிற்குத் தரப்பெற்றன. பொஹிமியா,

மொராவியா, ஆஸ்டிரிய–சைலிஷியாவின் பெரும் பகுதியும் செக்கோஸ்லாவேகியாவிற்குத் தரப்பெற்றன. இந்த ஆஸ்டிரியா–ஹங்கேரி பேரரசிலிருந்து யூகோஸ்லேவியா என்ற புதிய அரசு, ஆஸ்டிரியாவின் தெற்கிலும், வடக்கில் செக்கோஸ்லாவேக்கியா என்ற புதிய அரசும் நிறுவப்பெற்றன. தவிர, கேலிஷியாவைப் போலந்திற்கும், யுகோவினுவை ருமேனியாவிற்கும் ஆஸ்டிரியா தந்துவிட்டது. ஆஸ்டிரியாவின் மக்கள் தொகை, இந்த மாற்றங்களுக்குப் பிறகு 310 இலட்சத்திலிருந்து, அறுபது இலட்சத்திற்குக் குறைந்துவிட்டது. டிரான்சில்வேனியா, பானுட் (Banat) ஆகிய பகுதிகள் ருமேனியாவிற்குத் தரப்பெற்றன. யூகோஸ்லேவியாவிற்கு குரோஷியாவும் (Croatia), செக்கோஸ்லாவேகியாவிற்கு ஸ்லோவாக் பகுதியும் தரப்பட்டன. ஆஸ்டிரியாவின் இராணுவம் 35,000 பேர் கொண்ட படையாகக் குறைக்கப்பெற்றது. பல்கேரியாவிற்குச் சொந்தமான ஏகியன் கடற்கரைப் பகுதிகள் (Aegean Coast Lands) கிரீஸ் நாட்டிற்கும் மற்றச் சில பகுதிகள் யூகோஸ்லேவியாவிற்கும் தரப்பெற்றன. பல்கேரியாவின் இராணுவம் 20,000-க்குக் குறைக்கப்பட்டது. செவரஸ் உடன்படிக்கையின்படி சிரியா, பாலஸ்தீனம், மெஸபடோமியா ஆகிய நாடுகளையும் எகிப்தின்மீது கொண்டிருந்த ஆதிக்கத்தையும் துருக்கி இழந்துவிட்டது.

சர்வதேச சங்கம்

ஜனுதிபதி வில்சனின் பதினான்கு அம்சங்களில் கடைசியானது சர்வதேச சங்கம் அமைப்பதாகும். அவருடைய மற்ற இலட்சியத் திட்டங்கள் எல்லாம் பாரிஸ் மாநாட்டில் ஆட்டங்கண்டிருந்தன. ஆனுல், அவர் எடுத்துக்கொண்ட முயற்சி இறுதியில் வெற்றி பெற்றது. சர்வதேச சங்கத்தை உருவாக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அவருடைய பெரும் வெல்திறன் சாதனையாகும்.

சர்வதேச சங்கத்தின் திட்டம் ஓர் ஒப்பந்தத்தைப் போலவே அமைக்கப்பெற்றுப் பாரிஸ் சமாதான மாநாட்டில் உருவாகிய வெர்சேல்ஸ் உடன்படிக்கையிலும், மற்றப் பெரிய உடன்படிக்கைகளிலும் இணைக்கப்பெற்றது. சர்வதேச சங்க ஒப்பந்தம் முழுவதிலும் வில்சனுடைய அறிவுத் திறன் வெளிப்படுகின்றது. ராபர்ட் செசில் பிரபுவும் (Lord Robert Cecil) இந்த அமைப்பை உருவாக்கும் அரும் முயற்சியில் ஈடுபட்டார். இவ்விருவருடைய கொள்கைகளுக்கு முரண்பட்ட விதமாக ஏகாதிபத்தியவாதிகளான ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவரும், ஃபிரான்சைச் சார்ந்த லியோன் போர்ஜஸ் (Leon Bowrgeois) என்பவரும் மோதியதன் விளைவாக, அடிக்கடி அவர்களுடன் ஒத்துப் போக நேரிட்டுச் சில சமரசங்களுக்கு இடமளிக்க நேரிட்டது.

ஜனாதிபதி வில்சனின் பதினான்காவது அம்சத்தின் முக்கியமான கருத்து என்னவெனில், சர்வதேச அங்கத்தினர்களின் ஒருமித்த ஒத்துழைப்பாலும், அவர்களுடைய உறுதியாலும் இந்த நிறுவனத்தின் மூலமாக அமைதியை நிரந்தரமாக ஏற்படுத்தவேண்டும் என்பதேயாகும். வலிமையின் அடிப்படையில் அமைதியை நிலை நிறுத்துவதில் ராபர்ட் செசில் பிரபுவுக்கு அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் நாடுகளுக்கிடையே ஏற்படும் தகராறு களைப் போர் தொடுக்காமலேயே அமைதியான பேச்சு வார்த்தை களாலும் காலதாமதம் செய்வதாலும் மாநாடு கூட்டிப் பேசு வதாலும் தீர்த்துக்கொள்வதற்கு ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கருதினார். இது வழக்கமான பிரிட்டிஷ் கொள்கை யாகும். 1914-ல் ஆஸ்டிரியா, ஸெர்பியா ஆகிய நாடுகளின் தகராறை ஒரு சர்வதேச மாநாடு கூட்டித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று சர் எட்வார்ட் கிரே என்பவர் பெரும் முயற்சி செய்தார்.

செசில் கருத்துகளை ஜெனரல் ஸ்மட்ஸ் பின்பற்றிய போதிலும் "இச் சங்கம் இன்னும் அதிகத் தகுதியைப் பெறவேண்டும். சாதாரணமாக இதற்கு ஒப்படைக்கப்பெற்ற பொறுப்புகளைக் காட்டிலும் மேலும் பல பணிகளைச் செய்யவேண்டும்" என்று அவர் விரும்பினார். அவரைப் பொறுத்தவரையிலும் சங்கம் பொதுப்படையில் முன்னிலை மீட்சியாகவே அமைந்திருந்தது. மத்தியப் பேரரசுகள் சீர்குலைந்த பிறகு பலர் சுதந்தரம் பெற்றனர்; பல நாடுகள் சுதந்தரம் பெற்றன. ஆனால், சிலர் சுதந்தரமாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்க முடியாத நிலையில் இருப்பதால், சர்வதேச சங்கம் அப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதினார். ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு சர்வதேசிய அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயம் கூறினார். அந்த ஆலோசனையை ஒப்பந்தத்தின் 2, 6ஆவது பிரிவுகளில் காணலாம். "வெற்றியைத் துரிதப்படுத்தும் ஒரு போர் வாளாகவோ, அல்லது அவ் வெற்றியின் பயன்களைப் பாதுகாக்கும் கேடயமாகவோ இந்த நிறுவனத்தைப் பயன்படுத்த வேண்டும்" என்று ஒரு ஃபிரெஞ்சு இராச்சியவாதி கருதினார். ஸ்மட்ஸின் ஆலோசனை பல மாற்றங்களுக்குள்ளாகி பிறகு சர்வதேச சங்கத்தின் மாநில கட்டளை முறை என்ற அளவில் இடம் பெறுகிறது. இவ்விதமாகப் பல நிர்வாகப் பொறுப்புகளை இச் சங்கம் மேற்கொள்கிறது. போர்ஜோஸின் செல்வாக்குக் காரணமாகச் சர்வதேச சங்கத்தில் நேசநாடுகளும் நடுநிலைமை நாடுகளும்தான் அங்கம் வகிக்கவேண்டும் என்ற ஆலோசனையும் ஏற்றுக்கொள்ளப் பெற்றது. ஆனால், அவருடைய செல்வாக்கு ஓரளவு மட்டும்தான்

இருந்தது. இறுதியாக உருவாக்கப்பெற்ற சங்கத்தில் உண்மையில் மூன்று சங்கங்கள் இடம் பெறுகின்றன. ஒன்று, சமாதான உடன்படிக்கைகளைச் செயலாற்றவும்; இரண்டு, சர்வதேச ஒற்றுமையை வளர்ச்சியுறச் செய்யவும்; மூன்று, போரைத் தவிர்க்கவும், ஆக மூன்று சங்கங்கள் இந்த ஒரே சங்கத்தில் இணைந்திருக்கின்றன.

பேராசிரியர் டாய்ன்பி இந்தச் சர்வதேச சங்கத்தை, ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்திற்குப் பதிலாக ஏற்பட்டிருக்கும் நிறுவனம் என்று கருதுகிறார். நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு ஜார் முதலாம் அலெக்சாந்தர் மற்றும் மெட்டர்னிக் ஆகியோர் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே நெருக்கமான தொடர்பு வேண்டுமென்பதற்காக இவ்விதமான ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்தனர். மற்றுமொரு முயற்சி, தூய்மையான கூட்டமைப்பு (Holy Alliance) கிறித்துவச் சமயத்தின் அடிப்படையில் உருவாக்கப்பெற்று, ஐரோப்பிய நாடுகளிடைய ஒருமைப்பாட்டை வளர்ச்சியுற எடுக்கப் பெற்றது. அந்த முயற்சிக்கு அவ்வளவு ஆதரவு கிடைக்கவில்லை. இத் திட்டங்கள் எல்லாம் ஒரு வகையில் பழைய முடியாட்சிக் கொள்கைளுக்கும், பிரபுத்துவ முறைக்கும்தான் முக்கியத்துவம் அளித்தன. அதனால், அவை வெற்றிபெறவில்லை. தவிர, அவைகளுக்கு நிறுவன வடிவுக் கொடுக்கப்படவில்லை.

சங்கத்தின் குறிக்கோள்களைப்பற்றியும் அதன் நோக்கங்களைப் பற்றியும் ஒப்பந்தத்தின் முன்னுரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். அவற்றின்படி, "சர்வதேச ஒத்துழைப்பைப் பேணி வளர்க்கவும், சர்வதேச அமைதியையும், பாதுகாப்பையும் பெறவேண்டுமென்பதாகும்." இந் நோக்கங்களை ஏற்றுக் கொண்ட அங்கத்தினர்கள், தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஒப்புக்கொண்ட கடமைகளாவன : தேசியப் பாதுகாப்பிற்குப் போதுமான அளவில் போர்க் கருவிகளை வைத்துக் கொண்டும், நிர்வாகக் குழுவின் சம்மதமின்றி யுத்தத் தளவாடங்களை அதிகரிக்காமலும், ஆயுதக் குறைப்பைப் பொது நன்மைக்காகவும், சர்வ தேசியக் கடமையாகவும் பாவித்தல்வேண்டும்.

யுத்தத் தளவாடங்களின் அளவைப் பற்றியும், இராணுவம், கடற்படை ஆகிய துறைகளில் அவர்கள் மேற்கொண்டுள்ள திட்டங்களைப் பற்றியும், அவர்களுடைய தொழில்கள் எந்த அளவில் போர் முறைக்குப் பயன்படும் என்பது பற்றியும் ஆன செய்திகளைத் திறந்த மனப்பான்மையுடனும், வெளிப்படையாகவும் அங்கத்தினர்களிடையே பரிமாறிக்கொள்ளல் வேண்டும்.

அங்கத்தினர் நாடுகளின் சுதந்தரத்தை மதிப்பதும் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து அவைகளின் நிலப்பகுதியைப் பாதுகாப்பதும் (பிரிவு 10).

தகராறு மோதலை ஏற்படுத்தும் என்கின்றபொழுது நடுவர் களின் மத்தியஸ்தத்திற்கு விடுவதும், அல்லது நீதிபதிகளின் முடிவுக்கு விடுவதும் அல்லது நிர்வாகக் குழுவினரின் பரிசீலனைக்கு விடுவதும் (பிரிவுகள் 12, 13).

அவர்களுடைய முடிவை அங்கத்தினர் நாடுகள் முழு நம்பிக்கையுடன் நிறைவேற்றவும், சர்வதேச சங்கத்திலுள்ள மற்ற நாட்டின்மீது போர் தொடுக்காமல் இருக்கவும் (பிரிவு 13).

சர்வதேச சங்கத்தின் ஆணைகளுக்குட்பட்ட மானிய நிர்வா கத்தில் வரும் பகுதிகளின் ஆட்சியைப் பற்றிய ஆண்டறிக்கையை, நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் நாடுகள் அனுப்பவும் (பிரிவு 22).

தொழிற்சாலைப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரை மனிதாபிமான அடிப்படையில் நடத்து கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தவும் (பிரிவு 23/a).

பெண்களையும் குழந்தைகளையும் ஒழுங்கற்ற முறையில் பயன் படுத்தாமல் பாதுகாக்கின்ற சில ஒப்பந்தங்களை மேற்பார்வையிடு வதும், அபினி மற்றும் அபாயகரமான மருந்துகள் ஆகியவற்றை வியாபாரம் செய்யாமல் பாதுகாக்கவும் (பிரிவு 23/c, d).

போக்குவரத்து, பிரயாணம், ஆகியவற்றை மேற்கொள்ளும் பொழுது அவர்களது சுதந்தரத்தைப் பாதுகாக்கவும், மற்றும் வியாதிகளைப் பரவச்செய்யாமல் தடுக்கவும், சர்வதேசிய அளவில் முயற்சிகளை மேற்கொள்ளுதல் (பிரிவு 23/e, f).

அமைப்பு

சர்வதேச சங்கம் பணியாற்றத் தொடங்கியபொழுது 1920, ஜனவரி 10-ல் மொத்தம் 24 நாடுகள் அங்கம் வகித்தன. அதே ஆண்டு இறுதியில் 41 அங்கத்தினர்களாக அதன் எண்ணிக்கை உயர்ந்தது. 1924-ல் 50 நாடுகளும், 1934-ல் 60 நாடுகளும் அதில் அங்கம் வகித்தன. ஆனால், அதனுடைய இறுதி ஆண்டில் 1946-ல் 43 நாடுகள் மட்டுமே இருந்தன. ஜெர்மனி 1926 வரையில் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதே ஆண்டில்

1934-ல் ஜப்பானும், ஜெர்மனியும் அச் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டன. அதனுடைய வரலாற்றில் எந்தக் காலத்திலும் ஐந்து பெரிய வல்லரசுகளுக்குமேல் அதில் இடம் பெறவில்லை; அல்லது எக் கட்டத்திலும் இரண்டு பெரிய வல்லரசுகளுக்குக் குறையவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள் எப்பொழுதும் அந்தச் சங்கத்தில் சேரவில்லை. 1939 டிசம்பரில் ரஷ்யா, பின்லாந்தின்மீது போர் தொடுத்ததால், அதை 'ஆக்கிரமிப்பாளர்' என்று அறிவித்துச் சங்கத்திலிருந்து வெளியேற்றிவிட்டனர்.

சங்கத்தில் மூன்று நிறுவனங்கள் உருவாக்கப்பெற்றன. அவை: (1) பொதுச்சபை, (2) நிர்வாகக் குழுவினர், (3) அலுவலகம். தவிர, அலுவலகத்தோடு மற்றும் சில ஆலோசனை நிறுவனங்களும், தொழில் நுணுக்க நிறுவனங்களும் இடம்பெறுகின்றன. இச் சங்கத்துடன் மற்றும் இரண்டு நிறுவனங்கள் இணைக்கப்பெற்றிருந்தன. அவை : (1) நிரந்தர சர்வதேசிய நீதிமன்றம், (2) சர்வதேசியத் தொழில் நிறுவனமாகும்.

பொதுச்சபை, சர்வதேச சங்கத்தின் சட்டசபையைப் போன்றதாகும். சர்வதேச சங்கத்தில் சேர்ந்துள்ள நாடுகளின் பிரதிநிதிகள் இப் பொதுச்சபையின் விவாதங்களில் கலந்துகொள்வர். இப் பொதுச்சபை, உலக மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கும் அரங்கமாகவும் பணியாற்றுகிறது. இச் சபையின் கடமைகளாவன : (1) புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், (2) நிர்வாகக் குழுவில் நிரந்தரமற்ற அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தல், (3) நிர்வாகக் குழுவில் அதிக அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்வதை ஏற்றுக்கொள்ளல், (4) நிரந்தர சர்வதேச நீதிமன்றத்து நீதிபதிகளை நிர்வாகக் குழுவினருடன் சேர்ந்து தேர்ந்தெடுத்தல். சில நிகழ்ச்சி முறைகளையும், புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்வதையும் தவிர, மற்றவற்றிற்குச் சங்கத்தின் எல்லா அங்கத்தினர்களின் ஒருமுகமான முடிவு அவசியம் தேவைப்படுகின்றது.

நிர்வாகக் குழுவில் நிரந்தரமான ஐந்து அங்கத்தினர்களும், அதாவது பிரிட்டன், ஃபிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி (1926-க்குப் பிறகு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் மற்றும் நிரந்தரமற்ற அங்கத்தினர்களும் நான்கிலிருந்து 1922-ல் ஆறு பேரும், 1926-ல் ஒன்பது பேரும், 1933-ல் பத்து பேரும், 1936-ல் பதினைந்து பேரும்) இடம் பெற்றனர். இந்த நிரந்தரமான அங்கத்தினர்களைப் பொதுச்சபை ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கிறது. அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமை

அளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்வாகக் குழுவின் முக்கியமான பணி என்னவென்றால், அக் குழுவினரிடம் தகராறுகளைப்பற்றி முறையிட்டால் அவற்றை விசாரிக்கவும், பரிசீலனை செய்யவும், பொதுச்சபை மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டு மென்பது குறித்து ஆலோசனை கூறவும் வேண்டும். அக் குழுவினர் தனிப்பட்ட முறையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஒவ்வொரு செப்டம்பர் மாதத்திலும் அக்குழுவினர் கூடுகின்றனர். ஆனால், அவசர காரியம் இருந்தாலும், அல்லது எந்த நாடாவது முறையிட்டாலும் தேவைப்படும்பொழுது நிர்வாகக் குழுவினர் கூடுவர். ஆயுதக் குறைப்புக்கானத் திட்டத்தைத் தயாரித்தல், சங்கத்தின் ஆணைக்குட்பட்ட மானிய நிர்வாகத்தைக் கண் காணித்தல், மற்றும் சமாதான உடன்படிக்கைகளில் குறிப்பிட் டிருக்கும் சில பணிகளை மேற்கொள்ளுதல். உதாரணமாக, சார் பகுதியின் (Saar) பாதுகாவலனுகப் பணிக்கப்பட்டிருப்பதால், அதன் நிர்வாகத்தை நடத்த நிர்வாகக் குழுவினரை நியமனம் செய்தலும், அவர்களிடமிருந்து மூன்றுமாதக் காலத்திற்கு ஒருமுறை அறிக்கையைப் பெறுதலும், சர்வதேச சங்கத்தின் பாதுகாப்பில் டேன்சிக் நகரம் வருவதால், அதற்கு ஆணையாளர் ஒருவரை நியமிக்கவும், சிறுபான்மை வகுப்பினரின் பாதுகாப்பைக் கவனிக்கவும், இந்த நிர்வாகக் குழுவினர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சங்கத்தின் அலுவலகத்தில் 600 அதிகாரிகள் பல்வேறு நாடு களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று நியமனம் செய்யப்பட்டிருந் தனர். அவர்கள் பொதுக் காரியதரிசியின் கட்டுப்பாட்டுக்குள் பணியாற்றினர். இக் காரியாலயத்தில் பணியாற்றும் பல நாட்டு அதிகாரிகளின் சிறிய செல்வாக்கும் அமைதிக்கு வழி வகுக் கின்றது. அவர்களெல்லாம் சர்வதேசிய மனப்பான்மை கொண் டுள்ள ஆண்களும் பெண்களுமாவர்.

இச் சங்கத்திற்குப் பல துணை நிறுவனங்களும் இருந்தன. உலகச் சுகாதாரம், போதை தரும் லாகிரிப் பொருள்கள், அடிமை வர்த்தகம், ஆகியவற்றைக் கவனிக்கும் நிறுவனங்களும், அகதிகள் பிரச்சினைகள் தொழுநோய்ப் பற்றிய ஆராய்ச்சி, அறிவு வளர்ச்சி ஒத்துழைப்பு ஆகியப் பணிகளைக் கவனிக்கச் சிறப்பான நிறுவனங் கள் அமைக்கப் பெற்றிருந்தன. இந்த நிறுவனங்களின் ஆக்கப் பணிகள் பெரிய செல்வாக்குப் பெற்றவையாக இல்லாவிடினும், அவற்றின் பணி மிகவும் போற்றுதற்குரியதாகும். சர்வதேச நீதி மன்றம் 1922-ல் ஹேக் நகரில் நிறுவப்பெற்றது. சர்வதேச தொழில் நிறுவனம் ஒன்றும் நிறுவப்பெற்றது. இந்த நிறுவனத்தில்

முடிவு செய்யப்பெற்ற தொழிலாளர் பற்றிய சில விதி முறைகள், உறவுகள் ஆகியவற்றை மற்ற நாடுகளும் ஏற்றுக்கொள்ளச் செய்வதே இதன் முக்கியப் பணியாகும். இந்த நிறுவனத்தின் முடிவுகளும் மற்ற அங்கத்தினர் நாடுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சர்வதேச சங்கத்தின் ஆணைக்குட்பட்ட மாநில நிர்வாக முறை (The System of Mandates).

போருக்குப் பிறகு, ஜெர்மனிக்கும், துருக்கிக்கும் சொந்தமான பல நிலப்பகுதிகளைக் குறிப்பாகக் காலனிகளை வெற்றிபெற்ற நேச நாட்டினர் கைப்பற்றி, அவற்றைச் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைத்தன. தோல்வியுற்ற நாடுகளின் காலனிகளை, நேச நாட்டினர் பகிர்ந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச சங்கம் அந்த நிலப்பகுதிகளை, "முன்னேற்றமடைந்த நாடுகளின்" கண்காணிப்பில் விட்டுவைத்தனர். அதனால் அந்தப் பகுதிகளின் மாநில நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகள் அவைகளிலிருந்து எவ்வித நலன்களையும் பெறக்கூடாதென்று கருதினர்.

இவ்விதமான மாநில நிர்வாகத்தை ஒப்புவிக்கும் பணியை நேச நாடுகளின் மேலதிகாரக் குழுவினர் (Allied supreme council) 1919-ல் மேற்கொண்டனர். துருக்கிய ஆதிக்கத்திலிருந்த பகுதிகளான ஈராக் (Iraq), பாலஸ்தீனம் (Palestine), சிரியா (Syria) ஆகிய நாடுகளுக்குத் தற்காலிகமாகச் சுதந்தரத்தை அளித்தனர். ஆனால் "அவர்கள் சுயமாக ஆட்சி பொறுப்பை ஏற்கும் வரையிலும் அவர்களுக்கு நிர்வாகத்தைப் பற்றிய ஆலோசனையும், மற்றும் உதவியும் அளிக்கவேண்டும்" என்ற நிபந்தனைக்குட்பட்டுத்தான் சுதந்தரம் வழங்கப்பட்டிருந்தது. முன்னர் ஜெர்மனிக்குச் சொந்தமான மத்திய ஆப்பிரிக்கக் காலனிகள், டோகோலாந்து (Togoland), கேமரூன்ஸ் (Cameroons), தெங்கனீக்கா (Tenganyika), ருவாண்டா (Ruannda) ஆகிய பகுதிகளின் நிர்வாகப் பொறுப்பைச் சர்வதேச சங்கத்தின் ஆணைக்குட்பட்ட கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள், அப் பகுதிகளில் வாழும் மக்களின் நலத்தையும் ஒழுக்க வளர்ச்சியையும் பாதுகாக்கப் பொறுப்பேற்றனர். தெங்கனீக்காவும் கேமரூன்ஸின் ஒரு பகுதியும், டோகாவில் ஒரு பகுதியும் பிரிட்டனின் கண்காணிப்பில் ஒப்படைத்தனர். பின்கூறியப் பகுதிகளின் பெரும்பான்மை பகுதிகளின் நிர்வாகத்தை ஃபிரான்சிடம் அளித்தனர். தென்மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஸாமோ (Western Samoa) ஈக்வேட்டருக்குத் தெற்கேயுள்ள முன்னாள் ஜெர்மன் பசுபிக் தீவுகள் முறையே தென் ஆப்பிரிக்காவிற்கும், நியுஜிலந்திற்கும், ஆஸ்திரேலியாவிற்கும், ஜப்பானுக்கும் தரப் பெற்றன.

சிறுபான்மை இனத்தவருக்குப் பாதுகாப்பு

புதிய நாடுகளை ஐரோப்பாவில் உருவாக்கியபொழுது, சமாதான மாநாட்டில் சுயநிர்ணயக் கொள்கையின் அடிப்படையில் தான் ஏற்படுத்த முயற்சி செய்தனர். இக் கொள்கையின் அடிப்படையில்தான் பல மாற்றங்கள் செய்யப்பெற்றன. இருந்த போதிலும் அப்படி உருவாக்கப்பெற்ற நாடுகளிலும் சிறுபான்மை இனத்தவர்கள் அந்நிய ஆதிக்கத்தில் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சான்றாக, போலந்து மக்களின் ஆதிக்கத்தின்கீழ் ஜெர்மானியச் சிறுபான்மை இனத்தவரும், இத்தாலிய ஆதிக்கத்தில் செக்குகளும் (Czechs), ருமேனியர்களின் ஆதிக்கத்தில் மகயார்களும் (Magayars) மற்றும் பல இனத்தவர்களும் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தவிர்க்க முடியாத நிலையில்தான் அவ்விதம் செய்யப்பட்டதெனினும், இந்த ஏற்பாடு பல தீமைகளை நாளடைவில் ஏற்படுத்தியது. இவ்விதமான மாற்றங்களில் முன்னர் எதிரிகளாக இருந்தவர்கள் இப்பொழுது அந்நிய ஆதிக்கத்தின்கீழ் ஆளப்படும்பொழுது இயற்கையாகவே எழுகின்ற மனவெறுப்பு அச் சிறுபான்மை மக்களைப் பல இன்னல்களுக்குள்ளாக்கிவிட்டது. அச் சிறுபான்மை வகுப்பினருக்குப் பிரத்தியேகமான பாதுகாப்பு அளிக்கப்படின், ஆட்சிச் செய்கின்றவர்களின் இறைமை அதிகார உரிமைகள் பாதிக்கப்படுவதாகக் கருதினர். இந்தச் சூழ்நிலையில் சமாதானத்தை உருவாக்கியவர்கள், போலந்து, செக்கோஸ்லாவேகியா, ருமேனியா, யூகோஸ்லேவியா, கிரீஸ் ஆகிய நாடுகளைச் சிறுபான்மை இனத்தவரைப்பற்றியப் பிரத்தியேகமான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டனர். இவ் வுடன்படிக்கைகளில் மேற்கொள்ளப்பெற்ற சிறுபான்மை இனத்தவரைப்பற்றியக் கொள்கைகள் பின்னர், ஆஸ்டிரியா, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைகளுடன் இணைக்கப்பெற்றன. தவிர, இக் கொள்கைகள் அல்பேனியா, லாட்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளுக்கும், சர்வதேச சங்கத்தின் மூலமாகப் பொருந்துமாறு செய்தனர். இச் சிறுபான்மை இனத்தவர்களது உடன்படிக்கைகளில் புறக்கணிப்பு நேர்ந்தால், சங்கத்திலுள்ள எந்த அங்கத்தினரும் நிர்வாகக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

சங்கம் வீழ்ச்சியுறக் காரணங்கள்

சர்வதேச சங்கத்தின் அமைப்பைத் தயாரித்தவர்கள் எல்லாப் போர்களும் நெறி முறையற்றவை என்ற அமைதிகாண் கொள்கையை முழுவதுமாக ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் சர்வதேச சங்கம் எல்லாப் போர்களையும் தடுக்கவில்லை. பிரிவு 15-ன்படி,

ஆயுதம் தாங்கிய கலகம், உள்நாட்டுப் போர் ஆகியவை சங்கத்தின் வரையறைக்கு உட்பட்டதல்ல என்று அறிவிக்கப் பெற்றது. சங்கத்தின் அமைப்பு விதிகளைப் புறக்கணிக்கும் பொழுது, அந்த நாடு அல்லது அந்த நாடுகள்மீது மற்ற அங்கத்தினர் நாடுகள் போர்தொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஏற்கனவே சில நாடுகளின் தகராறுகள் நடுவர் முடிவுக்கு விடப்பெற்றும், அல்லது நிர்வாகக் குழுவில் ஒருமுகமான முடிவு ஏற்படவில்லையெனினும், சர்வதேச அளவிலும் அந்த நாடுகள் சட்டபூர்வமாகப் போரில் ஈடுபடலாம். அபிசினியாமீது முசோலினி ஆக்கிரமிப்புச் செய்ததைச் சங்கத்தின் முடிவுக்குப் பின்னர் மூன்று மாதம் கழித்து அந்த முடிவைச் செயலாற்றியிருந்தால், சங்கத்தின் விதிமுறைகளைப் புறக்கணிக்காமல் அந்த ஆக்கிரமிப்பை நிறுத்தியிருக்கலாம். தவிர, ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் ஆட்சியின் கீழுள்ள குடிமக்களின் உரிமைகளைப் பறித்துக் கொண்டாலும் "உள்நாட்டுப் பிரச்சினை" என்ற போர்வையில் அவை தப்பித்துக்கொள்கின்றன. இவ்விதமானச் செய்கையைச் சங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதைப்போலவே மன்ரோ அறிக்கையை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க ஐக்கிய நாடு புரிந்த தீமைகளை மூடிமறைக்க இடமளிக்கின்றது.

போர் கூடாதென்ற நெறிமுறையைச் சங்கம் ஒப்புக்கொண்ட போதிலும், சங்கத்தின் விதிமுறைகளில் குறைபாடுகளுள்ள காரணத்தால் இக் குறிப்பிட்ட குறிக்கோளையும்கூடச் சங்கத்தின் அமைப்புக்கு உட்பட்ட வரையறையில் நிறைவேற்றுவது கடின மாகிவிட்டது. அந்த அளவிற்குச் சங்கம் வலிமையற்ற ஒரு நிறுவன மாகிவிட்டது. போர் மிரட்டலும், அல்லது உண்மையான போர் நிகழ்ந்தாலும், ஆக்கிரமிப்புச் செய்யும் நாட்டின்மீது ஒரு வலிமை மிக்க வல்லரசு ஆக்கிரமிப்பைத் தடுக்கும் செயலில் ஈடுபடுவதற்கும், அல்லது படைவலி மூலமாகப் பெற்ற நியாயமற்ற பயன்களுக்குப் பரிகாரம் தேடுவதற்கும் அதற்கு முடியாத நிலை ஏற்படுகிறது. இதற்குச் சான்றுகப் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிட்டன. சில குறிப்பிட்ட காரணங்களுக்காகச் சங்கத்தின் விதிமுறைகளின்படி போர் தவிர்க்கப்படுகிறதென்றாலும் படைவலி பயன்படுத்துவதைத் தடை செய்யவில்லை. அதனால் ஜப்பான் சீனாவுக்கு அண்மையி லுள்ள மஞ்சூரியாவில் பரந்த அளவில் இராணுவ நடவடிக்கை களில் ஈடுபட்டது. தவிர, சீனாவிலேயே இராணுவ ஆதிக்கம் புரியத் தொடங்கியது. விரைவில் போர் தொடுக்காமலேயே மஞ்சூரியா வையும், சீனாவில் உள்ள மாகாணமான ஜெஹோல் (Jehol) என்ற பகுதியையும் ஆக்கிரமித்துக்கொண்டது. இவ்விதமாகச் செய்ததில்

சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளைப் புறக்கணிக்காமலேயே, ஆக்கிரமிப்பாளர் என்ற பெயர் பெறுமலேயே ஆக்கிரமிப்புச் செயல்களைப் புரிந்தது. சர்வதேச சங்கத்தை உருவாக்கியவர்களின் நோக்கம் ஆரம்பத்தில் எப்படியிருந்த போதிலும், அந்த நோக்கம் நாளடைவில் சர்வதேச அமைதியை நடுவர் முடிவாலும், சமரச மனப்பான்மையாலும் ஏற்படுத்துகின்ற ஒரு நிறுவனமாகத் தான் சர்வதேச சங்கத்தை மாற்றி அமைத்துவிட்டார்கள் என்று கருதவேண்டியிருக்கிறது. சமாதானத்தை நிறைவேற்றி வைக்கின்ற வலிமைமிக்க நிறுவனமாக அவர்கள் அதைச் செய்யவில்லை. சர்வதேச சங்கத்தின் பணிகளைப்பற்றிப் பொதுவாக அப்பொழுது இரண்டு அபிப்பிராயங்கள் இருந்தன. ஆங்கிலோ–அமெரிக்கக் கருத்துப்படி, அமைதியை நிலைநிறுத்தும் தூண்டுகோலாக இந் நிறுவனத்தைக் கருதியதாகும். மற்றொன்று, ஃபிரெஞ்சுக் கருத்தின்படி, முக்கியமாகப் பாரிஸில் ஏற்பட்ட சமாதான உடன் படிக்கைகளை வலிமையின் அடிப்படையில் நிறைவேற்றுவதால், அமைதியைப் பாதுகாக்க முடியுமென்பதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் சர்வதேச சங்கத்தில் இடம் பெறுததால், இரண்டாவது குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறுமல் போய்விட்டது. தவிர போருக்குப் பிறகு, பிரிட்டனில் போர் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அங்கேயுள்ள லிபரல் கட்சியினரும், லேபர் கட்சியினரும், ஆயுதக் குறைப்பையும், ஆயுத உற்பத்திப் பெருக்கத்தையும் தடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். பிரிட்டனைப் போரில் இழுக்கின்ற சங்கத்தின் எந்த நடவடிக்கையையும் பிரிட்டன் ஆதரிக்க முடியாத நிலையில் இருந்தது. அதனால் சங்கத்தின் விதிமுறைகளில் உள்ள குறைபாடுகளைக் காட்டிலும் அதிலுள்ள சில முக்கியமான அங்கத்தினர்களும் குறிப்பாகப் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகள் ஆக்கிரமிப்பைத் தடுக்கவோ, அல்லது போரைத் தவிர்க்கவோ விருப்பமில்லாத காரணத்தால்தான் சங்கத்தின் வீழ்ச்சி ஏற்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் இச் சங்கத்தில் சேராதது ஒரு பெரும் குறையாகும். முதல் உலகப் போரில் தோல்வியுற்ற நாடுகள் நீண்டகாலம் வரையிலும் இச் சங்கத்தில் இடம்பெறவில்லை. அதனால் 1926-ல் ஜெர்மனி நிர்வாகக் குழுவில் உறுப்பினரான பொழுது அங்கே பெரிய குழப்பம் ஏற்பட்டது. சோவியத் ரஷ்யாவும் நீண்டகாலம் கழித்தே இச் சங்கத்தில் சேர முடிந்தது. அதனால் வல்லரசுகள் ஒன்றை ஒன்று சந்தேகிக்கும்நிலை ஏற்பட்டது. ஆகவே ஆயுதக் குறைப்புப் பிரச்சினைகளில் ஜெர்மனி, ரஷ்யா, பிரிட்டன், ஃபிரான்ஸ், இத்தாலி ஆகிய வல்லரசுகள் எவ்வித முடிவுக்கும் வரமுடியவில்லை.

இரண்டாவது உலகப் போர் ஏற்படும்பொழுது பல நாடுகள் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டன. அப்பொழுது, பிரிட்டனும் மிகச் சிறிய 31 நாடுகளுமே சங்கத்தில் இருந்தன. இந்த நாடுகள் சர்வதேச சங்கத்திலிருந்து பல காரணங்களுக்காக விலகிக் கொள்வதைச் சங்கம் ஏற்றுக்கொண்டதே, இச் சங்கம் வீழ்ச்சி யுறக் காரணமாக இருந்தது. சங்கத்தின் பலவீனத்தை அது வெளிக்காட்டியது.

மேலும் பல வல்லரசுகள் சிறிய நாடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கின. 1931-ல் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்டது. சர்வதேச சங்கத்திடம் சீனு முறையிட்டது. ஆனால், சங்கத்தால் ஜப்பானின் ஆக்கிரமிப்பை நிறுத்த முடியவில்லை. ஜெர்மனி வெர்சேல்ஸ் உடன்படிக்கையைப் புறக்கணித்து, படை பலத்தை அதிகரித்ததோடு, கட்டாய இராணுவச் சேவையையும் அறிவித்தது. 1935–36-ல் இத்தாலி முன் எச்சரிக்கையின்றி அபிசீனியாவை ஆக்கிரமித்துக்கொண்டது. இத்தாலியின் இந்த ஆக்கிரமிப்பைச் சங்கம் தடுக்க முடியவில்லை. சர்வதேச சங்கம் இத்தாலியின்மீது பொருளாதார முற்றுகையிடவேண்டும் என்று அறிவித்தது. அதனால் இத்தாலியின் வாணிகமும், தொழில் வளர்ச்சியும், தடைபெற்ற போதிலும் அதனுடைய ஆக்கிரமிப்புத் தணியவில்லை. மற்ற ஐரோப்பிய வல்லரசுகளும் இந்த முற்றுகை யில் அக்கரைகாட்டத் தவறிவிட்டன. இதைப்போலத்தான், ஜெர்மனி அண்மையிலுள்ள நாடுகள்மீது ஆக்கிரமிப்புச் செய்த பொழுது மற்ற வல்லரசுகளும் சங்கமும் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஹிட்லர் 1939-ல் இரண்டாவது உலகப் போரை ஆரம்பித்தபொழுது, சர்வதேச சங்கம் அப் போரை நிறுத்த முடியவில்லை. மேற்கூறிய காரணங்களால் சங்கம் மூடப் பெற்றது.

15. இரண்டு உலகப் போர்களுக்கிடையே

1. சோவியத் ரஷ்யா

ரஷ்ய ஜார் மன்னர்களின் ஆட்சியில் மக்கள் எவ்வித நன்மையையும் பெறவில்லை. எல்லாத் துறைகளிலும் அதிருப்தியே நிலவி இருந்தது. அரசாங்க நிறுவனங்களில் ஊழல்கள் மிகுந்திருந்தன. அரச குடும்பத்தினரின் பொறுப்பற்ற செயல்களும், பிரபுக்களின் அளவுக்கு மீறிய செல்வாக்கும், அப்பொழுதிருந்த படைமான்ய முறை சமுதாயத்தின் தீமைகளுக்குத்தான் பன்முறை அதிகமாக்கின. 1905-ல் ரஷ்யா பெரும் இழிவுக்குள்ளாகியது. மிகச் சிறிய நாடென்று அப்பொழுது கருதப்பெற்ற ஜப்பான் ரஷ்யாமீது வெற்றி கண்டதே இதற்குக் காரணமாகும். ரஷ்யாவில் தொழிற் புரட்சி மிகவும் காலம் கடந்தே வந்தபோதிலும், தொழிற் புரட்சியின் எண்ணற்ற தீமைகள் அங்கே காணப்பெற்றன. தொழிலதிபர்கள்–தொழிலாளர் உறவு அங்கு நல்ல நிலையில் இல்லை. கிராமங்களிலிருந்தும் குடியானவர்கள் அரசாங்கத்தின் நிலக் கொள்கையில் மிகவும் அதிருப்தியுற்று நகர்ப் புறங்களுக்குச் சென்று தொழிற் சாலைகளில் வேலை தேடிச்சென்றனர்.

அப்பொழுதுதான் ரஷ்யாவிலும் சோஷியலிசப் பிரச்சாரம் நடைபெற்று வந்தது. ஜெர்மனியிலும், ஃபிரான்சிலும் சோஷியலிச இயக்கங்கள் ஒடுக்கப்பெற்றன. கார்ல் மார்க்ஸின் "கேபிட்டல்" அல்லது முதலீடு என்ற நூலும், மற்றும் அவரது "கம்யூனிஸ்டு மேனிபெஸ்டோ" என்ற நூலும் மக்களிடையே சோஷியலிசச் சமுதாயத்தை அமைக்க வேண்டிய அவசியத்தை நினைவுறுத்திக் கொண்டிருந்தன. அதிருப்தி நிறைந்த மக்கள் கூட்டம் ஜார் எதேச்சாதிகாரத்தில் பெருகவே, அவர்கள் படிப்படியாகப் புரட்சி மனப்பான்மை கொண்டவர்களாக மாறினர்.

ரஷ்யப் புரட்சி ஏற்படுவதற்குப் பல காரணங்கள் காட்டப்பெற்ற போதிலும் முதல் உலகப் போரே, இந்தப் புரட்சிக்கு மிகவும்

முக்கியமான காரணமாக அமைந்தது. இந்தப் போரின் விளைவுகளே, ரஷ்ய அரசாங்கத்தையும் சமுதாய அமைப்பையும் மாற்றி அமைத்தன. ஜெர்மனி, ஆஸ்டிரியா–ஹங்கேரி ஆகிய நாடுகளின் மீது ரஷ்யா 1914-ல் போர்த் தொடுத்தது. ஏற்கனவே 1905-ல் ரஷ்யா, ஜப்பானிடம் படுதோல்வி அடைந்திருந்தது. அந்த இழிவைத் துடைத்துக் கொள்வதற்காகவே, போருக்கு ஆயத்தம் செய்து கொள்ளாமலேயே போரில் குதித்தது. இந்தப் போரில் ரஷ்யா கலந்து கொள்வதற்குப் போதிய காரணங்களே இல்லை. போருக்கு இறங்குமுன், ரஷ்யா எவ்வித யுத்தத் தயாரிப்பும் செய்து கொள்ளாததால், கிழக்குப் போர் முனையில் பல தோல்விகளை அடைய நேரிட்டது. ரஷ்யப் போர் வீரர்களுக்கு, ரஷ்ய அரசாங்கம் போதிய உணவுப் பொருள்களையோ அல்லது போர்க் கருவிகளையோ தர முடியவில்லை. அதனால் ரஷ்யா போரில் இறங்கி, அதனுடைய சீர்குலைவை வலுவில் ஏற்படுத்திக்கொண்டது. ரஷ்யப் படைகளின் தோல்விகள் அதிகரித்துவரும் உச்ச நிலையில் தான் 1917-ல் ரஷ்யாவில் புரட்சித் தோன்றியது. முதற் புரட்சி 1917 மார்ச் மாதத்திலும் மற்றொன்று 1917 நவம்பர் மாதத்திலும் ஏற்பட்டன. முதற் புரட்சியில் ஜார் இரண்டாம் நிக்கோலஸின் எதேச்சாதிகார ஆட்சி அழிந்தது. இரண்டாவது கட்டத்தில் ரஷ்யப் புரட்சி, தொழிலாளர்களின் குடியரசை நிறுவியது.

மார்ச் மாதத்தில் ஏற்பட்ட புரட்சித் திட்டமிட்டு ஆரம்பிக்கப் பட்டதல்ல. புரட்சி அங்கு திடீரென்று தோன்றியதேயாகும். இந்தப் புரட்சி ஆரம்பிக்கும்பொழுது, "புரட்சிக்காரர்கள்கூட மக்குக் கன்னிப் பெண்கள் போன்று தூங்கிக் கொண்டிருந்தனர்" என்று அப்பொழுது ஒரு பார்வையாளர் எழுதுகிறார். போர்க் காரணமாக நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகரித்துவிட்டது. மக்கள் உணவுப் பொருள்களைப்பெற அலைமோதிக் கொண்டிருந்தனர். அவர்கள் கடைகளுக்கு முன், வரிசை வரிசையாக நின்று 'ரொட்டி' கிடைக்குமா என்று தவம் கிடந்தனர். காலையிலிருந்து மாலைவரையிலும் பட்டினியால் வேதனைபட்டு நின்று கொண்டிருக்கும் இக் கூட்டத்தினர் வேலைநிறுத்தம் செய்வதற்கும், கிளர்ச்சி செய்வதற்கும், பொறுப்பற்ற ஜார் ஆட்சியை ஒழிப்பதற்கும் சிறிதும் தயங்கவில்லை. 1917 மார்ச் 8-ம் தேதியன்று பெட்ரோகிராட்டில் உள்ள பெண் பஞ்சாலைத் தொழிலாளர்கள் கூட்டம் "உணவு வேண்டும்" என்று வேலைநிறுத்தம் செய்தனர். அதற்கு அடுத்த நாளில் ஆண் தொழிலாளர்களும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு கிளர்ச்சி செய்தனர். அவர்கள் "உணவு வேண்டும்", "போரை நிறுத்த வேண்டும்" என்று முழங்கினர். முதல் முறையாக ஜாரின் காதுகளில் "எதேச்சாதிகார ஆட்சி

ஒழிக" என்ற முழக்கம் விழுந்தவுடன், வன்முறையைப் பயன் படுத்தித் தொழிலாளர்களின் புரட்சி இயக்கத்தை ஒடுக்கத் தயங்க வில்லை. மூன்றுவது நாளும் பொது வேலைநிறுத்தம் செய்தனர். பெட்ரோகிராட் நகரில் தொழிலாளர் ஊர்வலங்கள் பவனி வந்தன. இவர்களை விரட்ட அனுப்பப்பெற்ற காவலர்களும் தொழிலாளர்கள் மீது அனுதாபப்பட்டு, அவர்களை மறைமுகமாக ஆதரித்தனர். இதனால் தைரியமடைந்த தொழிலாளர்கள் இன்னும் பலத்த முழக்கங்களுடன் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இந்த நிலையில் இராணுவமும் அரசாங்கத்தின் உத்தரவுகளை அவ மதித்துப் புரட்சிக்காரர்களுக்கு ஆதரவு அளித்தது. ஐந்தாவது நாளில் குழப்பமும் பீதியும் அடைந்த ஜார் இரண்டாம் நிக்கோலஸ் தன் அரச பதவியை விட்டு விலகினார். (பிறகு 1918 ஜூலையில் அவரும் அவருடைய குடும்பத்தினரும் கொல்லப்பெற்றனர்). ஜாரின் ஆட்சி ரஷ்யாவில் வீழ்ந்தது. மிதவாதிகளின் ஆதரவில் ரஷ்யாவில் ஓர் இடைக்கால அரசாங்கம் நிறுவப்பெற்றது. அந்த அரசாங்கத்திற்குத் தலைவராகக் கெரன்ஸ்கி (Kerensky) நியமனம் செய்யப்பட்டார். முடியாட்சி வீழ்ச்சியுறக் காரணமாக இருந்த தொழிலாளர்களும், குடியானவர்களும் தங்களால் அரசாங்கப் பொறுப்புகளை ஏற்க முடியாதென அவநம்பிக்கை கொண்டிருந்த தால் நடுத்தர வகுப்பினரிடம் இந்த அதிகாரத்தை ஒப்படைத்தனர். அதிகாரத்தை ஒப்படைத்தபோதிலும் சோவியத்துகள், அல்லது தொழிலாளர் சங்கங்கள் மூலமாக அவர்கள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஏனெனில், 1905 முதற்கொண்டே, ரஷ்யாவில் தொழிலாளர் சங்கங்கள் நன்கு அமைக்கப் பட்டிருந்தன.

கெரன்ஸ்கியின் அரசாங்கத்தில் மக்கள் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. மிதவாதிகளைவிட, சோவியத்துகளின் செல்வாக்கே அதிகமாக இருந்தது. அதற்கேற்ப இந்த இடைக்கால அரசாங்கம் ஜார் மன்னரின் வெளிநாட்டுக் கொள்கையை அப்படியே பின் பற்றியது. ஜெர்மனி, ஆஸ்டிரியா–ஹங்கேரி ஆகிய நாடுகளுடன் போர்ப் புரிவதை நிறுத்திக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக கெரன்ஸ்கியே போரைத் தீவிரமாக நடத்த முயற்சிகளைச் செய்தார். அவர் புதிய படைகளைத் திரட்டிப் போர் முனைக்கு அனுப்பினர். ஆனால் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை. போர் நீடித்து நடை பெற்றதால், போர் வீரர்கள் சமாதானத்திற்காக ஏங்கினர். அவர்கள் எவ்விதமான வசதிகளுமின்றிப் போர் புரிந்து சலிப் படைந்துவிட்டனர். அதனால் அவர்களுக்கு மிகுந்த அதிருப்தி ஏற்பட்டது. அவர்கள் உடனடியாகச் சமாதானம் வேண்டுமென்று குமுறினர். இராணுவத்தைவிட்டுப் போர் வீரர்கள் கூட்டம் கூட்ட

மாக வெளியேறினர். மேற்கொண்டு போர் செய்து தோல்வி அடைய முடியாது என்று உறுதியாகக் கூறினர். அதனால் கெரன்ஸ்கியின் போர்க் கொள்கை திருப்தியாக அமையவில்லை. போர் நீடித்ததின் காரணமாகவே மீண்டும் உணவுப் பஞ்சமும், உற்பத்தித் தடையும் ஏற்பட்டன. போரை எதிர்த்துப் பிரச்சாரம் நடந்தது. அரசாங்கத்தின்மீதிருந்த இந்த வெறுப்பைப் போல்ஷ்விக் கட்சி நன்கு பயன்படுத்திக் கொண்டது. அக் கட்சியினர் மக்களுக்குச் சமாதானத்தைப் பெற்றுத் தருவதாக உறுதி அளித்தனர்.

புரட்சியின் சமயத்தில் விவசாயிகளுக்கு நிலங்கள் அளிப்பதாக வாக்குறுதி அளித்தனர். ஆனால், கெரன்ஸ்கி அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வித நலன்களையும் செய்ய முன்வரவில்லை. நிலம் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. பகிர்ந்தளிப்பதும் முடியாது என்று கெரன்ஸ்கி அரசாங்கம் அப்பொழுது கூறியது. 1906-ல் ஸ்டோலிபின் (Stolypin) என்ற நிலச் சீர்திருத்தங்களின் விளைவாகச் சிறுபண்ணையாளர்கூட்டம் ரஷ்யாவில் மிகுந்துவிட்டது. சமுதாய நிலங்களிலிருந்து பிரிக்கப்பெற்ற இச் சிறிய நிலங்களை அனுபோக உரிமை கொண்டாடச் சிறு பண்ணையாளருக்குச் சலுகை அளிக்கப்பட்டதால், ஓரளவிற்கு அவர்கள் பெரிய நிலச்சுவான்தார்களுக்குப் போட்டியாக வந்தனர். அதைப்போன்று நிலமிழந்தவர்களின் தொகையும் நிலமில்லாதவர்களின் தொகையும் ஒரு புதிய விவசாயக் கூட்டத்தையே உருவாக்கிவிட்டது. இவர்களெல்லாம் நிலம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். சோஷியலிச மிதவாதிகள் அல்லது நடுத்தர வகுப்பினர் அதிகாரம் பெற்றதும் நிலமில்லாதவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடியாது தவித்தனர். அதனால், விவசாயிகளின் குமுறலும் கொந்தளிப்பும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்தன. அவர்களுடைய செல்வாக்கும் பெருகிக்கொண்டே வந்தது. நாட்டின் எதிர்காலம், அவர்களைத் திருப்தி செய்வதில்தான் அடங்கி இருந்தது. போல்ஷ்விக்குகள் இவர்களுடைய துயரத்தை அகற்ற ஒரு திட்டம் வகுத்தனர். அவர்கள் கையில் அதிகாரம் வந்த பிறகு நிலங்களை இந்தச் சிறிய விவசாயிகளுக்கே பகிர்ந்தளிப்பதாக வாக்களித்தனர். அதனால் விவசாயிகளின் ஆதரவு இந்தக் கட்சிக்கு அதிகமாகக் கிடைத்தது.

இவ்விதமாகவே தொழிலாளர்களும் இலாபத்தில் பங்கு, கூலி உயர்வு, ஓய்வு வசதிகள், கல்வி சுகாதார வசதிகள் வேண்டுமென்று கோரினர். அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசாங்கம் நன்கு கவனிக்கவில்லை. ரஷ்யத் தொழிலாளர்கள் எல்லாம் கிராமங்களிலிருந்து வந்தவர்களாவர். அவர்களுக்குத் தொழிற்சாலைகளில்

வேலை செய்யும் அனுபவமோ, திறமையோ அப்பொழுது இல்லை. அவர்களுடைய மற்றப் பழக்க வழக்கங்களும் மிகவும் பின்னடைந்திருந்தன. அவர்களுக்குக் கல்வி அறிவும் இல்லை. ஆனால், மற்ற ஐரோப்பிய நாடுகளில் காணப்படாத ஒரு நன்மை ரஷ்யத் தொழிலாளர்களுக்கு இருந்தது. அதாவது பெரும்பான்மையான தொழிலாளர்கள் நகரங்களில் உள்ள சில தொழிற்சாலைகளிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைவு என்றாலும், நிர்மாணிக்கப்பெற்ற தொழிற்சாலைகள் மிகவும் பிரம்மாண்டமானதாக இருந்ததால், அந்தத் தொழிற்சாலைகளில் அமர்த்தப்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாக இருந்தது. அதனால் தொழிலாளர் சக்தியெல்லாம் ஒரு சில தொழிற்சாலைகளிலேயே ஒன்று திரட்டப்பட்டது. இது காரணமாக அவர்களிடம் அதிக ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருந்தன. புரட்சி செய்வதற்கு இந்தக் கட்டுப்பாடு மிகவும் அவசியமானதாகும். தவிர, இத் தொழிலாளர்களெல்லாம் போல்ஷ்விக் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்ததால், அந்தக் கட்சியின் பலமும் மிகவும் வளர்ந்திருந்தது.

போரினால் சலிப்படைந்த போர்வீரர்களும் குமுறிக்கொண்டிருந்த விவசாயிகளும் வாழ்க்கை வசதிகளுக்காகப் போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்களும் போரிடுவதால் அவர்கள் இழக்கப்போவது அடிமைத் தளைகளே தவிர, வேறென்றுமில்லை என்று உணர்ந்தனர். இவர்களையெல்லாம் ஒன்றுக இணைத்து அவர்களுக்கு "உழைப்பாளர்கள் குடியரசு" அமைத்துக் கொடுப்பதற்காகப் போல்ஷ்விக் கட்சியினர் பறைசாற்றினர்.

இந்தப் போல்ஷ்விக் கட்சி மற்ற மிதவாத சோஷியலிஸ்டுகளான மென்ஷ்விக் கட்சியுடன் இணைந்து புரட்சி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அறவே இல்லாது போயின. ஏனெனில், மிதவாதிகள் ஜாரின் ஆட்சியைக் கவிழ்த்தபொழுது, போல்ஷ்விக்குகளின் பாராட்டுதல்களையும், ஓரளவிற்கு அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றபோதிலும், அவர்களுக்கு உண்மையில் சோஷியலிசச் சமுதாயத்தை ஏற்படுத்துவதில் அவ்வளவு திடமான நம்பிக்கையும் உறுதியும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டனர். மார்ச் புரட்சியின்போது லெனின் நாடு கடத்தப்பட்டுச் சுவிட்சர்லாந்தில் இருந்தார். ஆனால், அவர் மீண்டும் ரஷ்யாவிற்கு வந்துவிட்டார். அவர் "மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளுமன்றக் குடியரசும் நமக்குத் தேவையில்லை" என்று கூறினர். "நமக்கு வேண்டிய அரசாங்கம் விவசாயிகளாலும்

தொழிலாளர்களாலும்தான் அமைக்கப்பட வேண்டும்" என்று அவர் உறுதியாகக் கூறினார். அவருடைய தலைமையில் விவசாயிகளும், தொழிலாளர்களும் அசையாத நம்பிக்கை வைத்திருந்தனர். சோஷியலிசச் சமுதாயத்தை அமைப்பதில் அவர் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய கொள்கைகளை எக்காரணத்தாலும் விட்டுக் கொடுக்க அவர் தயாராக இல்லை.

மார்ச் மாதம் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக ஜார் மன்னரின் கொடுங்கோன்மை ஆட்சி ஒழிந்தது. அதற்குப் பிறகு இந்த மிதவாதிகளின் ஜனதாயக அரசாங்கம் நிறுவப்பெற்றது. இவர்களுடைய அரசாங்கம் ஒழிக்கப் பெற்று சோஷியலிசச் சமுதாய அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று மக்களிடையே ஓயாது பிரச்சாரம் செய்துவந்தனர். இந்தச் சமுதாய அமைப்பில் நிலப்பிரபுக்களும், முதலாளிகளும் கண்டிப்பாக இருக்கமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறினர். நிலப்பிரபுக்களையும், முதலாளிகளையும் ஒழித்துவிட்டு ஒரு சமுதாயத்தை அமைக்க முடியுமா என்று பலருக்கு ஐயப்பாடு ஏற்பட்டது. அவரது கட்சியிலேயே இந்தச் சந்தேகங்கள் வளர ஆரம்பித்தன. நிலமானிய முறைகளிலிருந்து, சோஷியலிசச் சமுதாயத்தையும், ஜாரின் கொடுங்கோன்மை ஆட்சியிலிருந்து உழைப்பாளர்களின் சர்வாதிகாரத்தையும் (Dictatorship of the Proletariat) ஏற்படுத்துவதென்று கூறுவது, ஆழம் தெரியாது காலை விடுவதாகும் என்று சிலர் கருதினர். இருப்பினும் லெனின் நிலத்தை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்று உறுதியாக இருந்தார். விவசாயிகளின் ஆதரவே போல்ஷ்விக் கட்சிக்கு அதிகமாக இருந்தது. கிராமங்களில் நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலமும், நகரங்களில் தொழிலாளர்களுக்கு அரசியல் அதிகாரமும் வழங்கப்பட்டால், சோஷியலிசச் சமுதாயம் ஏற்படுவதற்குத் தடையேதும் இருக்க முடியாது என்று நம்பினர். அதனால் விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகிய இரு பெரும் சக்திகளை இணைத்து மிதவாதிகளைத் தாக்கினர். இந்தக் கொள்கையில்தான் போல்ஷ்விக்கின் வெற்றி அடங்கியிருந்தது. 1789-ல் ஏற்பட்ட ஃபிரெஞ்சுப் புரட்சியில் நடுத்தர வகுப்பினர் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றி தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் சீர்திருத்தங்களும், நிலங்களும் அளிப்பதாக வாக்குறுதி அளித்து ஓரளவிற்குப் பதவியிலும் இருந்தனர். ஆனால் ரஷ்யாவில் மிதவாதிகள் ஆட்சி கேடு விளைவிக்கக் கூடியது என்று கருதி, அதை அறவே ஒழிக்க போல்ஷ்விக் கட்சி முடிவு செய்தது.

போல்ஷ்விக் கட்சியின் அமைப்பு மிகவும் கட்டுப்பாடுகளுடன் இயங்கி வந்தாலும் அதனுடைய பிரச்சாரக் கருவிகள் மிகவும் குறைவாக இருந்தன. அக் கட்சி பத்திரிகைகளை நடத்தி வந்தது. ஆனால், பத்திரிகைகளை வாங்குவோர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தனர். அந்தக் கட்சியின் நிதி நிலைமையும் நல்லபடியாக இல்லை. பிரச்சாரம் செய்கின்றவர்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தனர். இக் குறைகளை யெல்லாம் அவர்கள் பொருட் படுத்தாது, அக் கட்சியில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தனர். சமாதானம், நிலம், உணவு என்ற மக்களுக்கு மிக முக்கியமான பிரச்சினைகளைத்தான் அவர்கள் தீர்த்து வைப்பதாகக் கூறினர்.

இந்த நிலையில்தான் மிதவாதிகளின் அரசாங்கம் மக்களுடைய மதிப்பையும் நம்பிக்கையும் இழந்துவிட்டது. போரை நீடித்து வந்ததால் மேலும் தோல்விகள், அதனால் உணவுப் பஞ்சம், பொருள் உற்பத்தித் தேக்கம் ஆகிய குறைபாடுகள் தோன்றின. இந்தப் பொருளாதாரச் சீர்குலைவைப் பயன்படுத்திப் போல்ஷ் விக்குகள் இம்முறை அரசாங்கத்தைக் கைப்பற்ற எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. அதனால் அரசாங்கம் போல்ஷ்விக் கட்சியைத் தடை செய்தது. அந்தக் கட்சியின் தலைவர் களைக் கைது செய்தது. லெனின் தலை மறைவாகப் போய்விட்டார். ஆனால், டிராட்ஸ்கி என்ற மற்றத் தலைவரைக் கைது செய்தனர். இந்த வன்முறைகளால் போல்ஷ்விக்குகளின் பிரச்சாரம் சிறிது ஒய்ந்தது. ஆனால், சில இராணுவத் தளபதிகள், குறிப்பாக ஜெனரல் கார்னிலாவ் என்பவர் இராணுவத்தின் உதவியால் அரசாங்கத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தார். இந்த முயற்சியும் வெற்றியளிக்க வில்லை. இருப்பினும் இராணுவத்தினரின் முயற்சி எதிர் புரட்சி இயக்கம் ஏற்படுவதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று தொழிலாளர்களும் விவசாயிகளும் அஞ்சினர். இவ்விதமான ஒரு இயக்கம் வெற்றி பெற்றால் விளைவுகள் அபாயமாக இருக்கும் என்று அஞ்சி மேலும் பெரும்பான்மையான மக்கள் போல்ஷ்விக் கட்சிக்கு ஆதரவு அளிக்க முன்வந்தனர். மிதவாதிகளின் அரசாங்கம்கூட, இடதுசாரிகளுடன் சமரசத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டு கைது செய்த சில தலைவர்களை விடுதலை செய்தனர். டிராட்ஸ்கியும்கூட விடுதலை செய்யப்பட்டார். டிராட்ஸ்கி தான் பெட்ரோகிராட் சோவியத்தின் தலைவர். அவர் நவம்பர் மாதத்தில் ஆரம்பித்த புரட்சி நடவடிக்கைகள் வெற்றிபெற்றன. பெட்ரோகிராட்டிலும், மாஸ்கோவிலும் உள்ள சோவியத்துகளில் பெரும்பான்மையோர் போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்தனர். இரு பெரிய நகரங்களிலும் மிதவாதிகளின் அரசாங்கம் மக்களிடையே யிருந்து துண்டிக்கப்பெற்றது. பல அரசாங்க நிறுவனங்களும்கூட

போல்ஷ்விக் மயமாயின. இவையெல்லாம் போல்ஷ்விக் கட்சியின் வெற்றியைக் காட்டியது. லெனின் இந்தச் சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசாங்கத்தை உடனடியாகக் கைப்பற்ற வேண்டுமென்று கட்சியைத் தூண்டினார். பெட்ரோகிராட்டிலும், மாஸ்கோவிலும் அரசாங்க நிறுவனங்களைக் கைப்பற்ற முடியுமே தவிர, மற்ற மாகாணங்களில் கைப்பற்றுவது சாத்தியமாகாது என்று கட்சியில் கருத்து வேறுபாடுகள் தோன்றின. தொழிலாளர்களின் சர்வாதிகாரம் ஏற்பட்ட பிறகு, விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படும் என்ற கொள்கையில் விவசாயிகள் எவ்விதமான சந்தேகமும் கொள்ளவில்லை என்று லெனின் அளித்த வாக்குறுதியின் பேரில், நவம்பர் புரட்சியை ஆரம்பித்தனர்.

1917 நவம்பர் 7-ம் தேதியன்று புரட்சி ஆரம்பிக்கப்பெற்றது. சுமார் 25,000 ஆயுதம் தாங்கிய போல்ஷ்விக் கட்சி அங்கத்தினர்கள் மிகவும் ஒழுங்கான முறையில் இந்தப் புரட்சியில் கலந்து கொண்டனர். உண்மையில் மிதவாதிகளின் அரசாங்கத்திற்கு முன்பு, இப் புரட்சிப் படையினர் தொகை மிகவும் சிறிதெனினும் அரசாங்கத்தின் அடக்குமுறை மிகவும் குறைந்த அளவில் தான் இருந்தது. இதற்கு முக்கிய காரணம், பெட்ரோகிராட் படையினர் புரட்சிக்காரர் பக்கம் சேர்ந்து கொண்டதேயாகும். அதனால், வெகு எளிதில் பெட்ரோகிராட்டில் உள்ள ரயில்வே நிலையங்களையும், அரசாங்க அலுவல்களையும், பாங்கிகளையும், புரட்சிக்காரர்கள் ஆக்கிரமித்துக்கொண்டனர். இவர்களுடைய ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்பே இல்லையென்று கூறலாம். டிராட்ஸ்கி அவருடைய ஒரு குறிப்பில், "இரத்தம் சிந்தாது இவ்வளவு அமைதியான முறையில் புரட்சி செய்த பெருமை உலக வரலாற்றில் வேறு எங்கும் காணமுடியாது" என்று எழுதுகிறார். ஆனால், இது புரட்சியின் ஆரம்பக்கட்ட வெற்றியேயாகும். முழு புரட்சியும் செயலாற்றப்படும்பொழுது, டிராட்ஸ்கியே ரஷ்யப் புரட்சியின் வரலாற்றைப்பற்றி எழுதும்பொழுது "இப் புரட்சியின் வெற்றிக்காக ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். தெற்கு, கிழக்கு ரஷ்யப் பகுதிகள் சூறையாடப்பெற்று நாசமாக்கப்பெற்றன. நாட்டில் தொழிற்சாலைகள் எல்லாம் அழிந்துவிட்டன. புரட்சி இயக்கத்தைச் செம்படையின் பயங்கர ஆட்சி ஆட்கொண்டது" என்று குறிப்பிடுகிறார்.

உழைப்பாளர்களின் சர்வாதிகார அரசாங்கத்தை நிறுவிய லெனின் உடனடியாகப் பல பிரகடனங்களை விடுத்தார். எந்தக் காரணத்தை முன்னிட்டும் போர் நீடிக்கக் கூடாதென்றும், ஜெர்மனி, ஆஸ்டிரியா–ஹங்கேரியுடன் சமாதான உடன்படிக்கை

கூைச் செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர் அறிக்கை விடுத்தார். 1917 நவம்பர் 8-ம் தேதியன்று அவர் விடுத்த அறிக்கையில், எவ்விதமான நஷ்டஈடும், ரஷ்யப் பகுதிகளை விட்டுத்தராமலும், சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென்ற ஆலோசனையை ஜெர்மனி நிராகரித்தது. அதனால் லெனின் ஜெர்மனி கூறிய நிபந்தனைகளை ஏற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1918-ல் பிரஸ்ட்–லிட்டோவ்ஸ்க் (Brest–Litovsk) உடன்படிக்கை இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி ரஷ்யா அதன் செழிப்பான யூக்ரேய்ன் பகுதியை ஜெர்மனிக்குத் தர நேரிட்டாலும், நாட்டிற்கு வேண்டிய சமாதானத்தை அவர் மக்களுக்கு அளித்தார். அதனால், போர் வீரர்களிடையே திருப்தி ஏற்பட்டது. மேலும் நாட்டைச் சீரமைப்பதற்கும் புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கும் போர்நிலை கூடாதென்பதை லெனின் உணர்ந்தார். அவர் மற்றொரு பிரகடனத்தின் மூலமாகப் பிரபுக்களின் நில உடமைகளை உடனடியாகப் பறிமுதல் செய்தார். அந்த உடமைகளைப் பறிமுதல் செய்வதற்கு எவ்வித நஷ்டஈடும் தரப்படமாட்டாது என்றும் அறிவித்தார். இந்தச் செய்கையால் கிராமங்களிலுள்ள விவசாயிகள் எல்லாம் போல்ஷ்விக் கட்சிக்கு மிகவும் கட்டுப்பட்டவர்களாக இருந்தனர். எதிர்ப் புரட்சி இயக்கம் கிராமங்களில் தோன்றுவதற்கான எந்தச் சாதகமான சூழ்நிலையையும் அவர் அளிக்கவில்லை. 1848-ல் ஜெர்மனியின் சோஷியலிசப் புரட்சி இயக்கம் தோல்வியுற்றதற்கு முக்கிய காரணமாக இருந்தது, அரசாங்கத்தைப் பழைய பத்தாம் பசலிகளிடம் அப்படியே விட்டு வைத்ததாகும். அமைச்சர்களை மட்டும் மாற்றிவிட்டு, ஆட்சிப் பொறுப்பைப் பழைய பழக்கவழக்கங்களில் தோய்ந்திருந்த அதிகாரிகளிடம் ஒப்படைத்தது ஜெர்மன் புரட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று கார்ல் மார்க்ஸ் கூறியதை லெனில் நினைவில் வைத்திருந்தார். அதனால் ஜார் ஆட்சியில் பணியாற்றிய அத்தனை அதிகாரிகளையும் மாற்றி, ஆட்சிப் பொறுப்பைத் தொழிலாளர் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளுக்கே அளித்தார். அதனால் கட்சியின் கொள்கைகளில் நம்பிக்கை வைத்திருந்த புதிய அதிகார வர்க்கம் தோற்றுவிக்கப்பெற்றது.

எளிதில் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டதால் போல்ஷ்விக் கட்சிக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று கூறுவதற்கில்லை. முதல் மூன்று ஆண்டுகள் வரையிலும் அக் கட்சிக்கும், அதனுடைய அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட இன்னல்கள் அளவற்றவையாகும். ரஷ்யாவில் உள்ள அரச குடும்பத்தினரும், பிரபுக்களும் பணக்காரர்களும், நிலமிழந்த பெரிய நிலச்சுவான்தார்களும், மற்றும் அந்நிய

நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புரட்சியின் எதிர்ப் பாளர்களும் ஒன்றுகூடி போல்ஷ்விக் கட்சியை எப்படியும் பதவியி லிருந்து அகற்றவேண்டுமென்று திட்டமிட்டனர். ரஷ்யப் புரட்சியினால் தோன்றிய உழைப்பாளர் குடியரசை மற்ற உலக நாடுகள் அங்கீகரிக்க மறுத்துவிட்டன. பெரும்பாலும் ஐரோப்பா வில் உள்ள வல்லரசுகள் ரஷ்ய அரசாங்கத்தைத் திட்டமிட்டுக் கவிழ்த்துவிட வேண்டுமென்றும், அதற்காகப் புரட்சியை ஒப்புக் கொள்ளாது அதிருப்தி அடைந்த பழைய பிரபுக்களையும், நிலச் சுவான்தார்களையும் ஆதரவாகக்கொண்டு உள்நாட்டுக் கலகம் ஒன்றை ஆரம்பித்தனர். இக் கலகம் நாளடைவில் உள்நாட்டுப்போரா கவே மாறியது. அப்பொழுது நேச நாடுகளும் ரஷ்யாவின் தெற்குப் பகுதியில் ஜெனரல் டெனிகின் என்பவருடைய தலைமையிலும் சைபீரியாவில் அட்மிரல் கோல்சாக் என்பவருடைய தலைமையிலும் இராணுவத்தை அமைத்துப் போல்ஷ்விக் அரசாங்கத்தை எதிர்த் தனர். ரஷ்யப் புரட்சியின் வெற்றி, இப் படைகளை முறியடிப் பதிலும், உள்நாட்டிலேயே புரட்சியை ஆதரிக்காதவர்களை அறவே ஒழித்து விடுவதிலும்தான் இருக்கின்றதென்பதை உணர்ந்திருந்த லெனின் பெரிய படையைத் திரட்டி, உள்நாட்டுப் போருக்கு ஆயத்தமானார். லெனினுடைய படைக்குச் ' செஞ்சேனை'' என்றும், எதிர்ப்பாளர்களது படைக்கு "வெண் படை" என்றும் பெயரிடப் பட்டது. இந்த இரண்டு படைகளும் கடுமையாக மோதிக் கொண்டதால் நாட்டில் குழப்பமான நிலைமை ஏற்பட்டது. அதனால் லெனின் எவ்வளவு விரைவில் இந்த உள்நாட்டுப் போரை நிறுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் எதிர்ப்பாளர்களை அழிக்கத் தொடங்கினர். மிகவும் பயங்கரமான வன்முறை ஆட்சியை லெனின் மேற்கொண்டார். பல ஆயிரக்கணக்கான எதிர்ப் பாளர்கள் கொல்லப்பட்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்படவில்லை. சிறிதும் இரக்கமின்றி எதிர்ப்பாளர்களை எல்லாம் அழித்துவிட்டதால் போல்ஷ்விக் கட்சி வெற்றி பெற்றது. உள்நாட்டுப் போரும் ஓய்ந்தது. மீண்டும் லெனின் அவருடையக் கொள்கைகளைச் செயலாற்ற முன்வந்தார்.

இப் புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் வெற்றி பெறுவ தற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்கள், ரஷ்யாவின் விவசாயி களும், தொழிலாளர்களுமேயாவர். கிராமங்களிலிருந்து போல்ஷ் விக் கட்சிக்கு நல்ல ஆதரவு கிடைத்தது. ஆரம்பத்தில் ''செஞ்சேனை'' அவ்வளவு நன்றாக அமைக்கப்படவில்லையெனினும் டிராட்ஸ்கியின் நிர்வாகத் திறமையால் செஞ்சேனையைப் பலமிக்கப் படையாக அவர் உருவாக்கினர். தவிர, எதிர்ப் புரட்சிக்காரர்களின் கொடுமைகளும் அளவுக்கு மீறிவிட்டன. அளவுக்கு மீறிய

கொடுமைகளை வெண்படையினர் இழைத்ததால் போல்ஷ்விக் கட்சிக்கு ஆதரவு இன்னும் அதிகமாகக் கிடைத்தது. பெரும் பாலும் அந்நியப் படைகளும், அந்நிய உளவாளிகளும் ரஷ்யாவில் இறக்குமதி செய்யப்பட்டதால், அவர்களுக்கு ரஷ்யர்களுடைய நலன்களைப்பற்றிச் சிறிதும் கவலை இல்லை. அதனால் அவர்களுடைய அட்டூழியங்கள் அதிகரித்துவிட்டன. இவற்றைக் கண்டு தேசிய உணர்ச்சி இன்னும் மக்களிடையே அதிகமாக வளர்ந்தது. முறை யாக அமைக்கப்பெற்ற அரசாங்கத்திற்கு ஆதரவும் கிடைத்தது. ரஷ்யர்களது ஆதிக்கத்தில் பல இன்னல்களை அனுபவித்த போலந்து, ரஷ்யாவின் உள்நாட்டுப் போரை அதிகமாகப் பயன் படுத்தி ரஷ்யாவின்மீது படையெடுத்தது. ஆனால், போலந்து படைகள் முறியடிக்கப்பெற்றன. போல்ஷ்விக் படைகள் வார்சா வரையிலும் முன்னேறிவிட்டன. ஆனால், அப்பொழுது போல்ஷ்விக் அரசாங்கம் தேசிய உணர்ச்சிகளை மதித்ததால், மேலும் அதனு டைய படையெடுப்பைத் தொடராது, போலந்துடன் ஓர் உடன் படிக்கையைச் செய்து கொண்டது. போலந்து இதனால் அதிக நன்மை அடைந்தது. ரஷ்யாவின் ஆதிக்கத்திலிருந்த போலந்து பகுதியையும், போலந்திடமே அளித்துவிட்டது. மேலும் ரஷ்ய அரசாங்கத்தில் இணைந்துள்ள பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்தவர்களுக்கும் சலுகைகளை அளித்தது. அதன்படி ரஷ்ய அரசாங்கத்தில் இணைந்திருக்க விருப்பமில்லையெனின் அவை பிரிந்து கொள்ளலாம் என்ற சலுகை மிகவும் முக்கியமானது. அதன் விளைவாக எல்லையோரத்திலுள்ள சில மாகாணங்கள் தனித்தனிச் சுதந்தர நாடுகளாக அமைவதற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. அவ்விதமாகத்தான், பின்லாந்து, லித்தோனியா, எஸ்தோனியா, லாட்வியா ஆகிய சுதந்தர நாடுகள் தோன்றின.

ரஷ்யப் புரட்சியின் அடிப்படையில் மேலும் பல நாடுகளில் இவ்விதமான புரட்சி இயக்கங்கள் தோன்றும் என்று போல்ஷ்விக் கட்சித் தலைவர்கள் நம்பினர். மேலும் 1914–18-ல் தோல்வியுற்ற நாடுகளும், போரில் சீர்குலைந்த நாடுகளும் புரட்சி செய்து தொழிலாளர்களது குடியரசை நிறுவும் என்று நம்பினர். "1918-ல் ஐரோப்பாவில் சோஷியலிசப் புரட்சி ஏற்படும்" என்று லெனின் கூறினர். அவ்விதமான புரட்சி உலகிலுள்ள எல்லா நாடு களிலும் அவசியம் ஏற்பட்டே தீருமென்றும், அதற்கு ரஷ்யா வழி காட்டியாகவும், ஆலோசகராகவும் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று பொதுவாக நம்பியதால் 1919-ல் மூன்றாவது சர்வதேசக் கம்யூனிஸ்டு மாநாடு (Third Communist International) கூட்டப்பெற்றது.

உலகிலுள்ள எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கழகமாக இது இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது. உலகிலுள்ள மக்களுக்கு, முதலாளித்துவப் பிடியிலிருந்தும் அவர்களுடைய சுரண்டுதலினின்றும் விடுதலை அளித்து, தொழிலாளர்களது குடியரசை நிறுவுவதே இந்தச் சர்வதேசக் கம்யூனிஸ்டுக் கழகத்தின் நோக்கம் என்று அறிவிக்கப்பெற்றது. ஆனால், உலகப் போரில் தோற்றுப் போன ஐரோப்பிய நாடுகளில்கூட கம்யூனிஸ்டுப் புரட்சி ஏற்பட வழியில்லாது போய்விட்டது. ஏனெனில் இனியும் மக்கள் பழைய பழக்க வழக்கங்களையும், பழைய சமுதாய அமைப்பையும் மாற்றி அமைக்கத் துணிச்சல் இல்லாதவர்களாவும், போதியத் தலைவர்கள் இல்லாமையும்தான் காரணம் எனக் கூறப்படுகின்றது. இருப்பினும் மற்ற நாடுகளில் இந்தப் புரட்சி ஏற்படுகின்ற நிலை உருவாகிக் கொண்டிருந்தது. அந்தந்த அரசாங்கங்கள் உண்மையிலேயே மிகவும் பயந்து கொண்டிருந்தன. ஆனால், அவ்வித அபாயம் உடனடியாக ஏற்படவில்லை. ரஷ்யர்கள் முதலில் தங்களுடைய அரசாங்கத்தைப் பலப்படுத்தி மேலும், அதனுடையக் கொள்கைகளை செயலாற்றுவதில் தீவிரமாக முனைந்திருந்தால் மற்ற நாடுகளில் புரட்சியை ஆரம்பிக்கவோ, அல்லது தூண்டவோ அதற்கு அவகாசம் அப்பொழுது கிடைக்கவில்லை. லெனின் 1923-ல் ஒரு கூட்டரசாங்க அரசியல் அமைப்பை ரஷ்ய மக்களுக்கு அளித்தார். அந்தக் கூட்டரசாங்க அமைப்பில் நான்கு குடியரசுகளே முதலில் இணைந்திருந்தன. அவருடையக் கொள்கைகளின்படி முதலில் ஒரு கம்யூனிசச் சமுதாய அமைப்பை உருவாக்குவதில் முயன்று, பிறகு அது வெற்றி அளிக்கவில்லை என்று அறிவித்தார். தொழிற்சாலைகளைத் தேசிய மயமாக்குவதிலும், பெரிய பண்ணைகளையும், பாங்குகளையும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளையும் தேசிய மயமாக்குவதிலும் வெற்றி கண்டாரே தவிர, அதனுடைய நிர்வாகத்தின் திறமையைப்பற்றி அவர் திருப்தி கொள்ளவில்லை.

பல இடையூறுகள் காரணமாகப் புதிய கம்யூனிசச் சமுதாய அமைப்பை ஏற்படுத்துவது, சிறிது காலத்திற்குத் தள்ளிப் போட வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்தார். அதனால் ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை (New Economic Policy) உருவாக்குவதில் அவர் ஈடுபட்டார். பெரிய தொழிற்சாலைகள், பெரிய பண்ணைகள், பெரிய பாங்குகள் ஆகியவற்றை மட்டும் தேசிய உடமைகளாக்கிக் கொள்வதில், பழையக் கொள்கைகளைப் பின்பற்றியதோடல்லாமல், புதிதாகச் சில உடமைகள் தனிப்பட்டவர்களுடைய ஆதிக்கத்தில் இருக்கவேண்டுமென்பதை உணர்ந்ததின் பேரில், சிறு சிறு தொழிற்சாலைகளையும் பண்ணைகளையும் முறையே தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உரிமை

யாக்கினர். கம்யூனிசக் கொள்கையிலிருந்து இப் புதிய பொருளா தாரக் கொள்கை மாறுபட்டிருந்தபோதிலும் இத்திட்டம் நன்கு நிறை வேறியது. இத் திட்டத்திற்கு நல்ல ஆதரவும் இருந்தது. நிர்வாகத் திறமையும், பொருள் உற்பத்திப் பெருக்குதலும் இதனால் அதிக மாகின. நாளடைவில் பெரிய பெரிய தொழிற்சாலைகளை அரசாங்கமே நிர்வகிப்பதில் எவ்விதமான இடையூறும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மிகவும், தைரியத்துடன் கொள்கை மாற்றத்தைச் செய்த லெனின், இதனால் நிரந்தரமான சோஷியலிசச் சமுதாய அமைப்பை ரஷ்யாவில் ஏற்படுத்தினர். 1924-ல் லெனின் இறந்துவிடவே, போல்ஷ்விக் கட்சியில் பல வேறுபட்ட கருத்து களும் தோன்ற ஆரம்பித்தன.

டிராட்ஸ்கியின் தலைமையில் ஒரு கோஷ்டி உருவாகியது. டிராட்ஸ்கியும் அவருடைய ஆதரவாளர்களும் உலக நாடுகளில் எல்லாம் சோஷியலிசப் புரட்சி ஏற்பட்டால்தான், ரஷ்யாவிலும் சோஷியலிசச் சமுதாயம் நீடிப்பதற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படும் என்று கூறினர்கள். அதனால் மற்ற நாடுகளில் சோஷியலிச அரசாங்கங்கள் நிறுவப்படாத வரையிலும் மற்ற முதலாளித்துவ நாடுகளின் எதிர்ப்பும், அதனால் ஏற்படுகின்ற பொருளாதாரச் சீர் குலைவும் ரஷ்யாவிற்கு அபாயமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறினர்கள். மேலும், உலகிலே ஒவ்வொரு நாடும் ஒன்றை ஒன்றை சார்ந்தே வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள தால் மற்ற நாடுகளில் சோஷியலிச அரசாங்கம் ஏற்படாத வரை யிலும் ரஷ்யாவின் அரசியல் பொருளாதார வளர்ச்சி மிகவும் தடை யுறும். அதனால், அதுவரையிலும் சோஷியலிசச் சமுதாயத்தை ரஷ்யாவில் ஏற்படுவதைச் சிறிது தள்ளிவைக்கவேண்டும் என்று கூறினர். நிரந்தரமான புரட்சி (Permanent Revolution) உலகில் ஏற்பட்டு மற்ற நாட்டு மக்களுக்கும் சோஷியலிசச் சமுதாய அமைப்பின் முக்கியத்துவம் தெரிந்தால்தான். ரஷ்யாவின் சோஷியலிச அமைப்பு வெற்றியுறும் என்று அவர்கள் நம்பினர். ஆனால், மற்றொரு கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய ஜோசப் ஸ்டாலின் என்பவர் சோஷியலிசத்தை எந்த ஒரு தனி நாட்டிலும் வெற்றிகரமாக நடத்திக் காட்ட முடியும் என்றும், அதற்கு உலக நாடுகளின் ஆதரவும், அல்லது மற்ற நாடுகளும் இதைப்போன்றே புரட்சி இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது என்ற கொள்கையுடையவர். ஸ்டாலினுக்கு நிறைய செல்வாக்கு இருந்தது. மேலும், சோஷியலிச அரசாங்கம் ரஷ்யா வில் வெற்றிகரமாக இயங்கினால் இயற்கையாகவே மற்ற நாடு களுக்கு, இது ஒரு வழிகாட்டியாகவும், தூண்டுகோலாகவும் இருக்க முடியும் என்பது அவரது விவாதமாகும். மற்ற நாடுகள்

விரும்பினால் ரஷ்யாவில் ஏற்படுத்தப்பெற்ற சோஷியலிச அரசாங்கத்தைப் போன்று நிறுவிக்கொள்ள எவ்விதத் தடையும் இருக்காது என்று அவர் நம்பினார். ரஷ்ய மக்கள் மற்ற முதலாளித்துவ நாடுகளுடன் இணைந்துதான் உயிர்ப் பெற்றிருக்க முடியும் என்பதை அவர் மறுத்தார். இக் கொள்கையை ஸ்டாலினும், அவரது ஆதரவாளர்களும் பின்பற்றுவதற்குப் போல்ஷ்விக் கட்சியிலேயே நல்ல ஆதரவு இருந்தது. அதனால் லெனினுக்குப் பிறகு ஸ்டாலினே அரசாங்கத்தை நடத்த வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதனால் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கங்கள் ஆகியவை எல்லாம் அரசாங்கத்தால் தடை செய்யப்பெற்றன. டிராட்ஸ்கியும் நாடு கடத்தப்பெற்றார். பிறகு அவர் மெக்ஸிகோவில் கொல்லப்பட்டார்.

ஸ்டாலின் அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, அவர் போல்ஷ்விக் கட்சியின் கொள்கைகளைத் திட்டமிட்டுச் செயலாற்ற முன்வந்தார். முதலில் விவசாயிகளின் நலன்கள் கவனிக்கப்பட்டன. அவருடைய ஒரே ஆணையில் வெகு எளிதாக எல்லாப் பண்ணைகளும் தேசியமயமாக்கப்பெற்றன. இந்தச் செய்கையிலே அவருக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படவில்லை. அரசாங்கம் பண்ணைகளை ஏற்றுக்கொண்ட பிறகுதான் நிலங்களை எப்படி நிலமில்லாத விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதென்ற ஒரு சிக்கல் ஏற்பட்டது. சில நிலங்கள் ஏற்கனவே விவசாயிகளிடம்தான் இருந்தன. அவர்கள் குத்தகையாக நிலங்களைச் சாகுபடி செய்ய எடுத்திருந்தனர். மேலும், நிலங்களைப் பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து குத்தகைக்குப் பெற்றவர்களின் தொகை மிகவும் அதிகரித்தது. மக்கள் தொகை அதிகரிப்பினாலும், பண்ணைகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டதாலும் 1918–28-க்குள் பதினாறு மில்லியன் பண்ணைகளிலிருந்து இருபத்து ஐந்து மில்லியன் பண்ணைகளுக்கு அதிகமாகிவிட்டன. சாதாரணமாக ஒவ்வொரு பண்ணையும் 11 ஏக்கரிலிருந்து 40 ஏக்கர்வரையிலும் இருந்தது. நிலமில்லாத விவசாயிகளுக்கு இந்தப் பண்ணைகளைச் சாகுபடிக்காக அளித்து, முன்னர் நிலச்சுவான்தார்களுக்கு அளிக்கப்பட்ட குத்தகையை அரசாங்கம் ரத்து செய்தாகிவிட்டது. அதனால், நிலமில்லாது கஷ்டப்பட்டுக் கொண்டு வந்த சிறு சிறு விவசாயிகள் இப்பொழுது சிறு பண்ணைகளுக்குச் சொந்தக்காரர்களாகிவிட்டனர்.

கிராமங்களிலே, இவ்விதமான தனிப்பட்டவர்களின் உடமைகள் போற்றப்பட்டது போல நகரங்களில் செய்யவில்லை. தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு, முதலாளிகளுக்குப் பதிலாக அரசாங்கமே முதலாளியாகிவிட்டதால்,

தொழிலாளர் கூலி உயர்வு, மற்றும் பல வசதிகளைத் தவிர, அவர்களுடைய வாழ்க்கைத்தரத்திலும், அந்தஸ்திலும் பெரிய மாறுதல்கள் ஏற்படவில்லை. விவசாயிகளுக்கு அளிக்கப்பெற்ற வசதிகளும் சலுகைகளும் நகரத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தரப்படவில்லை என்ற பெரும் அதிருப்தி நிலவியிருந்தது. நகரங்களிலே மட்டும் சோஷியலிசச் சமுதாய அமைப்பும் கிராமங்களிலே முதலாளித்துவச் சமுதாய அமைப்பும் இருப்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சியிலுள்ள பல தலைவர்கள் ஆதரிக்கவில்லை. அதனால் 1929-ல் விவசாயிகளின் நிலங்களையும் கூட்டுப் பண்ணை அமைப்பில் (Collective Farming) கொண்டுவருவதென்று முடிவு செய்யப்பெற்றது. குலாக்ஸ் (Kulaks) என்ற சிறு பண்ணையாளர்களது நிலங்களெல்லாம் பாரபட்சமின்றி பறிமுதல் செய்யப் பெற்றன. பறிமுதல் செய்வதில் நிறைய எதிர்ப்பு இருந்தது. இருப்பினும் மிகவும் கடுமையான வழிகளைப் பின்பற்றிக் கூட்டுப் பண்ணை முறையைச் செயலாற்றினர்.

மூன்று விதமான கூட்டுப் பண்ணை முறைகளை ரஷ்ய அரசாங்கம் பின்பற்றியது. விவசாயிகள் சங்கம் ஒன்றை அமைத்துக்கொண்டு பண்ணைகளைப் பொதுவாகச் சாகுபடி செய்தனர். ஆனால், சாகுபடிக்கு வேண்டிய சாதனங்கள் எல்லாம் விவசாயிகளுக்குச் சொந்தமானவை. மற்றுமொரு முறைப்படி, விவசாயிகள் சங்கத்தில் உள்ள அத்தனை பேரும் வேலை செய்வதிலும், முதலீடு செய்வதிலும் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதை விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பு முறை (Artel) என்று கூறுகின்றனர். இந்த முறைப்படி நிலம், உழைப்பு, முதல் எல்லாம் பண்ணைக் கூட்டமைப்பில் பங்குபெறுகின்றன. மூன்றுவது முறைப்படிக் கம்யூன் (Commune) அல்லது விவசாயிகள் சங்கம் அந்தந்தக் கிராமங்களில் உள்ள எல்லாப் பொருளாதாரச் செயல்களையும் கட்டுப்படுத்துகின்றது. பண்ணைக் கூட்டமைப்பு முறையில் இது மிகவும் முன்னேற்றமடைந்ததும், பயனுள்ளதாகவும் காணப்படுகின்றது. இந்தப் பண்ணைக் கூட்டமைப்பு முறைகளில் சோஷியலிசச் சமுதாய அமைப்பின் வளர்ச்சியைக் காட்டிலும், கூட்டுறவு மனப்பான்மையின் வளர்ச்சியே அதிகமாகக் காணப்படுவதைப் பார்க்கலாம். கூட்டுறவு முறைப்படி, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாயிகளும், அந்தக் கிராமத்தில் உள்ள நிலங்களில் சாகுபடி செய்தல், சிறிய அளவில் முதல் போடுதல், உற்பத்திப் பொருள்களை விநியோகம் செய்தல், இலாபம் அடைதல், ஆகிய எல்லாக் கிராமப் பொருளாதாரச் செயல்களிலும் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. விவசாயிகளின் உழைப்புக்குத் தகுந்த கூலியைத்தான் இந்தச் சங்கம் நிர்ணயம் செய்கிறதே

தவிர, விவசாயிகளின் தேவைக்கேற்பக் கூலியை நிர்ணயம் செய்யாததால் கூட்டுறவு இயக்கத்தின் தன்மைகளே அதிகமாக இருப்பதைக் காணலாம். இருப்பினும் ஒவ்வொரு கிராமத்திற்கும் தெளிவான திட்டமும், அத் திட்டப்படி வேலையும் நடப்பதால் முன் கூட்டியே உற்பத்தி அளவும், அதற்குத் தகுந்த விநியோகமும் நிர்ணயம் செய்யப்படுகின்றது. கூட்டமைப்புப் பண்ணை சாகுபடியால் உற்பத்தி வேகமாகப் பெருகிவிட்டது என்பதை மறுக்க முடியாது. அதனால், ஏற்கனவே காணப்பெற்ற தனிப்பட்ட விவசாயிகளின் உடைமைகளில் உள்ள வேறுபாடுகள் மறைந்து விட்டன.

ரஷ்யாவில் புரட்சிக்குப் பிறகு பெரிய தொழிற்சாலைகளும், சுரங்கங்களும், காடுகளும், பாங்குகளும், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளும் தேசிய உடைமைகளாக்கப்பெற்றன. ஆதலால் முதலாளிகளுடைய ஆதிக்கத்திலும், நிர்வாகத்திலும் எவ்விதமானத் தொழிற்சாலைகளும் இயங்க முடியாமல் போய்விட்டன. இருப்பினும் தொழிலாளர்களே வேலைக்கு அமர்த்தாது, தனிப்பட்டவர்களே செய்து வருகின்ற சில கைத்தொழில்கள் தனிப்பட்டவர்களுடைய உடைமைகளாகவே இருந்துவருகின்றன. உதாரணமாக மீன் பிடிப்போர், காரோட்டிகள், துணி தைப்பவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோர் தனிப்பட்ட விதத்தில் தங்கள் தொழில்களே நடத்தி வருகின்றனர். ஆனால், அவர்களுடைய இலாபம் கட்டுப்படுத்தப்படுகின்றது. எண்ணற்ற விநியோகிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதால், அந்தச் சங்கங்களின் ஆதரவு, இந்தச் சிறு கைத்தொழில்களைச் செய்துவருகின்றவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றன. நாளடைவில் கிராமச் சங்கங்களும், நகராண்மைக் கழகங்களும் விநியோகிப்போரின் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தி வருவதல்லாமல் பல அரசாங்கக் கடைகளும் பொருள்களே விற்று வருவதால் விநியோகிப்போரின் கூட்டுறவுச் சங்கங்கள் அவைகளில் செல்வாக்கை இழந்து வருகின்றன.

தேசியமயமாக்கப்பெற்ற தொழிற்சாலைகள் தொழிலாளர்களுடைய கண்காணிப்பில் முதலில் நடத்தப்பெற்றன. தொழிலாளர்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும் சரிவரத் தொழிற் சாலைகளின் நிர்வாகத்தைக் கவனிக்க முடியவில்லை. போதிய அனுபவமும், திறமையும் அவர்களுக்கில்லை. 1918-ல் தொழிலாளர்களது நிர்வாகம் வெற்றியளிக்கவில்லையென்று ஒப்புக்கொள்ளப் பட்டது. அதற்குப் பிறகு, ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரு நிர்வாகியை அரசாங்கம் நியமித்து நிர்வாகத்தைக் கவனிக்கச்

செய்தது. மேலும், ஒரு குறிப்பிட்ட மூலதனத்திற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் அரசாங்க நிர்வாகத்தின்கீழ் வந்துவிடவே, நாளடைவில் தேசியமயமாக்கப்பெற்ற இந்தத் தொழிற்சாலைகளை எப்படி நடத்துவது என்பதைக் கவனிக்கத் தொடங்கினர். அதன் விளைவாக, தொழிற்சாலைகளைச் சரியானபடிப் பாகுபடுத்தி அவைகளைச் சம்பந்தப்பட்ட "டிரஸ்டுகள்" அல்லது கழகங்களின் ஆதிக்கத்தில் விடப்பெற்றன. அரசாங்க உயர்தர பொருளாதார ஆலோசனைக் குழுவினரால் மட்டும் இந்த 'டிரஸ்டுகள்' கட்டுப்படுத்தப்படுகின்றன. மற்ற வகைகளில் இந்த 'டிரஸ்டுகள்' தங்களது பொறுப்பிலேயே நிதி, வியாபாரம், உற்பத்தி ஆகிய வேலைகளைக் கவனித்து வந்தன. உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களை விற்பனைச் செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் "சிண்டிகேட்டுகள்" அல்லது சங்கங்கள் அமைக்கப் பெற்றன. தொழிற்சாலைகளின் உற்பத்தி 'டிரஸ்டு' நிர்வாகிகளால் திட்டமிடப்படுகின்றது. உற்பத்திப் பொருள்களின் விநியோகம், விற்பனை சிண்டிகேட்டுகளால் நடத்தப்படுகின்றன.

தொழிற்சாலைகளுக்கு மூலதனமிடுதல் மூன்று வகைகளில் செய்யப்படுகின்றது. தொழிற்சாலைகளில் பெறப்படுகின்ற இலாபம் மூலதனமாக ஒதுக்கப்படுகின்றது. பாங்குகள் முன்கூட்டியே நிதிச் சலுகைகளைத் தொழிற்சாலைகளுக்குத் தருகின்றன. அரசாங்கம் அடிக்கடி மானியங்களைத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காக ஒதுக்குகின்றது. தொழிற்சாலை நிர்வாகத்தில் உற்பத்திப் பெருக்குதலும், தரமான பொருள்களை உற்பத்திச் செய்வதிலும்தான் பெரிதும் கவனம் செலுத்தப்படுகின்றதே தவிர, இலாபம் அடைதல் அரசாங்கத்தின் குறிக்கோளல்ல. தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் திறமைமிக்கத் தொழில் நுட்ப வல்லுநர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். ஐந்தாண்டுத் திட்டங்களால், தொழிற்சாலைகளின் அமைப்பு, நிர்வாகம், உற்பத்தி நன்கு கவனிக்கப்பட்டு, உலகிலேயே பெரிய பெரிய தொழிற்சாலைகளை அரசாங்கமே திறமையாக நிர்வாகம் செய்ய முடியும் என்று ரஷ்யா நிரூபித்துவிட்டது.

சோவியத் ரஷ்யாவின் அரசியல் அமைப்பு

1918-ல் ஓர் அரசியல் அமைப்புக் குழு ஏற்படுத்தப்பெற்றது. அக் குழுவினர் ஒரு கூட்டரசாங்கச் சோவியத் குடியரசு (The Russian Socialist Federated Soviet Republic) எனப் பெயரிட்டு ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கித் தந்தனர். ஐந்தாவது சோவியத் காங்கிரஸ் மாநாட்டில் இந்த அரசியல் அமைப்புச் சமர்ப்பிக்கப்பட்டு, பிறகு அந்த மாநாட்டின் சம்மதத்தைப்பெற்றது.

பழைய ஜார் ஆட்சியில் அடங்கியிருந்த முக்கால் பங்கும், இந்தப் புதிய சோவியத் குடியரசின்கீழ் கொண்டுவரப்பட்டது. பிறகு ஐரோப்பாவில் இருந்த ரஷ்யப் பகுதியையும் இதன்கீழ் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டது.

பிறகுதான் 1923-ல் லெனின் புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்தினர். அந்தப் புதிய குடியரசிற்கு, "யூனியன் ஆப் தி சோவியத் சோஷியலிஸ்டு ரிபப்ளிக்ஸ்" (Union of the Soviet Socialist Republics) என்று பெயரிடப்பட்டது. இந்தச் சோவியத் யூனியனில் நான்கு குடியரசுகள் இணைக்கப்பெற்றன. 1924-ல் உஸ்பெக், டர்கோமான் குடியரசுகளும் இந்த யூனியனில் இணைக்கப்பெற்றன. 1929-ல் டாட்ஜ்விக் குடியரசும் இணைந்தது. 1927-ல் சோவியத் ரஷ்யா முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டுவந்தது. அப்பொழுதிருந்து ரஷ்யாவின் முன்னேற்றம், தொழில், விவசாயத் துறைகளில் சிறப்பான வளர்ச்சிபெற்றது. 1933–38-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் கொண்டுவரப் பெற்றது. 1936-ல் ரஷ்யாவில் ஒரு புதிய அரசியல் அமைப்புக் கொண்டுவரப்பெற்றது. இப்பொழுது ரஷ்யாவில் இருக்கும் அரசியல் சட்டம் இதுவேயாகும். இந்த அரசியல் அமைப்புப் பொதுவாகக் குடியாட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், இந்த நாட்டில் அரசாங்கத்தை நடத்துவதும் மற்ற எல்லாத் திட்டங்களை உருவாக்குவதும் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொறுப்பேயாகும். இந்த நாட்டில் உள்ள ஒரே அரசியல் கட்சி இதுவேயாகும். அதனால் இங்கே கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வாதிகார ஆதிக்கம் பெற்றிருக்கிறது.

ரஷ்யாவின் நிர்வாகம் 33 அங்கத்தினர் கொண்ட ஒரு குழுவினரிடம் "பிரிசிடியம்" (Presidium) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவினர் சுப்ரீம் சோவியத்தின் இரண்டு சட்டசபைகளின் இணைப்புக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்தக் குழுவினரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள். இந்தப் பன்மை முறை நிர்வாகம் தனி மனிதனின் ஆட்சியைவிடச் சிறந்தது. மற்ற நாடுகளில் ஜனாதிபதியோ அல்லது அரசனோ வகிக்கும் எல்லா நிர்வாக அதிகாரங்களையும் இந்தப் பிரிசிடியம் நிர்வகிக்கின்றது. இதைத் தவிர, அமைச்சர்கள் சபை அரசாங்கத்தை நிர்வகிக்கும் குழுவினராகப் பணியாற்றுகின்றனர். இந்த அமைச்சர்களின் நியமனங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியால் சிபாரிசு செய்யப்படுகின்றது. ஆனால், சுப்ரீம் சோவியத்துதான் அமைச்சர்களை நியமனம் செய்கின்றது. கட்சியின் பொலிட்பீரோ அல்லது கட்சி பிரிசிடியத்தின் கட்டளைகளின்படியே இவர்கள் செயலாற்று

கிறார்கள். நாட்டின் நிர்வாக அதிகாரம் அவர்கள் கையில் அடங்கி இருந்தபொழுதும், கொள்கைகளை வகுப்பதும், திட்டங்களை உருவாக்குவதும் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்தே இருக்கிறது.

சோவியத் ரஷ்யாவின் சட்டசபைக்குச் "சுப்ரீம் சோவியத்" என்று பெயர். அதில் இரண்டு சட்டசபைகள் இருக்கின்றன. சோவியத் ஆப் தி யூனியன் (Soviet of the Union) என்பது கீழ்ச்சபை; சோவியத் ஆப் தி நேஷனலிட்டிஸ் (Soviet of the Nationalities) என்பது மேல்சபை. இந்த இரண்டு சட்டசபைகளும் ஒரே சமயத்தில் கூட்டப்படுகின்றன; ஒரே சமயத்தில் கலைக்கப் படுகின்றன. இந்த இரண்டு சட்ட சபைகளின் ஆயுட்காலம் நான்கு ஆண்டுகள். முதல் சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் "பிரிசிடியம்" அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பிறகு அமைச்சர்களும் சுப்ரீம் சோவியத்தால் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். சுப்ரீம் சோவியத்திலுள்ள இரண்டு சட்டசபைகளும் அதிகமாகக் கூட்டங்களை நடத்துவதில்லை. ஆண்டுக்கு இரு முறைதான் இந்தச் சபைகளின் கூட்டம் நடைபெறுகிறது. மசோதாக்களை விவாதிப்பதும் சுருக்கமாகவே முடிந்துவிடுகின்றது. ஏனெனில், "எதிர்ப்பு" என்பது சட்டசபைகளில் அவ்வளவாக இருக்காது. ஒரு மசோதா சட்டமாக்கப்படுவதற்கு, இரண்டு சட்டசபைகளும் அனுமதி தரவேண்டும். அரசியல் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு, இரண்டு சட்டசபைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு அளவு பெரும்பான்மையான வாக்குகளால் சம்மதத்தைத் தெரிவிக்கவேண்டும். இரண்டு சபைகளும் வேறு பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தால், இரண்டு சபைகளிலும் தேர்ந்தெடுக்கப்பெற்ற சில அங்கத்தினர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைக்கப்பெற்று வேறுபாடுகளைத் தீர்த்துவைக்கும்.

சோவியத் யூனியனின் உயர்நீதி மன்றத்து நீதிபதிகள் சுப்ரீம் சோவியத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கூட்டரசாங்க அரசியல் அமைப்பாக இருந்தபோதிலும், அரசியல் அமைப்பைப் பாதுகாக்கின்ற பொறுப்புச் சோவியத் யூனியனின் உயர்தர நீதி மன்றத்திற்குத் தரப்படவில்லை. அரசியல் அமைப்பின் எந்தப் பிரிவைப்பற்றியும் தலையிட, அல்லது மற்றச் சட்டங்கள் அரசியல் அமைப்பதற்கு முரண்பட்டதென்று கூறவும் இந்த உயர்தர நீதி மன்றத்திற்கு அதிகாரமில்லை. இப்படிச் செய்ய நிர்வாகக் குழு வான பிரிசிடியத்துக்குத்தான் அதிகாரமிருக்கிறது. உயர்தர நீதிபதிகள் சுப்ரீம் சோவியத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதால், சட்ட சபைகளுக்கும் நிர்வாகத்திற்கும் அடங்கியவாறுதான் அவர்கள் பணியாற்றவேண்டும்.

ரஷ்யாவில் கூட்டரசாங்க அமைப்பை ஏற்படுத்துவதில் பல இடையூறுகள் ஆரம்பத்தில் இருந்தன. ரஷ்யாவில் இணைக்கப் பட்டுள்ள பதினைந்து குடியரசுகளும் ஒரே தேசிய அடிப்படை யிலோ அல்லது ஒரே பண்பை உடைய மக்களோ அல்லது ஒரே மொழி பேசும் மக்களோ அல்ல. இந்தக் கூட்டரசாங்கத்தில் ஏறக் குறைய 180 விதமான தேசிய இனத்தவரும், மற்றும் பல வேறு பாடுடையவர்களாகவும் உள்ளனர். ரஷ்யர்கள் யூக்ரேனியர்கள், பைலோபாஹியன்ஸ், எஸ்கிமோக்கள், மங்கோலியர்கள், துருக் கியர், டார்டார்கள் என்ற பலவித தேசிய உணர்ச்சிகள் கொண்ட மக்கள் அங்குள்ளனர். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மொழி பேசுகின்றனர். ஒவ்வொரு சமயத்தைப் பின்பற்றுகின்றனர். பழக்க வழக்கங்கள் வேறுபட்டிருக்கின்றன. இத்தனை வேறுபாடு உடைய மக்களையும் ரஷ்ய மயமாக்கி இருப்பது ஸ்டாலினுடைய சிறந்த சாதனையாகும். சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து தனித் திருக்கவும், ஒவ்வொரு குடியரசிற்கும் தனித்தனியே அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளவும், அந்தந்த வட்டார மொழி களை இராச்சிய மொழியாகவும், மற்ற வெளிநாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள உரிமையும் அதிகாரமும் வழங்கப்பெற்றுள்ளன. இவையெல்லாம் பொதுவாக ஜனநாயக முறையில் கூட்டரசாங்க அமைப்பு நிறுவப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. இருப்பினும் கம்யூ னிஸ்டுக் கட்சியின் சர்வாதிகாரத் தன்மையே, அரசியல், பொருளாதாரத் துறைகளில் பரவியுள்ளது.

2. துருக்கி

முதல் உலகப் போரில் தோல்வியுற்ற நாடுகளில் துருக்கியும் ஒன்றாகும். அதனால் நேசநாடுகள் அதன்மீதும் ஒரு உடன்படிக் கையைத் திணித்தன. 1920-ல் செவரஸ் உடன்படிக்கை ஒன்று (Treaty of Severes) நேசநாடுகளுக்கும் துருக்கியச் சுல்தானுக்கும் ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி, துருக்கியின் ஐரோப்பிய பகுதிகள் எல்லாம் நேசநாடுகளின் ஆதிக்கத்திற்குள் மாற்றப் பெற்றன. கான்ஸ்டாண்டிநோபிள் மட்டும் துருக்கியிடம் விட்டு வைக்கப்பட்டது. துருக்கிக்குச் சொந்தமான சிரியா, பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகிய மாகாணங்கள் எல்லாம் ஐரோப்பிய வல்லரசுகளின் கண்காணிப்பில் விடப்பெற்றன. ஆசியா மைனரில் உள்ள அனடோலியா, ஸ்மர்னை, கிரீஸ் நாட்டுக்குத் தரப்பெற்றன. துருக்கியின் அழிவு காலம் நெருங்கி விட்டது என்றே கருதினர். ஆனால், இந்தச் சமயத்தில்தான், முஸ்தபா கமால் துருக்கியின் இழிவைத் துடைக்க முன்வந்தார்.

1915-ல் முஸ்தபா கமால் பிரிட்டிஷ் படைகளை டார்டனல்ஸில் எதிர்த்துப் போராடிப் புகழ்பெற்றார். செவரஸ் உடன்படிக்கை துருக்கியின் மக்களைச் சீரழித்துவிடும் என்று எச்சரிக்கை செய்தார். இதற்கெல்லாம் காரணம் சுல்தானின் எதேச்சாதிகார ஆட்சியும் திறமையற்ற நிர்வாகமும் என்று குறைகூறிச் சுல்தானின் ஆட்சியை அகற்றிவிட்டுத் துருக்கியக் குடியரசை நிறுவவேண்டு மென்று முயற்சி செய்து வெற்றிகண்டார். அவர் வெற்றிக்கு உதவியாக இருந்தது அவருடைய இராணுவமேயாகும். அங்காரா வில் இராணுவத்தைக் கலைக்காமல், அதைப் பயன்படுத்தி அவருடைய ஆதிக்கத்திலேயே வைத்துக்கொண்டார். இரண்டு ஆண்டுகளில், கான்ஸ்டாண்டிநோபிளில் அவர் ஒரு போட்டி அரசாங்கத்தை ஏற்படுத்தினர். இந்த நிலையில், 1921-ல் கிரீஸ் நாடு ஸ்மர்னுவைக் கைப்பற்றிக்கொண்டு முஸ்தபா கமாலின்மீது படையெடுத்தனர். அங்காராவுக்கு அண்மையில், முஸ்தபா கமாலின் துருப்புகளுக்கும் கிரேக்கத் துருப்புகளுக்குமிடையே பெரிய போர் நிகழ்ந்தது. இந்தப் போரில் முஸ்தபா கமால் பெரும் வெற்றிபெற்றார். அடுத்த ஆண்டில் ஸ்மர்னுவிற்கு அருகில் கமாலின் படைகள் மீண்டும் கிரேக்கர்களை முறியடித்து ஸ்மர்னு வைக் கைப்பற்றினர். இந்தப் போரில் ஆயிரக்கணக்கான கிரேக் கர்கள் கொலை செய்யப்பட்டனர். எஞ்சியிருந்தவர்கள் ஆசியா மைனரிலிருந்து விரட்டப்பெற்றனர்.

செவரஸ் உடன்படிக்கையை எப்படி நேசநாடுகள் துருக்கியின் மீது செயலாற்றுவது என்பதுபற்றி ஆலோசனை செய்தன. போர் செய்து அலுத்துப்போயிருந்த எந்த ஐரோப்பிய வல்லரசும் மீண்டும் ஒரு போரை ஆரம்பிக்க விரும்பவில்லை. டார்டனல்ஸி லிருந்தும், மார்மோரா கடற்கரையிலிருந்தும், ஃபிரெஞ்சு, இத்தாலியத் துருப்புகள் பின்வாங்கப்பெற்றன. ஒரு சிறு பிரிட்டிஷ் படை மட்டும் அந்தப் பகுதியிலிருந்தது. முஸ்தபா கமால் அந்தப் படையினருக்கு எவ்விதத் துன்பத்தையும் அளிக்கவில்லை. அந்தப் பிரிட்டிஷ் படையுடன் மோதியிருந்தால், இதுவரை அவர் சாதித் திருந்த நல்ல காரியங்கள் எல்லாம் வீணாகிவிடும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால் பிரிட்டனும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து, பிறகு நேசநாடுகளுடன் சம்மதம் பெற்றுப் புதிய உடன்படிக்கை ஒன்றை முஸ்தபா கமாலுடன் செய்துகொண்டது. இதற்கு லஸானே உடன்படிக்கை (Treaty of Lausanne) என்று பெயர். இந்தப் புதிய உடன்படிக்கையின்படி ஆசியா மைனரில் துருக்கியின் ஆதிக்கம் ஒப்புக்கொள்ளப் பெற்றது. 1913-ல் ஏற்பட்ட புகேரிஸ்டு ஒப்பந்தத்தில் நிர்ணயம் செய்யப்பெற்ற துருக்கியின் ஐரோப்பிய எல்லைகளை மதிப்பது என்று

உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி கிரீஸ், கிழக்குத் திரேஸ் பகுதியையும், அட்ரியானோபிளையும் துருக்கிக்குத் தரவேண்டி நேர்ந்தது. டார்டனல்ஸ் துருக்கியின் ஆட்சியிலே விடப்பெற்றது. ஆனால், டார்டனல்ஸ் பகுதி மட்டும் சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் விடப்பெற்றது.

துருக்கியைச் சீரழிவிலிருந்து காப்பாற்றியப் பெருமை முஸ்தபா கமாலைச் சார்ந்தது. அப்பொழுதிலிருந்து மக்கள் அவரை "கமால் அத்தா துருக்" என்று அழைத்தனர். அத்தா துருக் என்றால் துருக்கிய மக்களின் தலைவன் என்று பொருள். அவருடைய மக்கள் கட்சி (People's Party) இப்பொழுது பலமாகிவிட்டதால், அந்தக் கட்சியின் ஆதரவை வைத்துக்கொண்டு அவருடைய ஆறு திட்டங்களை நிறைவேற்றினர். இந்த ஆறு திட்டங்களைக் "கெமாலிசம்" என்று துருக்கியர் குறிப்பிடுகிறார்கள். அவருடைய கட்சியின் கொடியிலும், சிவப்புப் பின்னணியில் அவருடையக் கொள்கைகளைப் பிரதிபலிக்கும், ஆறு வெள்ளை அம்புகள் குறிக்கப் பட்டுள்ளன. அவருடைய முதல் கொள்கை, சுல்தானின் ஆட்சியை ஒழித்து, குடியரசு அரசாங்கத்தை ஏற்படுத்துவதென்பதாகும். அதன்படி குடியரசு அரசாங்கத்தை நிறுவி, அதற்கு அவரே முதல் ஜனதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். இரண்டாவது, துருக்கியின் மக்களுக்குத் தேசிய உணர்ச்சியை அளிப்பது என்பதாகும். துருக்கியின் எல்லைகளில் வசிக்கும் ஒவ்வொரு துருக்கியனும், துருக்கிய மொழி பேச வேண்டுமென்றும், துருக்கியக் கல்வி பெற வேண்டும் என்றும், நாட்டின் பிரச்சினை தம்முடைய சொந்தப் பொறுப்பாக உணர வேண்டுமென்றும் அவர் பிரச்சாரம் செய்தார். மூன்றுவதாக, மக்களிடம்தான் இறைமை இருக்கிறதென்றும், அவர்கள்தான் அரசாங்கத்தை நிறுவவேண்டும் என்று கூறினர். நான்காவதாக, நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பெரிய தொழிற்சாலைகளும், போக்கு வரத்துச் சாதனங்களும், சுரங்கத் தொழில்களும் அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்தார். விவசாய வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அரசாங்கம் மானியங்கள் அளித்து உதவினர். ஐந்தாவதாக, துருக்கியின் மக்களைச் சமய ஆதிக்கத்திலிருந்து விடுதலையுறச் செய்தார். பழைய வழக்கப்படி, சுல்தான அரசியல் தலைவராகவும், சமயத் தலைவராகவும் மக்கள் கருதி வந்தனர். ஆனால், கமாலின் கொள்கைப்படிச் சமய விவகாரங்களில் அரசாங்கம் தலையிடாதென்றும் அவரவர் விரும்பும் சமயத்தைப் பின்பற்றலாம் என்ற சமயப் பொறையைப் பின்பற்றினர். ஆறுவது, துருக்கிய மக்களை ஐரோப்பிய மயமாக்குவதென்பதாகும். பழைய பழக்க வழக்கங்களை விட்டுவிட வேண்டுமென்பதற்காகச்

சட்டமே கொண்டு வந்தார். அவர்களுடைய "பெஸ்" குல்லாவும், தலைப்பாகையும் மாறிவிட்டன. ஐரோப்பியர்களைப்போல உடைகளை அணிந்தும், தொப்பிகளை அணிந்தும் துருக்கிய மக்கள் நாகரிக மாகத் தோன்றினர். பெண்கள் உரிமைகள் போற்றப்பெற்றன. முன்புபோல் அல்லாது, பெண்கள் படிக்கவும், அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளவும், மற்றவர்களுடன் பழகவும் முன் வந்தனர். பெண்களுக்கு உரிமைகள் தரப்பெற்றன. சட்ட சபையில் பெண்கள் இடம்பெற்றனர். பல பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் பழக்கமும் சட்டத்தின் மூலமாகத் தடை செய்யப்பட்டது. மிகவும் முக்கியமான சீர்திருத்தமாவது, பழைய துருக்கிய எழுத்துகளை மாற்றி அவற்றை இலத்தீன் வடிவமாக்கிய தாகும். துருக்கியின் நாகரிகத்திற்கும் புதிய வளர்ச்சிக்கும், காரணமாக இருந்த கமால் அத்தா துருக் ஒரு சமயம் பிரிட்டிஷ் இராஜதந்திரியிடம் கூறும்பொழுது, "நான் இறந்துவிட்டால், என்னுடைய பதவியை ஏற்க ஆயிரக்கணக்கான துருக்கியர்கள் இருக்கின்றனர்" என்று பெருமையாகச் சொன்னார். இந்த ஆறு திட்டங்களையும் துருக்கியர் "கெமாலிசம்" என்று கூறுகின்றனர்.

துருக்கியில் மக்கள் கட்சி என்ற ஒரே கட்சிதான் இருந்தது. மற்றக் கட்சிகள் தடை செய்யப்பெற்றன. அதனால் துருக்கியில் ஒரே கட்சியும், ஒரே தலைவனும்தான் இருந்தனர். சர்வாதிகார ஆட்சி அப்பொழுது துருக்கிக்கு மிகவும் அவசியமாக இருந்தது. சர்வாதிகார ஆட்சி அங்கு ஏற்படவில்லையெனில் துருக்கிய மக்கள் நாகரிகமடைய இன்னும் பல ஆண்டுகள் ஆகியிருக்கும். இதனால் துருக்கியச் சர்வாதிகாரத்தை, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளில் தோன்றிய சர்வாதிகார ஆட்சிக்கு ஒப்பிடு கின்றனர். சர்வாதிகார ஆட்சி முறையில் ஒரே மாதிரியாக இருப் பினும், "கமால் அத்தா துருக்" மற்றச் சர்வாதிகாரிகளைப்போல, அண்மையிலுள்ள நாடுகளிடம் ஆக்கிரமிப்புச் செய்வது போன்ற கொள்கைகளை அவர் ஆதரிக்கவில்லை. அவர் மற்ற நாடுகளுடன் நல்ல உறவை ஏற்படுத்திக்கொண்டார். கிரேக்க நாட்டுடனும் கூட நல்ல உறவை நிலைநாட்டினார். போர் செய்ய வேண்டு மென்பது அவருடையக் கொள்கையன்று. மக்களுடைய நலன்கள் பெருகவேண்டும் என்பதே அவர் கொள்கை. டார்டனல்ஸ் (Dardeneles) பகுதியைத் துருக்கியின் முழு ஆட்சியின்கீழ் கொண்டு வருவதற்குச் சர்வதேச சங்கத்தின் அனுமதியைப் பெற்றார். 1936-ல் நடைபெற்ற மாண்டிரியல் மாநாட்டில் அவருக்கு டார்டனல்ஸ் பகுதியைத் துருக்கியுடன் சேர்த்துக்கொள்ள அனுமதி தரப்பெற்றது. மற்ற நாடுகளால் தாக்கப்படும்பொழுது, துருக்கிய டார்டனல்ஸ் பகுதியில் மற்ற நாடுகளின் போக்குவரத்து

செய்யாது தடை செய்யவும் அனுமதி தரப்பெற்றது. அகில இஸ்லாமியக் கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே, அல்லது அரேபிய, இந்திய அரசியல் விவகாரங்களில் ஈடுபடுவதையோ அவர் சிறிதும் விரும்பவில்லை.

இந்த முறையில் நாட்டிற்குப் பல பணிகளைப் புரிந்த கமால் அத்தாதுருக் 1930-ல் காலமானார். அதற்குப் பிறகு ஜனாதிபதியாகப் பதவியேற்றவர் இஸ்மத் இனனு என்பவர். அவரும் கமால் அத்தாதுருக்கைப் போன்றவரேயாவர். இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்தபொழுது, துருக்கி 1945 பிப்ரவரி வரையிலும் நடுநிலைமை நாடாக இருந்தது. ஜெர்மனி துருக்கியைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சி பயன் அளிக்கவில்லை. 1945 பிப்ரவரிக்கு மேல் துருக்கி நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டது.

3. ஃபிரான்ஸ்

ஃபிரான்ஸ் முதல் உலகப் போரில் வெற்றி பெற்றது. ஆனால், அதற்கு நிறைய சேதங்கள் ஏற்பட்டன. ஃபிரான்சின் கிழக்கு, வட கிழக்குப் பகுதிகள் முழுவதும் நாசமாக்கப்பெற்றன. பல நகரங்களும் எரிந்து சாம்பலாயின. பெரிய தொழிற்சாலைகள், பண்ணைகள் அழிந்தன. சுமார் 50 ஆண்டுகளில் இரு முறை ஜெர்மானியர்களின் தாக்குதல்களுக்குள்ளாகிய ஃபிரெஞ்சு மக்கள் ஜெர்மனிமீது பழி வாங்கத் துடித்தனர். அந்த வெறுப்பை அவர்கள் வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் வெளிக்காட்டினர். ஃபிரெஞ்சு மக்கள் போர்ச் சமயத்தில் அடைந்த எல்லா நஷ்டங்களுக்கும், சேதங்களுக்கும் ஜெர்மனி ஈடுசெய்ய வேண்டுமென்று வற்புறுத்தினர். ஜெர்மனி அவ்வளவு பெரிய நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று ஃபிரான்ஸ் பிடிவாதமாக இருந்தது. அந்தத் தொகையை வைத்துக்கொண்டு ஃபிரான்ஸ் அதன் சீரமைப்பை உருவாக்க வேண்டும் என்று கருதியது. தவிர, ஜெர்மன் நாடு சிதறுண்டு கிடந்தால்தான், ஃபிரான்ஸ் அபாயமின்றி எதிர்காலத்தைக் கழிக்க முடியும் என்று கருதியது. அதனால் ஜெர்மனியிலுள்ள ரெயின்லாந்தைத் தனியாகப் பிரிக்கப் பிரச்சாரமும் செய்தது. ஆனால், அதன் திட்டம் இறுதியில் வெற்றிபெறவில்லை. சமாதான உடன்படிக்கை மாநாடு நடந்து கொண்டிருக்கும்பொழுது, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஃபிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் தனியாக ஒரு முக்கூட்டு உடன்படிக்கை செய்துகொண்டன. இந்த உடன்படிக்கையின் முக்கிய நிபந்தனையாவது, ஃபிரான்ஸின் கிழக்கு

எல்லையைப் பாதுகாப்பதாகும். ஆனால், இந்த உடன்படிக்கையை அமெரிக்க மேல் சபை செனேட் அங்கீகரிக்க மறுத்துவிட்டது. அதற்குப் பிறகும் பிரிட்டனும் சிறிது பின்வாங்கியது. ஃபிரான்சில் புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கும், மற்ற முன்னேற்றமான காரியங்களைச் செய்வதற்கும் பெரும் தடையாக இருந்தவை, அந் நாட்டிலுள்ள பல அரசியல் கட்சிகளாகும். பல்வேறான, சிறிய சிறிய அரசியல் கட்சிகள் அங்கு இருந்ததால் கருத்து வேறுபாடு களும் அதிகமாகிக்கொண்டே வந்தன. தவிர, நிலையான அரசாங்கம் ஏற்படுவதற்கு ஃபிரான்சின் கீழ்ச் சட்டசபையான, "சேம்பர் ஆப் டி புடிஸ்" அல்லது பிரதிநிதிகள் சபைக்கு எந்தத் தனிப்பட்ட கட்சிக்கும் பெரும்பான்மையான ஆதரவு கிடைப்ப தில்லை. அதனால் எந்தப் பெரிய கட்சிக்கும் சிறிய கட்சிகளின் ஆதரவு தேவைப்பட்டது. 1870–1914-ல் எவ்வளவு சிறு அரசியல் கட்சிகள் இருந்தனவோ, அவ்வளவு கட்சிகளும் உலகப் போர் முடிந்த பின்னரும் இருந்தன. எந்த வரியை விதித்தாலும், அல்லது புதிய சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தாலும் பிரதம அமைச்சர் ராஜினாமா செய்யவேண்டிய நிலையில் இருந்தார். அதனால் அங்கு, பிரதமர்கள் பதவி ஏற்பது, விலகுவது மிகவும் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன. 1940-ல் ஜெர்மனி ஃபிரான்சின்மீது தாக்கியபொழுது, ஃபிரான்ஸ் வெகு விரைவில் சீர்குலைந்துவிட்டது.

முதல் உலகப் போர் சமயத்தில் ஃபிரெஞ்சு ஜனாதிபதியாக இருந்தவர் ரெய்மாண்ட் பாயின்கேர்; பிரதமராக இருந்தவர் கிளமன்சியோ என்பவர். கிளமன்சியோவைப் 'புலி' என்றும் அழைப்பர். ரெய்மாண்டின் பதவிக்காலம் 1920-ல் முடிவடைந்தது. அந்தப் பதவிக்கு கிளமன்சியோ போட்டியிட்டார். ஆனால், அவர் வெற்றிபெறவில்லை. சமாதான மாநாடுகளில், அவர் ஃபிரான்சின் நலன் எல்லையை அவ்வளவாக வற்புறுத்தாததால் மக்கள் அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதியாக இருந்த பாயின்கேர் 1922–ல் பிரதமராகப் பதவி ஏற்றார். இவர் ஜெர்மனி மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற கொள்கையுடை யவர். இவருடைய காலத்தில்தான் ஜெர்மனியிலுள்ள ரூர் பகுதியை ஆதிக்கம் செய்ய ஒரு படையை அனுப்பினார். ஆனால், அவருடைய எண்ணம் நிறைவேறுததால் 1924-ல் பதவியை விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த ஆண்டிலேயே ஃபிரெஞ்சுப் படைகள் ரூர் பகுதியிலிருந்து திரும்பினர். ஃபிரான்சில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பிராங்கின் மதிப்பு மிகவும் குறைந்துவிட்டது. சீரமைப்பு வேலைகளைச் செய்ய நிறைய பணம் தேவைப்பட்டது. ஜெர்மனியிடமிருந்து ஒரு சிறிய தொகைதான் நஷ்டஈடாக அதுவரையிலும் வசூலிக்கப்பட்டிருந்தது. அதனால்

நாட்டின் சீரமைப்பிற்காக, வரிகளே விதிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. 1926-ல் மீண்டும் பாயின்கேரே பிரதமரானார். மூன்று ஆண்டுகள் அவர் பிரதமராக இருந்தபோது அவர் பல எதிர்ப்புகளையும் சமாளித்து, ஃபிரான்சிற்கு வேண்டிய சீரமைப்பு வேலைகளைச் செய்தார். பிராங்கின் மதிப்புக் குறையாமல் பார்த்துக் கொண்டார். அவருடைய அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றியவர் அரிஸ்டாட் பிரியாண்ட் என்ற சோஷியலிஸ்டு ஆவார். அவர், ஜெர்மனிமீது விதிக்கப்பட்ட கடும் நிபந்தனைகளைத் தளர்த்தவேண்டும் என்றும், இல்லையெனில் ஜெர்மனியிலிருந்து எப்பொழுதும் அபாயம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தார். அதனால், ஜெர்மனியின் மதிப்பை மீண்டும் நிலைநிறுத்த அவர் பல வழிகளைப் பின்பற்றினார். 1926-ல் ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் அனுமதிக்கப்பட்டது. லொகர்னே உடன்படிக்கையும், கெல்லாக்-பிரியாண்ட் உடன் படிக்கையும் ஜெர்மனியுடன் செய்துகொண்டனர். ஜெர்மனியில் இதுவரை கண்காணித்து வந்த நேசநாடுகளின் படைகள் திரும்பப் பெறப்பெற்றன.

ஜெர்மனி மீண்டும் தன்மானத்துடன் வாழ அனுமதிக்கப்பட்ட பிறகு ஃபிரான்ஸ் உடனடியாக அதன் எல்லைகளைப் பலப்படுத்த முயற்சி செய்தது. ஃபிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடையே உள்ள எல்லைப்புறத்தில் "மேகினுட் அரண்" (Maginot Line) நிர்மாணிக்கப்பட்டது. இந்த அரணைக் கண்டு ஜெர்மானியர்கள் கண்டிப்பாகத் தாக்கமுடியாது என்று ஃபிரான்ஸ் கருதியது. அதனால் முதல் உலகப் போர்க் காலத்திலேயே, பெல்ஜியத்தின் வழியாகச் சென்று ஜெர்மானியர் ஃபிரான்சைத் தாக்கினர். அதனால் அடுத்த போரிலும் இவ்விதம் செய்யமாட்டார்கள் என்று தப்பித மாக மதிப்பிட்டனர். 1940-ல் ஜெர்மானியப் படைகள், பெல்ஜி யத்தின் வழியாகத்தான் ஃபிரான்சைத் தாக்கின. அதனால் மேகினுட் அரண் எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை.

1929–32-ல் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. மற்ற நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள தேசியக் கடன்களுக்கு நிவாரணம் தரவேண்டுமென்று அமெரிக்க ஜனாதிபதி அபிப்பிராயப்பட்டார். அதனால் ஜெர்மனிக்கு அதிக நன்மை ஏற்படும் என்று கூறத் தேவையில்லை. அதனால் பாதிக்கப்படும் நாடு ஃபிரான்ஸ். ஃபிரான்ஸ் இதுவரை ஒரு சிறு தொகையைத் தான் ஜெர்மனியிடமிருந்து பெற்றது. நிவாரணச் சலுகை ஜெர்மனி நாட்டிற்குத் தரப்பட்டால், ஜெர்மனி நஷ்டஈடு தருவதை அடியோடு நிறுத்திவிடும் என்று கருதினர். கடன் நிவாரணம் ஓராண்டுக்குத்

தான் தரப்பட்டது எனினும், 1932-க்குப் பிறகு ஜெர்மனி மற்ற நாடுகளுக்குத் தரவேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை அடியோடு நிறுத்திக்கொண்டது. 1932–34-ல் ஃபிரான்சில் பல அரசாங்கங்கள் மாறிவிட்டன. பல புதிய கட்சிகளும் தோன்றின. அங்கே சர்வாதிகார அரசாங்கத்தை ஏற்படுத்த ஒரு பாசிஸ்டு இயக்கமும் தோன்றியது. அந்தக் கட்சிக்கு 'கிராய் தே பூ' (Croix de Few) என்று பெயர். அந்தக் கட்சிக்கு எதிராக இடதுசாரி சோஷியலிஸ்டுக் கட்சிகள் தோன்றின. 1924–32 வரை காஸ்டன் டுமர்க்கியூ (Gaston Doumergue) என்பவர் ஜனாதிபதியாக இருந்தார். 1934-ல் பிரதமராகவும் பதவி ஏற்றார். ஃபிரான்சில் நிரந்தரமான அரசாங்கம் ஏற்படுவதற்கும் பிரிட்டனில் இருப்பதைப் போன்ற நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முயற்சி செய்தார். ஆனால், அவருடைய ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டன. 1935-ல் பியர்லவால் என்பவர் பிரதமரானார். இந்தச் சமயத்தில்தான் ஜெர்மனி யுத்தத் தளவாடங்களைச் செய்வதில் தீவிரமாக முனைந்திருந்தது. இராணுவ அதிகரிப்பும், அளவு கடந்த தேசிய வெறியும் ஜெர்மனியின் வியத்தகு முன்னேற்றமும் ஃபிரான்சுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தின. அப்பொழுது மூசோலினி அபிசீனியாமீது படையெடுத்தார். இந்த விவகாரங்களைச் சரிவர தீர்த்து வைக்காததால் பியர்லவால் பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று. அவருக்குப் பதிலாக லியோன் பிளம் (Leon Blum) என்ற சோஷியலிஸ்டுக் கட்சியைச் சார்ந்த யூதர் பிரதமரானார். அவர் காலத்தில், தொழிலாளர்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. அதிகக் கூலியும், வேலை குறைவும் மற்ற வசதிகளும் தொழிலாளர்களுக்கு நன்மை அளித்தன. ஆனால், தொழிற்சாலைகளின் மந்த நிலையும், விலைவாசி உயர்வும் பணவீக்கமும் ஏற்பட்டதால் புதிய பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றின. இந்த நிலையில் 1937-ல் அவர் பதவியை விட்டு விலகினார். திரும்பவும் பல அமைச்சரவைகள் அமைக்கப்பெற்றன. ஆனால், அவர்களது பதவிக்காலம் வெகு குறுகியதாக இருந்தது. 1938-ல் சோஷியலிஸ்டுக் கட்சியின் முன்னணியும்கூட வீழ்ந்தது. அரசியலில் குழப்பம் ஏற்பட்டிருந்ததைப் போன்று பொருளாதாரத் துறையிலும் பெரிய குழப்பம் ஏற்பட்டிருந்தது. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி செய்யப்பெற்றன. அதனால் நாட்டில் பெரிய அதிருப்தி ஏற்பட்டிருந்தது. ஆனால், இந்த நிலைக்கு நேர்மாறாக ஜெர்மனியில் யுத்தத் தயாரிப்புகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. வேலை நிறுத்தங்கள் தடைசெய்யப்பெற்றன. பொருளாதார முன்னேற்றம் பன்மடங்கு அதிகரித்தது. 1939-ல் ஜெர்மனி போர் பிரகடனமும் செய்தது. 1940-ல் ஃபிரான்சின்மீது ஜெர்மன் படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறின.

4. ஸ்பெயின்

ஸ்பெயின் இரண்டு உலகப் போர்களிலும் நடுநிலைமை வகித்தது. அதனுடைய புவியியல் அமைப்புத்தான் அதற்கு முக்கிய காரணம். பைரனிஸ் (Pyrennes) மலைத்தொடர்கள் ஸ்பெயினை மற்ற ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்தன. நெப்போலியன் போனபார்டே ஸ்பெயினைக் கைப்பற்ற பெரியதொரு போர் புரிந்தும் வெற்றிகாண முடியவில்லை. ஹிட்லர்கூட இந்த நாட்டை ஆக்கிரமிக்காது விட்டுவிட்டார். ஸ்பெயின் நாட்டிலுள்ள காஸ்டைல், அராகன், கிரானடா, லியோன் ஆகிய மாகாணங்கள் நீண்டகாலமாக ஒன்றுக இணைந்திருந்த போதிலும், அந்த மாகாணங்களிடையே நிறைய பகைமை உணர்ச்சி இருந்தது. 1886-ல் பதின்மூன்றும் அல்பான்சோ பிறந்த குழந்தையாக இருக்கும் பொழுதே பட்டத்திற்கு வந்தார். அச் சமயத்தில் ஸ்பெயினுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், காலனிகள் விவகாரங் களால் போர் மூண்டிருந்தது. ஸ்பெயினுக்குச் சொந்தமாக இருந்த பல அமெரிக்கக் காலனிகளையும், குறிப்பாகக் கியூபாவை ஸ்பெயின் இழந்துவிட்டது. காலனிகளை இழந்ததால், ஸ்பெயினுக்குப் பெரிய நஷ்டமும், அவமானமும் ஏற்பட்டபோதிலும்கூட, ஒருவிதத்தில் ஸ்பெயின் இந்தப் போர்களிலிருந்தும், அவைகளினால் ஏற்பட் டிருந்த சிக்கல்களிலிருந்தும் விடுபட்டு நிம்மதியாக இருந்தது. ஓரளவிற்கு ஸ்பெயினில் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது.

ஆனால், ஸ்பானிய மக்கள் மிகவும் பிற்போக்கானவர்களே யாவர். அரசியலில் அங்கு இன்னும் முடியாட்சியே நீடித் திருந்தது. அல்பான்சோவும், மக்களுடைய பிற்போக்கான நிலைமையைப் பயன்படுத்தி, இருபதாவது நூற்றாண்டில் அரசனின் தெய்வீக உரிமைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். ஸ்பெயி னில் ஒரு பாராளுமன்றம் "கார்டஸ்" (Cortes) இருந்தபோதிலும் மக்களுக்கு ஜனநாயகக் கொள்கைகளில் அனுபவமும் அறிவும் இல்லாததால், அரசனும் அவரை ஆதரித்த பிரபுக்களும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இராணுவமும் பிரபுக்களுடைய ஆதிக்கத்தில் தான் இருந்தது. ஸ்பானிய அதிகாரிகளிடையே இலஞ்ச ஊழல்கள் மிகுந்திருந்தன. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைதான் மிகவும் சக்தி வாய்ந்தது. பல பெரிய பண்ணைகளும், தொழிற்சாலைகளும், வியாபார நிறுவனங்களும் அவர்களுடைய ஆதிக்கத்தில்தான் இருந்தன. மக்களுடைய இந்தப் பிற்போக்கான நிலை, புரட்சிக் காரர்களுக்கும், பல தீவிரவாதிகளுக்கும் தகுந்த பிரச்சாரக் களமாக அமைந்தது மட்டுமல்லாமல் மற்ற ஐரோப்பிய நாடுகளி லிருந்து கம்யூனிஸ்டுகளும், சோஷியலிஸ்டுகளும், பாசிஸ்டுகளும் ஏராளமாக அங்கு வந்து குவிந்தனர்.

1923-ல் ஜெனரல் பிரிமோ தே ரிவேரா (Primo de Rivera) என்பவர் இராணுவத்தின் உதவியால் சர்வாதிகாரியாகிவிட்டார். அரசனும் அவரை எதிர்பார்க்க முடியவில்லை. அதனால் ஏழு ஆண்டுகள் வரையிலும் அவரேதான் சர்வாதிகாரியாக இருந்தார். அவருடைய ஆட்சியைச் சோஷியலிஸ்டுகளும் மற்றப் புரட்சிக்காரர்களும் தீவிரமாக எதிர்த்தனர். 1930-ல் அவர் பதவியை ராஜிநாமா செய்தார். அதற்குப் பிறகு அல்பான்சோ மீண்டும் தம் அரச பதவியை இழந்தார். ஸ்பெயினில் குடியரசு நிறுவப்பட்டது. இந்தக் குடியரசிற்கு எதிராகக் கத்தோலிக்கத் திருச்சபையும் மற்றப் பிரபுக்களும், இராணுவ அதிகாரிகளும் பல இடையூறுகளைப் புரிந்து, குடியரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். அதனால், அங்குப் பல கிளர்ச்சிகளும், வேலை நிறுத்தங்களும், ஆகிய குழப்பங்கள் நிகழ்ந்தவண்ணம் இருந்தன.

ஜெனரல் பிராங்கோவின் தலைமையில் குடியரசின் எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து இராணுவத்தின் ஆதரவைப்பெற்று 1931-ல் ஒரு பெரிய கலகத்தை ஏற்படுத்தினர். ஸ்பெயினில் இந்தக் கலகம் ஒரு உள்நாட்டுப் போராகவே மூன்று ஆண்டுகள் நிகழ்ந்தது. இந்த உள்நாட்டுப் போர் மிகவும் கொடுமையாக நடந்தது. மற்ற ஐரோப்பிய நாடுகள் இந்த உள்நாட்டுப் போரை மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து வந்தன. அவர்களுடைய பயமெல்லாம் இந்த ஸ்பானிய உள்நாட்டுப் போர் ஐரோப்பியப் போராக மாறிவிடக்கூடாதே என்பதாகும். ஜெனரல் பிராங்கோ சர்வாதிகாரியாக வருவதற்கு ஹிட்லரும், முசோலினியும் படைகளையும், யுத்தத் தளவாடங்களையும் அளித்து உதவினர். ரஷ்யர்களின் ஆதரவும் உதவியும் குடியரசு அரசாங்கத்திற்கு இருந்தது. இந்த உள்நாட்டுப் போர் நடக்கும்பொழுது ஸ்பெயின் விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடக்கூடாதென்று ஓர் ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பெற்றது. அதன்படி பிரிட்டனும், ஃபிரான்சும் குடியரசு அரசாங்கத்திற்கு இதுவரை செய்துவந்த சிறு உதவியையும் நிறுத்திவிட்டன. ஆனால், ஜெனரல் பிராங்கோவுக்கு ஹிட்லரும், முசோலினியும் தொடர்ந்து உதவி செய்து வந்தனர். 1939 மார்ச் மாதத்தில் ஜெனரல் பிராங்கோ மேட்ரிட் நகரைக் கைப்பற்றினர். அத்துடன் இந்த உள்நாட்டுப் போரும் முடிந்தது. அதற்குப் பிறகு ஜெனரல் பிராங்கோ ஒரு சர்வாதிகாரியாக ஸ்பெயினை ஆட்சி செய்து வந்தார்.

5. இத்தாலி

முதல் உலகப் போருக்குப் பிறகு இத்தாலியில் வறுமையும், அதிருப்தியும் மிகுந்திருந்தன. வேலை நிறுத்தங்களும், கிளர்ச்சி

களும், அங்கு அடிக்கடி நிகழ்ந்து வந்தன. அரசாங்கத்திற்கு அமைதியை நிலைநிறுத்துவதே மிகவும் கடினமான பணியாகி விட்டது. அரசாங்கத்தின் பலவீனமே இதற்குக் காரணமாக இருந்தது. பிரிட்டனில் உள்ள பாராளுமன்ற ஆட்சியைப்போன்று அங்குப் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், இந்த ஆட்சி முறை அங்கு நன்கு அமையவில்லை. ஜனநாயகத்தைப்பற்றி இத்தாலிய மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இந்த நிலையில் புதிய புதிய அரசியல் கட்சிகள் அங்கே தோன்றின. சோஷியலிசம், கம்யூனிசம், பாசிஸம் போன்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கட்சிகள் உருவாக்கப்பெற்றன. அவை மக்களிடையே மேலும் புதிய குழப்பங்களை ஏற்படுத்தின. தவிர, இத்தாலியும் வெற்றிபெற்ற நாடாக இருந்தபோதிலும் மற்ற நேசநாடுகள் பெற்ற வெற்றியின் பயன்களை இத்தாலி அடையவில்லை. சமாதான மாநாடுகளில் இத்தாலியின் கோரிக்கைகளை நேசநாடுகள் புறக் கணித்துவிட்டன. மக்கள் அதனாலும் அதிருப்தி அடைந்திருந் தனர். இச் சூழ்நிலையில்தான் பெனிட்டோ முசோலினி பாசிஸ்டு (Fascist) இயக்கத்தை ஆரம்பித்தார். அவர் இந்தப் பாசிஸ்டு இயக்கத்தை ஒரு கட்சி என்று கூற மறுத்தபோதிலும், இதுவும் ஒரு கட்சியேதான்.

முசோலினி ஆரம்பத்தில் பல வேலைகளில் இருந்தார். ஆசிரியர், போர் வீரர், சமாதானவாதி, பத்திரிகை ஆசிரியர், சோஷியலிஸ்டு ஆகிய பல துறைகளில் பணியாற்றி மிகுந்த அனுபவம் பெற்றவர். அனுபவமே அவருக்கு அதிகப் பயிற்சியை அளித்திருக்கிறது. முசோலினி அதிக ஆர்வமிக்கவரும், அவரைப் பற்றி மிதமிஞ்சிய நம்பிக்கை உடையவராகவும் இருந்தார். அவர் திறமைமிக்கவரும்கூட. மிலான் நகரத்தில் முதலில் ஒரு சோஷிய லிஸ்டுக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அந்தக் கூட்டத்தில் சுமார் ஐம்பது பேர் கொண்ட சோஷியலிஸ்டுகளும், மாஜி சிப்பாய் களும் கலந்துகொண்டனர். இவர்களெல்லாம் வாழ்க்கையில் மிகவும் ஏமாற்றமும், மனக்கசப்பும் அடைந்தவர்கள். பெரும் பாலும் நடுத்தர வகுப்பினரே இவரது கொள்கைகளை ஆதரிக்க முன்வந்தனர். நாளடைவில் இவரது பிரச்சாரத்தைக் கேட்பதற்குக் கூட்டம் சேரவே பாசிஸ இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். சோஷியலிசம், கம்யூனிசம், முதலாளித்துவம் ஆகிய கொள்கை களை இவரது பாசிஸ இயக்கம் வன்மையாகக் கண்டித்தது. பிறகு இந்த இயக்கத்தினர் நாட்டில் நிகழ்ந்த சில வேலைநிறுத் தங்கள் வெற்றியுருவண்ணம் தலையிட்டு அவற்றையெல்லாம் வீணாக்கினர். தொழிற்சாலைகளில் அமைதியும் ஒழுங்கும் இருக்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்தனர். இவருடைய இயக்கக்

கிளைகள் இத்தாலியில் உள்ள எல்லா நகரங்களிலும் அமைக்கப் பெற்றன. 1921 தேர்தலில் கீழ்ச்சட்டசபையில் சுமார் 35 இடங் களைப் பாசிஸ்டுகள் கைப்பற்றினர். 1922 அக்டோபர் மாதத்தில் வரலாற்றுப் பிரசித்திப்பெற்ற பாசிஸ்டுகள் ஊர்வலம் ஒன்று ரோமாபுரியை நோக்கிச் சென்றது. இப் பிரம்மாண்டமான ஊர்வலத்தைக் கண்டு பயந்துவிட்ட இத்தாலிய அரசர் மூன்றும் விக்டர் இமானுவேல் முசோலினியை அழைத்துப் பிரதமராக நியமித்தார்.

1924-ல் நிகழ்ந்த பொதுத் தேர்தல்களில் பாசிஸ்டுகள் பெரு வாரியான இடங்களைச் சட்டசபையில் பெற்றனர். அதனால் முசோலினி சர்வாதிகாரம் செலுத்த எந்தத் தடையும் நாட்டில் இல்லை. முசோலினியின் சர்வாதிகார ஆட்சியில் மற்றக் கட்சி யினருக்கு இடமேயில்லை. அவர்கள் நாட்டைவிட்டு விரட்டப் பெற்றனர். சோஷியலிஸ்டுகள், பாபுலிஸ்டுகள், லிபரல்கள் என்ற மற்றக் கட்சியினர் சட்டசபையில் இருக்க முடியாதவண்ணம் அவர் களுக்குப் பல இடையூறுகள் விளைவிக்கப்பெற்றன. 1925-க்குப் பிறகு இத்தாலிய அரசாங்கம் முழுவதும் பாசிஸ்டுகள் மயமாக மாறிவிட்டது. இந்தக் கட்சியின் ஒரே தலைவர் முசோலினி. அவர் தம்மைச் சர்வாதிகாரி என்று பிரகடனம் செய்துகொண்டார். இத்தாலியில் உள்ள சுமார் பன்னிரண்டு அரசியல் கட்சிகள் நாட்டிற்கு என்ன செய்ய வேண்டுமென்று விவாதித்துக் கொண் டிருக்கும்பொழுது பாசிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றி, அந்த மக்களுக்குத் தேவையான தேசியமும், நல்வாழ்வும், பாதுகாப்பும், பழைய ரோமாபுரியின் புகழையும் அளிப்பதாகப் பிரச்சாரம் செய்த தோடு நிற்காது நடைமுறையிலும் செய்துகாட்டினர்.

பாசிஸ்டுகளின் பிரச்சாரம் மக்களிடையே புதிய நம்பிக் கையை ஏற்படுத்தியது. ஆனால், இந்தப் பாசிஸ்டுகளுக்கு ஒரு நூதனக் கொள்கையோ, அல்லது திட்டமோ கிடையாது. பேசுவதைவிட செயலையே அவர்கள் ஒரு கோட்பாடாகக் கொண் டனர். ஒரு கட்சி, ஒரு சர்வாதிகாரி, ஒரு சர்வாதிகார அரசு, பொருளாதாரக் கூட்டுடமை, தேசியம் ஆகியவையே இவர்களது கொள்கைகளாகும்.

முசோலினி அவரது அதிகாரத்தை நன்குக நிலைநிறுத்திக் கொண்ட பிறகு இத்தாலியின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மிகவும் சிறப்பான திட்டங்களை உருவாக்கினர். அவர் இத்தாலியி லுள்ள கத்தோலிக்கர்களின் நிரந்தர ஆதரவு பெறுவதற்காகப் போப்பிடம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி போப்

பிற்கு ரோமிலே, ஒரு சிறிய நாட்டை (வாடிகான்) அமைத்துக் கொடுத்து அங்கு அவர் சுதந்தரமாக இருக்க வழி செய்து கொடுத்தார். இந்த ஒப்பந்தத்திற்கு லேட்டரன் உடன்படிக்கை (Lateran Treaty) என்று பெயர். இத்தாலியில் ரோமன் கத்தோலிக்கச் சமயம்தான் அங்கீகரிக்கப்பெற்ற சமயமாக விளங்கும் என்று முசோலினி அறிவித்தார். இந்த உடன்படிக்கை கையெழுத்தான பிறகு, இத்தாலிய அரசனுக்கும் போப்பிற்கும் 60 ஆண்டு காலமாக இருந்த தகராறு முடிந்தது.

1929–1932-ல் உலகம் முழுவதும் தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் மந்தநிலை ஏற்பட்டது. மக்களிடையே பொருளாதார நெருக்கடி தோன்றியது. அதனால் இத்தாலிய மக்களது கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்கு, முசோலினி அபிசீனியாவை 1935-ல் ஆக்கிரமித்தார். அச் சமயத்தில் பிரிட்டனும், ஃபிரான்சும் ஸ்டெரஸா அரண் (Stresa Front) அமைப்பதில் தீவிரமாக இருந்தன. அவர்களது அக்கறையெல்லாம் ஜெர்மனியின் எதிர்கால ஆக்கிரமிப்பை எப்படித் தடுப்பது என்பதைப்பற்றியதாக இருந்தது. அதனால் இத்தாலி அபிசீனியாமீது படையெடுத்ததைப் பற்றி அந்த நாடுகள் கவலையுற்றதாகத் தெரியவில்லை. ஆனால், இந்த இரண்டு நாடுகளும் இத்தாலியைக் கண்டித்து அதனுடைய ஆக்கிரமிப்பைப்பற்றிச் சர்வதேச சங்கத்தில் நீண்ட விவாதம் செய்து முடிப்பதற்குள், அபிசீனியாவைப் பிடித்துவிட முடியும் என்று முசோலினி திட்டமிட்டார். அக்டோபர் 1935-ல் அபிசீனியா மீது படையெடுத்து, ஏப்ரல் 1936-ல் அபிசீனியா முழுவதையும் முசோலினி கைப்பற்றிக்கொண்டார். அபிசீனியர்கள் எவ்வளவு திறமையுடன் போர் செய்தும் இத்தாலியின் நவீன யுத்தத் தளவாடங்களின் நாச வேலைக்கு முன்னர் அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அபிசீனியாவின் சக்கரவர்த்தி ஹெய்லி சிலாசி நாட்டைவிட்டே வெளியேறிவிட்டார். பிறகுதான் சர்வ தேச சங்கம் இத்தாலியின்மீது கடும் நடவடிக்கை எடுத்துக் கொண்டது. அந்த நாட்டின்மீது 'பொருளாதார முற்றுகை' செய்யவேண்டும் என்று சங்கம் கட்டளையிட்டது. இத்தாலிக்கும், ஃபிரான்சு, பிரிட்டனுக்கும் இடையே இருந்த உறவு அபிசீனியா வின்மீது ஆக்கிரமிப்புச் செய்ததாலும், ஸ்பெயினில் ஜெனரல் பிராங்கோவுக்கு முசோலினி உதவி செய்து வந்ததாலும் அதிக மாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு முசோலினி அவரது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக்கொண்டார். 1937-ல் ஹிட்லருடன் ஒரு நேச உடன்படிக்கை செய்துகொண்டார். அதனால், 1939-ல் ஏற்பட்ட இரண்டாவது உலகப் போரில் ஜெர்மனி யுடன் சேர்ந்து இத்தாலியும் போரிட்டது. ஜெர்மன்–இத்தாலி–

ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து 'அச்சு நாடுகள்' என்று ஒப்பந்தம் செய்துகொண்டு போர் செய்தன. இரண்டாவது உலகப் போரில் இத்தாலி தோல்வியுறவே, முசோலினியும் இத்தாலிய மக்களால் அடித்துத் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்.

6. ஜெர்மனி

1918-ல் கெய்சர் நேசநாடுகளிடம் சரணடைந்த பிறகு ஹாலந்திற்குத் தப்பி ஓடிவிட்டார். அதற்குப் பிறகு ஜெர்மன் பேரரசு வீழ்ந்தது. அங்கே ஒரு புதிய குடியரசு தோன்றியது. பிரடிரிக் பெர்ட் என்ற சோஷியல் டெமோகிராட் கட்சியின் தலைவர் சான்சலராகப் பதவி ஏற்றார். பேரரசின்கீழ் பணிந்து கிடந்த ஜெர்மன் மக்கள் விரைவில் ஒரு குடியரசு அரசாங்கம் அமைக்க முன் வந்தது விந்தையே. இதற்குக் காரணமாக இருந்தது நேசநாடுகளேயாகும். அவை ஒரு குடியரசு அரசாங்கத்துடன்தான் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பின. மேலும், குடியரசு அரசாங்கத்திடம் நேசநாடுகள் பரிவுடன் நடந்து கொள்ளும் என்று ஜெர்மானிய மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், நடந்தது வேறு. இப் புதிய குடியரசுக்கு முடியாட்சியின் ஆதரவாளர்களும், கம்யூனிஸ்டுகளும் பலத்த இடையூறுகளை இழைத்து வந்தனர். கம்யூனிஸ்டுகள் சோவியத் ரஷ்யாவில் ஏற்பட்ட உழைப்பாளர்களது குடியரசை ஜெர்மனியிலும் ஏற்படுத்த விரும்பினர். பல பெரிய நகரங்களில் தொழிலாளர்ச் சங்கங்கள் நிறுவப் பெற்றன. ஜெர்மனியில் தோன்றிய இந்த இயக்கத்தை "ஸ்பார்ட்டாசிஸ்டுகள்" (Spartacists) என்று அழைத்தனர். ஆனால், இந்த இயக்கத்தை அரசாங்கம் இராணுவ உதவிகொண்டு அடக்கி விட்டது. பிரஷ்யாவில் உள்ள பழைய பிரபுக்கள் கூட்டம் பட்டத்து இளவரசனை அரசனுக்க முயன்றனர். இதைக் கண்டித்து ஜெர்மானியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். முடியாட்சியை மீட்கும் பணி சீர்குலைந்துவிட்டது. இந்த இயக்கத்தின் தலைவர் கேப் (Kapp) நாட்டைவிட்டே ஓடி விட்டார்.

1919-ல் வெய்மார் (Weimar) நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சபை ஒன்று கூட்டப்பெற்றது. அச் சபை ஜெர்மனிக்கு வேண்டிய ஓர் அரசியல் அமைப்பைத் தயாரித்தது. அவர்கள் ஏற்கனவே தற்காலிகமாக நிறுவப்பட்டிருந்த குடியாட்சியை உறுதி செய்தனர். பேரரசிலிருந்த இராச்சியங்களைக் குடியரசு மாகாணங்களாக்கினர். அந்தக் குடியரசிற்கு ஜனாதிபதியே தலைவராவார்.

அவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று ஏழாண்டு வரையிலும் பதவியில் இருப்பார். அந்தக் குடியரசின் முதல் ஜனாதிபதியாகப் பிரடிரிக் பொர்ட் என்பவரே தேர்ந்தெடுக்கப் பட்டார். 1925-ல் அவர் சாகும்வரையிலும் அப் பதவியை வகித்து வந்தார். ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறவும், அரசாங் கத்தின் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்க அமைச்சரவை நிறுவப் பெற்றது. சட்டமியற்றுவதற்கு ஈரங்கச் சட்டசபை ஒன்று நிறுவப் பெற்றது. 'ரெய்ச்ஸ்டாக்' என்பது கீழ்ச்சபை; 'ரெய்ச்ஸ்ராத்' என்பது மேல்சபை. வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பெற்றது.

பாரிஸ் சமாதானக் குழுவினரால் ஜெர்மனியில் எவ்வளவு தொகையை நஷ்டஈடாக வசூலிப்பதென்பதைப் பரிசீலனை செய்ய ரிபரேஷன் கமிஷன் (Reparations Commission) நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷன் 1921-ல் ஓர் அறிக்கை விடுத்தனர். அதில் ஜெர்மனி 6,600,000,000 பவுன்களை நஷ்டஈடாகத் தரவேண்டு மென்று அறிவித்தனர். இந்தத் தொகையை ஆண்டு ஒன்றுக்கு 100,000,000 பவுன்களாகத் தரவேண்டும் என்ற தவணை முறையில் செலுத்தும் சலுகை ஜெர்மனிக்கு அளித்தனர். ஜெர்மனி இவ்வளவு பெரிய தொகையைக் கண்டு மலைத்துவிட்டது. இந்தத் தொகை யைக் குறைக்கவேண்டுமென்று வெய்மார் குடியரசு கேட்டும் அந்த வேண்டுகோளை நேசநாடுகள் நிராகரித்துவிட்டன. அதற்குப் பிறகு முதல் தவணை கட்டுவதற்கு இரண்டு ஆண்டுகளாவது அவகாசம் வேண்டுமென்று கேட்டனர். அதற்கும் சம்மதிக்க வில்லை. அதனால் இலண்டன் பாங்கிலிருந்து கடன் வாங்கி முதல் தவணையாக 50,000,000 பவுன்களை ஜெர்மனி தந்தது. இவ்வளவு பெரிய தொகையை ஜெர்மனியால் கொடுக்க இயலாத நிலைமை இருந்தது. அப்பொழுது ஃபிரெஞ்சுப் பிரதமராக இருந்த பாயின்கேர் ஜெர்மனியின் தொழில் வளம் பெருகி இருந்த ரூர் பகுதியை ஆதிக்கம் செய்துகொள்ள ஒரு படையை அனுப்பிவைத்தார். அதை எதிர்த்து ஜெர்மன் தொழிற்சாலைகள் மூடப்பெற்றன. தொழிலாளிகள் வேலை செய்ய மறுத்துவிட்டனர். அதனால் எவ்வித மான இலாபத்தையும் ஃபிரான்ஸ் அடையவில்லை. படைபலத்தின் மூலமாக ஜெர்மனியை மிரட்டி நஷ்டஈட்டுத் தொகையை வசூல் செய்வது வெர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு முரணானது என்று பிரிட்டன், ஃபிரான்சைக் குறைகூறியது. பிரிட்டனைவிட ஃபிரான் சுக்குத்தான் அதிகமான சேதங்கள் ஏற்பட்டதால் ஃபிரான்சின் புனரமைப்பிற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன என்று ஃபிரெஞ்சு அரசாங்கம் விளக்கம் தந்தது. 1923-க்குப் பிறகு பிரிட்டனின் தலையீட்டின் காரணமாக, தொழிலாளர் வேலை

நிறுத்தங்கள் நிறுத்தப்பெற்று மீண்டும் தொழிற்சாலைகள் ரூர் பகுதியில் திறக்கப்பெற்றன. நஷ்டஈட்டுத் தொகையைத் தர அப்பொழுதுதான் ஜெர்மனி அக்கறைகொண்டது. ஃபிரான்சும் அதனுடைய படையை மீட்டுக்கொண்டது. ஃபிரான்சும், இத்தாலியும், பிரிட்டனிடமிருந்து யுத்தச் செலவுகளுக்காக நிறைய கடன் வாங்கியிருந்தன. இதைத் தவிர, ஃபிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிடமிருந்து ஏராள மானத் தொகையைக் கடன் வாங்கியிருந்தன. பிரிட்டன் மட்டும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 900,000,000 பவுன்களைத் தர வேண்டியிருந்தது. மற்றைய ஐரோப்பிய நாடுகளிடமிருந்து பிரிட்டனுக்கு வரவேண்டிய கடன் சுமார் 2,000,000,000 பவுன்கள். பிரிட்டனிடமிருந்தும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிடமிருந்தும் பெற்ற கடன் தொகையைத் தராமல் ஃபிரான்ஸ் மெதுவாகத் தட்டிக்கழித்து வந்தது. அதனுடைய சேதங்கள் அளவுகடந்திருந்த தால் கடனைத் திருப்பித் தரவேண்டும் என்று பிரிட்டனும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் வற்புறுத்தக்கூடாது என்று ஃபிரான்ஸ் கூறியது. ஆனால், அமெரிக்க ஐக்கியநாடுகள் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஜெர்மனியிடமிருந்து ஐரோப்பிய நாடுகள் நஷ்ட ஈட்டுத் தொகையை வசூலிப்பதை விட்டுவிட்டால், அமெரிக்காவும் அதற்கு வரவேண்டிய கடனை ரத்துசெய்யத் தயார் என்று கூறியது. அதற்குப் பிறகு பிரிட்டன், அமெரிக்காவுக்கு ஆண்டு ஒன்றுக்கு 34,000,000 பவுன்கள் வீதம் 62 ஆண்டுகளுக்குள் தருவதாக ஒப்புக் கொண்டது. ஆனால், இந்தத் தொகையைப் பிரிட்டனுக்குப் பிற நாடுகள் தரவேண்டிய தொகையிலிருந்து தருவதாக ஒப்புக் கொண்டது. அந்தக் கடன் சம்பந்தமாக உடன்பாடு ஏற்படுவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பெற்றன. அமெரிக்காவும், பிரிட்டனும், ஜெர்மனியின் புனரமைப்பிற்காக நிறைய கடன் அளித்து உதவின. ஜெர்மனிமீது பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கை படிப்படியாகக் குறைந்துகொண்டிருந்தது. பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சரான சேம்பர்லேனும், ஃபிரெஞ்சு அமைச்சரான அரிஸ்டைய்ட் பிரியாண்டும், ஜெர்மன் சான்சலரான ஸ்டரஸ்மேனும் லொகர்னே உடன்படிக்கையை (Locarno Treaty) செய்துகொண்டனர். அதைத் தொடர்ந்து ஜெர்மனி–போலந்து, ஜெர்மனி–ஃபிரான்ஸ், ஜெர்மனி–செக்கோஸ்லாவேகியா ஆகிய நாடுகளிடையே பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப் பெற்றன. 1926-ல் ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேர அனுமதிக்கப்பெற்றது.

1925-ல் ஜனாதிபதி பெர்ட் இறந்துவிடவே, மிகவும் வயதான வான்ஹிண்டன்பர்க் என்பவரை ஜனாதிபதியாக ஜெர்மன் மக்கள்

தேர்ந்தெடுத்தனர். போரில் அவர் துணிச்சலான செயல்களைப் புரிந்து புகழ்பெற்றவர். 1927-ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தநிலை காரணமாக ஜெர்மனியிலும் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டது. வெய்மார் குடியரசு அரசாங்கம் இந்த நெருக்கடியைச் சமாளிக்க மிகவும் தவித்தது. ஜெர்மனியின் நாணயச் செலாவணி மிகவும் மதிப்பிழந்துவிட்டது. அதனால், அதிகமான காகிதச் செலாவணி பழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பை நிறைய பணத்தை வைத்துக்கொண்டு கூடை நிறைய வாங்கும் பொருள்கள் அப்பொழுது கூடை நிறையப் பணத்தை வைத்துக்கொண்டு பை நிறையப் பொருள்களை வாங்கவேண்டிய நிலை வந்துவிட்டது. இருப்பினும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் கடன் உதவியால் ஜெர்மனியின் முழு பொருளாதாரம் சீர்குலைவு ஏற்படாதவரையில் பாதுகாப்பு அளித்தன. அதிக வரி விதிக்கவும் முடியாத நிலையில் அரசாங்கம் நிறைய கடன்களை வாங்கியும், பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்களையும் வகுத்துச் சமாளித்தனர். மற்ற ஐரோப்பிய நாடுகள் தங்களது பகைமை உணர்ச்சிகளை மறந்து ஜெர்மனிக்கு உதவி செய்யவேண்டும் என்ற மன மாற்றம் ஏற்பட்டிருந்தபொழுது, வேதாளம் முருங்க மரத்தில் ஏறி விட்ட கதைபோன்று தேசிய வெறியும், போர் வெறியும் படிப்படியாக ஜெர்மானிய மக்களிடம் உருவாக்கும் பிரச்சாரம் ஏற்பட்டது.

அடால்ப் ஹிட்லர் (Adolph Hitler)

வெர்சேல்ஸ் ஒப்பந்த நிபந்தனைகளை வெய்மார் குடியரசு அரசாங்கம் ஏற்றுக்கொண்டதே ஒரு பெரிய குற்றமாகும் என்று ஜெர்மானியர் கருதினர். தவிர, ஜெர்மனி போரில் தோல்வி அடைந்ததல்லாமல், தன்மானத்தையும் இழந்தது; அதனுடைய குடியேற்ற நாடுகளையும் இழந்தது. சிறந்த பிரதேசங்களையும் இழந்தது. பெரிய நஷ்டஈட்டுத் தொகையைத் தரவேண்டும் என்ற சுமையை வெர்சேல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மன் மக்கள்மீது சுமத்தியது. அதன் காரணமாக அவர்கள் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பொருளாதாரச் சீர்குலைவும் ஆகிய துயரங்களைத்தான் கண்டனர். இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்துவதற்கு ஏராளமான அரசியல் கட்சிகள் அங்குத் தோன்றின. கம்யூனிஸ்டுகளும், சோஷியலிஸ்டுகளும், நாஜிகளும் அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்து மக்களுடைய துயரங்களைத் தீர்க்க முன் வந்தனர். முடிவில் நாஜிகள்தான் வெற்றியடைந்தனர். நாஜிக் கட்சியின் தலைவர் அடால்ப் ஹிட்லர் என்பவர் ஒரு மாஜிப் போர் வீரர். அவர் முதலில் தொழிலாளர் கட்சி என்று ஆரம்பித்து, பின்னர் தேசிய சோஷியலிஸ்டுக் கட்சி என்று பெயரை மாற்றிப் பிறகு நாஜிக் கட்சி என்ற புதுப்பெயரில் ஜெர்மன்

மக்களைக் கவர்ந்தார். அடால்ப் ஹிட்லர் ஓர் ஆஸ்டிரியன். அவர் நீண்டகாலமாகக் கட்டட வேலைத் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அவருடையப் பள்ளிக் கல்வி அரைகுறையானதாகும். 1923-ல் அவர் சில கட்சி ஆதரவாளர்களின் உதவியால் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதித்திட்டம் தீட்டினார் என்ற காரணத்திற்காகச் சிறைவைக்கப்பட்டார். சிறையில்தான் அவருடைய குறிக்கோள்களைப்பற்றி "மீன்கேம்ப்" (Mein Kampf) என்ற நூலை எழுதினார். 1925-ல் அந்த நூல் வெளியிடப்பட்டது. அந்த நூலில் அவர் சட்டசபை ஆட்சியைக் கண்டித்து, சர்வாதிகார ஆட்சியே ஜெர்மன் நாட்டிற்குகந்தது என்று எழுதுகிறார். ஹிட்லர் சமநிலையான இயல்புகளை உடையவரல்லர். அவர் விருப்பு, வெறுப்புகளுக்கு ஆளாகி விடுபவர். அவர் கனவுகளையும், கற்பனைகளையும், அவரது திட்டங்களையும் அந்த நூலில் எழுதியிருக்கிறார். தேசிய சோஷியலிஸ்டுக் கட்சி (National Socialist Party) நாஜிக் கட்சியாக மாறிய பிறகு அவர் ஓயாது மக்களிடையே தேசநாடுகள் ஜெர்மனிக்கு இழைத்தக் கொடுமைகளையும், வெர்சேல்ஸ் உடன்படிக்கையால் ஜெர்மன் மக்கள் படும் துயரங்களையும் பிரச்சாரம் செய்துவந்தார். ஜெர்மன் மக்களின் நல்வாழ்விற்காகத்தான் நாஜிக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதென்றும், அக் கட்சியின் முதல் வேலை அவர்களது இழிநிலையைப் போக்குவதேயாகும் என்று அவர் அடிக்கடிக் கூறி வந்தார். பிரச்சாரம் ஒரு தனிக் கலையாக நாஜிகளின் கையில் மாறியது. அக் கலையின் தலைசிறந்த நிபுணராகக் கோயபல்ஸ் என்பவர் விளங்கினார். அவருடையப் பிரச்சாரத்தால் மக்களிடையே புதிய நம்பிக்கையும், இனவெறியும், தேசிய வெறியும் ஏற்பட்டன. உலகிலேயே ஜெர்மானியர்தான் ஆளப்பிறந்தவர்களென்றும் மற்ற இனத்தவர்கள் அவர்களால் ஆளப்படவேண்டியவர்கள் என்றும் வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்தார்.

ஹிட்லரின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக இருந்தது அவரது புதுக் கண்டுபிடிப்பான இனக் கொள்கையாகும். உலகில் மிகச் சிறந்த இனம் நார்டிக் இனம் என்றும், அந்த நார்டிக் இனத்தின் பெரிய சாதனைகளே இன்றைய உலகின் நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் அடிப்படையானது என்று கூறினார். இந்த நார்டிக் இனத்தைச் சார்ந்த ஜெர்மன் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, அந்த இனத்தின் பெருமையைக் கெடுக்கும் மற்ற எல்லா இனங்களையும் ஆட்டிப் படைக்கவேண்டும் என்றும், மற்றவர்களையெல்லாம் அடிமைகளாக்க வேண்டுமென்றும் இனவெறியைத் தூண்டிவிட்டார். இந்த நார்டிக் இனத்தவரோடு மற்றச் செமடிக், ஸ்லாவ் இனத்தவர் கலந்துகொண்டதுதான், நார்டிக் இனத்தின் வீரமும், துணிச்சலும் குறைந்துவிட்டதற்குக் காரணம் என்றார்.

இன உணர்ச்சியும், இன வெற்றியும் இல்லாத தேசியம் வெற்றி கரமாக ஜெர்மனியில் இயங்கமுடியாது என்று அவர் கருதினர். யூதர்களைப் போன்ற பணக்காரர்களும், நாகரிகத்தின் எதிரிகளும், ஜெர்மனியின் ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கும் சதிகாரர்களும், அந்த நாட்டில் போற்றப்பட்டதால்தான் நார்டிக் இனத்தவரின் பெருமை குறைந்துவிட்டது என்று கூறுகிறார். இரண்டு இனங்கள் ஐக்கியமாகும்பொழுது தரக்குறைவான இனம்தான் மேலோங்கி நிற்கும் என்ற உயிரியல் கொள்கைப்படி நார்டிக் இனம் சிதைந்து விட்டதென்று நாஜிகள் கூறினர். அதனால் இனத் தூய்மையைப் பாதுகாக்கவும் அந்த இனத்திற்கு உண்டான உரிமைகள் பெறவும், மற்ற இனத்தவரை அடக்கி ஆளவும், உலகெங்கும் சிறந்த நார்டிக் பண்பாட்டை நிறுவவும், உலகத்தையே ஆதிக்கம் செய்யவேண்டு மென்ற இன வெறியை ஜெர்மானியர் மனத்தில் படிப்படியாகப் பதிய வைத்தார். ஹிட்லருடைய கருத்துகளைத் தெய்வ வாக்கு எனக் கருதி, அவரைக் கண்மூடித்தனமாக வழிபட்டு, அவர் ஆணைப்படி எதுவும் செய்யத் தயாராக இருந்தனர். ஜெர்மனியில் அவர் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்ததே, அவருடைய இந்த இனவெறிக் கொள்கையேயாகும். இதுவே அவருடைய "இரத்தமும் நிலமும்" என்ற வெறிக்கொள்கையை உருவாக்கியது. ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை நிறுவவும், போருக்குப் பிறகு சிதறிய ஜெர்மன் இனத்தவரை ஒன்று திரட்டுவதற்கும் இந்த இனக் கொள்கையே அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது.

1933–1945 வரையிலும் ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரி யாக இருந்தார். அவருடைய ஆட்சியின் முதல் பகுதி போருக்கு ஆயத்தம் செய்வதிலும், இரண்டாவது பகுதி போரில் ஈடுபடுவதி லும் கழிக்கப்பட்டது. அவரது ஆட்சியில் யூதர்கள் இரக்கமில்லாது கொல்லப்பெற்றனர். அவர்களுக்குப் பல கொடுமைகள் இழைக்கப் பெற்றன. நாஜிக் கட்சிக்கு எதிராக இருந்த கட்சிகளையும், தனிப் பட்டவர்களையும் அவர் அடக்கினர். புதிய சிறைச்சாலைகள் திறக்கப்பெற்று, அங்கு எண்ணற்ற நாஜிக் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களை அனுப்பி வைத்தார். மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலும் அவரது தலையீடு மிகவும் அதிகமாக இருந்தது. கெஸ்டாபோ (Gestapo) என்ற இரகசிய போலீஸ் அமைப்பை ஏற்படுத்தி, சிறிதளவு சந்தேகம் ஏற்பட்டாலும்கூட அவர்களை யெல்லாம் விசாரணையின்றித் தனிச் சிறைகளுக்கு அனுப்பினர். மக்களுடைய உரிமைகள் பரிக்கப்பெற்றன. பத்திரிகைகள் கடும் தணிக்கைக்குள்ளாகின. பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கற்பிக்கும் பாடங்கள் நாஜிக் கட்சியின் கொள்கைகளைத் தழுவிய தாகவே இருந்தன. மக்களுடைய உரிமைகள் எல்லாம் கடமை

களாக மாற்றப்பட்டு அவை அனைத்தும் நாட்டின் நலன்களுக்குத் தான் பயன்படுத்தப்படவேண்டும் என்று அறிவிக்கப்பெற்றது.

வெளிநாட்டுக் கொள்கை

அக்டோபர் 1933-ல் சர்வதேச ஆயுதக் குறைப்பு மாநாட்டிலிருந்து ஜெர்மனி விலகிக் கொண்டது. அதே ஆண்டில் சர்வதேச சங்கத்திலிருந்தும் விலகிக்கொள்ளும் விருப்பத்தை ஹிட்லர் அறிவித்தார். வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஜெர்மனி ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்தார். ஜெர்மனி மேற்கொண்டு நஷ்டஈட்டுத் தொகையையும் தர முடியாது என்று கூறினர். இவற்றைத் தொடர்ந்து அவர் ஜெர்மனியின் இராணுவத்தையும், கடற்படை, விமானப் படைகளையும் பலப்படுத்தினர். கட்டாய இராணுவச் சேவையை ஜெர்மனியில் கொண்டுவந்தார். சக்திவாய்ந்த நவீன யுத்தத் தளவாடங்கள் ஏராளமாக உற்பத்திச் செய்யப்பெற்றன. ஃபிரெஞ்சு, ஜெர்மனி எல்லைகளைச் சுற்றிலும் சிஜ்ஃபிரிட் அரண், (Siegfried Line) அமைக்கப்பெற்றது. பிரிட்டனும் ஃபிரான்சும் இத்தாலியின் அபிசீனிய ஆக்கிரமிப்பைப் பற்றிக் கவலை கொண்டிருந்த சமயத்தில் லொகர்னே உடன்படிக்கையை ரத்து செய்து ஹிட்லர் அறிக்கை விடுத்தார். இதற்குக் காரணமாக ஃபிரான்ஸ்–ஜெர்மனி உடன்படிக்கையைச் சுட்டிக் காட்டினர். ஜெர்மனியின் பாதுகாப்புக்காக ரைன் நதியின் இடது பகுதியில் ஜெர்மனியின் துருப்புகளைப் பெருமளவில் நிறுத்தி வைத்தார். இவருடையச் செய்கையைக் கண்டித்து, ஐரோப்பிய வல்லரசுகள் கண்டனக் குறிப்புகளை அனுப்பியவண்ணம் இருந்தன. ஹிட்லர் அவற்றைப்பற்றிக் கவலையுற்றதாகவே தெரியவில்லை. 1935 மே மாதத்தில் ரஷ்யாவும் ஃபிரான்சும் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பை எதிர்பார்த்து ஒரு நேச உடன்படிக்கையைச் செய்துகொண்டன. அதே ஆண்டில் ரஷ்யாவும் செக்கோஸ்லாவேகியாவும் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டன. ஹிட்லரும் ஜெர்மனியின் பக்கம் பல உறவுகளை ஏற்படுத்திக்கொண்டார். ஜெர்மனியின் கடற்படை பலப்படுத்தப்படுதல் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்திற்குப் பேராபத்தை விளைவிக்கும் என்பதை நன்குணர்ந்திருந்த பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் ஹிட்லருடன் கடற்படைக் குறைப்பைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பிரிட்டனின் கடற்படையில் 35 சதவிகிதத்திற்கு மேற் செல்லாமல் ஜெர்மன் கடற்படை இருக்கவேண்டுமென்ற நிபந்தனையை ஹிட்லர் ஏற்றுக்கொண்டார். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது. பிரிட்டனுடன் கடற்படை ஒப்பந்தம் செய்துகொண்டதால் ஐரோப்பிய விவகாரங்களில் பிரிட்டன்

அதிகமாகத் தலையிடாது என்ற காரணத்தால் ஹிட்லர் இவ்வாறு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனால், அவ்வுடன் படிக்கைப்படி அவர் நடப்பதாகத் தெரியவில்லை. உடன்படிக்கைக்கு மாறுகக் கடற்படையை விஸ்தரித்துக்கொண்டுதான் இருந்தார். 1934-ல் போலந்துடன் அவர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி ஜெர்மனியின் கிழக்கு எல்லைகளைப் பத்து ஆண்டுகளுக்கு மாற்றி அமைக்கப்போவதில்லை என்று ஹிட்லர் அறிவித்தார். 1936-ல் சோவியத் ரஷ்யாவை எதிர்த்து ஜப்பானுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. ஆஸ்டிரியா விவகாரமாக இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் பகைமை இருந்துவந்தது. ஆனால், இத்தாலியும் ஒரு சர்வாதிகார நாடாக இருந்ததால் அபிசீனியா வின் ஆக்கிரமிப்பிற்குப் பிறகு மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் இத்தாலியைப் பகைத்துக்கொண்டதால், இத்தாலி வேறு வழி யில்லாது ஜெர்மனியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. 1936-ல் ரோம்–பெர்லின் அச்சு நாடுகள் ஒப்பந்தம் செய்துகொண்டதை முசோலினி அறிவித்தார்.

இத்தாலியின் அபிசீனியா ஆக்கிரமிப்பிற்குப் பிறகு சர்வதேச சங்கம் சீர்குலைந்தது. இந்தச் சீர்குலைவு ஹிட்லரின் வெளிநாட்டுக் கொள்கைக்கு மற்றுமொரு பெரிய வெற்றியை அளித்தது. அதனால் ஐரோப்பிய ஐக்கிய முன்னணி ஏற்படுவதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லை என்று ஹிட்லர் கருதி மத்திய ஐரோப்பாவையும், தென்கிழக்கு ஐரோப்பாவையும் ஆக்கிரமிக்க ஒரு திட்டத்தை உருவாக்கினார். அவருடையத் திட்டங்களை வெளிப்படையாக அறிவிக்காது, பசப்பு வார்த்தைகளைப் பேசியும், உடன்படிக்கை களைச் செய்துகொண்டும் மற்ற நாடுகளை ஏமாற்றிவிட்டார். ஆஸ்டிரியாவின் சுதந்தரத்திற்கு ஆபத்து ஏற்படாது; செக்கோஸ் லாவேகியாவின் இணைப்புப் போற்றப்படும், ஃபிரெஞ்சு எல்லைகள் மதிக்கப்படும் என்றெல்லாம் ஹிட்லர் அறிக்கைகளை விடுத்தார். ஹிட்லரின் மூன்றுவது ரெய்ச் (Third Reich) இந்த அறிக்கைகளைப் புறக்கணித்துவிட்டு உடனடியாக ஆஸ்டிரியாவை யும், செக்கோஸ்லாவேகியாவையும் ஆக்கிரமித்தது. 1938-ல் ஆஸ்டிரியாவின்மீது ஜெர்மன் படைகள் படையெடுத்துச் சென்று அதை வெகு எளிதில் அவர் ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்டார். இந் நாடுகளை ஆக்கிரமிப்பதில், அவர் பொய், புரட்டு, ஏமாற்றுதல் ஆகிய எல்லா யுக்திகளையும் பயன்படுத்தினர். பெரிய ஆஸ்டிரியப் பேரரசு இப்பொழுது ஜெர்மனியின் ஒரு மாகாணமாக இயங்கும் ஒரு நிலை வந்துவிட்டது. செக்கோஸ்லாவேகியா அரசாங்கத்தின்மீது எண்ணற்றக் குற்றச்சாட்டுகளைச் சுமத்திய வண்ணம் இருந்தார். சூடடன்லாந்திலுள்ள ஜெர்மானியர்களைச்

செக்கோஸ்லாவேகிய அரசாங்கம் பல கொடுமைகளுக்குள்ளாக்கி விட்டது என்று அந்த அரசாங்கத்தைக் கண்டித்து வந்தார். அந்த நாட்டின்மீது போர்தொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினர். செக்கோஸ்லாவேகியாவின் நிலைமை படுமோசமாகிக் கொண்டு வந்தது. இதனால் மீண்டும் ஓர் உலகப் போர் ஏற்பட்டுவிடுமோ என்று வல்லரசுகள் பயந்தன. பிரிட்டிஷ் பிரதமர் நெவில் சேம்பர் லேன் மூன்று முறை ஹிட்லரைப் பேட்டிக் கண்டு ஐரோப்பாவில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றார். 1938 செப்டம்பர் மாதத்தில் மூனிக் (Munich) என்ற இடத்தில் பிரிட்டிஷ் பிரதமரும், ஹிட்லரும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். மறைமுகமாகச் சூடடன்லாந்தை ஆக்கிரமித்துக் கொள்ள ஹிட்லர் பிரிட்டனின் சம்மதத்தைப் பெற்றார். ஆனால், அந்தப் பகுதிக்குமேல் ஆக்கிரமிப்பு ஏற்படக் கூடாதென்றும், செக்கோஸ்லாவேகியாவின் விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றும் ஹிட்லரிடமிருந்து பிரிட்டிஷ் பிரதமர் உறுதிமொழி வாங்கினர். தவிர, எல்லாச் சிக்கல்களையும் பிரிட்டனும்–ஜெர்மனியும் அமைதியான முறைகளில் முடித்துக்கொள்வதென்றும், போர் தொடுக்கக் கூடாதென்றும் முடிவு செய்தனர். ஆங்கிலேய மக்கள் இந்த உடன்படிக்கையைக் கண்டு திருப்தி அடையவில்லை. இந்த உடன்படிக்கையை, "தன்மானத்தை இழந்து செய்துகொண்ட சமாதானம்" (Peace without Honour) என்று குறைகூறினர். இந்த மூனிக் உடன்படிக்கை செய்துகொண்டதால், செக்கோஸ்லா வேகியாவை ஜெர்மனிக்கு ஆங்கிலேயப் பிரதமர் இறையாக்கி விட்டார் என்று பலமாகக் கண்டித்தனர். இருப்பினும் அப்பொழு திருந்த ஒரு நெருக்கடியில், போரைத் தவிர்ப்பதற்காக இந்த உடன்படிக்கையை ஆங்கிலேயப் பிரதமர் செய்துகொண்டார். இந்த மூனிக் உடன்படிக்கையில் ஃபிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனர். இந்த உடன் படிக்கையை அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், கானடா நாட்டுப் பிரதமர் மெகன்ஸி கிங் ஆகியோரும் அங்கீகரித்தனர். எப்படியும் போர் ஏற்படாமல் இருந்தால் அதுவே போதுமான தாகும் என்று அவர்கள் கருதினர் போலும்.

உண்மையில், செக்கோஸ்லாவேகியாவை ஹிட்லரின் போர் மிரட்டல்களுக்குப் பயந்து நேசநாடுகள் தக்கச் சமயத்தில் கைவிட்டு விட்டனர். மற்ற உடன்படிக்கைகளைப் புறக்கணித்ததைப் போல, இந்த மூனிக் உடன்படிக்கையையும் அலட்சியம் செய்துவிட்டு 1939 மார்ச் மாதத்தில் செக்கோஸ்லாவேகியாவின்மீது படை யெடுத்து அந்த நாடு முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டார். ஹிட்லரின் உறுதிமொழிகள் வெறும் பொய்யும் புரட்டும் என்று

உலகினருக்குத் தெரிந்தன. இந்த ஆக்கிரமிப்புச் செய்தியைக் கவனித்த பிரிட்டன் அதனுடைய வெளிநாட்டுக் கொள்கைகளை முழுவதும் மாற்றிக்கொண்டது. போலந்து, ருமேனியா, கிரீஸ் ஆகிய நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டு ஜெர்மனி இந்த நாடுகளைத் தாக்கினால், பிரிட்டன் அந்த நாடுகளுடன் சேர்ந்து ஜெர்மனியைத் தாக்க முன்வரும் என்று அறிவித்தது. இவ்விதமான உறுதியானக் கொள்கையைப் பிரிட்டனும் மற்ற வல்லரசுகளும் செக்கோஸ்லாவேகியா பிரச்சினையில் பின்பற்றியிருந்தால், ஹிட்லர் சிறிது பின்வாங்கியிருப்பார். ஆனால், பிரிட்டன் ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளுக்குப் பாதுகாப்பு அளித்ததைச் சிறிதும் பொருட்படுத்தாமல் போலந்தை மிரட்ட ஆரம்பித்தார். போலந்திடமிருந்து "போலிஷ்காரிடார்" பகுதியும், டேன்ஸிக் துறைமுகப்பட்டினத்தையும் ஹிட்லர் கேட்டார். இவற்றைத் தரமுடியாது என்று போலந்து அறிவித்தது. 1939 ஜனவரியில் போலந்து மக்களைப்பற்றிப் பரிந்து பேசிய ஹிட்லர் திடீரென்று போலந்தின்மீது எரிந்து விழுந்தார். டேன்ஸிக்கில் உள்ள ஜெர்மன் மக்களைப் போலந்து அரசாங்கம் கொடுமைப் படுத்துகிறது என்ற குற்றச்சாட்டை அவர் சுமத்தினார். அவர் போலந்தை எந்தச் சமயத்திலும் தாக்கத் தயாராக இருந்தார். ஆனால், பிரிட்டன், ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய வல்லரசுகள் போலந்திற்காகப் போரில் இறங்கக்கூடும் என்று அவர் நம்பியதால், சிறிது எச்சரிக்கையாகவே இருந்தார். முதல் உலகப் போரில் ஜெர்மனி இரண்டு போர் முனைகளிலும் போரிடவேண்டியிருந்தது. அதனால் இதுவரையிலும் ஹிட்லர் சோவியத் ரஷ்யாவையும், அதனுடையக் கொள்கைகளையும் வெளிப்படையாகத் தாக்கி வந்தார். ஆனால், ஹிட்லர் 1939 ஆகஸ்டு மாதத்தில் ரஷ்யாவுடன் ஒரு நல்லுறவு உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி, போர் ஏற்படும்பொழுது ரஷ்யா நடுநிலைமை வகிக்கவேண்டும் என்று ஹிட்லர் கேட்டுக்கொண்டார். போரின் கொடுமைகளுக்கு அஞ்சியே ஸ்டாலின் இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார் என்று கூறப்படுகிறது. ரஷ்யாவின் பயம் நீங்கிவிடவே 1939 செப்டம்பர் முதல் தேதியன்று, ஜெர்மன் படைகள் போலந்தைத் தாக்கின. வார்சா நகரின்மீது குண்டு மாரி பொழிந்தது. ஜெர்மன் படைகள் உடனடியாகப் போலந்திலிருந்து திரும்பப் பெறவேண்டும் என்ற இறுதி எச்சரிக்கையைப் பிரிட்டன் விடுத்தது. ஜெர்மனி இந்த எச்சரிக்கையைப் புறக்கணிக்கவே, செப்டம்பர் 3-ம் தேதியன்று ஜெர்மனிமீது பிரிட்டன் போர் பிரகடனம் செய்தது. அதே நாள் ஃபிரான்சும், ஜெர்மனிமீது போர்த் தொடுத்தது.

16. இரண்டாவது உலகப் போர்

(1939-1945)

இரண்டாவது உலகப் போர் ஏற்படுவதற்கு ஹிட்லரே முக்கியக் காரணமாக இருந்தார். ஆறு ஆண்டுகள் ஜெர்மன் சர்வாதிகாரியாக இருந்தபொழுது, அவர் இவ்விதமான ஒரு போருக்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். வெர்சேல்ஸ் உடன்படிக்கையைப் புறக்கணித்தார்; சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக்கொண்டார்; ஆயுதக் குறைப்பு மாநாடுகளிலிருந்து விலகிக் கொண்டார்; ஆஸ்டிரியா, செக்கோஸ்லாவேகியா ஆகிய நாடு களின் சுதந்தரத்தைப் பறித்துக்கொண்டார். இறுதியில் போலந்தை 1939-ல் செப்டம்பர் முதல் தேதியன்று தாக்கவே போர் மூண்டது. இவற்றைத் தவிர, வேறு காரணங்களும் கூறப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஐரோப்பிய விவகாரங்களில் தலை யிடாது விலகிக்கொண்டது. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் சர்வாதிகார ஆட்சி நிறுவப்பெற்றது. அபிசீனியாவை இத்தாலி தாக்கியதிலிருந்து சர்வதேச சங்கத்தின் சீர்குலைவு உறுதியாகி விட்டது. இவற்றைத் தவிர, ஜெர்மன் மக்களின் வஞ்சம் தீர்க்கும் எண்ணமும், உணர்ச்சியும் ஹிட்லரால் ஒருங்குத் திரட்டப்பெற்று, அந் நாட்டு மக்களின் போர் வெறியை ஊக்குவித்தார். மற்ற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் ஜெர்மனியே போர் வெறி கொண்டிருந்தது. அதனால்தான் இடைவிடாது யுத்தத் தளவாடங் களைப் பெருக்கிக்கொண்டிருந்தது. 'சமாதானம்' என்று கூறிக் கொண்டிருந்த ஹிட்லரின் உண்மையான தோற்றம் ஆஸ்டிரியா, செக்கோஸ்லாவேகியா, போலந்து ஆகிய நாடுகளின்மீது தாக்கிய பிறகுதான் மற்ற ஐரோப்பிய வல்லரசுகளுக்குப் புரிந்தது. அதனால் தான் பிரிட்டன் போலந்திற்குச் சாதகமாக ஜெர்மனிமீது போர்ப் பிரகடனம் செய்தது.

போலந்தின்மீது நடந்தத் தாக்குதல்கள் ஐந்து வாரங்களில் முடிவடைந்தன. போலந்தின் தலைநகரான வார்சா கடும் குண்டு

வீச்சுகளுக்கு இரையாகியது. அக்டோபர் நான்காம் தேதியன்று போலந்துப் படைகள் சரணடைந்தன. போலந்தின் சுதந்தரம் பறிபோனது. இந்த நெருக்கடியான சமயத்தில் ரஷ்யாவும் செப்டம்பர் 17-ம் தேதியன்று கிழக்குப் போலந்தைத் தாக்கிக் கர்ஸான் எல்லைக்கு அப்பாலுள்ள பகுதியைக் கைப்பற்றியது. பிறகு 1940 வரை போர் சிறிது ஓய்ந்திருந்தது.

ஹிட்லருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் ஸ்டாலினுக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. அதனால் எந்தச் சமயத்திலும் ரஷ்யாவின்மீது ஹிட்லர் படையெடுத்து விடுவார் என்று எதிர்பார்த்து ரஷ்யாவின் மேற்கு எல்லைகளைப் பலப்படுத்த அவர் முயற்சி எடுத்துக்கொண்டார். ரஷ்யாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான லெனின் கிராட் தரை மார்க்கத்திலும், கடல் மார்க்கத்திலும் எதிரிகளால் எளிதில் தாக்கப்படக்கூடிய நிலையில் இருந்தது. பின்லாந்திலிருந்து தரை மார்க்கமாகவும், பின்லாந்து வளைகுடாவிலிருந்து கடல் வழியாகவும் லெனின் கிராட்டைத் தாக்க முடியும். பின்லாந்து ரஷ்யாவைத் தாக்கும் என்ற பயம் ஸ்டாலினுக்கு இல்லை. ஆனால், பின்லாந்தை ஜெர்மனி ஆக்கிரமித்துக் கொண்டு அங்கிருந்து தளம் அமைத்து லெனின் கிராட்டைத் தாக்க முடியும் என்று ஸ்டாலின் கருதினார். அதனால் ஸ்டாலின் பின்லாந்திடம் சில வசதிகளைக் கேட்டார். லெனின் கிராட்டிலிருந்து சிறிது தள்ளிப் பின்லாந்து எல்லையை அமைத்துக்கொள்ளவும் ஹெலன்ஸ்கிக்கு மேற்கேயுள்ள ஹேன்கோவின் விமானத் தளம் அமைத்துக்கொள்ளும் உரிமைகளையும் ஸ்டாலின் கோரினார். பின்லாந்து இவற்றை நிராகரிக்கவே ஸ்டாலின் பின்லாந்தின்மீது படையெடுத்துத் தமக்கு வேண்டிய உரிமைகளைப் பெற்ற பிறகு பின்லாந்துடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்.

1940 ஏப்ரல் மாதத்தில் ஜெர்மன் படைகள் டென்மார்க்கை ஆக்கிரமித்தன. பிறகு அட்லாண்டிக் கரையில் ஆதிக்கம் செலுத்துவதற்காக நார்வே நாட்டையும் கைப்பற்றின. அதனால் அபாயம் பிரிட்டனுக்கு அருகில் வந்துவிட்டது. பிரிட்டனின் வர்த்தகத்தை அங்கிருந்து ஜெர்மன் கடற்படை நாசமாக்கி வந்தது. முதல் உலகப் போரில் இருந்ததைப் போலவே ஹாலந்தும், பெல்ஜியமும் நடுநிலைமை வகித்தன. இந்த நடுநிலைமையைக் கெடுக்கப் போவதில்லை என்று வாக்களித்த ஹிட்லர், அதே மாதம் 10-ம் தேதியன்று இந்த இரண்டு நாடுகள்மீதும் படையெடுத்து, அவற்றைக் கைப்பற்றினார். பெல்ஜியத்தினுள் நுழைந்து, பிரிட்டிஷ், ஃபிரெஞ்சுத் துருப்புகள் எவ்வளவு திறமையுடன் போர் செய்தும் ஜெர்மன் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த

முடியவில்லை. ஜெர்மன் துருப்புகளின் ஒரு பகுதி ஃபிரான்சிற்குள் நுழைந்து ஏமியன்ஸ் நகரைக் கைப்பற்றினர். பிரிட்டிஷ் துருப்புகள் வடக்கிலிருந்தும், ஃபிரெஞ்சுத் துருப்புகள் தெற்கிலிருந்தும் ஜெர்மன் படைகளைத் தாக்குவதென்று முயற்சி செய்தனர். ஃபிரெஞ்சுப் படைகள் திட்டப்படி, தெற்கிலிருந்து தாக்க முடியாத தால், ஆங்கிலேயப் படைகளுக்குப் பேராபத்து ஏற்பட்டுவிட்டது. அதனால், ஆங்கிலேயப் படைகள் அருகிலிருந்த டங்கிர்க்குக்கு விரைந்தனர். மே 25-ல் பெல்ஜியம் அரசன் லியோபால்ட் சரணடைந்த பிறகு ஆங்கிலேயப் படைகளின் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. ஆங்கிலேயப் படைகளை அடியோடு அழித்து விட வேண்டும் என்று ஜெர்மானியர் நினைத்தனர். ஆனால், மிகவும் விரைவாகவும், துணிச்சலுடனும் பலத்த குண்டுவீச்சு களுக்கிடையே டங்கிர்க்கிலிருந்து இங்கிலாந்திற்குச் சுமார் 300,000 பேர் பின்வாங்கினர். ஆங்கிலேயப் படைகளில் பெரும் பகுதி திரும்பப்பெற்ற உடன் ஃபிரெஞ்சுக்காரர்களின் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. ஜெர்மன் படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறிச் சென்றன. பாரிஸ் நகரையும்கூட விட்டு விட்டு, ஃபிரெஞ்சுத் துருப்புகள் பின்வாங்கின. பிறகு எதிர்ப்பே யின்றிப் பாரிஸ் நகரம் கைப்பற்றப்பட்டது. பாரிஸ் நகரம் இந்தப் போரில் சேதமடையவில்லை. மேகினுட் அரணுக்குப் பின் இருந்த, ரைம்ஸ், வெர்டன் ஆகிய நகரங்களும் எளிதில் பிடிப்பட்டன. மேகினுட் அரண் ஜெர்மனியின் நவீன யுத்தத் தளவாடங்களின் முன் பயன் அளிக்கவில்லை. ஃபிரான்சின் சீர்குலைவை நன்குணர்ந்த மார்ஷல் பிடேய்ன் ஜூன் 21-ம் தேதியன்று சமாதானம் செய்து கொள்ளும் விருப்பத்தை ஜெர்மனியிடம் அறிவித்தார். அதனால், அந்த இரண்டு நாடுகளுக்குமிடையே இடைக்கால சமாதானம் ஏற்பட்டது. ஆனால், ஃபிரான்சின்மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மிகவும் கொடுமையானவை. ஃபிரான்சின் பெரும் பகுதி அட்லாண்டிக் கரையோரம் உட்பட ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதனால் ஜெர்மனிக்கு ஏற்படும் செலவுகளை, அதாவது நாளொன்றுக்கு முப்பது இலட்சம் பிராங்கு களை ஃபிரெஞ்சு அரசாங்கம் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பெற்றது. மேலும், ஃபிரெஞ்சு ரயில்வே, கப்பல் போக்கு வரத்துகள், ஜெர்மன் கண்காணிப்பில் மாற்றப்பெற்றன. ஃபிரெஞ்சுக் கைதிகள் ஜெர்மன் தொழிற்சாலைகளிலும் பண்ணை களிலும் வேலை செய்ய அனுப்பப்பட்டனர். ஆனால், ஃபிரான்ஸ் வசமுள்ள ஜெர்மன் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப் பட்டனர். ஆனால், ஃபிரெஞ்சுக் கடற்படையை மட்டும் ஜெர்மனி கேட்கவில்லை. பெரும்பாலும் ஃபிரான்சின் சுதந்தரம் பறிக்கப் பட்டது. ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்த ஃபிரெஞ்சு அரசாங்கத்தை

மார்ஷல் பிடேய்னிடமே விட்டு வைத்தனர். விஷி (Vichy) என்ற இடத்தில் பிடேய்ன் அரசாங்கம் நிறுவப்பட்டது. பிடேய்னுக்கு மிகவும் உதவியாக இருந்தவர் யர்லவால் என்பவராவர். ஃபிரான்சின் அரசாங்கம் ஜெர்மன் கட்டளைகளை ஏற்று நடந்தது. ஃபிரான்சின் புகழ் பழைய கதையாக மாறிவிட்டதே என்று ஃபிரெஞ்சு மக்கள் ஆர்வமிழந்துவிட்டனர். ஆனால், சிலர் ஜெர்மனியின் யுத்த நடவடிக்கைகளை முறியடிப்பதில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தனர். ஜெனரல் டிகால் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பெற்றது. அவர் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் உதவியைக் கொண்டு இறுதிவரையிலும் போரிட்டு வந்தார். சுதந்தர ஃபிரெஞ்சு அரசாங்கம் அவரது தலைமையில் அல்ஜிரியாவில் அமைக்கப்பெற்றது.

ஜெர்மன் படைகள் வெற்றிமேல் வெற்றி அடைந்து வந்தன. இதே வேகத்தில் பிரிட்டனைத் தாக்கியிருந்தால் பிரிட்டனுக்குப் பேராபத்து நேரிட்டிருக்கலாம். ஃபிரான்ஸ் சரணடைந்தது போன்று பிரிட்டனும் சரணடையும் என்று கருதி ஹிட்லர் ஏமாந்து விட்டார். பிரிட்டனின் தென்பகுதிகளிலும், பிறகு கடற்கரை யோர நகரங்களிலும் ஜெர்மானிய விமானங்கள் கொடுமையாகக் குண்டுகளை வீசின. பிரிட்டனுக்கு ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன. குண்டு வீச்சுகளால் பிரிட்டனைப் பணிய வைக்க முடியும் என்று ஹிட்லர் எதிர்பார்த்தது நிகழவில்லை. அதற்கு மாறுக ஆங்கிலேய மக்கள் தங்கள் இறுதி மூச்சு இருக்கும்வரை போராடுவோம் என்று உறுதிகொண்டிருந்தனர். ஆங்கிலேயப் பிரதம அமைச்சராக அப்பொழுதிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் மக்க ளுடைய ஆதரவைத் திரட்டி, போர் நடவடிக்கைகளை வெற்றி யுடன் கவனித்து வந்தார்.

ஃபிரான்சின் வீழ்ச்சிக்குப் பிறகு முசோலினி நேரிடையாகப் போரில் ஈடுபட்டார். ஏற்கனவே அல்பேனியாவை ஆக்கிரமித்துத் தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளை அவர் மிரட்டிக் கொண்டிருந் தார். 1941-ல் முசோலினி கிரீஸ் நாட்டின்மீது படையெடுத்துச் சென்று விரைவில் அந் நாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்தார். ஆனால், இத்தாலியப் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. கிரேக்கப் படையினர் அல்பேனியாவிற்குள் நுழைந்தனர். தக்க சமயத்தில் ஜெர்மன் படைகள் உதவிக்குவரவில்லையெனில் இத்தாலியர்கள் அல்பேனியாவிலிருந்து விரட்டப்பட்டிருப்பர். 1941-ல் ஜெர்மன் படைகள் யூகோஸ்லேவியாவை ஆக்கிரமித்துக்கொண்டன. ருமேனியாவும், பல்கேரியாவும் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டன. அப் படைகள் பிறகு கிரீஸ் நாட்டின்மீது படையெடுத்தன. ஒரு

சிறிய பிரிட்டிஷ் படை கிரேக்கர்களுக்கு உதவி செய்ய வந்தது. ஆனால், ஜெர்மானியர் இப் படைகளை எளிதில் முறியடித்துக் கிரீஸ் நாட்டையும் ஆக்கிரமித்துக்கொண்டனர். அதனால், தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஜெர்மனியின் ஆதிக்கத்திற்குள் கொண்டு வரப்பெற்றன.

ஹிட்லரின் அடுத்தத் தாக்குதல் ரஷ்யாவின்மீது நிகழ்ந்தது. ஹிட்லரும், ஸ்டாலினும் செய்திருந்த உடன்படிக்கை போலித்தன மானது என்று ஏற்கனவே ஸ்டாலின் உணர்ந்திருந்ததால், அவர் ஜெர்மன் தாக்குதல்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஹிட்லர் வாக்குறுதியளித்தபடி, எப்பொழுதும் நடந்து கொண்டவரல்லர். அதனால், ரஷ்யாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப்பற்றி, ஹிட்லர் சிறிதும் கவலையுறவில்லை. தென்கிழக்கு ஐரோப்பாவைக் கைப்பற்றிய பிறகு ரஷ்யாவின்மீது படையெடுக்க அவர் மிகப் பெரிய அளவில் படை திரட்டினர். ஆனால், அவர் திட்டப்படி 1941 ஏப்ரலில் நிகழவேண்டிய படையெடுப்பு ஜூன் மாதத்தில் நிகழ்ந்ததால், இரண்டு மாதங்கள் காலதாமதம் ஆகிவிட்டது. அதனால் படையெடுத்துச் சில மாதங்களிலேயே ரஷ்யாவின் கடும் பனிக்காலத்தையும் சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிரிட்டன் இச் சமயத்தில் ரஷ்யாவிற்கு உதவ முன்வந்தது குறிப் பிடத்தக்கதாகும்.

எதிரிகளை உள்ளே அனுமதித்துவிட்டு, பிறகு அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், மற்ற வசதிகளையும் அழித்து விடுவதுதான் ரஷ்யர்களது பழக்கமான போர் முறைகளாகும். அதே முறையைப் பின்பற்றி, ஜெர்மன் படையினருக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கவிடாது அவர்களை வாட்டிவிட்டனர். அதற்குள் கடும் பனியும், குளிரும் வந்துவிட்டன. இருப்பினும் ஜெர்மானியர்கள் சமாளித்துக்கொண்டு ஸ்டாலின் கிராட் வரையிலும் முன்னேறிவிட்டனர். 1943 ஜனவரியில், ஜெர்மானியப் படைகள் ரஷ்யர்களால் சூழ்ந்து கொள்ளப்பெற்றன. பிறகு வேறு வழியின்றி ஜெர்மானியர்கள் சரணடைந்தனர். காகஸஸில் நிறுத்தப் பட்டிருந்த துருப்புகள் உதவிக்கு வராதபடி ராஸ்டாவ் பகுதியை மீட்டுக்கொண்டனர். 1943-ல் நிகழ்ந்த போர்களில் ரஷ்யப் படைகளே வெற்றிபெற்றன. ஜெர்மானிய ஆக்கிரமிப்பிற்கு இரையாகிய கீவ், ஸ்மாலன்ஸ்க் ஆகிய பகுதிகள் மீட்கப்பட்டன. லெனின் கிராட்டையும் 1944 ஜனவரியில் மீட்டனர். 1944 முடிவடைவதற்குள் ஜெர்மன் துருப்புகள் ரஷ்யாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டன. இச் சமயத்தைப் பயன்படுத்தி, தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்

லேவியா ஆகிய நாடுகளிலிருந்து ஜெர்மானியர்களை விரட்டியடித்துக் கிழக்கு ஜெர்மனியின்மீது படையெடுக்கத் தயாராக இருந்தனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1941 வரையிலும் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றியது. ஏனெனில், இது ஓர் ஐரோப்பியப் போராக இருப்பதால் இதில் தலையிடாமல் இருப்பதே நல்லது என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் கருதியது. உணவுப் பொருள்களும், மற்ற உற்பத்திப் பொருள்களும் யுத்தத் தளவாடங்களும் அமெரிக்காவில் விற்கப்பட்டன. அதனால் அமெரிக்கர்களது வியாபாரம்கூட நன்முக வளர்ச்சியடைந்திருந்தது. ஆனால், ஃபிரான்சின் வீழ்ச்சிக்குப் பிறகு, பிரிட்டன் மற்ற டொமினியன்களுடைய உதவியைக் கொண்டு போராடி வந்தது. அதனுடைய வீரப் போராட்டம் அமெரிக்க மக்களின் பாராட்டுதல்களையும், அனுதாபத்தையும் பெற்றது. அமெரிக்கர்கள் கடனுக, பிரிட்டனுக்குக் கப்பல்கள், யுத்தத் தளவாடங்கள், ஆகியவற்றைக் கொடுத்து உதவினர்.

ஆனால், இச் சமயத்தில் அச்சு நாடுகளில் ஒன்முன ஜப்பான் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கி அங்கு நிறுத்தப்பட்டிருந்தக் கப்பல்களுக்கு நிறைய சேதத்தை ஏற்படுத்தியது. அதனால் அமெரிக்கர்கள் ஆத்திரமடைந்தனர். மேலும் பிரிட்டன்மீது கடும் தாக்குதல் நடத்தி வந்த ஜெர்மனி அமெரிக்காமீதும் போர் தொடங்கலாம் என்ற பயம் ஏற்படவே 1941 டிசம்பரில், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள்மீது போர்ப் பிரகடனம் செய்தது. ஏற்கனவே 1941 ஆகஸ்டில், சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் அட்லாண்டிக் கடலில் ''ஃபிரான்ஸ் ஆப் வேல்ஸ்'' என்ற கப்பலில் சந்தித்து, 'அட்லாண்டிக் சாஸனம்' ஒன்றைத் தயாரித்தனர். போர்செய்ய வேண்டிய காரணங்களை இச் சாஸனத்தில் அறிவித்தனர். அட்லாண்டிக் சாஸனம் ஐக்கிய நாடுகள் சபையை நிறுவுவதற்கு அடிப்படையாக இருந்தது. போர்ப் பிரகடனம் செய்த பிறகு ஏராளமான அமெரிக்கத் துருப்புகள் ஐரோப்பாவில் நடைபெறும் பல போர் முனைகளில் கலந்து கொண்டன. அமெரிக்கத் துருப்புகளுக்குத் தளபதியாக ஜெனரல் ஐஸன்ஹோவர் நியமனம் செய்யப்பட்டார். நேசநாடுகளின் படைகளுக்கு அவரே பிரதம தளபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார். நேசநாடுகளின் படையெடுப்புத் திட்டங்களெல்லாம் மிகவும் இரகசியமாகவே வைத்துக்கொள்ளப் பெற்றன. ஜெர்மனிக்கு நேச நாடுகளின் படையெடுப்பு எந்தெந்த முனைகளில் ஏற்படும் என்று

தெரிய முடியாததால், பல முனைகளில் சிதறிக்கிடந்த ஜெர்மன் துருப்புகளை எங்கும் ஒன்று திரட்ட முடியவில்லை. 1944 ஜூன் மாதத்தில் நேசநாட்டுப் படைகள் நார்மண்டியின்மீது படையெடுத்தன. பலத்த போருக்குப் பிறகு, அப் பகுதி ஜெர்மானியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இதற்குப் பிறகு, ஃபிரான்சின் நான்கு திசைகளிலிருந்தும் நேசநாடுகளின் படைகள் ஜெர்மானியப் படைகளைத் தாக்கி வெகு விரைவில் ஃபிரான்சின் பெரும் பகுதியை மீட்டனர். ஆகஸ்டு மாதம் மீண்டும் நடைபெற்ற இரண்டாவது படையெடுப்பில் தெற்குப் பகுதியும், பாரிஸ் நகரமும் மீட்கப்பட்டன. இதைப் போன்று நேசநாடுகளின் படைகள் பெல்ஜியம், ஹாலந்து நாடுகளை ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்தன. பிறகு ஜெர்மனியின்மீது நேசநாடுகளின் படைகள் நான்கு திசைகளிலிருந்தும் கடுமையாகத் தாக்கின. ரஷ்யர்கள் கிழக்கு ஜெர்மனியைத் தாக்கினர், மே 2-ம் தேதியன்று கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் முன்னேறிய நேசநாட்டுப் படைகள் பெர்லின் நகரில் சந்தித்து ஒன்றுக முன்னேறின. நிபந்தனையின்று ஜெர்மன் தளபதிகள் நேசநாடுகளின் உத்தரவுகளை ஏற்றுச் சரணடைந்தனர். ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

இத்தாலியர்கள் தோல்விமேல் தோல்வியை வடமேற்கு ஆப்பிரிக்காவில் பெற்றனர். 1943-ல் சிசிலியில் நேசப்படைகள் இறங்கி தெற்கு இத்தாலியை ஆக்கிரமித்துக் கொண்டன. எகிப்திலும் லிபியாவிலும் இத்தாலியத் துருப்புகள்விரட்டியடிக்கப்பெற்றன. ஜெர்மன் இத்தாலியத் துருப்புகள் டூனிஸ் நகரில் நேசப் படைகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டதால் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் போர்க் கைதிகளாயினர். இத்தாலியர்கள் மால்டாவின்மீது கடும் குண்டு வீச்சுகளை நடத்தியும் இந்தத் தீவையும் அவர்களால் பிடிக்க முடியவில்லை. ஜெனரல் மாண்ட்கோமரியின் படைகள் வட ஆப்பிரிக்கப் போர்முனைகளில் வெற்றிபெற்று அச்சு நாடுகளின் பலத்தை அழித்துவிட்டதால் மால்டாவின்மீது ஏற்பட்ட தாக்குதல்கள் நின்றுவிட்டன. 1943-ல் நேசப் படைகள் தெற்கு இத்தாலியை ஆக்கிரமித்துக் கொண்டவுடன் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி வேறு வழியின்றி ஜெர்மனிக்கு ஓடி, ஹிட்லரின் ஆதரவில் சிறிது காலம் இருந்தார். மார்ஷல் படாக்லியோவின் தலைமையில் புதிய அரசாங்கம் நிறுவப்பெற்றது, அந்த அரசாங்கம் நிபந்தனையின்றி நேசநாடுகளிடம் சரண் அடைந்துவிட்டது. இந்தப் போரில் இத்தாலியப் படைகளின் சாதனைகள் ஒன்றுமில்லை என்றே கூறலாம். இத்தாலியப் படைகளால் ஜெர்மனிக்கு அதிக நன்மை இல்லாமல் இருந்தாலும், அச்சு நாடுகளில் ஒன்றான இத்தாலி சரணடைந்தது

ஹிட்லருக்கே பேரதிர்ச்சியைத் தந்தது. இருப்பினும் வட இத்தாலியையாவது காக்க ஜெர்மன் படைகள் அங்கு விரைந்தன. 1945 ஏப்ரல் மாதத்தில் அங்கே எஞ்சியிருந்த ஜெர்மன் துருப்புகளும் சரணடைந்தன. வட இத்தாலியில் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தலாம் என்ற எண்ணத்துடன் வந்த முசோலினியும் இத்தாலியர்களால் பிடிப்பட்டுப் பிறகு தூக்கிலிடப் பட்டார்.

மற்றொரு அச்சு நாடான ஜப்பான் போர் ஆரம்பத்திலேயே நேரிடையாகப் போரில் ஈடுபடவில்லையென்றாலும், ஃபிரான்சின் வீழ்ச்சியையும், பிரிட்டனின் ஆபத்தான நிலையைக் கண்டு, ஃபிரான்சுக்குச் சொந்தமான இந்தோ சீனாவை 1940-ல் கைப் பற்றியது. 1941 டிசம்பரில் அமெரிக்கத் துறைமுகமான பேர்ல் துறைமுகத்தையும் தாக்கி அமெரிக்கக் கப்பல்களுக்குப் பலத்த சேதங்களை ஏற்படுத்தியது. மேலும் பிரிட்டனுக்குச் சொந்தமான இரண்டு பெரிய போர்க்கப்பல்களை (பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ்) ஜப்பானிய விமானங்கள் தாக்கி மூழ்கடித்தன. சில வாரங்களில் ஜப்பான், மின்னல் வேகத்தில் சையாம், மலேயா, பர்மா ஆகிய நாடுகளை ஆக்கிரமித்துக்கொண்டது. பெரிய நகரங்களான சிங்கப்பூர், மேண்டலே, ரங்கூன் ஜப்பான் வசமாகின. பிலிப்பைன் தீவுகள், டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகள், நியூகினியாத் தீவுகள் ஜப்பானின் தாக்குதல்களுக்கு இரையாகின. ஆஸ்திரேலியாமீதும் இந்தியாமீதும் படையெடுப்பதற்கு ஜப்பான் திட்டமிட்டுக் கொண்டிருந்தது. கோரல் கடற் போரில் (Battle of the Coral Sea) அமெரிக்கக் கடற்படை ஜப்பானியக் கடற்படையைத் தோற்கடித் தது. அதனால் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட இருந்த அபாயம் நீங்கியது. இந்தியாவின்மீது படையெடுக்கும் எண்ணத்தில் அசாம் வரையில் வந்திருந்தும் ஜப்பானால் இந்தப் படையெடுப்பை நடத்த முடியவில்லை. இச் சமயத்தில் பசுபிக் போர்முனையின் பிரதம தளபதிகளாக ஜெனரல் மாக் ஆர்தரும், தென்கிழக்கு ஆசியப் போர்முனையின் தளபதியாக மவுண்ட்பேட்டன் பிரபுவும் நியமிக்கப்பட்டனர். படிப்படியாக நேசப் படைகள் ஜப்பானின் ஆதிக்கத்திலிருந்த நியூகினியா, பர்மா, பிலிப்பைன் ஆகிய பகுதிகளை மீட்டனர். இருப்பினும் ஜப்பான் சரணடையாது போரை நீடித்து வரவே 1945 ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்க விமானிகள் ஹிரோஷிமா என்ற நகரின் மீது அணுகுண்டை வீசி ஏராளமான சேதங்களை ஏற்படுத்தினர். இன்னும் ஜப்பான் போரிடப்போவதாக அறிவித்ததால் இரண்டாவது அணுகுண்டை நாகஸாகி என்ற நகரின்மீது வீசி, அந்த நகரை அறவே அழித்துவிட்டனர். அதற்குப் பிறகு ஜப்பான் சரணடைந்தது.

போரின் விளைவுகளும் சமாதான உடன்படிக்கைகளும்

இரண்டாவது உலகப் போர் இதுவரை நிகழ்ந்த எல்லாப் போர்களைக் காட்டிலும் மிகவும் கொடுமை வாய்ந்ததாக இருந்தது. இந்தப் போர் ஆறு ஆண்டுகள் நிகழ்ந்தது. ஜெர்மனி 7 மே 1945-ல் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது. ஜப்பான் 14 ஆகஸ்டு 1945-ல் சரண் அடைந்தது. அளவற்ற சேதங்கள் இந்தப் போரினால் ஏற்பட்டன. அவற்றை மதிப்பிடுவதும் கடினமேயாகும். இப் போரில் இறந்தவர்கள் தொகை ஏறக்குறைய இரண்டரைக் கோடி என்று மதிப்பிடப்படுகிறது. சுமார் மூன்றரைக் கோடி பேர் காய முற்றிருப்பர். இப் போரினால் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 350 மில்லியன் டாலர்களும், மற்ற நாடுகளுக்கு 1000 மில்லியன் டாலர் களும் செலவாகியிருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. எண்ணற்ற இளைஞர்கள், அவர்களுள் பலர் எதிர்காலத்தில் சிறந்து விளங்க இருந்தவர்கள் இப் போருக்கு இரையாகிவிட்டனர். இப் போரில் ஏற்பட்ட எல்லாக் கொடுமைகளைக் காட்டிலும், ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, பிறகு நாகஸாகி ஆகிய இடங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அணுகுண்டுகளை வீசி அந்த நகரங்களையும், அங்குள்ள மக்களையும் ஒரேயடியாக அழித்து ஜப்பானைச் சரணடையச் செய்தது. ஓரளவிற்கு அமைதியை விரைவில் கொண்டுவர முடிந்தது என்றாலும், இந்த அணுகுண்டு வீச்சு தவிர்க்கப்பட்டிருக்கலாம். அமெரிக்கா இன்னும் சிறிது பொறுமையாக இருந்திருக்கலாம். ஏனெனில், மற்ற அச்சு நாடுகளான ஜெர்மனியும், இத்தாலியும் நிபந்தனை யின்றி சரணடைந்த பிறகு, அதுவும் ஜப்பான் ஆக்கிரமித்தப் பல பகுதிகளை இழந்து வரும்பொழுது, அதுவே விரைவில் சரணடைந் திருக்கும். ஆனால், அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது அதனுடைய வலிமையை எடுத்துக் காட்டவும், அதற்குள் நேச நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருந்த சிக்கல்கள் காரணமாக, குறிப் பாகச் சோவியத் ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடும் அளவில் அமெரிக்கா இவ்விதமாக நடந்துகொண்டது என்று யூகிக்கப் படுகிறது. எப்படியிருந்தபோதிலும், மற்றொரு உலகப் போர் ஏற்பட்டால் அழிவு விரைவில் ஏற்படும். மனித இனம் எவ்வளவு வேகமாக அழிந்துவிடும் என்பதை எடுத்துக்காட்ட இந்த அணுகுண்டு வீச்சு ஒரு சான்றாக இருக்கும் என்று கருதினர்.

போர் முடிந்த பிறகு, சமாதான மாநாடு ஒன்றை உடனடி யாகக் கூட்ட முடியவில்லை. முதல் உலகப் போர் முடிந்த உடன் மிகவும் அவசரமாகப் பாரிஸில் சமாதான மாநாடு கூட்டப்பெற்று, அங்குத் தோல்வியுற்ற நாடுகளுடன் சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பெற்றன. அந்த அவசரம் இப்பொழுது காட்டப்

படவில்லை. சமாதான மாநாடு கூட்டப்படுவதற்குமுன்பே நேச நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. ரஷ்யாவுக்கும், அமெரிக்காவிற்கும் கோட்பாட்டளவிலும், சுயநலங்களிலும் நிறைய வேறுபாடுகள் தோன்றின. ஜெர்மனியின் பல பகுதிகளை நேச நாடுகள் ஆக்கிரமித்து அவைகளைத் தங்கள் ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொண்டன. ரஷ்யாவும் கிழக்கு ஜெர்மனியை அதன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டது. அதனால் வல்லரசுகளுக் கிடையே தகராறு முற்றியது. உடனடியாக சமாதான உடன் படிக்கைகள் ஏற்பட வழியில்லாமல் போய்விட்டது. தவிர, தோற்றுப்போன ஜெர்மனி, இத்தாலியில் அப்பொழுது நிரந்தர அரசாங்கங்கள் இல்லாத காரணத்தால் எந்த அரசாங்கத்துடன் சமாதானம் செய்து கொள்வது என்ற சிக்கல் எழுந்தது. வெற்றி பெற்ற நாடுகளிலும், குறிப்பாக ஃபிரான்ஸ், பெல்ஜியம், நெதர் லாந்து, நார்வே, கிரீஸ் ஆகிய நாடுகளும், மற்றக் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடுகளும் சமீபத்தில்தான் நாஜி ஆதிக்கத்தி லிருந்து மீட்கப்பெற்றன. அதனால், அந்த நாடுகளிலும் அரசாங் கங்கள் சரியாக இன்னும் அமையவில்லை. அதனால் சமாதான மாநாட்டைக் கூட்டுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது.

ஆனால், போர் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்பொழுதே, பெரிய வல்லரசுகளின் தலைவர்கள் சர்வதேச சங்கத்தைப்போல, ஓர் உலக நிறுவனத்தை ஏற்படுத்தப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டனர். அவர்கள் போர் முடியும்வரைக் காத்திருக்க வேண்டிய அவசிய மில்லை என்று கூறினர். உலகிலே அமைதியையும் சமாதானத் தையும் நிறுவ, ஓர் உலக நிறுவனம் மிகவும் அவசியம் என்று அப்பொழுது, ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் கருதினர். 14 ஆகஸ்டு 1941-ல், அமெரிக்க ஐக்கிய நாடு போரில் இறங்குவதற்கு முன்னரே, ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் 'அட்லாண்டிக் சாசனம்' என்ற மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் ஓர் அறிக்கையை விடுத்தனர். அந்த அறிக்கையில் அவர்கள், உலகில் அமைதியையும், நீதியையும் பாதுகாப்பது அவசியம் என்றும், ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு நாடும் அதற்குரிய அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறினர். அந்தக் கூட்டு அறிக்கையில், நாஜிகளின் ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்ட பிறகு, மக்களுக்கு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி, எல்லோரும் அமைதியாகவும், சுதந்தரமாகவும், அடிமைத்தளைகளிலிருந்து விடுதலை பெற்று, வறுமையிலிருந்து விடுதலை பெற்று, நல்ல

வாழ்க்கைத் தரத்தைப்பெற அவர்கள் தக்க முயற்சி எடுக்கப்போகும் நம்பிக்கையை அறிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை

"அட்லாண்டிக் சாசனம்" அறிவிக்கப்பட்ட நான்கு மாதங் களுக்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடுகள் அச்சு நாடுகள்மீது போர்த் தொடுத்தது. 1942-ல் 26 நாடுகள், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரிட்டன் ஆகிய மூன்று பெரிய வல்லரசுகள் உட்பட அவைகளின் பிரதிநிதிகளை ஓர் உலக நிறுவனத்தை அமைக்கும் சாத்தியக்கூறுகளைப் பரிசீலனை செய்ய வாஷிங்டனில் கூட்டப் பெற்ற மாநாட்டிற்கு அனுப்பின. அட்லாண்டிக் சாசனத்தில் கூறப்பட்டிருந்த குறிக்கோள்களைப்பெற அவர்கள் உறுதிமொழி கூறினர். அச்சு நாடுகளை முறியடிப்பதில் அவர்கள் முழு மனத்துடன் ஒத்துழைக்கவேண்டும் என்று முடிவு செய்தனர். 1943 அக்டோபர் மாதத்தில், பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடு போர் முடியும்வரை காத்திருக்காது, உடனடியாக ஓர் ஐக்கிய நாடுகள் சபையை நிறுவவேண்டும் என்று அறிவித்தன. இதைத் தொடர்ந்து நவம்பர் 1943-ல் பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மாஸ்கோவில் கூடி, உடனடியாக ஓர் உலக நிறுவனத்தை ஏற்படுத்தி, நாடுகளின் சுதந்தரத்தைப் பாதுகாக்கவும், மக்களுக்குச் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்திக் கொடுக்கவும்; அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் எல்லா நாடுகளையும் அந்த நிறுவனத்தில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளவும் வழி வகைகளை வகுத்தனர். அக்டோபர் 1944 வாஷிங்டனுக்கு அண்மையில் உள்ள டம்பார்டன் ஓக்ஸ் (Dumbarton Okas) என்ற இடத்தில் ஒரு மாநாடு கூட்டப்பெற்றது. உலக நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கான விதிகளையும், அமைப்பையும் அந்த மாநாட்டில் பரிசீலனை செய்தனர். பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். ஃபிரான்ஸ் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வில்லை. அமெரிக்க அரசாங்கத்திற்கும், டிகாலேக்கும் ஏற்பட் டிருந்த சில தகராறுகளே இதற்குக் காரணம். இந்த மாநாட்டில் ஏற்பட்ட முடிவுகளை உலக நிறுவனத்தை உருவாக்க விரும்பிய அரசாங்கங்களின் பரிசீலனைக்காக அனுப்பி வைத்தனர்.

சர்வதேச சங்கம் ஏற்படுவதற்கு முக்கியமாக இருந்தவர் அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த உட்ரோ வில்சன் என்பவர் அமெரிக்க மேல்சபையின் ஒப்புதலைப் பெறுத காரணத் தால், அச் சங்கத்தில் அமெரிக்கா அங்கத்தினர் நாடாகச் சேர

முடியாமல் போனது. ஆனால், இப்பொழுது, முன்கூட்டியே அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் அமெரிக்க மக்களின் ஆதரவையும், அமெரிக்க மேல்சபையின் சம்மதத்தையும் பெற்று, இந்த உலக நிறுவனம் ஏற்படுவதற்கு அவர் முழு ஒத்துழைப்பையும் அளித்தார். பிப்ரவரி 1945-ல் யால்டா என்ற இடத்தில் நிகழ்ந்த மாநாட்டில் ஸ்டாலின், சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆகிய மூன்று பெரிய தலைவர்களும்கூடி, இந்த நிறுவனத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்குச் சான்பிரான்சிஸ்கோவில் மற்றுமொரு மாநாட்டைக் கூட்டுவது என்று முடிவு செய்தனர். அந்த மாநாட்டில்தான் ஐக்கிய நாடுகளின் அமைப்பைத் தயாரித்தனர். இந்த மாநாடு 25 ஏப்ரல் 1945-ல் சான்பிரான்சிஸ்கோ என்ற இடத்தில் கூடியது. 44 அரசாங்கங்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். அதற்குப் பிறகு மற்றும் ஆறு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பெற்றது. இந்த மாநாட்டில் இரண்டு மாதங்கள் வரையிலும் காரசாரமான விவாதங்கள் நிகழ்ந்த பிறகு "ஐக்கிய நாடுகளின்" சாசனத்தைத் தயாரித்தனர். 26 ஜூன் 1945-ல் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் இச் சாசனத்தை ஏகமனதாக ஏற்றுக் கையெழுத்திட்டனர். இச் சாசனத்தை, அந்தந்த நாடுகளின் சட்டமன்றங்களும் ஒப்புதல் அளிக்க அனுப்பிவைத்தனர். தவிர சீனா, பிரிட்டன், ஃபிரான்ஸ், சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களில் இச் சாசனத்தைப் பரிசீலனை செய்ய அவர்களுக்குச் சிறிது அவகாசம் தரப்பெற்றது. 1945-ல் அக்டோபர் 24-ம் தேதியன்று இந்த ஐக்கிய நாடுகளின் சபை தோன்றியது. 1946 ஜனவரி 10-ம் தேதியன்று, அதாவது சர்வதேச சங்கத்தின் 26ஆவது ஆண்டு விழாவின்போது முதல் முறையாக ஐ. நா. பொதுச்சபை செயலாற்றத் தொடங்கியது.

ஐ. நா.வின் குறிக்கோள்கள்

ஐ. நா. சாசனம் 111 விதிகளைக்கொண்டது. அதன் முன்னுரையில் குறிக்கப்பட்டுள்ள முக்கிய கொள்கைகளும், குறிக்கோள்களும் :

(1) வருங்காலச் சந்ததிகளைப் போரின் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுதல்.

(2) மனித இனத்தின் அடிப்படை உரிமைகளில் நம்பிக்கை வைப்பதாக உறுதிமொழி அளித்தல்.

(3) நீதியை நிலைநிறுத்திச் சர்வதேசக் கடமைகளை மதித்தல்.

(4) சமூக முன்னேற்றத்தின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் உழைத்தல்.

ஐக்கிய நாடுகளில் உள்ள எல்லா மக்களும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் சகிப்புத்தன்மையுடனும் வாழவேண்டும். அவர்கள் சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்த வேண்டும். பொதுநலன் கருதி படைபலத்தைப் பயன்படுத்தக் கூடாது. பொருளாதார வளர்ச்சிக்கான சர்வதேச நிறுவனங்களைப் பயன்படுத்தவும், அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் செயல்களைத் தடுக்கவும் இச் சபை நிறுவப்பெற்றுள்ளது. மேலும், உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தவும், அமைதியைக் காக்கவும் இச் சபையில் சேர்ந்துள்ள எல்லா அங்கத்தினர்களும் கடமைப் பட்டுள்ளனர்.

வெளிவிவகாரங்களில் ஏற்படும் சிக்கல்களை இச் சபை தீர்த்து வைக்கும். மேற்கூறிய குறிக்கோள்களைத் தவிர, இச் சபையில் சேர்ந்துள்ள எல்லா நாடுகளும் கீழ்க் குறிப்பிட்டுள்ள ஏழு கடமைகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றன.

(1) எல்லா உறுப்பினர் நாடுகளும் சமத்துவமான இறைமையின் அடிப்படையில் இச் சபை நிறுவப்பெற்றுள்ளது என்பதை உணரவேண்டும்.

(2) ஒவ்வொரு உறுப்பினரும் சாசனத்தின் விதிகளுக்கு உட்பட்டு நல்லெண்ணத்துடன் கடமைகளை ஆற்ற வேண்டும்.

(3) எல்லா அங்கத்தினர் நாடுகளும் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் இடையூறு நேராதவாறு தங்களுடைய விவகாரங்களைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

(4) எந்த அங்கத்தினர் நாடும் மற்ற நாட்டின்மீது படையைப் பயன்படுத்தவோ அல்லது படைபலத்தை வைத்து மிரட்டவோ அல்லது அண்மையிலுள்ள நாட்டின் பகுதியையும் அல்லது அதன் சுதந்தரத்தையும் பறிக்கவோ கூடாது.

(5) ஐக்கிய நாடுகள் சபை ஏதாவது ஒரு நாட்டின்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும்பொழுது, மற்ற நாடுகள் அந்த நாட்டிற்கு உதவியாக இருக்கக் கூடாது.

(6) அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதற்குச் சபையில் உறுப்பினர்களாக இல்லாத நாடுகளும்கூடச் சாசனத்தின்படியே நடந்துகொள்ள வேண்டும்.

(7) உள்நாட்டு விவகாரங்களில் ஐ. நா. சபை தலையிடாது. ஆனால், ஆக்கிரமிப்பு, அல்லது அமைதிக்கு இடையூறு செய்யவேண்டுமென்ற கொள்கைகளை அது அனுமதிக்காது. அந்த உள்நாட்டுக் கொள்கைகளையும் நல்லெண்ணத்துடன்தான் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் இச் சாசனத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் தொகை 51. சாசனத்தின் நான்காவது பிரிவின்படி, அமைதியை வேண்டும் எந்த நாடும் இந்தச் சபையில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படும். ஒரு நாடு உறுப்பினராகச் சேர்வதற்குப் பாதுகாப்புச் சபையின் சிபாரிசும் பொதுச்சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோரின் சம்மதமும் வேண்டும். உறுப்பினரான பிறகு, அந்த நாடு ஐ. நா. சபையிலிருந்து விலகிக்கொள்ள முடியாது. ஆனால், ஐ. நா. சபை பெரும்பான்மை வாக்குகளின் ஆதரவில், உறுப்பினராக உள்ள ஒரு நாட்டை அதிலிருந்து நீக்கிவிடலாம்.

ஐக்கிய நாடுகள் சபை ஆறு உறுப்புகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. (1) பொதுச் சபை. (2) பாதுகாப்புச் சபை. (3) பொருளாதார, சமூகச் சபை. (4) ஐக்கிய நாடுகள் நீதிமன்றம். (5) அலுவலகம். (6) தர்மகர்த்தா சபை.

பொதுச் சபை (General Assembly)

இப்பொழுது 121 உறுப்பினர் நாடுகள் இச் சபையில் அங்கம் வகிக்கின்றன. அவைகளில் பெரும்பான்மையான நாடுகள் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளாகும். அதனால் முன்பு வல்லரசுகள் கொண்டிருந்த ஆதிக்கமும், செல்வாக்கும் பெரும்பாலும் குறைந்து விட்டது என்றே கூறவேண்டும். நாளடைவில் பொதுச் சபையின் செல்வாக்கே பெருகி வருகின்றது. ஏனெனில், பாதுகாப்புச் சபையில், அமெரிக்காவும், ரஷ்யாவும் கோட்பாட்டின் அடிப்படையில் வேறுபாடுள்ள கருத்துகளை கொண்டுள்ளன. அவ்விரு நாடுகளும் தங்கள் பக்கம் நாடுகளைச் சேர்த்துக்கொண்டு கோஷ்டி மனப்பான்மையை வளர்த்துவிட்டன. புதிதாகப் பல ஆப்பிரிக்க நாடுகளும் ஆசிய நாடுகளும் உறுப்பினர் நாடுகளாகச் சேர்ந்து விட்டதாலும், பாதுகாப்புச் சபையில் ஏகமனதாக எந்த முடிவும் எடுப்பது மிகவும் கடினமாக இருப்பதாலும், நாளடைவில் பொதுச்

சபையின் செல்வாக்கு வளர்ந்து வருதலைக் காணலாம். இந்தப் பொதுச் சபையில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதில் பாதுகாப்புச் சபையின் சம்மதம் வேண்டும். ஐ. நா. சபை தோன்றிய காலத்தில், பொதுச் சபையில் ஓர் உறுப்பினர் நாட்டைச் சேர்த்துக் கொள்வதில் பலவிதமான இடையூறுகள் இருந்தன. பாதுகாப்புச் சபையின் சம்மதமும், பொதுச் சபையின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும் வேண்டியிருந்தது. இந்த விதி தளர்த்தப்படவில்லை யெனினும், பரந்த மனப்பான்மையுடன், இப்பொழுது உறுப்பினர் நாடுகளைச் சேர்த்துக்கொள்கின்றது. இருப்பினும், ஐ. நா. சபையில் சில நாடுகள் அங்கம் பெறுவது கடினமாக இருக்கிறது. இன்னும் ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என்று பிரிக்கப் பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனியில், நேசநாடுகளின் ஆதிக்கத்தி லிருந்த பகுதிகள் ஒன்றுக இணைய அமெரிக்கா வழிசெய்தது. கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருக்கிறது. அதனால் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் கருத்து வேறுபாடுகள் காரணமாக இந்த இரண்டு ஜெர்மன் நாடுகள் இன்னும் ஐ நா.வில் சேரவில்லை. முதல் உலகப் போர் முடிந்த உடன் சர்வதேச சங்கத்தில், தோல்வியுற்ற நாடுகள் இடம்பெறவில்லை. அவை இடம்பெறக்கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றினர். பிறகு தான் ஜெர்மனும், பிறகு ரஷ்யாவும் இந்தச் சர்வதேச சங்கத்தில் இடம்பெற்றன. ஆனால், அவ்விதமான வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் மனப்பான்மையில் இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு நேச நாடுகள் நடந்துகொள்ளவில்லை. ஜெர்மனியைத் தவிர, மற்றத் தோற்றுப்போன இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் எல்லாம் ஐ. நா. சபையில் இடம்பெற்றிருக்கின்றன. அமைதியை நிலை நிறுத்த ஆர்வம் கொண்டுள்ள எந்தச் சுதந்தர நாட்டிற்கும் அதில் இடம்பெற உரிமை இருக்கிறது. செஞ்சீனாவை ஐ. நா. சபையில் அனுமதிப்பதுபற்றி, அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் பலத்த கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தினராக ஒரு சீனா இடம்பெற்றுள்ளது. அது இப்பொழுது மிகச் சிறிய நாடாகவும், சீன மக்களைப் பிரதி நிதித்துவம் செய்யாத நாடாக இருந்தபோதிலும், அமெரிக்காவும், அமெரிக்காவைச் சேர்ந்துள்ள பல நாடுகளும் செஞ்சீனா ஐ. நா. வில் இடம் பெறுவதை விரும்பவில்லை. இந்தத் தகராறு இன்னும் நீடித்து வருகிறது.

ஐ. நா. சபையின் சட்டமன்றத்தைப்போல இப் பொதுச் சபை பணியாற்றுகிறது. உலக மக்களின் கருத்தரங்கமாக இச் சபை விளங்குகிறது. பல ஆக்கிரமிப்புச் செயல்களைக் கண்டிக்கவும், அணு உற்பத்தியை அழிவு வேலைக்குப் பயன்படுத்தும் சக்திகளைத்

தடுக்கவும், ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகளை எடுக்கவும், பொதுவாக எல்லா ஆக்க வேலைகளைச் செயலாற்றவும் இப்பொதுச் சபை மிக அவசியமான பணிகளையாற்றுகின்றது. ஐ. நா.வின் நிதி, உறுப்பினர் நாடுகளின் சந்தா மூலமாகத் திரட்டப்படுகின்றது.

பாதுகாப்புச் சபை (Security Council)

இப் பாதுகாப்புச் சபையில் ஐந்து நிரந்தரமான உறுப்பினர் நாடுகள் உள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், சோவியத் ரஷ்யா, ஃபிரான்ஸ், தேசிய சீனா ஆகிய நாடுகள்தான் இச் சபையின் நிரந்தரமான உறுப்பினர் நாடுகளாகும். மற்றும் நிரந்தரமற்ற ஆறு உறுப்பினர் நாடுகளும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மூன்றில் இரண்டு எண்ணிக்கை கொண்ட பொதுச் சபையினரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஐ. நா.வின் அழிவற்ற எதிர்காலமும், உலக அமைதியும், சமாதானமும் இந்தப் பாதுகாப்புச் சபையில்தான் உள்ளது. அதுவும் மேற்கூறிய ஐந்து பெரிய வல்லரசுகளிடம்தான் உள்ளது.

இப் பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்பு முறைபற்றிப் பலவிதக் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. இச் சபையின் நிரந்தர அங்கத்தினர்களிடம்தான் சிறு நாடுகளின் சுதந்தரமும் பாதுகாப்பும் இருக்கின்றன. ஆகவே, அவற்றைப் பாதுகாப்பதிலோ, அல்லது ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுப்பதிலோ, இவ்வல்லரசுகளின் ஏகமனதான முடிவே மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. அதனால்தான் இந்தக் கூட்டுப் பாதுகாப்பு முறை வகுக்கப்பெற்றது. இப் பாதுகாப்புச் சபையில் நிரந்தரமாக உள்ள எந்த வல்லரசும் முழு அதிகாரமும் பெற்றிருக்கிறது. அதனால்தான் பாதுகாப்புச் சபையில் ஏகமனதான முடிவு தேவைப்படுகின்றது. ஏகமனதான முடிவாக ஏற்பட்டதென்றால், அந்த முடிவை உடனடியாகச் செயலாற்றுவதில் தாமதம் இருக்காது. நிரந்தர அங்கத்தினர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றிவிட்டால் முடிவு எடுப்பதும் கடினமாகின்றது. ஒவ்வொரு நிரந்தர அங்கத்தினர் நாட்டிற்கும் எந்தத் தீர்மானத்தையும் ரத்து செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 'ரத்து அதிகாரம்' (Veto) என்று பெயர். இவ்வித ரத்து அதிகாரத்தை எந்த நிரந்தரமான பாதுகாப்புச் சபை அங்கத்தினரும் பயன்படுத்தலாம். அப்பொழுது அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டதாகவே பொருள்படும். இந்த "ரத்து அதிகாரம்" நிரந்தர பாதுகாப்புச் சபை அங்கத்தினர்களுக்குக் கொடுத்ததற்குக் காரணமே இந்த நாடுகளின் முக்கியத்துவத்தையும் செல்வாக்கையும், மக்கள் தொகையையும் பரிசீலனை செய்தே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வல்லரசுகள் எந்த நடவடிக்கையையும் கூட்டாக எடுப்பது என்பது, அவைகளின்

ஏகமனதான முடிவிலிருந்து வெளிப்படும் என்பதை உணர்த்தவே ஒவ்வொரு நாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த வல்லரசுகளுக்கிடையே கருத்து வேற்றுமைகள் மிகவும் அதிகரித்துவிட்டதால், அவைகளின் சுயநலங்களைப் பாதுகாப்பதிலும், அவைகளின் ஆதிக்கத்தைச் செலுத்துவதிலும் தான் அதிக அக்கறை காட்டுகின்றன. இந்தக் கருத்து வேற்றுமைகளுக்கு முக்கிய காரணம், கோட்பாடுகளில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயப் பேதங்களேயாகும். அதனால், இரண்டு வேறுபட்ட அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பின்பற்றும் அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் தங்கள் கெடுபிடிப் போரை, இந்தப் பாதுகாப்புச் சபையிலும் பின்பற்றுகின்றன. ரஷ்யா கொண்டு வருகின்ற தீர்மானத்திற்கு அமெரிக்கா ரத்து அதிகாரத்தைப் பிரயோகிக்கவும், அமெரிக்கா கொண்டு வருகின்ற தீர்மானத்திற்கு ரஷ்யா ரத்து அதிகாரத்தைப் பிரயோகிக்கவும், இப்படியே நிலைமை நீடித்து வந்தால், இந்த நாடுகள் மொத்தம் எவ்வளவு முறை ரத்து அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளன என்பதில்தான் அதிக ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. இந்த கெடுபிடி நிலைமை விரைவில் மாறும் என்ற நம்பிக்கையும் இப்பொழுது ஏற்படவில்லை. இதன் காரணமாகப் பாதுகாப்புச் சபை ஒழுங்காகச் செயலாற்ற முடியுமா என்ற அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு வகையில் இந்த வல்லரசுகளின் செல்வாக்கையும், முக்கியத்துவத்தையும் குறைக்கின்ற அளவில் புதிய நாடுகள் ஐ. நா.வில் இடம் பெற்றுள்ள காரணத்தால், சிறிய நாடுகளும், குறிப்பாக ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளும் தங்களது முக்கியத்துவத்தை உணர்த்த ஐ. நா.வின் பொதுச் சபையைப் பயன்படுத்துகின்றன. அதனால் பாதுகாப்புச் சபையின் செயலாற்றும் திறமை இந்த ஒற்றுமையின்மையால் குறைந்துவிட்டபோதிலும், பொதுச் சபையின் முக்கியத்துவம் இப்பொழுது அதிகமாக உணரப்படுகிறது.

சமூகப் பொருளாதாரச் சபை (The Economic and Social Council)

சாசனத்தின் முன்னுரையில் முக்கியமான கொள்கையாக, "உலக மக்களின் சமூகநல வளர்ச்சிக்காகவும்" அவர்கள் வாழ்க்கைத்தர உயர்விற்காகவும்" ஐ. நா. உதவும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையைச் செயலாற்றும் பொறுப்பைச் சமூகப் பொருளாதாரச் சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இச் சபையின் பணிகள்தான் உண்மையிலேயே ஐ. நா. விற்கு மதிப்பைத் தருகின்றன. பொதுச் சபையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற 18 நாடுகள் கொண்ட இச் சபை எல்லா நாடுகளின் சமூக, பொருளாதார நிலைகளைப் பரிசீலனை செய்து ஆக்க வேலைகளைச் செய்கிறது. பொதுவாகப் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார

வளர்ச்சிக்காகவும், அவைகளின் சமூக நலன்களுக்காகவும் பல நிறுவனங்கள் மூலமாக உதவி செய்து வருகிறது. சமூகம், பொருளாதாரம், கல்வி, தொழில் நுணுக்கம், பண்பாடு, வேலை தேடித் தரல், தொழிலாளர் நலன், பெண்கள் முன்னேற்றம், விவசாயிகளின் நலன்கள், குழந்தைகள் நலன்கள், செலாவணி, புள்ளி விவரங்கள், செய்திகள் ஆகிய பல துறைகளிலும் இச் சபை நல்ல பணியாற்றி வருகிறது. இப் பணிகளைச் செயலாற்ற பல சிறப்பு நிறுவனங்களை இச் சபை ஏற்படுத்தியிருக்கிறது. அவைகளாவன : சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் (I. L. O.); உணவு விவசாய நிறுவனம் (F. A. O.); ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம், பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம் (UNESCO); சீரமைப்பு, மற்றும் நாடுகளின் வளர்ச்சிக்குரிய பணிகளைச் செய்ய சர்வதேச பாங்கும்; சர்வதேச நிதி (I. M. F.); உலகச் சுகாதார நிறுவனம் (W. H. O.).

தர்மகர்த்தா சபை (The Trustee Ship Council)

சென்ற இரு உலகப் போர்களிலும் தோற்றுப்போன நாடுகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பெற்ற பகுதிகளும், சுயாட்சி அடைய பக்குவ நிலை பெருத சில குடியேற்ற நாடுகளும் சில நாகரிகம் அடையாதப் பகுதிகளும் நன்கு பாதுகாக்கப்படுவதற்கு இச் சபை நிறுவப்பட்டுள்ளது. இச் சபை மேற்கூறிய நிலப் பகுதிகளை நேரடியாக ஆட்சி செய்யாவிட்டாலும், அந்தப் பகுதிகளின் நிர்வாகப் பொறுப்பைச் சில நாடுகளிடம் ஒப்படைத்து அவற்றின் ஆட்சித் திறனைக் கண்காணித்து, நிர்வாகம் செய்யும் நாடுகளிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்கிறது. சில குடியேற்ற நாடுகள் சுய ஆட்சி பெறும் பக்குவத்தைப் பெற்றுவிட்டால் அந்த நாடுகளுக்குச் சுதந்தரம் தரப்படுகிறது. அண்மையில் பல ஆப்பிரிக்க நாடுகள் சுதந்தரம் பெற வழி வகுத்துக் கொடுத்தது. பாதுகாப்புச் சபையின் எல்லா நிரந்தர உறுப்பினர்களும் இச் சபையின் உறுப்பினர்களாவர்.

ஐக்கிய நாடுகளின் நீதிமன்றம்

15 நீதிபதிகளைக்கொண்ட இந்த நீதிமன்றத்தின் தலைமை அலுவலகம் ஹேக் நகரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச உடன்படிக்கைகளிலும், சட்டங்களிலும் ஏற்படுகின்ற குறைபாடுகளையும், சர்வதேச உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளையும், இரு தரப்பினரும் விரும்பினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறது. இந்த நீதிமன்றத்தின் முடிவுகளை வழக்காடும் நாடுகள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லையென்றாலும், இதன் தீர்ப்புகளை நிறைவேற்றும் பொறுப்புப் பாதுகாப்புச் சபையிடம் உள்ளது.

அலுவலகம் (The Secretariate)

ஐ. நா. அலுவலக நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள ஒரு பொதுக்காரியதரிசி நியமனம் செய்யப்படுகிறார். மற்றும் அவருக்கு உதவவும், அலுவலகத்தில் பணியாற்றவும் பல நாடுகளிலிருந்தும் அதிகாரிகளை நியமனம் செய்கின்றனர். பொதுக்காரியதரிசி, பாதுகாப்புச் சபையால் சிபாரிசு செய்யப்பெற்று, பொதுச் சபையால் நியமனம் செய்யப்படுகிறார். பொதுச்சபைக்குத் தேவையான அறிக்கைகளும், மற்றும் ஆண்டு அறிக்கையும் அவரால் தயாரிக்கப்படுகின்றன. உலக அமைதிக்கும், சமாதானத்திற்கும் ஆபத்து நேரிடும் எந்த நிகழ்ச்சியையும் அவர் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

ஐ. நா. சபையும், சர்வதேச சங்கமும்

"சர்வதேச சங்கமேதான் புதிய வடிவத்தில் தோன்றியிருக்கிறது" என்று பேராசிரியர் ஷூமேன் (Schuman) கூறுகிறார். உண்மையில், சர்வதேச சங்கம் சீர்குலைந்துவிட்டதால், அதனுடைய இடத்தை நிரப்புவதற்கு மற்றொரு உலக நிறுவனத்தைக் கொண்டு வந்தனர். அதனால் சர்வதேச சங்கத்தின் வாரிசாகவே ஐ. நா. சபையைக் கருதலாம். இரண்டு உலக நிறுவனங்களிலும் சில அமைப்பு முறைகளில் மாறுதல்கள் இருந்தபோதிலும், அவைகளின் கொள்கைகளும் நோக்கங்களும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. சர்வதேச சங்கம் சீர்குலைவதற்கான சில காரணங்களையும், மற்றும் அதன் குறைபாடுகளையும் அகற்றிவிட்டு, இந்த ஐ. நா. சபையை உருவாக்கினர்.

சர்வதேச சங்கத்தில் காணப்பெற்ற சில குறைபாடுகளாவன :

(1) அமெரிக்க ஐக்கிய நாடு இந்தச் சங்கத்தில் இடம்பெறவில்லை. 1934 வரை சோவியத் ரஷ்யா இச் சங்கத்தில் அங்கத்தினராகச் சேரவில்லை.

(2) சங்கத்தின் முடிவுகளைச் செயலாற்ற, அதற்கு வலிமை மிக்கப் படைபலம் இல்லை. இச் சங்கத்தின் மிகக் கடும் நடவடிக்கை பொருளாதாரத் தடையை ஆக்கிரமிப்புச் செய்யும் நாடுகளின்மீது கொண்டு வருவதுதான். அதுவும் கூட, இத்தாலியின்மீது, இந்த நடவடிக்கையைக் கொண்டு வந்தபொழுது, முசோலினிக்குப் போர் செய்ய மிக முக்கியத் தேவையாக இருந்த எண்ணெய்யை மட்டும் எச்சரிக்கையாக விட்டுவிட்டனர்.

(3) இச் சங்கத்தில் சேர்ந்திருந்த நாடுகள் பொருமை காரணமாக எவ்வித இறைமையையும் விட்டுக்கொடுக்கும்

பணியில் மறுத்துவிட்டதால், எவ்விதக் கூட்டு நடவடிக்கையையும் ஆக்கிரமிப்புச் செய்யும் நாட்டின்மீது செலுத்த முடியவில்லை. ஆக்கிரமிப்பாளர்களின்மீது நடவடிக்கை எடுக்கப் பொதுச்சபையிலாவது அல்லது பாதுகாப்புச் சபையிலாவது ஏகமனதாக முடிவு எடுக்கப்பட வேண்டும். அதனால், சங்கத்தின் விருப்பப்படி, ஆக்கிரமிப்பாளர்மீது நடவடிக்கை எடுக்க எந்த அங்கத்தினர் நாட்டையும் சங்கம் வற்புறுத்த முடியவில்லை. அதனால், ஆக்கிரமிப்பாளர்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை அங்கத்தினர் நாடுகளே விருப்பம் போல செய்துகொண்டன.

(4) உண்மையில் சர்வதேச சங்கத்தின் சாசனம் போரை முற்றிலும் தவிர்க்கவேண்டும் என்று கூறவில்லை. மூன்று மாதங்கள் காலதாமதம் செய்துவிட்டு, ஒரு நாடு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கலாம். இருந்த போதிலும், அந்த நாடு சங்கத்தின் அமைப்பு விதிகளைப் புறக்கணித்ததாகக் கருத முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

(5) சர்வதேச சங்கத்தின் சாசன அமைப்பு, தோற்றுப்போன நாடுகளுடன் செய்துகொண்ட வெர்சேல்ஸ் உடன் படிக்கை போன்று செய்துகொள்ளப்பெற்ற உடன் படிக்கைகளுடன் இணைந்துவிட்டதால், அந்த உடன் படிக்கைகளைக் கண்டிப்பவர்கள், இந்தச் சர்வதேச சங்க அமைப்பையும் கண்டிக்கத் தவறவில்லை. தவிர, சர்வதேச சங்கம் முதலில் வெற்றிபெற்ற நாடுகளுக்கு மட்டுமே அமைக்கப்பெற்றதாக ஒரு நிலைமை இருந்தது. அதனால், தோல்வியுற்ற நாடுகள், இச் சங்கத்தையும் வெற்றி பெற்றவர்களின் கொடுங்கோன்மைச் சின்னமாகவே கருதினர்.

மேற்கூறிய குறைபாடுகளை அகற்ற ஐ. நா. சபையை உருவாக்கியவர்கள் முயற்சி செய்தனர். அமெரிக்காவும், ரஷ்யாவும்தான் இந்த ஐ.நா. சபை ஏற்படுத்துவதற்கு முக்கியப் பொறுப்பாளிகளாக இருந்தன. தவிர, மற்ற நாடுகளான பிரிட்டன், ஃபிரான்ஸ், சீனாவுடன் சேர்ந்து பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்தினர்களாக முக்கியப் பொறுப்புகளையும், கடமைகளையும் ஆற்ற முன் வந்தனர்.

சர்வதேச சங்கத்தைப் போன்று படைவலிமை இல்லாத காரணத்தால் அதன் முடிவுகளைச் செயலாற்ற முடியாமல் ஐ. நா.

சபை தத்தளிக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை. பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர அங்கத்தினர் நாடுகள், பாதுகாப்புச் சபையின் ஆதரவில் எப்பொழுதும் தயாராக இருக்கும் ஒரு படையை வைத்திருந்தன.

தோற்றுப்போன நாடுகளுடன் செய்துகொண்ட உடன் படிக்கைகளுக்கும் ஐ. நா. சபை உருவாக்குவதற்கும் எவ்வித தொடர்பையும் வைத்துக்கொள்ளவில்லை. போர் முடிவதற்கு முன்னர் ஐ. நா. எப்படி நிறுவப்பட வேண்டுமென்பது நிர்ணயமாகி விட்டது. போர் முடிந்த பிறகும், மற்றத் தோற்றுப்போன நாடு களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட பிறகும்தான் ஐ. நா.வை ஏற்படுத்த வேண்டுமென்றிருந்தால், ஐ. நா. இதுவரையிலும் தோன்றியிருக்கவே முடியாது. ஏனெனில், இன்னும் ஜெர்மனி யுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்ள முடியவில்லை. மேற்கத்திய வல்லரசுகள் ஜப்பானுடன் 1952-ல் ஒரு தனிப்பட்ட சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டன. இந்த உடன் படிக்கையைச் சோவியத் ரஷ்யா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், 1956-ல் தனிப்பட்ட சமாதான உடன்படிக்கையை ரஷ்யா ஜப்பா னுடன் செய்துகொண்டது. ஆனால், ஐ. நா.வில் ஜெர்மனி இது வரையிலும் சேர்க்கப்படாமல் இருப்பது, அதன்மீது நேச நாடுகள் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற காரணத்தால் அல்ல. ஜெர்மனி இரண்டு நாடுகளாகப் பிரிந்திருப்பதால் அமெரிக்கா விற்கும், ரஷ்யாவிற்கும் இதனால் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை களுமேதான் காரணமாகும். மேற்கு ஜெர்மனியை ஐ. நா.வில் அனுமதிப்பதென்றால், கிழக்கு ஜெர்மனியையும் அனுமதித்து ஆகவேண்டும். கிழக்கு ஜெர்மனியை ஐ. நா.வில் அனுமதிக்காத வரையிலும், மேற்கு ஜெர்மனியும் அங்கு அனுமதி பெறுவது கடினமேயாகும். தவிர, மேற்கத்திய வல்லரசுகள் கிழக்கு ஜெர்மனியை இன்னும் அங்கீகரிக்கவும் இல்லை என்பது குறிப் பிடத்தக்கது. ஆனால், மற்ற அச்சு நாடுகளான இத்தாலியும், ஜப்பானும், ஐ. நா. வில் இடம்பெறுகின்றன.

ஐ. நா. சபையின் சாதனைகள்

உலகிலே அமைதியும், சமாதானமும் நிறைந்த சூழ்நிலை இருந்தால்தான் மக்கள் நிம்மதியாக வாழமுடியும். எங்கும், எத் துறையிலும் வளர்ச்சி ஏற்படும். இச் சூழ்நிலை உருவாக்கும் பொறுப்பு ஐ. நா. சபையிடம் விடப்பெற்றிருக்கிறது. கடந்த 22 ஆண்டுகளில் ஐ. நா. பல துறைகளில் ஆக்க வேலைகளைப் புரிந் திருக்கிறது. ஐ. நா.வின் முதற்பணி வருங்கால சந்ததியரைப் போரின் கொடிய பிடியிலிருந்து காப்பாற்றுவதேயாகும். இந்த

22 ஆண்டுகளில் உலகில் பல இடங்களில் ஆக்கிரமிப்புகளும், மற்றும் போர் ஏற்படக்கூடிய சூழ்நிலையும் உருவாகியும், மிகப் பெரிய போர் ஏற்படாதவண்ணம் 'ஐ. நா.' முயற்சிகளே எடுத்துப் போரைத் தவிர்த்திருக்கிறது. காங்கோ சுதந்தரம் பெற்ற பிறகு, அந்தப் புதிய நாடு பிழைக்குமா என்ற அளவிற்குப் பல அந்நிய ஆக்கிரமிப்புகளும், உள்நாட்டில் அமைதியைக் குலைக்கும் தீயச் சக்திகளும் மிகுந்த இடையூறுகளே அளித்துக்கொண்டிருந்தன. அங்கு அமைதியை நிறுவுவதற்காகச் சமாதானப் படை ஒன்றை அனுப்பி அங்குப் பிறகு அமைதியை நிலைநிறுத்திய சாதனை ஐ. நா.வைச்சாரும். இந்தப் பணிக்கு இந்தியாவும் படை அனுப்பி உதவியிருக்கிறது.

மேற்கு நியூகினி தீவுகள் பற்றி இந்தோனேஷியாவிற்கும் நெதர்லாந்திற்கும் ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைத்திருக்கிறது. அப்பகுதி 1969-ல் சுதந்தரம்பெற வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறது. ஐ. நா.வின் முயற்சியால் யூதர்களுக்கு இஸ்ரேல் என்ற புதிய நாடு கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இஸ்ரேல் நாட்டிற்கும் அரேபிய நாடுகளுக்கும் தகராறு இருந்துகொண்டே வருகிறது. அத் தகராறு காரணமாக இருதரப்பிலும் சுமார் பத்து இலட்சம் அகதிகள் எந்தவித வசதியின்றி அநாதைகளாக்கப் பெற்றனர். அந்த அகதிகளின் புனர் வாழ்விற்கு ஐ. நா. மிகவும் உதவியிருக்கிறது. இஸ்ரேல், அரேபிய நாடுகள் போர் செய்துகொள்ளாவண்ணம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றையும் ஏற்படுத்தித் தந்தது. ஆனால், மீண்டும் இந்தச் சிக்கல் எழுந்திருக்கிறது. அரேபிய நாடுகளுக்கும் இஸ்ரேல் நாட்டிற்கும் பெரிய மோதல் ஏற்படுவதை 1967-ல் தடுத்து நிறுத்திய போதிலும், இவ்விரு நாடுகளிடையே இன்னும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படவில்லை. ஐ. நா. அதன் முழு முயற்சியும் செய்துகொண்டிருக்கிறது. இந்தியா–பாகிஸ்தான் தகராறுகளிலும் 1949-ல் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட ஐ. நா. உதவியிருக்கிறது. மீண்டும் இவ்விரு நாடுகளிடையே ஏற்பட்ட போர் 1965-ல் நிறுத்தப்படுவதற்கு ஐ. நா. மிகவும் உதவியிருக்கிறது. தென் கொரியாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்புகளிலிருந்து, அந்த நாட்டைப் பாதுகாத்திருக்கிறது. அப் பணிக்கு ஐ.நா.வின் அமைதி காக்கும் படை அனுப்பப்பட்டது. சைப்ரஸ் தீவில் துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் ஏற்பட்ட மோதலை ஐ. நா. தவிர்த்திருக்கிறது. சூயஸ்கால்வாயில் ஏற்பட்ட சிக்கலைத் தவிர்த்து, அங்குள்ள பல அந்நியப் படைகளை அவர்களுடைய நாடுகளுக்கே அனுப்பி வைத்தது. அங்கு மீண்டும் அமைதியான சூழ்நிலை உருவாக்க ஐ. நா.வின் ஆதரவில் அங்கு ஒரு படையை வைத்திருந்தது. அந்தப் படை சமீபத்தில் வெளி

யேறிய உடன், இஸ்ரேலுக்கும் அரேபிய நாடுகளுக்கும் மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. இங்கு அமைதியை நிறுவ ஐ. நா. முயற்சி செய்து வருகிறது. தென் கிழக்கு ஆசியாவில் உள்ள வியட்நாமில் அமெரிக்கத் தலையீடு காரணமாக அங்குப் போர் நிகழ்ந்தவாறு இருக்கிறது. அந்தப் போரை நிறுத்த ஐ. நா. முயற்சி செய்து வருகிறது. மேற்கு ஆசியாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் ஏற்பட்டுள்ள போரைத் தவிர்க்க எடுத்துக்கொண்ட ஐ. நா.வின் முயற்சிகள் இன்னும் சரியான பயனை அளிக்கவில்லை. வல்லரசுகளின் சுயநலங்களும், தலையீடும் மிகவும் அதிகமாக இந்தப் பிரச்சினைகளில் கலந்திருப்பதால் இச் சிக்கல் தீர சிறிது கால தாமதம் ஏற்படினும், ஐ. நா. வெற்றியுறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எப்படி இருந்தபோதிலும், பெரிய போர் ஏற்படாமல் தவிர்த்திருப்பதே அதன் பெரிய சாதனையாகும். இவ்விதமான ஆக்கிரமிப்பு நிகழ்ச்சிகள் ஏற்படும்பொழுது, அவற்றைத் தீர்த்து வைக்க ஐ. நா.வைப் போன்ற ஓர் உலக நிறுவனம் இல்லையென்றால் உலக அமைதி மிகவும் சீர்குலைந்திருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. தவிர, ஐ. நா. பொதுப்படையாகப் போரைத் தவிர்க்க ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகளையும், அழிவு வேலைக்கு அணுசக்தியைப் பயன்படுத்தக் கூடாது என்ற அளவில் தடுப்பு நடவடிக்கைகளும், அணுகுண்டுகளையும் மற்ற நாச வேலைகளைச் செய்யும் அணு உற்பத்திகளையும் சோதனை செய்யக்கூடாது என்ற முயற்சியும் அவ்வப்பொழுது ஐ. நா. மேற்கொண்டுவருகிறது. ஐ. நா.வின் மிக முக்கியமான ஆக்க வேலைகளைச் சமூகப் பொருளாதாரச் சபை செய்து வருகிறது. அதன் ஆதரவில் இயங்கிவரும் எண்ணற்ற சிறப்பு நிறுவனங்கள், கல்வி, விஞ்ஞான வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, வைத்திய வசதிகள், குழந்தைகள் பராமரிப்பு, பயிர்த் தொழில் வளர்ச்சி, சுமுகமான போக்குவரத்துகள், சுகாதார வளர்ச்சி, பின்தங்கிய நாடுகளுக்குப் பொருள் உதவி செய்தல், மற்றும் பலவித உதவிகளைச் செய்து வருகின்றன. இச் சிறப்பு நிறுவனங்களின் ஆக்கப் பணிகள் பின் தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. தவிர, மிகவும் பின் தங்கிய நாடுகளும், மற்ற அந்நிய ஆதிக்கத்திலுள்ள காலனிகளும் சுதந்தரம் பெறவும் ஐ. நா. உதவி வருகிறது. அதன் காரணமாகத்தான் பெரும்பான்மையான ஆசியா, ஆப்பிரிக்க நாடுகள் சுதந்தரம் பெற்றன. வல்லரசுகளின் நல்ல ஒத்துழைப்பு இருந்தால் ஐ. நா. மேலும் நல்ல பணிகளையாற்றும் என்பதில் ஐயப்பாடு இல்லை. மனித இனம் போர் அழிவிலிருந்து காப்பாற்றப் படவேண்டுமென்றால் ஐ. நா.வில் எல்லா நாடுகளும் முழு நம்பிக்கை வைக்கவேண்டும்.


சஹாரா
பிரஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா
அல்ஜீரியா
மொராக்கோ
ரியோடி ஓரோ
காம்பியா
போர்ச்சுகீசியகினி
சியேராலியோன்
லைபீரியா
கோல்ட்கோஸ்ட்
ஐவரிகோஸ்ட்
ஜெர்மன் டோகோலாந்து
ஸ்பானிஷ் கினி
நைஜீரியா
கேமரூன்
பிரஞ்சு காங்கோ
பெல்ஜியன் காங்கோ
அங்கோலா
ரொடீசியா
மொசாம்பிக்
பெக்வாலாந்து
தென் ஆப்பிரிக்கா
எகிப்து
சூடான்
அபிசீனியா
எரிட்ரியா
பிரஞ்சு சோமாலிலாந்து
பிரிட்டிஷ் சோமாலிலாந்து
உகாண்டா
கென்யா
இத்தாலியின் சோமாலிலாந்து
ஜெர்மன் கிழக்கு ஆப்பிரிக்கா
மடகாஸ்கர்
ஜெர்மன் தென்மேற்கு ஆப்பிரிக்கா
பிரஞ்சுக் குடியேற்றங்கள்
ஸ்பானிய குடியேற்றங்கள்
போர்ச்சுகீசிய குடியேற்றங்கள்
ஜெர்மன் குடியேற்றங்கள்
பிரிட்டிஷ் குடியேற்றங்கள்
இத்தாலியக் குடியேற்றங்கள்
பெல்ஜியக் குடியேற்றங்கள்
சுதேசிநாடுகள்


சாவோய
லம்பார்டி
வெனீஷியா
வெனிஸ்
பீயட்மான்ட்
பார்மா
மோடினி
ரோமாக்னு
ஹாக்கா
நைஸ்
டஸ்கனி
அம்ப்ரியா
ரோம்
ஏட்ரியாடிக் கடல்
தெற்கு இத்தாலி
நேபிள்ஸ்
சார்டினியா
டிர்ரெனியன் கடல்
சிசிலி
மத்தியத் தரைக்கடல்
சார்டினிய அரசு
1860ல் சேர்த்துக் கொள்ளப் பட்ட பகுதிகள்
1866ல் சேர்த்துக் கொள்ளப் பட்ட பகுதிகள்
1870ல் சேர்த்துக் கொள்ளப் பட்ட பகுதிகள்
பிரான்சுக்கு பியட்மான்ட் அளித்த பகுதிகள்


கனடா
நியூயார்க்கு
1
2
3
4
பென்சில் வேனியா
மேரிலாந்து
நியூ ஜெர்சி
டெலவேர்
வர்ஜீனியா
வட கரோலிகு
தென் கரோலிகு
ஜார்ஜியா
1. மாசசூசெட்ஸ்
2. நியூ ஹாம்ப்சையர்
3. கனக்டிகட்
4. ரோட் ஐலண்டு

1. நெதர்லாந்துக்கூட்டரசு
2. பிரஷ்ய ஷியா
3. ஸ்விஸ்ட்சர்லாந்து
4. மத்திய இத்தாலிய நாடுகள்
5. போப்பின் ஆட்சிப் பகுதிகள்
6. தெற்கு இத்தாலியரசு
ஜெர்மன் கூட்டிணைவு - நாடுகள்
ஆஸ்திரிய ஹங்கேரி
ரஷ்யா
கருங்கடல்
பிரான்சு
ஸ்பெயின்
போர்ச்சுகல்
இங்கிலாந்து
அயர்லாந்து
ஆப்பிரிக்கா

நெப்போலியனின் நேரடி
ஆட்சிக்குட்பட்ட பகுதிகள்
ரைன்நாடுகளின்
கூட்டமைப்பு
இத்தாலிய அரசு
வாரிசுரிமைக்காலம்
ஆட்சிக்குட்பட்ட பகுதி
ரஷ்யா
ஆஸ்திரியா -
ஹங்கேரி
பிரிட்டன்
ஸ்பெயின்
போர்ச்சுகல்
ஸ்விட்சர்லாந்து

ரஷ்யா
1. ஆஸ்திரியா 2. ஹங்கேரி
3. செக்கோஸ்லோவேகியா
4. பல்கேரியா
எஸ்தோனியா
லாட்வியா
லிதுவேனியா
கிழக்க பிரஷ்யா
போலந்து
ஜெர்மனி
ருமேனியா
யுகோஸ்லாவியா
இத்தாலி
கிரீஸ்
துருக்கி
நார்வே
டென்மார்க்கு
நெதர்லாந்து
பெல்ஜியம்
பிரான்சு
ஸ்பெயின்
போர்ச்சுகல்
அயர்லாந்து
பிரிட்டன்
ஸ்விட்சர்லாந்து

ஹேப்ஸ்பர்க் வம்சாவளி (ஆஸ்டிரியா)




ஃபிரான்சிஸ் II
பேரரசன் 1792—1806
ஆஸ்டிரியா பேரரசன்
ஃபிரான்சிஸ் II 1804—1835
ஃபெர்டினன்ட் I
1835—1848
ஃபிரான்சிஸ்
ஃபிரான்சிஸ் ஜோசப்
ஆஸ்டிரியா பேரரசன்
1848—1916

ஹேப்ஸ்பர்க் வம்சாவளி (ஸ்பெயின்)



ஹோகன்சோலர்ன் வம்சாவளி

ஃபிரடிரிக் வில்லியம்
பிராண்டன்பர்க் எலக்டர்
1640—1688

ஃபிரடிரிக் III
பிராண்டன்பர்க் எலக்டர்
1688—1713
ஃபிரடிரிக் I
பிரஷ்ய அரசன்
1713—1740

ஃபிரடிரிக் II
பிரஷ்ய அரசன்
1740—1786

அகஸ்டஸ்

ஃபிரடிரிக் வில்லியம் II
பிரஷ்ய அரசன் 1786—1797

ஃபிரடிரிக் வில்லியம் III
பிரஷ்ய அரசன் 1797—1840

ஃபிரடிரிக் வில்லியம் IV
பிரஷ்ய அரசன் 1840—1861

பூர்போர்ன் வம்சாவளி (ஃபிரான்ஸ்)

லூயி XIII

ஃபிரெஞ்சு அரசன்

1610—1643




லூயி டாபின்
லூயி XVI
ஃபிரெஞ்சு அரசன்
1774—1792
லூயி டாபின்
(லூயி XVII)
(ஆட்சி செய்யவில்லை)
லூயி XVIII
ஃபிரெஞ்சு அரசன்
1814—1824
சார்லஸ் X
ஃபிரெஞ்சு அரசன்
1824—1830
சார்லஸ்
பெர்ரி கோமகன்
ஹென்றி
சாம்போர்ட் கோமகன்
லூயி பிலிப்
ஆர்லியன்ஸ் கோமகன்
லூயி பிலிப்
ஃபிரெஞ்சு அரசன்
1830—1848
ஃபெர்டினன்ட்
லூயி பிலிப்
பேரிஸ் பிரபு

பூர்போர்ன் வம்சாவளி

(ஸ்பெயினிலும் நேப்பிள்ஸிலும்)

பிலிப் V

ஸ்பானிய அரசன்

1700—1724

1725—1746

லூயி
ஸ்பானிய அரசன்
1724—1725

ஃபெர்டினன்ட் VI
ஸ்பானிய அரசன்
1746—1759

சார்லஸ் III
நேப்பிள்ஸ் அரசன்
1738—1759
ஸ்பானிய அரசன்
1759—1788

சார்லஸ் IV
ஸ்பானிய அரசன்
1788—1808

ஃபெர்டினன்ட் IV
நேப்பிள்ஸ் அரசன்
1759—1825

ஃபெர்டினன்ட் I
1815க்குப் பிறகு இரண்டு சிசிலிகளின் அரசன் என்றும் அழைக்கப்பட்டார்

ஃபிரான்சிஸ் I
இரண்டு சிசிலிகளின் அரசன்
1825—1830

ஃபெர்டினன்ட் II
1830—1859

ஃபிரான்சிஸ் II
1859—1860

ஃபெர்டினன்ட் VII
ஸ்பானிய அரசன்
1814—1833

இஸபெல்லா II
ஸ்பானிய அரசி
1833—1868

அல்பன்ஸோ XII
ஸ்பானிய அரசன்
1874—1885

அல்பன்ஸோ XIII
ஸ்பானிய அரசன்
1886—1931

சேவாய் வம்சாவளி

சார்லஸ் இமானுவேல் I

சேவாய் கோமகன் 1580—1630



சார்டினிய அரசன்
1730—1773
|
விக்டர் அமாடியூஸ் III
சார்டினிய அரசன்
1773—1796
|
சார்லஸ் இமானுவேல் IV
சார்டினிய அரசன்
1796—1802

விக்டர் இமானுவேல் I
சார்டினிய அரசன்
1802—1821

சர்லஸ் ஃபெலிக்ஸ்
சார்டினிய அரசன்
1821—1831

இத்தாலிய அரசன்
1861—1878
|
ஹம்பர்ட் I
1878—1900
|
விக்டர் இமானுவேல் III
1900—1946
|
ஹம்பர்ட் II
இத்தாலிய அரசன்
1946

போனபார்ட்டே வம்சாவளி

சார்லஸ் போனபார்ட்டே



வாசா வம்சாவளி


சார்லஸ் IX
ஸ்வீடன் அரசன் 1604—1611
கஸ்டாவஸ் அடால்பஸ்
ஸ்வீடன் அரசன்
1611—1632
கிரிஸ்டினு
ஸ்வீடன் அரசி
1632—1654
கேதரைன்
சார்லஸ் X
ஸ்வீடன் அரசன்
1654—1660
சார்லஸ் XI
ஸ்வீடன் அரசன்
1660—1697
சார்லஸ் XII
ஸ்வீடன் அரசன்
1697—1718
உல்ரிக்கா எலினோரா
ஸ்வீடன் அரசி
(தி.) ஃபிரடிரிக்
ஸ்வீடன் அரசன்
1720—1751
கிரிஸ்டியானு
ஃபிரடிரிக்
அல்பர்டினு ஃபிரடிரிக்கா
அடால்பஸ் ஃபிரடிரிக்
ஸ்வீடன் அரசன்
1751—1818
கஸ்டாவஸ் III
1771—1792
கஸ்டாவஸ் IV
1792—1809
சார்லஸ் XIII
1809—1818

ரோமனுவ் வம்சாவளி

மைக்கேல் ஜார் 1613—1645

|

அலக்கியஸ் ஜார் 1645—1676




அலெக்சாந்தர் I
ஜார் 1801—1825
நிக்கலஸ் I
1825—1855
அலெக்சாந்தர் II
1855—1881
அலெக்சாந்தர் III
1881—1894
நிக்கலஸ் II
1894—1917

கலைச் சொற்கள்

அகழிப் போர் முறை	—	The trench war fare
அச்சு நாடுகள்	—	Axis powers
ஆக்ஸ்பர்க் நேச நாடுகளின் போர்	—	The war of league of augsburg
இத்தாலிய ஒருமைப்பாடு இயக்கம்	—	The italian unification movement
இத்தாலிய இளைஞர் கட்சி	—	Young italy
இரண்டு பேரரசுகளின் உடன்படிக்கை	—	The dual alliance
உறுதிமொழி ஒப்பந்தம்	—	Re insurance treaty
உலகச் சுகாதார நிறுவனம்	—	World health organisation
ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம், பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம்	—	UNESCO
ஐரோப்பியச் சீரமைப்பு	—	The european settlement
கத்தோலிக்கச் சொத்துகளை மீட்சி செய்யும் சாசனம்	—	The edict of restitution
காம்பிராய்ச் சங்கம்	—	The league of cambrai
கீழைச்சிக்கல்	—	Eastern question
சர்வதேச சங்கம்	—	The league of nations
சர்வதேச தொழிலாளர் நிறுவனம்	—	Intrernational labour organisation
சமய நீதிமன்றங்கள்	—	Inquisition courts
சமயப் புரட்சி	—	Religious revolution

சமூகப் பொருளாதாரச் சபை	—	The economic and social council
சீர்திருத்த விருந்துகள்	—	Reform banquets
தீபகற்பப் போர்	—	Peninsular war
தூய்மையான சங்கம்	—	The holy league
தேசிய சபை	—	National assembly
பாதுகாப்புச் சபை	—	Security council
புனிதக் கூட்டணி	—	Holy alliance
பெண்களின் சமாதானம்	—	Ladies peace
பொதுமக்களின் பாதுகாப்புக் குழு	—	The committee of public safety
பொதுவான சம்மதம்	—	The pragmatic sanction
நேச நாடுகளின் மேலதிகாரக் குழுவினர்	—	Allied supreme council
மனிதாபிமானிகள்	—	Humanists
மனித உரிமைகள் சாசனம்	—	The declaration of human rights
மறுமலர்ச்சி	—	Renaisance
முக்கூட்டு ஒப்பந்தம்	—	The Triple alliance
ரைன் நாடுகளின் கூட்டரசாங்கம்	—	Confideration of the rhine states
ஸ்பானிய வாரிசுரிமைப் போர்	—	The war of spanish succession

———

பொருள் குறிப்பகராதி

அ

அகஸ்டன்பர்க் கோமகனுன பிரடிரிக், 253
அகாடிர், 275, 278
அங்காரா, 329
அசாம், 358
அச்சு நாடுகள், 341
அடால்ப் ஹிட்லர், 344, 360
அட்ரியாநோபிள், 220, 233, 330
அட்லாண்டிக் சாசனம், 356, 360
அனடோலியா, 323
அதிகாரப் பிரிவினை, 123
அபர்டீன் பிரபு, 21
அபிசினியா, 306, 308, 340
அப்துல் ஹமீது, 220, 225
அநா பாப்டிஸ்டுகள் இயக்கம், 56
அரசனின் குழுவினர், 83
அராஸ், 282
அராண்டிஸ்மெண்ட், 160
அரிஸ்டாட் பிரியண்ட், 334
அர்கோலா, 150
அரேபியா நாடுகள், 372
அலக்சாஸ், 104
அலக்சாண்டிரியா, 213
அலக்சாண்டர், 23
அலக்சாண்டர் மென்சிகாப், 106
அலக்சாந்தர் I, 163, 164, 177, 216, 300
அலக்சாந்தர் II, 217, 225
அலக்சாந்தர் III, 227, 270
அலக்சாந்தர் VI, போப், 30
அலக்சாண்டர் ஆப் பேட்டன்பர்க், 224, 226
அலக்சாண்டர் செர்பிய அரசன், 234
அலம்பரா, 6
அலாய்ஸ் உடன்படிக்கை, 81
அலியாண்டர், 51
அல்ஜிசிராஸ், 274
அல்பேனியா, 222, 233, 305
அல்பான்சோ XIII, 336
அல்சாஸ், 266, 293
அளிக்நாட்ஸ், 147

ஆ

ஆக்ஸ்பர்க் நேச நாடுகளின் போர், 97
ஆக்ஸ்பர்க் சமாதான ஒப்பந்தம், 58
ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை, 84
ஆங்கிலோ பொலிசிலானு, 15
ஆங்கிலேயக் கால்வாய் 281
ஆங்கிலோ ஜப்பானிய உடன்படிக்கை, 283
ஆசியா, 169
ஆம்ஸ்டர்டாம், 73
ஆடு நார்டே, 98
ஆன்பொலின், 61
ஆன் அரசியார், 98
ஆரஞ்சு, 36
ஆரஞ்சு கோமகன், 74
ஆர்மடா, 67, 75

ஆர்மின் டைர்ஸ், 282
ஆர்மீனியப் படுகொலை, 229
ஆர்டாய் கோமகன், 134
ஆர்ஸ்டாட் போர், 164
ஆர்ஸினி, 240
ஆர்லியன்ஸ் பிரபு, 82
ஆர்ச்டியூக் ஃபிரான்சிஸ் பெர்டினன்டு, 234, 276
ஆல்பர்ட், 17
ஆல்பர்ட்டி, 16
ஆல்டஸ் மனுஷியஸ், 17
ஆல்வா, 74
ஆலிவர், 264
ஆஸ்டிரியா பிரஷ்யப் போர், 245
ஆஸ்டர்லிட்ஸ் போர், 164

இ

இக்னேஷியஸ் லயோலா, 70
இங்கிலாந்தின் மீது பொருளாதார முற்றுகை, 166
இங்கிலாந்து ஃபிரான்சு இரகசிய ஒப்பந்தம், 273
இசபெல்லா II, 193
இடைக்காலம், 1
இத்தாலியப் போர்கள், 28
இத்தாலி, 232, 337, 341
இத்தாலி ஒருமைப்பாடு இயக்கம், 235, 246
இத்தாலி விடுதலை இயக்கம், 238, 246
இத்தாலி பிரஷ்ய உடன்படிக்கை, 245
இத்தாலிய இளைஞர் கட்சி, 237
இந்தியா, 214
இரண்டு பேரரசுகளின் உடன்படிக்கை, 268, 278
இராஸ்மஸ், 41
இலியட், 12
இஸ்மத் இனனு, 332
இஸ்ரேல், 372

உ

உட்ரோ வில்சனின் பதினான்கு அம்சங்கள், 291
உணவு விவசாய நிறுவனம், 368
உலகச் சுகாதார நிறுவனம், 368
உல்ம், 163
உறுதிமொழி ஒப்பந்தம், 270

எ

எகிப்து, 229
எட்மண்ட் ஸ்பென்சர், 21
எட்வர்ட் VI, 64
என்சீடல்ன், 58
எதியன்டோலட், 21
எமிலி ஆலிவர், 205
எலிசபெத் I, 21, 75
எலிசபெத் ரஷ்ய அரசி, 115

ஏ

ஏமியன் உடன்படிக்கை, 162

ஐ

ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம், 368
ஐக்கிய நாடுகள் சபை, 361, 373
ஐக்கிய நாடுகள் நீதிமன்றம், 368
ஐவான் II, 101
ஐவான் III, 101

ஒ

ஒர்லாண்டோ ஃபியுரியிசோ, 20
ஒரினுக்கோ, 24

க

கத்தோலிக்கச் சங்கம், 85
கரிபால்டி, 242
கலியோயா, 11
கஹூர், 216
கவுண்ட்வான் ஆரந்தால், 230
கள்ளிக்கோட்டை, 25

கா

காகசஸ், 217
காசல்ரே பிரபு, 176
காசிமோ தி மெடிச்சி, 14
காதரைன் II, 108, 212

கானிட்ஸ், 114
கான்ஸ்டான்டிநோபிள், 9
கான்ஸ்டன்டைன் கிரிஸ் அரசன், 285
காப்டன் .கோவாலியர் ஒப்பந்தம், 206
கார்டினல் ரிச்சல்யூ, 80, 87, 90, 157
கார்டன், 102
கார்டினல் உல்ஸி, 60
கார்ல்மார்க்ஸ், 249
கார்ஸ், 217, 221
கால்பர்ட், 91
கால்வின், 58, 59
காஸ்டின் உடன்படிக்கை, 254

கி

கிருமியப் போர், 209
கிரிமியா, 108
கிரிகிரி VII, 2, 12, 51
கிரிஸ்டியன், 253
கிரானடா ஒப்பந்தம், 29
கிரர்விலாட் போர், 264
கிரீட்டன்கள், 228
கிரீஸ் புரட்சி, 186
கிரேன்மர், 66
கிரோண்டிஸ்டுகள், 135
கிவானேபிக் கோடெல்லபா, பிராண்டாலோ, 15
கிழக்கு ருமேனியா, 222, 224, 225, 230
கிளமன்சியோ, 333
கிளமண்ட் VII, 35
கிளவுட்ஸ், 93
கிளர்ச்சிகள் 1848, 249
கிளாட்ஸ்டன், 229
கிளிக்னி, 125

கீ

கீழைச்சிக்கல், 211

கு

குசுக் கைநார்ஜி, 109
குவிங்மார்ஸ், 82
குவேனி அரிஸ்டா, 14
குவாம், 26
குவேரினே தாவரனே, 14
குயிசியார்டினி, 20
குரூகர், 273

கூ

கூப்பன்பர்க், 11

கே

கேப்பல், 59
கேம்போ செண்டோ, 6
கேம்ரே ஒப்பந்தம், 35
கேம்போ போர்மியா உடன் படிக்கை, 151, 153.
கேஸல்பிடார்டோ, 244

கோ

கோண்டே, 91

ச

சடோவா போர், 245
சர்வதேச சங்கம், 298, 308
சர்வதேச தொழிலாளர் நிறுவனம், 368
சமூகப் பொருளாதாரச் சபை, 367
சர்வதேச நிதி, 368
சராஜிவா, 276
சான் ஸ்டபனே, 221
சான் ஸ்டபனே உடன் படிக்கை, 221
சாலிஸ்பரி பிரபு, 227

சை

சைப்ரஸ், 222

ட

டச்சுக்காரர்கள், 25
டமாஸ்கஸ், 212
டம்பார்டன் ஓக்ஸ் மாநாடு, 361
டர்காட், 125

டா

டார்குவேடா டலசா, 20
டாரஸ்வெட்ரா, 168
டாலண்டினே, 150

டாலிரேண்ட், 133, 177
டான்கார்லோஸ், 193

டி

டிகாலே, 361
டிகேரிஸ்டு உடன்படிக்கை, 234
டிரபால்கர், 163
டிராட்ஸ்கி, 315
டிரிபோலி, 222, 231
டிரியனுன் உடன்படிக்கை, 292, 297
டில்சிட், 164
டிஸ்ரேலி, 219, 221, 224

டு

டுரின், 92
டுனிஸ், 229

டெ

டெகர் நாமா, 217
டெட்ஸல், 44
டெய்லி, 124
டெஸ்மோலின்ஸ், 144

டே

டேன்யூப், 215
டேண்டன், 137, 140
டேலெவ்யா, 36

டோ

டோகுமேரியா, 194
டோம்லீட்ரோ, 194
டோம் மைக்கேல், 194

தா

தாடஸ்கோ சூஸ்கோ, 110

தி

தி பிரின்ஸ், 10

து

துருக்கி, 218, 328, 332
துருக்கி, இத்தாலி உடன்படிக்கை, 232

தெ

தெஸாலி, 223

ந

நன்னம்பிக்கை முனை, 24

நா

நான்கு நாடுகளின் உடன்படிக்கை, 181
நார்வே, 105, 106
நார்புலிங்கன் போர், 83

நி

நிக்கோலஸ் மாக்கியவல்லி, 10
நிக்கோலஸ் கோபர்னிக்கஸ், 10
நிக்கலஸ் V, 15
நிக்கோலஸ் I, 191, 209, 212, 214
நிக்கோலஸ் II, 227
நிக்காலடோ நிக்கோலி, 20
நிம்விகன் உடன்படிக்கை, 96
நியுல்லி உடன்படிக்கை, 292, 297, 298

நெ

நெல்சன், 154
நெப்போலியன் III, 202, 215

நே

நேப்பிள்ஸ், 29

நை

நைஸ், 140
நைல்நதிக்கரைப் போர், 154

ப

படைமானியத் திட்டம், 5
பவேரியா, 89
பல்ஸி, 16
பல்கேரியர்கள், 219
பயஸ் V, 3
பயிஸ் VII, 161

பா

பாசிஸ்டுகள், 339
பாவ மன்னிப்புச் சீட்டு, 44
பாலர்மோ, 243

பால் II, 16
பால்கன் போர் I, 233
பால்கன் நாடுகளின் சங்கம், 232
பாலக்லாவா, 217
பார்லாம், 13
பாரிஸ் சமாதான உடன்படிக்கை, 116
பாரிஸ் உடன்படிக்கை, 221
பாரிஸ் சமாதான மாநாடு, 291

பி

பிக்கோ, 16
பிரடரிக் ஆப் சாக்சனி, 17
பிரசல்ஸ், 73
பிரெஞ்சுப் புரட்சி, 118
பிரன்ஸ்விக், 136, 140
பிரமிட் போர், 154
பிரஸ்பர்க் உடன்படிக்கை, 163
பிரெஞ்சுப் புரட்சி 1830, 196
பிரெஞ்சுப் புரட்சி 1848, 199
பிரெஞ்சு காம்டே, 89
பிரடரிக் ஆப் சாக்சனி, 17
பிரான்சிஸ் I, 18, 31
பிரான்ஸ், 8
பிரான்சிஸ் கோ பிலிப்போ, 14
பிரான்சிஸ் சேவியர், 71
பிரான்சிஸ் II, 76
பிரான்சிஸ், 32
பிரான்காயிஸ் ரேபிலாய், 21
பிரஸ்பர்க் உடன்படிக்கை, 163
பிரமிட் போர், 154
பிராங்கோ, 16
பிராங்பர்ட், 140
பிராண்டன்பர்க், 89
பிராசியாவினி, 14
பிரிஸ்ஸாட், 137
பிலிப் தே காமின்ஸ், 11
பிலிப் ஆப் ஹெஸ், 56
பிலிப் II, 66, 73
பிலிப் ஸிட்னி, 21
பிலிப் IV, ஸ்பானிய அரசன், 79
பினிட்ஸ், 135
பினன்ஹிம், 98
பிளாரன்ஸ், 29
பிளாண்டர்ஸ், 33
பிளாம்பியர்ஸ் உடன்படிக்கை, 240

பு

புகேரஸ்ட், உடன்படிக்கை, 212, 234
புல்டோவா, 106

பெ

பெர்டினென்ட் பல்கேரிய அரசன், 230
பெர்டினென்ட் ஸ்பெயின் நாட்டு அரசன், 29
பெர்லின் ஆணைகள், 164
பெர்லின் மாநாடு, 222
பெர்லின் உடன்படிக்கை, 230
பெர்லின்-பாக்தாத், ரயில் இணைப்பு 273
பெர்டினென்ட், 167
பெர்டினென்ட் VII, 185
பெர்ரார்ரா, 150
பெல்ஜியம், 191
பெஸரேபியா, 218, 222

பே

பேசல், 59
பேடம், 221
பேட்டம், 222
பேவியா, 33

பொ

பொதுவான சம்மதம், 113
பொதுமக்களது பாதுகாப்புக் குழு, 143
பொலக்னு, 150

போ

போர்போர்ன் கோமகன், 33
போர்போர்ன், 36
போர்னியா, 26
போலந்து முதல் பங்கீடு, 109
போலந்து இரண்டாவது பங்கீடு, 110
போலந்து மூன்றுவது பங்கீடு, 111
போஸ்னியா, 221, 222, 223

ம

மகயார்கள், 118
மறுமலர்ச்சிச் சமயம், 7
மனிதாபிமானத் தன்மை, 13

மன்ரோ, 187
மன்ரோ கொள்கை, 207
மஸாரின் 88, 90

மா

மாக்ஸிமிலான், 32
மாசிடோனியா, 222
மார்சிலோ பிசினே, 15
மார்க்கரெட் தெ ஆஞ்சலோ, 18
மார்க்கண்டோ மேகியோர், 20
மார்லோ, 21
மார்க்கரெட் நெதர்லாந்து அரசி, 35
மார்டின் லூதர், 43
மார்பூ, 157
மாண்டிநிக்ரோ, 219, 222
மார்ன் போர், 281
மாலடேவியா 208, 214, 218
மால்பிளாகேட், 98
மார்ஷெல் பிடேய்ன், 353
மாபெரும் பீட்டர், 100

மி

மிலேச்சர்களது படையெடுப்பு, 11

மு

முகமது அலி, 212
முகமது V, 229, 231
முப்பதாண்டுப் போர், 83, 84
மூன்று வல்லரசுகளின் ஒப்பந்தம், 231

மெ

மெக்ஸிகோ, 207
மெலான்ச்தான், 17, 57
மெயின்ஸ், 140
மெஸனு, 168

மே

மேகல்லன் ஜூலசந்தி, 25
மேக்மோகன், 265
மேடம் ரோலாண்ட், 144
மேடம் துபாரி, 144
மேடம் எலிசபெத், 144
மேட்ரிட் ஒப்பந்தம், 33
மேடம் மெயிட்னூன், 94
மேரி, 65
மேரியாதெரிசா, 113
மேரியா அந்துவானேத், 121
மேரன்கோ, 157

மோ

மோரியா, 191
மோலியா, 92

மை

மைக்கல் ஆஞ்ச்சலோ 16, 22

ய

யங்டர்க்ஸ், 229

ரா

ராட்டர்டலம், 73
ராமிலேஸ், 98

ரி

ரிவோலி, 150

ரூ

ரூசோ, 122

ரை

ரைன் கூட்டரசாங்கம், 163

ரோ

ரோம் 8, 29
ரோஜர் பேக்கன் 1, 10

ல

லண்டன் உடன்படிக்கை, 233
லம்பார்டி, 150
லம்பார்டி குடியரசு, 150
லட்ஸன் போர், 83
லாரன்சோவாலா 15
லாரோசலே, 81
லிவி, 20
லியோபால்ட், 134
லியோபால்ட் I, 98
லியானர்டோ, 18
லியானட்டோ டாவின்சி, 22
லியோபட்டிஸ்டா ஆல்பர்ட்டி, 15

லியோ X, 32, 43

லூ

லூதர், 21
லூய்கி புல்சி, 20
லூடோவிக்நோ அரிஸ்டோ, 20
லூயி XI, 28
லூயி XII, 29
லூயி XIV, 90
லூனிவில், 157
லூஷியானு, 162
லூயி XVIII, 170

லெ

லெபேய்ட், 130
லெப்ஸிக் போர், 170
லெய்பாச் மாநாடு 182, 186

லே

லேண்குரியானே, 35
லோரேய்ன் பிரபு, 82

வ

வர்மிஸ் சபை, 50
வர்ம்ஸ், 140
வார்விக் பிரபு, 65
வாபான், 92
வால்மி, 140
வாண்டர் கோல்ட்ஸ், 228

வி

விக்டோரியா, 226
விக்டர் ஹியுகோ, 205
விக்டர் சமாடியூஸ், 150
விங்டிமி, 124
வில்லியம் நார்மாண்டி கோமகன், 3
வில்லியம் ஹார்வி, 11
வில்லியம் லில்லி, 19
வில்லியம் குரோசின், 19
வில்லியம் தி சைலண்ட், 74
வில்லியம் ஆப் ஆரஞ்ச், 96
வின்ஸ்டன் சர்ச்சில், 354
வியன்னு, 215
வியன்னு உடன்படிக்கை, 175

வெ

வெனீஸ், 8
வெனிஷியக் கல்விக்கூடம், 17
வெர்ஜீல், 13
வெர்சேல்ஸ் அரண்மனை, 93
வெனிஷியா, 151
வெய்மார், 341
வெஸ்டபேலியா, 165
வெஸ்டபேலியா உடன்படிக்கை, 87

ஹ–ஹோ

ஹம்பரி, 19
ஹனேவர், 165
ஹாப்ஸ்பர்க் பரம்பரை, 83
ஹில்டி பிராண்டு, 2, 3
ஹிஸ்பேனியாலோ, 24
ஹீகனோட்டுகளின் போர், 76
ஹிரோஷிமா, 358
ஹீயூபர்ட்ஸ்பர்க் உடன்படிக்கை, 116
ஹிஸ்பேனியாலோ, 24
ஹெரால்ட், 3
ஹென்றி III, 78
ஹென்றி IV, 51
ஹென்றி V, 19
ஹென்றி VIII, 60
ஹென்றி ஆப் கைஸ், 78
ஹென்றி ஆப் நவார், 78
ஹெபர்ட், 144
ஹோ ஹன்லிண்டர், 157

ஸ–ஸ்

ஸனிடிட்டி, 263
ஸடான், 206
ஸார்டினியா 89, 216
ஸெடான், 206
ஸெல்பாரனே, 208
ஸ்டாலின், 360
ஸ்லாவ், 219
ஸ்டேட் ஜெனரல் 79, 126
ஸ்பெயின், 336, 337
ஸ்பானிய நெதர்லாந்து, 89
ஸ்பானிய வாரிசுரிமை, 262
ஸ்விங்கிலி, 55, 58
ஸ்டானிஸ்லாஸ் போனியா டோவஸ்கி, 108
ஷேக்ஸ்பியர், 21
ஷேபு, 26
ஷேவாய், 140
சோஷியலிச இயக்கம், 197

ஜ-ஜோ

ஜமாப்ஸ், 140
ஜமாய்க்கா, 24
ஜாக்பைன்ஸ், 135
ஜான்சனிஸ்டு இயக்கம், 94
ஜான் VI, 194
ஜான் சர்ச்சில், 98
ஜார்ஜ் கேனிஸ், 186
ஜார்ஜ் ஸாண்ட், 205
ஜாஸி உடன்படிக்கை, 110
ஜிப்ரால்டர், 99
ஜினு, 164
ஜூரிச் உடன்படிக்கை, 241
ஜூலியஷ் II, 29
ஜெரோம், 165
ஜெனேவா, 140
ஜெனரல் பிராங்கோ, 337
ஜெனரல் ஜஸன்ஹோவர், 356
ஜெர்மனியின் ஐக்கியம், 247
ஜேம்ஸ் III,97
ஜோசப் II,168

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
32	14	திரான்சிஸ்	பிரான்சிஸ்
32	26	மாக்ஸிமியான்	மாக்ஸிமிலான்
56	25	லெக்டர்	எலக்டர்
60	32	சார்டிகல்	கார்டினல்
109	2	Bartition	Partition
141	19	பதினன்காம் லூயி	பதினரும் லூயி
208	4	ஆஸ்டிரேலியா	ஆஸ்திரியா
216	17	கண்டங்களில்	கட்டங்களில்
233	25	1813	1913
234	16	பெற்றன	பெற்றது
241	27	ஜுரி	ஜுரிச்
244	6	காஸ்பிரியா	கால்பிரியா
256	26	ஆஸ்டிரியர்களுடன்	ஆஸ்டிரியர்கள்
256	27	தோற்றனர்	தோற்கடித்தனர்
270	32	பேரரசை	பேராசை
288	15	மெடீன	எம்டென
292	25	நியுலித்	நியுலி
341	8	பெர்ட்	எபெர்ட்
342	3	யெர்ட்	எபெர்ட்
343	36	பெர்ட்	எபெர்ட்
356	26	ஃபிரான்ஸ் ஆப் வேல்ஸ்	பிரின்ஸ் ஆப் வேல்ஸ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

1971 ஏப்ரல்வரை வெளியிட்டுள்ள நூல்கள்

				ரூ.	பை.
பொருளாதாரம்					
*1.	பொருளாதாரம்—I	...	சி. வேலாயுதம்	... 6	50
*1A	,, II	...	,,	... 9	00
*2.	சோவியத் பொருளாதார வளர்ச்சி	...	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ்	... 4	25
*3.	அமெரிக்கப் பொருளாதாரம்	...	,,	... 4	50
*4.	பொருளாதாரச் சிந்தனை வரலாறு	...	சோணைசலம்	... 7	00
*5.	பன்னாட்டு வாணிபம்	...	மு. ஆரோக்கியசாமி	... 6	00
6.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	...	திருமதி ஆர். தாமரஜாட்சி	... 12	00
7.	பொருளாதாரம் ஓர் அறிமுகம் —I	...	தி. சி. மோகன்	... 12	00
8.	,, II	...	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	... 10	75
9.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	...	க. முத்தையன்	... 7	00
*10.	பணவியலும் பாங்கியலும்—I	...	சி. வேலாயுதம்	... 6	75
*11.	,, II	...	,,	... 11	50
12.	நவீன பாங்கு இயல்	...	க. வெற்றிவேல்	... 5	00
*13.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	...	பி. வி. ஸ்ரீநிவாசன்	... 5	50
*14.	அரசாங்க நிதி இயல்	...	அர. சேஷாசலம்	... 4	75

*மூல நூல் (Original Book)

பொருளாதாரம்-(தொடர்ச்சி)

				ரூ.	பை:
15.	இந்தியப் பொருளியல்—I	... எம். பாலசுப்பிரமணியன்	...	10	00
16.	,, II	... எம். லூர்துநாதன்	..	4	25
17.	நமது பொருளாதாரப் பிரச்சினை—I	... சி. சுந்தரராஜன்	...	10	75
18.	,, II	... எஸ். குழந்தைநாதன்	...	10	50
19.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I	... கீ. சீ. இராமசாமி	...	6	00
20.	,, II	... ,,	...	6	00
21.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	... தி. சி. மோகன்	...	5	00
22.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I	... மு. க. சுப்பிரமணியம்	...	11	00
23.	,, II	... பி. வி. சீநிவாசன்	...	6	00
24.	,, III	... ,,	...	6	50
25.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I	... மா. குமாரசாமி	...	10	00
26.	,, II	... அர. சேஷாசலம்	...	9	50
27.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I	... தே. வேலப்பன்	...	10	00
28.	,, II	... ஜி. சிதம்பரம்	...	8	00
29.	பணம்—சிறு விளக்கம்	... கோ. இராதாகிருஷ்ணன்	...	10	00
30.	வணிக இயலின் தத்துவங்கள்	... கு. ஆளுடைய பிள்ளை	...	9	50
31.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிகப் புரட்சி	... சூ. ரா. கருப்பண்ணன்	...	10	00
32.	பென்ஹாம் பொருளாதாரம்—I	... ஏ. குழந்தை	...	11	00
33.	,, II	... எஸ். குழந்தைநாதன்	...	7	00
34.	வரவு செலவுத் திட்டம்	... ஆர். ரங்காச்சாரி	...	6	00

35.	பன்னூட்டுப் பொருளாதாரம் – I	...	ஏ. குழந்தை	...	7 50
36.	,, II	...	கே. எஸ். இராமசாமி	...	9 00
37.	பொருளாதார ஆய்வு நூல்—I	...	கோ. இராதாகிருஷ்ணன்	...	7 75
38.	,, II	...	,,	...	7 00
39.	வளர்ச்சியுறுத நாடுகளின் அரசாங்க நிதியியல்	...	க. வெற்றிவேல்	...	4 25
40.	வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்	...	மா. குமாரசாமி	...	5 50
41.	1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	...	சி. சுந்தரராஜன்	...	7 50
42.	பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள்	...	எம். கே. சுப்பிரமணியம்	...	7 75
43.	இந்தியப் பொருளாதார வரலாறு (1857—1956)—I	...	ம. திருநாவுக்கரசு	...	7 00
44.	பொருளாதாரம் – ஓர் அறிமுகம்	...	பு. வி. சீனிவாசன்	...	6 25

வரலாறு

*45.	பிரிட்டன் வரலாறு—I	...	கி. ர. அனுமந்தன்	...	4 50
*46.	,, II	...	,,	...	3 50
*47.	,, III	...	,,	...	7 25
*48.	ஐரோப்பிய வரலாறு—I	...	டி. வி. சொக்கப்பா	...	4 50
49.	ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றாண்டுக்காலச் சரித்திரம்	...	வை. விருத்தகிரீசன்	...	15 00
50.	இங்கிலாந்து வரலாறு—I	...	இரா. அண்ணாமலை	...	13 00
51.	,, II	...	பா. மாணிக்கவேலு	...	13 00
52.	,, III	...	என். ஜே. ராஜகோபால்	...	8 00

*மூல நூல் (Original Book)

வரலாறு—(தொடர்ச்சி)				ரூ.	பை.
53.	இங்கிலாந்து வரலாறு—IV	...	என். ஜே. ராஜகோபால்	... 8	00
54.	இங்கிலாந்தின் வரலாறு—I	...	க. த. திருநாவுக்கரசு	... 15	00
55.	,, II	...	எம். எக்ஸ். மிரண்டா	... 8	00
56.	,, III	...	,,	... 5	00
57.	இந்தியாவின் சிறப்பு வரலாறு—I	...	தி. வெ. குப்புசாமி	... 7	50
58.	,, II	...	ஏ. உஸ்மான் ஷெரீப்	... 9	00
59.	,, III	...	அ. பாண்டுரங்கன்	... 11	00
60.	கிரேக்க நாட்டு வரலாறு—I	...	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	... 7	00
61.	,, II	...	,,	... 7	50
62.	,, III	...	பி. இராமானுஜம் தேவதாஸ்	... 7	75
63.	ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு—I	...	தி. வெ. குப்புசாமி	... 8	25
64.	,, II	...	ஏ. உஸ்மான் ஷெரீப்	... 7	50
65.	,, III	...	க. த. திருநாவுக்கரசு	... 10	50
66.	முகலாயப் பேரரசு—I	...	ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா	... 7	50
67.	,, II	...	எம். எக்ஸ். மிராண்டா, பா. மாணிக்கவேலு	... 7	75
68.	ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு—I	...	வை. விருத்தகிரீசன்	... 7	50
69.	,, II	...	வை. விருத்தகிரீசன், இரா. அண்ணுமலை	... 6	75
70.	,, III	...	இரா. அண்ணுமலை, பா. மாணிக்கவேலு	... 6	50
71.	,, IV	...	பா. மாணிக்கவேலு	... 7	00

72.	ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு—I	...	சி. ஈ. இராமச்சந்திரன்	...	6 50
73.	,, II	...	சி. ஈ. இராமச்சந்திரன், இரா. ஆலாலசுந்தரம்	...	6 75
74.	,, III	...	ஆர். ஆலாலசுந்தரம்	...	6 50
75.	இந்தியாவில் முகலாயரின் ஆட்சி—I	...	பா. மாணிக்கவேலு	...	5 00
76.	,, II	...	ஏ. உஸ்மான் ஷெரீப்	...	6 00

அரசியல்

77.	அரசியல் அமைப்புகள்	...	ஜே. இராமச்சந்திரன்	...	4 62
78.	அரசாங்கத்தின் வரலாறு	...	மோ. கிளாரன்சு, டி. டி. பெலிக்ஸ்	...	7 50
79.	இந்திய அரசியலமைப்பு	...	வீ. கண்ணையா	...	4 75
80.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	...	டி. செல்லப்பா	...	8 50
81.	தற்கால அரசியல் அமைப்புகள்	...	மோ. வள்ளுவன் கிளாரன்சு	...	8 50
82.	பன்னாட்டு அரசியல்—I	...	திருமதி நூர்ஜஹான் பாவா	...	16 00
83.	,, II	...	,,	...	13 25
84.	பொதுத்துறை ஆட்சி இயல்—I	...	வீ. கண்ணையா	...	9 00
85.	,, II	...	இ. ஜெகதீசன்	...	7 25
86.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I	...	வீ. கண்ணையா	...	7 50
87.	,, II	...	டி. செல்லப்பா	...	7 50
88.	இந்திய அரசியலமைப்புத் திட்டம்	...	தி. வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன்	...	9 25
89.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—I	...	வீ. கண்ணையா	...	6 25
90.	,, II	...	வீ. கண்ணையா, கி. ர. அனுமந்தன்	...	5 75

*மூல நூல் (Original Book)

				ரூ.	பை.
91.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—*III*	...	கி. ர. அனுமந்தன்	...	
92.	மக்கள் ஆட்சி	...	க. சந்தானம்	...	4 25
93.	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்—*I*	...	என். ஜே. ராஜகோபால்	...	7 75
94.	சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள்	...	மோ. வள்ளுவன் கிளாரன்சு	...	7 00
95.	அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்—*I*	...	பா. சூரியநாராயணன்	...	5 75
96.	,, *II*	...	பா. சூரியநாராயணன், கி. ர. அனுமந்தன்	...	6 00
97.	,, *III*	...	கி. ர. அனுமந்தன்	...	5 75

உளவியல்

98.	குழந்தை உளவியல்—I	...	கி. ர. அப்புள்ளாச்சாரி	...	8 00
99.	,, *II*	...	,,	...	7 00
100.	உட்கவர் மனம்	...	சி. ந. வைத்தீஸ்வரன்	...	7 00
101.	இளையோர் உளவியல்—*I*	...	தி. இரா. அரங்கராசன்	...	12 00
102.	,, *II*	...	,,	...	9 00
103.	சமூக உளவியல்	...	என். வேதமணி மானுவேல்	...	9 25
104.	பிறழ்நிலை உளவியல்	...	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	...	11 00
105.	பித்தரின் உள்ளம்	...	,,	...	3 00
*106.	குமர உள்ளம்	...	டாக்டர் மு. அறம்	...	6 25
*107.	உளநலவியல்	...	டாக்டர் தா. ஏ. சண்முகம்	...	6 00

தத்துவம்					
*108.	இந்து சமயத் தத்துவம்	ஞர. ராஜாபகதூர்	...	5	50
*109.	அறிவு ஆராய்ச்சி இயல்	ஆர். ராமானுஜாச்சாரி	...	3	50
110.	மேலைநாட்டுத் தத்துவம்	ஆர். எஸ். தேசிகன்	...	3	50
111.	அத்துவித தத்துவம்	கோ. மோ- காந்தி	...	6	50
112.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	...	5	50
113.	இந்தியத் தத்துவம்—*I*	வ. அ. தேவசேனுபதி, பா. நா. சண்முகசுந்தரம்	...	3	50
114.	,, *II*	,,	...	6	00
115.	மெய்ப்பொருளியல்-ஓர் அறிமுகம்—*I*	சி. இராமலிங்கம்	...	6	00
அறவியல்					
116.	அறவியல்-ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	...	8	50
அளவையியல்					
117	அளவையியல் தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	...	2	50
மானிடவியல்					
*118.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	...	4	75
119.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியம்	...	5	50
120.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	...	3	50
சமூகவியல்					
121.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜே. நாராயணன்	...	10	50

*மூல நூல் (Original Book)

				ரூ.	பை.
122.	ஆசியா—*I*	...	கொ. சேஷ. நரசிம்மன்	... 9	50
123.	,, *II*		,,	... 8	75
124.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	...	ஏ. எஸ். நாராயணன்	... 8	50
*125.	தென்கிழக்கு ஆசியா		ஜி. கிருஷ்ணமூர்த்தி	... 8	50
*126.	வட அமெரிக்கா	...	குமாரி இரா. அலமேலு	...	
*127.	தென் அமெரிக்கா	...	எம். என். பத்மநாபன்	... 9	00
*128.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	...	திருமதி எச். நியூமன்	... 3	00
*129.	,, —ஆஃப்ரிக்கா	...	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	... 3	25
*130.	புவிப்புறவியல்—*II*	...	நா. அனந்தபத்மநாபன்	... 6	00
*131.	செய்முறைப் புவியியல்	...	சு. ஜெயச்சந்திரன்	... 5	50
*132.	மக்கட் பரப்பியல்	...	வி. எஸ். அனந்தபத்மநாபன்	...	
*133.	சமுத்திரவியல்	...	கோ. இராமசாமி	... 6	50
134.	காலநிலை இயல்—*I*	...	கொ. சேஷ. நரசிம்மன்	... 10	00
135.	,, *II*	...	,,	... 5	00
*136.	காலநிலை இயல்—*I*	...	திருமதி இராதா	... 10	00
*137.	,, *II*	...	,,	... 8	00
*138.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	...	கோ. இராமசாமி	... 11	00
139.	புவி அமைப்பு இயல்	...	சி. விஸ்வநாதன்	... 4	75
140.	பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	...	கோ. இராமசாமி	... 6	00
141.	சிஷோமின் வாணிகப் புவியியல்—*I*	...	எஸ். மாணிக்கம்	... 9	50
142.	,, *II*	...	எம். கார்த்திகேயன்	... 12	00
143.	,, *III*	...	சி. எஸ். நரசிம்மன்	... 5	75

புள்ளியியல்

*144.	புள்ளியியல்-அறிமுகம்	சு. வைத்தியநாதன்	...	10	75
*145.	புள்ளியியல்-முறைகள்—*I*	... கோ. சண்முகசுந்தரம்	...	10	00
146.	,, *II*	... இராஜகோபாலன்	...	14	00
147.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	... தி. வி. லட்சுமிநரசிம்மன்	...	6	50

உயர்கணிதம்

*148.	ஆயத்தொலை வடிவ கணிதம்	... டி. கே. மாணிக்கவாசகம்பிள்ளை	..	4	25
*149.	வகை நுண்கணிதம்	... ,,	...	3	00
*150.	தொகை நுண்கணிதம்	... தி. கோவிந்தராசன்	...	3	25

விலங்கியல்

*151.	விலங்கியல்	... பெ. மா. அண்ணுமலை, இரா. முருகேசன்	...	12	00

பௌதிகவியல்

152.	ஒளி நூல்	ச. சம்பத்து	...	10	00

விஞ்ஞானம்

*153.	வானவெளி வெற்றி	... டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	...	6	00
*154.	ரேடியோ	... டாக்டர் பி. திருஞானசம்பந்தம்	...	4	75
*155.	எக்ஸ்-கதிர்கள்	... பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	...	4	50
*156.	பாம்புகள்	... பெ. மா. அண்ணுமலை	...	3	50
*157.	தாவரம்-வாழ்வும் வரலாறும்	... டாக்டர் கு. சீனிவாசன்	...	8	00
*158.	கரும்பு	... கு. பெரியசாமி	...	4	00
*159.	தாவரங்களின் வாழ்வியல்	... எஸ். சுந்தரம்	...	6	50

*மூல நூல் (Original Book)

			ரூ.	பை.
மருத்துவம்				
*160. நீரிழிவு-க்ஷயரோகம்	...	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	... 2	50
*161. மகப்பேறும் மாதர் நோயும்	...	டாக்டர் (குமாரி) மணிமேகலை	... 8	25
*162. பாக்டீரியா	...	சு. சுந்தரம்	... 2	50
163. புற்றுநோய்	...	அ. கதிரேசன்	... 3	50
164. உடலியங்கியல்—I	...	டாக்டர்கள் ஜி. வேங்கடசாமி, டி. சரோஜினி, எஸ். கே. துரைராஜ், ஆ. சேது	... 6	75
165. ,, II	...	,,	... 5	50
166. என்புருக்கி நோய்	...	டாக்டர் அ. கதிரேசன்	... 7	25
பொறியியல்				
167. நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம்.	...	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம் ஆர். இராமசாமி, கே. வேணுகோபால்	... 8	50
கூட்டுறவு				
168. உலகக் கூட்டுறவு இயக்கம்	...	அ வேல்மணி	... 5	50
சட்டம்				
*169. குற்றவியல் சட்டம்	...	எம். சண்முகசுப்பிரமணியம்	... 10	00
பொது நூல்கள்				
170. மகாத்மா காந்தி	...	சரஸ்வதி தங்கையன்	... 3	25
171. விவசாயப் புரட்சி	...	வி. கார்த்திகேயன்	... 8	00
*172. சேமக் கை-நூல்	...	ஆ. சுப்பிரமணியம்	... 2	50

*173.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	...	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	...	9 00
*174.	உணவும் ஊட்டமும்	...	தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்	...	4 50
*175.	பள்ளி நிர்வாக அமைப்பு-அடிப்படைக் கருத்துகள்	...	எஸ். சந்தானம், எஸ். ஏ. துரைசிங்	...	6 25
புகுமுக (P.U.C.) வகுப்புகளுக்குரியவை					
*176.	உலக வரலாறு	...	டி. ஆர். இராமச்சந்திரன்	...	4 00
*177.	பொருளாதாரம்	...	ஜி. சிதம்பரம்	...	2 75
*178.	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்—I	...	கு. ஆளுடைய பிள்ளை	...	2 50
*179.	,, II	...	,,	...	2 25
*180.	பௌதிகம்	...	டாக்டர் பி. திருஞானசம்பந்தம், ஆர். நாகராஜன்	...	7 50
*181.	புகுமுக பௌதிகம்	...	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	...	6 00
*182.	புகுமுக வகுப்புக் கணிதம்—I	...	கே. ராஜகோபாலன்	...	7 00
*183.	,, II	...	,,	...	3 00
*184.	புகுமுக வகுப்புக் கணித நூல்—I	...	டி. கோவிந்தராஜன், முத்துசாமி	...	7 00
*185.	,, II	...	,,	...	4 50
186.	கணிதம்-ஓர் அறிமுகம்—I	...	ஆர். மகாதேவன்	...	4 75
187.	,, II	...	,,	...	3 25
*188.	வேதியியல்	...	பி. டி. முனியப்பா, ஆர். முத்துலட்சுமி	...	7 00
*189.	புகுமுக வேதியல்	...	சி. ஏ. பத்மநாபன்	...	5 50
*190.	விலங்கியல்	...	எஸ். ஆப்ரகாம்	...	4 00
*191.	புகுமுக விலங்கியல்	...	பெ. மா. அண்ணாமலை	...	7 25
*192.	புகுமுக வகுப்புத் தாவரவியல்	...	எஸ். சுந்தரம்	...	4 00

*மூல நூல் (original Book)

பட்டப் படிப்பிற்குரிய (பிஎஸ்ஸி) நூல்கள்

(அடக்கவிலைப் பதிப்புகள்–கழிவு இல்லை)

பௌதிகம்

				ரூ.	பை.
*193.	எந்திரவியல்-சிறப்புப்பாடம்—I	...	ஆர். நாகராசன்	... 6	25
*194.	,, II	...	,,	... 5	50
*195.	வெப்பவியல்-சிறப்புப் பாடம்	...	கே. நாச்சிமுத்து	... 5	25
*196.	செய்முறை பௌதிகம்-சிறப்புப் பாடம்—I	...	டி. கமலக்கண்ணன் ஆர். கிருட்டிணசாமி	... 4	50
*197.	,, II	...	,,	... 3	25
*198.	பௌதிகம்-துணைப்பாடம்—I	...	பி. தங்கராஜன்	... 4	00
*199.	,, II	...	,,	... 3	00
*200.	செய்முறை பௌதிகம்-துணைப்படாம்	...	கே. பாசுகரன், இரா. செயராம்	... 4	50
*201.	மின்னியல்-காந்தவியல் சிறப்புப் பாடம்—I	...	டி. ஏ. கருப்பண்ணன்	... 4	75
*202.	,, II	...	,,	... 4	50
*203.	,, III	...	,,	... 4	25
*204.	ஒளியியல்–சிறப்புப் பாடம்	...	டாக்டர் வி. சண்முகசுந்தரம், டாக்டர் ஆர். சபேசன்	... 7	75
*205.	பௌதிகம்-துணைப்பாடம் (பகுதி 2) முதல் புத்தகம்	...	கா. வே. சுப்பிரமணியன்	... 6	00
*206.	பௌதிகம்-துணைப்பாடம் (பகுதி 2) 2-ம் புத்தகம்	...	,,	... 4	50
*207.	பொது பௌதிகம்-சிறப்புப் பாடம்	...	கே. பி. கந்தசாமி	... 4	50
*208.	இன்றைய பௌதிகம்-சிறப்பு பாடம்	...	எம். ஏ. தங்கராஜ்	... 6	75

*209.	ஒலி நூல்-சிறப்புப் பாடம்	...	டி. முருகையன்	...	5 00
*210.	இயக்கவியல்-சிறப்புப் பாடம்	...	ஆர். மகாதேவன், கே. சிவசுப்பிரமணியம், பி. ஆர். சுப்பிரமணியம்	...	

வேதியியல்

*211.	செய்முறை கனிம வேதியியல்-துணைப்பாடம்	...	டாக்டர் முத்துக்குமாரசுவாமி	...	2 00
*212.	செய்முறை கனிம வேதியியல்-சிறப்புப் பாடம்	...	டி. இராமலிங்கம்	...	2 25
*213.	பௌதிக வேதியியல்-சிறப்புப் பாடம்—I	...	டி. சக்திவேலு	...	4 00
*214.	,, II	...	,,	...	3 50
*215.	கனிம வேதியியல்-துணைப்பாடம்	...	சி. ஏ. பத்மநாபன்	...	6 50
*216.	கனிம வேதியியல்-சிறப்புப்பாடம்—I	...	பி. டி. முனியப்பா	...	4 00
*217.	,, II	...	,,	...	4 25
*218.	பொது பௌதிக வேதியியல்-துணைப்பாடம்	...	ஆர். துளசிதாஸ்	...	4 75
*219.	அறிமுறை வேதியியல்-சிறப்புப் பாடம்—I	...	ஓ. ஆர். சூரியநாராயணன்	...	4 50
*220.	,, II	...	,,	...	3 75
*221.	செய்முறைக் கரிம வேதியியல்-சிறப்புப் பாடம்	...	என். ஆறுமுகம்	...	3 50
*222.	அங்கக வேதியியல்-துணைப்பாடம்	...	பி. எல். இராமசாமி	...	5 00
*223.	அங்கக வேதியியல்-	...	எம். ஆட்கொண்டான்	...	3 00
*224.	கரிம வேதியியல்-பகுதி-1 (2-ம் புத்தகம்)	...	திரு. கண்ணபிரான்	...	4 75
*225.	,, (3-ம் புத்தகம்)	...	,,	...	3 25
*226.	கரிம வேதியியல்-பகுதி-2 (1-ம் புத்தகம்)	...	,,	...	5 75
*227.	,, (2-ம் புத்தகம்)	...	,,	...	6 50

*மூல நூல் (Original Book)

				ரூ.	பை.
கணிதம்					
*228.	இயற் கணிதம்-சிறப்புப் பாடம்—I	...	டி., கோவிந்தராஜன், கே, முத்துசாமி	... 4	25
*229.	,, II	...	,,	... 3	25
*230.	தொகுமுறை வரை கணிதம்—சிறப்புப் பாடம்	...	ஆர். மகாதேவன்	... 2	00
*231.	எண்சார் கணிதம்-சிறப்புப் பாடம்	...	எம். எம். இராமசாமி	... 5	50
*232.	திரிகோண கணிதம்-சிறப்புப் பாடம்	...	வி. அரங்கநாதன்	... 3	25
*233.	கணிதம்-துணைப்பாடம்	...	ஆர். அனுமந்தராவ்	... 6	00
*234.	நிலையியல்—சிறப்புப் பாடம்	...	கே. இராஜகோபாலன்	... 5	00
*235.	முப்பரிமாணப் பகுமுறை வடிவ கணிதம் -சிறப்புப் பாடம்	...	கே. சிவசுப்பிரமணியன்	... 2	75
*236.	வெக்டர் கணிதமும் அதன் பயன்பாடுகளும் -சிறப்புப் பாடம்	...	ஆர். மகாதேவன்	... 2	00
*237.	கணிதம்-துணைப்பாடம்-பகுதி-2	...	ஆர். அய்யாசாமி	... 5	75
*238.	வானியல்-முதல் புத்தகம்-சிறப்புப் பாடம்	...	திரு. தி. கோவிந்தராசன், திரு. கொ. முத்துசாமி	... 5	50
*239.	வானியல்-இரண்டாம் புத்தகம்	...	,,	... 3	75
புள்ளியியல்					
*240.	புள்ளியியல்-துணைப்பாடம்	...	எஸ். கருப்பையா	... 3	50
விலங்கியல்					
*241.	முதுகெலும்பற்றவை—1-சிறப்புப் பாடம்	...	ஆர். முருகேசன்	... 11	50
*242.	,, —2 ,,	...	திருமதி எஸ். கே. வள்ளி	... 11	25
*243.	முதுகு நாணுள்ளவை-1-சிறப்புப் பாடம்	...	திருமதி ராணி கந்தசாமி	... 8	00
*244.	,, ,,	...	,,	... 9	75

*245.	முதுகு தண்டுள்ளவை—2-சிறப்புப் பாடம்	...	திருமதி கிருஷ்ணவேணி நாராயணன்	...	11 75
*246.	முதுகெலும்பிகளது கருவியல்-சிறப்புப் பாடம்	...	எஸ். ஆப்ரகாம்	...	9 00
*247.	முதுகெலும்பற்றவை-துணைப்பாடம்		என். இராமலிங்கம்	...	9 00
*248.	முதுகு நாணுள்ளவை-துணைப்பாடம்	...	வி. சேது	...	10 00
*249.	சொல்லியல்-சிறப்புப் பாடம்	...	என். இராமலிங்கம்	...	5 50
*250.	மரபியல்-சிறப்புப் பாடம்	...	பெ. மா. அண்ணுமலை	...	5 25
*251.	சூழ்நிலையியல்-உடற் செயலியல்-சிறப்புப் பாடம்-I	...	டி. ஆர். கிருஷ்ணன்	...	4 75
*252.	சூழ்நிலையில்-உடற் செயலியல்-II		,,	...	6 50
*253.	பரிணமம்		எஸ். ஆப்ரகாம்	...	6 25

தாவரவியல்

*254.	தாவர வெளி உள்ளமைப்பியல்களும் வகைப்பாட்டியலும்-சிறப்புப் பாடம்	...	கே. ராஜசேகரன்	...	11 00
*255.	தாவரப்புற அமைப்பியல்-சிறப்புப் பாடம்	...	கே. பாலச்சந்திரகணேசன்	...	9 25
*256.	தாவர உள்ளமைப்பியல்-சிறப்புப் பாடம்	...	டாக்டர் ஏ. கோவிந்தராஜுலு	...	7 25
*257.	தாவரங்களின் வாழ்க்கை-சிறப்புப் பாடம்	...	எஸ். சுந்தரம்	...	9 50
*258.	தாவரவியல்-துணைப்பாடம்	...	பா. இராசாராம்	...	4 50
*259.	தாவரச் சூழ்நிலையியல், மரபியல்-உயிர்மருஉயியல், இயங்கியல்-துணைப்பாடம்	...	கே. பெரியசாமி	...	4 00
*260.	சூழ்நிலையியல், பரிணமம், மரபியல் -சிறப்புப் பாடம்	...	கே. ஆர். பாலசந்திரகணேசன்	...	8 25

*மூல நூல் (Original Book)

தாவரவியல்—(தொடர்ச்சி)

			ரூ.	பை.
*261. டெரிடோஃபைட்டா, ஜிம்னோஸ்பெர்மே -சிறப்புப் பாடம்	... கே. இராஜசேகரன்	...	10	25
*262. தாலோபைட்டா (பாசிகளும் பூஞ்சைகளும்) -சிறப்புப் பாடம்	... டாக்டர் வே. சோ. சுந்தரலிங்கம்	...	9	00
*263. தாவர வகைப்பாட்டியல்-சிறப்புப் பாடம்	... ஆ. சம்பத்குமார்	...	10	50
*264. பிரையோஃபைட்டா சிறப்புப் பாடம்	... கே. இராஜசேகரன்	...	6	00

* மூல நூல் (Original Book)

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பட்டப்படிப்பு

அறிவியல் பாட நூல்கள், 1970

1. சூழ்நிலையியல்–உடற் செயலியல்	—திரு. டி. ஆர். கிருஷ்ணன்
2. அறிமுறை வேதியியல்	—திரு. ஓ ஆர். சூரியநாராயணன்
3. பொது பௌதிகம்	—திரு. க. ப. கந்தசாமி, —திரு. மு. தியாகசுந்தரம்
4. வெக்டர் கணிதமும் அதன் பயன் பாடுகளும்	—திரு. ஆர் மகாதேவன்
5. தாவரச் சூழ்நிலையியல், மரபியல், உயிர் மரூஉ இயல், இயங்கியல் துணைப்பாடம்	—டாக்டர் கு. பெரியசாமி
6. பௌதிகம்–துணைப்பாடம்–பகுதி-2	—திரு. கா. வே. சுப்பிரமணியன்
7. இன்றைய பௌதிகம்	—டாக்டர் எம். ஏ. தங்கராஜ்.
8. ஒலி நூல்	—திரு. டி. முருகையன்
9. கணிதம்–துணைப்பாடம்–பகுதி-2	—திரு. ஆர். அய்யாசுவாமி
10. முப்பரிமாணப் பகுமுறை வடிவ கணிதம்	—திரு. க. சிவசுப்பிரமணியம்
11. தாவரவியல்–துணைப்பாடம்	—திரு. பா. இராசாராம்
12. செல்லியல்	—திரு. என். இராமலிங்கம்
13. மரபியல்	—திரு. பெ. மா. அண்ணாமலை
14. தாவரங்களின் வாழ்க்கை	—திரு. எஸ். சுந்தரம்
15. அங்கக வேதியியல்–துணைப்பாடம்	—திரு. பிஎல். இராமசாமி
16. செய்முறைக் கரிம வேதியியல்	—டாக்டர் என். ஆறுமுகம்
17. முதுகெலும்பிகளது கருவியல்	—திரு. எஸ். ஆபிரகாம்
18. சூழ்நிலையியல், பரிணமம், மரபியல்	—திரு. கே. ஆர். பாலச்சந்திர கணேசன்
19 டெரிடோஃபைட்டா–ஜிம்னோஸ் பெர்மி	—திரு கே. இராசசேகரன்
20. கரிம வேதியியல்–பகுதி-1	—திரு. கி. கண்ணபிரான்
21. கரிம வேதியியல்–பகுதி-2	—திரு. கி. கண்ணபிரான்
22. வானியல்	—திரு. தி. கோவிந்தராசன், —திரு. கொ. முத்துசாமி
23. தாலோபைட்டா–பாசிகளும், பூஞ்சைகளும்	—டாக்டர் வே. சோ. சுந்தர லிங்கம்
24. தாவர வகைப்பாட்டியல்	—திரு. ஆ. சம்பத்குமார்

இவை அடக்க விலை வெளியீடுகள்—கழிவு இல்லை.